உ

திருச்சிற்றம்பலம்

தாண்டவராயசுவாமிகள

இயற்றியது

கைவல்லியநவநீதம்.

இதற்கு விருத்தியுரை

சிருத்துருத்தி - இராமபீடம்

காபாத்திரசுவாமிகளாதீனத்திற்றுரிய

ஈசூர்-சச்சிதானந்தசுவாமிகளால்

செய்யப்பட்டு,

சென்னை

அந்துவிநாசையபாரால்

சை - இரத்தினசெட்டியாரது

மகராஸ்ரிப்பன் அச்சுக்கூடத்திற்


பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

விரோதிவருஷ ஆவணிமீ

Registered and Right of Translation reserved.

1889



கடவுள் துணை.

தக விளம்பரம்.

இதனுலறிவிப்பது யாதெனின், இதனடியிற்கண்டுள்ள புத்தகங்களை வேண்டுவோர் சென்னை ஜெனரல் போஸ்டாபீஸ் ஹெட்கிளர்க்கு ம-ரா-ரா-ஸ்ரீ கோ. துணைசாமிநாயுடு அவர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம். வெளிநாட்டார் மை யாருக்கு முன்பணமனுப்பாமலே வாலியூ பேயேபில் போஸ்டிலேயே பெற்றுக்கொள்ளலாம்,

A 5352

அச்சிட்டிருக்கும் நூல்கள்.

	ரூ.	அ.	பை.
பிரபுலிங்கலீலை மூலமும் உரையும் காப்பி க-க்கு	2	8	0
சுவானுபூதிவிளக்கம். சிவகாருணியவிளக்கம்.	0	6	0
உபநிடதம் விருத்தியுரை.	0	5	0
வேதாந்த சூளாமணி உரை.	2	0	0
தசகாரிய மகாவாக்கியவுரை.	0	8	0
திருக்குத்திரிசிய விவேகவுரை.	1	0	0
உத்தமவாதம் மூலம்.	0	8	0
கைவல்லியநவநீத விருத்தியுரை.	1	4	0
சர்வமதசித்தாந்த விளக்கவினாவிடை.	1	0	0
தத்துவஞானபோகசாரம் (முதல்வாள்யம்)	2	0	0
சுகர் கைவல்லியம்.	0	2	0
சொரூபசாரமூலமும் உரையும்.	0	8	0
பிரத்தியக்ஷானுபூதிவிளக்கம்.	0	10	0
சதிவண்ணபோதவுரை.	0	8	0
வேதாந்தலக்கணம்.	0	10	0
சதார்த்தவாதம்.	0	4	0

இனியச்சிடப்படும் நூல்.

பதுவற்கீதைதவிருத்தியுரை.

உ

திருச்சிற்றம்பலம்.

ஞானக்கும்மி.

——:0:——

இஃது

வியாசர்பாடியில்

ஞானசூரியராகவிளங்கும்

ராமானுஜ தீக்ஷ வரரால்

இயற்றப்பட்டது.

కైవల్యనవనీతస్య వ్యాఖ్యానం కృతవాన్ స్వయం
సచ్చికైవల్యనవనీతస్య వ్యాఖ్యానం కృతవాన్ స్వయమ్
సచ్చిదానన్దరూపోసౌ లోకానుగ్రహకామ్యయా
దిక్కాలాద్యనవచ్ఛిన్నా నన్తచిన్మాత్రమూర్తయే.

స్వానుభూత్యేకమానాయ నమఃశాన్తాయతేజసే
సచ్చిదానన్దరూపాయ నిత్యాయాక్లిష్టకారిణే
న్యాసపుర్యాం నివాసస్థి రామానుజయతిఃస్వయం
జ్ఞాత్వాగ్రన్థవిస్తారం చలభితంజ్ఞానమూర్ఛితః.

சென்னைச் சர்வகலாசாலைத்

தமிழ்த்தலைமைப்பண்டிதராகிய

இயற்றமிழாசிரியர்

கோ - இராசகோபாலபிள்ளைபவாகள

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிச்சிதானந்தவான்குருற்றலெனப்பலசெப்பிமறையின்சீர்த்த
உச்சிதானந்தமறுவொருபெருவாணெளியாதலுணைத்தவாறு
சச்சிதானந்தலிலதெனவுணர்த்துகைவல்யசுவாமிதக்குச்
சச்சிதானந்தப்போப்பெருந்தகையேருணாவிரித்துச்சாற்றினனல்.

சாத்துகவிகள்.

திருமயிலை - வித்துவான்
சண்முகம்பிள்ளை
இயற்றிய
கலிவிருத்தம்.

கன்னனுடம்புவிதனிற்கைகவலியத்தான்
என்னகனிசொற்றுலகினின்னறுவித்தான்
மன்னுபிரமத்துருவமாவிவண்வயங்கும்
தன்னிகரிறுண்டவனெனுத்தவனுமன்றே.
இத்தகையதூற்கியலுணர்த்தனுபவஞ்சால்
மெய்த்தவாலாதவர்விளக்கமதுறுனின்
றித்தறைமிசைப்பிறைசையின்னவிருவோனன்
முத்தனருணசலன்மொழிந்தனனெருனையே.
இன்னவுனையாருடகசைக்குரிமையின்றேல்
இன்னபடியென்றறிகிலாதெனலுணர்த்தின்
டன்னபெரியோன்சச்சிதானந்தனெனவந்
தன்னரும்விருத்தியுனையென்றுனைசெய்தானால்.
அன்னவுனைபாடியமெனப்பொலிவதல்லால்
இன்னபரிசென்றமனைராலிவணறிந்தே
பன்னிடுதரத்தகலவென்னினும்பரிந்திட்
டென்னெனவுனைக்குதுமெடுத்தகனியம்மா.

திருசிரபுரம் காலேஜ்
தமிழ்ப்பண்டிதர்
அ - க - அமிர்தலிங்கம்பிள்ளை
இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீர்பூத்த மறைமுடிவிற் றிரண்டெழுத்துஞ் சொற்றொடரின்
நிறத்து வண்ணமைக்
கூர்பூத்த பயன்சுருங்கி விரிவகைதான் டவராயக்
கோமானன்பாற்
பேர்பூத்த செழுந்தமிழாற் கைவல்ய மெனவொருநூல்
பிறங்கச் செய்தான்
பார்பூத்த் மாண்பமைந்தோ ர்ந்நூலின் றிற்றுனைநீர
டம்மு வாற்ற

தேர்ந்துதர முற்றவர்க டம்மையன்றி மற்றையருஞ்
செவ்வ னேகொண்
டோர்ந்துய்யு மாறுபயன் விரியவுனைத் தருள்கென்ன
வுனைப்ப வன்பே
கூர்ந்துமுதற் சுருதியுத்தி யனுபவங்கள் கற்குமுளங்
கொள்ள வாய்மை
சேர்ந்துவிசே டம்பயப்ப விருத்தியுனா செய்துலகி
னிலவித் தானல். (உ)

அச்சுதா கமான மறைமுடிவே தாகை
வீசல மான
வுச்சிதார்த் தப்பயனே யுள்ளொளியா னுணர்ந்துபய
னுற்று மல்கு
மிச்சிதா பாசரிலக் கணமுடித்துத் தன்னியற்பேர்க்
கிசைந்த வுண்மைச்
சச்சிதா கந்தபயன் முனை வனுபூதித்
தலைவன் மன்னே. (ஊ)

திருவல்லிக்கேணி

வேங்கடாசலப்புலவர்

இயற்றிய

என்றிக்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வேதாந்தமென்னுப்பாற்கடலையுண்டு
மீங்கிருளீவிலக்கும்வெண்மதியமேபோல்
ஓதாரவேலையெலாங்கையிற்றிரட்டி
யுணடமுனியரசென்னவதிசயித்துத்
தாதார்ந்ததுளவணிவோன்மாலையாளன்
தாமனையிலொளிர்வோனுமறைவாயுற்றுன்
சீதார்ந்தகைவல்யவிருத்திகண்டே
சிச்சிதாசுத்தசிவஞ்செய்தார்காணே.

சேலஞ்சில்லா வைகீல்
அத்துவிதானுபவி
அப்பசாமிபிள்ளையவர்கள்
இயற்றிய
ஆசிரிய விருத்தம்.

திருமருவுமான்முதற்றேவர்யாரினுமிக்க
சிவசொரூபமேகருணையால்
சகமதனில்ஞானபரிபாகருக்காகவே
தேசிகோத்தமமூர்த்தமாய்
மருமலர்ச்சோலைசெறியீரூரெனும்பதியில்
வந்தவதரித்தமேலாம்
மகிமைபுளவத்துவிதகீலையிஃதெனத்தெரிய
வகுத்தருள்புரிந்ததன்றி
உருவாமந்தன்னையுள்ளபடியாராயி
லுனையன்றிவேறில்லையென்
றுண்மையையுணர்த்துறவரீதகைவல்யபத
வுனையினமிகத்தெளிவதாய்
அருமையெனமகிழுவேகரதலாமலகமென
வருளியவிருத்தியுரையை
அச்சிலுமியற்றிவைத்தருளினன்சச்சிதா
னந்தசற்குருநாதனே.

நேரிசைவெண்பா.

அருத்தமெனும்பொன்மலருக்கானந்தவாச
விருத்தியுரைசெய்தான்விளங்கத்—திருத்தியாய்
அச்சமொழிந்தன்பர்க்கறிவின்டீமனிடவே
சச்சிதானந்தகுருதான்.

கட்டளைக்கவித்துறை.

அய்யாகுருசச்சிதானந்தமேயறிவாம்பொருளே
மெய்யாந்திரிசியம்வேறுமன்றொன்றன்றெனவிரித்தே
செய்யாமொழிநிகர்வின்றுரையாமிதைத்தேர்ந்தவர்க
ளுய்வாரயிக்கதிபெறுவார்சத்யமுண்மையிதே.

சாத்துகவிகள்.

மீட்டெழிருத்தம்.

உருவகாமந்தனேநோக்காதுணர்வேபொருளாநோக்குதற்கே
கருவியாயநவநீதகைவல்லியமாநூலுணைக்குப்
பெருகும்விருத்தியுரையுளித்தபெருமானேநின்பேருதவிக்
கொருகைம்மாறுங்கண்டிலன்யானுன்றுள்சரணஞ்சரணமே.

திருமூலர்மரபு
சதாசிவப்பிரமயோகியின்
மாணாக்கர்
ஞ்த-சுப்பராயமுதலியார்
இயற்றிய
நேரிசையாசிரியப்பா.

இருநிலத்தெம்மதத்தவருமிரிய
ஒருதனியாயொளிர்ந்திரபீடத்
துதித்துச்சுருதியுத்தியனுபவ
மிதயத்தினையத்தேர்ந்துகைவல்ய
நூற்குவிருத்தியுரைதனைநுவன்றனன்
தோற்கப்போனிஞானியர்சொருப
நிச்சயம்விளக்குநிபுணன்
சச்சிதானந்தத்தனிப்பெயரோனே.

இந்நூலுரையாசிரியர்மாணாக்கர்
சேலம்
கோமளவ்வரமுதலியார்
இயற்றிய
நேரிசைவெண்பா.

அகல்வரிய வஞ்ஞான வாரிருளை நீக்கும்
புகல்வரிய மெய்ஞ்ஞானம் பூட்டும்—இகல்வரிய
சச்சிதா நந்தகுரு சாமி விரித்துரைத்த
வுச்சிதமை வல்ய வுரை.

ஸ்ரீமத்-சுவகீயானந்தப்பிரம்மயோகீந்திரர்

மாணாக்கரும்,

அத்வைதவிவேகஸமாஜஸ்தாபகருமாகிய

ஸ்ரீமான்,

மணிமங்கலம் - திருவேங்கடமுதலியார்

இயற்றியது.

உலகுயிர்ப்பரத்தினுண்மை யுருவனுமொருவனீசூர்த்
தலமுறவவதரித்துத் தகைபெறுகைவல்யத்துக்
கிலகுறும்விருத்தியென்ன விசைத்தனன்றற்பதத்தை
கலமுறத்தெரித்த சச்சிதானந்தஞானவேந்தே.

அத்வைதவிவேகஸமாஜத்தாரிலொருவராகியும்

ஷே முதலியார் அவர்கள்

மாணாக்கருமாகிய

வாபனூர்-சபாபதிமுதலியார்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பல்லாரும் வியந்தேத்தக் கைவல்ய நவநீதப் பனுவன் மேய,
சொல்லாரும் பொருளீயெலா மால்வித்திற் பரியதரு தோற்றுமாப்
போல், கல்லாருங் கனிந்துணர வாடியினில் விரித்துரைத்தான் எனை
மே யென்னும், செல்லாரும் பொழிலீசூர்ச் சச்சிதா னந்தபர சிவனு
ஞானே.

—:0:—

கைவல்லிய நவநீதப்

பாடலகராதி.

பாடல்.	பக்கம்.	பாடல்.	பக்கம்.
அ		ஆண்டதெய்வ ...	ஈகீ0
அகமெனு ...	கருசு	ஆதாரமனறம் ...	ருஈ
அக்கினிகட்டு ...	ஈசுஈ	ஆதிமுக்குளை ...	ஈஈ
அசுத்திலம் ...	ஏ ஈஈ	ஆரணப் ...	ஈ0சு
அசலநிரஞ்சன ...	ஏ சுன	ஆரோப ...	உஅ
அச்சுவத்த ...	கனசு	ஆய்ந்து ...	உஉரு
அடங்கிய ...	உ0	ஆனபாவி ...	கசுன
அண்டமுனருளி ...	ஈ0ன	ஆனவிம்ப ...	கசு
அதுவினயி ...	உஉ0	ஆனலையா ...	கசகூ
அதுதானெப்படி ...	ஈக	ஆன்றபதமா ...	ஈ0அ
அந்தியமோட ...	உஏ	**இ**	
அந்தக்கரண ...	உருகூ	இகமான ...	உஈன
அந்தமுமடி ...	ஏ	இக்குணங் ...	ஈசு
அந்தமாதிரு ...	உஎ உ	இங்குபப்படி ...	கஎன
அப்படியிரு ...	ஈ0க	இதயமத்த ...	உனசு
அமன்று ...	சசு	இதுநினக் ...	சுசு
அரிதாகு ...	ஈ0சு	இந்தச்சீவ ...	களரு
அரியபெய் ...	க0ஏ	இந்தஞானக் ...	கஅ0
அருமாடாகு ...	உ உக	இந்தநிச்சய ...	உகக
அருளுமை ...	கஏசு	இந்தநீ ...	அக
அழிவிலாத ...	கசுக	இந்தமாயை ...	சுஈ
அழுக்கைமடி ...	ஈசு	இந்தமாறைக் ...	உசுஈ
அளிடகனெடி ...	ஏ	இப்படிப்போல ...	உஈ
அறியாத ...	சுசு	இப்புவியி ...	உஅன
அறிவுக்கு ...	வஅ	இம்பரின் ...	சுக
அறுசுணை ...	கசஉ	இராசத ...	ஈ0
அனகமைம் ...	கசுஈ	இருவகை ...	உஈக
அனுபவானந் ...	ஈ0	இருளாக ...	உசு0
அன்னபா ...	உசுஉ	இலக்க ...	கசுசு
அன்னைதன் ...	கன	இல்லையா ...	உஉஈ
ஆ		இவனதி ...	கரு
ஆகமப்பிர ...	கஏக	இவனயன் ...	கருன
ஆடவர் ...	கசஈ	இவ்வாறு ...	கீருக

பாடல்.	பக்கம்.	பாடல்.	பக்கம்.
இவ்வுடன் ...	ஊ0	ஒ	
இன்னதுதேதகந் ...	உ-ஈ	ஒருவழியிது ...	ஈஉ
இன்னவகை ...	உ-ஈஎ	ஒன்றுகிய ...	உ0அ
இன்னவாற ...	கஅச	ஒன்றுகேள் ...	கஎஅ
ஈ		ஓ	
ஈசர்காரிய ...	கஎஈ	ஓய்ந்தகலை ...	கசஎ
ஈசனுக்கி ...	ஈந	க	
ஈசனுமா ...	கநஉ	கங்கையிற் ...	அந
ஈசனந்தரு ...	உநஉ	கடநீரின் ...	அக
ஈன்றளித் ...	ஊ	கடமெலு ...	ககஎ
உ		கண்டறிந் ...	உ0உ
உண்டுறங் ...	உஎஅ	கரணமா ...	எஉ
உதவும்புவி ...	உநஊ	கருதுமேனை ...	ககக
உத்தமருரு ...	கந0	கருப்பை ...	உஉச
உத்தமம்வெளுப்பு ...	ஈக	களங்கமற் ...	ககஈ
உருக்கியதரா ...	கஉஊ	கள்ளுழு ...	ககஈ
உருவங்களி ...	உஈக	கற்பனைவர் ...	சந
உலகமான ...	ககந	ஙா	
உன்முகம் ...	கஉந	காமமாதிகள் ...	அ0க
எ		காமியத்தவ ...	கஈஉ
எத்தனைநா ...	ஊஈ	காரணசரீர ...	ஈ00
எரிகின்ற ...	கஉ அ	காரியங்க ...	உஉஉ
எல்லாங்கண் ...	எஅ	காணரீர் ...	ககஉ
எல்லாச்சீவ ...	கந்க	கி	
எவருடை ...	எ	கிளர்படக ...	கசந
எவருகிலு ...	ஈ உ.	கீ	
எனவுனாத் ...	ககன	குகன்றனை ...	உ ஊச
என்மனந் ...	கஈஅ	குடமிளிர் ...	கஎச
என்னபுண் ...	கஅச	குலவுதற்குரு ...	ஈஈக
என்னுடை ...	அ	குளிர்மள ...	உஈந
என்னுமா ...	ஈ0க	கெ	
என்னைத்தா ...	உ ந	கெடலான ...	உஎள
ஏ		கே	
ஏகமாய் ...	ககஈ	கேவலநிலை ...	நள
ஏமமாயா ...	ஈள	கை	
ஐ		கைதவங் ...	கஎந
ஐந்துதமு ...	சஉ	க	
ஐயனை ...	கஉ	சகமதி ...	நந
ஐயாகேளீர் ...	கசஈ	சடமதர் ...	உ0ஈ

பாடல்.	பக்கம்.
சடமான ...	உகரு
சட்டிகுட ...	கருசு
சத்திசத்தனை ...	உஉஉ
சத்தேசித் ...	உஎக
சத்தொடுசித் ...	எங
சந்ததம்புருட ...	ககசு
சம்ந்தழும் ...	கஉ
சருவழுத்திலைய ...	உரு
சா	
சாதனமின்றி ...	கரு
சி	
சிஞ்ஞாசு ...	உகக
சிட்டர்புகழ் ...	உசஎ
சிட்டனிவ ...	சுங
சித்துரான் ...	ஙஉ
சிரவணப் ...	கங
சிவசொரு ...	கசுக
சிறந்தகன் .	கஎ
சீ	
சீரியவிச	சக
சீவபேதங்கள்	கசுசு
சீவன்மு	கஎ
சு	
சுத்தமாஞ் . .	கசுசு
சுத்தியில் ..	ஙo
சுருதியுத்தி	உஎக
சுழுத்தியில் ..	ருங
சூ	
சூக்குமசக	சக
செ	
செய்கையு	கசo
சென்மாந்த ...	உசுக
சென்றது ...	கoக
சொ	
சொரூபனா ...	ககசு
சொர்ப்பன ...	உகரு
சொல்லிய ...	ககக
சொன்னது ..	கக

பாடல்.	பக்கம்.
ஞா	
ஞானங்காரண ...	உஉக
ஞானமார் ..	கoo
த	
தஞ்சமா ...	கo
தடத்து ...	கருஅ
தடைகளே ...	கருஇ
தத்துவஞானம் ...	ஙoச
தத்துவத்தின் ..	உஅக
தத்துவப்பத .	அஅ
தத்துவவறு .	சஎ
தத்துவவிசா ...	ஙசு
தத்துவவிளக் ..	ஙகo
தர்ப்பணத் ...	அசு
தன்பதியல்லா .	கஉங
தன்னையுந் ..	உஉ
தா	
தாகப்படும் ...	உசசு
தாமதமிரா ...	உஙச
தாலத்தின் . .	உசு
தானன்றி ...	உஙஉ
தாணிமர் ...	ருo
தி	
திகழ்ந்த ...	களக
தினமுமண் ...	ககங
தீ	
தீராய் ...	கoக
து	
துரியநிலம் ..	உஅங
துருத்திமா ...	கசுள
துர்ச்சங்க ...	உஅo
துளங்கு ...	கஅரு
தூ	
தூங்குந் ...	உருச
தூடணாத ...	சக
தூலசூக்கும .	எசு
தூலமேமரு ..	சங
தெ	
தெசபுமான் ..	சுஎ

பாடல்.	பக்கம்.
தெரிதரும் ...	கசஉ
தே	
தேகத்தனல ...	கஙஉ
தேகமல்லாம ...	உசு
தோ	
தொடர்வபந் ...	உஅ
தோ	
தோற்றமாஞ்சத்திதன் ...	ஙஅ
தோற்றமாஞ்சத்திதானே ...	ருள
ந	
நசரின்மன் ...	கருஉ
நார்குழி ...	ககரு
நலமெய் ...	களள
நல்லவனே ...	கருக
நற்கருத்து ...	ககசு
நனவுகண்ட ...	உரு
நன்மையா ...	கஙo
நா	
நாசச்சரீர ...	உஙஅ
நாலாம்பூ ...	உஅரு
நானென ...	ஙoங
நானென்ற ...	உஙச
நி	
நிசமானது ...	உசo
நித்தியம்பூ ...	உஙசு
நித்தியவனித் ...	கஉ
நிர்க்குண ...	உசஅ
நிறைந்தவா ...	உஙரு
நீ	
நீநானென் ...	சக
நெ	
நெய்யும் ...	உருள
ப	
பங்கயாசனன் ...	உ.கச
பஞ்சகோசமும் ...	எச
பஞ்சினையுழித் ...	கoள
படமுனலும் ...	சஅ
படர்ந்தவே ...	கo
பத்தியும்	கஅஉ

பாடல்.	பக்கம்.
பந்தமனை ...	உஙஉ
பலகலையும் ...	உளரு
பன்னிய ...	அள
பா	
பாவிமந்த ...	உஙo
பி	
பிரமஞானி ...	கoரு
பிரமபாவனை ...	கள
பிரமமாந்தனை ...	சஙங
பிரமரூப ...	உoஅ
பிறந்ததுண் ...	உஙங
பிறிவதெப்படி ...	எக
பின்னைழுவ ...	கoச
பு	
புண்ணிய ...	சள
புலவர்புகழ் ...	உளக
புலியுமனு ...	உசஅ
பூ	
பூச்சியவி ...	ள0
பூரிக்குங் ...	...
பூன்றமாம் ...	ருச
பே	
பேதகன்ம ...	கoஉ
பேதமான ...	அஉ
போ	
பொய்யை ...	உகக
பொல்லாத ...	உஅவ
பொறுமை ...	கo.அ
பொன்னில ...	ச
போ	
போகத்தில் ...	உருக
போகமாரு ...	ஙசஉ
போனசன்மங் ...	கஅங
ம	
மதிரமாங் ...	.அo
மதுவிலைறச் ...	ஙசச
மந்தமுந்தி ...	உஅக
மந்திரமூர் ...	ககங
மாங்கள் ...	சச

பாடல்.	பக்கம்.	பாடல்.	பக்கம்.
மலடிமைமந் ...	உகஉ	**யோ**	
மற்றைமுப் ...	கஉ0	யோகளா ...	கசுச
மனதுசத் ...	க0ரு	**வ**	
மனத்தினு ...	உகசு	வகுத்தகன் ...	உ0க
மனநாசஞ் ...	கருரு	வஞ்சகமில் ...	கரு0
மனுடன் ...	சுக	வடநூல்வல் ...	அரு
மனைக்குள் ...	அஅ	வணங்கினின் ...	கச
மனைவிலங்கறு ...	களஎ	வந்தேதாரி ...	ரு0ரு
மா		**வா**	
மாயையென்பது ...	உகரு	வாக்கியந்த ...	கஉஉ
மாயையென்பதேது ...	உகக	வாதனுவசத் ...	உகஅ
மானஞ்சிற ...	உரு0	வாயுஸ்தம்ப ...	உஉசு
மு		வாராயென் ...	உக
முத்தனை ...	கக	**வி**	
முத்திரல்கி ...	கசு0	விடயசுக ...	உசரு
முந்தவகண்ட ...	உளஎ	விண்ணென்றே ...	சுக
முந்தியசங்கை ...	கஉச	வித்தியாரந் ...	ரு0சு
முற்புவிமூ ...	உஅஉ	விருத்திகளடக்க ...	உகக
முன்புகலதச ...	எரு	விருத்திளா ...	ககக
முன்னிலங் ...	உஅச	விருத்தியும் ...	கஉக
மூ		விவகாரவே ...	கரூஅ
மூவராம் ...	களஉ	வினவுமிடத் ...	உளஎ
மெ		**வீ**	
மெய்யுங் ...	கசரூ	வீடதாம்பரி ...	உ0க
மே		வீயாதசத் ...	உளஉ
மேவுமண் ...	உஉஎ	**வே**	
மோ		வேகின்ற ...	உசரு
மோகவிருள் ...	உஎ0	வேடமாறி ...	கஅரூ

கடவுள் துணை.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கஙூ	ஙடு	சோக	கோச
கள	ஙஉ	மாதி	மாகுதி
கஅ	——	(கடு) பாட்டு முடிவில் விட்டுப்போயது.	ஐயனென்பதினும், வினை முற்றையு முயர்திணை யாண்பாலாக்கினும். அவன்வந்தானென்னிற்பால்வழு.
உக	ஙஉ	றறியும்	றறியுமவ்வளவும்
,,	ஙஙூ	காள	கால
உள	ஙo	பந்தன	பந்த
ஙo	க	இங்ஙன	அங்ஙன
,,	கஙூ	கூறுனர்	கூறினர்
ஙஉ	உசூ	யோக்கியதை, தர்மம்	யோக்கியதை, நிறம், தர்மம்
டுக	கஉ	கரூவி	கருவி
டுஉ	ஙஙூ	பேதகள்	பேதங்கள்
டுஙூ	சூ	சகசமாதி	சகசமாதி
அஉ	ஙடு	நானெனக்கு	நானெனற்கு
அசூ	ஙூ	முன்னு	முன்ன
அஅ	ஙக	வைக்கி	வைக்கி
கூசூ	உடு	நானென்டி	நானென்றி
கூடு	உக	பழத்	பழக்
ககஙூ	ஙள	மற்ரெ	மற்ரே
ககசூ	கஉ	இட்டவொது	இட்டபோது
ககள	சூ	நீக்கினவோ	நீங்கினவோ
ககள	ஙஉ	வெற்பிறவதேச	வெற்பிறவதேச
ககஙூ	கo	வெழுதி	மெழுதி
,,	கஉ	வின்னம்	வின்னும்
,,	உஉ	றுனைக்க	றுறைக்க
,,	உள	தெரிவிக்க	தெரிவிக்க
கஉக	எ	மற்றைய	மற்றை
கஉடு	உள	சித்துப்பொற்	சித்துப்பொற்
கஙூ	சூ	கனாதுழி	கனாத்துழி
கஙூஅ	உசூ	கழுவி	கழுவி
,,	ஙக	மனையுய்	மனையும்
,,	ஙடு	இவ்வனமை	இவ்வனமை

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கசுங	உசு	ததுன்ப	துன்ப
கசுஅ	உசு	தேமழன்	தோழன்
,,	உஎ	வாது	லாது
கருo	க	யார்ம்பத்	யாரம்பத்
,,	ங	மன்னுதி	மனனுதி
கருங	கஉ	காரணை	காரண
கருஎ	சு	மூரணு	மூரணை
,,	கங	காரனை	காரண
,,	கங	அதவாது	அதாவது
,,	கச	விவற்தை	விவற்றை
கருஅ	கங	கிருட்டி	சிருட்டி
,,	உo	குத்ர்க்கம்	குதர்க்கம்
கருங	கச	கிஷ்ணை	கிஷ்ணை
கசுo	க	சித்தி	சித்தி
,,	ஙரு	கன்ற	கின்ற
கசுக	கஎ	நிற்ம	நிற்க
கசுஉ	உச	ஆமிமற்றி	ஆமிவற்றி
,,	உஎ	பொரியோரோ	பெரியோரோ
கசுங	ஙரு	காலாதித	காலாதீத
கசுச	கஅ	ஆதவி	ஆதிலி
,,	உங	ஞாணிக	ஞானிக
கசுரு	சு	ஏண்	எண்
கசுசு	ஙo	யுத்திரா	புத்திரா
கசுஎ	ரு	எனவே	எனவே
,,	கங	லாபிற்று.	லாயிற்று
,,	ஙரு	மர்திர	மந்திர
கசுஅ	உங	மூர்தி	மூர்த்தி
களக	கஉ	வசை	வகை
களஉ	ங	சிகுஷ்டி	சிருஷ்டி
களச	ஙo	பிருக்கின்ற	யிருக்கின்ற
களரு	உo	கேடல்	கோடல்
,,	உள	பொருளள்ள	பொருளல்ல
,,	ஙக	மூடத்தால்	மூடத்தால்
கஅo	கஉ	விடைவிடா	விடைவிடா
கஙங	ரு	ட்கவே	மீட்கவே
கஙக	ஙரு	வது	வஸ்து
உoச	கசு	நரனென	நானென
உபஅ	கக	நிரவிசார	நிரவிசார
உஉள	கரு	பின்னு	பின்னு
உஉஅ	உக	தெரிந்த	தெரித்தரு

ப்க்கம்.	வரி.	பிழை.		திருத்தம்.
உகஉ	ருக	யில்லாது	...	மில்லாது
உகள	கூ	ணவக்கிய	...	ணமக்கிய
உகக	க	வெறன்	...	வேறன்
,,	உக	டிழுபதேச	...	டுபதேச
உசக	கஅ	புறுவாகவு	...	புருவாகவு
உசஐ	ச	சுசுயாத	...	சுகமாத
உசஉ	க	பின்	...	பின
உஎக	ருக	சத்துநித்	...	சத்துநித்
உஅச	ரு	மன்து	...	மன்று
,,	,,	தெவு	...	தெளிவு
உஅசூ	ருக	மலான	...	மாலான
உஅஅ	கூ	பற்ற	...	பற்றற

உ

கடவுள் துணை.

கைவல்லிய நவநீதம்.

முகவுரை.

இந்நூற் குணாசொலப்புகுவார் அனுபவிகளாகவேண்டும். அனுபவமாவது யாதானு மொன்றை நான்கு காலத்தினு மித்தையாக்கவேண்டும்; அங்ஙன மித்தையாயதைப் பரமாக்கவேண்டும்; அங்ஙனம் பரமாயதைத் தானுக்கவேண்டும். இங்ஙனமாக்கற்கு வலியின்றேல் யுத்தியினுலேனும் அங்ஙனமாக்கவேண்டும். யுத்தியாவது ஞாயம், சோதனை, பொருத்தம் இம்மூன்றுயியையவதும் இம்மூன்றினும் முரணின்றிக் கூறுவதுமாம். இங்ஙனமேனுங் கூற வலியின்றேல் சுருதி முகத்தாலேனும் அங்ஙன முரணின்றிக் கூறவேண்டும். கூறலாவது யுத்திக்கு மாறின்றிக்கூறல். மாருவது உபமான உபமேய சாதாரண தருமங்கட்குப் பொருத்தமின்றிக் கூறல். இங்ஙனங் கூறுவதினும் வாய்பொத்திக் கிடக்கை நன்று. ஏனெனில் அனுபவமில்லாவிடத்து அனேத்தையுஞ் சின்மாத்திரமாக்கி யனுபவித்தல் கூடாது. யுத்தியேனுமின்றேல் பிரபலசுருதியென்பதற்கு விக்கினம் வரும். சுருதிமாத்திரத்தாலாயினுங் கூறப்புகின் ஏனையபண்டிதர் வித்வான்களைக் காட்டினும் தாம் வேதாந்த சாம்பிரதாயத்தா ரென்பதி லென்கிறப்பு? எந்நூல் கிரந்தகர்த்தாக்களுந் தத்தஞ் கருத்தை வாக்கியப் பிரயோகத்திலேனும், செய்யுட் பிரயோகத்திலேனு மமைத்தனர். அங்ஙன மமைத்ததை யுணரவேண்டின் எழுத்துச் சொற்பொருள் யாப்பலங்காரந் தருக்கமுகத்தாலன்றிக்கூடாது. ஆயிற் பண்டிதரே சாலுமெனின் வேதாந்தானுபவ ரசமுமுண்டேற் சாலும். இன்றேற் பதவுரைக் கதிகாரிகளன்றிச் சாம்பிரதாயத்தாரல்லர். சாம்பிரதாயத்தானைத் தமைக் கொள்ளினீலோ, யுத்திக்கு முரணுத சுருதியனுபவங் கூற்வே

ண்டும். அங்ஙன மின்றேல் கான்தோன்றிச் சாம்பிரதாயத்தா னெனப் படுமன்றே! இங்ஙனமாவதினு மூடமெனனமா யிருக்கை பிறர் மதிக் கைக்கு ஈனுகு சிறப்பு. இஃதன்றியும் குருத்தனம் விழையாதா னெங் கணுமில்லை; விழையினுங் தத்த மையத்திரிபன்றாரல்லர்; அகன் றார்போற் காட்டினும் பிறர்பா லென்செய்வர்? ஞானதூல்போல் ஞாயம், சோதனை, பொருத்த மென்னு மிம்மூன்று முகத்தாற் கன்மம் பத்தி யென்னும் அற்ப சுருதிக ளுணர்த்தா வென்பதை எங்ஙன நிலையுறுத்தவல்லார்? யாதோனு மிங்ஙன மூரணின்றி யுணர்த்த வல்லரா யுளையிடின் அஃது யாமேற்ப மல்லமென்பர்; யாதினுலென வினவில், எமது சாம்பிரதாயத்தா ரல்லராதலினென்பர். ஞாயஞ் சோதனை பொருத்தமுளவேற் கூடாதென்னை? இங்ஙனமின்றி யெம தாசான் சொல்வதைக்கேட்ட லெமது மரபென்பர். இவர்களிடமுளை யென்சிறப்பிற்றே, அதை யேற்கும் விவேகமென்சிறப்பிற்றே, முற்று முணர்ந்தாரே யிதனை யறியவேண்டும். இதனினும் யாமுணர்த்தவே ண்டுவதென்னையுளது? இதுகிற்க, இன்னுமுளைக்கிற் பெருகுமாதலிற் சுருக்கி யுளைத்தாம்.

உ

வடவள்துறை.

கைவல்லிய நவநீதம்.

தந்துவவிளக்கப்படலம்.

மேவலத்தின்றன்மை கைவல்லியம்;நவநீதம் வெண்ணெய்; எனவே, அன்னியமாகாது தானேதானாய நிலையெனப் பெற்றும். இவ்விருபதமும் மாரியம். தன்னைத்தான் விசாரிப்புழிச் சுத்தாசுத்த சகல கேவலமிறந்து தான் மாத்திர மிஞ்சிநிற்கும்; நிற்கவே சச்சிதானந்தம் விளங்கும்; விளங்கவே நிரதிசயானந்தமதாம். ஆகவே யனைத்து மிங்ஙனமாக விளங்கும்;விளங்கவே தானே யனைத்துமா யன்றுய் முடியும்; முடிவதா லிது கேவலமெனப்படும்; படுவதால் இதனை நவநீத மென்றார். தனியனைத்துங் கடைந்தழியன்றி வெண்ணெ யாகாததுபோ லிங்குந் தத்துவங்களனைத்திலுந் தன்னைத் தான் விசாரியாதழித் தானேதானாக வின்காது. ஆதலிற் றன்னை நவநீதமெனக் கொண்டாம்; கொள்ளவே தானாகிய நவநீதமென்றுயிற்று. கைவல்லியம் தனித்துநிற்கை. மூடசுழுத்தியும் குண்டலிசத்தியு மிங்ஙனமாதற் கிடம் பெறுதோவெனின் நனவிற்சுழுத்தி யாதற்கென் விளை வராது காக்கவேண்டும். என்னை? "வின்விற்பரத்தை யறிவுறுதற்கவத்தைபுலன்வினைமாறியே, நனவிற்சுழுத்திநிலைவரினபொருட்டிகழுநலனுகவே" என்றார் தத்துவராயர். இதனை லலக்காரமென்றுற்போல இந்நூல் கைவல்லிய நவநீதமென்னல் காரியவாகுபெயர். நவநீதகைவல்லியமென்னது கைவல்லியநவநீதமென்ன லுருவகம்.

இந்நூலுரையாசிரியர் நிலைமை.

முன்னர் இந்நூலுக்குரைசெய்தார் இந்நூல் ஆசிரியருடைய கருத்து சிறிதேனும் வழுவாது சுருதி யுத்தி யனுபவ வொற்றுமை யமைத்தா லுணர்ந்துரைசெய்தனரன்றி யேனையோர்போலன்று. இதனை யாங்காங் கனுபவத்தாற்காணலாம்.

இவருரைமேற் பழுதுரைப்பாரை மறுக்க விருத்தியுரையாக்கப் புகுந்தனம். விருத்தியுரையாவது காண்டிகையின் மிக்கது. என்னை? "சூத்திரத்துட்பொருளன்றியுமாண்டைக், கின்றியமையாதியாவையும்விளங்கத், தன்னுரையாலுமம்பிறநூலாலு, மையமகலவைவங்காண்டிகையுறப்பொடு, மெய்யினேர்ந்சாதிசைப்பதுவிருத்தி" என்றார் நன்னூலார்.

நூல்.

க-தவி. அவதாரிகை.

"[ஜீவேசுரராகவும், கூடஸ்த பிரமமாகவும் விளங்குவது யாதோ அது தன்னையடைபவர்க்கசோசரமாகவும், கோசரமாகவும், அருளிறையாகவும், குருமூர்த்தமாகவும், உபாசனை மூர்த்தமாகவுந் தோன்றிநிற்கும். அதை யங்ஙனமங்ஙனம் வழுத்துவான் புகுந்தார் இக்கவியில் வஸ்துவையகோசரமாகத துதிக்கின்றார்.]

பொன்னில மாத ராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலந் தரத்திற் சீவ சாக்ஷிமாத் திரமாய் நிற்கும்
எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலா
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி.

(இதன்பொருள்.) பொன்னிலமாதராசை பொருந்தினர் பொருந்தாருள்ளந்தன்னில்—எ-து. பொன் மண் பெண் ணிலைகளில் விருப்பமுடையோரும் அகன்றோருமாகிய விவ்விருவருள்ளத்தின்கண், அந்தரத்திற் சீவசாட்சிமாத்திரமாய்நிற்கும்—எ-து. ஆகாயத்தைப்போலச் சீவசாட்சிமாத்திரமாக விளங்குவோன், எந்நிலங்களினுமிக்க வெழுநிலமவற்றின்மேலா நன்னிலமருவும்—எ-து. எவ்வகைப் பதவிநிலங்களினு மிகச் சிறந்த அல்லது அஞ்ஞானபூமிகளினுமிகச்சிறந்த வெழுவகையாயுள்ள ஞானபூமிகளினுமேலாயுள்ள துரியாதிதத்தி லீசசாட்சிமாத்திரமாக விளங்குவோன் யாவனெனில் ஏகநாயகன்பதங்கள்போற்றி—எ-து. அந்த வேகநாயகனது திருவடிகட்கே வந்தனம். எ-று.

பொருந்தினர் பொருந்தாரென்பதனை யஞ்ஞானியும் ஞானியுமெனக் கொள்க. அந்தரத்தி லென்பதனால், சந்தனத்தின்கண்ணு மமேத்தியத்தின்கண்ணு நிறைந்துள்ள வாகாயத்திற்குச் சுத்தாசுத்த மின்மையைக் காட்டுதல் குறியெனப்பெற்றும். அதுபோலச் சீவசாட்சிமாத்திரமாய்நிற்கு மென்பதனால், அந்தச் சீவசாட்சியாகிய சைதன்னியம் சலட்சணமாயிலும் விலட்சணமெனக் குறிக்க நின்றதெனக் கண்டாம். சாட்சியென்றது சீவசாட்சியென்றதனால் ஈசசாட்சியெனக் கொண்டாம். ஒருகாற்றரும் மொருகாலைசுத்தருமாயிருப்பினு மிருவகையுமன்றெனக் குறிக்க வுள்ளமென்னூர். நிற்கு மருவுமென்பதை யுயர்திணையாண்பாலாக்கியது ஏகநாயகனென்னு முயர்திணை யாண்பாலேப்பற்றியென்க. இதனைப் "பல்லோர்படக்கை முன்னிலை தின்மையி"லென்னுஞ் சூத்திரவிதியாற்காண்க. யாவனென்னும் வினா வருவித்தலைப்பற்றி அந்தவென்னுஞ் சுட்டு வருவிக்கப்பட்டது. நிற்கு

மருவு மென்னும் வினைகள் கூடஸ்தனுகநிற்கும் ஏகநாயகன், பிரமம்ம மருவு மேகநாயகனென முடிக்கிற் பெயரெச்சங்களாம். இக்கவியின் மூன் றுமடியி னெதுகை பொதுநாகரமாயினும் இனமாதற்பற்றியாதலின் வழுவன் றெனவுணர்க.

(கருத்து.) எந்த வேகநாயகன் ஞானி யஞ்ஞானிகள் உள்ளத்தின்கண் சிவசாட்சி மாத்திரமாயும், ஞானபூமியேழினு மேலாய தூரியாதீதத்திற் பரசாட்சி மாத்திரமாயு மிருக்கின்றானே, அந்த வேகநாயகனது திருவடி கட் கெமது வணக்க முண்டாகுகவென்பது. இங்ஙனமன்றேல் மூரணும். சிவசாட்சியாயென்னுது மாத்திரமென மிகைபடக்கூறியது சுயம்பெனக் குறிக்க. எங்கீலங்களினு மென்பதற்குக் கீழேழ் மேலேழ் நிலமெனக்கூறு வது புராணசம்மதம். இன்னும் சகலமத நிச்சயங்களாகிய வெந்த நிலங் களினுமெனப் பொருள்கொள்ளினு மொருசாரமையினு மமையும். சிவசா ட்சி கூறியதுபற்றி யீஸ்வரசாட்சி வருவித்த தருத்தாபத்தி. சிவேஸ்வர ராக விளங்குவ திருவகைச்சாட்சியெனவும், இவ்விருவகைச் சாட்சியாக வின ங்குவ தேகநாயக னெனவும் பொருள்படுதலா லிங்கே வணக்க மைக்கிய மெனக் குறிப்பிக்கநின்றது. உள்ளந்தன்னி னிற்கு மேகநாயகனென்னில், நன்னிலமருவு மேகநாயகனெனப் பொருள்கொள்ளுதும். உள்ளந்தன்னிற் சிவசாட்சிமாத்திரமாய்நிற்கு மென்றதனுல், மேலா நன்னிலந்தனி லீஸ்வர சாட்சி மாத்திரமாக மருவுமென்றும். உள்ளந்தன்னி லேழாம்வேற்றுமை விரி. நன்னிலம்பண்புத்தொகை. அந்தரத்திலென்பதை யிரண்டிடத்தும்மொ ட்டுக. ஏகநாயகனென்பதி லேகமென்றது சாட்சித்துவிதமறற்கு மிகைபட க்கூறியதென்க. ஏகநாயகனென்னு நிலைக்குச் சாட்சித்துவிதங் கற்பிதம்; இந்தச்சாட்சித்துவித நிலைக்குச் சிவேஸ்வரத்துவிதங் கற்பிதம்; இந்தச் சிவேஸ்வர கற்பிதநிலையைக் கற்பிதமென்றுணராது இவற்றையே யாண் டானடிமையெனக் கொண்டனர் மதத்தர். அத்துவித வணக்கத்தையு மே னையமதத்தர் வணக்கத்தையுங் குறிப்பிக்க நின்றது, இந்நூலாசிரியரது வணக்கமெனக்கொள்க. அவற்றினு மென்றவும்மை தொக்கு நின்றமையின் வருவிக்கப்பட்டது. ஏனையமதஸ்தர் வணக்கம் பேதமெனவும், இந்நூலா சிரியர் தமது வணக்க மபேதமெனவுங் காட்டப் போற்றி யென்றார். ஏக நாயகன் போற்றியென்னுது பதங்கள் போற்றியென்றமையின், பதங்க ளிருவகைச் சாக்ஷிகளாகிய கூடஸ்த பிரமத்தையெனக்கொள்க. அவயவியை யன்றி யவயவமின்மைபோல, ஏகநாயகனேயன்றி யிருவகைச்சாக்ஷியு மின் மையின் பதங்கள் போற்றியென்றார். ஏனைய அவயவங்களுக்கு வணக்கங் கூறுதது தம்மை யிழிந்தோனெனக் காட்டற்கு. சிவேசருக்குச் சலோசன விலட்சணமாயிருத்தலிற் சாட்சியென்றார். நன்னிலமருவு மேகநாயகனெ ன்பது குருவெனினுமமையும்.

(உ) - கவி. அ - கை.

[நிறுத்தமுறையானே வஸ்துவைக்கோசரமாக இக்கவியில் தடுக்கின்றார்.]

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனுய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யனந்தமூர்த் தியுமாய் நிற்கும்
பூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனுய் காளுந்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே.

(இ-ள்.) ஈன்றளித்தழிக்குஞ்செய்கைக்கேதுவாம்—எ-து. சிருட்டி திதி சங்காரஞ்செய்யுங் கிர்த்தியங்கட்குக் காரணகர்த்தர்களாகிய, அயனுய்மாலாயான்றவீசனுமாய்—எ-து. பிரமாவாகியும் விஷ்ணுவாகியும் சிறந்த உருத்திரனுகியு மிருப்பதுமன்றி, தானேயனந்தமூர்த்தியுமாய்—எ-து. தானே யின்னுமனவிறந்த மூர்த்திகளாகியும், நிற்கும்பூன்றமுத்தனுமாய்—எ-து. இருந்தபடியிருக்கும் பரிபூரண ஞானியாகியும், இன்பப்புணரியாதவனுய்—எ-து. பிரமாநந்த சாகரத்திலுதிக்கு ஞானசூரியனுகியும், காளுந்தோன்றிய விமலபோதசொரூபத்தைப்பணிகின்றேனே—எ-து. சதோதயமாக விளங்கும் களங்கரகிதமான பிரக்ஞாசொரூபத்தை வணங்குகின்றேன். எ-று.

இங்கே கோசரமாவது ஞானம்; இந்த ஞானமே யிங்ஙனமாகக்கூறிய வனந்தபேதங்களுமா மென்பதுதோன்றத் தானேயெனத் தேற்றேகாரங் கொடுத்தனர். புணரியாதவனென்ற இன்பப்புணரியாதவனென்றதனுல், ஞானசூரியனென்றும் என்று மொருதகைத்தாக விளங்குதலென்பார், காளுந்தோன்றிய வெனவும், சமஸ்தமுமாக நின்று விளங்குவதாற் பிரக்ஞாசொரூபத்திற்கு வணக்கமெனவுங் கூறினர். இதுபற்றி வேதமாதா நான்கு வேதத்தினு முடிவாயுள்ள மகாவாக்கிய நான்களுள் முதல்வாக்கியமாகப் பிரக்ஞானம் பிரமமெனக் கூறப்பட்டதெனக்கொண்டாம்.

வினு.—இந்தப் பிரக்ஞானமென்பதைக் கோசரமெனக் கொள்வதென்னை?

விடை.—அறிவு, ஆனந்தமென்விரண்டாம்; அவற்றுள் அறிவன்றிச் சச்சிவ்பரமுண்டாயினறிவன்றி யானந்த முண்டாகலாம்; இன்றேலதிலு மின்றும். எங்ஙனமெனின், சோதனையி லறிவாகமுடியாத நிரிபதார்த்தங்களிலொன்றுமில்லை. இவைகள் அன்னியமாகநிருக்க ஆனந்தமென்பதெங்ஙனமன்னியமாக முடியும்? யாரும் மறிவாதலா லெம்மால் விதனை விசாரித்தனுவந்தித் ததுவாகக்கூடும். ஆதலின் கோசரமெனத்தகும்.

வினு.—அறிவே சிருட்டி திதி சங்காரமாயதை யெங்ஙன மறியலாம்?

விடை.—அறிவாகிய சத்தையன்றிப் பிராதிபாலிகம், விவகாரிகம், பாரமார்த்திகமென்னுஞ் சத்து மூன்றில்லை. பிராதிபாலிகசத்தே சிருஷ்டி, விவகாரிகசத்தே திதி, பாரமார்த்திகசத்தே சங்காரமாம். ஆதலி னிதனை மறுத்தற் கிடமின்றென்க.

(க-து.) ப்ரக்ஞாசொரூபமே சிவமாதலி னதனையே பொருளாக விங்கே வணக்கங் கூறியதென்பது. இந்த வணக்க மெல்லாமாய் நிற்கு மவசரத்தின்மேனின்றது. (உ)

கவி. அ - கை.

[நிறுத்தமுறையானே வஸ்துவை யருளிறையாக இக்கவியில் தருகின்றார்.]

எவருடை யருளால் யானே யெங்குமாம் பிரம மென்பாற்
கவருடைப் புவன மெல்லாங் கற்பித மென்ற றிந்து
சுவரிடை வெளிபோல் யானே சொரூப சுபாவ மானேன்
அவருடைப் பதும பாத மனுதினம் பணிகின் றேனே.

(இ-ன்.) யானேயெங்குமாம் பிரமமென்றும்—எ-து. நானே யெங்குமாய்நிறைந்துள்ள பிரமசொரூபமென்றும், கவருடைப்புவனமெல்லாமென்பாற்கற்பிதமென்றும்—எ-து. அனந்தபேதமாகத்தோற்றுகின்ற வண்டங்களை பலகோடிகளு மென்னிடத்தில் மித்தையென்றும், எவருடையருளால்யானேயறிந்து சுவரிடைவெளிபோற் சொரூபசுபாவமானேன்— எ-து. யாருடைய வனுக்கிரகத்தினால் நானேயறிந்து சுவரிலு நிறைந்துள்ள ஆகாயம் போல் சாட்சாத்கார சொரூப சுபாவ மானேனே? அவருடைப்பதுமபாத மனுதினம்பணிகின்றேனே—எ-து. அந்த மகானுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைச் சதாகாலமும் நமஸ்கரிக்கின்றேன்—எ-று.

என்று என்பதை யிடத்துமொட்டுக. எண்ணும்மை தொக்குநின்றன. யானே பிரமசொரூபமென் றுக்கியவிடத் தநிலுள்ள சமஸ்தபேதங்களு மென்பாலாதலால் என்பாற் கவருடைப் புவனமெல்லா மெனவும், அனேத்து மெனது சொரூபமாக விளங்கலிற் கற்பிதமெனவும், இங்ஙனமாய நிலையை யறிவுக்குறிவாகநின் றருளிறை யூறிவிக்கி அங்கறிந்தது யானேயாதலால் யானே யறிந்தெனக்கூட்டிப் பொருளிகொண்டாம். சுவரிடைவெளிபோ லென வுவமித்தது தலைமையின்மையைக்குறிக்க. அஃதிருந்தபடி யிருந்தே னென்பதை விளக்கிச் சொரூபசுபாவமானேனெனவும், இங்ஙனமுணர்ந்த வல்லா லொருதுணையில்லையென்று மருமைதோன்ற எவருடையருளாலெனவும், கைம்மாறு வேறின்மையின் பணிகின்றேனெனவுங் கூறினர்.

(உ-து.) சமஸ்தமு மித்தையாக்கிப் பிரமமாக்கியதுமன்றி யாதுங்கவுமாக்கினரென்பது விசேடம். இதனால் விளங்குவதியாதெனில் என்னைத்த

விர் யாதொன்றுமில்லையென்பது. என்னை? "என்னைத்தவிரமற்றிங்கேதுமில்லையென்றுணை - பொன்னைத்தவிரவிலாப்பூடணம்போற் - பொன்னையுரு - வேறுக்கிப்பேருணாத்தவேற்றுமைபோ னம்மையுமவ் - வாறுப்பகுத்துணாத்தோமால்." என்றார் சொரூபஞானதேசிகர்.

சுவரிடையென்பதி லும்மை தொக்குநின்றது. நேரே விளங்காமையாற் கொண்டுகூட்டிப் பொருளுணாத்தாம். இக்கவியி லிவ்வருளிறையா லாய பயன் எனக்கயலெனக் கொண்டிருந்த பிரமம் யானேயென்றும், சகல வுலகமு மென்னிடத்திலென்றும், அவை வெறும்பொய்யென்றும், அவற் றைச் சின்மாத்திரமாக்கிக்காட்டலா லென்னையன்றி யில்லையென்றும், எந்தச் சுபாவமாக வேண்டியதோ அது வானேனென்றுங் கொள்ளக்கிடந்தது. (கூ)

சு. கவி. அ - கை.

[நிறுத்தமுறையானே வஸ்துவைக் குருமூர்த்தமாக இக்கவியில் துதிக்கின்றார்.]

என்னுடை மனது புந்தி யிந்திய சரீர மெல்லாம்
என்னுடை யறிவி னுலே யிரவிமுன் னிமமே யாக்கி
என்னுடை நீயு நானு மேகமென் றைக்கியஞ் செய்ய
என்னுடைக் குருவாத் தோன்று மீசனை யிறைஞ்சி னேனே.

(இ-ள்.) என்னுடைமனதுபுந்தி யிந்தியசரீரமெல்லாம்—எ - து. எனதாகக்கொண்டிருந்த மனம் புத்தி ஐயுணர்வு சரீரமுதலிய வனைத்தையும், என்னுடையறிவினுலே யிரவிமுன்னிமமேயாக்கி—எ-து.எனதறிவைச்சுயம் பிரகாசமாகவினக்கி யந்தவறிவினுலேயே சூரியசந்நிதானப் பனிபோலழி த்து, என்னுடைநீயுநானு மேகமென்றயிக்கியஞ்செய்ய—எ-து. எனதுசொ ரூபமாகிய நீயென்பதும், உனது சொரூபமாகிய நானென்பதும், ஒன்றே யென் றயிக்கியஞ் செய்வான் வேண்டி, என்னுடைக்குருவாத்தோன்று மீச னையிறைஞ்சினேனே—எ-து. எனதாசிரியமூர்த்தமாக வெழுந்தருளிய பர மசிவத்தை நமஸ்கரித்தேன். எ-று.

என்னுடை யென்னுநான்கும் என்னுடையவென் றிருக்கவேண்டுமாத வாலிறுதொகுக்கப்பட்டன. சகலதத்துவங்களையு மெனதாக மெய்யென்றிருந் தவெனதறிவைக்கொண்டே யவற்றைப் பொய்யாக்கினனென்பது தோன்ற, என்னுடை மனது புந்தி யிந்திய சரீரமெல்லா மென்னுடை யறிவினுலே யிரவிமுன்னிமமேயாக்கி யெனவும், உபாதித்ரயத்தால் நீ நானென்னும் பேதங்காட்டலேயன்றி யறிவினுல் சற்றுமில்லையென்பது தோன்ற, என்னு டைநீயுநானுமேகமென்னைறக்கியஞ்செய்யவெனவும், ஞானகற்பிரத்தியகத் தினென்றிஜக்யமென்பது சிச்சயத்தாலும் பாவனையினுலும் பயன்படா

தென்பது தோன்ற, இரவிமுன்னிமமேயாக்கி யெனவுங்கூறினர். என்னுடை நீயுமென்றதனால் உன்னுடைநானுமென்றும். சரீரமென்னுது சரீரமெல்லாமென விகைபடக்கூறியது ஸ்தூலம் சூக்குமம் காரணம் என்பவற்றைக்குறிக்க வென்க.

வினா.—உபாதித்ரயத்தி லொன்றுயிருக்க என்னுடை மனதென வேறுபிரித்த தெற்றிற்கு?

விடை.—அந்தக்கரணப் பிரதிபலனன் சிதாபாசனென்னு மிடத்தும், பற்றிப்பாயுந் தகையதென்னு மிடத்தும், ஆதார ஆதேய தருமத்தைப்பெறு கிருக்கின் மனமொன்றே யெனக்கூறத்தகும். அங்ஙனமனுபவம் யாவர் மாட்டும் இல்லாததால் ஒன்றெனப்படாது. அஞ்ஞானம் சந்தேகம் விபரீதம் அகற்றத்தக்கது பரமசிவத்தையன்றி இன்றுதலால், என்னுடைக் குருவாத் தோன்று மீசனென்றார். நீயேநான் நானே நீயென்றுயவிடத்து இறைஞ்சினேனென்றது எத்தகையாயவணக்கமோ அதனையுணர்ந்தாரோ அறியவேண்டும். என்னுடை நீயுநானும் எகமென்றவிடத்து, உபாதிசகித அறிவுக்கன்றென்க.

அறிவுக்கறிவாய் நின்றறிவிக்கும் அவசாமூர்த்தம் அருளிறையெனவும், நேரோமானிடச்சட்டை சாத்திவந்து அடியாரைத் தடுத்தாட்கொள்ளு மவசரங்குருமூர்த்தமெனவும் இருப்பதுபற்றி இங்ஙனங் கூறியதென்க. (சு)

ரு - கவி. அ - கை.

[சிறுத்தமுறையானே மேற்கூறிய குருமூர்த்தத்தை வணங்கி உண்மையாவது இத்தகையதென இக்கவியிற் கூறுகின்றார்.]

அந்தமு நடுவு மின்றி யாதியு மின்றி வான்போற்
சந்தத மொளிரு ஞான சற்குரு பாதம போற்றிப்
பந்தமும் வீடுங் காட்டப பரந்தநூல் பார்க்க மாட்டா
மைந்தரு முணரு மாறு வஸ்துதத் துவஞ்சொன் வேனே.

(இ-ள்.) அந்தமுநடுவுமின்றியாதியுமின்றி—எ-து. ஆதியந்தியாந்தரமிதமாய், வான்போற் சந்ததமொளிருஞான் சற்குருபாதம்போற்றி—எ-து. ஆகாயத்தைப்போல இடைவிடாதிருந்து சதோதயமாக விளங்குகின்ற ஞானவடிவமாயுள்ள சற்குருநாதனது திருவடிகளைவணங்கி, பந்தமும்வீடுங்காட்டப்பரந்தநூல்—எ-து. பந்தநிலையினையதெனவும், முத்திநிலையினையதெனவும் காட்டுவான்வேண்டி விரிவாகக் கூறப்பட்டுள்ள வேதாந்தசாஸ்திரசாகரங்களை, பார்க்கமாட்டா மைந்தருமுணருமாறு—எ-து. ஆராய்ந்துணரத்தக்கதியில்லாத சிறுமெளிதிலுணரும்படி, வஸ்துதத்துவஞ் சொல்வேன்—எ-து. உண்மையாயவஸ்து இஃதெனக் கூறுகின்றேன்—எ-து.

இங்கே சந்ததமென்பது காலத்தின்மேலும், வான்போலென்னு முவமை இடத்தின்மேலுமின்றன. பாந்தவென்பது தாலென்பதற்குப்பியயமொச்சமாயினும், பிறரானென்றித் தானேபரவுந்தன்மை நூலுக்கின்மையின் அந்தவினையைச் செயப்பாட்டுவினையாக்கினம். அந்தமுமாதியுமின்றியாதியுமின்றி வான்போற் சந்ததமொளிருமென்னும் விசேடணம் ஞானத்துக்கே யுரியது. அதுவாக விளங்குபவர் ஆசிரியராதலால்ஆசிரியருக்குமாம். ஞானகுருவென்னது சற்குருவெனமிகைபடக்கூறியது, அஞ்ஞான சந்தேக விபரீதங்களைச் சுருதிமுகத்தால் மாத்திர மகற்றுதல் பற்றியும், இதுவுமின்றி யேனையோரும் இப்பெயர் கொண்டது பற்றியுமென்க. சற்குருவென்னுது ஞானகுருவென்றது சரியை கிரியா யோகக்குருக்களன்றெனப்பிரிக்க. ஏமந்தருமென்னு மும்மை யிழிவு சிறப்பு. எனவே போதனை சக்தியை விளக்கிற்று.

(க-து.) உணரச் சக்தியற்றவர்களும் உணர்ந்துகொள்ளுப்விதம் உண்மையைத் தெளிவிக்கப் புகுந்தனென்பது. இது சிவகாருணியம்; செருக்கன்று. (ஙி)

கூ - கமி. அ - னை.

[முன்னே வஸ்துதத்துவமெனப் பொதுப்படக்கூறி இக்கவியில் அதினையதெனக் கூறுகின்றார்.]

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கடன் மொண்டு முன்னூற்
குடங்களி னிறைத்து வைத்தார் குரவர்க ளெல்லாங் காய்ச்சிக்
கடைந்தெடுத் தளித்தே னிந்தக் கைவல்ய நவநீ தத்தை
யிடைந்தவா விடய மண்டிடன் றலைவரோ பசியி லாரோ.

(இ-ள்.) படர்ந்த வேதாந்தமென்னும் பாற்கடல் மொண்டு முன்னூல் குடங்களி னிறைத்துவைத்தார் குரவர்கள்—எ-து. முன்னூல்ள வேதாந்தாசாரியர்கள் தமது காலத்துக்கு முன்னரோ விஸ்தாரமாகச் சொல்லப்பட்டுவாயின்றி விரிந்துள்ள வேதாந்தமென்னும் திருப்பாற் கடலில் மொண்டுதம்மாலாய முதனூலென்னும் குடங்களி னிறைத்துவைத்தார்கள். எல்லாங்காய்ச்சிக் கடைடந்தெடுத்தளிததே னிந்தக் கைவல்ய நவநீதத்தை—எ-து. அக்குடங்களி னிறைத்துவைத்த அனைத்தையும் ஒருங்குசேர்த்துக்காய்ச்சிக் கடைந்து அதிலெழுந்த வெண்ணெய்க்குக் கைவல்ய நவநீதமெனப் பெயர்தந்து இதனை யாவருமுண்ணும்படி யெடுத்துக்கொடுத்தேன். அடைந்தவர் விடயமண்டிடன்றலைவரோ பசியிலாரோ—எ-து. இதனை ஏற்றுண்பவர்கள் விடயமாகிய மண்ணைத்தின்ன அலைவரார்களோ? அலையார்கள்; ஏனெனிற் பசியில்லாதவர்களாதலால். எ-று.

படர்ந்த வேதாந்தமென்னும் பாற்கடலென்பதும், முன்னூற்குடங்களென்பதும், கைவல்யநவநீதமென்பதும், விடயமண்ணென்பதும் உருவகம். வேதமுடிவில் அகண்டபரிபூரணமாக விளங்காநின்ற சுயஞ்ஜோதன்யை சாட்

சாத்காரத்தைப் படர்ந்த வேரென்னும் பாற்கடலெனவும், மகான்கள் தந்தமக்கினையந்த அளவு அதையேற்றுச் சிந்தித்துத் தெளிவுற்றதைப் பிறருய்யப் பாக்களிலும் வாக்கியங்களிலுங் குறைவற அமைத்தன ரென்பதை மொண்டு முன்னூற்குடங்களி னிறைத்துவைத்தார் குரவர்க ளெனவும், அவ்வனுபவ ரசங்களெல்லா மொருங்கே யென்னுளத்திற் கொண்டு என்னனுபவ ஞானக்கினியி லிடையச் சிந்திக்கச் சிந்திக்கச்சேடித்து நின்றது நிரதிசயானந்தமாதலால் இதனை யெடுத்துணர்த்தினே னென்பதை எல்லாங்காய்ச்சிக் கடைந்தெடுத்தளித்தே னிந்தக் கைவல்ய நவநீதத்தையென வும், இதனருமையுணர்ந் திதனையடையுமாறு அடைந்ததற்குமாறுய நிலையையனீடையுத் தவிப்பரோ நித்தியதிருத்திய ராதலின் தவியா ரென்பதை அடைந்தவர் விடயமண்டின் றலைவரோ பதியிலாரோ யெனவுங் கூறியவாறு காண்க. இதற்கேற்றற்பால தல்லாத கைவல்ய நவநீதமென்னுந் திவ்விய மேலாயநிலையை அதற்கினையந்த மொழிகளாக்கித் தந்தமையின் கைவல்யநவ நீதம் விடயமும், அதற்கினையந்த மொழிகளாலாய கவிகளும், அக்கவிகள்மய மாய இந்நூலும், அவ்விடயத்தையுணர்த்தற்கினையந்த துணைக்கருவியாதலால் இந்நூல் சம்பந்தமும், இதனை யுணரவேண்டியவாறு உணர்ந்தனுபவித்தற் குரியார் அதிகாரியும், அங்ஙனம் அனுபவித்தலாலாயது துக்கநிவர்த்தியும், தடையற்ற வானந்தமும் ஆதலால் இவை பயனும் எனக்கொண்டாம், இவ்வாள்வே இந்நான்கும் அனுபந்த சதுஷ்டய மென்றுரையிற்று.

வினா.—எதை விடய மன்னென்றீர் ?

விடை.—சர்வமதத்தருங் கூறுங் கைலாய முதலிய சகல பதவிகளும், அவிற்றுலாய தாரதம்மிய சுகபோதங்களுமென வறிக.

வினா.—இவற்றை மண்ணென்பானேன் ?

விடை.—மண்ணை யாகாரமாக்கியவிடத்து ரசத்துக்கே இடந்தரல் போல், விடயத்தையே சுகாகார மாக்கியவிடத்து ஓயாப் பிறப்பிறப்பிற்கே யிடந்தரலா லென்க.

(க-து.) அனுபந்த சதுஷ்டயத்தினிலை இஃதென விளக்கியதென்பது.

இங்கே விடயமன்னென்பதின் முக்கியார்த்தம் அறிவுக்கயலே. (சு)

எ- கவி. அ. கை.

[மேனிறுத்தமுறையானே வஸ்துவை உபாசனை மூர்த்தமாகத் தனித்து இந்நூலை இருவகைப்படலமாக்கி அவற்றிற்குரியபெயரை இக்கவியிற் கூறுகின்றார்.]

முத்தனை வேங்க டேச முகுந்தனை யெனையாட் கொண்ட
கர்த்தனை வணங்கிச் சொல்லுங் கைவல்ய நவநீ தத்தைத்
தத்துவ விளக்க மென்றுஞ் சந்தேகந் தெளிந்த லென்றும்
வைத்திரு படல மாக வகுத்தனை செய்கின் றேனே.

(இ-ள்:) முத்தனை வேங்கடேச மூருந்தனை யெனையாட்கொண்ட கர்த்தனைவணங்கி—எ-து. பாசமகன்றவனுகியுந் திருவேங்கடாசலபதிக்கு முருந்தனுகியும் என்னைத் தடுத்தாட்கொண்ட கர்த்தனுகியும் இருப்போனெவனே அவனைவணங்கி, சொல்லுங் கைவல்ய நவநீதத்தைத் தத்துவ விளக்கமென்றுஞ் சந்தேகந் தெளிதலென்றும் வைத்திருபடலமாக வகுத்தனை செய்கின்றேன்—எ-து. சொல்லப்புகுந்த இந்தக்கைவல்லிய நவநீதமென்னு நூலைத் தத்துவ விளக்கமென்றும் சந்தேகந் தெளிதலென்றும் இரண்டுபடலமாக வகுத்துவைத்து அவற்றைச் சொல்லத்துணிகின்றேன். எ-று.

"ஒருபொருண்மேற் பலபெயர்வரினிறுதி யொருவினைகொடுப்பது" என்னும் விதியால், முத்தனை வேங்கடேச முருந்தனை யெனையாட் கொண்ட கர்த்தனை வணங்கி என்றார். (எ)

அ - கவி. அ - கை.

[மேலிரண்டாக வகுத்த படலவகைகளுள் தத்துவவிளக்கத்தை முன்னர்க் கூறுவான் வேண்டி அதனை யேற்றற்பாலனுகிய அதிகாரியின் சாதனசதுட்டயங் கூறப்புகுந்தார், இக்கவியில் அவற்றின் பெயரையும், நிலையையும் முறையே யுணர்த்துகின்றார்.]

நித்திய வநித்தி யங்க ணிண்ணயந் தெரிவி வேகம்
மத்திய விகப ரங்கள் வருபோகங் களினி ராசை
சத்திய முனைக்க வேண்டுஞ் சமாதியென் றிறு கூட்டம்
முத்தியை விரும்பு மிச்சை மொழிவர்சா தனமிந் நான்கே.

(இ-ள்.) நித்தியவநித்தியங்க ணிண்ணயந் தெரிவிவேகம்—எ-து. நித்திய வஸ்து, அநித்தியவஸ்துக்களின் நிச்சயங்களைத்தெரிகிறவிவேகத்தை நித்தியா நித்தியவஸ்து விவேகமென்றும், மத்தியவிகபரங்கள் வருபோகங்களினி ராசை—எ-து. இடையாயுளள இம்மை மறுமைகளில் வரும்போகங்களில் வெறுப்பெழுதலை இகழுத்திராத்த பலபோக விராகமென்றும், சத்திய முனைக்கவேண்டுஞ் சமாதியென்றிறுகூட்டம்—எ-து. உண்மையாகவுணர்க்க வேண்டியவாறு சமாதியென்று கொள்ளத்தகுஞ் கூட்டத்தைச் சமாதிசட்க சம்பத்தென்றும், முத்தியைவிரும்பு மிச்சை—எ-து. ஐக்கிய முத்தியை விரும்பத்தக்க இச்சையை முமுட்சுத்துவமென்றும், மொழிவர்சாதன மிந் நான்கு—எ-து. கூறத்தகும் இந்நான்கையுளு சாதனசதுட்டயமென்ப தறிவுண்டையோர். எ-று. (அ)

கூ - கவி. அ - கை.

[முன்னர் சமாதிசட்கசம்பத்தென்னுந் தொகை இனி யிரண்டு கவியில் வகையாக்கிக் கூறுகின்றார்.]

சமங்தமம் விடல்ச ஹித்தல் சமாதானஞ் சிரத்தை யாருந்
சமம்மக் ரூணை தண்டம் தமம்புறக் கரண தண்டம்

அமர்மனை விவகா ரங்க ளருகலே விடலென் றுரும்
அமர்செயுஞ் சுகதுக் காதி யனுபவிப் பதுசி கித்தல்.

(இ-ள்.) சமந்தமம் விடல்சகித்தல் சமாதானஞ் சிரத்தையாறும்—எ-து. முன்னர் சமாதிசட்க சம்பத்தென்றார்; அவை சமம் தமம் விடல் சகித்தல் சமாதனம் சிரத்தை யெனவாறும், சமமகக்கரணதண்டம்—எ-து. சமமர் வது அகமாயுள்ள மனத்தைத் தண்டித்தலாம்; தமம் புறக்கரணதண்டம்—எ-து. தமமாவது புறமாயுள்ள ஞானேந்திரிய கன்மேந்திரியங்களைத் தண்டித்தலாம்; அமர்மனைவிவகா ரங்களருகலே விடலென்றுரும்—எ-து. விடலாவது தானமர்ந்துள்ள குடும்பவிவகாரங்களைச் சுருங்கச் செய்தலாம்; அமர் செயுஞ் சுகதுக்காதி யனுபவிப்பது சகித்தல்—எ-து. சகித்தலாவது விடாது கலகஞ் செய்கின்ற சுகதுக்கமுதலியவைகளை அவ்வவ்வாறுகாதனுபவித்தலாம். எ-று.

இச்சை செல்லுழியெல்லா மனஞ்செல்லாது காத்தல் அகக்கரணதண்டமெனவும், முன்பழக்கவழிச் செல்லுழியெல்லாம் பொறிகள் செல்லாது காத்தல் புறக்கரணதண்டமெனவும், விவகாரவிரிவைச்சுருக்கல் அமர்மனை விவகாரங்களருகலெனவும், இருவினைப்பயன் வழித்தா யாகாமை சகித்தலெனவும் பொருள்படுமாறுகாண்க. கலகஞ்செய்தல் மனமொருவழித்தா நிற்கச்செய்யா தலெயச்செய்தல்.

(க)

க0 - கவி. அ - கை.

இதுவுமது.

சிரவணப் பொருளைத் தானே சித்தஞ்சிந் திக்கு மாறு
சரசமா வைக்கு மித்தைச் சமாதான மென்பர் மேலோர்
பரமசற் குருநூ லன்பு பற்றலே சிரத்தை யாகுந்
தரமிகு சமாதி யாறு வகையாஞ்சொற் பொருளி தாமே.

(இ-ள்.) சிரவணப்பொருளைத் தானேசித்தஞ் சிந்திக்குமாறு சரசமா வைக்குமித்தைச் சமாதானமென்பர் மேலோர்—எ-து. வேதாந்த சிரவணார்த்தத்தையே சித்தஞ் சிந்திக்கும்படி இனிய லீலையாக நியமித்துக்கொண்ட இந்தச்சன்மார்க்கத்தைச் சமாதானமாவதெனச் சான்றோர்கூறுவர். பரமசற்குருநூலன்பு பற்றலே சிரத்தையாகும்—எ-து. சிறந்தசற்குருநாதனிடத்திலும் வேதாந்தநூலினிடத்திலும் மிக்கவன்புவைத்தலே சிரத்தையென்படுவதாம். வரமிகுசமாதியாறுவகையின் சொற்பொருளிதாம்—எ-து. எல்லாவரத்திலுமிக்க ஆறுசமாதிவகையின் சொற்பொருளிஃதேயாம். எ-று.

ஏனையவற்றைச் சிரவணப் பொருளென்றது வேதாந்த மென்றது சமாதிசட்க சம்பத்து நான்குசாதனத்தின் மூன்றாவதாதலானும், சமாதியாறனுள் சமாதான மைந்தாவ தாதலானும், பின்சாதன மூன்றுட்சத்தவ

மாதலானுமென்க. தானே யென்னுந் தேற்றேகாரத் தந்தது பிறவன்றெ னற்கு. காதானுகர்தலிச் சிரவணமென்றார். பொருளிதாமென்றது தொ குதியொருமை. வேதாந்தார்த்தமாவது அங்கலிங்கார்த்தத்தை மாத்திரம் பிரதிவாதிப்பது. ஏனைய கன்மகாண்டம் பத்திகாண்ட மெனக் குறிப்பிக்க நின்றன. [க-து.] இந்நூலதிகாரிக்கு இந்நான்குசாதனமும் அங்கமாயிற் றென்பது. (கடு)

கக - கவி. அ - கை.

[அவ்வவற்றிற்குரியசாதனமின்றியக்கண் யாதும் அமையாதென் பதையும், அமையின் அதனருமையையும் இக்கவியிற் கூறுகின்றார்.]

சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லிலலை
ஆதலா லிந்த நான்கு மடைந்தவாக் கறிவுண டாகும்
நூதன விவேகி யுள்ளி னுழையாது நுழையு மாகிற்
பூதசன் மங்கள் கோடி புனிதனும் புருட னுமே.

(இ-ன்.) சாதனமின்றி யொன்றைச் சாதிப்பா ருலகிலில்லை—எ-து. அவ்வவற்றிற்குரிய சாதனமில்லாவிடத்து யாதுகாரியத்தையுஞ் சாதிப்பாரு லகெங்கணுமில்லை; ஆதலா லிந்தநான்கு மடைந்தவர்க் கறிவுண்டாகும்—எ-து. ஆகையா லிந்தநான்கு சாதன முடையோர்க்கே ஞாலேதயமுண்டா கும். நூதனவிவேகியுள்ளினுழையாது—எ-து. நூதனசாதன விவேகியுள்ள த்தின்கண் ஞானுர்த்தத்தை நுழையுமா றெடுத்துக்கூறினுஞ் சற்றும் நுழை யாது; நுழையுமாகிற் பூதசன்மங்கள் கோடிபுனிதனும் புருடனும்—எ-து. நுழையுமாறுல் அவன் முன் அனேககோடி சன்மங்களிற் செய்தசிவபுண்ணி யங்களாற் சித்தசுத்தி யுடையோனுகிப் பரிபாக புருடனென் றெண்ணப் படுவன். எ-று-

பொதுப்பட நீதிபற்றிக் கூறியதென்பது தோன்றச் சாதனமின்றியொ ன்றைச் சாதிப்பா ருலகிலில்லை யென்றார். நிச்சயமாதலி னறிந்தவர்க்கே யெனத் தேற்றேகாரம் வருவித்தாம். ஏனையபாலிலும் "ஒருமொழி யொழி தன்னினங்கொளற்குரித்தே" என்னும் விதியால் புனிதனென்பதை யொட் டுக. அஃறிணையிலு முன்னுக்கத்திரியும் ஞானுக்கினியா லெரிந்தவென்னும் ஐங்கசாம்பிரதாய மிருத்தலிற் கூறும்.

(க-து.) ஞானம் சாதனசதுஷ்டயமின்றி யமையாதென்பது. இக்கே யறிவுண்டாகு மென்பது மெய்யுணர்வை. மெய்யுணர்வாவது அயலெயறி யாது தன்னேத்தானறிதல். என்னே? "மெய்ம்மையறி வல்லதமில் வேறறிவ தெல்லாம், தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே" என்றார் தத்துவரா யர். சுவாஞ்சூதி தானேயேனும், சுவாஞ்சூதி யுத்தியேனும், சுவாஞ்சூதிலை லவ் அற்புதத்தை யேனும் இடைவிடா திலயிப்பதலமாக எதிரினின் றெடு

த்துப்புலப்படும் வண்ணம் போதிக்கினும் இங்ஙனமாய சத்தஞ்சிறிதும்நுழை யாது. செவிடோ? உலகசத்தத்துக்கன்று. என்னை? "கேட்பினுங் கௌரத் தனையவே கேள்வியாற் றேட்கப் படாத செவி" என்றார் திருவள்ளுவ நாயனார். (கக)

கஉ - கவி. அ - கை.

[இங்ஙனமாய சாதனசதுஷ்டய அதிகாரியான ஒருவனதிநிவீர பக்குவங்லையை இக்கவியிற் கூறுகின்றார்.]

இவனதி காரியாதே னிந்திரி யங்க ளாலும்
புவனதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க ளாலுந்
தவனமூன் றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பிப்
பவமறு ஞான நீர்த்தம் படிந்திடப் பதறி னனே.

(இ-ள்.) இவனதிகாரியாதே னிந்திரியங்களாலும் புவனதெய்வங்க ளாலும் பூதபௌதிகங்களாலுந் தவனமூன்றடைந்து—எ-து. இந்தநான்கு சாதனத்துக்கு மதிகாரியாதேனைனிய இவன், மனமுதலியவாறு இந்திரியங்க ளாலும், பூமியில் தனக்கதிகக்கணக தேரிடுந் தெய்வச்செயல்களாலும், பஞ்ச பூதங்களாலும், அவற்றின்பௌதிகங்களாலும் தேரிடும் மூன்றுவித தாகமடை ந்து, வெய்யிற்சகித்திடாப் புழுப்போல்வெம்பி—எ-து. வெய்யிலாற் சகிக் கப்படாத புழுவைவப்போல வதைந்து, பவமறு ஞானநீர்த்தம் படிந்திடப் பதறினன்—எ-து. சனியாத ஞானநீர்த்தத்தில் மூழ்கிவிட அதிதீவிரமாக வினாவுற்றனன். எ-று.

இவன் தவனமூன்றடைந்து புழுப்போல்வெம்பி ஞானநீர்த்தம் படிந் திடப்பதறினனெனமுடிக்க. ஆறிந்திரியங்களானேரிடுந்தவனமாவது பொ ருளல்லவற்றைப் பொருளாக உணர்வதினலாய சுகதுக்கவதை; புவனதெய் வங்களானேரிடுந் தவனமாவது வாழானேரிடுந் தனதிஷ்டத்தவறு; பூதபௌ திகங்களானேரிடுந் தவனமாவது மண்முதலிய பஞ்சபூதங்களாலும், இடிமின் னல் வீடிடுந்துவிழுகை முதலியவற்ரு னேரிடும்வதை. இவற்றைமுறையே ஆதியாத்மீக மெனவும், ஆதிதெய்வீக மெனவும், ஆதிபௌதீக மெனவும் அறிவுடையோர்கூறுவர். தாபத்ரயாக்கினி யெனினும் பொருள்படும். தவன முன்றடைந்து புழுப்போல்வெம்பிப் பதறினனென்னுங் குறியா லதிதீவி ரனெனக் குறிக்கப்பெற்ரும். தவனமென்பது அக்கினியெனினுமமையும். இந்தத் தாபத்ரயத்துக் கியையாதா னிவனெனவே, ஏனையர் இயைந்தன்ரோ னைப்பொருள்படுதலால் அவர்க ளதி தீவிரரல்லரெனத் தானேகுறிக்கின்றது. இக்குறிகளை வஞ்சகர் தம்பா லிருப்பதாகக் காட்டினும் வினாவில் மாறுவர்.

(க-து.) வெயிலால் வதையுண்டோன் தடாகமுதலிய நீர்த்தத்தில் மூழ்கப் பதறுவான்போன்று தாபத்ரயாக்கினியால் மனச்சாக்ஷியாக வந்த யுண்டோன், ஏனைய நீர்த்தம் வேண்டாது ஞானநீர்த்தத்திலேயே மூழ் கப்பதறுவனெனவறிக. பவமறுமென்பதில் ஞானத்துக்கு விசேடணமாக்

இப் பவத்தையறுக்கு ஞானமெனப் பொருள்கொள்ளினு மமையும். தெய்வ மெனினு மூழெனினு மொக்கும். அறு ஞானம்வினைத்தொகை. இதி தன்வி னை பிறவினைகட்குப்பொது. (கஉ)

கங - கவி. அ - கை.

[இந்த அதிதீவிர பக்குவன் மேற்கூறிய தாபத்ரயாக்கினி மேலீட்டால் ஈடணத்ரயமும் கடந்து ஞானசற்குருவுக்காக எங்கும் தேடி யலைந்து கண்டானென்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

ஆனவிம் மனவி மக்க ளாத்தவீ டணைகண் மூன்றிற்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடு மான்போற்
போனவன் வெறுங்கை யோடே போகாத வண்ணஞ் சென்று
ஞானசற் குருவைக் கண்டு நன்றுக வணங்கி னனே.

(இ-ள்.) ஆனவிம் மனவிமக்க ளாத்தவீ டணைகண்மூன்றில்—எ-து, தத்தமக்குரிய வூழாலமைந்த இத்தமனைவியும் இந்தப்புத்திரர்களும்இந்தப்பொ ருள்களுமாகிய ஈடணத்ரயங்களினின்றும், கானவர்வலையிற்பட்டுக் கைதப்பி யோடுமான்போல் போனவன்—எ-து. வேடரது வலையிற் சிக்கித் தெய்வ கதியால் தப்பித்துக்கொண்டு திரும்பிப் பாராதோடு மான்போலத் தப்பித் தோடிப்போன இவ்வதிதீவிரன், வெறுங்கையோடே போகாதவண்ணஞ் சென்று—எ-து, யாதொன்றும் இல்லாததாகப் போகாத பிரகாரம் போய், ஞான சற்குருவைக்கண்டு நன்றுக வணங்கினன்—எ-து. ஞானாசிரியனைத் தரிசித்து மனப்பூர்த்தியாக வணங்கினன். எ-று.

ஈடணத்ரயத்தால் நேரிடுந்துன்பமாவது மனைவிபால் ஐயமருளையும், மக்கள்பால் அவாவருளையும், தாமீட்டிய பொருளின்பால் "இன்னதரும் பொருளை யீட்டுதலுந்துன்பமே பின்னதனைப் பேணுதலுந்துன்பமே யன்ன தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா லிழத்தலுந் துன்பமேயாம்." என்னுங் கவிப்படி நேரிடுந்துன்பமருளையுமே. வெறுங்கையோடேபோகாத வண்ணமாவது சாதன சதுஷ்டய பரிபாகத்தை வினக்கின்றது. இங்கே நன்றுகவென்பது திரிகரணமொத்தலே.

(கஉ-து.) தாபத்ரயாக்கினியால் ஈடணத்ரயத்தைக் கடந்து ஆசிரியனைத் தேடிக் கண்டு வணங்கினனென்பது. (கங)

கச - கவி. அ - கை.

[அங்ஙனந்தேடிக்கண்ட ஆசிரியன்பால் தன்குலதனமுறை யிடுகின்றான் என்பதை இக்கவியிற் கூறுகின்றார்.

வணங்கினின் றழுது சொல்வான் மாயவாழ் வெனுஞ்சோ கத்தால்
உணங்கினே னெய நேயென் னுள்ளமே குளிரும் வண்ணம்
பிணங்கிய வினைக பாசப் பிள்ளைச் சின்ன மாக்கி
இணங்கியே குருவே யென்னை யீரகஷிக்க வேண்டு மென்றான்.

(இ-ள்.) வணங்கின்றழுது சொல்வான் மாயவாழ்வென்னுஞ் சோகத்தா வணங்கினேன்—எ-து. ஆசிரியரை வணங்கின் றழுது முறையிட்டாயினன், (அது குடும்பத்தை மெய்யென் றுன்னு மாயவாழ்வென்னும் சோகத்தினுல் மிகவுணர்தலை) ஐயனே என்னுள்ளமே குளிரும்வண்ணம்—எ-து. எனதாவியை மூர்த்தமாக எழுந்தருளிய கர்த்தனே! என்னுள்ளமாத்திரம் சீதளமாகும்படி, பிணங்கிய கோசபாசப் பின்னலுச்சின்னமாக்கி—எ-து. பேரின்பவாழ்வுக்கு மாறுயுள்ள பஞ்சகோசமாகியவலையைத் துண்டுதுண்டாகத்தறித்து, இணங்கியகுருவே யென்னை யிரட்சிக்கவேண்டுமென்றான்—எ-து. என் ஐயந் திரிபு அகற்றுவதற்கு இயைந்த குருநாதனே அடியேனைப் பிறவியணுகாவாறு இரட்சிக்க வேண்டுமென் றிரந்தனன். எ-று.

மாயவாழ்வென்பது பொய்வாழ்வு; சோகமாவது துன்பம். எனவே, பொய்வாழ்வு மெய்யாகச் சுகம்போலத் தோன்றலின் மெய்வாழ்வெனத் துணிந்து அனுபவிக்க அனுபவிக்கத் துன்பமேலீடே நிகரற்றபலனென்பது பெற்றும். மாயவாழ்வு சந்தைகூட்டம்போல்வது. தேகங்களெல்லாமண் பொம்மைகளாதலின் மீண்டு மண்ணுகின்றன. ஆயினும் வினைவழியேவந்து அணைவதாதலின், "இக்கணத்திருக்கு மினிவருங் கணத்திருக்குமோ மாக்குமோ வுடலம்" என்றுரைத்தனர். ஆதலின் இவ்வுடலை மெய்யெனநம்பி நானியவனைவ ளதுவெனக்கொண்டு குலாவிமகிழ்தல் மகிழ்வன்று என்பது பற்றி மாயவாழ்வு என்றார். இப்பொய்வாழ்வைப் பொய்யென்றுணராது மெய்யெனக்கொள்வதும், அவற்றாலாய சுகதுக்க வலைகளால் ஓயாது மொத்துண்பதும், இது சுகமென்று அச்சுழலில்தானே யிருக்க மீண்டுமீண்டுங் காமியத்தவமே புரிவதும், சிற்றின்பத்தையே கருதிச் சலிப்பின்றி உழல்வதும் உள்ளமாதலாலும்; தாபத்ரயாக்கினி வதைத் தவிப்பும், சடணத்ரயத்தவிப்பும் இவ்வுள்ளத்திற்கே யாதலாலும்; உபசாந்தம் வேண்டுவது வேறொன்றிற்கும் அன்றுதலாலும் உள்ளமே குளிரும் வண்ணமெனத் தேற்றேகாரங் கொடுத்தார். பாசமென்பது ஆசையாகிய கயிறு. கயிற்றுற் பின்னியிருப்பதுபற்றிப் பின்னலை வலையென்றும்.

(க-து.) துக்கநிவர்த்தி வேண்டுமென்பது. (கச)

கரு = கவி. அ = கை.

[அவ்வேண்டுகோளுக்கு இயைந்த ஆசிரியர் யான் சொன்னவாறு இயையின் அங்ஙனமாகியென்றனன் என்பதை இக்கவியிற் கூறுகின்றார்.] (த)

அன்னைதன் சிசுவை யையு ணுமைமீன் பறவை போலத்
தன்னைகங் கருதி நோக்கித் தடவிச்சந் தியிருத்தி
உன்னது பிரமி மாற்று முபாயமொன் றுண்டு சொல்வேன்
சொன்னது கேட்பா யாகிற் றொடர்ப்புலந் தொலைய வென்றான்.

(இ-ள்.) அன்னைதன்சிசுவை யையஞ்ஞை மீன்பறவைபோல—எ-து. தாயாகிய ஆமையும், மீனும், பட்சியும் தன்சிசுவைச் செய்யுமாறுபோலக் குரு, தன்னகங்கருதிநோக்கித் தடவிச் சந்நிதியிருத்தி—எ-து. தன்னுளத்திற் சிந்தித்தும் திருநோக்குவைத்தும் அஸ்தமஸ்தஞ் சையோகஞ்செய்தும் இம்மூன்றுமாயின்பின் தன் சந்நிதியிலிருக்கச்செய்து, உன்னது பிறவி மாற்றுமுபாயமொன்றுண்டு—எ-து. இனி உனது சனனத்தை நீக்கத்தக்க ஓர் தந்திரமுண்டு, சொல்வேன் சொன்னது கேட்பாயாகிற் றொடர்பவந் தொலையுமென்றான்—எ - து. யான் அதைச் சொல்லுகின்றேன் சொன்னவாறு கேட்டு நிற்பையாயின் உன்னைவிடாது தொன்றுதொட்டுத்தொடர்ந்து வருகின்ற சனனம் உன்னைவிட்டு நீங்குமென் றுறுதிமொழிந்தனன். எ-று.

ஐயனுமென்றஉம்மை தொக்குநின்றது. அன்னையென்பதுவமையன்று; தன் சிசுவென்றதனால் ஆமை மீன் பறவையென்பனவகட்கு விசேடணமாயிற்று. என்னை? "படர்க்கைமுப் பெயரோடணையிற் சுட்டுப்பெயர் பின்வரும்"என்றார் நன்னூலார். ஆமைமீன் பறவைபோலத் தன்னகங் கருதிநோக்கித் தடவியென்பது திரளிறைப் பொருள்கோள். இக்கவியில் தன்னென் பதிரண்டுண்டு: ஒன்று ஆமையாதிகளுக்கும், மற்றொன்று தன்னகங்கருதி என்பதனால் குருவுக்கு மெனக்கொள்க. யாதினனெனில் போலவென்பதை இடையிற்கொடுத்துப் பிரித்ததினாலென்க.

(க-து.) அவன் வேண்டுகோளுக்கு இவர்இளைத்ததற் கடையாளம் இவன் தன்னைப்போலாகுக வென்றுன்னலும், நோக்கலும், தடவலுமேயென்பது. ஆமையாதிகளுக்குரிய வினையை இவர்மேல்ஏற்றலால் அவைகட்குச் சொல்லாதொழிந்தது சுருங்கச்சொல்லலென்னு மழகு. அவைகட்குரிய தனித்தனிவினையும் தத்தங் குஞ்சுகள் தம்மைப்போல் உருப்படற்கென்க.()

கசு - கவி. அ - கை.

[அங்ஙனமாகுகவென்ற ஆசிரியர் கூறிய ஓர் சிறியதந்திரத்தைக் கேட்டமாத்திரத்தில் அவனெய்திய உவகை மிகுதியை இக்கவியிற் கூறுகின்றார்.]

தொடர்பவந் தொலையு மென்று சொன்னதைக் கேட்ட கோரத்
தடமடு மூழ்கி னுன்போற் சரீரமுங் குளிர்த்துள் ளாறி
அட்டருமன் பொழுகு மாபோ லானந்த பாஷ்பங் காட்டி
மடன்மலர்ப் பாத மீண்டும் வணங்கினின் றீது சொல்வான்.

(இ-ள்.) தொடர்பவன் தொலையுமென்று சொன்னதைக் கேட்டகோ ரம்—எ-து. தொன்றுதொட்டு உன்னைத் தொடர்ந்துவருகின்ற சனனந் தொ லையுமென்று குருவானவர் சொல்ல அதைச் சீடன் கேட்டமாத்திரத்தில், தடமடிமூழ்கினன்போற் சரீரமுங் குளிர்ந்துள்ளாறி—எ-து. வெய்யிலாற்கலை ப்பட்டோன் பெரியதடாகத்தில் மூழ்கினால் எங்ஙன்மோ, அங்ஙனம் இவ னும் தன் மனம் குளிர்ந்ததுமன்றிச் சரீரமும் உட்புறமெங்குங் குளிர்ந்து வெப்பமாறி, அடருமன்பொழுகுமாபோ லானந்தபாஷ்பங்காட்டி—எ-து. அகத்தில்மிக்க அன்புபெருகுமாறுபோன்று புறத்திலும் விழிகளால் ஆனந்த பாஷ்பம் ஒழுகக்காட்டி, மடன்மலர்ப்பாதமீண்டும் வணங்கிநின் நீதுசொல் வான்—எ-து. தாமரைமலர்போன்றதிருவடிகளை மீண்டும் வணங்கியெழுந்து நின்று இதைச் சொல்லப்புகுந்தனன். எ-று.

ஒருவரும் இங்ஙனம் சொல்லக்கேளாமையால் இங்ஙனமாய வியப்பு தோன்றிற்று. மனங்குளிர்ந்தது மன்றியெனத் தெரிவித்தலால் சரீரமுமெ ன்ற வும்மை இறந்தது தழீஇயவெச்சவும்மை. மடன்மலர்ப் பாதம் உவமை த்தொகை. (கசு)

கஎ - கவி. அ - கை.

[அங்ஙனம் உவகையின்மிக்கோனுகிய மாணாக்கன் ஐயனேஉபா யமொன்றுண்டென்றீரோ; அதனை யுணர்தற்கு அடியேன் அபாத ரணையினும் அதை விளக்கி இரட்சித்தல் தமது கடமையே யெ ன்று இரந்துகேட்டனன் என்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனு னுலுஞ் சுவாமி
தின்னது கருணை யாலே நீரென்னை யாள லாமே
உன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டென் றீரே
இன்னதென் றதைநீர் காட்டி யீடேற்றல் வேண்டு மென்றான்.

(இ-ள்.) சொன்னது கேட்கமாட்டாத் தொண்ட னுனும்—எ-து. தாமுணர்த்துவதைக் கேட்கச் சக்தியற்ற தொண்டனேயினும், சுவாமி நின் னதுகருணையாலே நீரென்னையாளலாமே—எ-து. குருசுவாமியே உமது திரு பாகடாட்சத்தினாலே அடியேனைத் தடுத்தாட்கொள்ளலாமே தகுமென் னை? உன்னதுபிறவிமாற்று முபாயமொன் றுண்டென்றீரோ—எ-து. உன் சனனத்தை நீக்கத்தக்க உபாயமொன்றிருக்கின்ற தென்றீரே, இன்ன தென் றதைநீர் காட்டி யீடேற்றல் வேண்டு மென்றான்—எ-து. அஃது இத்தன்மையதென்று அதனியல்பைக்காட்டி அடியேனை இரட்சிக்கவேண் டுமென்று இரந்தனன். எ-று.

(கு-து.) இவன் இரந்துகோடலைக்கண்டு அகம் பாவம் அற்றவனென்று உணர்ந்தாரென்பது. (கஎ)

கஅ - கவி. அ : கை.

[இவனே எமது கருத்துக்கு இயைந்தவனென்று அன்னேன் இரந்து
கேட்கும் குறியாலுணர்ந்து உபதேசிக்கத் தொடங்கினர்
என்பதை இக்கவியிற கூறுகின்றார்.]

அடங்கிய விருத்தி யானென் றறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன் னுதுங் குளவியின் கொள்கை போலக்
தொடங்கிய குருவு மான்ம சொரூபமே மருவ வேண்டி
உடம்பினுட் சீவ னீப்பார்த் துபதேச மோது வாரே.

(இ-ள்.) அடங்கிய விருத்தியானென் றறிந்தபின்—எ-து. விருத்தியடங்கினவென்று இவனை அறிந்தபின்னர், செறிந்தமண்ணின் குடம்பையுள் புழுமுன்னுதுங் குளவியின் கொள்கைபோல—எ-து. புழையமைத்த மண்கூண்டினுள் புழுவுக்கு முன்னின்று கோவ்டிக்குங் குளவியின் தன்மையைப்போல, தொடங்கிய குருவு மான்மசொரூபமே மருவவேண்டி—எ-து. அவ்வுபாயம் இனையதெனத் தெரிவிக்கப் புகுந்த ஆசிரியரும் ஆத்மசொரூபத்தையே அவனடையவேண்டி, உடம்பினுட் சீவனைப்பார்த்து பதேச மோதுவார்—எ-து. தேகத்தினுளிருக்கும் சீவனைப்பார்த்து உபதேசிக்கத் தொடங்குவர். எ-று.

தடுக்காது அமைதி பெறநிற்றலை அடங்கியவிருத்தியானென்றார். புழுவை இசைக்கென்றனர் சிலர். யாதுபற்றியெனின், புழுவைக் குளவியாக்கல் எங்ஙனம் பொய்யோ, அங்ஙனமே வேதாந்தமுழுவதுங் குழறலென்பதைக் காட்டவென்க.

வினா.—சமஸ்தமும் மித்தையென்று வேதாந்தசாஸ்திர முழுவதும் பிரதிவாதிப்பது பொய்யோ?

விடை.—அனுபவியாயிருக்கும் உலகைப் பொய்யென்பதனுற்குற்றமே.

வினா.—பொருளிடங் காலங்களில் ஒன்றேனும் சோதனையில் அல்ல, இல்லையென்று இயையாது, ஆம், உண்டெனப்பட்டே இருக்கவேண்டும். அங்ஙனம் ஒரு பொருளுஞ் சம்மதியாதே; ஆதலின் அனைத்து மித்தையென்னல் குற்றமோ?

விடை.—பொய்யாயின் நமது இச்சா ஞானக்கிரியைகட்கு இயைந்திருப்பானேன்? கர்த்தத்துவ போக்தத்துவமா யிருப்பானேன்? சித்து சடபேதமாயிருப்பானேன்? அசுசு குடியென்றிருப்பானேன்? பிறப்பிறப்பென்றிருப்பானேன்? ஆதலிற் குற்றமே.

வினா.—அனைத்தும் பூதவிகாரங்களாதல் என்பதற்குப் பழுதென்னை? சுயம்பெனிற் காட்டலாம். அங்ஙனமே பூதமும் சுயம்பெனின் விகாரமடைய

மல்லா திருக்கக் காட்டலாம். காட்டவலியின்றேல் உன்பிழை; நூலின் மேற் பிழையென்னை ?

விடை.—இங்ஙன முணராமையாற் குற்ற மெனதேயென்றனன். (கஅ)

கக - கவி. அ - அகை. .

[அவ்வுபதேசம் இனையதெனச் சாமானியமாகக் கூறுவதை இக்கவியிற் கூறுகின்றார்.]

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்திறந்து
தீராத சுழல்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே.

(இ-ள்.) வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்திறந்து—எ-து. என் ஞானபுத்திரா! என் பூர்வபக்க சித்தாந்தவழியே வரக்கடவாய்; எவன் தன்னைமறந்தாலை அவன் மாறுது பிறந்திறந்து, தீராத சுழல்காற்றுற்ற செத்தைபோற் சுற்றிச்சுற்றி—எ-து. ஓயாத சுழற்காற்றில் அகப்பட்ட செத்தைபோல எப்பதவிகளிலும் நிலையின்றிச் சுற்றிச்சுற்றி, பேராத காலநேமிப் பிரமையில் திரிவன்—எ-து. அழியாத கால சக்கரமென்னு மயக்கத்தில் திரிந்துகொண்டே யிருப்பன்; போத மாராயுந் தன்னைத்தானென் றறியுமவ் வளவுந்தான்—எ-து. அறிவிலால் ஆராயத்தக்க தன்னைத் தானென்றறியுமட்டும். எ-று.

• எங்கெங்கே பூர்வபட்சப் படுத்துகிறேலை அந்தந்த நிலைகள் விட்டு எங்கெங்கே சித்தாந்தப்படுத்துகிறேலை அந்தந்த நிலையை விடாதுபற்றி வருவாயாக வென்பார் வாராயென்றார். தன்னை மறத்தலாவது அயலைத்தானெனலை. எடுக்கும் உடலெல்லாம் காலவளவில் விடாது மாறி மாறிச்சுழன்று வருதலின் காலத்தைச் சக்கரமென்றார். காலம் இருந்தபடியிருக்க அதனைச் சக்காரமென்றது உடலுக் காயுள் கணித்தலைப்பற்றியும், அண்டங்கள் சுழன்று வருதலைப்பற்றியும் என்க. பிரமை யென்பதற்குச் சுழலெனப் பொருள் கொள்ளின் காலநேமி யென்பதனைற் பொருந்தும். மயக்கமெனப் பொருள் கொள்ளின் காலநேமியை ஆயுளாகக்கொண்டு மயங்கல் புருடனுதலால் அவன்மேற் பொருந்தும். தானென்பது போதமாதலால் தன்னை தன்னை ஆராயவேண்டுமென்பது தோன்ற, போத மாராயுந் தன்னையெனவும், அங்ஙனம் ஆராய்ந்தவிடத்தன்றித் தன்னைத் தானெனவுணர்தல் கூடாமையின், ஆராயுந் தன்னைத் தானென்றறியுமென்னவுங்கூறினார். வ வ ா வ யும்

(க-து.) தானே தானுகாத காரணமலவும் பிறவியகலாதென்பது. இது சனனரோச தந்திரம். வேறையவோர் தானென்னில் அயலாதற்பாலஆதலின் போலிதந்திரம். இது மதத்தரிடத்தது; அது வேதாந்தியிடத்தது. ஆதலின்

வேதாந்தமே அனைத்திலு மிகையெனல் அருத்தாபத்தி. யாதிலுலெனின் சத்துசித்து ஆனந்தத்துக்கு இயைதற்பாலது இனையதெனவும், அசித்த சடதுக்கத்துக்கு இயைதற்பாலது இனையதெனவும் கலப்புறுது விளக்கச் சோதனைஞாயம் பொருத்தங்களை யுடைமையானென்க. (கசு)

உ0 - கவி. அ - கை.

[முன்னர் சாமானியமாகக் கூறியதையே விசேடமாகக்கூறுதலை இக்கவியிற் கூறுகின்றார்.]

தன்னையுந் தனக்கா காரத் தலைவனை யுங்கண் டானேற்
பின்னையத் தலைவன் ரூஞைய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிவா யாகி லுனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கை யாலே யிதுப தேசித் தேனே.

(இ-ள்.) தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல்—எ-து. ஒருவன் தன் எதார்த்த நிலையினையும், தனக் காதாரமாயுள்ள தலைவன் எதார்த்த நிலையினையும் பிரத்தியட்சமாகக் காண்பானையின், பின்னையத் தலைவன் ரூஞைய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்—எ-து. பின்னர்அத்தலைவனே தானுகவும் தானே அப்பிரமமாகவும் ஏகமாய இடத்துச் சனனத்தினின்றகல்வன். (ஆதலின்) உன்னைநீ யறிவாயாகி லுனக்கொரு கேடுமில்லை-எ-து. உன் எதார்த்தவடிவை நீ யுண்மையாகக் காண வல்லையாயின், உனக்கொரு துன்பமு மில்லை ; என்னை நீகேட்கையாலே யிதுப தேசித்தேன்—எ-து. பிறவித் துயரகலத்தக்க தந்திரம் உணர்த்தவேண்டுமென்று என்னைநீ டபடியால் இதனை யானுபதேசித்தேன். எ-று.

தலைவன், பிரமம். ஐக்கியமாதற்கு இயைதற்பாலது உபாதிரகித கூடஸ்த பிரமமாதலால் இவற்றையே தன்னையும் தனக்காதாரத்தலைவனையுமெனவும், பிரத்தியட்சத்தாலன்றிச்சொல், நிச்சயம், பாவனை முதலியவற்றுல்ஐக்கியமெய்தாதுஎன்பது தோன்றக் கண்டானேலெனவும், ஞானகதப் பிரத்தியட்சத்துக்கு முன்னரன்று ஐக்கியமாவதென்பார் பின்னையத் தலைவன் ரூஞைய்ப் பிரமமாயெனவும், தலைவன் ரூஞையென்றதனுல் தான் தலைவனுகையெனவுங் கொண்டாம். ஐக்கியமாதலைப்பற்றி இரண்டுதேற்றேகாரமும் வருவித்தாம். ஐக்கியமெய்தியக்கால் சனனத்துக் கிடமின்மையின் பிறப்புத் தீர்வனென்ரூர். இது வேதாந்தமரபென்பது தோன்ற ஆதலினென்றும். சனனம் அகல்வதற்கு வேறின்மையான் ஈதுபதேசித்தேனெனவுங் கூறினூர்.

வி-ரை.—ஐக்கியத்தா லெங்ஙனம் பல மகலும்?

வ-ரை.—எங்ஙனமாய நிலையைக் கூடலுதன் பிரமமென்றது? அது தெரியின் ஐக்கியந்தெரியும்; ஆதலின் வெறுஞ் சொல்லா லாவதன்றென்க.

(க - து.) இதனினு மேலாய ஐக்கியமில்லையாதலால் இதுகிடைத்தல் அரிதரினுதன்பது பற்றி,இதனைத் தத்தமக்குரிய சமயக்கொள்கையின்மேலும் அதிகாரத்தின்மேலும், எச்சிலின்மேலும், யோனியின்மேலும்,ஒருங்குபோல் தோற்று மனவொருமையின்மேலும், இன்னும் இவைபோன்றவைகளின் மேலும்வைத்து என்னசாதிக்கினு மைக்கியமாகுமா? ஒருபோது மாகாதென்பது. (20)

உக - கவி. அ - கை.

[தன்னைத்தான் அறியவேண்டுமென்ற ஆசிரியரது இலட்சியார்த்தம் அறியாது,தன்இலட்சியார்த்தம் காரணமாக எண்ணித்தன்னைத் தானுணராதார் இல்லாதிருக்க, அவர்கட்குச் சனனந்தவிராதது என்னையென்ற வினவை இக்கவியிற் கூறுகின்றார்.]

*என்னைத்தா னசட லுக வெண்ணியோ சொன்னீ ரையா
தன்னைத்தா னறியா மாந்தர் தாணியு ளொருவ ருண்டோ
பின்னைத்தா னவர்க ளெல்லாம் பிறந்திறந் தழலு வானேன்
நின்னைத்தா னம்பி னேற்கு நின்னைய மருளு வீரோ.

(இ-ள்.) என்னைத்தா னசடலுக வெண்ணியோ சொன்னீ ரையா— எ-து. என்னை அவ்வளவு மூடலுக எண்ணியா சொன்னீர்ஐயனே! தன்னைத் தா னறியா மாந்தர் தாணியி லொருவருண்டோ—எ.து. தன்னைத் தானறி யாத மனிதர்கள் ஒருவர் உலகிலுண்டா?பின்னைத்தா னவர்களெல்லாம் பிறந் திறந் தழலுவானேன்—எ - து. (இங்ஙனமிருக்க) அவர்களெல்லாம் பிறந் திறந் தழல்வதென்னையோ? நின்னைத்தா னம்பினேற்கு நின்னைய மருளு வீர்—எ-து. உன்னையே தஞ்சமாக நம்பியஅடியேனுக்கு உண்மையைத்தெரி வித்தருள வேண்டுமென்று இரந்தனன். எ-று.

அடியேனும்உலகத்தாரும்தன்னைத்தான் உணராதாரல்லவே;இஃதென்ன அதிசயமென்பது தோன்ற, "என்னைத்தா னசடலுக வெண்ணியோசொன் னீரையா, தன்னைத்தானறியாமாந்தர் தாணியுளொருவருண்டோ" என்றார்.

(க-வது.) இவ்வாக்கியத்திற்கு அனுபவம் ஒவ்வாதது என்னையென்பது.

உஉ - கவி. அ - கை.

[தன்னைத்தான் உணருமார்க்கம் இன்னதெனத் தெரிவிக்கப் புகுந்தார், இக்கவியில் ஆத்மா ஞாத்ம விவேகத்தையே தன்னைத்தான் அறிதலெனக் கூறுகின்றார்.]

இன்னது தேகந் தேகி யிவனென வுணர்வன் யாவன்
அன்னவன் றன்னைத் தானென் றறிந்தவ ருகு மென்றார்
சொன்னபின் றேகி யாரித் தூலமல் லாம லென்றான்
பின்னது கேட்ட வையர் பீடையு நகையுங் கொண்டார்,

*'என்னைத்தான் சடலுவுள்ளத் தெண்ணியோ' வெனப்பாடமுமுண்டு.

(இ-ள்.) இன்னது தேகந் தேகியிவனென வுணர்வன் யாவன்—எ-து. தேகம் இன்னதெனவும், தேகி இனையனெனவும் உணர்பவனெவனே? அன்ன வனறன்னைத் தானென் றறிந்தவனுகுமென்றூர்—எ-து. அப்படிப் பட்டவ னேதன்னைத்தா னறிந்தோன் என்பவனும் என்றூர். சொன்னபின் றெளி யாரித் தூலமல்லாம லென்றூன்—எ-து. அங்ஙனமே ஆசிரியர் கூறியபின் இத்தூலதேகத்தை யன்றித் தேகியென்பவன் வேறொருவனுளனே? இஃதெ ன்ன வியப்பு! அவன் யாரென்றனன். பின்னது கேட்டவையர் பீடையு நகையுங்கொண்டார்—எ-து. அது கேட்ட பின்னர் ஆசிரியர் சிறிது வருத்த மும் பின்னர் நகையுமாஞர். எ-று.

ஒன்றுந் தெரியாத இவனை எவ்வாறு மெய்யுணர்வு ஆக்குவதென்னும் விசனமும், ஆயினும் அதிதீவிரதையினென்னுஞ் சிறுதவப்பு முண்டாயின மையால் பீடையு நகையுங் கொண்டா ரென்றூர். பொதுப்பட இன்னது தேகமென்றூர்; அதனை இவன் இத்தூலமல்லாம லென்றூன் எனவே தூலம், சூக்குமம், காரணமென்பவற்றுள் இத்தூலமென்றது வியப்பு. இவ்வியப்பால் உவப்பெய்தின ரெனினு மமையும். அயல் ஆகார மாதேன் சுயாகாரமு மாவனெனக்கொள்ள லுவப்பென்க.

(உஉ)

உங - கவி. அ - கை.

[அநாத்மாவே தானெனில் இது சாக்ஷராவத்தை; ஏனை யிரண்ட வத்தையிலும் தூலங் காணுமல் வெவ்வேறுகக் கான அவற்றை யாங்காங்கு கண்டவனும், இவற்றை யெல்லாம் ஒருங்கே ஒர்ந்த உணர்பவனும் யார்? அவனைத் தெரிவி யென்பதை இக்கவி யிற் கூறுகின்றூர்.]

தேகமல் லாமல் வேறே தேகியார் காணே னென்றுய்
மோகமாங் கனவில் வந்து முனைத்திடு மவனுர் சொல்லாய்
சோகமாங் கனவு தோன்றுச் சுழுத்திகண் டவனுர் சொல்லாய்
ஆகநீ நனவி லெண்ணு மறிவுதா னேதோ சொல்லாய்.

(இ-ள்.) தேகமல்லாமல் வேறே தேகியார் காணே னென்றுய்—எ-து. அநாத்மாவைத் தவிர வேறே ஆத்மாவென்பவன் யார்? இருந்தாற் காணப் படானு? இல்லையாதலிற் காணேனென்றனை. மோகமாங் கனவில் வந்து முனைத்தவ னவனுர் சொல்லாய்—எ-து. மயக்கமாயுள்ள சொப்பனத்தில் தானுகவந்து முனைத்தவ னெவன்? அவனுர்? சொல்லு. சோகமாங் கனவு தோன்றுச் சுழுத்திகண்டவனுர் சொல்லாய்—எ-து. மயக்கமாகிய அந்தச் சொப்பனமுங்காணப்படாதசுழுத்தியவஸ்தையைக்கண்டவனெவன்? அவன் யாரு? அதையாயினுஞ் சொல். ஆகநீ நனவி லெண்ணு மறிவுதா னேதோ சொ ல்லாய்—எ-து. இவையனைத்தும் ஒருங்காகச் சேர்த்து நீ சாக்ஷரத்திற் இ க்கு மறிவாவதியாது? அதனையேனுஞ் சொல்லு. எ-று.

இருந்தாற் காணலுவென்பது சுபாதி; காணலுதலால் யானுங் கண்டலனென்பது, நாஸ்தி. இவற்றை மறுக்க அவஸ்தாத்ரயம், காட்சித்ரயம், அபிமானித்ரயம் குறிப்பித்தார். குறிப்பிக்கவே, இவற்றை உணர்வான் தேஹி ஒருவ னுளனுகத் தோன்றுகின்றது. தோன்றவே, அத்தேஹியெனல் அறிவாகிற பொருளென விளங்க, ஆகநீ நனவிலென்னை மறிவுதா னேதோ சொல்லாய் என்றார். எனவே, அவ்வறிவு பிரத்தியேகாத்ம சொரூபமாயிற்று. தேகமே ஆத்மா வென்றது நாஸ்திகம். அதனை மறுக்கச் சீவனெனக் குறிப்பித்தது ஆஸ்திகம். இவ்வாஸ்திகத்தை மறுக்க அறிவென்றது வேதாந்தம் என்க.

(கூது.) அறிவாகிற புருஷன் ஒருவன் இதோவிருக்கின்றனென வாச்சியார்த்தத்தாற் காட்டியதென்பது. (உங)

உசை - கவி. அ - கை.

[அங்ஙனம் வினவிய ஆசிரியருக்குத் தேவரீர் ஒருவன் உளனுகக் குறிப்பித்தது மெய்யே; சந்தேகமில்லை. அவன் இனையனெனத் தெரிவிக்கவேண்டுமென்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

நனவுகண் டதுநான் கண்ட நனவுள் நினைவு நீங்கிக்
*கனவுகண் டதுமி ரண்டுங் காணுத சூழுத்தி கண்டுந்
தினமனு பவித்த லொக்குந் தெரியவு மில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னை மறைக்கும தருளு வீரே.

(இ-ள்.) நனவு கண்டது நான்—எ - து. சாக்கிராவஸ்தை கண்டதும் நானே; கண்டநனவுளநினைவுநீங்கிக் கனவுகண்டதும்—எ - து. என்றுற்காணப்பட்ட சாக்கிரா வஸ்தையா யுள்ள ஸ்மரணை சூழுவிக்கனவாகத்தோன்ற அக்கனவு கண்டதும் நானே; இரண்டுங் காணுத சூழுத்தி கண்டும்—எ - து. இவ்விரண்டவத்தையுங் காணப்படாத சூழுத்தியவத்தை கண்டதும்நானே; தினமனுபவித்த லொக்கும்—எ-து. அங்ஙனமாக யானே தினமனுபவித்துக்கொண்டு வருதலால் தேவரீர் ஒருபுருட னுளனென்ப தொக்கும்; சற்றும் ஐயமில்லை; தெரியவுமில்லை சற்றே மனதினி லுதிக்கும் பின்னை மறைக்கும் என்றது; அறியலாமெனில் யாதோ அதனைமறைக்கின்றது. (ஆதலின்) அதருளுவீர்—எ - து. அவ்வையநீங்க அதை யனுக்கிரகிப்பீர். எ-று.

நானென்பதை முதனிலைத்தீவகமாக்கி யேனையீ ரவத்தையிலு மொட்டுக. னனவு கண்டதுமென்றதனுல் நனவுகண்டதுமென்றும். இவற்றுற் சூழுத்திகண்டு மென்னும் வினையெச்சத்தை வினையாலணையும்பெயராக்கினும். ஆக்கமே, நனவுகண்டதும் நானே; கனவுகண்டதும் நானே; சூழுத்தி

*சூழுத்திகண்டதும் வேறொன்றேமேபோல் எனவும்பாடமுண்டு.

கண்டதும்நானே என்பதுபெற்றும். கண்டவென்னும் பெயரொச்சத்திற்கு நானென்பதை எழுவாயாக்கில் கனவுகண்டதும் கனவுகண்டதும் சு கண்டதும் என்னும் வினையால்ணையும்பெயர்கருக்குப் பயனிலையெங்கே? இருப்பதைவிட்டுத் தோன்றுவெழுவாயென நானென்பதை வருவிப்பானேன்? அதுகூடாது. கண்டநனவென்பதற்கு என்னுற் காணப்பட்ட நனவெனப் பொருள்கொள்ளிற் பழுதென்னே? தினமனுபவித்தல் யாருதலால் இதனும் நானென்பது மூன்றிடத்து மெழுவாயாதல் பெறப்பட்டது. அஞ்ஞான மகலாததால் தெரியவுமில்லையெனவும், பூர்வசமஸ்காரம் உள்ளதாற் சற்றேமனதினி லுதிக்குமெனவும், குரு வாய்த்தும் விளங்கும் பரிபாககாலம் இன்னும் வராமையால் அதுதடையாதல்பற்றிப் பின்னை மறைக்குமென்வும் காரணங்கண்டாம். திண்ணமாதல்என்பதுதோன்ற, நானேயெனத் தேற்றே காரங் கொடுத்தாம். எந்த ஸ்மரணையாலுல் நனவாகத் தோன்றிற்றே அந்த ஸ்மரணஅன்னவாகிற கோலந் தவிர்ந்த அவசரத்தைக் கண்டநனவுள நினைவுதீங்கி யெனவும், அங்ஙனநீங்கிய அக்கணமேதானே கனவாகத்தோன்றலின் அதனைக் கனவு கண்டதுமெனவும், அந்த நனவுகோலம்போலக் கனவுகோலமும் காணுதுநழுவியவக்கணமே தானே சுழுத்திகோலமாகத் தோன்றலின் அதனை இரண்டுங்காணுத சுழுத்திகண்டமெனவுங்கூறியதாகப்பொருள்கொண்டாம். கொள்ளவே அவஸ்தாத்ரயம், காட்சித்ரயமென்னும் இம்முக்கோலமுமாக நின்றதும் ஓர் ஸ்மரணையேயென்க.

(க-து.) இங்ஙனமாக நின்றறிந்தது நானுகத்தோற்றலால் அதனைத் தினமனுபவித்த லொச்சுமென்பதனுற் குறித்தாமென்பது. நினைவுதீங்கியென்றது வேடத்தை வேடதாரியாகக்கோடல் மரபு. உ-ம். அரசன் வந்தான், தோட்டிவந்தான் என்றுற்போல்வன, பிறவுமன்ன. (உச)

உரு - கவி. அ - கை.

[அங்ஙனம் வினவிய மாணாக்கனை விளக்குவான்வேண்டி அதத்துவாவிருத்திலட்சணை, தடத்தலட்சணை, சொரூபலட்சணை என்னு மூன்றனுள் தடத்தலட்சணை, அதத்துவாவிருத்திலட்சணை காரணமாக அதிகரிக்கும வஸ்துஉண்மையைத் தெரிவிக்கப் புகுந்தனர் என்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டு வார்போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டு வார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்குமஞ் சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னரோ.

(இ-ள்.) தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல் ஏ-து. தாம்நின்றநிலத்தருகேநின்ற சிலமரங்களைக் காட்டி அவற்று னொன்

ரூல் மூன்றும்பிறையைக் காட்டுவார்போலவும், ஆலத்திலுடுக்கள் காட்டியருந்ததி காட்டு வார்போல்—எ - து. ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களைக் காட்டி அவற்று ளொன்றாகிய அருந்ததியென்பதைக் காட்டுவார்போலவும், தூலத்தை முன்பு காட்டி—எ - து. முன்னர் தூலதேகத்தின் நிலையை விளக்கி, சூக்கும சொரூபமான மூலத்தைப் பின்புகாட்டி—எ-து. பின்னர் திரிகரணங்களாலு மெட்டுதற்கு அதிசூக்கும சொரூபமாயுள்ள மூலகாரணமான உண்மைநிலையை ஐயமற விளக்குவான்வேண்டி, முனிவர் தொடங்கினர் —எ-து. ஆசிரியர் கூறத்தொடங்கினர். எ-று.

மரத்தொகையுள் ஒன்றாலன்றித் தொகையாற் காட்டொணாமையின் தனியென்றார். ஆதலின் தனியென்பதைப் பிறையென்பதற்கு விசேடணமாக்க வொன்றாதது. தாலமென்பதைப் பனையாக்கின் ஆலமென்பதை யாதாக்கவேண்டும்? இவ்விரண்டுமொழிகளையும் தானமாக்க லெவர்க்கு முரணின்றும். இவ்விரண்டு உவமானத்து ளொன்று கீழ்மேல்காட்டல். அதுபோலத் திருஷ்டியமாயுள்ள கீழ்நிலையவிளக்கி மேலாகநின்றுள்ள திருக்குறை விளக்கல்; மற்றொன்று சமஸ்தத்துள்ளும் ஒன்றைப் பிரத்தியேகமாகக் காட்டல்; அதுபோல் சமஸ்த திருஷ்டியத்துள்ளும் திருக்குறைவப் பிரத்தியேகமாகவிளக்கல். இவ்விருவகை நயமாக உபதேசிக்கப் புகுந்தனனென்பது தோன்ற இவ்விருவகைஉவமானங் கூறினர். ஆலம் திசைச்சொல்.இவ்விருநயமும் இந்நூலி லிருப்பதாகத் தெரிக்குதும். ஒன்று பிறைகாட்டல்போல் தஞ்சமாங்குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப்பாமலென்னுங்கவியிலும், ஒன்று அருந்ததி காட்டுவார்போல் தன்பதியல்லாப் பேர்கடமையல்ல னல்லனென்று ளென்னுங்கவியிலும், தானே சொப்பிரகாச மென்பதை எல்லாங்கண்டறியு மென்னை யென்னுங்கவியிலுங் காணலாம். ஆதலின் மூன்று இலக்கணையாலும் உபதேசிக்கப் புகுந்தார், இரண்டிற்கு உவமைகூறி யேனையவற்றிற்குக் கூறுதோறும் உவமேயங் கூறியிருப்பதா லுவமானம் கோட லருத்தாபத்தி யென்க.

(க-து.) இலட்சலுறுத்ததற்கல்வஸ்துவைவிளக்கப்புகுந்தனனென்பது. ()

உ_சு - கவி. அ - கை.

[முன்கவியில் தூலமென்பதனுற்பந்தமெனவும், மூலமென்பதனன் முத்தியெனவும் பொருள்படுதலின் பந்தமென்மல மூடமெனவும், முத்தியெனல் தெளிவெனவுந் திண்ணங்கொண்டு மூடத்தை அத்தியாரோபமெனவும், தெளிவை அபவாதமெனவும் பெயர்த்து, இவற்றை இரண்டுத்திகளாக்கி உபநிடதமனைத்தும் கூறும்; ஆதலால் இங்கே அத்தியாரோபவுத்தியை முன்னர் தெரிவிக்கப் புகுந்தனனென்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

அத்தியா ரோப மென்று மபவாத மென்றுஞ் சொல்லு
முத்தியாற் பந்தம் வீடென் றுணாக்கும்வே தாந்த மெல்லா
மித்தையா மாரோ பத்தாற் பந்தமா மபவா தத்தான்
முத்தியா மிவ் விரண்டின் மூந்தியா ரோபங் தேளாய்

(இ-ன்.) அத்தியா ரோப மென்று மபவாத மென்றுஞ் சொல்லு முத்தியாற்பந்தம் வீடென்றுணாக்கும் வேதாந்தமெல்லாம்—எ-து. பிரபல சுருதியாகிய வேதாந்தமனைத்தும் அத்தியாரோபம் அபவாதம் எனக்கூறக் கிடந்த இவ்விரண்டுத்தியினால் பந்தம் இனையதெனவும், முத்தியினையதெனவுங் கூறுகின்றும். மித்தையா மாரோ பத்தாற் பந்தமாம்—எ-து. பொய்யெனப் பொருள்படுவதாகிய ஆரோபமென்பதனால் விளைந்தது பந்தமெனப் படுவதாம்; அபவாதத்தால் முத்தியாம்—எ-து. மெய்யெனப் பொருள்படுவதாகிய அபவாதமென்பதனால் விளைவது முத்தியெனப்படுவதாம். இவ்விரண்டின் மூந்தியா ரோபங் கேளாய்—எ-து. இங்ஙனங்கூறிய இவ்விரண்டினுள் முன்னர் அத்தியாரோபங் கூறப்புகுவாம் அதனைக்கேள். எ-று.

மித்தையாமாரோபமென்பதனால் சத்தியமா மபவாதமென்றும். பொய்யாலாயது பந்தமென்பதுதோன்ற, மித்தையாமாரோபத்தால் பந்தமா மென்றார். இவையனைத்தும் பின்னர் வருவதால் ஆங்காங்கு விளக்கிக்காட்டுதும்.

(க-து.) இரண்டுத்தியுள் ஆரோபயுத்தியை இனிக் கூறப்புகுவ னென்பது. (உசு)

உள - கவி. அ - கை.

[அத்தியாரோபமென்றற்கு அருத்தம் இக்கவியிற் கூறுகின்றார்.]

ஆரோப மத்தி யாசங் கற்பணை யாவ வெல்லா
மோரோர்வஸ் துவினை வேறே யோரோர்வஸ் துவென வோர்த
னருடு பணியாத் தோன்ற னரனைகத் தறியிற் றோன்ற
னீருடு கானற் றோன்ற னிரந்தரம் வெளியிற் றோன்றல்.

(இ-ள்.) ஆரோப மத்தியாசங் கற்பனையாவவெல்லாம்—எ-து. ஆரோபமெனவும், அத்தியாசமெனவும் கற்பனையெனவும், இன்ன மினைபோல் வனவாகக் கூறத்தருவன வெல்லாம், ஓரோர் வஸ்துவினை வேறேயோரோர் வஸ்துவென வோர்தல்—எ - து. ஒவ்வொருபொருளையும் வேறே யொவ் வொரு பொருளாக வுணர்தலும், கானுபெணியாத்தோன்றல்—எ-து. பழு தை பாம்பாகத்தோற்றலும், கரனைகத் தறியிற் றோன்றல்—எ-து. கட்டை கள்ளனைகத் தோற்றலும், நீருடு கானற்றோற்றல்—எ - து. கானல் நீராகத் தோற்றலும், நிரந்தரம் வெளியிற் றோன்றல்—எ-து. வெளி நிரந்தரமாகத் தோற்றலுமாம். எ-று.

இவ்வுருபு மயக்க மெல்லாம் "யீரதனுருபிற் கூறிற்றாயினும் பொருள் சென் மருங்கின் வேற்றுமை சாரும்" என்னுஞ் சூத்திரவிதியாற் றிருத்திப் பொருளுரைக்கப்பட்டன. நிரந்தரம் இடையின்மை. ஆரோபம் அத்தியாசம் கற்பனை இவைபோல்வன, பொய்யென வுணர்த்தற்கு இயைந்த பரியாயநாமங்கள். நிருக்கு நிருணய மென்பவற்றுள் நிருக்குவின் தருமம் ஒன்றையொன்றாக வுணர்தல். அது பழுதையைப் பாம்பெனவும், கட்டையைக் கள்ளனெனவும், கிளிஞ்சலை வெள்ளியெனவு முணர்தலாம். நிருணயத்தின் தருமம் எங்ஙனம் எங்ஙனமாக உணர்தலோ அங்ஙனம் அங்ஙனமாகத் தோற்றல். அது பழுதை பாம்பாகவும், கட்டை கள்ளனாகவும், கானல் நீராகவும், கிளிஞ்சல் வெள்ளியாகவும் தோற்றலென்க.

(க-ந்து) விபரீத மின்னதென உதாரணமுகத்தாற் காட்டியதென்பது.

உஅ - கவி. அ - கை.

[இந்தத் திருஷ்டாந்தத்தை யேற்றற்கு இயைந்த தாஷ்டாந்தம் இன்னயதென இக்கவியிற் கூறுகின்றார்.]

இப்படிப் போல நாம ரூபங்க ளிரண்டு மின்றி
யொப்பமா யிரண்டற் றொன்று யுணர்வொளி நிறைவா நிற்கு
மப்பிர மத்திற் றோன்று மைம்பூத விகார மெல்லாஞ்
செப்பிய கற்பி தத்தாற் செனித்தவென் றறிந்து கொள்ளே.

(இ-ள்.) இப்படிப்போல நாமரூபங்க ளிரண்டு மின்றி—எ-து. யாம் கூறிய இத்திருஷ்டாந்தம்போல நாமரூபங்கள் இரண்டு மில்லாமல், ஒப்பமா யிரண்டற் றொன்று யுணர்வொளி நிறைவா நிற்கும்—எ-து. எங்கு மொரு தன்மைத்தாயும், இரண் டென்னுங் காரண காரியப் பாகுபாடின்றி எக்சொரூபமாயும், எங்கு நிறைந்துள்ள ஞானப்பிரகாசமாயு மிருப்பது எந்தப் பிரமமோ? அப்பிரமத்திற் றோன்று மைம்பூத விகாரமெல்லாம்—எ-து. அத்தப் பிரமத்தினிடத்தில் மெய்போலத்தோற்றும் பஞ்சபூதமும் அவற்றின் விகாரமுமாகிய அண்டாண்டகோடி சராசரங்களனைத்தும், செப்பிய கற்பிதத்தாற் செனித்தவென் றறிந்துகொள்—எ-து. முன் சொல்லிய கற்பிதத்தினால் உதித்தனவென்று அறிந்துகொள். எ-று.

சுயம்பாகப் பழுதையில் பாம்பென்னு நாமரூபம் எங்ஙண்மின்றோ? அதுபோன்று சைதன்யமிருத்தலின் நாமரூபங்க ளிரண்டுமின்றி யெனவும், பாம்பென்னும் பிராந்தி தோன்றியவிடத்தும் மறைந்தவிடத்தும் பழுதை அங்ஙனமாகாது ஒருதன்மைத்தாக நின்றவாறுபோன்று, விசாரணைக்கு முன்னுள்ளதாயும், விசாரணைக்குப் பின் இல்லாததாயுந் தோன்றுஞ் சகசிவபரம் போலாகாது, ஒருதன்மைத்தாகச் சைதன்ய மென்றும் வினங்கலின் ஒப்பமா யெனவும் கூறினர். பிராந்தி பாம்பாற் பழுதை காரணமும், பாம்பு காரியமுமாயிற்று. மெய்யாகப் பாம்பு காரியமாயிற் பழுதையும், மெய்யாகக் காரண

மாகலாம். இங்ஙனமின்றே லிங்ஙனமும் மின்றும். ஆகவே காரணகாரியத்துவிதம் பழுதைதக்கு இன்மையாயவாறுபோன்று, பிராந்தி சகசிவபரத்தால் சைதன்யங் காரணமுஞ் சகசிவபரங் காரியமுமாயின. மெய்யாகச் சகசிவபரங் காரியமாயின், மெய்யாகச்சைதன்யமுங் காரணமாகலாம். அங்ஙனமின்றேல் இங்ஙனமும் மின்றும். ஆகவே காரணகாரியத்துவிதம் சைதன்யத்துக் கின்மையால் இரண்டற்றெனவும், பழுதைதக்குக் காரணகாரியப் பிராந்தி வந்தபோதும்அது துவிதமாகவில்லை; நீங்கியபோதுமேகமாகவில்லை.இரண்டு காலத்தும் பழுதைதஇருந்தபடி யிருக்குமாறுபோன்று சைதன்னியத்துக்குக் காரணகாரியப்பிராந்தி வந்தபோதும்அது துவிதமாகவில்லை; நீங்கியபோதும் ஏகமாகவில்லை. இரண்டுகாலத்தும் சைதன்ய மிருந்தபடி யிருத்தலால் ஒன்றுயெனவும், இங்ஙனமாயவஸ்து தன்னுருவாக முயல்வார்க்குஇலக்காக நிற்குங் குறியெனத்தோன்றஉணர்வொளி நிறைவாநிற்குமெனவுங்கூறினர். இங்ஙனநிற்பது எந்தப் பிரமமோவென்றது எஞ்சிநின்றது. பாம்பு கன்னன் முதலிய பிராந்தி தோற்றற்கு ஆதாரமபழுதை கடலை முதலியவை யாயுறம்போலச் சகமுதலிய திரிபதார்த்தப்பிராந்தி தோற்றற்குப் பிரமமென்பது ஆதாரமென விளங்க, அப்பிரமத்திற் றோன்று மைம்பூத விகாரமெல்லாஞ் செப்பிய கற்பிதத்தாற் சனித்தவென்றும், சமஸ்தமும் உண்மையெனக் கோடலைத் தவிர்த்தற்குக் கற்பிதத்தாற் சனித்தவென் றறிந்துகொள்ளே யென்றுங்கூறினர். இத்திரிபதார்த்தமும் சோதனையில் ஆம் உண்டெனற் கியைந்து உறுதியாக நில்லாது அல்லவில்லை யெனற்கே இயைந்துறுதியாக நிற்பதென்னை? ஆதலின் இவ்வுதாரண மனைத்தும் ஐயமின்றி யேறறற் பாலதெனவுணர்க.

(க-து.) தாஷ்டாந்தத்தினிலை திருஷ்டாந்தத்தினுல் விளக்கக் கூறியதென்பது, நாம ரூபங்க ளிரண்டுமின்றி யென்பதற்கு அவாங்மனேகோசரப் பிரமமெனப் பொருள்கொள்ளினு மமையும். அப்பிரமத்திற் றோற்றமென்பதை ஏழாம் வேற்றுமை யிடப்பொருளாக்கி யுரைகூறியதுமன்றி, ஐந்தாம்வேற்றுமை நீங்கற்பொருளாகவேனும் ஏதுப்பொருளாகவேனு முரைகூறினு மமையும். ஏதுப்பொருளாக வமைவது அத்தப் பிரமம் இங்ஙனமாகுகவெனச் சங்கற்பிக்க அத்தப் பிரமசங்கற்பத்தா லுதித்தவெனக் கோடலையும், ஏழாம்வேற்றுமையிற் கோடல் அலை, நிலை, தலை கடலிலுதித்தொடுங்குமாபோ லென்னலையுமென்க. இது வேதாந்தி சம்மதம்; ஏனைய பிறர் சம்மதம். இவை பெருகுமாதலிற் சுருக்கினும். (உஅ)

உகூ - கவி. அ - கை.

[அனைத்துங் கற்பிதத்தா லுண்டாயது எங்ஙனமென வினவிய மாணாக்கனைநோக்கி, முன்னர் சனித்தவென்னுஞ் சிருட்டியை புகபத்சிருட்டி, பிரமசிருட்டி யென இரண்டாக்கி, முன்னர் உகபத்சிருட்டி கூறவுண்டாகுத்தார். இக்கவியில் அவ்வியத்தத்தில் மூக்குணவுதிப்பலைக் கூறுகின்றார்.]

அதுதானெப் படியென் றக்கா லஞ்தியாஞ் சிவ மெல்லாம்
பொதுவான சுழுத்தி போலப் பொருந்தமவ் வியத்தந் தன்னி
லிதுகால தத்து வப்பே ரீசனுட் டார்வை யாலே
முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்த மாமே.

(இ-ள்.) அதுதானெப் படியென் றக்கால்—எ-று. அந்தச் சிருட்டி வகைதா னெங்ஙனமெனக் கேட்கின், அநாதியாஞ் சிவமெல்லாம்—எ-து. அநாதியாயுள்ள சிவபேத மனைத்தும், பொதுவான சுழுத்திபோலப் பொருந்தமவ் வியத்தந்தன்னில்—எ-து. மறைவே வடிவாயுள்ள அவ்வியத்தமென்னு மூலப்பிரகிருதியின்கண் சாதாரணமான சுழுத்தி யவத்தையில் தினமும் தங்குமாறுபோன்று நிலையாகத் தங்கும், இது கால தத்துவப் பேர்—எ-து. இந்த அவ்வியத்தமே காலதத்துவமென்னும் பெயரையுடையது, ஈசனுட் பார்வையாலே—எ-து. ஈஸ்வரனது அந்தர்முக திருஷ்டியினால், முதுமூலசுபாவம்விட்டு முக்குணம் வியத்தமாம்—எ-து. அநாதியாயுள்ள மூலப்பிரகிருதியான சுபாவத்தினின்று நீங்கிச் சாத்வித இராசத தாமத மென்னு முக்குணங்களும் வெளிப்பட்டன. எ-று.

வியத்தம் வெளிப்படல்; அவ்வியத்தம் வெளிப்படாமை. சித்ரூபமே சிவராதலின் அநாதியாஞ் சிவமெல்லாம் எனவும், சுழுத்தியகன்றூர் இல்லையாதலின் பொதுவான சுழுத்தி எனவும், அவ்வியத்தத்தையன்றிக் காலதத்துவ மின்மையின் இது காலதத்துவப்பேர் எனவும், உயிர்கள் தாமே மறைவினின்று நீங்காவென்பதுதோன்ற ஈசனுட் பார்வையால்எனவும், தெளிவிக்கின் மயக்க நீங்குமென்பது தோன்றப் பார்வையாலே முக்குணவியத்தமாம் எனவுங் கூறினர். முக்குணம் வியத்தமாதல் சிருஷ்டிவந்தவகை. இந்தச் சிருஷ்டி வந்தவகையைக் கூறல் பிறவி மயக்கம் தெளிவித்தற்கு. தெரிவிக்கின் மீண்டும் திரும்பாதென்னுங் கருத்துகொண்டு ஈசனுட்பார்வைகொண்டானெனக் கொள்க. இங்கே ஈசனென்பது சுத்தசைதன்யத்தை.

(க-து.) உயிர்களனைத்தும் தம்மைத் தாம் கற்பித சைதன்னியமென்று உணர்ந்துய்யுமாறு முக்குணவியத்தங் கூறியதென்பது. தமது நிசவடிவம் உணர்வொளி நிறைவாய்நிற்றல். பரிசோதனையால் அன்றித் தமதுண்மை நிலைசற்றும் விளங்காது;விளங்கவேண்டியிங்கே சிருட்டிகூறலாயினர்.(உக)

கூ0 - கவி. ஆ - கை.

[முற்கூறிய முக்குணங்களினிலே இனையவென இக்கவியிற் கூறுகின்றூர்.]

உத்தமம் வெளுப்பு நீல முபயமாஞ் சிவப்பு மாகுஞ்
சுத்தசத் துவந்த மத்தோ டசுத்தசத் துவப்போர் சொல்லுஞ்
சத்துவ மழுக்கி ருட்டாச் சாற்றுமுக் குணமு மூன்று
மொத்துள வெனினும் தம்மு ளொருதுண மதிக மாமே.

(இ-ள்.) உத்தமம் வெளுப்பு நீல முபயமாஞ் சிவப்பு மாகும்—எ-து. சாத்துவிதம் இராசதம் தாமதம் என குணமூன்றும். அவற்றுள் சாத்துவிதம் உத்தமம், ராசதம் மத்திமம், தாமதம் அதமம். இவைமூன்றும் யோக்கியதை. சாத்துவிதம் வெண்மை, ராசதம் செம்மை, தாமதம் கருமை. இவை மூன்றும் நிறம். சுத்த சத்துவந் தமத்தோ டசுத்ததத் துவப்போர் சொல்லும்—எ-து. சாத்துவிதம் சுத்தம், தாமதம் அசுத்தம், இராசதம் சுத்தாசுத்தம், இவைமூன்றுந் தருமம் என்னும் பெயர்களைச் சுருதிகள் சொல்லும். சத்துவ மழுக்கிருட்டாச் சாற்றும்—எ-து. சாத்துவிதம் அழுக்கின்மை, இராசதம் அழுக்கு, தாமதம் இருட்டு. இவை மூன்றுந் தோற்றம் எனச் சுருதிகள் முறையிடும். மூக்குணமு மூன்று யொத்துள வெனினும்—எ-து. இந்த மூன்று குணங்களு மூன்றுகி கின்று தம்மு ளொத்து நின்றாலும், தம்மு ளொரு குண மதிகமாம்—எ-து. தமக்குள்ளே யாதானு மோர்குண மிஞ்சி நிற்கும். எ-று.

"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்னும் விதியால் உத்தமமென்றதனல் மத்திம அதமங்கள் வருவித்தாம். உபயமாஞ் சிவப்பென்றதனல் மூன்றுவது நீலமென்றும். தமத்தோடென ஒடுக்கொடுத்துப் பிரித்ததனல் இராசத மிசையெச்சமெனக் கொள்க. கொண்டதனல் இராசதம் சுத்தாசுத்தமாயிற்று. ஏனைய குணங்கள் அழுக்கிருட்டென்றதனல் சாத்துவித மழுக்கின்மையென்றும். தாமத மிருட்டென்றதனல் சாத்துவிதம் வெளிச்சமெனினு மமையும். நெரிஞ்சிமுள் மூன்றல் தமக்கு ளொத்துள வாயினும் யாதானுமோர்முள் மேலிட்டிருக்குமாறுபோன்று இருத்தலின் மூக்குணமு மூன்று யொத்துளவெனினுந் தம்மு ளொருகுண மதிகமாமே என்றார். இக்கவியை உற்றுணராதார்க்கு இங்ஙனமாய ரயம் எங்ஙனந் தோன்றும். இக்கவியை வேறுவிதமாகப் பாடமோதி யுரை கொள்வாருமுளர். அது பெரும்பாலு முரணும்.

(க-து.) சாத்துவிதமுதலிய மூக்குணமும் யோக்கியதை தர்மம், தோற்றம்என்பனவைகளைக் குறிப்பான் உணர்த்தியது சுருதிசம்மதமாம். யுக்திக்கு முரணின்மையால் ஏற்றற்பாலதென்க. மூக்குணம் வியத்தமாமெனவே யேனையவைகளைக் கூறவேண்டுவதின்று. முதற்காரண காரியமாதலினை அரசன் வெளிப்பட்டானென்புழி ஏனைய சேனைமுதலியவைகளைக் கூறவேண்டுவதின்றியவாறு போலும். (கூ0)

கூக - கஷி. [1]அ - கை.

[உகபத் திருஷ்டிகூறி இனிக்கிரமதிருஷ்டி கூறப் புகுந்தார், இக்கவியில் மூலப்பிரகிருதிமுதல் குணத்தியம் சருகேகிடந்தான்னியவும் கூறினர்.]

ஒருவழி யிதுவா மிற்றை யொருவழி வேறுச் சொல்வார்
மருவுமவ் வியத்தந் தாமே மகதத்வ மாகு மென்று
மருண்மக தத்து வந்தா ளாகங்கார மாகு மென்றுங்
கருவகங்கா ர மூன்றுய்க் காட்டிய குணமா மென்றும்.

(இ-ள்.) ஒருவழி யிதுவாமித்தை யொருவழி வேறுச்சொல்வார், எ-து. சிருஷ்டிவகையிரண்டிலிதுவொரு வகையாம். இந்தச்சிருஷ்டியையே வே றொருவகையாகச் சத்துக்கள் சொல்லுவார்கள்:— மருவுமவ்வியத்தந்தானே மகதத்வ மாகுமென்றும், எ-து. மூன்கூறக்கிடந்த அவ்வியத்தமென்னு மூல ப்பிரகிருதியே மகதத்துவமெனப்படுவதாமெனவும்:—அருண்மகதத்துவந்தா னகங்கார மாகுமென்றும்-எ-து.மூன்கூறிய மகதத்துவமே யகங்கார மெனப் படுவதாமெனவும்:— கருவகங்கார மூன்றாகக் காட்டிய குணமா மென்றும், எ-து. பிறவிக்குக்கருவாயுள்ள விவ்வகங்காரமே முன்னர் மூன்றாகக்காட் டிய குணங்களெனப்படுவதாமெனவும், எ-று.

(கூது.) மூலப்பிரகிருதியே மகதத்துவமெனவும்,மகதத்துவமே யகங்கா ரதத்துவமெனவும், அகங்காரதத்துவமே குணத்ரயமெனவு முணரக்கூறிய தென்பது. பணிபேதங்களிறற் பொன்னையும், படபேதங்களா னூலையும், கடபேதங்களான் மண்ணையும், தேகபேதங்களா லம்பூதாம்ச சையோக த்தையும், மூற்றுமறந்தார்க்கிப்பேதங்களைத் தத்த முதற்காரணத்தினின்று வந்தவகையைத் தெரிவிக்கி லந்தந்த முதற்காரணத்தை யன்றி யததற் குரிய விகாரங்களில்லையென் றுண்மையாகவுணர்ந்து, அவ்வவ்வாதார மற வாதிருப்பர். இவரிங்ஙன மிருப்பதா லாதேயமாகிய விகாரங்களில்லாமற் போயினவோ ? அவ்வாதார நாட்டமாகவே விகாரங்களைநோக்கிலனைத்து மவ்வாதாரமாகவே விளங்கும்; இஃதுண்மையை நினைப்பூட்ட லாயிற்று. இந்த நினைப்புமறப்பு ஓர்புருடனது புடைபெயர்ச்சியாதலானும், இப்புடை பெயர்ச்சியெழுச்சி தவிர்தலால் ஒன்றிலொன்று தத்தமக்குளில்லாம லன்னியோன்னியாபாவம் உறுகின்றது; இவ்விரண்டுகாலத்தும் புருட னிருந்தவண்ண மிருந்து, இவற்றைச் சாட்சியா யறிந்திருப் பதினாலும், இப்புருடன் விகாரியு மல்லன், நிர்விகாரியுமல்ல னென்பதை யுணர்த் தச் சிருஷ்டிவகை கூறவந்ததேயன்றி வேறுக்காகவன்று; இதுபோலத் தாஷ் டாந்தமுமென வூகித்துணர்க; இதனை யுணர்வோர் பரிபாகிகளல்லரோ லனர்த்தமாம். இஃதன்றியு மிக்கவியின் கருத்தைத் கொஞ்சம் வெளிப் படையாகத் தெரிவிக்குதும், அதாவது.—அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமாகவிளங்குஞ்சைதன்னியத்தில் விஸ்மரணையாக வெழுந்தவெப்தி லையை மூலப்பிரகிருதியெனவும், அவ்வனமெழுந்தவெப்தியே நிலத்துளுன் றிய விதை யுபுக்குமாறுபோல் திரிபதார்த்தங்களும் வெளியாகாதுள்ளட க்கி நிற்குமவசரத்தை மகதத்துவமெனவும், அவ்வனம் வெளியாக்கா துள் ளடக்கிக் காட்டு மவசர நிலையான வெப்தியே வெளியரும்பிய மூலைபோல் சகலிவபரபேதம் காட்டாது பொதுவாக வெளியெழுதலின், அவ்வெழுச்சி லையை அகங்காரதத்துவமெனவும், அவ்வெழுச்சி வடிவாகின்ற வெப்தியே அம்மூலை மூன்றுகவெடிக்கு மாறுபோன்று; இனிச் சகலிவபரமாதற்கு மூன் றுக வெளிப்படுதலின் அவ்வவசரத்தை மூக்குணமாமெனவுங்கூறியுது.(ஈக)

கூஉ - கவி. அ - கை.

[முன்னர் கூறியவற்றுளீருகவுதித்த முக்குணங்களிற் பிரதி பலித்ததினையதெனவும், அம்மூன்றில் சாத்துவிதகுண மிவ்வவ சரத்திலின்னபெயரா யேற்குமெனவும், அதிலுதித்த சிற்சாயைக் குப்பெய ரினையதெனவும், குணரகிதமான சித்துக்குப் பெயரி னைய தெனவுமிக்கவியிற் கூறுகின்றார்.]

இக்குணங் களிலே விண்போன் றிருக்குஞ்சிற் சாயை தோன்று
முக்குணங் களினுந் தூய்தா முதற்குண மாயை யாகு
மக்குணப் பிரமச் சாயை யந்தரி யாமி மாயை
யெக்குணங் களும்பற் றுதோ னிமித்தகா ரணனு மீசன்.

(இ-ள்.) இக்குணங் களிலே விண்போன் றிருக்குஞ்சிற் சாயைதோன் றும், எ-து. இம்மூக்குணங்களிலு மாகாயம்போன்றிருக்குஞ் சைதன்யத்தி னதுசாயாவடிவம் பிரதிபலிக்கும்:—முக்குணங்களினுந் தூய்தா முதற்குண மாயையாகும், எ-து. இத்தமூன்று குணங்களிலும் பரிசுத்தமாயுள்ள முதற் குணமான சாத்துவிதமானது மாயையெனப்படுவதாம்:—அக்குணப் பிரமச் சாயை யந்தரியாமி, எ-து. அத்தக் குணத்திற் பிரதிபலித்த பிரமத்தினது சாயாவடிவமானது அந்தரியாமியெனப் பெயர்பெறுவதாம்:—மாயையெக் குணங்களும் பற்றுதோ னிமித்தகாரணனுமீசன், எ-து. மாயாமயமான எவ் வகைப்பட்ட குணங்களுந் தன்னைப்பற்றுது நின்றுள்ளோ னிமித்தகாரண னாகிய வீசனும், எ-று.

விண்போன்று பரிபூரணமாயிருக்கை சித்துக்கன்றிச் சாயைக் கன்று மையின் சித்தைப் பிரித்து எழுவாயாக்காது சித்தினது சாயையெனப் பொருள்கொண்டாம்:—சைதன்யம்போற் காண்டலிற் சிற்சாயையெனவும், சகசிவபாமாதற்கெனக் குறிக்கச் சிற்சாயை தோன்றுமெனவும், "பேதமுறு புந்தியேமாயை" ஆதலா லப்புந்தியை முதற்குணமெனவும், மாயாசகித வீச னென்பது தோன்ற அக்குணப் பிரமச்சாயை யந்தரியாமியெனவுங் கூறி னர். இங்கே யந்தரியாமியென்பது ஈசனது காரணசரீரவபிமானகாமத்தை. நிமித்தகாரணனுமீசன் மாயாரகிதனென்பது தோன்ற மாயை யெக்குணங் களும் பற்றுதோனெனப்பட்டது:—சிற்சாயை பிரமச்சாயையென்னு மிவ் விருமொழிகளும் ஆறும் வேற்றுமைத்தற்கிழமைப்பொருள். சித்தைச் சக சிவபரமென்னது சாயையெனக்கூறியது, கற்பிதசைதன்யமெனற்கு. இத னையுடன்படற்கு மாறாளதேல்சோதனையி லல்லவில்லையெனற் கியையாது நிற்கக் காட்டலாம். காட்டவலியின்றேல் காட்டவலியுளோர்க் கடிமைபூண் டொழுகை யெனிதினுணர்தற்கியைந்த குறி.

(க-து.) முக்குணப் பிரதிபலனித்து கற்பித மெனவும், முதற்குண மாயையினவும், அம்முதற்குணப்பிரதிபலனித்தை யந்தரியாமியெனவும்,

மாயாரகிதவீச னினேயனெனவுங் கூறியதென்பது. முக்குணமாக வெளிப்பட்டது ஞெப்தியெனறதனுலந்தஞெப்தி சுயம்பெனற் குறுதி யென்னே? இன்றுதலாலதனேயே யிங்கே சிற்சாயையெனக் கொண்டார். சிற்சாயை தோன்றற்கிடம் முக்குணமாதலி னுதாரமெனப்படும்; படவே சிற்சாயை யாதேயமெனப்படும்; படவே யிவ்விரண்டுமாகின்ற தந்தஞெப்தியே; இதி லேயமுளதேல் தினரும் நம்மாற் பிரத்தியட்சமாகக் காணகின்ற மூன்றவஸ் தைதகளிலெந்தெந்தவவஸ்தையெங்கெங்குளதோ, அந்தந்தவவஸ்தையில்தோ ற்றற்குரிய தூலாதி மூன்றுகாட்சிகளிலொவ்வொன்றுளதாக வாங்காங்குக் தாணும். ஆங்காங்குக் காணுந்தூலாதி காட்சிக்கிடம் மூன்றவஸ்தை; இம்மூன் றவஸ்தையு மாதாரமாகவே காட்சிகளாதேயமாயிற்று. இவ்விரண்டுமாக நிற்பது ஓர்ஸ்மரணையே. இதுநிகழா வுயிரில்லையாதலா லேற்றற்பாலதே, ஆதலினேயமொழிக. இதனுல் மாயையென்பதும், ஈசனென்பதும், அந்தரியாமியென்னுங் காரணதேக வபிமானிநாமமென்பதும், முற்கூறிய ஞெப்தியன்றி யில்லையென்பது பெற்றும். இங்ஙனமுணராதார் ஞானியரல்லர். வனெனிற் கலக்கமகலாமையபற்றி. பேதமுறுபுந்தி மாயையெனவே பேதமறுபுந்தி யுனதாகக் குறிப்பிக்கின்றது; அப்புந்தி மாயாரகிதமென்றுயிற்று. இவ்விருதன்மையாநிற்பது மந்தஞெப்தியே. இங்ஙனமாயதையறியவேண்டில் ஞெப்தியரல்லாத ஞானியஞ்ஞானியருளரோ? இல்லையாதலினேற் றற்பாலதே. இன்னுஞ்சிருஷ்டித்தொடர்புளதாதலிற் பின்னர்இதனெருமையைக் கூறுதும். இதுநிற்க. (கூ)

ஈஈ - கவி. அ - கை.

[முன்கவியில் சாத்துவித குணத்தை மாயையெனவும், ஈசனபிமானத்ரயத்தில் அந்தரியாமியெனவுங்கூறி, இக்கவியிலுமதையே சூழ்த்தியவத்தையெனவும், காரணசரீரமெனவும், ஆனந்தமயகோசமெனவுங்கூறி, யினிச் சீவனுக்கு இராசதகுணமவித்தையெனவும், அக்குணப் பிரதிபலனஞ் சீவனெனவும், அபிமானத்ரயத்தி லிவனுக்குப் பிராக்ஞனெனவுங் கூறுகின்றார்.]

ஈசனுக் கிதுசூ ழுத்தி யிதுவேகா ரணசரீரங்
கோசமா னந்த மாகுங் குணமிரா சதமவித்தை
தேசறு மவித்தை தோறுஞ் சிற்சாயை சீவ கோடி
நாசமா முயிர்க்கப் போது நாமமும் பிராக்ஞ னுமே.

(இ-ள்.) ஈசனுக்கிதுசூழ்த்தி யிதுவே காரணசரீரங் கோசமா னந்தமாகும், எ-து. இந்தச் சாத்விதகுணமே யீசனுக்குச் சூழ்த்தியவத்தையாகவும், காரணசரீரமாகவும், ஆனந்தமயகோசமாகவு மிருக்கும்:— குணமிராசதம், எ-து/-இனி யிராசதகுணமோவெனில்:—அவித்தை தேசறுமவித்தைதோ

றுஞ் சிற்சாயை சீவகோடி, எ-று. அவித்தையெனவும், மலினரூபமானவித்தவவித்தைகளிலெல்லாம் பிரதிபலித்த சிற்சாயைக ளனைத்துஞ் சீவகோடிகளெனவும்:—நாசமாமுயிர்க்கப்போது காமமும் பிராக்ஞனுமே, எ-று. நாசமுறத்தக்க விவ்வுயிர்களுக் கவ்வவசரத்திலியைத்தநாமம் பிராக்ஞனெனவுமாம். ஏ-று.

தேசறுமவித்தையென்றதனால் தேஜஸ்தமாயையெனக்கொளனின்றது. சாத்துவிதகுணம் மாயை யென்றார், அம்மாயையதோறு மென்றது அவித்தையதோறு மென்றது; இதனைப் பலவென்னிற் பிரத்தியட்சத்திற்கியைந்தது, அதனைப் பலவென்னி லப்பிரத்தியட்சமாதலி னெவரு முடன்படார். ஆயினும் இந்துவேதாகமங்கள், மூக்குணங்களில் முதற்குணத்தைச் சாத்துவிகத்திற், சாத்துவிதம் இராசதம் தாமதம் எனப்பிரித்தாற்போல, ஏனையகுணங்களையும்பிரித் தொன்பதுபாகமாக்கி, முதற்பாகங்களைத் திரிமூர்த்திகளாக்கி, யொவ்வொருமூர்த்திகளு மளவிலதாகக்கூறுகிற்கும் ; இதனை யறியவேண்டிற் கட்டளைகளிலும், பிரபுலிங்கலீலையிலும், ஏனையநூல்களிலுங் காணலாம். இவையெல்லாம் வாஸ்தவமென்பதைப் பிருதிவி தத்துவமுதல் சாததத்துவமீறுக வொன்றிலொன்றெடுக்கிக்காட்டப்புகுமபவாதயுத்தியாற்காணலாம். சுருதி யுத்தி யனுபவமுகத்தா லொடுக்கிக்காட்டத் தெரியாமைகுற்றத்தை நூல்மேலேற்றத் திரியுஞானிய ரெங்குமெளியர். வித்தை ஞானம்; அவித்தை அஞ்ஞானம். இராசதகுணமவித்தையெனவே சாத்துவிதகுணம் வித்தையாயிற்று; இதையவித்தையாக்க அகங்காரம் வித்தையாயிற்று; இதையவித்தையாக்க மகதத்துவம் வித்தையாயிற்று; இதையவித்தையாக்க மூலப்பிரகிருதி வித்தையாயிற்று; இதையவித்தையாக்கப் பிரமம் வித்தையாயிற்று; இங்ஙனமாக இதற்கப்பாற்சேறல்சொல்லால்அளவத்தாதோடகோடும்: எனவே இலட்சியார்த்தத்தால் கோடாதென்பதருத்தாபத்தி. பகுதிமுதல் விகுதியீறுக் கிடக்க தத்துவ வடக்குக ளனைத்துமறிவறியாமையடக்குகளாயின. என்னை ? "அறிவறியாமை யகேகவடக்கே-மேலுங்கீழுமென்மனார்புலவர்" என்பதனுறக்காண்க. (கூகு)

கூசு - கவி. அ - கை.

[அந்த வவித்தையே யானந்தமயகோசமெனவும், சுழுத்தியவஸ்தையெனவும், காரணசரீர மெனவுங்கூறி, இனிச் சூக்குமசரீரவாரோபம் வருமாறிக்கவியிற் கூறுகின்றார்.]

அழுக்கொடு பற்றுஞ் சிவர்க் கதுவேயா னந்த கோசஞ்
சுழுத்திகா ரணசரீரஞ் சொன்னவிம் மட்டு மோக
மூழுக்குணத் திரண்டால் வந்த மூலவா ரோபஞ் சொன்னேம்
வழுத்தருக் குமவா ரோப வழியுரீ மொழியக் கேளாய்.

(இ-ள்.) அழுக்கொடு பற்றுஞ் சிவர்க் கதுவேயா னந்த கோசம், எ-து. அழுக்காகிய வவித்தியென்மயமாயுள்ள சிவர்களுக் கவ்வவித்தியே

யானந்தமயகோசமாம்:—சுழுத்தி காரணசரீரம், எ-து. சுழுத்தியவத்தையுங் காரணசரீரமுமாம்:—சொன்னவிம்மட்டு மோகமுழுக்குணத்திரண்டால்வந்த மூலவா ரோபஞ் சொன்மேலும், எ-து. கூறிய விதுகாறும் மோகமயமான முழுக்குண மென்னப்பட்ட சாத்துவித ராசதத்தால் வினைந்த காரண சரீர வத்தியாசத்தைச் சொல்லினம்:—வழுத்துசூக்குமவாரோப வழியுநீமொழிய க்கேளாய், எ-து. யாவருஞ் சொல்லப்பட்ட சூக்குமசரீர வத்தியாச மார்க் கத்தையும் யாங்கூற நீ கேளுதி, எ-று.

மூலப்பிரகிருதி, மகதத்துவம், அகங்காரதத்துவம், முக்குணம், மாயை, அவித்தை, ஈசன், சீவன் இவ்விருவர் காரணசரீரம், சுழுத்தியவத்தை, இவ் வவத்தைக்குரிய வபிமான நாமம், கோசம், என்பவைகளைக் கூறும்போதெல் லா மறவாதிருத்தற் கழிக்கழி யாங்காங்குக் கற்பிதத்தா லிவை சனித்த வென்று நினைப்பூட்டியவாறுபோன்று, இங்கும் மறவாதிருத்தற்குச் சூக்கும வாரோபவழியு நீ மொழியக்கேளாய் என்றார். மறக்கிலிந்நூற்பயன் சற் றும் வாய்க்காதென்ப தருத்தாபத்தி. உத்தமம் வெளுப்பு நீலமென்னுங் கவியில் இராசத மழுக்கெனக் கூறியவாறே யிக்கவியிலு மழுக்கொடு பற் றுஞ் சிவர்க்கென்றார். (௫௰)

கடு - கவி. அ - கை.

[சாத்துவிதம் இராசத மென்னும் குணங்களின் கற்பிதத்தைக் கூறியவாறுபோன்று, தாமதத்தையுமிரண்டு சத்திகளாக்கி யவற் றிற்குரிய பெயரினையவென விக்கவியிற் கூறுகின்றார்.]

ஏமமா யாவி நோத வீசனு ரருளி னுலே
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூட லென்றும் விவிதமாந் தோற்ற மென்றும்.

(இ-ன்.) ஏம மாயாவிநோத வீசனுரருளினுலே, எ-து. தினாச்சிலம்போ ன்ற மாயையை வினையாட்டாகவுடைய பரமசிவத்தின் கிருபையினால்:—பூமலியுயிர்கட்கெல்லாம் போகசாதனமுண்டாக, எ-து. உலகில்மிக்குள்ள வுயிர்கட்கெல்லாமனுபோகத்திற்கியைந்தசாதனக்கருவிகளுண்டாகும்படி:- தாமதகுணமிரண்டு சத்தியாய்ப்பிரிந்து தோன்றும், எ-து. மூக்குணங்களிற் கடைக்குணமாகிய தாமதகுணமானது இரண்டு சத்திகளாகப் பிரிந்துதோற் றும்:—வீமமா மூடலென்றும் விவிதமாந் தோற்றமென்றும், எ-து. பயங்கம்ப னநிகட் கிடமாயுள்ள வாவரணசத்தியென்றும், நானாவிதகாட்சிகளுக்கிட மாயுள்ள விக்ஷேபசத்தியென்றும், எ-று.

தாமதகுணம், ஆவரணம் விக்ஷேபமென் றிரண்டு சத்திகளாகப் பிரிவு பட்டிற்குமென்றுரையிற்று. இங்ஙனமாதற்குத் தாமதகுணத்திற்கு வலியின் மையின். ஈசனை ரருளினுலே யெனவும்; பூமிமுதலியனவை பின்னருண்டாவ

தாயினும், இப்போது காணப்பட்டின்ள வுயிர்கட்கிடம் பூமியாதலாற் பூமலி யுயிர்கட்கெல்லாமெனவும், அபின்னமென்பதுதோன்ற விரண்செத்தியாய்ப் பிரிந்து தோன்றுமெனவுங் கூறினார். அறியாமையை மூடலென்றும், அறிவைத் தோற்றமென்றுங் கொள்க. (கூடு)

கூசு - கவி. அ - கை.

[காரணதேகத்தையுமதற்குரிய வவஸ்தையாதி கற்பிதங்களையுங் கூறினதுபோன்று, இனிச் சூக்குமதேகத்தையுந் தூலதேகத்தையுங் கூறவேண்டுவதால், முந்திச் சூக்குமதேக வுற்பத்தி கூறப் புகுந்தா ரிக்கவியில் விகேஷபசத்தியிலெழுஞ் சூக்குமபூதவுற்பத்தி வரலாறு கூறுகின்றார்.]

தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய விண்ணும் விண்ணிற்
காற்றதாங் காற்றிற் றீயாங் கனலினீர் நீரின் மண்ணும்
போற்றுமிவ் வைந்து மொய்ய பூதங்க ளென்று போராஞ்
சாற்றுமற் றிவற்றிற் போக சாதன தனுவுண் டாகும்.

(இ-ள்.) தோற்றமாஞ் சத்திதன்னிற் சொல்லிய விண்ணும், எ-து. விகேஷபசத்தியில் ஞானவான்களால் வழங்கப்பட்டுவருகின்ற தன்மாத்திரை யென்னு மாகாயமுதித்தது:—விண்ணிற் காற்றதாங் காற்றிற் றீயாங் கனலி னீர் நீரின் மண்ணும், எ-து. அவ்வாகாயத்திற் காற்றும், அக்காற்றி லக்கினியும், அவ்வக்கினியிற்சலமும், அச்சலத்தில்மண்ணு முதித்தன:—போற்று மிவ்வைந்து மொய்யபூதங்க ளென்றுபோராம், எ - து. மேலாகச் சொல்லப் பட்ட விந்தத் தன்மாத்திரைகளைந்தும் சூக்குமபூதமெனப் பெயர்பெறும்:—சாற்றுமற்றிவற்றிற் போகசாதனதனுவுண்டாகும், எ-து. இங்ஙனம் பெயர் பெறக்கிடந்த வந்தச்சூக்குமபூதத்தில் போகமு மதற்கியைந்த சாதனமாயுள்ள சூக்குமசரீரமு முண்டாகும், எ-று.

பஞ்சீகரிக்கப்படாததா லபஞ்சிகிருத பஞ்சமகாபூத மெனவுமாம். தூலதேகந் தூலபூதத்தா லாயதென் றேற்பார், மனது தூலதேகமாகுமா? ஆகாதவிடத் தஃதோர் தேகமன்றே? அஃதெந்தப்பூதசையோகத்தா லாய வுடலென்றெண்ணுதலென்னை? வாதமாதிமூன்று நோய்க்கு மாதாரந் தூல மென்றுற்போல, காமம், வெகுளி, மயக்கமென்னு மூக்குற்றநோய்க்குமாதா நம்மானதமென்றேலாததென்னை? அம்மூன்றுல் வகைதவது தூலதேகம், இம் மூன்றுல் வகைதவது மனது; அஃதிஃதாமா? இஃதஃதாமா? இஃதென்ன விவேகம்? இச்சாஞானப் புடைபெயர்ச்சிக்கு வினைமுதல் மானதம், கிரியை யென்னும் புடைபெயர்ச்சிக்கு வினைமுதல் தூலதேகம்; எங்ஙனமென்னில் வந்தான், போனான் என்பனவகளுக்கு வினைமுதல் தூலதேகம்; கேட்டேன், பார்த்தேன் என்பனவகளுக்கு வினைமுதல் ஞானேந்திரியம்; நினைத்தேன், மறந்தேன் என்பனவகளுக்கு வினைமுதல் மனது; அறிந்தேன், அறியேன்

என்பவைகளுக்கு வினைமுதல் சீவன். இங்ஙனமிருக்க மிச்சிம்பிப்பானேன்? "சினைவினை சினையொடு முதலொடுஞ்செறியும்" என்னுஞ்சூத்திரத்திலுள்ள வும்மை சினையொடு செறிதல்போல முதலொடு செறித லவ்வளவு சிறப்பன் றென்பதை யுணர்த்தநிற்றலி னிழிவுசிறப்பு. இங்கே விண்ணுதியென்றது அறிகருவியாகிய ஞானேந்திரியங்கட்கும், அந்தக்கரணங்கட்கும் முதற்காரண மாயிற்று. ஆகவே, தூலதேகத்திற்கு முதற்காரணம் தூலபூதமெனப் பிர த்தியட்சமாயிற்று. இதையு மறுத்தல் குதர்க்கம். "நயம்படவுரை" என்பதை அறியார்போலும். மண முலவுதற்கிடஞ் சுக்கும பூதம்; தூல முலவுதற் கிடந் தூல பூதம். இவ்வனுபவ மில்லாரில்லை யெங்கணும். இது திண்ணம். இரண்டும்மை வருவித்தது, சு0-ம் கவியில் தூலதனுவும் போகமு முண்டா கவென்றதனால். (ஈசு)

ஈள - கவி. அ - கை.

[முக்குணமென்றவைகளை மும்மூன்றிரண்பதுபாகமாக்கி முதற் குணமூன்றையுந் திரிமூர்த்திகளாகவும், இரண்டாங்குண மூன் றையுஞ் சீவாத்மா, அந்தராத்மா, பரமாத்மாக்களாகவும் பிரித்து, மூன்றுங்குண மூன்றையுங் கரணேந்திரியம், பிராணாதி கன்மேந் திரியம், தனுவாதி தூலபூதங்களாகக்கூறப்புகுந்தார், இக்கவியில் முதற்குண் கற்பிதங்களைக் கூறுகின்றார்.]

ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்குங்
கோதில்வெண் குணத்தி லைந்து கூறுணர் கருவி யாகு
மோதிய பின்னை யைந்து முளம்புந்தி யிரண்டா ஞான
சாதன மாமிவ் வேழுஞ் சற்குணப் பிரிவி னாலே.

(இ-ள்.) ஆதிமுக்குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்கும், எ-து. தாமதமாகின்ற சாத்துவிதமுதலிய மூன்றுகுணங்களிலு மிந்தச்சுக்கும பூதங்களனைத்துங் கூடியிருக்கும்:—கோதில்வெண்குணத்தி லைந்துகூறுணர் கருவியாகும், எ-து. புனிதமான சாத்துவிதகுணத்தில் ஐந்துவிதமான பாக முணரப்பட்ட ஞானேந்திரியங்களாம்:—ஓதியபின்னை யைந்துமுளம் புந்தி யிரண்டாம், எ-து. முன்னர்கூறிய மற்றப்பாகமாகிய வகக்கரணமைந்தும், மனம் புத்தி யெனவிரண்டாகத்தேறும்:—ஞானசாதனமாமிவ்வேழுஞ் சற்கு ணப்பிரிவினாலே, எ-து. சாத்துவிதகுண சமஷ்டிவியஷ்டிப்பிரிவினு லிந்த வேழு மறிகருவியாம், எ-று.

கோதில்வெண் குணத்திலெனவும், இராசதகுணத்திலெனவு மிடப்பொ ருளாக்கியதால், ஆதிமுக்குணமென்பதை யிடப்பொருளாக்கினும். கோதில் வெண் குணமென்றதனால் சாத்துவிதமென்றும். ஓதியபின்னையைந்தென்ற தனால் முன்னை யைந்தென்று வருவித்துப் பின்னையவைந்தைச் சமஷ்டி யெனவும், முன்னையவைந்தை வியஷ்டியெனவும் பொருள்கொண்டாம். இ ங்கே சேர்ந்து ஐந்தென்றது தன்மாத்திரைகளை. இவையனைத்துங்கூட்டினை

தனில் விரிவாகவினங்கக் கூறியிருப்பதால் தாங்கொண்டகருத்தை விரித்துத் தெளிவிக்கச் சுருக்கியுரைத்தனர். இதுநிற்க; அத்தக்காணங்களினையத்தனவும், நான்கெனவும், மூன்றெனவும், இரண்டெனவுந் தத்தமக்கினையந்தவாறு கூருகிற்பார்போல் இவரும் இரண்டெனச் சுருக்கம்பற்றிக் கூறினர். கன்மசர்தனமென்றிருப்பதுபற்றி ஞானசாதனமாயிமன்றூர். இவையேழுந் தாமதத்திற் சாத்தவிதப்பிரிவென்பது குறிப்பு. (கூ௭)

கூ அ - கவி. அ - கை.

[இரண்டாங் குணகற்பிதங்களைக்கூறி யிங்ஙனமாயநிலையே சூக்குமதேகப்பிரபஞ்சமென விக்கவியிற் கூறுகின்றூர்.]

இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும்
பிராணவா யுக்க ளென்றும் பெருந்தொழிற் கன்ம மென்றும்
பராவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங்க தேகஞ்
சுராசுரர் நரர்வி லங்காத் தோன்றிய வுயிர்கட் கெல்லாம்.

(இ-ள்.) இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும், எ-து. இராசதகுணத்தில் வெவ்வேறுகப் பிரித்தெடுத்த கூறைந்தாவது:—பிராணவாயுக்களென்றும் பெருந்தொழிற்கன்மமென்றும் பராவிய பெயராம், எ-து. பிராணதிவாயுக்களெனவும், பாரித்ததொழிற்கையத்த கன்மேந்திரியங்களெனவும், எவருமேற்கப் பரவியபெயர்களையுடையதாம்:—இந்தப் பதினேழு மிலிங்கதேகம், எ-து. இந்தப்பதினேழுதத்துவமுஞ் சூக்குமதேகமாம்;—(யாவர்க்கெனின்) சுராசுரர் நரர்விலங்காத் தோன்றியவுயிர்கட்கெல்லாம், எ-து. தேவர், இராக்கதர், மனிதர், மிருகமாதியாகத் தோற்றிய வுயிர்களனைத்திற்கும், எ-று.

ஐந்துமைந்துமென்றது நிரனிறை. பிராணதிவாயுக்கள் சமஷ்டியெனவும், கன்மேந்திரியங்கள் வியஷ்டியெனவுமாம். சூக்குமதேகத்தைச் சிலரிருபத்தைந்து தத்துவமெனவும், சிலரிருபத்தொன்பதெனவுங் கூறுகிற்பர். சத்தபரிசாதிவிடயமைந்து, சித்தமகங்காரமிரண்டு ஆகவேழையுஞ்சுருக்கிப் பதினேழெனவுரைத்தலாசிரியர். (கூ௮)

கூ ஆ - கவி. அ - கை.

[இத்தச்சூக்குமதேகத்திலுற் சிவேஸ்வரர்களுக்கமையுங் கற்பனாமங்களை யிக்கவியிற் கூறுகின்றூர்.]

இவ்வுடன் மருவுஞ் சிவற் கிலங்குத்தை சதனென் றுரு
மிவ்வுடல் மருவு மீசற் கிராணிய கருப்ப ளுரு
மிவ்வுட் விரண்டு போக்கு மினங்களுக் குமச ரீர
மிவ்வுடற்ல் கோச மூன்று மிதுகளு வவத்தை யாமே.

ள்.) இவ்வுடல் மருவுஞ் சிவற்கிலங்கு தைசதனென்றுரும், எ-து. இந்தச் சூக்குமவுடலே யானென்றபிமானிக்கு மவசரத்திற் சிவனுக்கு விளங்காநின்ற தைசதனென்னும் பெயர்வரும்:—இவ்வுடல் மருவுமீசற் கிரணிய கருப்பனுகும், எ-து. இந்தச்சூக்கும சரீரத்தை யானென் றபிமானிக்கு மவசரத்தி லீசனுக் கிரணிய கருப்ப னென்னும் பெயர்வரும்:—இவ்வுடலிரண்டுபேர்க்குமிலிங்க சூக்குமசரீரம், எ - து. இந்தச் சரீர மிவ்விரண்டுபேர்க்குஞ் சூக்கும சரீரமாம்:—இவ்வுடல் கோசமூன்று மிதுகளுவவத்தையாமே, எ-து. இவ்வுடலுக்குப் பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயமென்னுங் கோசமூன்றுகும்; இத்தவுடலே சொப்பனுவத்தையாம். எ-று.

ஈசனுக்குச் சமட்டியுஞ், சிவனுக்கு வியட்டியும் என்பதுதோன்ற, இவ்வுடலிரண்டுபேர்க்கு மிலிங்கசூக்கும சரீரமெனவும், இவ்வுடலுக்கே மூன்று கோசமும், சொப்பனுவத்தையு மென்பதுதோன்ற, இவ்வுடல் கோசமூன்று மிதுகளுவவத்தையாமே யெனவுங்கூறினர்.

(க-து.) இருவர்க்கு மபிமானிகாமம், இன்னசரீரம், இன்னின்னகோசம், இன்ன வவத்தையெனத் தெரிவித்தா ரென்பது. இவை யெல்லாம் வந்ததற் கவசரம் விரிக்கிற்பெருகும். (௯௯)

சை - கவி. அ - கை.

[உயிர்களுக்குப் போக துகர்தற்குச் சூக்குமதனுமாத்திரந் தூலதனு
வன்றி யமையாமையின் தூலப்பிரபஞ்சமும் வேண்டு
மென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

சூக்கும சகமிம் மட்டுஞ் சொல்லினே மிப்பாற் தூல
மாக்குமா ரோபந் தானு மடைவினின் மொழியக் கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத் தூல தனுவும்போ கமுமுண் டாகக்
காக்குமிவ் வீசன் பஞ்சி காணங்கள் செய்தான் றானே.

(இ-ள்.) சூக்கும சகமிம் மட்டுஞ் சொல்லினேம், எ-து. இதுகாறுஞ் சூக்குமப் பிரபஞ்சத்தைப்பற்றிச் சொன்னேம்:—இப்பாற் தூலமாக்குமா ரோபந்தானு மடைவினின் மொழியக்கேளாய், எ-து இனித்தூலப்பிரபஞ்சத்தையுண்டாக்கிய வத்தியாசத்தையுங் கிரமமாக யாங்கூறக்கேளுதி:—தாக்குமிவ்வுயிர்க்குத் தூலதனுவும் போகமுமுண்டாக, எ-து. இன்பத்துன்பங்களிற் றூக்குறுகின்ற விவ்வுயிர்களுக்குத் தூலசரீரமும் போகமுமுண்டாகும் படி:—காக்குமிவ் வீசன்பஞ்சி காரணங்கள் செய்தான்றானே, எ-து. எவ்வுயிர்களையுங் காத்தலேயே யியல்பாகவுண்டைய விந்தச்சிவன் அபஞ்சிகிருதத்தைப் பஞ்சீகரித்தனன், எ-று.

சூக்குமசகமென்றதனல் தூலமாக்குமென்பதனைத் தூலப்பிரபஞ்சத்தையென்றும், உண்டாகவென்னுஞ் செயவெனெச்சம் "பிறவுமேற்கும்பிற"

வென்பதினுற் செய்தானென்னும் வினைமுற்றை யவாவியது. தாக்குதலுயிர்க்குங் காக்குத லீசனுக்கு மியற்கையாதலிற் பிறவற்றே டொட்டாதொழிக. அபஞ்சிகிருத பஞ்சபூதத்தின் விகாரம் பஞ்சிகிருத பஞ்சமகா பூதமென்பது தோன்றப், பஞ்சிகாணங்கள் செய்தான்றானே யென்றார். சூக்கும பூதத்திற் கித்தூலபூத மபேதகாரியமாதலிற் சோதனையி லிப்பூத மித்தை யாகின்றது; யாதினுலென் றுற்றுணர்வாரில்லை; இல்லாததினு லதற்கு முதற்காரண மில்லாமற்போயிற்றே; இஃதெல்லா மனனஞ் சற்றுமில்லாத குற்றம். என்னை, "தம்பிரானருளிச் செய்த சுலோகமாத்திரத்தின்மட்டே, யிம்பரா ருலகந்தன்னில் யாவரு மறிவதன்றி, யம்பொனே மனனந்தானு மறிபவ ரில்லையாறற், செம்பொனே சுவாணபூதி செப்பவேண்டுவது முண்டோ" என்றார் தத்துவராயர். முன்னர் சூக்குமவாரோபமென்றற் போல விங்கே தூலமாக்குமாரோபமென்றது, மித்தையெனலை மறவாதிருக்க. மறத்த லியல்பென்னில் முயல்வாலன்றேமறத்தலும்; இது சொல்வாதம். நினைத்தலு மறத்தலுந் தன்னுலாதலி னியல்பன்று இரண்டுகாலத்துந் தானிருத்தலினுனும், இவ்விரு புடைபெயர்ச்சிக்குந் தான் வினைமுதலாதலானும், தன்னையன்றி யிவ்விரு புடைபெயர்ச்சியு மின்றுதலானும், தானிவையன்றுதலினுனும், இயற்கை செயற்கையைப்பற்றித் தனியேவாதித்தல் மூடம். தானுகிய எழுவாய்விடாமை விவேகம். (சு0)

சக - கவி. அ - கை.

[முன்னர் பஞ்சிகரணங்கள் செய்தானென்றுகூறி யிக்கவியிற் செய்தவகையை விளங்கக்கூறுகின்றார்.]

ஐந்தூ தமும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
கந்ததம் பாதி விட்டு நாலொடு நாலுங் கூட்ட
வந்தன தூல பூத மகாபூத மிவற்றி னின்றுந்
தந்தன நான்காந் தூல தனுவண்ட புவன போகம்.

(இ-ள்.) ஐந்து பூதமும் பத்தாக்கி யவைபாதி நந்நான்காக்கி, எ-து. அபஞ்சிகிருத பஞ்சபூத தன்மாத்திரைகளைப் பத்துப்பங்காக்கி முதற்கூறைத் தவிடுபிற்கூறைத்தையுநந்நான்காக்கி:—நந்ததம் பாதிவிட்டு நாலொடு நாலுங்கூட்ட, எ-து. மித்தையான தீந்தன் சுயாம்ச பாதியைவிட்டு ஏனைய நான்கு சுயாம்சத்தோடு பிற்பாதி நான்கையுங்கூட்ட:—வந்தன தூல பூதம், எ-து. தூலபூதங்களுண்டாயின:—மகாபூத மிவற்றினின்றுந் தந்தன நான்காந் தூலதனுவண்ட புவனபோகம், எ-து. இந்தத் தூலமகாபூதங்களினின்றுந் தூலசரீரங்களும், சகலவண்டங்களும், அவற்றினொன்றிய பூமியும், போகங்களுமாகிய நான்கு முண்டாயின, எ-று.

சுயாம்சமே கற்பிதாம்சமாகத் தோற்றலின் ஐந்தூபூதமும் பத்தாக்கி யெனவும், அந்தக் கற்பிதாம்சமைந்துந் தந்தஞ் சுயாம்சத்தோடு கூடும்

போது பிருதிவிற் பிருதிவு, பிருதிவி நீப்பு, பிருதிவிற் றேயு, பிருதிவில் வாயு, பிருதிவி லாகாயம், எ-ம். அப்புவிற் பிருதிவு, அப்புவி லப்பு, அப்புவிற் றேயு, அப்புவில் வாயு, அப்புவி லாகாயம், எ-ம்; இவ்வாறே மற்ற மூன்றையு மாக்க ஐயைந் திருபத்தைந்தாம்; ஒவ்வொரு பூதத்தி லுந்தையு மிப்போதே யாராய்ச்சியிற் பிரத்தியட்சத்திற் காணலாம். பொய்யன்று. தத்தஞ் சுயாம்ச மிருப்பதா லதைத்தள்ள ஒவ்வொன்றும் நந்நான்காம். ஆதலி னைவபாதி நந்நான்காக்கி எனவும்; ஒவ்வொரு பூதமைந்தனு ளொவ்வொன்றுந் தத்தஞ் சுயாம்சத்தை யியல்பாகவே யகலாது, ஆதலி னைதைக்கொள்ளவேண்டுவ தின்றென்பார், நந்நதம்பாதிவிட் டெனவும்; ஏனைய நான்கினையும், மற்றச் சுயாம்ச நான்கோடு கலக்கத் தூலபூத முதிக்குமாதலால், நாலொடு நாலுங்கூட்ட வந்தன தூலபூத மெனவுங் கூறினர். இதையுந் தத்துவக்கட்டளை பழுதறவிளக்கும். (சக)

சஉ - கவி. அ - கை.

[இந்தத் தூலதேகத்திறற் சிவேசுவரர்களுக்கமையுங் கற்பநாமங்களை யிக்கவியிற் கூறுகின்றார்.]

தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவ னுகுந்
தூலமே மருவு மீசன் சூழ்விராட் புருட னுகுந்
தூலஞ்சாக் கிரவ வத்தை சொன்னதே தா ரன்ன கோசந்
தூலகற் பனையீ தென்று தொகுத்தது மனத்திற் கொள்வாய்.

(இ-ள்.) தூலமே மருவுஞ்சீவன் சொல்லிய விசுவனுகும், எ-து. வியட்டியில் தூலதேகத்தைதத்தானுகமருவிய சீவனுக்கு அபிமானநாமமாகச்சொல்லப்படுவது விசுவனென்னும் பெயராம்:—தூலமேமருவுமீசன் சூழ்விராட் புருடனுகும், எ-து. சமட்டியில் தூலதேகத்தைதத் தானுகமருவியவீசனுக்கு அபிமானநாமம் எங்கு நிறைவான விராட்புருடனென்னும் பெயராம்:—தூலஞ் சாக்கிரவவத்தை, எ-து. தூலதேகந் தானுகத் தோற்று மவசரஞ் சாக்கிராவஸ்தையாம்:—சொன்னதோரன்னகோசம், எ-து. ஐந்துகோசங்களி லித்தூலதேக மோரன்னமயகோசமாம்:—தூலகற்பனை யீதென்று தொகுத்தது மனத்திற்கொள்வாய், எ-து, காரணகற்பிதமும், சொப்பனகற்பிதமும்போல விதுவுந் தூலகற்பிதமென்று தொகுத்துக் கூறியதை மனதில் வைக்குதி, எ-று.

இருவருந் தூலதேகமா நின்ற வுவசரத்தி லபிமானி நாமமு மவஸ்தா நாமமும், இன்னவிதகோசநாமமுமாம். மீண்டும் கினைப்பூட்டக் கற்பனை யீதென்று தொகுத்தது மனத்திற்கொள்வா யென்றார். சிருஷ்டியைத் தொகை, வகை, விரியென்பவற்றுள் வகை, விரியையேலாது தொகுத்தது; தானெடுத்துக்கொண்ட தத்துவவிளக்கம், சந்தேகந்தெளிதலென்னு மிவற்றுள்

வகை விரி யாக்கற்கு. உகபத்திருஷ்டியையுங், கிரம சிருஷ்டியையுங் கூறினது, மெய்யென்பவர்களை மறுத்தற்கு. சகலிவர்களைப்போலப் பரத் தையு மித்தையெனக்கூறியது; "அல்லையல்லையிதன வருமறைகளு மன் ணமச்சொல்லிறற் றுதித்தினைக்கு மிச்சுத்தர நாடற்கு" எ-ம்; "ஆணல்ல ன்பெண்ணல்லை னல்லாவலியுமல்லன், காணலுமர்காணுளனல்லனில்லனல் லன், பேணுங்காற்பேணு முருவாகு மல்லனுமாம்" எ-ம்; கூறுவதென்னை? ஆதலிற் றருமென வறிக. இலனென்னி லுளனென வரும்; உளனென்னி லிலனெனவரும்; இந்தத்திராவழக்கைத் தவிர்ப்ப தெவர்க்கு மரிது. இதை யெங்களுங்காணலாம். வேதாந்திபோல் வழக்கறற் குடன்படாரோனையர்.()

சஞ - கவி. அ - கை.

[இருவர்க்கு முபாதியுண்டாயிற் பேதந்தெரிவ தெங்ஙன மென்றற்கு விடை யிக்கவியிற் கூறுகின்றார்.]

சீரிய வீச னர்க்குஞ் சீவற்கு முபாதி யொன்றே
லாரிய குருவே பேத மறிவதெப் படியென் றக்காற்
காரிய வுபாதி சீவன் காரண வுபாதி யீசன்
வீரிய மிருச மட்டி வியட்டியாற் பேத மாமே.

(இ-ள்.) சீரியவீசனர்க்குஞ் சீவற்குமுபாதியொன்றே லாரியகுருவே பேத மறிவதெப்படியென்றக்கால், எ-து. மேலானவீசனுக்குஞ் சீவனுக்கு முபாதியொன்றுணற் பேதந்தெரிவ தெங்ஙனமாஞ் சிறந்த குருமூர்த்தியே யெனவினவில்:—காரியவுபாதிசீவன் காரணவுபாதியீசன், எ-து. காரிய வுபாதியாநிற்பவன் சீவனெனவும், காரணவுபாதியாநிற்பவ னீசனெனவு மாம்:—(இஃதன்றியும்) வீரியமிருசமட்டி வியட்டியாற் பேதமாமே, எ-து. இழிவுறுத சமட்டி வியட்டியாலும் பேதமாம். எ-று.

காரணசரீரத்தில் மாயைகாரணம், அவித்தைகாரியம். சூக்குமசரீரத் தில் அபஞ்சிகிருத பஞ்சபூதங் காரணம், மனம் காரியம். ஸ்தூலசரீரத்தில் பஞ்சிகிருத பஞ்சபூதங் காரணம், தூலதேகங் காரியம்; ஒன்றுக்கொன்று பாதான வுபாதேயமாயிருத்தலின் மறுத்தற்கிடமின்று; இஃதெவரு மேற்றற் பாலதே—

(சஞ)

சஞ - தவி. அ - கை.

[முன்னர் சமட்டிவியட்டியென்றார், அதனை யிக்கவியில் நிஷ்டாந்த தாஷ்டாந்த முகத்தால் விளக்குகின்றார்.]

மரங்கள்போல் வியட்டி பேதம் வன்மெனல் சமட்டி பேதஞ்
சரங்கடா பரங்கள் பேதந் தனியுடல் வியட்டி யென்பார்
பிரம்பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பது சமட்டி யென்பா
ரிரங்கியு ரலசி வர்க்கு மீசற்கும் பேத மீதே.

(இ-ள்.) மரங்கள்போல் வியட்டிபேதம் வனமெனல், சமட்டிபேதம், எ-து. தனித்தனி மரங்களைப்போல வியஷ்டிபேதமும், தோப்பென்பது போற் சமஷ்டிபேதமுமாம்:—(இதுபோல), சரங்கடாபரங்கள்பேதந் தனியுடல்வியட்டியென்பார், எ-து. சரமசரமென்னு மூயிர்களின் பேதத்தை விளக்கநிற்பது தனித்தனியுடல்களாம், அவ்வுடல்களை யறிவுடையோர் வியஷ்டியெனக்கூறுவர்:—பரம்பியவெல்லாங்கூட்டிப்பார்ப்பது சமஷ்டியென்பார், எ-து. இவ்வனந் தனித்தனி யெங்கணும்பரவிய சமஸ்தபௌதிகங்களை யெல்லா மேகமாக்கிப் பார்ப்பது சமஷ்டியென் றறிவுடையோர் கூறுவர்:—இரங்கிய பலசிவர்க்கு மீசற்கும் பேதமீதே, எ-து. இரக்கமுறத்தக்க சமஸ்தசிவர்களுக்கும், ஈஸ்வரனுக்கும் வந்த வுபாதிபேத மிதுவாம், எ-று.

எல்லாத் தூலதேகங்களு மவனுக்கோர்தூலதேகமும், எல்லாச்சூக்கு மதேகங்களு மவனுக்கோர் சூக்குமதேகமும், எல்லாக்காரணதேகமு மவனுக்கோர் காரணதேகமுமாம். இது சமஷ்டிவியஷ்டி பேதத்தின்தன்மை. காரணகாரியத்தானும், சமஷ்டிவியஷ்டியானும் விளங்குதல், பேதமேயாதலி னிருவரு மேகமாகாவெனத் தாபிக்கப்புகுந்தது பின்னேகமாக்கற்கு.

(க-து.) இவ்வேதுக்களா லிருவரு மேகமாகாவென்பது இருவருங் கற்பித சகிதராதலினென்க. (சச)

சரி - கவி. அ - கை.

[இதுகாறுங் கற்பிதம் வந்தவகையைத்தெரிவித் தினியபவாதஞ் சொல்லப்புகுதுமென விக்கவியிற் கூறுகின்றார்.]

கற்பனை வந்த வாறு காட்டிமேலுங் காண்ப வெல்லாஞ்
சொற்பனம் போல வெண்ணித் துணிந்தவன் ஞானி யாவான்
செற்புதை மழைக்கா லம்போய்த் தெளிந்தவா காயம் போல
வற்புத முத்தி சேரு மபவாத வழியுங் கேளாய்.

(இ-ன்.) கற்பனைவந்தவாறு காட்டிமேலுங்காண்பவெல்லாஞ் சொற்பனம்போலவெண்ணித் துணிந்தவன்ஞானியாவான், எ-து. வெறும்பொய்யாகிய சகலிவபரன் தோற்றன்மாத்திரமாக வந்தவுலகையைக்காட்டத் தோந்தவாறு காட்டிமேலும், ஆதலி னகம்புறத்திற்கோணப்படுவனவாகிய சமஸ்த திருசியங் களையு மிவ்வேதுக்களை மறவாது சொப்பனம்போலப் பொய்யெனச் சிந்தித் துத்தெளிந்தவன் யாவனேவனே யையமின்றி ஞானியாவான்:—(இங்ஙனமிருக்க), செற்புதை மழைக்காலம்போய்த் தெளிந்தவாகாயம்போல, எ-து. மேகங்கள் நெருங்கத்தக்க மழைகாலநீங்க யாதொரு மாசுமின்றித் தெளிந்தவாகாயத்தைப்போல:—அற்புதமுத்திசேரு மபவாத வழியுங்கேளாய், எ-து. அற்புதமான வைக்யமுத்திநிலை யடையத்தக்க அபவாதமென் முன்னோர் கூறிய யுத்திகளின் வகையையும் யாம் கூறக்கேளுதி, எ-று.

பருதிவிருதி யிடைநிலையனைத்துந் தோற்றன்மாத்திரமென ஆங்காங்கு நினைப்பூட்டி வந்தோமென்பார், கற்பனைவந்தவாறு காட்டிநே மெனவும், ப்ராதிபாலிகாதிசத்து மூன்றையும் பருதிவிருதியிடைநிலையென்றும், யாங் காட்டியவாறு கேட்டல், சிந்தித்தல், தெளிதலால், அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமற்றவன் சிவன்முத்தனுவா னென்பார், காண்பவெல்லாஞ் சொற்பனம்போல வெண்ணித் துணிந்தவன் ஞானியாவானெனவும்; இங்ஙனமாய விசாரத் தெளிவைக்காட்டச் செற்புதை மழைக்காலம்போய்த் தெளிந்த வாகாயம்போல வெனவும்; தானேதானுருமுத்திபோல்வ தொன்றின்மை யின், அற்புதமுத்தியெனவுங் கூறினர்.ஏனையவை,பதவிமுத்தி.போகவெ ன்பதைப் போயென்றது, காலமயக்கம். மொழியுங்கோனாயென்ற வும்மை, அத்தியாரோபத்தைச் சொன்னதுமன்றி யெனப்பொருடாலா லிறந்ததை ழீஇயவெச்சவும்மை. இங்கே கற்பனை, ஒன்றையொன்றுப் புத்திவிகற்பத் தாற்கோடலே. (சரு)

சசு - கவி. அ - கை.

[மேலபவாதமென்று ரஃதித்தகையதென விக்கவியிற் பழுதறக் கூறுகின்றார்.]

அரவன்று கயிறென் றுற்போ லாளன்று தறியென் றுற்போற்
குரவன்ற னுபதே சத்தாற் கூறுநூல் வெளிச்சங் கொண்டு
புரமன்று புவன மன்று பூதங்க ளன்று ஞானத்
திரமென்றும் பிரம மென்றுந் தெளிவதே யபவா தங்காண்.

(இ-ள்.) அரவன்று கயிறென்றுற்போ லாளன்றுதறியென்றுற்போல், எ-து. இது பாம்பல்ல கயிறென்றுகாட்டினு லெத்தகைத்தோ வதுபோல வும், இவன்கள்ளனல்லன் கட்டையென்று காட்டினு லெத்தகைத்தோ வது போலவும்:—குரவன்றனுபதேசத்தாற் கூறுநூல் வெளிச்சங்கொண்டு,எ-து. ஞானசிரியரனுக்கிரகித்த ஞானக்கண்ணினாலும் மகான்களாற் சொல்லப் பட்ட வனுபூதினாலென்னும் விளக்கத்தினாலும்:—புரமன்றுபுவனமன்று பூத ங்களன்றுர் எ-து. யானெனப்படுவது அஸ்தியாதியிருபத்தைந்து தத்துவ மாகக் காணப்பட்ட தூலதேகமுமல்ல, இந்தத்தூலதேகத்துக் காதாரமாயுள் ள பூமியுமல்ல, இந்தப்பூமிக்கு மாதாரமாயுள்ள ஸ்தூலபூதமும் மதற்காதார மாயுள்ள சூக்குமபூதமும் மதற்குமாதாரமா வடுக்கடுக்கா கின்றுள்ள குணத்ர யமும், அகங்காரமும், மகதத்துவமும், மூலப்பிரகிருதியுமல்ல:—ஞானத்திர மென்றும் பிரமமென்றுந் தெளிவதே யபவாதங்காண், எ-து. பரஞானம், அபரஞானம்; ஸ்திரஞானமென்பவற்றுள் ஸ்திரஞானமெனவும், அந்தஸ்திர ஞானமே நிரதிசயானந்த மாதலி னதுவே பிரமமெனவும், ஐயந்திரிபின்றித் தெளிவுறுவதே யபவாதமென்னு முத்தியெனக் காணுதி, எ-று.

பழுதையைப் பாம்பென்பதும், தட்டையைக் கள்ளனென்பதும் மூடம்; இதனியத்தியாச மென்னர், இதையுடையாரத்துவிதிகளல்லாதார். எங்ஙனமெனில், நானெனற்குச் சுயம்புவடிவம், மெய்யுணர்வு. இதைமறந்தவறிவு, மூலப்பிரகிருதி; இதைமறந்தவறிவு, மகதத்துவம்; இதைமறந்தவறிவு, அகங்காரதத்துவம்; இதைமறந்தவறிவு, குணத்ரயம்; இதைமறந்தவறிவு,ஈசன்; இதைமறந்தவறிவு, சிவன்; இதைமறந்தவறிவு,சூக்குமபூதம்; இதைமறந்தவறிவு, சூக்குமபௌதிகமான மனது; இதைமறந்தவறிவு,ஸ்தூலபூதம்; இதைமறந்தவறிவு, ஸ்தூலபூதபௌதிகமான ஸ்தூலதேகம்; இதைமறந்தவறிவு, எழுவகைத்தோற்றத்திலோர்தோற்றம்; இதைமறந்தவறிவு, வாலமதியீங்கமதியுளொன்று; இதை மறந்தவறிவு, வருணாசிரமங்களிலொன்று; இதைமறந்தவறிவு, ஆண் பெண் பேடியுளொன்று; இதை மறந்தவறிவு, தாய், தந்தை, அண்ணன், தம்பி, தமக்கை, இளையான், பேரன், பாட்டன் முதலிய பாத்தியவகையு ளொன்று; இதை மறந்தவறிவு, விருப்புவெறுப்பையியல்பாகக்கோடல்; இன்னுமிதனினுங் கீழாக்கிடந்த வுணர்வுபேதங்களுள. இப்பேத வுணர்வுகளினின்றுஞ் சற்றுமகலா ராதலினுலும், அல்லவில்லையெனற்கே யியைந்த திரிபதார்த்தங்களையு மாராய்ச்சிக்குச் சற்றுமுடன்படாது மிருகாதிகளைப்போ லெங்ஙன மெங்ஙனம் யாதுயாதுகாணப்படுகின்றதோ அங்ஙன மங்ஙன மதையதைச் சத்தியமெனக்கண் டுழல்வதிலுலுமெனவுணர்க. எனவே, கீழாகச்சென்றிழியு முணர்வின் கட்டையையாரோபமெனவும், மேலாகச்சென்றேறு முணர்வின்மூடி.வை யபவாதமெனவுங் கூறுவதைக்காண்க.ஈனல்லாத விப்பேதவுணர்வுகளினானென்றுணர்தல் தவிர்த்து, மெய்யுணர்வை நானெனப்பழுதறவுணர்ந் ததுகாலுகவினங்கல் அபவாதமென்றார். தத்துவக்குழாத்தையே யானெனக் கொண்டதிடத்தைத்தவிர்க்கப் புரமன்று புவனமன்று பூதங்களன்று-எ-ம் ; தனது சொரூபமிஃதன்றிஃதன்றென விசாரித்துக் கையிழந்துழி நியறிவென விளக்கலினுலும் ; அவ்விளக்கமே லீட்டா லபாரஞானமும் பாரஞானமுங் கழன்றுதான்ஸ்திரஞானமாக நிற்றலினுலும், ஞானஸ்திரம், எ-ம்; அறிவேயானந்தமாதலின் பிரமமெனவும், ஞாலேதயத்தி லானந்தோதயமும், ஆனந்தோதயத்தில் ஞாலேதயமும், இவ்விருபேதமுமிறந்து விளங்கலைத் தெளிவுதே யபவாதமெனவுங் கூறினர்.

(க-து.) தன்னை யுபாதித்ரயத்து ளொன்றுகக்காண்டல் ஆரோபம். தன்னை ஞானப்பிரகாசமாக விளங்கக்காண்டல் அபவாதமென்பது. இவ்விருமுயற்சியுந் தனதாதலில் தானே ஞாலஞ்ஞானமெனவும், இவைமாறினுந்தான்மாறுததால் தானிலையன்றெனவுங் கண்டாம். இரட்டுறமொழிதலென்னுமுத்தியால், இல்லாதது பாம்புங் கள்ளனுமெனவே, இருப்பது செத்தையுங் கட்டையு மென்றுயிற்று. அதுபோல இல்லாதது சகசீவபரமெனவே,இருப்பது ஞெப்திப்பிரிய மென்றுயிற்று. இதன்றியும் பழுதையே

பூம்பாகத் தோன்று மாறுபோன்று, பிரக்ஞையே சகமாதியாகத் தோற்ற லின் அபேதகாரண காரியமாயிற்று. இது சோதனைக் கிலையங்த தாதலின், கன்மம்பத்திபோற் கதையன்று,உண்மைநூல். விருத்திஞானமும், சான்றே ரனுபவமுமின்றி யொன்றன் மாத்திர மையமகலாதாதலி னிரண்டும் வேண்டும். அபவாதம் மயங்காமை. (சசு)

சஎ - கவி. அ - கை.

[முன்கவியி லபவாதமாவது; அபேதகாரணகாரியமெனக் குறிப் பித்தா ரதனை யேகமென்றுணர்த்த இக்கவியிலு மபவாதத்தையே கூறுகின்றார்.]

படமுறு லும்போற் செய்த பணியும்பொன் னும்போற் பார்க்கிற் கடமுமண் ணும்போ லொன்றுங் காரிய கார ணங்க ளுடன்முதற் சுபாவ மீரு யொன்றிலொன் றுதித்த வாறே யடைவினி லொடுக்கிக் காண்ப தபவாத வுபாய மாமே.

(இ-ள்.) படமுதலும் போற்செய்த பணியும் பொன்னும்போற் பார்க் கிற்,கடமுமண்ணும்போலொன்றுங் காரியகாரணங்கள், எ-து.வஸ்திரமும் நூலும்போலவும், செய்தவாபரணமும் பொன்னும்போலவும், மட்பாத்திர மும்மண்ணும்போலவும், நிருக்குநிருசியத்தைச் சிந்தித்துப்பார்க்குமிடத்தி லபேதகாரண காரியமாயிருத்தலி லேகமேயாம்:—உடன்முதற் சுபாவமீரு யொன்றிலொன்றுதித்தவாறே, எ-து. விருத்திநூலதேகமுதல் பகுதிசுபாவ மீருகத் தத்துவங்களைத் தத்தமக்குள் முன்ன ரொன்றிலொன் றுதித்தவா றெங்ஙனமோ வங்ஙனமே:—அடைவினிலொடுக்கிக் காண்ப தபவாதவுபாய மாமே—எ-து. கிரமமாக வொன்றிலொன்றொடுக்கி யுண்மையைக் காண்ப தபவாதமென்னுந் தந்திரமாம், எ-று.

பார்க்கிலென்றதனால், நிருக்குத் நிருசியம்வருவித்தாம். இம்மூன்றுப மானங்களு மபேதகாரண காரியமெனத் தெரிவிக்கப் புகுந்தது, நிருக்கு நிருசிய நிலைமைநோக்கி; எங்ஙனமெனில்; நூல், பொன், மண் இவைகளே யன்றிப் பூ,ம், பணி,கடம், எவ்வணமின்றோ, அங்ஙனம் ஸ்மரணையையன்றி யவஸ்தாத்ரயம், காட்சித்ரயம், அபிம்ருனித்ரயம், சமஷ்டி வியஷ்டிகளாக விருக்கவேண்டும்; அங்ஙனமின்றே! ஆதலி னையமின்றிப் பொருந்தும். எங்கெங்கே ஸ்மரணையுண்டோ வங்கங்கே சமஸ்தமுமுண்டு, இன்றெலின் றும். தோற்றமுமொடுக்கமும் ஸ்மரணைக்கன்றிச் சகத்துக்கெனின் கன்றே, சகத்தைத்தனித்து விசாரிப்புழி யாராய்தலுக்கு முன்னர் சாமரூபமாகவும், பின்னர்பாழாகவுந்தோற்றலென்னை? அஃதிவ்வணமாறியதின்றேல்,ஸ்மரணை யின் பிறழ்தலாகவேண்டும்; ஸ்மரணையின்பிறழ்த லெங்ஙனமெங்ஙனமோ வங்ஙனங்ஙனந் தோற்றல் சகத்தினதியல்பாகவேண்டும்; அன்றேல் மர

ணின்றிக்கூறுக; வலியின்றேற் சொன்னவாறு கேளுநி; இதனுற் சகமாநி மூன்றும் ஸ்மரணைக் குபாதேயமாயிற்று. சித்துசடபேதமுளதெனின், அறிவையன்றி யறியாமை யிருக்கவேண்டும், உண்டெனி னுராய்தலின்கண் ணல்லவில்லையென் றகன் றறிவுமாத்திர மிஞ்சிநிற்பானேன்? நிற்றலினறிவே சமஸ்தத்திற்கு முதற்காரணமாயிற்று. ஆகவே, அறிவு திருக்கும், அறியாமைதிருசியமுமாயிற்று. அறிவறியாமை யிரண்டாதலா லிவை காரணகாரியமாமே யெனின், பொருளல்லவற்றைப் பொருளென்றறித லெந்தவறிவோ, அந்தவறிவே பொருளைப்பொருளென் றறிவதன்றே; வேறெனின், எந்தவறிவு பழுதையைப்பாம்பென்றதோ; அந்தவறிவே பழுதையைப் பழுதையென்றதும், வேறன்றுதலால் அறிவேயறியாமையாயிற்று. அறியாமை பற்றி யறிவுகாரணமாயிற்று; அறிவுக் கன்னியமன்றுமையி னறியாமை காரியமாகாது, அதனு லறிவுகாரணமாகாது. இதனுலறிவே காரணகாரியமா மெனப் பெற்றும். பெறவே காரணகாரியங்க ளொன்றெனற் கையமென்னை? இன்றுதலி னென்றுங் காரியகாரணங்களென்றூர். இதனை யபவாத வுபாய மெனற் கிழுக்கென்னை? ஒன்றிலொன்றுகித்தது சுபாவமுதலுட லீறுய தெங்ஙனமோ; அங்ஙனமே யுடன்முதற்சுபாவமீறு யடைவினிலொக்கிக் காண்ப தபவாதவுபாயமாமெனமுடிக்க. இம்முறைசற்று மறியாதா ரிக் நூலையாளல் குங்குமஞ் சுமந்ததுபோலும், ஆயுதபாணிபேடி போலுமாம். தாமே யுத்தரவாதியாக விக்கவிக்கு வழக்கறுத்துரை கூறும் வேதாந்திக ளெங்கணுமரியர்; இருக்கி லவர்மொழி புலப்படலரிது; எங்ஙனமெனில், உள்ளதை யில்லதாகவும், இல்லதை யுள்ளதாகவும், ஆமெனலையல்லதாகவும், அல்லதை யாமென்பதாகவும் ஆக்கும் சுவானுபவவலியினராதலின். இங்ஙன மாயமேலாய நிலையைச் சைவத்திலும், வைணவத்திலுங் காணலாம். இவ்வி ருமதவபிமானங்கழலாதார்க் கிஃதோர்கதைபோலும்.

(க-து.) அபவாதவுபாயம் துவிதமாக்கா தேகமாக்குமென்பது. இது சுவானுபவமின்றேல் மூரணும் (சஎ)

சுஅ - கவி. அ - கை.

[விசேஷபம், ஆவரணமெனத் தேவரீர் கூறிய சத்தியிரண்டனுள் விசேஷபசத்தியை விளக்கியவாறுபோல, ஆவரணசத்தியினிலை யையு மினையதெனத் தெரிவிக்கவேண்டுமென்று மாணாக்கன்வி னவின தியிக்கவியிற்கூறுகின்றூர்.]

தூடணை தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யு
மீடணை விகாரஞ் சொன்னீ நிரண்டுசத் திகளென் றீரே
மூடலாஞ் சத்தி செய்யு மோகமுஞ் சொல்லு மையா
கேடறு குருவே யென்னக் கிருபையோ டருள்செய் வாரே.

(இ - ள்.) தூடணைதமத்தில்வந்த தோற்றமாஞ் சத்திசெய்யு மீடணைவி காரஞ்சொன்னீ நிரண்டுசத்திகளென்றீரே, எ-து. முக்குணங்களினுமிழிவா

துள்ள தமோகுணத்தினின்றுதித்தன் விரண்டசத்திகளென்றீர், யவற்றுள் ஒன்றுகிய விக்ஷேபசத்திசெய்யு மீடணத்திராயத்திற் கிடமாயுள்ள விகாரரூப மான தேகாதிப்பிரபஞ்சம் வந்தவகையைச் சொன்னீர்:—மூடலாஞ் சத்தி செய்யு மோகமுஞ்சொல்லுமையா கேடறுகுருவேயென்ன, எ-து. மற்றொ ன்றுகிய் வாவரணசத்திசெய்யும் பிராந்திரூபமான் விபரீதத்தையு மிணைய தென்றையனே, களங்கரகிதமான குருமூர்த்தியே யடியேனுக்குத் தெரி விக்கவேண்டுமென் றிரந்துகேட்க:—கிருபையோடருள்செய்வாரோ, எ-து. மகாகருணையோடு தெரிவிக்கப்புகுந்தனர், எ-று.

அனர்த்தரூபமாதலின் தூடணதமமெனவும், தூலரூக்குமந் தோற்றன் மாத்திர மாதலின் தோற்றமாஞ்சத்தியெனவும், இத்தோற்றத்தை மெய்யெ னக்கோடலால் விஷயும்பய னிஃதென்பார் சூடணை விகாரமெனவும், கினை போல்வதின் மூடலாஞ்சத்தியெனவும், ஒன்றை யொன்று யுணர்தற்கியைதற் பாலதின் மோகமெனவுங் கூறியவாறு காண்க.

(க - து.) விக்ஷேபசத்தியைப்போல வாவரணசத்தியையும் விளக்கவே ண்டுமென்பது. (அ)

சகு - கவி. அ - கை.

[ஆவரணமென்பது மறைப்பாதலா விச்சத்தி செல்லிடஞ் செல்லாவிட மிணையவென விக்கவியிற் கூறுகின்றார்.]

தானிகர் தனக்கா மீசன் றணையுந்தங் கனைத்தாங் கண்ட
ஞானிக டமையு மன்றி நாஸ்திர பாதி யென்னு
மூனிறை யுயிர்க ளுள்ளி னுணர்விழிக் குருடாம் வண்ணம்
வானிலந் திசைகண் மூடி மழைநிசி யிருள்போன் மூடும்.

(இ-ன்.) தானிகர் தனக்காமீசன் றணையுந்தங்கனைத்தாங்கண்ட ஞானி கடமையுமன்றி, எ-து. தனக்குத்தானே நிகராயுள்ள மாயாரகிதவீசனையும், தங்கனைத்தா முள்ளவாறு கண்டுள்ள மகான்கணையு மறைக்காதன்றி:—நாஸ்தி கபாதியென்னு மூனிறையுயிர்களுள்ளி னுணர்விழிக் குருடாம்வண்ணம், எ - து. இல்லவே யில்லையென்பது நாஸ்தியும், இருந்தாற் காணுதலென்ப தது நாஸ்தியுமாதலி னிவற்றையே யுண்மையென்னும் மாம்சதேகத்தினி னறந்தூடவுயிர்களி னுள்ளத்திற் சதோதயமாக வினங்கு ஞானக்கண் குரு டாகும் வண்ண மெவ்வண்ணமோ வவ்வண்ணம்:—வானிலந்திசைகண்மூடி மழைநிசியிருள்போன்மூடும், எ-து. இஃதாகாயம், பூமி, திக்குகள், என்று தெரியவொட்டாமல் மூடிக்கொள்ளுகின்ற மழைகாலத்தமாவாணை யிராக் காலத்துக் கருக்கலைப்போல ஆவரணசத்தி மூடியிருக்கும், எ-று.

(க - து.) இத்தவாவரணசத்தி, மாயாரகிதவீசனையும், சிவன்மூத்தர்க னையு மூடாமல்; ஆன்றோர்களாக மெய்ப்பொருளுந்தத்தில் தேகமேயான்மா போகமேற்மூற்றியென் றறுதிகொண்டு, ராகாதிகளைக் கைவிடுதற் போற்

காட்டுக் காவிலாளுகின்றவர்க்கு மலமென்பது: மாயாசகிதனென்னுக்காட்டுந் தாணிகர்தனக்காமீசனென்னவும்; அவித்யாசகித ரன்றெனக்காட்டுத் தங்கனேத்தாங்கண்ட ஞானிகளெனவும்; மூடமென்னுங் குறிப்பேற்றோர் சகிதனெனவும்; மூடாமலென்பா ரன்றியெனவும்; நாஸ்தி, நபாதியென்பவற்றைத் திரிகரணசாட்சியாகவேற்பவர் நாஸ்திகர், வாக்குக்காயதீங்கலீக மனச்சாட்சி மாத்திரமாகவேற்பவர் போலியாஸ்திகர் என்பது குறிப்பிற்றோன்ற, நாஸ்திகபாதியென்னு மூனிலையுயிர்களெனவுங் கூறினர். மலமென்னல், காரணவாகுபெயர். ஒருணர்வுமுதலியுணர்விறுதியாயுள்ளவுணர்கருவிக ளுயிருக்கென்க. சத்தமுதலிய பஞ்சவிடயங்கட்கு மிலைவுணர்கருவியாகு லிவற்றிற் குணர்கருவி மனமாகவேண்டும்; இம்மனதிற் குணர்கருவி யுயிராகவேண்டும்; இவ்வுயிருணர்வாயினு மூடலத்தானென்றிருத்தலா லறியாமையாகவேண்டும்; இவ்வறியாமைக் குணர்கருவி யோர் சுயம் பற்றிருக்கவேண்டும், அதனினுமேலாய கண்ணின்மையி னதனையுருவகப்படுத்தி, யதுகுருடாம்வண்ண மிருள்போல் மூடுமென்று ரிஃதெவர்க்கு மனுபவமாதலிற் றடையென்னை? அவ்வுணர்வு ; தன்னையுந் தனக்காதாரத்தலைவனையுங்காணுததற் கேதென்னை? இவ்வாவரணத்தாலன்றே, அன்றேற் கூறுக. இவ்வாவரணமாவது, பஞ்சகோசம்; ஆவரணமெனினுங் கோசமெனினு மொக்கும். இஃதெவ்வுயிர்பாலின்று, உனதாதலிற் பொதுப்பட வுயிர்களென்றார். இதனைத் தன்பாலிருக்கக்காணத்தெரியாதார் மதத்தராதலினிதனைமறுப்பர். வேதாந்திமாத்திரஞ்சோதனையகலாதலின் மறுக்கான். கண்டதேகாட்சி, கொண்டதே கோலமென்னுங் கொள்கையையகன்று ரொருவருமில்லை; இவர்களைவிட மதத்தரொன்பவர்களிடையாரீ. இவர்களிவ்வாவரணசத்தியை யேற்பதெவன். இவ்வாறே போலிஞானியரும், அடாஞானியருமிதனையேலார். எலாமைக்கேதிம்மறைப்பாலெனவுணர்க. (சகு)

ரு0 - கவி. அ - கை. 45252

[கூடஸ்தபிரமமாகிய வதிஷ்டானத்திற்கும் சிவேஸ்வரனென்னுமாரோபத்திற்குமுள்ள பேதந்தெரிய வொட்டாது மறைப்பது மிவ்வாவரணசத்தியேயென விக்கவியிற் கூறுகின்றார்.]

பூன்றமாம் பிரமத் திற்கும் புறத்துள விகாரங் கட்கு
மான்றகூ டத்த னுக்கு மகத்துள விகாரங் கட்கும்
தோன்றிய பேதஞ் சற்றுந் தோன்றுமன் மறைத்து மூடு
மூன்றிய பவவி யாதி யுண்டாக்கு முபாதி யீதே.

(இ-ன்.) பூன்றமாம் பிரமத்திற்கும் புறத்துளவிகாரங்கட்கும், எ-து. பரிபூரணமாயுள்ள பிரமத்திற்கும், அதற்குப் புறம்பாயுள்ள சடத்தும், அவனதுபாதிகுணந் தொழில்களுமாகிய விலைவகட்கும்:—ஆன்றகூடத்தனுக்கு

டிகத்துளவிகாரங்கட்கும், எ-து. எற்றிலுஞ்சிறந்த பிரத்தியேகாத்மாவுக்கும், அதற்குவெதிருத்தமாக வகத்திலுள்ளசிவனும், அவனதுபாதிகுணந் தொழில்களுமாகிய வினவகட்கும்:—தோன்றியபேதஞ்சற்றுந் தோன்றுமன் மறைத்துமூடும், எ-து, உண்டானவதிஷ்டான வாரோபபேதஞ் சிறிதுந் தோன்றவொட்டாம லதனையறியவெழுந்த வுணர்வைமறைத்துச் சத்தென் றுணருமபடி யசத்தாயுள்ளவைகளை மூடிக்காட்டும்:—வுன்றியபவவியாதி யுண்டாக்குமுபாதியீதே, எ-து. நிலையாயுள்ள பிறவிநோயை விடாது வினவிக்கத்தக்க வுபாதியாவ திவ்வாவரணசத்தியே வேறன்று, எ-று.

இவனெதற்கு முபாதியாயிருக்கிறு னென்னுமிடத்தில் தடையெனப் பொருடரலா லிங்கேதடையெனப் பொருள்கொண்டாம். தன்னைத்தா னுணர்தற்குத்தக்க முயல்வெங்குளதோ வங்கே தடையீாயிரா தெனைய விடத்துத் தடையாயுறுமென்றதனால், பத்திகாண்டி, கன்மகாண்டியைக் குறிப்பிக்கநின்றது. இவ்விருவருள் பத்திகாண்டியுந் தன்னை யடிமையாக் கியதேயன்றித் தன்னைத்தான் விசாரித்துத்தெளியவில்லை, இதனால் பொரு ளல்லவற்றை யாண்டானடிமையென்றுன்; தன்னையடிமையாக்கிய விம் முயற்சி சித்தசுத்திக் கையந்ததன்றி யாவரணசத்தியை யகற்றற்கன்று. எங்ஙனமெனில் பஞ்சகோசவிசாரத் தெளிவின்மையினும், ஆசானின் றித் தன்னைத்தானாராய்வுழி யெட்டாமையி னஸ்திபெனவும்; இச்சாஞானக் கிரியையென்னும் புடைபெயர்ச்சியிருத்தலி னிவை வினைமுதலின்றிகழா, வினைமுதலிருக்கவேண்டுமெனி னிருந்தாற் காணப்படாதுவென்பது கபாதி யெனவுங் கொள்ளுங்கொள்கை யகலாமையினுமென்க. சொரூபசமாதி, சகசசமாதி யெனக்குறிக்க, அகம்புறமென்றது. சொரூபசமாதி யகத்தி னிகழ்வது, சகசசமாதி புறத்தினிகழ்வது. சொரூபசமாதியிலதிஷ்டானம், கூடஸ்தன்; இதற்காரோபமான விகாரங்கள் சிதாபாசன், வியஷ்டிமன முதலிய கரணக்குழாங்கள், இதற்குவிடயம் சத்த, பரிச, ரூப, ரச, கந்த மென்னுந் தன்மாத்திரைகள், சுரோத்திரம், தொக்குமுதலிய ஸவயுணர் வுகள், இதற்குவிடயம் சத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னும் ஸ்தூலபூதா ம்சங்கள், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்னுங் கன்மேந்திரி யக்குழாங்கள், இவற்றிற்குவிடயம் வசன, தான, கமன, விசர்க்க, ஆனந் தமென்னுங் குழாங்கள், பிராணை, அபானமுதலிய தசவாயுக்கள், இவற் றின்சேட்டைப்பிரிவுகள், மெய், வாய் முதலியவவயவங்கள், இவற்றிற்கவ யவி, தூலதேகம் முதலியனவுகள், இன்னு மித்தூலதேகத்திற்கு விகாரங் கள் குழவிமுதலிய பருவபேதங்கள், ஜாசாரபேதங்கள், எழுவகைத்தோ ற்ற பேதங்கள், வருணாசிரமபேதங்கள், அண்ணன், தம்பி, தாய், தந்தை முதலியபாத்தியவகைகள், இவைபோல்வனபிறவுமாம். இதனையிவ்வணம் விளக்க, ஆன்றகூடத்தனுக்கு மகத்துளவிகாரங்கட்குமெனவும்; இவ்வன மாயசொரூபசமாதி நிறையேதியைந்திச் சகசசமாதி யைகூடாது. இம்மூ

புலோச்சிப் புறமெனவும்; சொரூபசமாதியாவது; அகத்தில் தேகமுதலான்மா விறுதியாக நின்ற தத்துவங்களை நியதிகளைந்துசேறல், இது வஸ்துவை யணுவுக்கணுவாகத் தரிசித்தல்; இதனைச் சொரூபசமாதியெனவும், அகச்சமாதியெனவுங்கூறுவர். இதனிற்க, சகசசமாதியாவது ; தேகத்துக்குப்புறம்பி லுடலாதிப்பிரமமிறுதியாகநின்ற வியாபகவியாப்பியங்களை நியதிகளைந்துசேறல்; இதுவஸ்துவை மகத்துக்கு மகத்தாகத்தரிசித்தல்; இதனைச் சகசமாதியெனவும்,புறச்சமாதியெனவுங்கூறுவர். சகசசமாதியிலதிஷ்டானம்,பிரமம்; இதற்காரோபமான விகாரங்கள்,ஈசன்,சமஷ்டிகரணங்கள்,அதற்கினையந்தவிடயங்கள்,ஞானேப்பொறிகள், அதற்கினையந்தவிடயங்கள்,கன்மப்பொறிகள் அதற்கினையந்தவிடயங்கள், வாயுக்கள், தேகங்கள், புவனங்கள், தூலபூதம்,சூக்குமபூதம், குணத்ரயம், அகங்காரதத்துவம், மகதத்துவம், மூலப்பிரகிருதி, இவை போல்வன பிறவுமாம். இதனை யிங்ஙனம்விளக்கப் பூன்றமாம்பிரமத்திற்கும் புறத்துளவிகாரங்கட்கு மெனவும் கூறினர். கற்பனைசகிதத்தைக் கற்பனாரகித மெனச் சிவேஸ்வரனைக்கோடல், ஆவரணத்தாலாதலின் மறைத்துமூடுமென்றார். இம்மறைப்பையேலாரகன்றவராகவேண்டும். அங்ஙனமின்றே, பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்வராதலின் தன்னைத்தா னெங்ஙனமுணர்வர், அங்ஙனமுணராக்காறு மயலே நானென்னும்பிராந்தி யெங்ஙனமகலும், அகலாக்காறும் வினையுடல்கள் வந்துவந்துநீங்கும், ஆதலின் பலவியாதியுண்டாக்கு மூபாதி யீதேயென்றது சத்தியம்சத்தியம். ஞாயமுஞ், சோதனையும், அனுபவமுமிருத்தலி னிதனைமறுத்தல்மூடம்.

(த-து,) மெய்க்கும்பொய்க்கும் பேதந்தெரியவொட்டாமல் மெய்யே பொய்யாகவும், பொய்யேமெய்யாகவும் காணச்செய்யுமென்பது. (ரு0)

ருக- கவி. அ - கை.

[மூன்னர் பொய்யை மெய்யாகக்கோடல்போன்று சிவேஸ்வரர்களைக் கூடஸ்தபிரமமாகக்கோடலிற் பொய்மெய்க்குள்ளபேதந் தெரியவொட்டாமல் மறைக்கத்தக்கது ஆவரண சத்தியென்றுரைசிரியர்கூற, மாணாக்கனேயனே! பொய்க்கும்மெய்க்கு மிடையினின்றிவற்றைமறைக்க,இதனால் மெய்மறைபடினும்,மறைப்டாவிடினும்,பொய்யங்ஙனமாகா தொருபடித்தாநின்று தோற்றற்கேதென்னையோவென வினவ, அதற்குத்தர மிக்கவியி லாசிரியர் கூறுகின்றார்.]

ஆதார மறைந்து போன லாரோப மெங்கே தோன்று
மாதார மறையா தாயி னுரோப மிலையே யென்று
லாதாரஞ் சமம் விசேட மாமென விரண்டு கூறு
மாதாரஞ் சமமா மெங்கு மாரோபம் விசேட மாமே.

(இ-ள்.) ஆதாரமறைத்தபோது ஸாரோபமெய்தேதான்றும், எ - து, ஆதாரமாகிய கூடஸ்தபிரமம், ஜீவாணசத்திமறைக்க வதனுல்மறைபடுமா யின், அவ்வதிஷ்டானத்திற் காரோபமாயுள்ள சகமாதிதிரிபதார்த்தங்களு மெங்ஙனங்காணப்படும், காணுமற்போகவேண்டியதே,அதனுலாயம், காணப்ப டுகின்றதே:—ஆதாரமறையாதாயி ஞரோபமிலேயேயென்றுல், எ-து.ஒன்று மறைக்க வதனுலாதார மறையமாட்டாதென்பீராகி லப்போதாரோபமறை படவேண்டுமே, மறைபடாததென்னே? என்றுகேட்பையாயில்:—ஆதாரஞ் சமம்விசேடமாமென விரண்டுகூறும், எ-து. அதற்காதியாதாரமென்பது; சமமெனவும், விசேடமெனவு மிரண்டுகூறுகிற்கும்:—ஆதாரஞ்சமமாமெங் ஞ மாரோபம்விசேடமாமே, எ-து. ஆதாரமேசமமாதலி னச்சமமென்ப தெ ங்கனும் பரிபூரணமா நிறைந்துள்ள வதிஷ்டானமாம், விசேடமென்ப தேக தேசமாயுள்ள கற்பிதமாம், எ-று.

ஆதாரங்காணுதபோதாதேயங்காணவேண்டுவதின்றே,காண்பானேன்? ஆதாரந்தோன்றும்போ தாதேயந்தோன்றவேண்டுவதின்றே, தோன்றுவதெ ன்னே? என்னுங்கேள்வியினபிப்பிராயம்; மெய்ஞ்ஞானம் வினங்காதார்க்குச் சகந்தோற்றுவதும், வினங்கினார்க்குத் தோற்றுவது மென்னையென்பது. எனி வே, ஆதாரமுண்டாயி ஞரோபமுண்மையும், ஆதாரமின்றுயி ஞரோபங் காண்கையு மிருத்தலி ஞதாரவாதேயமென்னுஞ் சொல்லுக்குப் பொருத்த மெங்கேயென்பதைக் குறிப்பிக்க, இங்ஙனம் விளுவினதாகப் பெற்றும். அ தற்குவிடை கூறப்புகுந்தார்; சூரியனே, கானல், சலமென விரண்டாஞற் போல, ஆதாரஞ், சமம்,விசேடமாமென விரண்டுகூறுமெனவும்;காஞலென் ஞமுண்மைக்குச் சலங் கற்பிதமாயதெங்ஙனமோ, அங்ஙனமாயதெனக்கா ட்ட, ஆதாரஞ்சமமாமெங்கு மாரோபம்விசேடமாமேயெனவுங் கூறினர். சமமாதாரமாமெங்கும், விசேடமாரோபமாமெனமுடிக்க. ஆதாரத்தைத்தவி ரச் சமம்விசேடமின்றெனக்காட்ட விங்ஙனங் கூறவந்ததன்றி வேறன்றெ ன்க. மெய்ம்மையென்றுலகைக்கருதிக் கடாவல் தவிர்தியெனச்சொல்லாது சொல்ல விவ்விடைதந்தனர், இலையாவுங் கற்பிதமெனவிடாதாங்காங்கு காட்டிவந்தனராதலினென்க. தனக்கெனச் சொரூபமொன்றிலாத சகசிவ பரங்களைச் சத்தெனக்கோடலித் தவிர்தற் கதியாரோபமபவாதங் கூறவந் ததன்றி யிருந்துகூறவந்ததன்று. ஸவாஞுபவமுறையே மூற்றியவிடத்தன்றி யில்லுனவெங்ஙனந்தெரியும். தூமந்தோற்றியவிடத்துந் தோற்றுவிடத்து மக் கினியிருக்குமாறுபோன்று, ஆரோபந்தோற்றியவிடத்துந் தோற்றுவிடத் துந் ஆதாரமிருக்குமெனவறிக. இதனைத் தினவநுபவத்தில் சம்மிடத்தில் ரூபமெகாணலாம். எங்ஙனமெனில், சகந்தோற்றியபோதுந் தோற்றுதபோ துந் ஸ்மரணையிருக்கின்றது, இருப்பதா லெனையவிசுவத்தைதனிலு நிகழ்வு ணர்தியுண்டுகின்றது.

(இக)

ருஉ - கவி. iஅ - னை.

[முன்னர் சமம் விசேடமென்றதைத் திட்டாந்த தாட்டந்தங்களிரு லிக்கவியில் விளங்கக்கூறுகின்றார்.]

சகமதி லிதுவென் சுட்டோச் சமானக்கண் மறைந்தி டாது
மிகவுரை கயிறும் பாம்பும் விசேடக்கண் மறைந்து போகு
மகமெனுஞ் சமானந் தன்னே யஞ்ஞான மறைத்தி டாது
பகவர்தோர் விசேடஞ் சீவன் பரனெனு மவனை மூடும்.

(இ-ன்.) சகமதி லிதுவென் சுட்டாச் சமானக்கண் மறைந்தி டாது, எ-து. உலகமெவற்றிலும் யாவராலு மிஃதெனச் சுட்டியறியவொண்ணுத சமமாகிறகண், ஒன்றுமறைக்க, அதனல்மறைந்திடாது:—மிகவுரை கயிறும் பாம்பும் விசேடக்கண் மறைந்துபோகும், எ-து. பெரும்பாலு முலகத்தா ரால்வழங்கத்தக்க பழுதையும்பாம்புமாகிறவிசேடக்கண், ஒன்றுமறைக்கஅத னல்மறைந்துபோகும்:—(அதுபோல்) அகமெனுஞ்சமானந்தன்னே யஞ்ஞா ணமறைத்திடாது, எ-து. சமமெனப்படுவதாகிய தானெனும்பொருனை, யஞ் ஞானமென்னு மாவரணமானது மறைக்கமாட்டாது:—பகர்வதோர் விசே டஞ்சீவன் பரனெனுமவனைமூடும், எ-து. சொல்லத்தக்கமற்றொன்று விசே டமெனப்படுவதாம், அங்ஙனம்விசேடமெனப்படுவதாகிய சீவேஸ்வரர்களை மறைக்கும், எ-று.

திருஷ்டாந்தத்தில் சமமாக நின்றதுவும், விசேடமாக நின்றதுவுங்கண் ணே; எங்ஙனமெனில், பழுதைபாம்பாகவும் மீண்டுமதுபழுதையாகவுமாறவி ல்லை; இதுபார்வையின் பிரதிபலனமேயன்றிவேறன்று. பார்வைபழுதையை யாராய்வதன்முன்னர் பாம்பாகவும், பின்னரன்றுகவுந் தோற்றியதியாது? பழுதையன்றே. அஃதிருந்தவண்ணமிருக்கின்றதே, பாம்புண்மையன்றே, பிராந்தியன்றே; அந்தப்பிராந்தி யறிதலின்கண்ணதோ, சடத்தின்கண்ண தோ, அவ்வெழுச்சி சடத்தின்றர்மமெனில், உணர்தலின்றிய விடத்தின் டாகட்டும், அங்ஙனமின்றே, யறிதலின்றர்மமே. அன்றெனின் ஞாயம்வே ண்டும், இன்றெனின் வாய்பொத்திக்கிடக்கை யுத்தமர்க்கழகு. பாம்பாகப்பி ரதிபலித்ததும், அதனை மெய்யெனக்கண்டதும், கண்டபெயகம்பனதிருறிகளா கின்றதும், பின்னர் தெனிந்ததும், அக்குறிகளன்றிநின்றதும், இவ்விருவியப்பு மூணர்த்த நின்றதும், பழுதையா, அது சடமன்றே, ஆதலின்கண்ணே யாம். கண்ணிங்ஙனமாறிற்றே, இன்றெனின், கண்ணையன்றி யிக்குறிகளு ண்டாகட்டும், இன்றெனின், கண்ணுக்கிரண்டு தர்மமிருக்கின்றன. இத்த னைவிகாரமாகின்றதுக்தானே, அன்றுப்ச்சாட்சியாகின்றதுக்தானே, இஃதன் றியும், பொருளல்லதைப் பொருளென்றுணர்ந்ததும், அங்ஙனமுணர்ந்ததாற் பொருளல்லது பொருளாகத்தோற்றுவதும், பின்னர் பொருளைப்பொருளெ ன்றுணர்வதும், அங்ஙனமுணர்ந்ததாற் பொருள்பொருளாக விளங்குவதும்,

உணர்தல்தர்மமாகிய கண்ணையன்றிப்பின்முமையின் தானே ஞானஞ்ஞான மாகநிற்பதும், நிற்கவே யிங்கேதிருக்குதிருசியம் வேறன்முயிற்று; ஆகவே, தானே விகாரமும் நிர்விகாரமுமெனப் பொருடருகின்றது; தானே, கற்பித முஞ் சுயம்புந் தானே யெனப்பெற்றும்; பெறவே, சமமும், விசேடமும் வேறணீறனத் தானேயருத்தாபத்தியாற் குறிக்கநின்றது. தானே பழுதை யாகவும் பாம்பாகவு மாறியக்கண்ணுந் தானங்ஙனமாகாது சாட்சியாநின்றது கண்ணுதலால், அதுபோலப் பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்த லும், பொருளைப் பொருளென்றுணர்தலும், அறிவாதலா லிந்தவறிவுக்குக் கற்பிதமென்றும், யதார்த்தமென்றும் பெயர்வரலாமே, ஆதலாற் கற்பிதவறி வுக்குச் சீவேஸ்வரனெனவும், யதார்த்தவறிவுக்குக் கூடஸ்தபிரம்மமெனவும் பெயர்வரத்தகும். திருஷ்டாந்த தார்ஷ்டாந்தங்கட்குப் பழுதின்மையை யிவ் வேதுக்களா லுணர்க. கண்ணென்ப துலகத்தையறிதல்பற்றி யறிதற்கருவியு ளொன்றென வுலகத்தா ரறிவோயன்றி, யததுவாதலையும், அங்ஙனமாதலே திரிபுடியாதலையும், இது தானென வறியாதயலெனக்காணலையும், அங்ஙனங் கண்டி விருப்புவெறுப்புற்றழிதலையும், இன்னுமிவைபோன்றபுடைபெயர்ச்சி களையும், இவையே பந்தத்துக்கினையந்த தென்பதையும், இது பகிர்முகதிரு ஷ்டியா லாயதென்பதையும், இத்தனையனர்த்தமுமாயது கண்ணுலாதலா லிவையாவுமழிவதுங் கண்ணுலேயேயெனச் சகசசமாதியென் முோருருத்தவ மிருக்கின்றதென்பதையும், அஃதகமுகதிருஷ்டியாலாவதென்பதையும், இத னுலாயபயன்துக்காபாவம், திருதகிர்த்தியம், சர்வகாமாப்திகம், ப்ராப்திப்ரா ப்யம் என்பவற்றையுங் கேட்டுமறியார் பார்த்துமறியாரிவர்க ளிங்ஙனமாயநி லையதெனக் கண்ணை யெங்ஙனங் கணிப்பனென்பதுதோன்றச் சகமதிலித் லென் சுட்டாக் கண்ணெனவும்; பந்தமுத்திக்கினையந்த புடைபெயர்ச்சி தன் பாலிருப்பினுந் தானங்ஙனமங்ஙனமாவதுபோற் காண்டலேயன்றி மாறுதென் றுமொருபடித்தாயிருத்தலின், சமம்,விசேடம் என்பவற்றுள் கண்ணைச்சம மெனவும், அதிஷ்டானமாதலின் மறைந்திடாதெனவும், மாறுந்தகையதா தலின் கண்ணைவிசேடமெனவும், ஆரோபமாதலின் மறைந்துபோகுமென வும், அதிஷ்டானமு மாரோபமுந் தானேயாதலின் சமானக்கண் விசேடக் கண்ணெனவும், அதுபோலத் தானன்னியமாகாது விளங்குதலின், ப்ரக்ஞை யைக் கூட்டஸ்த பிரமமென்பார்; அகமுமனுஞ் சமானமெனவும்; அவித்தியா மாயா ரஞ்சிதமாதலின், அஞ்ஞானமறைத்திடாதெனவும், தானன்னியமாகவி ளங்கலின், ப்ரக்ஞையைச் சீவேசனென்பார், விசேடஞ் சீவன்பரனெனவும்; அவித்தியாமாயா சஞ்சிதமாதலின், அவனை யஞ்ஞான மூடனெனவுங் கூறினர். இவ்வுரையை யுத்தமர்மறுக்கார், சோதனைஞாயத்தாற் புகட்டலினென்க.இங் ஙேயஞ்ஞானமென்ற தாவரணத்தை. இக்கவியில் திருஷ்டாந்தஞ் சமம்வி சேடமென்னவும்,தார்ஷ்டாந்தஞ் சமம் விசேடமென்னவு மிருகூறதாகிற்கும்,மூன் கவியில் விசேடமாரோபமென்றதனால் சமம்-அதிஷ்டான மென்முயிற்று.

அறிவே யதிஷ்டான மாரோபமெனக்காட்டக் கண்ணே யதிஷ்டான மாரோபமென்னக் குறிப்பித்தார். (நிஉ)

நிங - கவி.. அ - கை.

[உண்மைவிளங்கவொட்டாமல் மறைப்பது விகேஷபசத்தியா யிருக்க, ஆவரணசத்தியின்மேலிப்பழியையேற்றியுது யாதுபற்றியோவென, மாணக்கன்விஞவுவதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

கேவல நிலேதான் ரூமற் கெடுத்தது பஞ்ச கோசஞ்
சீவனுஞ் சகத்து மாகச் செனித்தவி கேஷப மன்றே
வாவர வாந்தா னேபா ழாஞர்த்தமென் றுணைத்த தேதோ
மேவருங் குருவே யென்று விஞவிய மகனே கேளாய்.

(இ-ள்) கேவல நிலேதான் ரூமற் கெடுத்தது, எ-து. நிரதிசயானந்த வாழ்வு, விளங்கவொட்டாமல் மறைத்துக்கெடுத்தது:—பஞ்சகோசஞ் சீவ னுஞ் சகத்துமாகச் செனித்தவிகேஷபமன்றே, எ-து. பஞ்சகோசமாக வும், சீவனுகவும், செகத்தாகவுமுண்டான விகேஷப சத்தியல்லவா, இங்ஙன மிருக்க:—ஆவரணந்தானேபா ழாஞர்த்தமென் றுணைத்ததேதோ, எ-து. ஆவ ரணசத்தியேபாழென்றும் அனர்த்தரூபமென்றுங் கூறியது யாதுபற்றி யோ:—மேவருங் குருவேயென்று விஞவிய மகனே கேளாய், எ-து.கிடைத் தற்கரியகுருவாதனே யிதனைவிளக்கவேண்டுமென் றிரந்துவிஞவினவினோ க்கி ஞானபுத்திரா யான்கூறக் கேளுதி, எ-று.

தானேதானுக விளங்குவதைக் கேவலநிலையென்றார். கெடுத்ததென்ப தை மறைப்பாற்கெடுத்ததாதலின் மறைப்புவருவித்தாம். விகேஷபசத்தி யின் சேட்டை, கேவலநிலை தோன்றுமற்கெடுப்பது. அதனதுநிலை; பஞ்ச கோசஞ் சீவனுஞ் சகத்துமாகச் செனிப்பது. அனர்த்தம், தனக்கெனச்சொ ரூபமொன்றில்லாதது: நமதுண்மைவடிவை விளங்கவொட்டாமலு மதை யுண்ணவொட்டாமலு மறைக்கநின்றது; கோசமுஞ் சீவனுஞ் செகத்தும் பிரத்தியட்சமாதலினுலும், இலைமையமாநின்றது; விகேஷபமாதலினுலும் விகேஷபத்தின்மேல் வைத்துப் பழிகூறினுன். ஆனந்தமயகோசத்தைப் பற்றி மற்ற நான்குகோசமு மிருத்தலினுலும், இனம்பற்றி யிருத்தலினுலுமி ங்கே கோசமைம்தெனவும், விகேஷபசத்தியனேறெனும் பஞ்சகோசவாதாவி னிற்றலி னிதுபற்றிச் சீவனெனவுங் கூறினுர். இது வழுவன்று. (நிக)

நிச - கவி. அ - கை.

[செனனத்துக்கனுகூலமாயினு முத்திக்கு மனுகூலமாயிருப்ப தன்றேவிகேஷபசத்தி; ஆவரணசத்தி யவ்வனமன்றே, சென னத்துக்கே யிடமாயதென விக்கவியிற்கூறுகின்றார்.]

தோற்றமாஞ் சத்தி தானே துன்பமாம் பலமா னவு
மாற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூல சகாய மாகு

மூற்றமாம் பகற்கா லம்போ லுபகார நிசியி னுண்டோ
மாற்றமென் னுனைப்பேன் மைந்தா மறைப்பது மிகப்பொல் லாதே.

(இ-ள்.) தோற்றமாஞ் சத்திதானே தன்பமாம் பவமாதலும், எ-து. விகேஷோபசத்தியே துக்கரூபமாகிய சனனத்துக் கிணைந்தகருவியாயினும்:—ஆற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூலசகாயமாகும், எ-து. நிட்காமியவலியாலக்கியமுத்தியடைபவர்க் கிணைந்தசகாயமாகவு மிருக்கும்:—மூற்றமாம்பகற்காலம்போ லுபகாரநிசியினுண்டோ, எ-து, தெளிவுக்கிடமாகிய பகற்காலத்தைப்போல வுபகார மிராக்காலத்திலுண்டா:—மாற்றமென்னுனைப்பேன்மைந்தா மறைப்பது மிகப்பொல்லாதே, எ-து. அந்தப்பகைமையைக் குறித் தென்னசொல்லுவன் ஞானபுத்திரா, அறிவை மறப்பதே யியல்பாக வுடைய வாவரணசத்தியானது யாதினு மிகக்கொடியது, எ-று.

விகேஷபசத்தியைவிடப் பவம்வேறன்றெனத்தோன்றத் தேற்றேகாரந் தந்தனர். பவத்துக்கியல்பு துன்பமெனலைத் துன்பமாம்பவமென்றார்: அறிவென்பதேவிகேஷபம் அறியாமையென்பதே யாவரணமெனக்குறிக்க, பகற்காலமெனவும் நிசியெனவு முவமானித்தார். ஒன்றையொன்றுவுணர்தல் விகேஷபம், அதனு லொன்றுமற்றொன்றுகத் தோற்றல் ஆவரணம். உணருந்தகையதாதலி னெய்ப்புழிப் பொருஷப்பொருளென வுணரினுமுணரும், உணர்வதாற் றுக்கநிவிர்த்தியுந் தடையற்ற வானந்தமுந்தரும், அங்ஙனம்தரலே முத்தியாதலால் விகேஷபசத்தி முத்தியடைவார்க் கனுகூலசகாயமாகுமென்று ரஃதுண்மை. ஆவரண மங்ஙனமாகாதென்பதற்குமாறென்னை? இவையெல்லாந்தன்னையு முலகையும் விசாரிக்கத்தக்கவாறு விசாரிப்பார்க்கே தெரியுமன்றி யேனையோ ரெத்திறத்தாயினு மவர்க்கெங்ஙனம் விளங்கும், விளங்குமெனச்செருக்குறினு மிழுக்குறுவர். உலகம் மெய்ம்மைபோற் றோற்றலி னாவரணமாம், இவ்வுலகம் மெய்ம்மையென மயக்காததெவனை? இன்றுதலி னெங்ஙனமுண்மையை விளக்கும்; விளக்கற்பால தன்றுமையின், உயிர்களெங்ஙனமுய்யும், உய்தற்கிடமின்மையின் மறைப்பதுமிகப்பொல்லாதேயென்றார். ஒன்றுமற்றொன்றுத்தோற்றல், ஸ்மரணசகத்தாகத்தோற்றலை. இதனையறியார், மதஸ்தராதலி னனுதினித்தியமென்பர், படைப்பென்பர், சுபாவமென்பர், தமக்குப் போகசாதன வஸ்துவென்பர், இன்னு மிவைபோல்வனவாகக் குழறிவழிந்துவழக்கிடுவர். இங்ஙனமாகாது ஸ்மரணையாக வுலகைக்கண்டு களித்திருப்பவன் வேதாந்தி யொருவனே, அவனேஞானி. ஏனையர் தத்தமையே ஞானியொணக்கொள்ளினு மஞ்ஞானியரே. (நிச)

நிநி - கவி. அ - கை.

[ஆவரணமென்னல், தேகமும் பிரபஞ்சமுமென்றுல் பிராரத்த முடிவிலும், சலப்பிரளயாந்தத்திலு மழியுமன்றே; அழியின்றுமுத்தியன்றே? முத்தியாயின்விகேஷபசத்தியால்யாது

பயனென ஆசங்கித்ததுபோற் தானே யாசங்கித்ததற்கு விடை யிக்கவியில் தானே கூறுகின்றார்.]

சுழுத்தியிற் பிரள யத்திற் றேற்றமாஞ் சகங்கண் மாண்டு
மழுத்திய பவம்போய்முத்தி யடைந்தபே ரொருவ ருண்டே
முழுத்தவி கேஷ மெல்லா முத்தியிற் கூட்டு கிற்குங்
கொழுத்தவா வரண முத்தி கூடாமற் கெடுத்த கேடே.

(இ-ள்.) சுழுத்தியிற் பிரளயத்திற் றேற்றமாஞ்சகங்கண்மாண்டும், ஏ-து. தினசுழுத்தியிலும், சலப்பிரளயத்திலும் தோற்றன்மாத்திரமாவுள்ள தேக்முதலிய சமஸ்தபிரபஞ்சங்களும் மாண்டவிடத்தும்:—அழுத்தியபவம் போய்முத்தி யடைந்தபேரொருவருண்டோ, எ-து. அவித்தையிற் பதித்திருக்கின்ற சனனசஞ்சிதங்கள்நசித்து முத்தியடைந்தவர்கள் யாவராயினு மொருவருளரோ விலரோ:—முழுத்த விகேஷபமெல்லா முத்தியிற்கூட்டுகிற்கும், எ-து. தாமதமென்னு முழுக்குணத்ததாகிய விகேஷபசத்தி பாகமனத்தும் முத்தியிற்கூடும்படிசெய்யும்:—கொழுத்தவாவரணமுத்தி கூடாமற்கெடுத்தகேடே, எ-து. மூடத்தன்மையில்மதர்த்த வாவரணசத்தியானது முத்தியிற்கூடாமற் கெடுத்தகேடிதுவாம், எ-று.

தேகத்துக்குப் பிராரத்தமுடிவுகாலஞ் சேய்மையாதலி னணிமைபற்றிச் சுழுத்தியெனவும், தேகத்துக்குப் பிரளயம் பலவற்றுலாதலின் பொதுப்படப்பிரளயமெனவும், சுயம்பாகவொன்றிலாமையிற் றேற்றமாஞ்சகங்களெனவும், கனமேனுங் காணுமற்போதலால் மாண்டெனவும், இழிவுசிறப்பின்மையென்பதுதோன்ற மாண்டுமெனவும், எதிர்மறையெனக்காட்டவுண்டோவெனவும், காணமைந்தும், பொறியைந்தும், இன்னுமிவைபோல்வன பிறவுமாதலின் விகேஷபமெல்லாமெனவும், இவற்றுற் சற்கருமந்திரிகரணமொத்தப்புரிபவ னொங்குமூளாதலினுனும், இம்முயற்சி விகேஷபசத்தியின் புடைபெயர்ச்சியாதலினுனும் முத்தியிற் கூட்டுகிற்குமெனவும், முன்னோ யாவரணத்தியினையதென்றும், அதனுலுற்றுணருமிடத்தில் முத்திதருதற்கியைந்ததன்றுணையின், முத்திகூடாமற்கெடுத்தகேடே யெனவுங்கூறினர். பிரளயமுண்டென்பதற் கடையாளம், பூமியைத் தோண்டிக்கொண்டுபுகுந் தோறும் வெங்காயப்புரைக ளுரிக்குரிக்க வடுக்கடுக்காயிருக்குமாறுபோன்றிருத்தலானும், ஆங்காங்குபற்பல விநோதங்களிருத்தலினுனும், சர்வமதசாஸ்திரிகளும் மறுத்தற்கிடமின்மையினுனும், சலப்பிரளய மாங்காங்குவரக் கண்டுகொண்டிருப்பமாதலினுனு மேற்றற்கையமின்றென வுணர்க. தேகாதிப்பிரபஞ்சநாசமே முத்தியென்பானை மறுத்தது. (நிநி)

ருகூ - கவி. அ - கை.

[ஆவரணம்போலன்றி முத்திக்குமியைந்தது விகேஷபசத்தியென்றீர், இதுவு முன்னர்மித்தையென்றீர், இதுகாரணம்]

வருமுத்தியு மித்தையாமன்மேலெனத் தானேயாசங்கித்து விடை தானேயிக்கவியிற்கூறுகின்றார்.]

சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்ற மான
சத்தியீம் பொய்யே யென்றுற் சத்திசா தனமா வந்த
முத்தியும் பொய்யா மென்னின் மோகநித் திரைவி லங்கா
னித்திரை தெளியு மாபோ னிருவாண நிலைமெய் யாமே.

(இ-ள்.) சுத்தியில்வெள்ளிபோலத் தோன்றியதோற்றமான சத்தியும் பொய்யேயென்றால், எ-து. இளிஞ்சலில் தோற்றிய வெள்ளிப்பிராந்தி யெங்ஙனம்பொய்யோ அதுபோலச் சைதன்னியத்தில் மித்தையாகத்தோற் றிய விக்ஷேபசத்தியும், பொய்யாகுமேயானால்:—சத்திசாதனமாவந்த முத் தியும்பொய்யாமென்னின், எ-து.அந்த விக்ஷேபசத்திகாரணமாவந்தமோக்ஷ மும் பொய்யாகுமல்லவாவெனக் கேட்பையாயின்:—மோகநித்திரைவிலங் கா னித்திரைதெளியுமாபோ னிருவாணநிலை மெய்யாமே, எ-து. மயக்க மானசொப்பனசிங்கங் காண வச்சிங்கத்தி ஞ லக்கணமே யந்நித்திரைநீங்கித் தெளியுமாறுபோன்று, அச்சத்தியாலுண்டாய முத்தியுஞ்சத்தியமாம், எ-று.

அதற்குக் கூறியவிடை சொப்பனம் பொய்யாயினு மதிலெழுந்த சிங் கமும்பொய்யே யதுவிழிக்கச்செய்ததுபோல விக்ஷேபசத்தியுஞ் சிரவணம னனுதிகளா னிறைத்துச் சாட்சாத்காரம் விளங்கச்செய்ய, அவ்விளக்கமே தீர்க்கசொப்பனசகந் தெளியச்செய்தலி னிங்ஙனங்கூறியதே தகுமெனவு ணர்க. மானதம் விக்ஷேபசத்தியாதலானும், அந்தமானதம் விஸ்மரணையா தலானும், அந்தவிஸ்மரணை யன்னிதாக்கர்த் தத்துவமாதலானும், விடய மே பயனுகநுகர்தலானும், இதற்குக்காலவனையறை யின்மைதலானும், பிற ப்பிறப்பு, துன்பவின்பம், மாறுக்கவலை, ஒழியாச்சஞ்சலம், தணியாவவா, முதலியவிவற்றையே விநோதமாகக்கொள்ள வியற்கையாக வனையின்றிய ழுந் நிகழ்வதானும், இவையாவு மதோமுகத்தாதலானும், இதனுக்கினையந் தது காமியத்தவமாதலானும், இவற்றிற்சலிப்புறுவ தரிதாதலினுனும், தேவ கதியா லோர்போதிதுநேரிடி னு மற்கர்முக திருவந்டி யினையதென்றறியா ததினு னீழிந்நில்லாதுமாறும், "இங்ஙனேநேரிடுவது மீண்டுமோறுவதுங் கனாக் கின்றிநிகழும், நிகழ்வுழி யிஃதென்னைகொலோ? இங்ஙனம் பலதரமாயி னேமேயெனச் சற்றெண்ணம்வரும், அந்தவெண்ணமும் விடயப்பராக்கான் மாறும், மாறுமவிருத்தற் குபாதினுனவரும், அதுவும் பிறவிமாறமாறும், மாறினும் பூர்வசென்ம சமஸ்காரமாதலால் சற்றேநினைவுவரும், வரினத் தவக்குறையினின் றெடுத்தாளவரும், அதுமேலீட்டால், வைராக்கியம்வ ரும, அதுவும் பிறப்பு மாறுவதால் மாறி மாறி முடிவி னிலையுறும், இது மேலீட்டால் ஞானத்திற் சற்றே விசாரமுறும், அதுவும் பிறப்பு மாறமாற நழுவிநழுவி யெத்தனையோ சென்மாந்தத்தில் நிலையுறும். அதுவும், சில

வணம், மனனம், நிதித்தியாசனம், சமாதி, சாட்சாத்காரம், என வைந்து பாகமாம். இவற்று ளொவ்வொன்று மனந்தபிறவிகளி னிலைத்தலரிது, இவ் வைந்தும் வாய்க்கினும், சகசசமாதி கைகூடலரிது, இது கைகூடல்வலையு மெத்தனையோ சென்மங்கள் வந்து வந்து போகும், கைகூடினும் சொரூப சமாதியுஞ் சகசசமாதியு மேகமாதலரிது, அதுவு மெத்தனையோ பிறவிகளில் கைகூடலரிது, அங்ஙனங் கைகூடலன்றே முத்தி ; இம்முறையாக வரற் பால தாதலினுனும் விசேடபமாகிய மானதம் முத்தியிற் கூட்டுகிற்குமென முன்கவியிற் கூறினர் ; அதனை நிலையுறுத்த விக்கவியினு மிங்ஙனங் கூறினு ரென்பதி லையமென்னை? பொய்யே மெய்யை விளக்குவிக்கு மென்றதற் கெடுத்துக்காட்டிய வுவமானத்திற் பழுதெனனை? ஞாயஞ், சோதனை, பொருத்தம், இனையவுனைக் கேட்டறியாத வட்டுஞானிகளாற் பழுதுறினது பழுதன்று. இதனைச் சிந்தித்துத் தெளிக. மயங்கற்கவென்பார் நிருவாண நிலை மெய்யாமேயென்றார். இங்கே சிங்கமென்றது, விருத்திஞானத்தை. நிர் வாண நிலையென்றது, ஞானஞ்ஞானரகித நிலையை. என்னை? "வாலமதி யூகமதி போன்ஞான வஞ்ஞானக் காலமுநாங்கண்டு கழித்தோமே." என்றார் சொரூபஞானதேசிகர். கந்தரனுபூதியில், "குறியைக் குறியாதகுறித் தறியு" மென்னுங் கவியில். "அறிவற் றறியா மையுமற் றதுவே" யென்று ரருண கிரிநாதர்.

(க-து.) பொய்யைப் பொய்யாற் கெடுக்கலாமென்பது. (நிசு)

நிள - கவி. அ - கை.

[பொய்யைப் பொய்யாற் கெடுக்கலாமென்றதை வலியுறுத்த இன்னுந் திருவுடாந்த தாவுடாந்தங்களி யிக்கவியிற் கூறுகின்றார்.]

இம்பரி னஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யு
மம்பினை யம்பாற் பற்று மழுக்கினை யழுக்கான் மாய்ப்பர்
வம்பியன் மாயை தன்னை மாயையான் மாய்ப்பர் பின்னைத்
தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே.

(இ-ள்.) இம்பரினஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யும், அம் பினை யம்பாற் பற்று மழுக்கினை யழுக்கான் மாய்ப்பர், எ - து. இவ்வுலகத் தில் விஷத்தை விஷத்தினுனும், இரும்பை யிரும்பினுனும், பிரயோகிக்கின் ற அம்பை யம்பினுனும், படிந்த வழுக்கை யழுக்காலு மாய்த்துவிடுவர். (அதுபோல):—வம்பியன் மாயை தன்னை மாயையான் மாய்ப்பர், எ - து. நிலையின்மையையே யியல்பாகவுடைய மாயையென்பதை நிலைமையையே யியல்பாக வுடைய மாயை யென்பதினுற் கெடுப்பர்:—பின்னைத் தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே, எ - து. அங்ஙன மாய்த்த பின்னர் நிலையான வந்த மாயையும் நிலையற்ற மாயையோ டொக்கும் பிரா

தத்தைதத் தகிக்கச்செய்கின்ற தடியுமுமுடிவி லப்பிரோதத்தோ டொக்க நீமுவ தெங்ஙணமோ வங்ஙண நாசமாம், எ-று.

விஷத்தை விஷத்தாற் கொல்லல், இரும்பை யிரும்பா லறுத்தல், அம்பை யம்பாற் றடுத்தல், அழுக்கை யழுக்காற் கெடுத்தல், என்னு மதுதற்குரிய சிறப்புவினைகளை மாய்த்தலென்னும் பொதுவினையான் முடித் தது, விதிபற்றி யென்க. என்னை, "வேறுவினைப் பல்பொரு டழுவிய பொ துச்சொலும், வேறவற் றென்னுமோர் பொதுவினை வேண்டும்." என்னுர் பவனேந்தி. வம்பென்பதற் கொழுங்கின்மை யெனப் பொருடந்து கூறினு மமையும். ஒழுங்கின்மையாவது ; பொருளல்லவற்றைப் பொருளாதக் கோடல். இதனுலசுத்தமாயையெனவும், ஒழுங்கின்மையென்றதனு லொ ழுங்குண்மையெனக் கொள்ளக்கிடந்தது. அதாவது; பொருளைப் பொரு ளாகக்கோடல். இதனுற் சுத்தமாயையெனபும் பொருடரு நின்றது. நிற்க வே, விகோதபமானதமென்றுயிற்று, ஆகவே, மானதம் மாயாகாரியமாயினு மிங்கே காரியத்தைக் கர்ணமாக வுபசரித்துச் சுத்தமசுத்தமென விரண் டாக்கிக் கூறியதாகப்பெற்றும். மாயையென்பது; புத்திவிகற்பமே மாயை யாதலி னசுத்தமெனவும், நிர்விகற்பமே யஃதல்லாமையிற் சுத்தமெனவுங் காணக்கூறினர். ஒன்றை யொன்றுகக்கொள்வது, மனதாதலா லந்தமனதே யுள்ளதை யுள்ளதாகக் கொள்ளுமன்றே; இதனல் மனதுக்குப் பகிர்முக திருஷ்டி யந்தர்முக திருஷ்டி யெனப்பெற்றும், பெறவே, பகிர்முகதிருஷ் டியை யந்தர்முகதிருஷ்டியாற் கெடுத்தது மனமாதலாலும், மனதையன்றி யிக்கிரியை யில்லாமையாலும், இக்கிரியையை வினைமுதலாக்கி மனத்தை யடக்க மனந்துணை யாகுமென்றுர் சான்றேர்பலரும். அதுபோலவே யிந் நூலாசிரியரு மதற்கியைந்த உபமானங்களாலே யக்கருத்தையே கூறின தாகக் கண்டாம். தனது புடைபெயர்ச்சி பேதத்தாற் ருனிரண்டெனப் பட்டதேயன்றி வேறேர்காரணத்தா லன்றுமையின் மனதொன்றேயாம். எங்ஙனமெனில் ; ஒருவனுக்கே, தஷ்டனென்றும் பின்னர் யோக்கியனென் றும் வந்தது, அவனது சேட்டையாலன்றி யவ னிரண்டல்லன், அக்கிரியை யால், தஷ்டன் யோக்கியனென் றிவனுக் கெங்ஙனமாயிற்றே; அதுபோல, மனதுக்கும் வந்ததென வுணர்க. இங்ஙன முணர்தாற்றா னெங்ஙனந் தெளி வர். இது ஒருவன் தன்னைத்தானே யோக்கியனுகத் திருத்திக்கொண்டாற் போலும். ஆதலின் மாயைதன்னை மாயையால் மாய்ப்பனெனவும், பொரு ளல்லவற்றைப் பொருளெனவுணர்தல், மயக்கம். பொருளைப் பொருளென வுணர்தல், தெளிவு. மயக்கத்தைக் கெடுக்கவெழுந்தது தெளிவாதலா லது மாய்ந்தபின்னர் தானு மொக்க மாயுமன்றே ; அதுபற்றித் தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே யெனவுங் கூறினர். மருளுந் தெரு ளுந் தானல்ல. தன்னைத் தவிரவு மில்லை. தெருளறிந்தவிடத்துந் தானறி யாததா லதனைச் சூனியமென் றெண்ணற்க. இங்கிலை தானென்றுணர்க்கற் கெனவுணர்க. அஞ்ஞானமே தானென் றிருந்தாற்போல, ஞானமே தா

னென் றிருந்தால் தாளுகுமா, இரண்டுந் தானல்லவெனக் குறிக்க விங்ங னங் கூறினர். இது மனனத்தாலன்றித் தெளிவுபெறச் செய்யாது. இதைப் பதவுரையாக வாசித் தென்பயன்? சொல் வெள்ளை, விடயம் வெள்ளையோ ஆழமாழமாதலி னெனவுணர்க. (நஎ)

நுஅ - கவி. அ - கை.

[இவ்விரு மாயையுஞ் சீவர்களிடத் திருப்பதைக் காட்டச் சித்தாவத்தைகளைத் தொகையாக விக்கவியிற் கூறுகின்றார்.]

இந்தமா யையினற் சீவர்க் கேழவத் தைகளுண் டாகு
மந்தவே ழவத்தை தம்மை யடைவினின் மொழியக் கேளாய்
முந்தவுஞ் ஞான மூடன் முனைத்தல்கா ணுத ஞானஞ்
சந்ததங் கண்ட ஞானந் தழல்கெடல் குளிர்மை யாதல்,

(இ - ள்.) இந்தமா யையினற் சீவர்க் கேழவத் தைகளுண் டாகும், எ-து. சுத்த மசுத்தமென்னக்கூறிய விவ்விருமாயையினல், சீவர்களுக் கேழ வத்தைகளுண்டாகும்:—அந்தவேழவத்தை தம்மை யடைவினின் மொழியக் கேளாய், எ - து. அந்த வேழவத்தைகளையுங் கிரமமாக யாங் கூறக் கே ளுதி:—(அவை) முந்தவுஞ் ஞான மூடன் முனைத்தல் காணுத ஞானஞ் சந் ததங் கண்ட ஞானந் தழல்கெடல் குளிர்மையாதல், எ – து. முதலிலுள்ள அஞ்ஞானமும், ஆவரணமும், விக்ஷேபமும், பரோட்சமும், அபரோட்ச மும், தூக்கநிவிர்த்தியும், தடையற்ற வானந்தமுமாம், எ-று.

அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேப, மிவைமூன்று மசுத்தமாயை. பரோ ட்சம், அபரோட்சம், தூக்கநிவிர்த்தி, தடையற்றவானந்தம், இவை நான் குஞ் சுத்தமாயை. அவைமூன்று மசுத்தத்துக் கியல்பு. இவை நான்குஞ் சுத்தத்துக் கியல்பு. அசுத்தம், பந்தம். சுத்தம், முத்தி. எனவே, இவ்விரு தகையாயதும் மாயையென லேற்கப்பெற்றும். வரம்புடையது, வேதாந் தம். ஏலைய, பிற. (நஅ)

நுக - கவி. அ - கை.

[அவ்வவத்தைகளை, வகையாகக் கூறப்புகுந்தாரிக்கவியில் அஞ்ஞானமுதல் பரோட்சமீறாயுள்ள நான்கினையுங் கூறுகின்றார்.]

பிரமமாந் தனைம றந்த பேதமை யேயஞ் ஞானம்
பரவிலை காணு மென்று பகர்தலா வரண மூட
னரனெரு கருத்தாற் சீவ னெனென முனைத்த றேற்றங்
குரவன்வாக் கியத்தாற் றன்னைக் குறிக்கொளல் பரோட்ச ஞானம்.

(இ-ள்.) பிரமமாந் தனை மறந்தபேதமையே யஞ்ஞானம், எ-து. பிரமஸ்வரூபமாகிய தன்னை மறந்த மறதியே யஞ்ஞானமெனப்படுவதாம்:—பரநிலை காமேணை மென்று பகர்தலா வரண மூடல், எ-து. பிரமசொரூபத்தினிலை யெங்ஙனமாயதோ வதனைக் கண்டுலமே பிருந்தாற் காணுதாவெனக் கூறுதல் ஆவரணமெனப்படுவதாம்:—நரனெரு கருத்தாற் சீவ னெனென முனைத்த றோற்றம், எ-து. புருட னேர்வித நினைவாற் சீவனே நானெனக் கோடல் விக்ஷேபசத்தியெனப்படுவதாம்:—குரவன்வாக் கியத்தாற் றன்னைக் குறிக்கொளல் பரோட்ச ஞானம், எ-து. ஞானசிரியர துபதேசமொழியால் தனதுண்மைவடிவ மினையதெனக் குறியாது குறித்துக்கோடல் பரோட்ச ஞான மெனப்படுவதாம், எ-று.

சைதன்யத்தை யன்றித் தனக்கோர் சொரூபமின்மையின், பிரமமாந் தனெயெனவும், நாஸ்தி நபாதி யென்பது தோன்றப் பரநிலை காமேணை மென்று பகர்தலெனவும், இங்கே நரனென்பது புருடன். புருடனென்பது; உடல்தோறு நின்றுணர்வான். அவன் தேகமன்று தேகி. அவனுக் கெவ்வுடலுஞ் சுதந்தரமன்று, ஆதலிற் பிரத்தியேகாத்மா. இவ்வாத்மா, உணர்தல் தகையதாதலி னறிவு. இவ்வறிவே புருடசத்தத்துக் கியைந்ததன்றி வேறு பொருளன்மையி னிதுமறுக்கற்பாற்றன்று. காரறுத்தானென்னு மாகுபெயர் போல்வதின் மனிதனெனக் கோடற்கவென்பார், நரனெனவும், இந்த வறிவாகிய புருடன் தன்னை மறந்துழிச் சார்பினையதெனத் தெரியாது தத்தளிக்குங்கா லிது நானெனற்குத் தூலதேகம் சேரிட்டதா லிதனைக் கோடல் சீவனெனவும், இஃதோ ரவசரமாதலி னெருகருத்தாலெனவும், நியதிகளைந்த விடத்தி லாசிரியர் நீயறிவென் றுணர்த்த லுபதேசமாயினு மின்னும் வினங் காமையிற் பரோட்சமெனவுங் கூறினர்.

(சுஅ.) தன்னை மறந்தபேதமை யஞ்ஞானம். அப்பேதமையை மறந்தபேதமை, யாவரணம். அப்பேதமைகளைக் கெடுத்தற் கொருவாறு தனக்குளெழுந்த மூடஸ்புரிப்பு, விக்ஷேபம். இதனை வினக்கக் குருவாலெழுந்த விசாரஸ்புரிப்பு, பரோட்சம். எ-து. (சுக)

சுஅ - கவி. அ - கை.

[ஏனைய வபரோட்சம் தக்கநிவிர்த்தி தடையற்ற
வானந்தமென்னு மூன்றையு மிக்ககவியிற்
கூறுகின்றார்.]

தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேக மும்போ
யத்துவி தந்தா னுத லபரோக்ஷ ஞான மாகுங்
காத்தனுஞ் சிவ பேதங் கழிவதே தக்கம் போதன்
மூத்தனு மெல்லாஞ் செய்து முடிந்ததா னந்த மாமே.

(இ - ள்.) தத்துவ விசாரஞ் செய்து சகலசந்தேகமும்போ யத்துவிதர் தா ஞத லபரோகஷ ஞான மாகும், எ-து. தத்தெனல் யாது, துவமெனல் யாதெனச் சிரவண மனனநிதிகளாற் றக்கோர்பால் விசாரணைசெய்து அவ் வவற்றிலுள்ள சகலசந்தேகமு நீங்கி யசியென்னும் பதத்திரு லத்துவிதமா கிய வைக்கியநிலை தாணுக்விளக்க லபரோகஷஞான மெனப் படுவதாம்:— கர்த்தனுஞ் சிவ பேதங் கழிவதே துக்கம் போதல், எ-து. தானலதைத் தா னெனற்குக் கர்த்தத்துவ நின்றுள்ள சிவ னனந்தபேத சராசரமாக்காண் டலி னந்தச்சிவபேதங்க ளொக்கநசித்தலே துக்கநிவிர்த்தி யெனப்படுவ தாம்:—முத்தரு யெல்லாஞ் செய்து முடிந்ததா னந்த மாமே, எ-து. சீவன் முத்ஞய்ப் ஞானஞ்ஞான சாதனக்கிரியைக ளனைத்தையுஞ் செய்துமுடிந் தசே தடையற்றவானந்த மெனப்படுவதாம், எ-று.

நிருபாதிகமாக, தத், அது ; துவம், நீ ; யெனப்பிரித்து, அசி, ஆஞய் எனக்கொண்டு அவ்விருபதங்கட்கு மிடையில் தேற்றேகாரம் வருவித்து,அது, பரம்; நீ, சீவன் என்றுக்கி, பரமே சீவன் ; சீவனே பரம் என்றைக்கியங் கோடற் காஞயென்பதனை யிவற்றோடுசேர்த்து, அதுவே நீயாஞய், நீயே யதுவாஞயெனத் தெளிந்து தான் துவிதமற விளங்கலே, அபரோகஷஞான மெனவும், அவ்விளக்க மேலிடமேலிடப் பழய வாசஞத்துவிதங்களஞ வஞுவாக் கழியும், கழியவே,சமஸ்தமுஞ் சின்மாத்திரமாக விளங்கும். விளங் கவே, அன்னியமென்ப திறந்துபோம். இறக்கவே, திணைபாலிடமெனற்கிட மின்றும். இன்றுகவே, காமாதிகளின்றும். இன்றுகவே,மான தமென்பதின் றும். இன்றுகவே, யாதொரு துக்கமு மெங்ஙனமெழும். எழுதற் கிடமின் மையைத் துக்கம்போதலெனவும், அத்தத்துக்கநிவிர்த்தி மேலிடமேலிட அஷ்டவிதானந்தத்து ளொவ்வொன் றனுபவத்துக்கியைந்த வவசரவாறு தோன்றித் தோன்றி யடங்கும், அடங்கவே, இத்தடைகளிறந்த வானந்த மதாம்.ஆகவே, தானே சச்சிதானந்தமாம். இங்ஙனமாதலே யானந்தமாமென வுங் கூறினர். இரட்டுறமொழிதலென்னுமுத்தியால் தத்துவம், உண்மை. ஞானத்தைத்தவிர வுண்மை யெங்கனு மின்றுதலால், தத்துவ மெனற்கு ஞானமெனப் பொருள்கொண்டிக்கவிக் குரைசெயின் முரணுதலையும். சத னென்பதற்குச் சிவன் வேறுதலின், சிவன், சதனெனப் பேதங் கற்பித்தற் குச்சிவபேதமென்று ரைனுமமையும்.எல்லாஞ்செய்து முடிந்ததெனக்கவி யிருத்தலி னதனை யானந்தமென்பதற்கு விசேடணமாக்கி,முத்தனென்பதற் குக் கிருதநிர்த்தியனெனப் பொருளிருப்பினு மங்ஙனங்கூறுதல், கூறியது கூறலென்னுங் குற்றமாம். அங்ஙனம் வராமைக்குச் சிவன் முத்தனெனப் பொருடந்தாம்.

(க - து.) அங்ஙனமெழுந்த விசாரஸ்புரிப்பே சொப்பிரகாசமாக விளங் கல், அபரோகஷம். அங்ஙனமெழுந்த விளக்க மேலீட்டால் பசு பந்தி பாசஞ் சின்மாத்திரமாக விளங்கும். விளங்கவே, மலைவிர்க்கிக் கிடமின்றும். இன்

ரூதலே, துக்கநிவிர்த்தி. இந்தத் துக்கநிவிர்த்தியே யளவிலின்பமாதலி னிது வே தலையற்றவானந்தம் என்பது. வியட்டியுபாதி யளவாத் தன்னைக்கா ண்டல், சீவபேத மெனினு மமையும், என்னை? "பொன்று மூடம்பன வாகி யிருப்பாரும் பூசுர ராவார்களோ, என்று முளவறி வானவ ரன்றே விருபிறப் பான ராவார்." என்றார் தத்துவராயர். சீவபேதத்தா லீசுரபேதம், சாட்சித் துவிதபேதம், எகவாதம் உண்டாக லாயிற்று. சுசாதிமுதலிய மூன்று மின்மையே யபரோகஷமென்பது. (சுo)

சுக - கவி. அ - கை.

[இவ்வேழவுத்தையையு மையமின்றி யேற்கத் திருஷ்டாந்தமாகத் தசபுமான் கதையை யிக்கவியிற் கூறுகின்றார்.]

இதுனைக் கறியும் வண்ண மிப்படி யொருதட் டாந்தம்
புதுமையாங் கதைகேள் பத்துப் புருடரோ ராற்றை நீந்தி
யுதகதீ ரத்தி லேறி யொருவனென் பதுபே ரெண்ணி
யதனெடு தான்பத் தானென் றறியாமன் மயங்கி நின்றான்.

(இ - ன்.) இதுனைக் கறியும் வண்ண மிப்படி யொருதிட் டாந்தம் புதுமையாங் கதைகேள், எ-து. இந்த வேழவுத்தையினிலே யின்னு முனக்குவிளங்கும்படி யிதேபிரகாரமாகத்தெரிவிக்கத்தக்க புதுமையான தசபுமான்கதை யொன்றுண்டு, அதனைத் திருட்டாந்தமாகக் கூறுகின்றேன் கேளுதி:— (அதாவது) பத்துப் புருடரோ ராற்றை நீந்தி யுதகதீ ரத்தி லேறி, எ-து. பத்துப்பே ரொருங்கே யோர்நா ளாழமுள்ள வோராற்றை நீந்தி யக்கரைக் கணையிலேறி:—ஒருவனென் பதுபே ரெண்ணி, எ-து. அப்பதின்மரு ளொரு வனென்பது பேணாயெண்ணி:—அதனெடு தான்பத்தானென் றறியாமன் மயங்கி நின்றான், எ-து. அந்த வெண்ணிக்கையோடே, தான் பத்தாவது புருடனென் றெண்ண வகையறியாமல் திகைத்து நின்றனன், எ-று.

நீந்தியென்பதனல், ஆழமுங் காலமும் வருவித்தாம். (சுக)

சுஉ - கவி. அ - கை.

[இக்கதையைப்போல வவ்வேழவுத்தைகளையுந் தனித்தனிக் காட்டப்புகுந்தா ரிக்கவியில், அஞ்ஞானமுதல் பரோகஷ மீறுகான்கினையுங் கூறுகின்றார்.]

அறியாத மயலஞ் ஞான மவனிலை காணே மென்னல்
பிறியாவா வரண மாகும் பீடைகொண் டழல்வி க்ஷேபம்
நெறியாளன் றசம னுண்டு நிற்கின்ற னென்ற சொல்லைக்
குறியாக வெண்ணி நோக்கிக் கொள்வது பரோகஷ ஞானம்.

(இ - ன்.) அறியாத மயலஞ் ஞானம், எ-து. அங்ஙனந் தசமனைக் காணுதம்மயக்கம்போல்வது அஞ்ஞானமாம்:—அவனிலை காணே மென்னல்

பறியாவாவரண மாகும், எ-து. அவனில்லவே யில்லை யிருந்தாற் காணுனு அதனு லவனைக் காணுமென்பது போல்வது அகலாத வாவரணமாம்:—மீடைகொண் டழல்விசேஷபம், எ-து. விசனமுற் றழுதல்போல்வது விசேஷபமாம்:—நெறியாளன் றசம னுண்டு நிற்கின்று னென்ற சொல்லை, எ-து. அவ்வழிச் செல்வோனெனுவ னிம்மடமையைக்கண் டிதென்ன வதிசயம். பத்தாவதுபுருட னிருக்கிறான் அவனியாக நிற்கிறுனென்று சொல்ல அச் சொல்லை:—குறியாக வெண்ணி நோக்கிக் கொள்வது பரோக்ஷ ஞானம், எ-து. ஓர் குறியாக நினைத்து அவனிருக்கின்றுனென மதிப்புறுவதுபோல் வது பரோக்ஷஞானமாம், எ-று.

உண்டென்பதே சாலும், நிற்கின்றுனென மிகைபடக் கூறியதனுல் நீயாக நிற்கின்றுனென வுணாகொண்டாம். இக்கவியும் பின்கவியு மெடுத்துக் காட்டுவமை. (சுஉ)

சுஉ - கவி. அ - கை.

[இக்கவியி லேனைய மூன்றினையுங் கூறுகின்றார்.]

புண்ணிய பதிகன் பின்னும் புருடரொன் பதின்மர் தம்மை
யெண்ணிய நீபத் தாவா னென்னவே தன்னைக் காணல்
கண்ணினிற் கண்ட ஞானங் கனைதல்போ வதுநோய் போத
றிண்ணிய மனதி லேயந் தெளிதலா னந்த மாமே.

(இ - ள்.) புண்ணிய பதிகன் பின்னும் புருடரொன் பதின்மர் தம்மை யெண்ணிய நீபத் தாவா னென்னவே, எ-து. புண்ணியமான விரக்கருணை முள்ள வந்நெறிச்செல்வோன் மீண்டு மவ்வொன்பதுபேரையு மவனைக்கொ ண்டே யெண்ணச்செய்து, இங்ஙன மெண்ணிய நீபத்தாவதுபுருடனன்றே வுன்னையேனெண்ணுது விட்டுவிட்டனை யென்றதட்டி வினவ,வினவவே:—தன்னைக் காணல் கண்ணினிற் கண்ட ஞானம், எ-து. தன்னைத்தா னெண் ணிப் பிரத்தியட்சமாகக் காணல்போல்வது அபரோட்சஞானமாம்:—கனை தல்போ வதுநோய் போதல், எ-து. காணுமென்ற துக்க நீங்கல்போல் வது துக்கநிவர்த்தியாம்:—நிண்ணிய மனதி லேயந் தெளிதலா னந்தமாமே, எ-து. தன்னைத்தான் கண்டதினுல் திடமுற்ற மனதின்கண் சந்தேக நீங் கித் தெளிதல்போல்வது தடையற்றஞானந்தமாம், எ-து.

விடயகதப்பிரத்தியட்சம் ஞானகதப் பிரத்தியக்ஷமெனக் கோடற் கையந்த பிரத்தியக்ஷப்பிரமாணம் அஷ்டவிதப்பிரமாணத்து ளொன்று. இங் ஙனமிருக்கப் பரோக்ஷஞானத்தை யபரோக்ஷ ஞானமென வெண்ணிச் செருக்குறுவோனை மறுக்கக் கண்ணினிற் கண்டஞான மென்றார். சந்தோஷ வெழுச்சி ஐயந்தெளிதலேயெனக் குறிப்பிக்கச் சுருக்கினர். பழுதை யெனக் கண்ணுற் காணுக்காறும் பாம்பென்னுந் திகி லெங்ஙன மகலும்;அக லாக்காறும் பயகம்பனுதிக ளெங்ஙன மகலும், அதுபோலத் தானறிவு னைக் கண்ணுற் காணுக்காறும் பாசமென்னுஞ் சோகமெங்ஙன நீங்கும், நீங்

காக்காறு மல்ல லெங்ஙன நீங்கும்? ஆதலின் ஞானகதப் பிரத்தியட்ச மின்றி யமையாது, நெருப்பென வாயாற்கூறிற் சமைக்கவொண்ணாது. நீப மெனக்கூறி விருணீங்காது. இதுபற்றியே வேதமுஞ் சான்றோரு மினையர் தனர். கண்ணினிற் கண்டஞான மபரோக்ஷமெனவே, யேனையவை ஞானம ன்றுயிற்று. ஞானமெனின்றிரிபுடி யகன்றிருண்டோ? உண்டெனின் சுசாதி விசாதி சுகதபேத மகலாததற் கேதென்னை ? முரணும். விளங்கினேரும் நவநவவினேதவழியாக வதிற் பராக்காகச் சென்றனர். செல்லா தவ்வினக் கத்தையே கைப்பற்றி யவ்வினேதங்களை யெல்லாம் ஞான கற்பிதமென் றுணர்ந் தவ்வழி மருளா தவற்றை யெரிப்பவ னத்துவிதியொருவனே யென் பதுதோன்ற, அபரோக்ஷத்தைக் கண்ணினிற் கண்டஞான மென்றார். பெரு குமாதலிற் சுருக்கியுரைத்தாம். தாவ்டாந்தத்திற் பதிகன், ஆசான். தசமன், ஆன்மா. ஒன்பதுபேர்; விசுவன், தைசதன், பிராக்ஞன், வைசுவாநரன், சூத்திரான்மா, அந்தரியாமி, சிற்சொலிதை, பொற்புவிசாந்தன், பிரசாபத் தியன் என்பன. (கூ)

சூ - கவி. அ - கை.

[தசபுமான் தன்னைத்தான் கண்டதுபோல - யானுமென்னை யான் காணத் தெரித்தருள வேண்டு மென்ற மாணாக்கனுக் குச்சாம்வேத மகாவாக்கியங் காரணமாக விக்கவியி லனுக்கர கிக்கப் புகுகின்றார்.]

தெசபுமான் றனைக்கண் டாற்போற் றேசிக மூர்த்தி யேயென் னிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டு மென்றான் சுசிபெறு மிலக்கி யார்த்தந் தொம்பதந் தற்ப தங்க ளசிபத மயிக்கியஞ் செய்யு மதிசய வுண்மை கேளாய்.

(இ-ள்.) தெசபுமான் றனைக்கண் டாற்போல் தேசிக மூர்த்தி யேயென் னிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டு மென்றான், எ-து. பத் தாவான் தன்னைத்தான் கண்டதுபோலச் சற்குருநாதனே யெனதெதார்த்த வடிவத்தை யான்காண நீர் காட்டவேண்டுமென்றான்:—சுசிபெறு மிலக் கியார்த்தந் தொம்பதந் தற்பதங்க ளசிபத மைக்கியஞ் செய்யு மதிசய வுண்மை கேளாய், எ-து. உனதெதார்த்தவடிவை விளக்கத்தக்கது வாச்சி யார்த்தம், லட்சியார்த்த மென்பவற்றுள், லட்சியார்த்தம். இத்தப் பரிசுத்த மான லட்சியார்த்ததனைப் பற்றித் தத்வமசி யென்னு மூன்றுவது மகா வாக்கியத்தைத் தொம்பதந் தற்பத மசிபதமென மூன்றாக்க, அதலைாய மூப்பதங்களுஞ் சிவேச ரோகமென வைத்தியஞ் சாதிக்கும். அங்ஙனஞ் சா திக்கு மற்புதமான வுண்மைநிலையை யாங்கூறக்கேளுதி, எ-று.

என்னிசவடிவென யான்கொண்டவைகனேயெல்லா மன்றென மறுத் தன்மசி னிங்ஙனம் விரவியதென்க. இனியன்றே மறுக்கப்போவது, மறுத் தற்காக விருந்தகாலத்தாற் கூறிய தென்னையெனின், முன்னர், தேகமல்லா

மல் வேறே தேகியார் காணே னென்ற் யென்னுங் கவியிலும், நனவுகண். டதுநான் கண்ட நனவுள நினைவு நீங்கி யென்னுங் கவியிலும், பொதுப்பட நியதிகளைத்து காட்டியதா லிங்ஙனந் தானனைத்துமாமெனக் கருதிக் கேட்ட தென்க. யானறியவெனின் பாவனையாமெனக் கருதி யான்காண வென்றது. காணவென்னுந் தனிவினைக்குக் காட்டல் பிறவினை. இந்தப்பிறவினை யை யவர்பால் வைத்தது சொல், குணம், குறிகளா லன்றெனற்கு. இதெல் லாஞ் சைக்ஸரு. இந்தச் சைக்ஸரூபமே யாசிரியராதலின் காட்ட வென்றுங் கூறினான். சுசிபெறு மிலக்ஷ யார்த்த மென்றது, வாச்சியார்த்த மசுசியெனற்கு. இலக்ஷியார்த்த மென்றதனாலும், ஐக்கியமென்றதனாலு மிங்கே தற்பத தொம்பதார்த்தமென்றது ; கூடஸ்த பிரமத்தை. காணுமற் காணல், காட்டாமற்காட்டலென்னுமனுபூதியிருத்தலி னிஃது மறுக்கற்பாற் றன்று. இவன் கல்விஞானத்தில் மிக்கோனென்பது இவன் விஞவாலறிக. சுருதி யுத்தி யனுபவமென்னு மூன்றனுள், சுருதிபூர்வமா வுணர்த்தப் புகுத லுக் காட்டத், தத்வமசியென்றார். இஃதுபதேசத்துக் கியைந்த வாக்கியம். தொம்பதத்தை முன்னர்க்கூறியது, முந்திதன்னை விளக்கற்கு. (சுச)

சுரு - கவி. அ - கை.

[இந்தமகாவாக்கியம் முப்பதத்தா லுணர்த்துவதைத் திருஷ் டாந்தபூர்வமாகக் கூறப்புகுந்தா ரிக்கவியில், ஆகாயத்தைப் போலச் சைதன்யம் நான்காயிருப்பதைக் கூறுகின்றார்.]

விண்ணெனேறே மகாவிண் ணென்று மேகவிண் ணென்றும் பாரின் மண்ணென்ற கடவின் ணென்று மருவிய சலவின் ணென்று மெண்ணுங்கற் பனைபோ லொன்றே யெங்குமாம் பிரம மீச ணெண்ணுங்கூ டஸ்தன் சீவ னென்குசை தன்ய மாமே.

(இ-ள்.) விண்ணென்றே மகாவிண் ணென்று மேகவிண் ணென்றும், எ-து. ஆகாயமொன்றே மகாகாயமென்றும், மேகசலப் பிரதிபிம்பாகாய மென்றும்:—பாரின் மண்ணென்ற கடவின் ணென்று மருவிய சலவின் ணென்று மெண்ணுங்கற் பனைபோல், எ-து. உலகத்தில் மண்மயமென்ற் குரியகடத்திலிருப்பதைக் கடாகாயமென்றும் அக்கடசலத்திற்றோற்றுவதைக் கடசலப் பிரதிபிம்பாகாயமென்றும், நினைக்கத்தக்க விபரீதமா யிருப்பது போல:—ஒன்றே யெங்குமாம் பிரம மீச ணெண்ணுங்கூ டஸ்தன் சீவனென்கு சைதன்யமாமே, எ-து. ஏகசைன்தயமே, பரிபூரணப் பிரமமெனவும், ஈச னெனவும், நிரந்தரமாயுள்ள கூடஸ்தனெனவும், சீவனெனவுங் கற்பிதமாக நான்குசைதன்யமா யிருக்கின்றது, எ-று.

கடசலவிண்ணென்றதனால், மேகசல விண்ணெனக்கொள்க. ஏகாகாயத் துக்கு நான்காகாய மெங்ஙனமோ, அங்ஙன மேகசைதன்யத்துக்கு நான்கு சைதன்ய மிருத்தலி னிவ்வுவமை பொருந்தும். நான்கு சைதன்யமா

மென்றதனால், ஒன்றேயென்பதை யேகசைதன்யமென்றும். நிலையன்றி யொருநாளெனற்குப்பொருள்வேறில்லை. இல்லையாகவேசமஸ்தமும்நாளென லெல்லா மறிவையன்றி வேறுருகுமோ; ஆகுமெனிற், சோதனையிற் புகுதும். புகுதற்கு வலியின்றேல் வாய்பொத்திக் கிடக்கை நன்று. உபாதிகுண பேத மாயினுஞ் சலபேதமுண்டோ; அதுபோல வுபாதி குண பேதமாயினு மறிவு பேத முண்டோ. உண்டெனி னெந்தநாளுக் கெப்பிறவி சுதந்தரம். இன்றே லெந்தத் தினை பா லிடஞ் சுதந்தரம். சுதந்தரம்போற் காண்டலே யன்றி யாது முடன்பாடன்று. இங்ஙன மெல்லாவறிவுமாறு லொன்றே பலவோ; ஒன்றெனிற் பலவாகாதிருக்கவேண்டும். பலவெனினுபாதிகுணந்தானுக வேண்டும். இருமையு மன்றெனில், சாயாதிருக்கவேண்டும். அதுதானும் பல வாகத் தோற்றலின், ஒன்றே நான்கு சைதன்யமாமே யென்றார்.

(க-து.) இந்த வேகசைதன்யம் சமஷ்டி வியஷ்டி சங்கதத்தாற் சிவேச ரெனவும், சங்கதத்தாற் கூடஸ்த பிரம மெனவுங் காணு மாதலி னான்கு சைதன்னியமெனல் கூடுமென்பது. சோதனை ஞாயந் தெரியாதா ரிதனை மறுத்தென் ?

சூசூ - கவி. அ - கை.

[அந்தழுப்பதங், காரணமாக நான்கு சைதன்யத்திற்கும் வாச்சி
யார்த்த லட்சியார்த்த மினையவென
விக்கவியிற்கூறுகின்றார்.]

பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டி னுக்கும்
வாச்சிய மிலக்கி யந்தான் மலமிலாப் பிரம மான்மா
காய்ச்சிய பாலி னெய்போற் கலந்தொன்றாங் கடைந்தெ டுக்கு
மாச்சிய மென்ன வுண்ணை யறிந்துநீ பிரிந்து கொள்ளே.

(இ-ன்.) பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டினுக்கும் வாச்சியம், எ-து. வெறும் பெயர்மாத்திர வடிவாயுள்ள சிவேசர்கள் முன்னர்க் கூறிய தத்துவமென்னு மிருபதங்கட்கும் வாச்சியார்த்தமாம்:—இலக்கி யந்தான் மலமிலாப் பிரம மான்மா, எ-து. மலரகிதமான கூடஸ்தன் பிரம மிரண்டு மிலக்கியார்த்தமாம்:—காய்ச்சிய பாலி னெய்போற் கலந்தொன்றாங், எ-து. காய்ச்சின பாலின்கண் வெண்ணெ யெங்ஙனம் வேற்றுமையின்றி யபேத மாக் கலந் தொன்றாயிருக்குமோ, அதுபோல, வாச்சியார்த்தத்தி லிலக்கி யார்த்தம் வேற்றுமையின்றி யபேதமாகக் கலந்தொன்றாயிருக்கும்:—கடை ந் தெடுத்த மாச்சிய மென்ன வுண்ணை யறிந்து நீ பிரிந்து கொள்ளே, எ-து. அங்ஙன மிசிரிம்பித்த வெண்ணெயை மாத்திரங் கடைந்தெடுக்குமாறு போன்று வாச்சியார்த்தத்தில் மிசிரிம்பித்திருக்கின்ற வுனதுதாரத்த சொ ரூபத்தை மாத்திரந் சிரவண மனனநிதி தியானங்களா லெய்திரிபதச் சிந்தித் துணர்ந் தக்கற்பனைகளினின்று பிரத்தியேகமாக நீக்கி, எ-து.

அவனதுகாரியம் பூச்சியமாயிற்றென்னு முலகவழக்கத்தில், பூச்சியம்-வெறுமையைத் தராநின்றது. பொன்னையன்றிப் பணிக ளெங்ஙனமோ வங்ஙனஞ் சாட்சியையன்றிச் சிவசேசர் தோற்றன்மாத்திரமா யிருத்தலின் பூச்சிய வீசன் சிவனெனவும், இவ்விருவரு முபாதி குணசகித கற்பிதராதலின் வாச்சியார்த்தமெனவும், பொன்போன்று பாரமார்த்திகமா யிருத்தலின் மலமிலாப் பிரம மான்மாவெனவும், இவ்விருசாட்சியு முபாதிரகித வதிஷ்டானமாதலி னிலக்கியார்த்தமெனவும், காய்ச்சிய பாலினெய்யென்றதனாற் காய்ச்சாத பாலினெய் சிறந்ததன்றெனக் குறிப்பிக்கின்றது. அதுபோல, ஐயந் திரிபற்ற வுணர்வு நிரதிசயானந்தோதயத்துக்கிடமாம். அரைதவுணர் வவ்வுதையித்துக் கிடமன்றும். கடைந்தெடாவிடத்தும் பாலாயினும் வெண்ணெய் மிசிரிம்பித்திருக்குமாறுபோன்று, ஆயாதவிடத்து மறிவாயினும் நிரதிசயானந்த மிசிரிம்பித்திருத்தலின் பாலினெய்போற் கலந்தொன்றுமெனவும், கடைந்தவிடத்தன்றி வெண்ணெயெழாததுபோல, ஐயந் திரிபறுவிடத் தானந்தமெழாது; ஆதலின், கடைந்தெடுக்கு மாச்சிய மென்ன வுன்னை யறிந்துநீ பிரிந்து கொள்ளே யெனவுங் கூறினர்.

(க-து.) வாச்சியார்த்தத்தை விட்டு லட்சியார்த்தத்தைப் பற்றுக வென்பது. இதைப்பற்றலே யகிபதார்த்தங் கைகூடல். தத் - ஈசன், துவம் - சீவன், அசி - பிரமம், இது வாச்சியார்த்தம். தத் - பிரமம். துவம் - கூடஸ்தன், அசி - ஐக்கியம், இது லட்சியார்த்தம்.

சூள - கவி. அ - கை.

[பிறிந்துகொள்ளும்வகை தெரிகிலனே யென்ற மாணாக்கனுக்காகிரியர்
தூலதேகமும் பிராணாதி வாயுக்களு நீயல்லை யென்
பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

பிறிவதெப் படியென் றக்காற் பிணமாகு மூடனை னென்னு
மறிவினைக் கொல்லல் வேண்டு மைம்பூத விகார மன்றே
வெறியதோர் கருத்தி லூச்சு விடுவது போல மூக்கா
லெறிபிரா ணனுநீ யல்லை யிராசத குணவி காரம்.

(இ - ன்.) பிறிவதெப் படியென் றக்காற் பிணமாகு மூடனை னென்னு மறிவினைக் கொல்லல் வேண்டு மைம்பூத விகாரமன்றே, எ-து. பிறிந்து கொள்ளும்வகை யெங்ஙனமெனக் கேட்பையாயின் சொல்லுதுங் கேளுநி; இனிப் பிணமாதற் கியைந்த தூலதேகத்தை நானென்னு மகங்காரமாகிய வறிவைக் கொல்லல் வேண்டும்; யாதினாலெனில், ஸ்தூல பஞ்சபூதாம்சையோக விகாரப்பொருளன்றிச் சுயம்பெனற்குப் பொருள் யாதானும் வேறுளதோ, ஆதலி னது நீயல்லை. ஆயிற் பிராணவாயு யாதுகல்வேண்டுமே யெனின்:—வெறியதோர் கருத்தி லூச்சு விடுவது போல, எ-து. உணர் விழந்ததாகிய வோர் கருத்தியானது காற்றை வாங்கி விடுவதென்னைமோ

வ்துபோல:—மூக்கா லெறிபிரா ணஞ்சீ யல்லை யிராசத குணவி காரம், எ-து. மூக்கினாற் காற்றை வாங்கிவிடுகின்ற தசவாயுக்களிற் சிறந்த பிராண வாயுவும் நீயல்லை ; யாதினாலெனி ,விராசதகுணத்தின் விகாரத்தா லாய தன்றோ ; சுயம்பன்றுதலிற் கூடாது, எ-று.

இருக்கும்போது கடைப்பிணமென்றும், இறந்தபோது கிடைப்பிண மென்றும் வழங்கலிற் பிணமென்றார். தனித்தனி சொல்லப்புகினு மல்லை யல்லை யெனற்கே யுரியவாமாதலின் முக்கியத்தைப் பிராணனுமென விறந் ததுதழீஇய வெச்சவும்மை கொடுத்துக் கூறியதென்க. தன்னையு மறி யாது மற்றொன்றையு மறியாதென்னு மிழிவுதோன்றப் பிராணவாயுக் குவ மை கூறவந்தவர் தருத்தி யென்னுது வெறியதோர் தருத்தியெள வடை கொடுத்துக் கூறியதைக் காண்க. தாமதகுணத்தில் இராசதகுணவிகாரம் பிராணாதி வாயுக்களும், கன்மேந்திரியங்களு மாதலின், இராசதகுண விகார மென்றார்.

(க-து) தூலதேகமும் பிராணாதி வாயுக்களு நீயல்லையென்பது. பின் கவியி லவஸ்தை, தனு, கோசம், அபிமானி, காட்சி, நீயல்லையெனக் கூறப் புகுதலா லிக்கவியில் தூலம் பிராணதேடன்றிச் சாக்கிராவஸ்தையும், அன்ன மயகோசமும், பிராணமயகோசமும், விசுவனும், தூலக்காட்சியும் நீ யல்லையெனக் கூட்டுக. முன்பின்னேக்கலா லிது சிக்கநோக்கு. (சூஎ)

சூஅ - கவி. அ - கை.

ஏனைய தத்துவங்களு நீயல்லையென விக்கவியிற் கூறுகின்றார்.

கரணமா மனது புந்தி கருத்தாவா மிவையான் மாவோ
தரமுள விரண்டு கோசஞ் சத்துவ குணவி காரம்
வரமறு கனவா னந்த மயனையு நானென் றுதே
விரவிய தமவஞ் ஞான விருத்தியின் விகார மாமே

(இ-ள்.) கரணமா மனது புந்தி கருத்தாவா மிவையான்மாவோ, எ-து. அந்தக்கரண மெனப்படுவதாகிய மனதும் புத்தியுமாகிய விவைக ளகர்த்தா வாதலின் கர்த்தாவாகிய வான்மாவாகுமா? .ஆகாவே ; ஆதலி னீயல்லை:— தரமுள விரண்டு கோசஞ் சத்துவ குண விகாரம், எ-து. முதல்தர மிரண் டாந்தரங் கூறியதால் ஏனைய மூன்றுந்தரம் நான்காந்தரமாயுள்ள மனோ மயகோசமும் விஞ்ஞானமயகோசமுமோ வெனில், தாமதத்தில் சாத்துவித குணவிகார மாதலி னிவை நீயல்லை:—வரமறு கனவா னந்த மயனையு நானென் றுதே, எ-து. சிறப்பற்ற கனவையும் ஆனந்த மயகோசத்தையும் ஆனந்தமய கோசமெனிய பிராக்ஞனையும் நானெனக்கொள்ளற்க. யாதினா லெனில்:—விரவிய தமவஞ் ஞான விருத்தியின் விகாரமாமே, எ-து. சுயம் பல்லாதி தாமதமும் அவித்தையுமாகிய விவ்விரண்டு விருத்தியின் விகார மாகும் ; ஆதலிற் கூடாது, எ-று.

சித்தத்தி தமனதிலும், அகங்காரத்தைப் புத்தியிலு மடக்கிக் கூறியது சருங்கச்சொல்லலென்னு மழகுபற்றி. காரணமெனப் பொதுப்படக் கூறி யதனாற் புறக்காரணத்தையுங் கொள்க. ஆன்மாவைக் கர்த்தாவென்பதனாற் காரணத்தையகர்த்தாவென்றும். காரணம், சூக்குமதனு. காட்சி, சூக்குமப்பிர பஞ்சம். அபிமானி, தைசதன். ஆனந்தமயகோசத்தையு மபிமானியை யுஞ் சொன்னதினால் அவஸ்தை, சுழுத்தியும், காட்சி, பாழுமெனக்கொண் டாம். தனு, அவித்தை எனவே, இஃதொன்றினமுடித்தலென்னு முத்தி யாயிற்று. ஆகவே"சொற்றவற் றியலான் மற்றைய பிறவுந் தெற்றென வுணர் தல் தெள்ளியோர் கடனே" யென்னும் விதியால் இவ்வவசரத்திற்கூறுத தத்துவங்களை யெல்லாங் கூட்டி நியதிகளாக வென்பதுபெற்றும்.

(க-து.) இதுகாறுந் தத்துவங்களை நியதிகளாந்தென்பது. (சூஎ)

சூகூ - கவி. அ - கை.

[நீயாவ தினையதென விக்கவியிற் கூறுகின்றார்.]

சத்தொடு சித்தா னந்தஞ் சமந்திரஞ் சாகூஷி யேக
நித்தியம் வியாபி யான்மா நீயது வாவ றிந்து
பொத்தொடு சடந்துக் காதி பொருந்துபே தங்க ளான
குத்திரப் பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய்.

(இ-ள்.) சத்தொடு சித்தா னந்தஞ் சமந்திரஞ் சாகூஷி யேகம், நித்தி யம் வியாபி யான்மா நீயது வாவறிந்து, எ-து. சத்து, சித்து, ஆனந்தம், சமம், திரம், சாகூஷி, ஏகம், நித்தியம், வியாபி யெனப்படுவன ஆன்மாவாத லின், நீ யந்தவான்மாவென வுண்ணி நீ யறிந்து:—பொத்தொடு சடந்துக் காதி பொருந்துபே தங்களான, எ-து. அசத்து, சடம், துக்கமுதலியவை களைத் தமக்கியல்பாக வுடைய பேதப்பொருள்களா நின்றுள்ள:—குத்திரப் பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய், எ-து. பஞ்சகோசமென்னும் வஞ்சகக் குகைகளினின்று வெளிப்படுதி, எ-று.

சத்து - உள்ளது ; சித்து - இங்கே தன்னையறிவது ; ஆனந்தம்-மாறுச் சுகம், சமம், என்று மெங்கு மொருபடித்தா நிற்றல் ; திரம், இங்ஙனநிற் றற்கு மாறின்மை. சாட்சி, அதுவது வாகியு மாகாதவற்றை விலக்ஷணமாக நின்றுணர்தல்; ஏகம், பலவாகியுமாகாதுந் தனியாநிற்றல்; நித்தியம், இங்ஙன நிற்ற லொருபோதன்றெனல். வியாபி, வியாபகத்துக்கெல்லாம் வியாபக மா நிற்றல் ; ஆன்மா, இக்குணங்களுக்கெல்லாங் குணியாக நிற்குமறிவு. நீ,இக்குணிதா னீயெனப்படுவது,எனவே, நீவேறுகாது நில்லென்பதாயிற்று. அறிவுக்கயல் ; பஞ்சகோசங்களுக் கயலன்மையின் அசத்தாதிகளைப் பஞ்ச கோசங்களுக் கடையாக்கினர். அசத்தாதிகட் கருத்தம் விளங்கச் சத்தா திகளைக் கூறினும். ஆதியென்றதனாற். சமம், திரம், சாகூஷி, ஏகம், நித் தியம், வியாபி, பூரணம் என்பனவைகளுக்கு மாறுய மொழிகளுளவே லவை

யுங் கொள்க. சென்மங்கட் கியைந்தது தேகம், அறிவன்மையுன் அறிவே சத்து. தன்னை யறிதற்பாலது வேறன்றுமையி னறிவே சித்து. சத்தே சித்து சித்தேசசத்து எனற் கியைதற்பாலது வேறன்றுமையி னறிவேயானந் தம். யாவு மறிவா நிற்றலி னறிவே சமம். அதனை எவ்வித வாதத்தாலு மாற்றக்கூடாமையி னறிவே திரம். தானே சமஸ்தமாயினு மன்றுகன்றிவற் றைச் சாகூியாக வறிதலி னறிவே சாகூி. சராசரபேத மறிவுக்கன்மையி னறிவே யேகம். முத லிடை கடை யின்மையி னறிவே நித்தியம். சமஸ்த வியாபகமும் தன்னிடத் திருத்தலி னறிவே வியாபி. இங்ஙனமாய குணங் களுக் கெல்லாங் குணியாக வழக்கிறந்து நிற்றற்பாலது வேறன்மையி னறி வே யான்மா. ஆன்மாவையன்றி நானீ யென்பனவுக ளில்லை யாதலி னன் மாவே யறிவு ; அறிவையன்றி யான்மாவென்ப தில்லையாதலி னறிவே நீ; அறிவை யன்றி நீ யென்பதற்குப் பொருள் வேறின்மையி னீயது வாவதறிந் தெனவும், பஞ்சகோசமு மறியாமை யாதலி னதனைவிட்டு வெளியிலாவா யெனவுங் கூறினர்.

(க-து.) இங்ஙன மாராய்ந்து கனவதாற் றேறிய வறிவே யான்மாவென் பது. இதனை மறுப்பார் அர்த்தவாதியரல்லர். அர்த்தவாதிய ரரியர். சொல்வாதிய ரெளியர். அதனை யாராய்தி. (நூக)

ஏ0 - கவ். அ - கை.

[அங்ஙனந் தெரிவித்தவாறு நின்ற மாணாக்கன தையந்தெளிய விக்கவியிற் சொல்லப் புகுகின்றார்.]

பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற போது பாழே
விஞ்சிய ததுவல் லாமல் வேறொன்றுந் தெரியக் காணே
னஞ்சன விருளே யோநா னகமென வனுப விப்பேன்
வஞ்சமில் குருவே யென்ற மகன்மதி தெளியச் சொல்வார்.

(இ-ள்.) பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்றபோது பாழேவிஞ் சியது, எ-து. தேவரீர் நியதிகளைந்தவாறு பஞ்சகோசமுந் தாண்டி யப்பா னிட்டையிற் பார்க்கும்போது மிஞ்சிநின்று காண்பது பாழே:—அதுவல்லா மல் வேறொன்றுந் தெரியக் காணேன், எ-து. அத்தப்பாழ் காணப்படுகின்றதே யன்றி, வேறொன்றுங் காணக்கண்டிலன்:—அஞ்சன விருளேயோ நா னக மென வனுபவிப்பேன், எ-து. கருமையான விருளேயா நானென்றனுபவிப்ப ன்:—வஞ்சமில் குருவேயென்ற மகன்மதி தெளியச் சொல்வார், எ - து. உண்மையாகத் தெளிவிக்க வெழுந்தருளிய குருநாதனே யென் றிரந்து கேட்ட மாணாக்கனது மதிதெளியும்வண்ணந் தக்கவிடைதருகின்றார், எ-று.

பஞ்சகோசத்தை விடுதலாவது ; அவை தானுகின்ற அழுத்தத்தை. அதாவது, பஞ்சகோசமும் விகாரரூபமன்றிச் சுயம்பன்றெனக் காட்டியத

ஞனும், கருடியவண்ணந் தானுந் தோடங் காணத் தானே யவ்வழுத்தஞ் சிறிது சிறிது தளருமாதலினுனும், தளரத்தளர அவ்வவற்றினுள்ள பாசமனு வணுவாக நழுவுமாதலானும், நழுவினும், அவ்வவ்வாசனை விளாவிலகலாது, சிறிது சிறிதகல அவ்வவ் வவற்றினிலக்கும் விதம், இங்ஙனம் விதலையென வறிக. இங்கே பாழாவது ; பஞ்சகோசமுங் காணுமை. முன்னர் பஞ்ச கோசமாகின்ற தறிவாதலா லிப்போ தன்றுநிற்பது மறிவே. முன்னரறிவு விளங்கி லிப்போது மறிவுவிளங்கலாம். முன்னர் நாமரூபமா விளங்கியவாறு போன் றிப்போது பாழா விளங்குகின்றது என்னும் விவேக மிவனுக்கின் றேனும் பாழிற் பயனின்மைபற்றிப் பஞ்சகோசமும்விட் டப்பாற் பார்க் கின்றபோது பாழே விஞ்சியதாயல்லாமல் வேறொன்றுந் தெரியக்காணே னெனவும், நாமரூபமும், பாழு மறிவினது கற்பிதத்தோற்றம், அவையோர் முதலன்று. இவ்விருமைக்கு முதலாயிருப்ப தறிவு. இவ்வறிவே யிவனுயி னும் விளங்காமைபற்றி யஞ்சன விருளேயோ நா னகமெனவனுப விப்ப னெனவுங் கூறினன். பஞ்சகோசமும் பாழு மறிவையன்றி யில்லையென்னு முளவு அவ்வனுபவிக்குத் தெரியுமன்றி யேனையோர்க் கெங்ஙனந்தெரியும். இவரனுபவியாதலிற் றெளியச் சொல்வாரொனப்பட்டது. உலகில் ஞானனு பவிக ளொழிய வேனைய குருக்களனைவரும் இது பஞ்சகோசத்தி லொன் றுமேயெனத் தெரியாததனை மெய்த்தேவபாவமெனக்கொண் டுபதேசித்துக் களித்துத் திரிகின்றனர். இங்ஙனமாயபாவமெல்லா மதேசங்கற்பமன்றே; இது மதேசங்கற்பமெனவறிந் திவற்றைவேண்டாது மெய்ப்பொருளை யுணர்த்தத் தக்கவனைக் குருவாக விவன் விழைந்து பல்லூழிகால மெய்த் தவம் பூரித்ததனை லன்றே வித்தகையான குரு விவனுக்கு வாய்த்தனர். யாவரு முணர்ந் துய்யும்படி யிங்ஙனமாய மரபு தெரிவிக்கப்பட்டது. (எ0)

எக - கவி. அ - கை.

[தசமன்பாழாகினீயும் பாழாகலாமென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

முன்புகல் தசமன் புத்தி மோகத்தா லெண்ணி யெண்ணி
யொன்பது பேரைக் கண்ட வொருவனைத் தனைக்கா ணாது
பின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழுவனே பாரா
யன்புள மகனே காண்ப தடங்கலுங் காண்பா னீயே.

(இ-ள்.) முன்புகல் தசமன் புத்தி மோகத்தா லெண்ணி யெண்ணி, எ-து. முன்னர்க்கூறிய பத்தாவான் தனது புத்திவிகற்பத்தாற் பலகா லெண்ணி யெண்ணி:—ஒன்பது பேரைக் கண்ட வொருவனைத் தனைக்கா ணாதுபின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழுவனே பாராய், எ-து. ஒன்பதுபேரைக்கண்ட வொருவனுகிய தன்னை யெண்ணிக்காணாது, பின்னரவன் தன்னிடத்திற் கண்டபெரிய பாழ்தானு ; தசமனெனப்படுவோ னிதனை நன்குசிந்தித்துக் காணுதி:—அன்புள மகனே காண்ப தடங்கலுங் காண்பானீயே, எ-து. என

துபிரியமுள்ள ஞானபுத்திரா ; அகம்புறத்திற் காணப்படுவனவு நின்றுள்ள நிருசியமனைத்தும் காண்பவ னீயேயாகும், எ-று.

புத்திமோகம், கலக்கபுத்தி. அவன்பாழல்லனென மறுக்க வெதிர்மறைப் பொருடர நின்றது ஓகாரமென வறிக. இக்கே பாழாவ தொன்றுந் தோன் றுமை. நாமரூபமுதல் பாழீறுய வனைத்தையுங் காண்ப தடங்கலுமெனவும், அடங்கலுங் காண்பதறிவு, அவ்வறிவு நீயேயெனக் குறிப்பிக்க, அடங்க லுங் காண்பானீயே யெனவுங் கூறினர்.

(க-து.) பகுதி விகுதி யிடைநிலைக் கற்பிதங்க ணீயல்லை யிவற்றிற்குச் சாகூடி நீயென்பது. (எக)

எஉ - கவி. அ - கை,

[முன்னர்ச் சாகூடி நீயேயென்பதை வற்புறுத்தக் கூறிய வாணையை யிக்கவியில் மீண்டுங் கூறுகின்றார்.]

தூலசூக் குமவஞ் ஞானந் தோன்றுமூன் றவத்தை தாமுங்
காலமோர் மூன்றுஞ் சன்மக் கடலெழுங் கல்லோ லங்கள்
போலவே வந்து வந்து போனதெத் தனையென் பேனு
லகமர் கடவு ளாணை யலைக்கெலாஞ் சாகூடி நீயே.

(இ-ள்.) தூலசூக் குமவஞ் ஞானந் தோன்றுமூன் றவத்தை தாமுங்கா லமோர் மூன்றும், எ-து, தூலம், சூக்குமம், காரணம் என்னு மிம்மூன்று தனுக்களும், இவை காணப்படுதற் கிடமாயுள்ள சாக்கிரம் சொப்பனம் சுழுத்தியென்னு மூன்றவஸ்தைகளும், இவற்றிற்குக் காலவளையமறையா நின்றுள்ள இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னு மூக்காலங்களுமாகியவிவைகள்:—சன்மக் கடலெழும் கல்லோ லங்கள்போலவே வந்துவந்து போனதெத்தனையென்பேனுன், எ-து. பிறவிசாகரத்தில் தானே யெழுந்தடங்குதலி யியல்பாக வுடைய பேரலைகளைப்போலவே தோன்றித் தோன்றி யழிந்ததாகிய தொகை யெத்தனையெனக் கணக்கிடுவன் யான்:—ஆலமர்கடவு ளாணை யலைக்கெலாஞ்சாகூடி நீயே, எ-து. முன்னர்ச் சனகாதிகட்கனுக்கிரகிக்கக் கல்லால விருகூடத்தின்கீழ்க் குருமூர்த்தமாக வெழுந்தருளிய பரமசிவத்தின்மே லாணைப்படி யத்தத் திருசியக்தனனைத்திற்குஞ் சாகூடியாகின்றனது நீயே வேறில்லை நீ யிதனை யனுபவித்துக் காணுதி, எ-று.

போனதென்பது, தொகையொருமை. கடலுக் கலைகளியல்பாமாறு போன்று, பிறவிக்குத் தூலமுதலிய விவ்வொன்பது மியல்பாமென்றதா யிற்று. இதற்குத் தடையுளதேல் கூறுதும், சம்பிக்கை யன்று. கேளுதி ஞாயமுகத்தால். எங்ஙனமெனின், இப்போது யாம் நின்றனது பிறவியோ, அன்றே ; பிறவியெனின், இத்தப்பிறவியில் தூலமுதலிய விவ்வொன்பதுந் தோன்றித்தோன்றி மறைகின்றனவோ, இன்றே ; மறைகின்றனவெனின், இப்பிறவி முழுவுமனவு மிங்ஙனமாய தொகையொருமை யெத்தனை. கணக்

இல்லை யெனின், பிறவிதோறு மிங்ஙனமாவதுளதோ, இலதோ; இல்லை யெனின், இப்பிறவிக்கிவையிலதாகவேண்டும். உளதாதலிற் பிறவிதோறுமுள தாக வேற்கவேண்டும், இதனை மறுத்தற்கிடமின்று. இனிப் பிறவிக ளுபாதிக்கோ, அறிவுக்கோ; உபாதிக்கெனின், உபாதி சடமாதலி னறிவாகுமா? ஆகுமெனின், உபாதி தன்னைத்தா னறியப்படுகின்றதோ, அன்னியத்தாலோ; தன்னுவெனின், சொப்பனசுழுத்திகளிலறிந்துகொள்ளவேண்டுமே; அங்ஙன மின்றுமைக்கேதென்னை? அறியாதேனும் யோனிவழித்தாத லுடலாதலி னுபாதிக்கேயாம். யோனியென்பது, நால்வகைத்தாய. இதுநிற்க; இனி உபா திக் கறிவோ, அறிவுக் குபாதியோ; உபாதிக்கெனின், உபாதிக் கறிவு யாது க்கு? சுகசாதனத்துக்கெனின், அறிவு சுகசாதனமாயின் சுகத்தை யனுப விக்தல் யாது? உபாதியெனின், தன்னையேனு மன்னியத்தையேனு முணரத் தகையதாகவேண்டுமே, அப்போது தூலமன்று. சூக்குமமெனின், சுழுத்தி யிற் கேவலசுகத்தை யனுபவித்தற் கையந்த வுணர்வினதாகவேண்டுமே, இல்லாததால் சூக்குமமன்று. காரணமெனின், அவித்தையாகவேண்டும், தன்னைத்தா னறிதற்பால தன்மையின் தன்னைத்தான் சுகிக்குமா றெங் ஙனங்கூடும்? கூடாததால் உபாதிக் கறிவன்று. அறிவுக் குபாதியெனின், ஒருவாற்றூற் பொருந்தும். அவஸ்தாத்ரயம், காட்சித்ரயம், உபாதித் ரயம், அபிமானித்ரயமா நிற்ப திவ்வறிவேனும், சாக்ஷாத்தில் தூலத் தைத் தனுவாகப்பெற் றூலபோகத்தை நுகர்வதும், சொப்பனத்தில் சூக் குமத்தைத் தனுவாகப்பெற் றங்குள சுகத்தை நுகர்வதும், சுழுத்தியில் காரணத்தைத் தனுவாகப்பெற் றங்குள கேவலசுகத்தை யனுபவிப்பது மறி வெனினுமை, அஃதிங்ஙன நிற்றலை யறிவா ரெங்கனு மின்றுதலா னதனைக் கணிப்ப தெளிதன்று. இதுநிற்க. அறிவுக் குபாதியெனல், இது தன்னைத் தா னறியுமட்டுள்ள தந்திரம். எங்ஙனமெனில், இம்மூன்று தனுவு மஞ்ஞா ன தனுவாகும்போது ஞானதனு விருக்கவேண்டுமே, அதுவு மறிவுக்குச் சுத்த வுபாதியாகவேண்டுமே, சுத்தவுபாதியி லசுத்தவுபாதியும், அசுத்த வுபாதியில் சுத்தவுபாதியு மின்றியினும், அறிவிருத்தலாற் சாக்ஷியாகவேண் டும். அறிவேகியாதலால் நீயே சாக்ஷியென்றூர். இதற்குமே லுண்மை யின் றுதலாற் கடவுளாணை யெனப்பட்டது. வந்துவந்து போன தெத்தனை யென்பேன்யானெனவே, இனிவரப்போவ தெத்தனையோ வெனக் குறிக் கின்றது. உபாதிக்கே பிறவி, அறிவுக்கன்று; அறிவு கியாதலி னீயே சாக்ஷி யென்பது பொருந்தும்.

(க-து.) இதனிலு மையங்கொள்ளா திருப்பதற் கிங்ஙனங் கூறியதெ (எஉ)
ன்பது.

எங - கவி. அ - கை.

[ஒவ்வொன்று மற்றொன்றா லறியப்படுமாறுபோன்று யானும்
யாதா லறியப்படுவனென்ற மாணாக்கன் வினவுக்
கிக்கவியில் விடை கூறுகின்றூர்.]

எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண் டறிவே னென்று சொல்லாதே சுயமாஞ் சோதி சுடருக்குச் சுடர்வே றுண்டோ பல்லார்முன் நசமன் றன்னைப் பார்த்ததுந் தனைக்கொண் டேதா னல்லாது பதினென் ரூறு மவனிடத் துண்டோ பாராய்.

(இ-ள்.) எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண் டறிவே னென் றென்று சொல்லாதே, எ-து. சமஸ்தத்தையும் பார்த் தறியப்பட்ட வென்னை யெதைக்கொண் டறிவேனென்று பிறர்சொல்வதுபோலச் சொல்லாதே:— சுயமாஞ் சோதி சுடருக்குச் சுடர்வே றுண்டோ, எ - து. சுயம்பாயுள்ள பிரகாசரூபமான சூரியனைக் காண்டற்கு வேறோர் சூரியன் வேண்டுமோ, அல்லது வேறுண்டோ:—பல்லார்முன் நசமன் றன்னைப் பார்த்ததுந் தனைக் கொண் டேதா னல்லாது, எ-து. தானல்லாத மற்றொன்பதுபேர்முன் பத் தாவான் தன்னைக் கண்டுகொண்டதுந் தன்னைக்கொண்டே யல்லாமல்: — பதினென் ரூறு மவனிடத் துண்டோ பாராய், எ - து. தன்னைத்தான் காணுஞ் தொழிலிற் பதினென்றாவது புருடனு மவனிடத் தினறே நீயே காணுதி, எ-று.

சுடருக்குச் சுடர்வே றுண்டோவென்னு முவமையால், ஆன்மா பிர காசவடிவமெனவும், சுயமாஞ்சோதியென்னு முவமையால், சொப்பிரகாச மெனவும் பெற்றும். மற்றொன்றாலன்றி யான்மா தன்னைத்தானறியாதென் னும் போலி ஞானிகள்போல் கூறற்கவென்பார், எல்லாங்கண் டறியு மெ ன்னை யேதுகொண் டறிவே னென்று சொல்லாதே யெனவும், தன்னைத் தான் விகற்பித்துப்பார்க்குந்தொழில் தன்னிடத்தல்லது வேறிடத்தின்மை போலத் தன்னைத்தா னிர்விகாரமாக்கிப் பார்க்குந்தொழில் தன்னிடத்தி லல்லது வேறிடத்தின்மையின் பதினென்றாறு மவனிடத் துண்டோ பாரா யெனவுங் கூறினர். ஒன்பது பேரெனக் குறிக்கப் பல்லாரென்றது. என்னை? "ஒன்றல் லனபல தமிழ்நடை வடநூ - லிரண்டல் லனபல வென்றிசி னோரே." என்றார் பிறரும். நினைவினுங் கனவினுஞ் சூழ்ந்தியினும் நிரிபுடி யையினக்குவிப்பது சோமசூரியாக்கினி யவ்விடத்தின்றே யாது வினக்குவிப் பது, ஆன்மப்பிரகாசமென்றற் கையஞ் சிறிதுமில்லை. இஃதோருயிர்பா லன்று, எவ்வுயிரிலு மாதலின் தடுத்தற்பால தன்று.

(க-து.) தானுகிய வறிவு சொப்பிரகாசமென வுணர்த்தினரென்பது. இதனை நம்பற்க வென்னுது பாரீரென்றார். ஐயந்திரிபன்றார்க்கே யிது வினக்கும். (எ)

எச - கவி. அ - கை.

[நீ சகத்துமல்லை பாழு மல்லை யறிவேயென்பதை யிக்கவியிற் கூறினரார்.]

அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே றுண்டென் றென்னு மறிவற்றாருதர்க்க மூடர்க் கனவுத்தை பலமாத் திரு

மறிபடு பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை
யறிபொரு ளாகு முன்னை யனுபவித் தறிவாய் நீயே.

(இ-ள்.) அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவேறுண்டென் றெண்ணும், எ-து. ஞானத்துக்கும் ஞேய முணர்த்தத்தக்க ஞானம் வேறுளதென்று றெண்ணுகின்ற:—அறிவற்ற குதர்க்கமூடர்க் கனவத்தை பலமாத் தீரும், எ-து. மெய்யுணர்விழந்த குதர்க்கவாதிகளாகிய மூடஞானிகளுக் கனவஸ்தா தோஷமே பிரயோசனமாக முடியும். (ஆதலினந்நெறிச் செல்லற்க):—அறி படு பொருணீ யல்லை யறிபடாப் பொருணீயல்லை. எ-து. அறிபடு பொரு ளாகிய பதி பசு பாசமு நீயல்லை, அறியப்படாததாகிய பாழெனும்பொருளு நீயல்லை. (ஆயின் யாதுவ தியாதெனின்) :—அறிபொருளாகு முன்னை யனுபவித் தறிவாய் நீயே, எ-து. தன்னைத்தானுணரற்பாலதாகியபொருள் மெய்யுணர்வாதலா லதுவே நீ, அங்ஙனமாய வுன்னை நீயே யனுபவித்தறிதி, எ-று.

கைவெண்ணெயை நெய்யென்றறியா தலைவார்போன்று, தானுகிய வறிவினுண்மைநிலை யிஃதென் றுய்ந்தனுபவிக்க வகையறியாது, அறிவுக்கறி வென்பர், (அதாவது) சிவவறிவு, பரவறிவு, என விரண்டு. பரவறி வுண்ர்த் தாது சிவவறிவு தன்னைத்தா னுணராதெனல் மெய்யே ; சிவவுணர்வுணர்த் தல் பரவுணர்வு; பரவுணர்வுணர்த்தல், வேறுணர்வுண்டாகவேண்டும். அத னை யுணர்த்த வேறுணர் வுண்டாகவேண்டும். அதனை உணர்த்த வேறு ணர் வுண்டாகவேண்டும். இங்ஙனஞ் செல்லில் முடிவெங்குளது, இன் றுதலி னிதனை யனவத்தாதோடமென்பர் கலிவல்லோர். இங்ஙன மாகு மென வறியாது, அறிவுக் கறிவெனக் கூறற்குப்பயன் அனவத்தாதோ டம். இதனை யறியாததா லறிவற்ற குதர்க்கமூடரென்றார். இதில் தோடமெ ன்னை? இவரை ஞானியென்பா ரிவரிஞும் விவேகியர்போலும். இது ஞான மாகுமா,இவர் ஞானமென்பதைக்கேட்டுமறியார் போலும், அந்தவூரிலு மிருந் தறியார்போலும். இங்கே குதர்க்கமூடரென்பதில், குதர்க்கமாவது; ஒழுங்கி ன்றிவாதித்தல். அதாவது, ஸ்மரணையையன்றிச் சகசிவபரத்துள் சகமெனல் யாதெனில், இதோ தோற்றுகின்றதே யது தானெனல். அததற்குரிய பெய ருனதாயிருக்கச் சகமெனும்பெய ரேற்றற்பாலதெதுவெனில், முன்போல மீண்டும் விடைதரல். இது தோற்றமின்றே, உளதேல் காயத்தாற் சுட்டிக் காட்டெனில், விரலாவிதுதானெனச் சுட்டிக்காட்டல். இவ்விர லுடலன்றி யில்லை, இவ்வுடல் உலகன்றி யில்லை, நீ யுட லன்றுதலால், நீ வேறுயிருந் தலைகைக்காட்டுகவெனின், இதற்கு நோராக வுத்தரவின்றிக் கண்டபடி சொல்வாதஞ்செயல். காயத்தாற் சுட்டிக் காட்டவொண்ணுதேனும், வாக்கா லேனுங் காட்டுதியெனின், சொல்லா விதுவெனக்கூறல். சொல், சத்தத்தை யன்றி யில்லை, சத்தம், ஆகாயத்தையன்றி யில்லை, நீ யாகாயமன்றுதலால், நீ வேறுயிருந் தலைகைக் காட்டுதியெனின், இதற்கும் முன்போலச் சொல்

வாதஞ்செயல். காயத்தாலும் வாக்காலுஞ் சுட்டிக்காட்ட வ்வகையின்றே னும், மனத்தாலேனுஞ் சுட்டி யறிதியெனின், எவ்வனமெனவரும். மனம் உலகாய்நில்லாது வேறுயிருந்துன்னவேண்டுமெனின், வேறுயிருந்துதா னுன் னினே னெனவரும். வேறிடம் பாழன்றே, அங்கே மனமெங்கே, உன்னுத லெங்கே, காணப்படு முலகெங்கேயெனில், முன்போலச் சொல்வாதம்வரும். இங்ஙனஞ் செய்தலே குதர்க்கமென வுணர்க. இங்ஙனமாய வழக்கில்மூழ்கி யெழாதார்க்கு வேதாந்தபட்சமித, சித்தாந்தபட்சமிதவென் றெங்ஙனந் தெளிதற்கிடந்தரும். ஆதலி னவர்வழிச்செல்லா நிதனைக் கேளுதி. நீயுன்னு லறிபடு பொருளாமெனி னுலகமாம், உலகஞ், சடமாதலி னீயல்லை. நீயுன்னு லறிபடாப் பொருளாமெனின் சூனியமாம், சூனியஞ் சடமாதலினீய வ்லை. இவ்விரண்டையு மறிவ தறிவாதலி னது நீயாமென்பார், அறிபடு பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை யறிபொரு ளாகுமெனவும், சொல்லளவாகவும், சினைவளவாகவும் போகாதே யென்பார், அனுபவித் தறிவாய் நீயே யெனவுங் கூறினர். நீயே யென்பதில், எகாரந்தேற்றப் பொருள். இவ்வுரை காணிலன்றிக் குதர்க்க மடங்காது. (எச)

எடு - கவி. அ - கை.

[அறிவாகிய நிணதம்ஸத்தை யன்றித் துவிதத்திற்குப் பகை யின்றென வுவமானத்தாலிக்கவியிற் கூறுகின்றார்.]

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யார மெல்லா
மதுரமாக் கியவ தற்கு மதுரந்தான் சுபாவ மன்றே
வதுவிது வெனுஞ்ச டங்க ளறிவாக வறிவைத் தந்தே
யதுவிது விரண்டு மாகா வகம்பொரு ளறிவாய் நீயே.

(இ-ள்.) மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யார மெல்லாம் எ-து நித்திப்பாகிய வெல்லக்கட்டி சேர்த்துச் சுட்ட மாப்பலகாரங்களெல்லாம்:—மதுரமாக் கியவ தற்கு மதுரந்தான் சுபாவ மன்றே, எ-து. நித்திப்பாக்கிய வவ்வெல்லத்கட்டிக்குத் நித்திப்பு சுபாவமல்லவா. (அதுபோல):—அது விது வெனுஞ் சடங்க ளறிவாக வறிவைத் தந்து, எ-து. அதுவென்னும் பிரமமும், இதுவென்னுங் கூடஸ்தனும், ஏகசைதன்யத்துக்குச் சடங்க ளாதலா லந்தச் சடங்கள் ஏகசைதன்ய மாகும்படி யுன்னுடைய ஞான நிருஷ்டியைக் கொடுத்து:—அதுவிது விரண்டு மாகா தகம்பொரு ளறிவாய் நீயே, எ-து. அது விதுவென்னுங் கூடஸ்த பிரமத் துவிதமாகா தகம் பொருளாகிய தானென்னு மேக சைதன்னியத்தை யதுவாகத் தரிசனஞ் செய்தி, எ-று.

வெல்லமானது தன்மதுரத்தால் மாவைத் தன்மயமாக்குவ தென்ன மோஷ அவ்வனம் உனது ஞானநிருஷ்டியானது தனது சொப்பிரகாசத் தால் சடத்வித்தன்மைத் தன்மயமாக்குமெனப் பொருள்படுகின்றது.

தன்மயமாக்கல், ஏகமாக்கல். இங்ஙனமாக்கலால் வெல்லப்பலகாரங்கள் மதுரமாத்திரமாகின்றாற்போலச், சாட்சித்துவிதங்கள், ஞப்திமாத்திரமாய் நிற்குமென வறிக, இதுதானத்துவிதமெனப்படுதல். இதனையே யகம் பொருளெனவும், இது மெய் பொய்யென்பதை யறியவேண்டின் நிட்டை கூடுதி யப்போது நீயே யிறிவாயென்பார், அறிவாய் நீயே யெனவுங் கூறினர். சாட்சித்துவிதத்திற்குச் சிவேசர் சடமானாற்போல, ஏகசைதன்யத்திற்குச் சாட்சித்துவிதஞ் சடமாகவேண்டுமே, அதனை லதுவிது வெனுஞ் சடங்களெனப்பட்டது. ஐக்கியமாக்கற் கியைந்தது சாட்சித்துவிதமன்றிச் சிவேசரெனல் பொருந்தாது. அது கேரேயியையும், இது வலிந்து இயையும். வலிந் தியையினுந் தூரத்ததாம்.

(க - து.) சாட்சிகள் துவிதமாக்காணில், உனதனுபவ ஸ்புரிப்பைக் கொடுக்கி லஃதேகமாக விளங்கும். அங்ஙனம் விளங்கலே வியாபகவிளக்கம், அவ்வியாபகவிளக்கமாக நில்லுதி யென்பது. (எடு)

எசு கவி. அ - கை.

[உபதேசிக்க வெடுத்துக்கொண்ட தத்தொமசி யென்னு மகாவாக்கியத்தில், தத்தொமென்பதை வாச்சியார்த்தம் இலட்சியார்த்தமென விரண்டாக்கி, வாச்சியார்த்தத்துக் கைக்யங் கூடாதென விக்கவியிற் கூறுகின்றார்.]

இந்தநீ தொம்ப தத்தி னிலக்கியப் பொருளா மென்றும்
பந்தமில் பிரம மேதற் பதந்தனி னிலக்கி யார்த்த
மந்தமாஞ் சிவ னீச னவர்களே வாச்சி யார்த்தஞ்
சந்ததம் பேத மாவார் தமக்கயிக் கியங்கூ டாதே.

(இ - ள்.) இந்த நீ தொம்பதத்தி னிலக்கியப் பொருளாம். எ-து. இந்தநிலையாயுள்ள நீ யென்னுங் கூடஸ்தனே தொம்பதத்தினது இலட்சியார்த்தமாம்:—என்றும் பந்தமில் பிரம மேதற் பதந்தனி னிலக்கி யார்த்தம், எ-து. எப்போதும் பந்தரகிதமாயுள்ள அதுவென்னும் பிரமமே தற்பதத்தின் இலட்சியார்த்தமாம்:—அந்தமாஞ் சிவ னீச னவர்களே வாச்சி யார்த்தம், எ-து. மூதலீறுள்ள சிவேச ரெனப்படுபவர்களே, நீ யென்னுந் தொம்பதத்திற்கும், அதுவென்னுந் தற்பதத்திற்கும் வாச்சியார்த்தமாம்:—சந்ததம் பேத மாவார் தமக்கயிக் கியங்கூடாதே, எ-து. ஐக்கியமாக்கினும் எப்போதும் பேதமுறுவராதலி னிவர்களுக் கைக்கியமென்பதே கூடாது, எ-று.

நீ தொம்பத மென்றதனால் அது தற்பதமெனவும், பிரமந் தற்பத மென்றதனால், கூடஸ்தன் தொம்பதமெனவும், அந்தமாமென்றதனால் ஆதி யெனவும், சிவ னீச னவர்களே வாச்சியார்த்த மென்றதனால் தொம்பதத் தற்பதம் நீ அது வெனவும், உணாகொண்டாம். பேதமாவாவொன்றிப் பொதுப்படக்கூறினும் சமஷ்டி வியஷ்டிபேதஞ் சாகஷிக்கின்மையின் சிவே

சனாக் குறிக்கப்பெற்றும். பெறவே கற்பித சைதன்னியமொன்றுயிற்று. இது சுருதிபூர்வமாக வுபதேசிக்கப் புகுமர்த்தம்.

(க-து.) ஐக்கிய மினையதற்கெனவும், கூடாமை யினையதற்கெனவுங் கூறியதென்பது. அந்தத்தா லாதிவருவித்தாம். (எசு)

எஎ - கவி. அ - கை.

[ஐக்கியங் கூடாமைக் கேதுக்கவியிற் கூறுகின்றார்.]

பேதமா னதுவுங் கேளாய் போரா லுமிடங்க ளாலு
மோதரு முபாதி யாலு முடலாலு முணர்வி னாலும்
பாதலம் விசும்பு போலப் பலதூர மகன்று நிற்பா
ராதலா லிவர்க்கெங் காலு மயிக்கியமென் பதுகூ டாதே.

(இ-ள்.) பேதமா னதுவுங் கேளாய், எ - து. முன்னர்ப் பேதமென் றோமே யதுவு மின்னதெனக் கூறக் கேளுதி:—போரா லுமிடங்க ளாலு மோ தரு முபாதி யாலு முடலாலு முணர்வி னாலும், எ - து. சீவேசரென்னும் பெயர்களாலும் பூமிமுதலிய விடங்களாலும், கைலாய முதலிய வீடங்க ளாலும், சொல்லுதற்கரிய சமஷ்டி வியஷ்டி யென்னு முபாதிபேதங்களா லும், காரணசரீரம் காரியசரீரமென்னுந் தேகபேதங்களினாலும், போதறிவு சிற்றறிவென்னு முணர்வுபேதங்களினாலும்:—பாதலம் விசும்பு போலப் பலதூர மகன்று நிற்பார், எ-து. பாதாளமுஞ் சுவர்க்கமு மெங்ஙன மதி தூரமோ வதுபோ லவ்வள வதிதூர நீங்கிநிற்பார்கள்:—ஆதலா லிவர்க்கெங் காலு மைக்கியமென் பதுகூடாதே, எ-து. ஆகையா லிவ்விருவர்க்கு மைக் கியமென்ப தெக்காலுங் கூடாது, எ-று.

பெயர், இடம், உபாதி, உடல், உணர்வு, என்னுமிவைகளால் தனித் தனி பேதமுடையோர் சீவேசர். எனவே, இங்ஙனம் பேதமுற்ற சித்தம் என்று மல்லலருதென்பதைக் குறிக்கப்பெற்றும். அவர் பேதமுறுவதா லாயபய னெமக்கென்னையென்னுங் கடாவரி னிதுவிடையெனக்கொள்க. காணென்றுதாருலகி லொருவரு மில்லை, அதனை யாராயப் புகுவாரு மில்லை. உனதொளில் ஆராய்ந்தாராய்ந்து சென்று சென்றெட்டாமையி னங்கே பொ ருளில்லதைக் கொண்டனர், தொண்டுதறற் றுவிதபேத மறுதற்கிடமில்லை, இல்லாததாற் சிற்றறிவு சிற்றின்பும், பேரறிவு பேரின்பமென்னும் பேத மெங்ஙன மகலும், அகலாததால், சுகம் தனக்கயலென்ப தெங்ஙன நீங் கும்; நீங்காதாகவே, தேகமே காணென முன்போல் வரும். வரவே, ஆண் பெண்பேதந் தானேவரும், வரவே, மோகாதிகட் கிடமாம், இடமாகவே, பந்தம்பலப்படும், படவே, ஆலம்விழுதுபோற் கெட்டியாம். இவைவெல் லாம், நாணலைத நானுகக்கொண்ட விபரீதத்தாலன்றே ; இங்ஙனமாய வவ்சரத்தில் உடனழுவில் உடலெயன்றி காணெனக்குப் பொருளறியா தெ னைத காணெனவறிவர். உடலோடொழிந்தெனில், உட னுணரவேண்டும்.

ஆகுமெனின், அன்னியத்தா லறியப்படாமலும் அபிமானிக்கப்படாமலும் உபசரிக்கப்படாமலும் தானே கர்த்தத்துவமாய் நின்று ஆலிங்கன முதலிய வற்றாலாய சுகப்பேற்றை யனுபவிக்கவேண்டும்; அங்ஙனமின்றே. ஆதலினகர்த்தா. இதனைத் துணைக்கருவியாகக்கொண் டனுபவிப்போன் கர்த்தா. அவன் ஆன்மா. அவ னுடலன்று. அவன் சித்து. உடல் சடம், ஆதலின் எங்ஙனம் ஒன்றும். போகதாகமுடையோன் ஆன்மா. அவனுக்கிவ்வுடல் நீங்குவதாற் போகதாக மொழிந்ததோ? இல்லையே. ஒழியாதளவு மிதுபோன்ற வுடல் யாதேனும் வேண்டும். வேண்டவே, எங்ஙனஞ் சொனனமகல்வர். அகலாதளவும், அல்லலறுது ஆதலால், நானென்பதை யறிந்தே நீர வேண்டும்! இதனை மறுத்தற்கிடமின்று. நானென்பதை யுள்ளவா றறிந்தாலப்போது பேதமெங்கே? அறியாதனவு முண்டெனக் குறிப்பிக்கப் பேதங் காட்டப் புகுந்தனரன்றி வேறன்று. அறிவையன்றிச் சிவேச நின்றுதலாலந்தகாட்டத்தி லேகம். இது இலட்சியார்த்தம். தன்னை யறிவேவடிவெனக் கேட்டுங் காணுதானுக் கயலனெனக் காணுமாதலா லவனுக் குபாதியன்றிச் சிவேசனெனற்குப் பொருள் வேறென் றெங்ஙனம்படும். படாது, ஆதலினந்காட்டத்திற் சிவேசர் பெயர் இடம் உபாதி உடல் உணர்வு முதலியவற்றாற் பேத மாகக் காணப்படுவரன்றே; ஆதலிற்பேதம். இது வாச்சியார்த்தம்.

(க-து.) இலட்சியார்த்தம் ஏகத்தையும், வாச்சியார்த்தம் பேதத்தையும் விளக்கநின்றதென்பது, இனி யேகமாக்கற்குப் பேதங் காட்டியதென வறிக. (எ)

எ அ - கவி. அ - கை.

[வாச்சியார்த்தமென்னும் பேதவாதத்தை மறுத்தற்கு இலட்சியார்த்தமென் றபேதவாதமாய் நின்றுள்ள மூன்றிலக்கண வாக்கியத்தின் பெயரா யிக்கவியிற் கூறுகின்றார்.]

வடநூல்வல் லவர்கள் சொல்லும் வாசகப் பொருள்சே ராம
விடராகிற் பொருளாம் வண்ண மிலக்கணை யுளாயாற் கொள்வர்
திடமான வதுவு மூன்றுச் செப்புவார் விட்ட தென்றும்
விடலிலா தென்றும் விட்டு விடாததென் றும்பே ராமே.

(இ-ள்.) வடநூல் வல்லவர்கள் சொல்லும் வாசகப் பொருள்சே ராம விடராயில், எ-து. சமஸ்கிருதப் பூரணபண்டிதர் வாச்சியார்த்தத்திற் பிரதிவாதிக்கும் வாசகார்த்தம் பொருத்தமாகாமற் பேதிக்குமாயின்:—பொருளாம் வண்ண மிலக்கணை யுளாயாற் கொள்வர், எ-து. பேதநீங்கி யனர்த்த மர்த்தரூபமாக் விளங்க இலட்சணைவாக்கியத்தால் திருத்திப் பொருள் கொள்வார்கள்:—திடமாக வதுவு மூன்றுச்செப்புவார், எ-து. அந்த இலட்சணைவாக்கியமு மூன்றுவிதமா யிருப்பதாகத் திடமாகக் கல்வல்லோரோ

சொல்வார்கள்:—விட்ட தென்றும் விடவிலா தென்றும் விடு விடாத தென்றும் போராமே, எ-து. அலவு, விட்டலகூவினையென்றும், விடாதலகூ வினையென்றும், விட்டுவிடாதலகூவினையென்றும் பெயர்பெறுவனவாம், எ-று.

வாசகப் பொருள் சோராம விடாதல் என்பது; அவர்கள் வாச்சியார்த்த முழுது முணர்ந்தவிடத் தையங்தோன்றுமாறு; காமுஞ் சிவராதலி னிப் பேத மென்றகலுதுமோ வெனவரும், வரின், யாமாரெனவரும். அடிமைத் திறத்துக் கனர்த்தமாமெனின், இதன்பலன் யாதெனவரும். கல்வினதீவி னைக் கையைந்த சுகதுக்கமெனின், ஒன்றிலொன் றில்லாமற்போத லப்பய னுக் கியல்பு, கமக்கியல் பிவற்றோடு மொத்துண்டிருத்தலோ வெனவரும். இருவினையொப்பு, மலபரிபாக முதலிய பயன் வேறுள, இவற்றிற் கையை ந்த தவம்புரியி னிவையும் வாய்க்கு மப்போ திவ்விடர் நீங்குமெனின், இப் போதில்லாத வப்பய னெப்போது மிருக்குமாவெனவரும். அது கேள்வி யல்லவெனின், யானே யையமையமாயிருக்கின்றேன், விடையு மையமையமாயி னென்செய்வேனெனவரும். அதற்குறுதிமொழி யில்லாமற்போதலே யிட ராதலெனவறிக. பொருளாம்வண்ணமென்றது; எதைச் சிவனெனல். எதை யீசனெனல். உபாதிகுணமெனின், ஓர்முதலன்றே யிவை யோர்முதலுக்குத் துணைக்கருவியாமே யெனவரும். எதுவானு லறிகின்றதோ வதுவெனின், புடைபெயர்ச்சியா? அதுவும் வினைமுதலன்றே யெனவரும். விருதிமுதல் பருதியிறுதியாகக்கிடந்த தத்துவக்கூட்டங்களெனின், தத்துவசோதனையில் அல்லவல்லவென்று வரலாமா வெனவரும். அறிவெனின், சின்னவறிவு,பெ ரியவறிவென்று வரலாமாவெனவரும். உபாதியாதியாலெனின், முன்னமே யறிவன்றென முடிந்ததே யெனவரும். இங்கே விடைதரற்கு மொழியின் மையினிது இலகூஷணவாக்கியமின்றியமையாதென்பதுபற்றியென்க. கொ ள்வரென்னும் வினைக்கு வடநூல்வல்லவர்களெனவே, சொல்லுமென்னும் வினைக்குக் கர்த்தா சுருதியெனக்கொள்க.

(க-து.) லகூஷணார்த்தமின்றித் துவிதபேத மறுதென்பது. லகூஷணார்த்த மெனினும், லகூஷியார்த்தமெனினு மொக்கும்.

வி஧.—மீமாம்சத்திலுள்ள கர்மம். பத்தி, ஞானம், என்பவற்றுள் கலை வல்லோரும் ஞானத்தை யேலாததற் கேதென்னை?

விடை.—அஃதெட்டாமைபற்றி.

வி஧.—அதனற் கல்விஞானத்துக்குச் சிறப்பென்னை?

விடை.—தம்மை யொழுக்கவழி நடாத்துதலே யென்க.

வி஧.—இவரோனு முணராவிடத் திவர்செய்த பாஷ்யத்தி லென்கிற ப்பு?

விடை.—இவர்போன்றனர் மதிக்குமதிப்பே யெனவுணர்க.

வினா:—துவிதபாவ முடலிலோ? உணர்விலோ? உடலிலெனின், உணருமா? உணர்விலெனின், அவ்வுணர்வு தன்னை யறிதற்பாலதா? அயலை யறிதற்பாலதா? தன்னை யறிதற்பாலதெனின், அயலெனலுண்டா? அஃதிரண்டாகுமா? இவையெல்லாஞ் சொல்வாதமெனின்,

விடை:—இதற்குமேற் றோன்றுமையின், குதர்க்கமென வோராது தர்க்கமெனவெண்ணி முன் பின்பொருத்தமின்றி வாதிப்பரிதுவேயன்றி வேறோர் பலசயு மின்றென வுணர்க. (எஅ)

எக - கவி. அ - கை.

[மூன்று லக்ஷணார்த்தத்தையு முதாரணமுகத்தா லிக்கவியிற் கூறுகின்றார்.]

கங்கையிற் கோஷ மென்றுங் கறுப்புச்சேப் போடு தென்றுந்
தங்கிய சோயந் தேவ தத்தனென் றுஞ்சொல் வார்க
ளிங்குதா ரணங்க ளாக்கி யிந்தமூன் றுரைக ளாலே
துங்கநூல் விரோத மான சொல்லெலாம் பொருளாந் தானே.

(இ-ன்.) கங்கையிற்கோஷமென்றுங் கறுப்புச்சேப் போடு தென்றும், எ-து. விட்டலக்ஷணையென்பது; கங்கைக்கண்ணுள்ளது இடைச்சேரியென்றும், விடாதலக்ஷணையென்பது; கறுப்புஞ் சிவப்பு மோடுகின்றனவென்றும்:—தங்கிய சோயந் தேவ தத்தனென்றுஞ் சொல்வார்க ளிங்குதாரணங்களாக்கி, எ-து. விட்டுவிடாத லக்ஷணையென்பது; அவனெனவு மிவனெனவு நின்றுளான் தேவதத்தனென்று மிவற்றை யிங்கே யுதாரணங்களாக்கிச் சத்துக்கள் சொல்லுவார்கள்:—இந்த மூன்றுரைகளாலே துங்கநூல்விரோத மானசொல்லெலாம் பொருளாந்தானே, எ-து. இந்த மூன்று லக்ஷணார்த்தத்திலுந் பிரபலசருதிக்கு முரணையவற்பசுருதி வாக்கியங்களனைத்தும் பொருளாகமுடியும், எ-று.

கங்கைக் கிக்கனையினின்றோன் செவியிலக்கனையில் தயிர்விற்போள் சத்தங்கேட்டவளவி லிச்சத்தங் கங்கையின் கண்ணுள்ளதாகக்கருதிநீரிலிருக்குமா விடைச்சேரி, கனையிலிருக்கும். நீரிலிராதென்புழிக் கங்கைவிட்டது. அதுபோல, உணருந்தர்ம முபாதிதோறு மிருத்தலி னஃதுபாதியின் தர்மமா? வேறொன்றின் தர்மமா? சடமாதலி னுபாதியின் தர்ம மன்றென்புழி யுபாதி விட்டது. (இது விட்டலக்ஷணை.) இங்கே யுபாதியென்றது, தூல முதலிய மூன்றுதனுவை. ஒருவன் தனது கறுப்புப்பசுவையும், சிவப்புக்கு தினையையும் பற்றச்செல்லும்போது அவைகள் விளாவாகவோட விவனது நின்று அம்மார்க்கமா யெதிரில் வருவோனைக்கண்டு, கறுப்புஞ் சிவப்புங் கண்டையாவெனக் கேட்க, அதற்கவ னிரண்டு மோடுகின்றனவெனக்கூற, இதலில் கருமையுஞ் செம்மையுங் குணமாயிற்றே யஃதோடுமா? ஓடுதலி னிய புடைபெயர்ச்சிக்கு வினைமுத லுடலாயிற்றே, அத்தவுடலே மூணியென்

னப்பட்டது, படவே அவன் குணத்தைதக்கேட்க, குணத்தைதவிடாது குணி யைக்கண்டு விடைதந்தானென்றுயிற்று, ஆகவே குணம்விடாதது. அது போல, முன்று ரூபாதியன்றென நின்றது யாதெனின், அது மறைவாக் குக்காயங்களா லின்னதென வறிதற்கரிதாதலின், குணங்காரணமாக வறிய வேண்டுமென, சித்தியம், பூரணம், எகம், பரமார்த்தம், சத்து, சித்து, ஆன ந்தம், இவைபோன்ற பரவஸ்துவுக் கையந்த எண்ணிறந்த குணங்களமை க்கப்பட்டன. இவைகளில் யாதேனு மோர்குணங்காரணமாக வறியநின்ற து, பரம், எனவே, குணம்விடாதது. (இது விடாதலசூத்ரம்.) இங்கேகுண மென்றது, சகுணங்களை. தேவதத்தனென்னும் பெயருடையோ ரொருவன் காசியிற் சிலகால மரசனுயிருந்தான். அஃதுழ்வழியா வந்ததுபோனீங்க, அதனல் விரத்திவந்து தென்றிசையில் கடந்துறவியானன், என்னுமிடத்து, அவ்வரசவேடமும், அக்காலமும், அவ்விடமும் ; இந்தச் சந்நியாசவேட மும், இக்காலமும், இவ்விடமும், தேவதத்தனே யன்றி யில்லாமையின், அரசனே சந்நியாசி, சந்நியாசியே அரசன், என்றுகவேண்டுமென்றே ; ஆயி னும், குடும்பத்திற் சந்நியாசமும், சந்நியாசத்திற் குடும்பமும், ஒன்றி லொன்றில்லை, இல்லையேனும், இவ்விரண்டினுந் தேவதத்தனிலனே, உள னெனின், இவ்விரண்டுந் தேவதத்தனை யலனெனின், இவனையன்றி யவை யுளவோ? இல்லையெனின், தேவதத்தன் மாத்திரமுண்மை, ஏனைய வேடமுத லிய வனைத்துங் கற்பனை. இவனலையுடல்லனுதலின்விட்டும், இவனையன்றி யவை யில்லையாதலின் விடாதும் இருப்பதுபற்றி இது விட்டுவிடாதது. இதுபோல அறிவல்லாத தானென்பதெங்கணுமில்லை, உளதே லறியட்டும். இலதே லறிவாகட்டும். எனவே, அறிவையன்றி தானெனவில்லை, 'தானென் னுமகம்பாவ மில்லாத வுயிர்களில்லை யென்றுயிற்று. ஆகவே, இணைபா லிடமல்லாத வுயிர்களுளவோ? இலவோ? இலவெனின் எந்தத் இணைபாலிட ங்கட் கென்று முரியன? யாதுக்கு முரியதன்றெனின், இந்தவுயிராகிய வறி வு ; எந்தக் காலமிடங்கட்கும் பெயர்கட்கு முரியது ? யாதுக்கு முரியதன் றெனின், அப்போதறிவு யாவு மல்லவாகவேண்டும். அல்லவெனின், இத் இணைபாலிடங்க ளன்னியமாகவேண்டும். ஆகாதெனின், யாவு மறிவல்ல வெனவும், அறிவன்றி யில்லையெனவும் பெற்றும். அறிவு உண்மை. அயல் கற்பிதம். அயலல்ல வறிவென்புழிவிட்டது. அறிவன்றியயலில்லையென்புழி விடாதது. (இது விட்டுவிடாத லசூத்ரம்.) இங்ஙன முணர்ந் தனுபவித்த ல், இலட்சியார்த்தம். இங்ஙனமுணராது பாவித்தல், வாச்சியார்த்தம். இது நிஜானுபூதி வாக்கியமென்பதை யறியவேண்டின், நினைத்தோறும், சகலத்தில் யாவுமாயும் கேவலத்தி லல்லாதனாயும், சீவாதிற வறிவு நிற்பதைக்காண லாம். ஐயந்திரிபுக்கிடமின்று. இங்ஙனமுணர்ந்தார்க்கே யிம்மையில் தானே முத்தியென்பது கூடும். என்னை, "ஐயத்தி லின்றித் தெளிந்தார்க்கு லையத்தின் வான கணிய தலைட்டு" என்றார் திருவள்ளுவநாயனார். ஞான

காண்டமாகித் விம்மூன்றிலகூறுவாக்கியுத்தால், கர்மம்,பத்தியென்னு மிவ் விரண்டு காண்டமாகிற வாச்சியார்த்தமனைத்தும் பொருளாதற் கிடமுண்மை யின் இந்த மூன்றுனைகளாலே துங்கநூல் விரோதமான சொல்லெலாம் பொருளாத்தானே யென்றூர். துங்கநூல், உயர்வுநூல். அது, பிரபலசுருதி. அது, ஞானகாண்டம். விரோதம், எதிர்மறை. துங்கநூலுக்கெதிர்மறை. பத்தி, கர்மம், இவை யற்பசுருதி. ஆதலின் துங்கநூலென்பது, பண்புத் தொகை. ஞானகாண்டமின்றேல் யாவுமூரணும். மதத்தோ சான்று.

அ0 - கவி. அ - கை.

• [இந்த விலக்கணை வாக்கியத்தைமாத்திரம் விடாது சிந்திக்கின் துவிதபாவ மிறக்குமென்பதை யிக்கவியிற் கூறுகின்றூர்.]

பன்னிய சோய மென்னும் பதங்களின் வாச்சி யார்த்த
மன்னிய தேயங் கால மவனிவ னென்ப வெல்லாஞ்
சொன்னவிவ் விரோதம் விட்டுத் தொகையிலக் கியம்விடாம
லுன்னிடிற் றேவ தத்த னெருவனே வெளியாக் காட்டும்.

(இ-ள்.) பன்னிய சோயமென்னும் பதங்களின் வாச்சி யார்த்தம், எ-து. முன்னர்க் கூறிய சோ, அயம் என்னப்பட்ட பதங்களின் வாச்சியா ர்த்தமாவது,—அன்னிய தேயங் காலமவனிவ னென்பவெல்லாம், எ-து. வெவ்வேறான இடமும்,காலமும், அவனும், இவனும், எனச்சொல்லப்பட்ட வனைத்துமாம்:—சொன்னவிவ் விரோதம்விட்டுத் தொகையிலக்கியம் விடா மலுன்னிடின், எ-து. இங்ஙனமாகக்கூறிய விவ்விரோதக் கற்பிதங்களை விட்டு முடிவாயுள்ள இலக்கியார்த்தத்தை விடாது சிந்திப்பையாயின்:— தேவதத்தனெருவனை வெளியாக் காட்டும், எ-து. தேவதத்தன் கற்பிதங்க ளல்லதலி னவனைமாத்திர மவ்விலக்கியார்த்தம் பிரத்தியக்ஷமாகக் காட்டி விடும். எ-று.

சோ, அயம், வாச்சியார்த்தமெனவே, தேவதத்த னிலக்கியார்த்தமென் றுயிற்று. ஆகவே, சோ, அயம், என்பவை, சுத்தம், அசுத்தமென் நிற் கும். சுத்தம், கூடஸ்தபிரமம், அசுத்தம், சிவனீசன், கூடஸ்தபிரமத்திற் கைக்கிய மூரணின்றித் தானேயமையும். சிவேசருக் குபாதி குணங்கள் சம ஷ்டி வியஷ்டியாயும், பேதகாரண மாயியுமாயுமிருத்தலின், ஐக்கியம்முழுது மூரணும். மூரணவவசரம், இலட்சியார்த்தம். மூரணமவசரம், வாச்சி யார்த்தம். ஆதலின் தொகையிலக்கியம் விடாமலெனவும், சொன்னவிவ் விரோதம் விட்டெனவும், இங்ஙனமாகிய கிலேயாலன்றி யேகசைதன்னியம் விளங்காதாதலின் உன்னிடிற் றேவதத்த னெருவனை வெளியாக் காட்டு மெனவுங் கூறினூர்.

(க-து.) உண்மைவிளங்கற்பாலது விட்டுவிடாத இலட்சணையென்பது. விளங்கல், தன்னைத்தான் காண்டலே. தன்னைத்தான் காணுமாறிங்ஙனமென

வறியாதார், எங்ஙனமாய நிலைசெல்வினுங் கேளார். சுரப்பீர் போல்வ தன்றி யாணந்தம் மோழைபோல்வதன்று. இனிக்கூறுநிலையாலு முணர்க. ச:—அயம், சோயம். இது குணசந்தி. (அ0)

அக - கவி. அ - கை.

[தற்பதம் தொம்பதமென்னு மிருபதங்களும் அவற்றினி லக்கி யார்த்தங்களு மைக்கியத்தை யுணர்த்தற்பாலவென வசிபதங் காட்டுநிலையை யிக்கவியிற் கூறுகின்றார்.]

தத்துவப் பதங்க டாமுஞ் சாட்சியாய்ப் பிரம மான
வத்துவை விடாமற் பேத வாச்சியார்த் தத்தை விட்டு
நித்தமு மதுவீ யாகு நீயது வாகு மென்னு
மர்த்தமு மகண்ட மென்றே யசிபத மைக்கியங் காட்டும்.

(இ-ள்.) தத்துவப் பதங்கடாமும், எ-து. பேதம் அபேதமென்பவற்றுள் அபேதநிலையை யேற்றற்கினையந்த வவசரத் தற்பதந் தொம்பதமென்னு மிவ்விருபதங்களும்:—சாட்சியாய்ப் பிரமமான வத்துவைவிடாமல், எ-து. சாட்சியாய் நின்றுள்ள கூடஸ்த பிரமமாக வினங்கிய சுயஞ்சைதன்யத்தை இலட்சியிக்கும் இலட்சியம் விடாமல்:— பேதவாச்சியார்த்தத்தை விட்டு, எ-து. சீவேஸ்வர பேதமாயுள்ள வாச்சியார்த்தத்தைக் கையறவிட்டு:—நித் தமு மதுவீ யாகு நீயது வாகுமென்னு மர்த்தமும், எ-து. எப்போதும் பிர மமே கூடஸ்தனும், கூடஸ்தனே பிரமமாம் என்னு மர்த்தமும்;—அகண்ட மென்றே யசிபத மயிக்கியங் காட்டும், எ-து. ஏகமென்றே யசிபதமான து அவிதாசத்தை விளக்கும், எ-று.

சாட்சியாய்ப் பிரமமான வத்துவென்றதனால், இலட்சியார்த்தமாயிற்று. பேதவாச்சியார்த்த மெனவே, அபேதலட்சியார்த்தமெனவுணாகொண்டாம். தத்துவப்பதங்கடாமும் அர்த்தமும் ஏகமென்றே அசிபதமான து ஐக்கியங் காட்டுமெனக் கூட்டிப்பொருள்கொள்க. அசிபதமான து ; வாச்சியார்த் தத்தை விட்டு வத்துவைவிடாமல் ஐக்கியங்காட்டுமென முடிக்க. அது நீயா கும் நீயது வாகுமென்பது ஏகாரந் தொக்குநின்றனவெனக் குறிக்கின்றது. இலட்சியார்த்தங் கூடஸ்தபிரமமென்றபடியால், வாச்சியார்த்தஞ் சீவேசரொன் றுமில்லை. அசியென்னும் பதமான து ஐக்கியத்தையே காட்டநிற்கும்பதம்.

(க-து.) அசியென்னும் பதம், வாச்சியார்த்தத்திற் பிரமமெனப் பொரு டத்து, இலட்சியார்த்தத்தில் ஐக்கியப்பொருளைத்தரும். இவ்வைக்கியத்தை மறுப்பா ரிதனை யேற்றற்கோ ருத்தியில்லை. அதாவது ; உடல் தோறு நிற்கு மறிவு வுடலன்று, அப்போத பிரத்தியேகவஸ்து. அதனை யறியவேண்டினேன் குறியி லுடல்தட்டுமா ? தட்டாவிடத் தலையுங் கறிவு பண்ணா ? ஏகமா ? பலவெனின், உபாதிதட்டவேண்டும். இன்றெனின், ஏகமா

க்கவேண்டும். இங்ஙனமாவதாலும், அனுபவ மிருத்தலாலும், மறுத்தற்கொ
ண்ணாதது. (அக)

அஉ - கவி. அ - கை,

[ஜக்கியத்திற் கியைவ தினையதெனவும், இயையாத தினையதெனவும்,
உபமான பூர்வமாக விக்கவியிற் கூறுகின்றார்.]

கடநீரின் மேக நீரிற் கண்டவா னிரண்டும் பொய்யே
குடவானும் பெரிய வானுங் கூடியொன் றுமெப் போது
மிடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போது மேகந்
திடமாகச் சுவானு பூதி சிவோகமென் றிருந்தி டாயே.

(இ-ன்.) கடநீரின் மேக நீரிற் கண்டவ்வா னிரண்டும் பொய்யே. எ-து. கடசலப் பிரதிபிம்பாகாயமும், மேகசலப் பிரதிபிம்பாகாயமு மித்தையே:— குடவானும் பெரிய வானுங் கூடியொன் றுமெப் போதும், எ-து. கடாகாய மும் மேகாகாயமு மெப்போதுங் கலந் தேகமாதற்பாலன:— (அதுபோல,) இடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போது மேகம், எ-து. எவற்றிற்கு மிடமாயுள்ள பிரமமும், கூடஸ்தனுமாகிய விரண்டு மெப்போது மேகமே யாம்:—(ஆதலின்,) திடமாகச் சுவானு பூதி சிவோகமென் றிருந்தி டாயே, எ-து. யாதோ ரையமு மின்றித் திடமாகச் சுவானுபூதியாகிய சிவோகமென் றிருந்திடுதி, எ-று.

வாச்சியார்த்தமாகிய சிவேசர் மித்தையாதலா லவர்கட் கெங்ஙனமைக் கியங் கூறத்தகுமென்பார், உபமானத்தாற் கடநீரின் மேகநீரிற் கண்டவா னிரண்டும் பொய்யே யெனவும், மேகநீரில் வானென்றதனால், குடவா னென் றுரைப்போல மேகவானென்றும். இதனால் கடாகாயமும் மேகாகாயமு முண் மையாதலி னிரண்டுங்கூடி யேகாகாயமாகத் தகுமென்பார், குடவானும் பெரியவானுங் கூடியொன் றுமெப் போது மெனவும், அதுபோலக் கூடஸ் தனும் பிரமமு முண்மையாதலி னிரண்டுங்கூடி யேகசைதன்னியமாகத் தகுமென்பார், இடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போதுமேகமென வும், இத்தே ஸ்திரமான வனுபூதியென்பார், திடமாகச் சுவானுபூதியென வும், இதுதா னகம்பிரமமென்பார், சிவோகமெனவும், இதனினு மேலாய நிலை யெவ்விதத்தினு மில்லையாதலி னிருந்திடாயே யெனவுங் கூறினர். சிவ: அகம், என்பது, சிவோகமென்றுயிற்று. எவ்வுயிருமாகிய வறிவும் தேகோ கம், பிராணேகம், இந்திரியோகம், மனேகம், புத்தோகம், முத்தோகம், பூர ணானந்தோகம், சத்தோகம், சித்தோகம், சாந்தோகம் முதலிய விவைபோல் வன பிறவுமாகத் தானுதற்பாலதின் முடிவாகச் சிவோகமெனல் சுருதி யுத்தி அனுபவ சம்மதமெனவறிக.

(க-து.) ஜக்கியநிலை சிவோகமென முடித்துச் சும்மாவிருந்தன ராகிய னென்பது. இஃதுபதேச முடிபு. (அஉ)

அசு - கவி. அ - கை.

[அவ்வுபதேசத்தாலிவன் தெரிவித்த தினையதென
விக்கவியிற் கூறுகின்றார்.]

தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமற்
பஞ்சகோ சமுங்க டந்து பாழையுந் தள்ளி யுள்ளிற்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்த பிரம மென்னு
நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான்.

(இ-ள்.) தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமல், எ-து. துக்கநிவர்த்திக்குத் தஞ்சமாய் நின்றுள்ள குருநாத னனுக்கிரகித்த தத்துவ சோதனைவழித்தாய்ச் சென்று சிறிதுந் தவறுமல்:—பஞ்சகோ சமுங்கடந்து பாழையுந் தள்ளி, எ-து. பஞ்சகோசங்களையு மொவ்வொன்றுகக் கடந்து அப்பாற் றோற்றும் பாழையு மொழித்து:—உள்ளிற் கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்த பிரம மென்னு நெஞ்சமு நழுவி, எ-து. உள்ளத்தின்கண் ணெழுந்த பற்றுக்களன்றி மிச்சமாக வொதுங்கி மறைந்துநின்ற அற்பவாசனை விருப்பையும் விட்டுக் கூடஸ்த பிரமமென்னு நினைவும் மெல்லநழுவி:—ஒன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான், எ-து. ஏகமாகப் பிரகாசித்துநின்ற பரிபூரண சைதன்னியத்தை யகக்கண்ணால் தரிசித்தனன், எ-று.

தத்துவவழி, தத்வமசி யென்னும் வாக்கியவழியைத் தப்பாமல், கடந்து, தள்ளி, விட்டு, நழுவி, கண்டான் எனமுடிக்க. கொஞ்சமா மிருப்பென்பது போனதொழிய மீந்த வாசனை. நழுவுதல் சுத்தசங்கற்பமுஞ் சிறிது சிறிதகலல். ஒன்றாய் நின்ற பூரணத்தைக் கண்டானென்பது திரிபுடியிழப்பைக் காட்டநின்றது மெய்யே, கண்டானென்பதிற் காணுதல் ஞானம், காணப்படுதல்ஞேயம், காண்பான் ஞாதுரு; இங்ஙன மிருக்கத் திரிபுடி யிழப்பென லெங்ஙனங்கூடும்? இது சொப்பிரகாசத்தின் மகிமை. என்னை, "அத்துவித வத்துவைச் சொப்பிரகா சத்தனியை" என்றார் தாயுமானவர். உள்ளதிலென்பது உள்ளிலென விடைக்குறையாய் நின்றது.

(க-து.) குருநெறிச்சேறலா லாய பயனைக் கண்டனனென்பது. இதுதான் ஞானகதப்பிரத்தியட்சமெனப்படுதல். இதனையறியாதா னென்செ லினு மென்னை? இதனைத் தானேதானுகவிளங்குகலென்பர் சத்துக்கள். (அஞ)

அச - கவி. அ - கை.

[முன்னர் விளங்கிய பிரத்தியட்சஞானத்தின் பின்னர் விளைந்த
வனுபூதிநிலைக ளினையவென விக்கவியிற் கூறுகின்றார்.

அனுபவா னந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித்
தனுகர ணங்க ளாதி சகலமும் பிறந்து சித்தாய்
மனதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண
நனவினிற் சூழுந் தியாகி நன்மதன் சுபாவ மானான்.

(இ-ள்.) அனுபவா னந்த வெள்ளத் தழுந்தியே யகண்டமாகி, எ - து. சொப்பிரகாச வெழுச்சிக் கனுபவமாயுள்ள தடையற்றவானத்தப் பிரவாகத் தில் மூழ்கி, மூழ்கவே யகண்டபரிபூரணமே தானுகி:—தனுகர ணங்களாதி சகலமு மிறந்து, எ-து. தனு கரண புவன போகங்கள் முதலிய சகல கற் பிதமு நசித்து:—சித்தாய் மனதபூ ரணமாய், எ - து. தெரிவேவடிவாகியும் சின்மாத்திரமானதால் மனது பரிபூரணமாகியும்:—தேக மானசற் குருவுங் காண: எ - து. பூரணமே மானிடத் திருமேனிகொண் டெழுந்தருளிய சற் குருநாதனுங் காணும்படி:—நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவமா னுன், எ-து. தூங்காமல் தூங்குதலாகிய நனவிற்சுழுத்தி நிலையதாகியுஞ் சற் புத்திர னின்று தனது சுபாவமாகிய நிரதிசயானந்த வடிவமாயினன், எ-று.

பிறவியந்தக னொருவ னோர் தேவகதியால் தனக்கு விழிவர அத னல் பூததினகரனைக் கண்டானங்கு இவன் ஞானதினகரனைக் கண்டான், அவ னுக்குப் பயகம்பனுதிக ளெங்ஙன மின்றே ? அங்ஙன மிவனுக்கு மின்றும். இன்றுகவே யிங்ஙனமாய் னுபவானந்த மவனுக்குச் சற்றே, அதுபோ லிவனுக்குச் சற்றே அன்றுதலின் அனுபவானந்த வெள்ளத் தழுந்தியே யகண்டமாகி யெனவும், அவனுக்குச் சூரியப்பிரகாச மேலீடும் ஆனந்தமே லீடு முண்டாகுமன்றே? அம்மேலீட்டால் தனுகரணதி நான்கு மிருக்க அவ னுக்குக் காணுமா இவனுக்குக் காண, காணுதாதலின் தனுகர ணங்களாதி சகலமு மிறந்தெனவும், அவனறிவு சூரியப்பிரகாசமாய்நின்று பூரணமாகுமே, அதுபோல இவனறிவும், ஞானசூரியப்பிரகாசமாய்ப் பூரணமாகலாமே; ஆத லின் சித்தாய் மனதபூ ரணமா யெனவுங் கூறினர். ஊன விழித்திறப்புக்கே யிவ்வளவு வியப்பாயின் ஞானவிழித்திறப்புக் கெவ்வளவுகோடி வியப்பாக லாம். இதனைத் தெரிவிக்க வீவ்வுவமை கூறினும். இங்ஙனமாய ஞானனுபவ மில்லா ரெங்ஙன மிதனை யேற்பர். என்னை, "முக்கனியும் பாற்சோறு முன் பிருக்க நாயருந்திக், கக்கிய சோற்றைக் கருதுவார் - எக்கலைக்கும், எல்லாப் பொருட்கு மிரும்பொருள்யா மென்னுது, வல்லார்க் கடிமைபுகு வார்" என் றூர் சொரூபானந்தர். தானுகிற வறிவைக் காணுதார் அறிவுக் கறிவெனக் குழறி ஞானவரம்பைக் காணுது வாளாபோயினர். இவரை ஞானியென் றேற்பா ரிவர்போல்வார். இவர் "மோனமென்பது ஞானவரம்பு" என்னும் பிரபலசுருதி முடிவை யெங்ஙன மெட்டுவர். ஆயி னிவர்கூறு மோனமோ இதனுக்குக் கீழாய மோனவகையுளொன்று. இவருந் தானுனந்தமென்பர், இஃதயலேயோ? தன்னையோ? தன்னையெனின் தானே சச்சிதானந்த மென் னுர்களா? அயலெனின் தானுகிற வறிவை யளவைகளா லளந்து தனக்க யல்காட்ட வலியுண்டாகவேண்டும், வலியின்றேல் சும்மாவிருக்கவேண்டும். தா னறிவு, அய லானந்தமெனின், தனக்கானந்த மன்னியமாகவேண்டும். அன்னியமாயின் தா னனந்தமென்னு திருக்கவேண்டும். நல்லது, தனக்க யல் நிவம்; அது சச்சிதானந்தமெனின் தானென்னவாகவேண்டும். சத்துஞ்

சித்தெனின், அந்தச்சித்து தன்னையறிதற்பாலதோ? அன்னியத்தையோ? அன்னியத்தையெனின், அப்போது சடமாகவேண்டும். சடமெனின் சத்தென்ப தசத்தாகவேண்டும். ஏனெனின், தன்னால் தானறியப்படுவது சத்து. அன்னியத்தா லறியப்படுவ தசத்து. அசத்து சடத்தையா சத்துசித்தென்ன்ல். இப்படித் தானிருக்கு மயலைச் சச்சிதானந்தமெனலும் போலும். இதுநிற்க. பின்வரு மப்போது விளக்குதும். (அச)

(க-து.) ஈனவிற் சுழுத்திநிலையோடு சுபாவக்கலையு மெய்திற்றென்பது.

அரு- கவி. அ - கை.

[இவ்வாறுய நிட்டைதெளிந் தாசிரியரை வணங்கி நின்
ரொன்றுசொல்வாரையு ணென்பதை யிக்கவியிற்
கூறுகின்ரூர்.]

அனிமக னெடும்போ திவ்வா ரூனபின் மனது மெல்ல
வெளியில்வந் திடவு ணர்ந்து விமலதே சிகனைக் கண்டு
தளிவிழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்து சூழ்ந்து
குனிர்முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான்.

(இ-ன்.) அனிமக னெடும்போ திவ்வா ரூனபின் மனது மெல்ல வெளியில் வந்திட வுணர்ந்து விமலதே சிகனைக் கண்டு, எ-து. அன்புள்ள புத்திரனிய மாணாக்கன் வெகுநேர மிங்ஙனமாய நிட்டை புரிந்தபின்னர் மெல்லத் தனது மனம் தூரியாதீதத்தினின்று தூரியத்தில்வர அதினின்று சாமானியமாக விஸ்மரணையில்வர அதினின்றும் விசேடமாகச் சகத்தாகஸ்புரிக்க அதினின்றும் பௌதிகமாக ஸ்புரிக்க இங்ஙனம் ஸ்புரித்ததனை லுலகை. நன்னூனர, இங்ஙன முணர்ந்ததனல் களங்கரகிதமாக விளங்கிய குருநாதனைக் கண்டு:—தளிவிழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்து சூழ்ந்து,எ-து. கண்களினின்று மானந்தபாஷ்பஞ் சொரியத் திருவடிகளை யஞ்சலியோடு வணங்கி மீண்டெழுந்து வலம்புரி யிடம்புரியாகப் பிரதட்சணம்வந்து:—குளிர்முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான், எ-து. உபசாந்தவதனத்தையுடைய குருநாதன் கேட்கும்படி யஞ்சலிகரத்தனாக நின்றுகொண் டிதனைச்சொல்லுவான், எ-று.

உணர்ந்து கண்டு தொழுதுவீழ்ந் தெழுந்து சூழ்ந்து கும்பிட்டு நின்று சொல்வான் எனமுடித்தல் சிறப்பேயன்றித் தனித்தனி வினைமுற்றாக்குதலிற் சிறப்பில்லையாதலின் ஒரு வினைமுற்றாக்கி முடித்தாம். (அடு)

அசு - கவி. அ - கை.

[இங்ஙனமாய வுதவிக்குக் கைம்மா றறியேனெனத்
தனித்தலை யிக்கவியிற் கூறுகின்ரூர்.]

ஐயனே யெனது ளோனின் றனந்தசென் மங்க ளாண்ட
மெய்யனே யுபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி

யுய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யவே லுன்றுங் காணேன் றிருவடி போற்றி போற்றி.

(இ-ள்.) ஐயனே எனது ளேநின் நினந்தசென் மங்க ளாண்ட மெய்யனே, எ-து. கர்த்தனே யடியே னுளத்தகலாது நின் றனந்த சென்மங்க டோறு மாண்டுவந்த மெய்யனே:—உபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி, எ-து. என்னை விளக்குவிக்க எளிதி லெழுந்தருளிய குருநாதனே நமஸ்காரம்:—உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி, எ-து. பிறவியினின்றுய்யும்படி நிரதிசயானந்த மாக்குவித்தவுதவிக்குப் பதிலுதவியை:—நாயேன் செய்யுமா றுன்றுங் காணேன் றிருவடி போற்றி போற்றி, எ-து நாய்போல்பவுஞகியயான் செய்யும்படியான மார்க்கம் வேறுன்றுங் கண்டிலன் ஆதலின் நீதவரீர் திருவடிகளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம் எ-று,

பிறவிகடோறு மெனதுளேநின் றுண்டதென்பது ஏற்றற்பாலதோ? தள்ளற்பாலதோ? தள்ளற்பாலதெனின், யாவரு மிங்ஙனமாய சுவானுபூதியெளிதிற் பெறலாமே; யா னெளிதி லிம்மையிற் பெற்றது, பிறவிகடோறு மெனதறிவைத் திருத்தி வந்தமையால் ஏற்றற் பாலதேயென வறிக. இதனலன்றே வுபதேசிக்க வெளிவந்த குருவே யென்றூர். இதற்குக் கைம்மாறிவ னறிவாயவிடத்து வே றின்மையின், உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன் செய்யுமா றுன்றுங் காணே னெனப்பட்டது. இதனினு மேலாய வுதவி யின்றென்பதைச் சுருதி யுத்தி யனுபவத்தாற் காணலாம். இவ்வனுபவ மத்துவிதத்தி லொழிய வேனையவிடத் தின்றென்பதை ஞாயஞ் சோதனையாற் காணலாம். (அசு)

அள - கவி. அ - கை.

[அதற் காசான் சொரூப நிட்டனை மாறுதிருப்ப தனினும் வேறு கைம்மா றில்லையெனவிக்கவியிற் கூறுகின்றூர்.]

நிட்டனிவ் வாறு சொல்லத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா வெனவி ருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்
துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமற் சொரூப ஞான
நிட்டனை யிருப்பா யாகி னீசெயு முதவி யாமே.

(இ - ள்.) நிட்டனிவ் வாறு சொல்லத் தேசிகர் மகிழ்ந்து நோக்கி, எ-து மாணைக்க னிங்ஙனங்கூற வதற் காசிரியர் மகிழ்ந் தவனைப்பார்த்து:—நிட்டவா வென விருத்திக் கிருபையோ டருளிச்செய்வார், எ - து. நிட்டவாவென் றவனை யருகிலிருத்தி மிக்க கிருபையோ டின்னு முறுதிமொழி கூறலாயினர்:—(அதாவது) துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமல், எ-து. மிகக் கொடியனவாகிய தடைகள் மூன்றுள, அவை மூன்றும் நின்னைத்தொடராமல்:—சொரூப ஞான நிட்டனை யிருப்பாயாகி னீசெயு முதவி

யாமே, எ-று. சொரூபஞானநிட்டையில் மாறுதிருப்பையாயி னதுதா னீசெய்வதாகிய வுதவியாகும் எ-று.

சொரூப ஞானநிட்டையாவது;—அறிவே வடிவாய்விளங்கல். உண் மைஞானிகள் வேண்டுவ் கைம்மா றிதனேயேயன்றி வேறன்றெனக்குறிக்க நின்றது, இவர்கூறிய கைம்மாறு. எனவே, பொருள் புகழ் அடிமை முத வியவை வேண்டியன்று. இவை வேண்டினோர் அநாசிரியனெனப்படுவோர். இவரோ யுலகிற் பெரும்பான்மையோர். அவராரியர். ஆதலி னிந்நிலை வழுவ ற்கவென்றுயிற்று. வழுவற்கவென்றது, நீ வழுவின் அந்நிலை வழுவும், வழு வின் முன்போற் சகற்தோன்றும், தோன்றின் அகமமதை யுண்டாம், உண் டாயின் பந்தவினைவுக் கிடமாம், இடமாயின் தனையாம், தனையாயின்பிறவிக் கிடமாம், இடமாயின் ஒழிவின்றும், இன்றுயின் அமைதியின்றும், இன்று யின் நித்தியதிருத்தியின்றும், இன்றுயின் அல்லலே யொழிவின்றியபயனு மூடியு மாதலைப் பற்றியென்க.

(க-து.) நீ வழுவாதிருப்பினுக் தடைக ளிருப்பதால் வழுவச்செய்யும், செய்யினும் முன்ன ரனைவகளால் நீ பட்ட வருத்தத்தை யுன்னுக உன்னி டில் சொரூபநிட்டனையிருப்பை, இருத்தலே கைம்மாறென்பது. (அ௭)

அ அ - கவி. அ - கை.

[இங்ஙனந் தெளிந்த ஞானமு நழுவுமோவென் றையுற்ற மாணாக்கனை
நோக்கித் தடைகள்வரின் அனுபவநழுவுமென
மீண்டுங் கூறுதலி யிக்கவியிற் கூறுகின்றார்.]

நீ நானென் றிரண்டி லாம னிறைந்தபூ ரணமா யெங்கு
நானுகத் தெரிந்த ஞான நழுவுமோ குருவே யென்றான்
றானுகும் பிரம ரூபஞ் சற்குரு நாலாற் றோன்று
மானுலுந் தடைக ளுண்டே லனுபவ முறைத்தி டாதே;

(இ-ள்.) நீ நானென் றிரண்டி லாம னிறைந்தபூ ரணமா யெங்கும். எ-து. நீயென்றும் நானென்றுங் கூறப்படும் பேதமிரண்டின்றி யெங்க ணும் பரிபூரணமாக வியாபித்துநிற்பது:—நானுகத் தெரிந்த ஞான நழுவு மோ குருவே யென்றான், எ-து., எந்த சொரூபமாகத் தெரிந்துகொண்ட ஞானமானது நழுவிப்போகவுங் கூடுமா? எனது குருமூர்த்தமே? யென்று மாணாக்கன் கேட்டான்:—தானுகும் பிரம ரூபஞ் சற்குரு நாலாற் றோன் றும், எ-து தானேதானுக விளங்கிய பிரமஸ்வரூபமானது சற்குருவி னு லும், பிரபல சுருதியினாலுங் காணப்படும்;—ஆனாலும் தடைக ளுண்டே லனுபவ முறைத்திடாதே, எ-து. அங்ஙனம் காணப்படுவதாயினும் அதனை மறுக்குந் தடைகளுள, உளவாகவாய்க்கி னனுபவ முறைப்பதுமா? உறைத் ப்படாதே, எ-று.

தத்துவங்க ளனைத்தையு மாராய்ந்து தெளியத்தகுவது ஞானமன்றி வேறன்று. அந்த ஞானத்தையன்றி நானென்பது வேறன்று, அந்தநான் பகிர்முகத்தில் நா னீயென விரண்டாதற் கியைந்த கண்டங்களாயும், அந் தர்முகத்தில் நா னீயென விரண்டாதற் கியையா தகண்டமாயும் நிற்ப தால் இங்கே முத்திதிசைக் கியைந்தவாறு நீ நானென் றிரண்டிலாம னிறைந்தபூரணமா யெங்கு நாஞகத் தெரிந்த ஞானமெனவும், அஞ்ஞா ணதிசையினும், ஞானதிசையினு முள்ள நானெனல் அவ்வவ்வாறு விளங்கும், விளங்கினு மவை தானன்று தன்னையன்றி யவையில்லை, ஆதலி னழுவும். இந்நிலை பேதங்களனைத்தும் விளக்கத்தக்கது ஞானுஷ்டானம். இவ் விளக்கத்தில்தான் ஞானஞ்ஞான ரகிதமாயிருக்கவேண்டும், இங்ஙனமாக வேண்டுநிலை ஞானுநுஷ்டான மின்றியக்கண் ணுறுதிபடாது, அது பற்றித் தடைகளுண்டே லனுபவ முறைத்திடாதே யெனவுங் கூறினர்.

(க-து) தடைகள்வயத் தாகாவிடி னனுபவ நிலைக்குமென்பது. நூலால் மாத்திரமெனின் அனுபவம்வராது, சற்குருவால் மாத்திரமெனின் சான் றோரனுபவமு மிதுதானே என்னு மையந்தீராது. ஆதலினிரண்டு மின்றி யமையாது. இது தெள்ளியோர்கடமை. (அ அ)

அகு - கவி. அ - கை.

[தடையென வினையதனவும், அதனைக்கெடுத்த வினையதனவு மிக்கவியிற் கூறுகின்றார்.]

தடைகளே தெனிலஞ் ஞானஞ் சந்தேக விபரீ தங்கள்
படர்செயு மந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே
யுடனுடன் வரும்வக் தக்கா லுயர்ஞானங் கெடுமி வற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்திக்த றெளித லாலே.

(இ-ள்) தடைகளே தெனிலஞ் ஞானஞ் சந்தேக விபரீ தங்கள், எ-து. தடைகள்யாதெனின்; அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமென்பன:—படர்செயு மந்த மூன்றும் பலசென்மப் பழக்கத் தாலே யுடனுடன் வரும், எ - து. தன்பத்தையே வினவிக்கு மந்த மூன்றுவிதமும் அனந்தசென்மப் பழக்க த்தினு லடிக்கடிவரும்:—வந்தக்கா லுயர்ஞானங் கெடும், எ - து. வந்தால் மேலாய ஞானப்பிரகாசங் கெடும்:—(ஆதலின்) அவற்றைத் திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே, எ - து. அம்மூன்றையு முறுதியாக நின்று கெடுத்தல்செய்தி கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னு மிம்மூன்றேதுக்களானும், எ-று.

அஞ்ஞானம்; பொதுவாகப் பழுதையைப் பாம்பெனவும், கட்டை யைக் கள்ளனெனவுங் கோடல். சந்தேகம்; பழுதையோ பாம்போவெ னவும், கட்டையோ கள்ளனேவெனவுங் கோடல். விபரீதம்; ஸ்திரமா கப் பழுதையன்று பாம்பெனவும், கட்டையன்று கள்ளனென்வுங்கோ

டல், கேட்டல்; சிரவணமாகிய சட்வித்தலிங்க தாற்பரியம். சிந்தித்தல்; மனனமாகியயுத்தி, தர்க்கம், அனுமானமென்பன. தெளிதல்; நிதித்தியாசனம், சமாதி, சாட்சாத்கார மென்பன. நிதித்தியாசனம்; மந்திரயோகம் பரிசயோகம் பாவயோகம் அபாவயோகம் மகாயோகமென்பன. சமாதி; சவ்விகற்பசமாதி நிர்விகற்ப சமாதி யென்பன. சாட்சாத்காரம்; சிவன் முத்தி விதேகமுத்தியென்பன.

(க - து.) தடைமார்க்கமும் அதனைக் கெடுக்குமார்க்கமு மினைய வெனத் தெரிவித்தாரொன்பது. கணமும் விடாது பழகுக வென்றார் சான்றோர். (அசு)

கூ0 - கவி. அ - கை.

[இங்ஙனஞ் செய்யாவிடிற் புந்த நசியாதென்பதற் குவமை யிக்கவியிற் கூறுகின்றார்:

அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட் டாது
மக்கின ஞானத் தியால் வந்தபந் தமும்வே வாது
சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்த றெளித லாலே
விக்கின மடஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே.

(இ-ன்) அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட்டாது; எ. து. மந்திரத்தினு லக்கினி கட்டுப் படுமாயின் மிறுதருமம்பையு மெரிக்க மாட் டாது:—(அதுபோல) மக்கின ஞானத் தியால் வந்தபந் தமும்வேவாது, எ து. ஞாலுக்கினி மந்தப்படுமாயி னக்கணத்தெழுந்த பந்தந் தினைத்தனை யாயினு மதனை யெங்ஙன மெரிக்கும், அதனலஃதென்ன மெரிபடும்:—(ஆதலின்,) சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்தல் தெளித லாலே, எ-து, உடனே சான்றோர்பா லிடைவிடாது பழகிச் சந்தேகங்களைக் கேட்டலும் விடையைச் சிந்தித்தலும் சிந்தித்தவாறு தெளிதலுமாகிய விம்மூன்றுக்க னால்:—விக்கின மடஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே, எ - து. அனு பூதிக்குத் தடையாயுள்ள அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமென்பவற்றைப் போக்குதல் செய்தி எ-று.

ஞானம் அக்கினியாகாவிடின் பந்தம் நீருவதென்னனம், நீருகாவிடின் நின்மாத்திரமாகச் சகலமும் விளங்கலிலிங்கனம், விளங்காவிடின் அல்லலற்று மன மமைதிபெற லெங்ஙனம், இன்றேல் ஞானசாதனத்தா லென்பயன், ஆதலின் சான்றோர் பலரும் ஞானத்தழலென்றார். இதனை மறுப்பா ரறி பவித்தறியார். பிரமமெனினும் ஞானமெனினு மொக்கும். என்னை "பிரம நேயப் பிரம நெருப்பிடை, பிரம மாகிய மந்திரத் தன்னிலை, பிரம மாய சூருவுடன் பெய்துபின், பிரம மேயடை வாருளர் பின்னுக்கே" எ-ம். "அறிவ தாகிய வங்கியி லேகொள, அறிவை யேயில தாருதி பண்ணுவர், செ றிவ தாந்நசமத் தியிடை யோகிகள், பொறிய தாய புலன்களை யீவர்கள்" எ-ம்

கூறினார் கண்ணபிரான். மக்கின ஞானத்தியால் எனப்பாடமோதி யுளா கூறினும். வத்தபத்தமும் வேவாது என்றதனல் இனிவரும் பந்தமும் வேவா தெனப் பொருடாலால் எதிரதுதழீஇய வெச்சவும்மையாயிற்று. (கூ0)

கூக - கவி. அ - கை.

[அத்தடைகளி னிலக்கண மினையவெனத் தனித்தனி யிக்கவியிற் கூறுகின்றார்.]

பிரமபா வனையை மூடிப்பே தங்காட் டுவதஞ் ஞானங்
குரவுன்வாக் கியநம் பாமற் குழம்பின மனஞ்சந் தேகந்
திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று முள்ளே
விரவிய மோகந் தானே விபரீ தமென்பர் மேலோர்.

(இ-ள்.) பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ் ஞானம், எ-து. சைதன்னியத்தைக் கண்டுகண்டி துநா னிதுநானெனக் கொள்ளுந் திட பாவனையை மறைத்துத் தினைபாலிட பேதங்களைக் காட்டுவது, அஞ்ஞான மெனப்படுவது: — குரவன்வாக் கியநம் பாமற் குழம்பின மனஞ்சந்தேகம், எ-து, ஞானசிரிய ருபதேசமொழியை நம்பாமல் கலங்கின மனதே சந் தேகமெனப்படுவது: — திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்றும், எ - து. நான்குகாலத்து நிலையில்லாத சகத்தை மெய்யெனவும், ஸ்தூல தேகத்தை நானெனவும்: — உள்ளே விரவிய மோகந் தானே விபரீத மென் பர் மேலோர், எ-து. அகத்திற் கலங்கிய அந்தமயக்கமே விபரீதமெனப் படுவதெனக் கூறுவர்சான்றோர், எ-று.

பேதம், அபேதமென விருவகை. அவற்றுள்; உபாதான மூபாதேயமெ னத் தோன்றுமை பேதமும், தோன்றுதல் அபேதமுமாம். அதாவது; கடபேதங்களை மண்ணெனவும், பணிபேதங்களைப் பொன்னெனவு முணரா மை, தோன்றுமை. உணர்தல், தோன்றுதல். சைதன்யவிளக்கமே பரமென் பதோ, ஆனந்தப்பெருக்கே பரமென்பதோ எனக்கலங்கல் சந்தேகம். இவற்றுளொன்றும் நிலையுறுமை விபரீதம். இம்மூன்று மூறுதா ரெங்கணு மிலர், இதனைக்காட்ட இங்கே விளக்கியதென்க. (கக)

கூஉ - கவி. அ - கை.

[அத்தடைகளைக் கெடுக்கத்தக்க கேட்டல் முதலியவற்றி னிலக்கண மினையவென, விக்கவியிற் கூறுகின்றார்,]

தத்துவ வனுபோ கந்தான் சாதித்தல் கேட்ட லென்பா
ரொத்துள பொருளு கத்தா னுசாவல்சிந் தித்த லென்பார்
சித்தமே காந்த மான தரிசனந் தெளித லென்பார்
சித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே.

(இ - ள்.) தத்துவ வறுபோ கந்தான் சாதித்தல் கேட்ட லென்பார், எ-து. தத்துவமசியென்னு மகாவாக்கியாறுபவம் விளங்க,விடாது நிட்டை கூடலைக் கேட்டலெனவும்:—ஒத்தள பொருளு கத்தா லுசாவல்சிக் நித்த லென்பார், எ-து. பேதமாகா தொத்துநின்றுள்ள அபிதார்த்தமாகிற லைக் கியப்பொருளி லையமுறி லதற்கிலையந்த யுத்திகோ டாசான்பால் விசாரித் தலைச் சிந்தித்தலெனவும்:—சித்தமே காந்த மான தரிசனம் தெளித லென்பார், எ-து. அங்ஙனம் விசாரித்துச் சிந்திக்கச் சிந்திக்க லையங் தங்கற் கிடமின்றுக வக்கணமே விபரீத மகலுமாதலின் மனமானது சர்வகற்பி தமு மிறந்தவிடத்துச் சதோதயமாக விளங்கு மேகாந்த தரிசனத்தைத் தெளிதலெனவுங் கூறுவர் சத்துக்கள், நித்தமிப்படிசெய்தக்காலரிர்வாணம் பெறுவாய்நீயே,எ-து;இங்ஙனமறுதினமுஞ் செய்துவருவையாயின் நீகிருவா ணம்பெறுவாய் - எ-று.

ஆசான்பாற் கேட்டவாறு நிட்டை கூடலைக் கேட்டலெனவும், ஐக்கி யங் கூடுமோ றெங்ஙனமெனச் சிந்திக்க வுசாவலைச் சிந்தித்தலெனவும், அங் ஙனஞ் சிந்தித்தலாலாய பயன் சித்தமயக்கந்தீர்ந்து சுயம்பாய்விளங்கலைத் தெளிதலெனவுங் கூறினர். இங்கே அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம், என் பன மூன்றும் பந்தம். கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பனமூன்றும் முத்தி. இந்தப் பந்தமுத்தி யெய்துவது செயற்கையாலோ ? இயற்கையா லோ? இயற்கையாலெனின், விதி நிடேதம் வேண்டுவதின்றே. செயற்கை யாலெனின், இந்தச்செய்கைக்கு வினைமுதல் சிவனே? ஈசனே? ஈசனெ னின், பிறந்திறந்தானென் றிருக்கவேண்டும், சிவனெனின், பந்தத்துக்கா? முத்திக்கா? பந்தத்துக்கெனின், முத்திக்கோ? ஈசனெனின், இவன் வினை விப்பானேன்? அவனதை யழிப்பானேன்? சுபாவமெனின், முடிவதானின் றே? இன்றெனின், உபசாந்தமின்றுமே; இன்றுயின் அல்லலற்றிருப்பதற் கிடமின்றே; ஆதலின், இங்ஙனம் வாசித்துத் தெளிவதினு மூடனுயிருக்கை மிகவுண்று, இங்ஙனமன்று. ஞானல்லாதவுடலை காவென்றபிமானித் தமு ந்திய தெந்தவுணர்வோ அந்தவுணர்வா லப்பந்தத்தைத் தெடுக்கவேண்டு மன்றி வேறொன்றுலென்பது மூடம். எங்ஙனமெனின், அனலவன்பந்த மவ னலனுல் விளைந்ததன்றேல் அவனவன்பந்த மனலவனுற் கொளலாண் ணுது. தேகோகபாவத்தோற்றம்உடலீராலோ? உணர்வாலோ? உடலாலெ னின், சடம். உணர்வாலெனின், தகும். அந்தவுணர்வுதானே யுயிர். அந்தவு யிர் தேகநீக்கத்தில் தேகோகபாவவிழப்பு, தன்னுலோ? வேறொன்றுலோ? வேறொன்றுலெனி னனுபவ மிருக்கவேண்டும். தேகோகபாவம் தன்னுலா யதால் தன்னு விழப்பாகவேண்டும். அந்தவிழப்பே மானவாதனைக்குறி. லருக் கில்வாதனை யில்லாமையுமுண்டு. நமாகவாய்வீறுலேனும் மூச்சுஸ் தம்பித்தலாலேனும், ஞானுசாட்டத் தறுதியாலேனு மெனவுணர்க. பெ ண்டு பிள்ளை பண்டங்களி லவனவன் வைத்தபாசம் ஆனிவர்துழி பவ

னவனே வணைதக்கக் காண்கின்றேரும். தீன்ஞல்வந்த பந்தந் தன்ஞலழிவுறுமன்றி வேரொன்ஞலாகாது. தன்ஞலனுபவித்தேனும் ஞானக்கினிகொண்டெரித்தேனுமென வுணர்க. என்னை, "தன்ஞல் விளையுஞ் சகஜ வபரந், தன்ஞ லழியுந் தனதாம் விழியால், என்ஞ லெனையென் னிலெனக் கருளும், மன்னே யடியே ணபய மபயம்" என்ஞர்தத்துவராயர். தன்ஞல்விளைந்தது, அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமாதலி னவை தன்ஞ லழியவேண்டுமென்பதுபற்றிக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல்செய்தி. இங்ஙன மனுதினமுஞ் செய்வையாயின் நிர்வாணம் பெறுவாயென்ஞர். ஏனையோ ரன்றெனவிலக்குதற்கு நீயேயெனப் பிரித்தலின் பிரிநிலையேகாரம். இந்த ஏகாரத்தா லவனன்பந்தீ மவனவ னறுக்கவேண்டுமென்பதாயிற்று. இதனை யறிந்து செய்தி. (கூஉ)

கூகூ - கவி, அ - கை.

[நித்தமு மிங்ஙன முயலவேண்டுமென்றீர், முடிவின்றே
வென்ற மாஞக்கனேநோக்கிக் காலவனையறை
யிக்கவியிற் கூறுகின்ஞர்.]

எத்தனை காண்ஞ தாவு ஞானமு மிருக்கு மென்பை
யத்தனை காளும் வேண்டு மப்பாலோர் செயலும் வேண்டா
நித்தமும் வெளிபோற் பற்ரு ஞேயமாத் திரமாய்ச் சீவன்
முத்தரா னவர்வி தேக முத்திபெற் றிருப்ப தென்றும்.

(இ-ள்.) எத்தனை காண்ஞ தாவு ஞானமு மிருக்கு மென்பை, எ-து, எவ்வளவுகாலங் காண்பானுங் காட்சியு மென்னைவிட்டகலவில்லை யென்பையோ:—அத்தனை காளும்வேண்டுமப்பாலோர் செயலும் வேண்டாம், எ-து. அவ்வளவுகாலமு மிவ்விடைவிடாமுயற்சி வேண்டுமேயன்றித் திரிபுடியறி லப்பாலோர் முயற்சியும் வேண்டுவதின்ஞ:—நித்தமும் வெளிபோற் பற்ரு ஞேயமாத் திரமாய்ச் சீவன் முத்தரானவர், எ-து. எப்போதுந் தன்னை யொன்று பற்றினுந் தானென்றையும் பற்ரு தீ பூதாகாயம்போலச், சகலகற்பிதங்களுந்தன்னைப்பற்றினுந் தானென்றையும்பற்ரு சிதாகாயமாத்திரமாகச் சீவகற்பிதங் கடந்தசீவன்முத்தர்கள்:— விதேகமுத்திபெற்றிருப்பரென்றும், எ - து, விதேகமுத்திபெற்றுக் காலவனையறையின்றித் தானேதானுகவிளங்கிநிற்பர், எ-று.

விடயம்பயனுகப்பெறின் ஞாதுருஞானம்வேண்டும், அறிவுதன்னைத்தானேபயனுகப்பெறின் ஞாதுருஞானம்யாதுக்கு? எனவே, தானேஞாதுருஞானஞேயமெனப்பெற்ரும். விடயந்தனதுகற்பிதமாதலின்திரிபுடிவேண்டும். ஞானந்தனதநிட்டானமாதலின் திரிபுடிவேண்டுவதின்ஞ. திரிபுடியைத்தனது விருத்திஞானத்தைக் கொடுத்துக்காணின் அனைத்துஞ்சொப்பிரகாசமாய்விளங்கும்.அங்ஙனங்காணுவிடில் திரிபுடிமயமாய் நிற்கும்.இதனைத்

தினவனுபவத்திற்காணலாம். புராண்ம்போ னம்பிக்கையன்று. பிரத்தியட்சம். நீ முன்னர்க் கற்பிதமாயவிடத்துத் திரிபுடியுங் கற்பிதமாயிற்று. நீ யிப்போது சொப்பிரகாசமாகப்புழகில் திரிபுடியுஞ் சொப்பிரகாசமாக விளங்கும். அங்ஙனமாயதும் நினதுமுயற்சிகாரணமாகவன்றே? இங்ஙனமாவதும் நினதுமுயற்சிகாரணமாக வெனக்கூறம்வண்டுமோ? அப்போது விடயமயமானதுபோல, இப்போது சின்மயமாவையென்பதுறுதியாதலால், சின்மாத்திரமயமாகச்சின்னுள்பழகில் திரிபுடியுமங்ஙனமாம், ஆதலின் அப்பாலோர்செயலும் வேண்டாமென்றார். பகிர்முகத்தில் ஞேயம்விடயத்தையும், அந்தர்முகத்தில் ஞேயம்ஞானத்தையுங்குறிக்க நின்றது. ஆதலிற் சிதாகாயமென்றும்.

(க - து.) பொன்னைப்பற்பல பணிபேதங்களாக்கற்குப்பன்னுள்வேண்டும், அவையனைத்தையும்பொன்னுயுருக்கற்கு நிமிடமாகிறசின்னுள்வேண்டும். அதுபோலத், தன்னைக்கற்பிதமாகிய சகசிவபரமாக்கற்குப் பன்னுள் வேண்டும், அவற்றைத்தானுக்கற்குத் தவமுடிந்தோனுக்குச் சின்னுள்வேண்டும், ஆதலினீபழகுகவென்பது. இங்ஙனமாயமுயற்சிவிடாதோர் சீவன்முத்தராகிப் பின்னர்விதேகமுத்தராவர், இதனையுமுணர்திபென்பார், ஞேயமாத்திரமாய்ச் சிவன்முத்தரானவர் விதேகமுத்திபெற்றிருப்பாரென்றார். இதுகாறுமுரைத்ததுபதேசமார்க்கமெனவுணர்க. (கூகு)

கூச - கவி. அ - கை.

[இனிஞானத்தின்மகிமைதோன்ற, அதனைத்தானுகப்பெற்ற சிவன்முத்தர்நால்வரின் பெயரினையவெனவிக்கவியிற் கூறுகின்றார்.]

ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்.
வானிகர் பிரம விந்து வரன்வரி யான்வ ரிட்ட
னனவர் நாம மீதா மவர்களிற் பிரம விந்தின்
றனமு மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன்.

(இ - ள்.) ஞானமார்சீவன்முத்தர் நால்வகையாவர்கேளாய், எ - து. அறிவேவடிவாகப் பரிபூரணமாநிறைந்துள்ள சீவன்முத்தரென்போர் நான்குவகையாயிருப்பார், அதனையாங்கூறக்கேளுதி: — வானிகர்பிரமவிந்து வரனவரியான்வரிட்டன் ஆனவர்நாமமீதாம், எ-து. ஆகாயம்போன்றபிரமவித்தெனவும், வரனெனவும், வரியானெனவும், வரிட்டனெனவுமாயிரேர் நாமமிதுவாரும்:—அவர்களிற் பிரமவித்தின்றனமு மற்றைமூவர் தாரதம் மியமுஞ்சொல்வேன், எ - து. அந்நால்வருள்பிரமவித்தினிலையையும், ஏனையமூவரின்தாரதம்மிய நிலைகளையு மினிச்சொல்லப்புகுவன், எ-று.

இந்நான்குவகையான சீவன்முத்தருள் சிதாகாயமேதானெனத் தெளிந்தஞானத்தின் வானிகரென வுவமைகூறினர். பிரமவித்தையும்மைகொடு

த்துப்பிரித்தது, விதிவிலக்குவழுவாதுபிலவிவகாரங்கள்செய்ய அதனுல்வரு மின்பதுன்பங்கள் நுகர்தல்பற்றி. நுகரினுஞ்சிதாகாயமாக்குவன். இதனைப் பின்வருங்கவிகளாலுணர்க. (கூ)

கூரு - கவி. அ - கை.

[இக்கால்வருள் பிரமவித்துக்கள் தமதொழுக்கநடைகளில் வருணச் சிரமங்களைவழுவின்றி நடத்திக்காட்டலே யிக்கவியிற் கூறுகின்றார்.

தீராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னர்
வர்ரூமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமா னலும் பலர்க்குப கார மாக
நேரதாச் செய்வார் தீர்ந்த நிலைவிடாச் சீவன் முத்தர்.

(இ-ள்) தீராய்ப் பிரமவித்தாய்த் தெளிந்தவர், எ-து. (பிரமவித்தெனப்படுவோர்) யாதோரபாயங்கட்கும்கலங்காத தீரமுடையராயும், பிரமவித்தென்னும் பெயருடையோராயு நின்று ஐயந்திரிபின்றித்தன்னைத் தெளிந்தவர்:—தெளியுமுன்னர் வாரமா யிருந்த தங்கள் வருண மாச்சிரமம், எ-து. இங்ஙனந் தெளிதற்குமுன்னரே தமக்குரிமையாய்நின்றுள்ளவருணசிரமதருமம்:— சொன்னபாரகாரியமானலும் பலர்க்குபகாரமாக நேரதாச்செய்வார், எ-து. கன்மிகளுக்காகச்சொன்னபாரமானகாரியமாயினுமவற்றைப்பலருக்கும முன்னடையாகக்காண விதிவிலக்கொழுங் கொக்கச்செய்துகாட்டுபவர்:—தீர்ந்தநிலைவிடாச் சீவன்முத்தர், எ-து. வழக்கனைத்துந்தீர்ந்தநிலையாதோ? அந்நிலையினின்றுநீங்காதசீவன்முத்தி திசையுடையவர், எ-று,

சர்வமுஞ் சின்மாத்திரமாய்விளங்கலின் பயகம்பனுதிகளுக் கிடமின்று, ஆதலின் தீராயெனவும், தாம்பிரமஞானமாய்நிற்றலின் பிரமவித்தெனவும், தாம்முன்னர் வருணசிரம வொழுக்கவழித்தாய்ச்சேறலி னிவ்வுண்மைநிலை வாய்த்தது இவ்வாறனைவர்க்கும் வாய்க்கவேண்டு மென்னுங் கருணைபற்றி முன்னடந்து காட்டலேயன்றித் தமக்காக வன்றென்பார், பலர்க்குபகாரமாக நேரதாச்செய்வரெனவுங் கூறினர். (கூரு)

கூசு - கவி. அ - கை.

[இதுமுதன் மூன்றுகவியானு மந்தப்பிரமவித்துக்களினரிய வியபபுநடைகளை விளங்கக்கூறுகின்றார்.]

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மனத்திற் பற்றார்
காமனை யிலைத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடி வாழ்வார்
பாமர னெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டா
ரூமரு மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர்.

(இ-ள்.) காமமா திகள்வந்தாலுங் கணத்திற்போ மனத்திற்பற்றார், எ-து. காமக்குரோதாதிகள் யாதோரோதுவி லுல்லோடினு மக்ஷணமேயயிற்றை

யறிவாய்க்கனைத்தலி னெங்ஙன நிலையுறும்,நிலையுறுவாதலின் கணத்தினெசி க்குமன்றே நசித்தலின், எங்ஙனம்மனம்,பற்றவிடம்பெறுவர்,பெறார்:—தாம னையிலைத்தண்ணீர்போற் சகத்தொடுங்கூடிவாழ்வார், எ-து. தாமனையிலை தண்ணீரிலிருந்து மெங்ஙனம்பற்றற்றுநிற்குமோ, அங்ஙனஞ்சகத்தோடுகூடி நின்றும் பற்றின்றி வாழாநிற்பர்:—பாமரனெனக் காண்பிப்பார் பண்டிதத் திறமைகாட்டார், எ - து. மூடனைப்போலத் தம்மைக்காட்டிக் கொண்டுநிரி வர் பண்டிதராயினும் மத்திறமை தம்மிடத்தி லில்லாததாகக் காட்டிக்கொண் டிருப்பர்:—ஊமருமாவாருள்ளத் துவகையாஞ்சீவன்முத்தர், எ.து-ஊமை கள்போலவுமிருப்பர், உள்ளத்தின்கண் மாறுதலானக்களிப்புடைய ஜீவ ன்முத்தாகியசீவன்முத்தி திசையுடையோர், எ-று.

மனஞ்சொப் பிரகாசமாக விளங்கலின், மனத்திற்₀ பற்றுனெனவும்; சொப்பிரகாசப் பிரதிபலனஞ் செகத்தெனக்காண்பரன்றி யஃதோர்முதலெ னவெங்ஙனஞ்சித்தத்தில்வைப்பனென்பார், தாமனையிலைத் தண்ணீர்போற் சகத்தொடுங் கூடிவாழ்வானெனவும்; தோற்றினுஞ் செகத்தைச்சின்மாத்திர மாகக் கனைப்பதேதொழிலாகவுடையவ ரிவனெங்ஙனம்பண்டிதத் திறமை காட்ட நேரமுடையவனென்பதுதோன்றப் பாம்ரனெனக்காண்பிப்பார் பண்டி தத்திறமைகாட்டானெனவும்; யாதோர் கற்பிதமுமின்றிச் சொப்பிரகாச மாத்திரம்விளங்கிக்கொண்டிருக்க வேறென்னசொல்ல விடமுன்டென்பார், ஊமருமாவா னெனவும்; சொப்பிரகாசமாக வவருள்ளந் தோதலினாலும், அன்னியக்களிப்புக் கெங்ஙனமிடமாம், தற்பிரதிக்கே யிடமாதலினாலும், உள்ளத்துவகையாஞ் சீவன்முத்த னெனவுங்கூறியவாறுகாண்க. வந்தாலும், சகத்தொடும், ஊமரும், ஆகியமூன்று மிழிவுசிறப்பும்மை. ஊழாலன்றித் தமக்குச் சற்றும் பிரியமில்லையென்பது தோன்றச் சகத்தொடுங் கூடிவாழ்வா னெனப்பட்டது. (கசு)

கூள கவி. அ - கை.

[இ - து.]

பேதகன் மத்தால் வந்த பிராரத்வ நாநா வாகு
மாதலால் விவகா ரங்க ளவரவர்க் கான வாகு
மாதவஞ் செயினுஞ் செய்வர் வாணிபஞ் செயினுஞ் செய்வர்
பூதலம் புரப்ப னாயம் புகுந்தீண்பர் சீவன் முத்தர்.

(இ-ள்.) பேதகன்மத்தால்வந்த பிராரத்வநாநாவாகும், எ - து. பேத கன்மம், அபேதகன்மமெனக்கன்மமிரண்டாம், அவற்றுள், பேதகன்மம், உலகம்வேறுகக் கண்டுபுரியுங்கன்மம். அபேதகன்மம், தானுகக்கண்டுபுரி யுங்கன்மம். இங்ஙனமிருக்கப் பேதகன்மத்தால்வந்தவூழ் நானவிதமாம்:— ஆதலால்விவகாரங்களவரவர்க்கானவாகும், எ-து. ஆதலின் விருத்திகளெவ னெவர்க்குகெதுவோ அவரவர்க் கதுவதுவாம்:—(எங்ஙனமெனின்,) மாத வஞ்செயினுஞ்செய்வர் வாணிபஞ்செயினுஞ்செய்வர், எ-து. மகாதவத்தை

ச்செய்யவிருப்புற்றுச்செய்யினுஞ்செய்வீர், வியாபாரஞ்செய்ய விருப்புற்றுச் செய்யினுஞ் செய்வர்:—பூதலம்புரப்பனாயம் புகுந்துண்பர் சிவன்முத்தர், எ-து பூமியையாள வேண்டினுமாளுவர், பிச்சைபுகுந்திரந்துண்பினு முண்பர் (இவர்களாவொனின்,) பிரமவித்தென்னுஞ் சிவன்முத்தர்கள், எ-று.

ஊழென்பது, பூர்வஞ்செய்தவினையை. அபேதகன்மமாதலின்நிலையொத்தனர். பேதகன்மமாதலின், கிர்த்தியம்பேதித்தனர். என்னை, "ஊழிற் பெருவலியாவுளமற்றொன்று சூழினுந்தான்முந்துறும்" என்றார் திருவள்ளுவர். ஞானமாத்திரம், அபேதகன்மம். ஏனையவிரண்டும் பேதகன்மம். பேதகன்மம், உடலுக்கியைந்தது. அபேதகன்மம், உணர்வுக் கியைந்தது. அபேதகன்மமிருப்பதுபற்றிப் பேதகன்மமென்றார்.புரப்பினுமென்றதெஞ்சியது, ஐயம்புகுந்துண்பினுமென்றது மற்றே, இந்தவும்மைகளிட்டதத்தைக் காட்டுகின்றன. (கூஎ)

கூ அ - கவி. அ - கை.

[இ - து.]

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
னின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுது வீழ்ந்தும்
பொன்றின சவம்வாழ்ந் தாலும் புதுமையா வொன்றும் பாரார்
நன்றுதீ தென்னுஞ் சாட்சி நடுவான சீவன் முத்தர்.

(இ-ள்.) சென்றதுகருதார்நாளைச் சேர்வதுநினையார்கண்முன் னின்ற துபுசிப்பார், எ-து. போனதைப்பற்றினினையார், இனிவருவதைப்பற்றியுநினையார், இப்போதியாது கிடைப்பதோ அதனைமாத்திரம்புசிப்பார்:—வெய்யினிலவ்வாய்விண்விழுது வீழ்ந்தும், எ-து. உட்டணகிரணமானது சீதளகிரணமாயாகாயத்தினின் முலம்விழுதுபோற் பலரும் வியக்கவிறங்கினும்:—பொன்றின சவம்வாழ்தாலும் புதுமையா வொன்றும்பாராார், எ - து. செத்தபிணமீண்டுமுயிரோடுகூடிவாழினும், ஒன்றையு மதிசயமாகப் பாராார்கள்:—நன்றுதீதென்னுஞ்சாட்சி நடுவானசீவன்முத்தர், எ - து. இதுநன்று, இதுதீதென்றுஞ்சொல்லார்கள்,இவ்விரண்டிற்கும் நடுவாகச் சாட்சியாநின்றுள்ள பிரமவித்தாகியசீவன்முத்தர்கள், எ-று.

வீழ்ந்தாலு மென்பது வீழ்ந்துழென்ன வந்தது காலமயக்கம். இன்னதனுபவித்தது அனுபவிக்கின்றது, அனுபவிப்பது, என்னு முக்காலபேதம், அவருக்குச்சின்மாத்திரமாய்விளங்கினும், பசிதணிதல்பற்றி வேண்டுவதாதலின் கண்முன்னின்றது புசிப்பாரொனவும்,எத்தனையற்புதமான வியப்புஞ் சிதாகாயமாய் நிற்றலினச்சிதாகாய காட்டமகலார்க் கெங்ஙனந்தோன்றும், எங்ஙனம்வியப்பொன்பார், புதுமையாவொன்றும் பாராரொனவும், யாவுமித்தையாய் த்தானுவினங்கலின், நன்று தீதென்னுரொனவும், ஞானஞ்ஞானவுகட் காதாரமான நிலையினொன்பது தோன்றச், சாட்சிநடுவானசீவன்முத்தரொனவுங்கூறினார். இவையனுபவவிதேதம். (கூஅ)

கூகூ - கவி அ - கை.

[ஏனையமூவரினரியவியப்புரைடகளை யிக்கவியிற் கூறுகின்றார்.

பின்னைமூ வரினிரண்டு பேர்களுஞ் சமாதி யோகந்
தன்னையுற் றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந் தாண
வுன்னுவோன் வரன்வேற் றோரா லுணர்பவன் வரியா னகு
மன்னியர் தம்மாற் றன்னு லறியாதோன் வரிட்ட னுமே.

(இ - ள்.) பின்னைமூவரிலிரண்டு பேர்களுஞ்சமாதியோகந் தன்னையுற் றிருப்பார், எ - து. மற்றமூவரிலிரண்டுபேர் சமாதிஞானத்தை யகலாதிருப் பர்:—தேகசஞ்சாரநிமித்தந்தாணுவுன்னுவோன்வரன், எ - து. தேகசஞ்சா ரத்துக்காக வுண்ணநினைப்போன் வரனெனப்படுவோன்:—வேற்றோரா லு ணர்பவன் வரியாகுகும், எ - து. பிறர்வலித்தூட்டலா லுணவறிவோன் வரி யானெனப்படுவோன்:—அன்னியர்தம்மாற் றன்னு லறியாதோன் வரிட்டனு மே- எ - து. அன்னியராலும்,தன்னுலுமுணவுநேரிடலையறியாதோன் வரிட் டனெனப்படுவோன், எ-று.

தானேசென்றிரந் தோர்வேளையேனும்புசிப்பவன் வரன், பிறர்வலித் தூட்டவுணவுண்போன் வரியான், உறக்கத்தில்வலித்தூட்டிய தாயைநோக்கி யெனக்கேனிராத்திரியுணவிடவில்லையென்ற சிறுபிள்ளையைப்போலத் தா ணு முணவுண்டதையறியாதான், வரிட்டன். எனவே, தன்பசியைத்தன்னுலறி வோன் வரனெனவும்,பிறரால்றிவோன் வரியானெனவும்,தன்னுலும் பிறரா லுஞ்சற்றுமறியாதோன், வரிட்டனெனவுங்குறிக்கப்பெற்றும்-. தானேதன் பசிதெரிந்துண்ண லுடல்வளர்த்தற்கன்றே, வதைதவிர்த்தற்கன்றி வேறுக் கன்று, வதையால்நிட்டைபங்கமும், நிட்டைபங்கத்தால் மனக்கலக்கமும், மனக்கலக்கத்தால் முன்போலச் சுகதுக்கத்தில்மொத்துண்டலைதலுமாம், ஆதலினென்க. இச்சை,பரவிச்சை,அநிச்சையெனப்பிராரத்வமூன்றெனலை யிங்கே காண்க. (கக)

கoo - கவி அ - கை.

[இந்நால்வகையாயதீவன்முத்தர்களுக்கு முத்தியிற்பேதமில்லை.
ஆயினும், பேதகன்மங்களாலுண்டாகுந்தாரதம்மியங்களை
யிக்கவியிற்கூறுகின்றார்.]

அரிதாகு மிவர்களிவ்வா றநேகரா னலு முத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்றூற்
பெரிதான விட்ட துக்கம் பிரமவித் தனுப விப்பன்
வரியானும் வரனு மற்றை வரிட்டனுஞ் சுகமா வாழ்வார்.

(இ - ள்.) அரிதாகு மிவர்களிவ்வா றனேக தானலுமுத்திசரியாகும், எ-து. கிடைத்தற்கரிதாகியவிச்சீவன்முத்தர்களிங்கன மனேகபேதமுடை

யராயினும், முத்திப்பேற்றில்பேதஞ்சற்றுமிலர்:—பாடுபட்ட சமாதிக்குப் பலனேதென்றால், எ-து. பாடுபட்டபேதகன்மமாகியசமாதிக்குப்பலன்யாதெனின்:—பெரிதானவிட்டதுக்கம்பிரமவித்தனுபவிப்பன், எ-து. மிக்கவின்பத்துன்பங்களைப்பிரமவித்தேயனுபவிப்பன்:—வரியாணும்வரணுமற்றைவரிட்டனுஞ் சுகமாவாழ்வார், எ - து. மற்றவரியாணும், வரணும், வரிட்டனும் நிரதிசயானந்தமாகவாழ்வார்கள், எ-று.

சிதாகாயத்தையன்றியிவர்களுக்குநிலவேறின்மையின், முத்திசரியாகுமெனவும், பலவாறுனவிவகாரங்களிற் சம்பந்தப்படுதலினவ்வவற்றிற்குரிய நயநஷ்டங்கள்தாமேவரும்; வரவே, அதனுலின்பத்துன்பங்கள்வினையும், வினைதலையனுபவிக்கத்தக்கோன்தாணுதலால், பெரிதானவிட்டதுக்கம்பிரமவித்தனுபவிப்பனெனவும், அனுபவித்தாலுமித்தனையுஞ்சிதாகாயமாகிய தன்னையெட்டிப்பார்க்கத் தினைத்துணையுமில்லாததாகக் கண்டுகொண்டிருப்பணுதலினிவனுக்கும்முத்திசரியாகுமெனவுங்கூறினர். கூறவே, நனவு, நினைவு, கனவு, சுழுத்தியெனநான்காம். இவை, விஸ்மரணையாகவேணும், தஸ்மரணையாகவேணுமிருக்கும். இந்நால்வருந்தஸ்மரணையர். ஆயினும், பிரமவித்து நனவாகவும், வரன் நினைவாகவும், வரியான் கனவாகவும், வரிட்டன் சுழுத்தியாகவு மிருப்பரென்பதுபெற்றும். நனவுவிஸ்மரணையாதல், சகத்தாகப்பரிணமித்தலை. நனவுதஸ்மரணையாதல், சிற்ப்ரகாசமாக விளங்கலை. நனவுவிஸ்மரணையாயினங்ஙனமாகவும், நனவுதஸ்மரணையாயினங்ஙனமாகவும் விரிந்தொடுங்கும். இங்ஙனமாயவிரிவொடுக்கத்தை சங்கோசவிகாசமென்பர். இச்சகலகேவலங் கற்பிதமெனவும், எதார்த்தமெனவுமிரண்டாகிற்கும். கற்பிதங்கெடுதல், எதார்த்தத்தில். எதார்த்தங்கெடுதல், ததாகாரத்திலென்றிருத்தலினிவர்சாதனந்ததாகாரமாதற்கெனவறிக. இவர் சுழுத்தினவிற்சுழுத்தியெனவும், ஏனையசுழுத்தி மக்கினசுழுத்தியெனவுமாம். மூவரும்விடாநிட்டையிலிருப்பதுபற்றிச் சுகமாவாழ்வாரெனவும், விவகரித்தலைப்பற்றி யிட்டதுக்கம்பிரமவித்தனுபவிப்பனெனவுங் கூறினதேயமையுமெனின், பிரமவித்தைப்பற்றி யுள்ளத்துவகையாஞ்சீவன்முத்தரெனவும், தாமரையிலைத்தண்ணீர்போற் சகத்தொடுங்கூடிவாழ்வாரெனவும், இன்னுமிவைபோன்ற வற்புதகுணமுடையரெனவுங் கூறியதெற்றுக்கு?பார்ப்பவர்களுக் கிங்ஙனந்தோற்றலேயன்றிவேறன்று. இதுமுடிந்ததுமுடித்தலென்னுமுத்தி. (கoo)

கரிக் - கவி. அ - கை.

[அஞ்ஞானியர்போல்ஞானிகள்விவகரிப்பினு மாகாதெனற் கிக்கவியிலுவமைகூறுகின்றார்.]

பிரமஞா னிகளுங் கன்மப் பேதையர் போலே வாழ்ந்தாற்
றிரமறு மஞ்ஞா னம்போய்ச் செனியாத வழியே தென்னிற்
பரவுமா காய மொன்றிற் பற்றுது மற்றை நான்கும்
விரவின தோடு கூடும் விதமிரு வோருமாவார்.

(இ-ள்) பிரமஞானிகளுங்கன்மப் பேதையர்போலேவாழ்ந்தால், எ-து பிரமஞானமுடையோருங் கன்மத்தையே பயனுகவுடைய மூடர்களைப்போல் விவகரிப்பிலொத்துவாழின்: — திரமறுமஞ்ஞானம்போய்ச் செனியாதவழியேதென்னில், எ-து. நிலையின்றியவஞ்ஞானநசிப்பதெங்ஙனம்? நசியாவிடில் இனிச்செனியாவாதெங்ஙனம்? அமையுமெனக்கேட்பையாயின், (இதனைக்கூறக்கேளுதி):—பரவுமாகாயமொன்றிற்பற்றுது, எ - து, எங்குமொருதகைத்தாவியாபித்துள்ளவாகாயமானது தன்னிற்பற்றினுந் தானென்றினும் பற்றுது: — மற்றைநான்கும்விரவினதோடுகூடும் விதமிருவோருமாவார், எ-து. ஏனையநான்குபூதமுந்தமதகம்புறத்திற் பூரணமாநிறைந்து கலந்துள்ளதாகத்தோற்று மாகாயத்திற் பற்றும்விதமெங்ஙனமோ? அங்ஙனமிவ்விருதிறத்தோருமாவார், எ-று,

பற்றல்லாதவாகாயத்தைப் பற்றுகநான்குபூதமும்பற்றுமாறுபோன்று, யாதோர்பற்றுமல்லாதசுகத்தைப் பாசபந்தமாகக்கருதிப்பற்றுவதஞ்ஞானமாதலி னஞ்ஞானியனெவும், யாவுந்தன்னைப்பற்றுகப்பற்றினுந் தானங்ஙனமாகாது விலட்சணமாநின்றுள்ளவாகாயம்போன்று, எல்லாப்பற்றுக்களுஞ்சுகமாகக் காணத் தன்னைப் பற்றுகப் பற்றினுந் தானங்ஙனமாகா தல்லவல்லவென்றகன்றுவிலட்சணமாகநின்று விளங்குஞ்சுகந்தாணுதல் ஞானமாதவின் ஞானியனெவும், உபமானமுகத்தாற்கூறியது பேதங்காட்டற்கென்க. ஐயந்திரிபகன்ற ளெப்திப்பிரியமுகவினங்குவோர்ஞானியர், ஏனையரல்லாதார்; இதுவேபேதம். மற்றைநான்கும்விரவினதோடுங்கூடும்விதமிருவோருமாவா னெனப்பாடமோதி நான்குபூதமுந்தம்மால் மிசுரிம்பித்த பவுதிகங்களோடும்பற்றும்; இவ்விதமாக ஞானியஞ்ஞானியரிருவரும்பேதமுாவாவொன்றுனைகூறுவாருமுளர். உபாதிகாரணமாக ளெப்திப்பிரியமிரண்டாகநிற்போரஞ்ஞானியர்; உபாதிரகிதங்காரணமாக ஏகமாகவிளங்குவோர் ஞானியர்; ஏனெனில், ளெப்திப்பிரியத்தைக்கற்பிதமாகக்காண்போரிவர். அன்றுகக்காண்போரவர். கற்பிதமெனின், சோதனையிலன்றுகப்போவானேன்? ஆதலினிரண்டுமேகம். ஏகமெனின், முன்னிரண்டானுலன்றே இப்போதேகமென்னலாம். இரண்டாகக்காணப்படுதலுபாதிசகிதகாட்டத்தாலன்றியின்றெனின், ஒன்றுகக்காணப்படுதலு முபாதிரகிதகாட்டத்தாலன்றியின்றென்பம். காட்டபேதத்தாலங்ஙனங்தோற்றியதன்றி ளெப்திப்பிரியமிரண்டுமன்று, ஒன்றுமன்று. இங்ஙனங் காண்போர்தீர்ந்தஞானியர்; இதில்தடுமாற்றமுடையோர் ஞானியரேனுமஞ்ஞானியரோ, இவனாத்தானஞ்ஞானியரென்றுரிந்நூலாசிரியர்.ஏனையோனைச்சொல்வதிலிவ்வளவுசிறப்பின்று. வெள்ளமொழியெனக்கண்டபடியுனைகொள்ளற்க. இதுவேபரம்பனை யுனையெனலேஞாயத்தாற்காணுதி.

(க-து.) ளெப்திப்பிரியமேகமெனற்கும், அன்றெனற்கு மியையுமென்போர் ஞானியனென்பது. இது தீர்க்கவாராய்ச்சியின்றேல் விளங்காது, உலகுளோனையஞ்ஞானியனெக்கொள்வினிழிவென்னை? (கoக)

௧0உ - கவி. அ - கை.

[சீவன்முத்தனைச் சேவித்தலாலாயுபயனையும், இவர்களினியாகும் விதேகமுத்திநிலைகூறப்புகுதலையுமிக்கவியிற்கூறுகின்றார்.]

சீவன்முத் தனைச்சே வித்தோர் சிவனய னெடுமா லான
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்து சம்ம
பாவன மானு ணின்று பலமறை முழங்கு மிப்பான்
மேவருஞ் சீவன் முத்தர் விதேகமுத் தியுநீ கேளாய்.

(இ-ள்.) சீவன்முத்தனைச்சேவித்தோர், எ - து. யாவரிடைவிடாமல் சீவன்முத்தனை முறைப்படிதரிசனஞ்செய்துவருபவரோ அவர்கள்:—சிவனயனெடுமாலான மூவருமகிழநோன்புமுழுவதுஞ்செய்து, எ-து. சிவனும் பிரமாவும் விஷ்ணுவுமாகியமும்மூர்த்திகளுமகிழும்படி செய்யவேண்டிய தவங்களனைத்தையுங் குறைவின்றிச்செய்துமுடித்து:— சம்மபாவனமானு ணின்றுபலமறைமுழங்கும், எ-து. சென்மஞ்சுத்தமாயினின்று சகலவேதங்களுமுறையிடும்:— இப்பால்மேவருஞ்சீவன்முத்தர் விதேகமுத்தியுநீகேளாய், எ-து. இனிக்கிடைத்தற்கரிய சீவன்முத்தர்களைப்பற்றிச் சொன்னதுமன்றியும்அவர்களடையும்விதேகமுத்திநிலையையும்யாங்கூறக்கேளுதி, எ-று.

இவனைத்தரிசித்தலாலிவரதுநோக்குப்பட்டுக்கொண்டேவரும், வருதலன்றியும் இவர்கள்நல்லவர்களென்றுன்னவுங்கிடைக்கும், இங்ஙனமாயநலன், எந்தத்தவப்பேற்றினுமிக்குறவின் சன்மபாவனமாதற்குத்தடையென்னை? சென்மநாசனமானுனைக் கூறுமையினேற்றற்பாலதே. சென்மசுத்தமென்றது, ஞானசாதனத்துக்கியைந்த தனுவை. பலமறைச்சுருக்கம் நான்மறையாதலின் பலமறையென்றார். சீவன்முத்தி யறிவேதானுதல்; விதேகமுத்தி துரியாதீதமாதல். இதெல்லாஞ்சொல்லாலன்று, உழப்பாலெனவுணர்க. (௧0உ)

௧0ஊ - கவி. அ - கை.

[ஞானிகளின் ஆகாமியமுதலிய் மூன்றுவினைகளும் படும்பாட்டையிக்கவியிற்கூறுகின்றார்.]

பஞ்சினை யூழித் தீப்போற் பலசென்ம விவிித வித்தாஞ்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ ருக்குங்
கிஞ்சிதா காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சிய பிராரத் துவத்தின் வினையனு பவித்துத் தீரும்.

(இ-ள்.) பஞ்சினையூழித்தீப்போல், எ-து. பஞ்சைசவடவாக்கினியெங்ஙனநீருக்குமோவதுபோல:— பலசென்மவிவிதவித்தாஞ் சஞ்சிதமெல்லாஞானத்தழல்சுட்டுவெண்ணீருக்கும், எ - து. பலசென்மங்களுண்டாதற்குகாரணவித்தினைபோலுமிருக்கின்ற சஞ்சிதவினைகளனைத்தையும்ஞானாக்கினி

யெரித்துவெண்ணீறுக்கிவிடும்:—சஞ்சிதாகாமியந்தான் கிட்டாமல்விட்டுப் போகும், எ-து. ஆகாமியந்தினைத்துணையேனுங்கிட்டாமல்விட்டோடிப்போகும்:—விஞ்சியபிராரத்துவத்தின் வினையனுபவித்துத்தீரும், எ-து. அவைகீங்கலாகமிஞ்சிநின்ற பிராரத்துவவினையையனுபவித்தேதீரவேண்டும், எ-று.

ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் என வினைமூன்றும். அவற்றுள், ஆகாமியம், மதி விதி யெனவிரண்டாம். தானிச்சித்தவண்ணம் வேண்டுமெனல், மதி. அவ்வண்ணங்ககூடல், விதி. கூடாமை, சஞ்சிதம். சஞ்சிதம், பை. என்றால், ககூடா அவாக்களனைத்து மடைக்கப்படும்பை. விதி, ஊழ், பிராரத்துவமென்பன வொருபொருட்கிளவி. மதி; பந்தம், விதியெனவிருதிறத்ததாம். பந்தகன்மம்; பொருளல்லவற்றைப்பொருளெனவேண்டியவாவல். விதிகன்மம், பொருளல்லவற்றைப் பொருளன்றெனச் சோதனை, ஞாயம், பொருத்தமென்னுமிம்மூன்றுமுகத்தால் ஐயந்திரிபின்றிக்கனைந் துள்ளதையுள்ளதாக்கோடல். விதிகன்மவிதி, இவ்வண்ணநோடல். பந்தகன்மவிதி, அவ்வண்ணநோடல். இப்பாகுபாட்டின் முறைப்படிசெல்லில் யாதும்முரணுது. விதிமதியளவுதெரியாதார் தீர்வு கொள்ளின் "வரம்பின்றிவட்டாடியற்றே" யென்பதுபோலும். பிறவிக்கேதுவாதல், பந்தகன்மம். முத்திக்கேதுவாதல் விதிகன்மம்.

(க-து.) இந்நால்வரும் விதிகன்மத்தாரென்பது. "ஞாணக்கினியின் மிக்கவக்கினியுண்டென்பார் தற்காணர். பந்தகன்மமாகின்றது, அஞ்ஞானம். விதிகன்மமாகின்றது, ஞானம். இங்கேஞானமென்றது, பரஞானமாதலின் ஞானத்தியென்றார். இத்தஞானத்தியேயெங்களுமேலிடலின், சஞ்சிதம்பஞ்சுபோல்வதா லெங்ஙனமதன்முன்னிற்கும். இனியவாவுமாகாமிய மெங்ஙனந்தோன்றும். இங்ஙனமிருக்கப்பிராரத்துவமனுபவித்துத்தீராம லெங்ஙனமொழியும்; ஆதலின் விஞ்சியபிராரத்துவத்தின் வினையனுபவித்துத்தீருமென்றார். இந்நெறிச்செல்லார், குதர்க்கிகள். (கoங)

கoச — கவி. அ — கை.

[இவர்கள்முன்னர்செய்த நல்வினைதீவினைகளாகலும்வகை யிங்ஙனமெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

பொறுமையாற் பிராரத் துவத்தைப் புசிக்குநாட் செய்த கன்ம
மறுமையிற் றொடர்ந்தி டாமன் மாண்டுபோம் வழியே தென்னிற்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வ
ரறிபவ ரறிந்து பூசித் தறமெலாம் பறித்துண் பாரோ.

(இ-ள்) பொறுமையாற் பிராரத்துவத்தைப் புசிக்குநாள்செய்தகன்மம், எ-து. மிக்கவமைதியோடும் பிராரத்துவத்தையனுபவிக்குங்காலத்தில் தன்னேயிறியாமல்செய்தகன்மமானது:—மறுமையிற்றொடர்ந்திடாமல்மாண்

போம்வழியேதென்னில், எ-து. இனிவரும் பிறவியில்தொடர்ந்துவராம லழிந்துபோதற்குவகையாதென்னில்:—சிறியவரிகழ்ந்துஞானிசெய்தபாவத் தைக்கொள்வர், எ-து. மெய்யர்போ னடித்துக்காட்டும் புத்தியீனர் மெய்ஞ் ஞானியனைத் தமது புன்னடைவழிச் சென்றிலரெனவைது அவரறியாது செய்தபாவத்தைப் பறித்தணுபவிப்பார்:—அறிபவர்றிந்துபூசித் தறமெலாம் பறித்துண்பாரே, எ-து. இவர்சிறிய ரிவர்பெரிய ரெனவறியத்தகுந்திறத்தினரிவர் மெய்ஞ்ஞானியரென்றுணர்ந்து அர்க்கியபாத்திய முதலியவற்றால் திரிகரண மொத்துமெய்யன்புகொடுபூசித் தவர்செய்த நல்லறமனைத்தையு மபகரித்தணுபவிப்பார், எ-று.

பொறுமையாவது; முன்னும்பின்னும் யோசித்துநடத்தல். அதாவது; இன்பமுந்துன்பமுமாறத் தகையதாதலின் செல்வம்வந் துழிக்களிப்பதும், வறுமைவந்துழித்தக்கிப்பது மின்றிநிற்றல். செய்தகன்மமென்றது; நற்கன் மதுர்க்கன்மத்தை. நற்கன்மம், நடந்துகாட்டல். துர்க்கன்மம், பொய்சொல் லல். பொய்சொல்லலாவது, இவர்நின்றுழிவினாந்தோடும் பசுவைத்தான் காணினும்,பின்னரானாழிகைகழித்ததனைப்பற்ற வவ்வழித்தாய்க் கைவான் கொடுவினாந்தோடுவோ னிவனைக்கண்டுகேட்க, இவனிவன் கைவான் கண்ட றியேனென்னல், இதுபோல்வனபிறவுமாம். சிறந்ததுயிரோ, உணவோ ? உணவெனின்; அன்னம், காய், கனி, கிழங்கு முதலியவை யன்றே ? அதனல்வலியின்றெனின், உன்னுடல் எறும்பு, கணையான், நாய், புலிமுதலிய வற்றிற் கிரையாக நீ சம்மதிப்பையா?அதுபோலென்றறி. கொலைப்பாதகன் புலிமுதலியவைவக ளுயிரன்றே விவற்றைக் கொல்லலாமென்பதென்னை ? இடுக்கணினிட்டுழியென்க. தன்னுயிர்போற்காணுதுழியென்பயன்? இவை யனைத்தையு மனுநூலாற்காண்க. இஃதறிந்துசெய்தல். அறியாதுசெய்தலா வது; நடந்துசெல்லுழி எத்தனையோவுயிர் காலிலகப்பட்டுமாளலும், இன்னு மிவைபோல்வனபிறவுமாம். செய்தகன்மமெனப் பொதுப்படக் கூறியதனல், அறிந்து செய்தகன்மம்; அறியாது செய்தகன்மமென்றும். இஃதன்றியு மிக்கவியில் தானே இவர்செய்தபாவம், இவர்செய்த புண்ணியமென்றிருக் கின்றன, ஐயமென்னை? (கoச)

கoரு - கவி. அ - கை.

[அவித்தைமுதலிய மூன்றுகளுவு நசிக்குமா றிங்ஙனமென விக்கவியிற் கூறுகின்றார்.]

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடனீ ருமே
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணிமாகி விழுமக் கோ
முரியருக் குமச ரீர முலையிரும் புண்ட நீர்போற்
றுரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி னிறந்து போமே.

(இ-ள்.) அரியமெய்ஞ்ஞானத்தீயா லவித்தையாமுடனீருமே, எ-து. கிடைத்தற்கரிய மெய்ஞ்ஞானமென்னு மக்கினியினு லவித்தையென்னுங்

காரணசரீரம்பஸ்மமாம்:—பெரியதூலமுங்காலத்தாற்பிணமாகிவிழும், எ-து. பருத்த தூலதேகமும் பிராரத்தமுடிவுகாலத்திற் பிணமாகவிழுந்துவிடும்:—அந்நோரமுரிய சூக்குமசரீரமுலையிரும்புண்ட நீர்போல், எ-து. அக்கணமே தனக்கென்றுரிய சூக்குமசரீரமோ உலக்களத்தி லக்கினியிற்காய்ச்சி வெளியிலெடுத்த விரும்பிற்பெய்த நீரெங்ஙனஞ் சுண்டிப்போமோ அதுபோல;—துரியமாய் விபுவாய்நின்றசொரூபத்திலிறந்துபோமே, எ - து. துரியமாயும் வியாபகமாயும் வினங்காநின்ற பிரமசொரூபத்தில்நாசமாம், எ-று.

அவித்யாநாசம் வேறொன்றுலன்மையின் ஞானத்தியாலெனவும், புல் பூண்டு நாசமாயினு மீண்டுமுளைப்பதுபோலாமென்னுங் குறிப்பை மறுக்க நீறுமெனவும், தூலநாசம்வேறொன்றுலன்மையின் காலத்தாலெனவும், அவித்தை நீறுயவிடத்து மீண்டும் முளைக்காதென்பதுதோன்றப் பிணமாகிவிழுமெனவும், அவித்யாநாசம்வரினும் சொரூப முதியாவிடத்துநிக்குமென்பது தோன்ற, அந்நோரமுரிய சூக்குமசரீரமுலையிரும்புண்ட நீர்போல் துரியமாய் விபுவாய்நின்ற சொரூபத்திலிறந்துபோமே யெனவுங் கூறினர். அவித்தை, தன்னைறயொன்றுவுணர்தல். அவித்தையாகிய காரணசரீர நீங்காவளவும் மனமாகிய சூக்குமசரீரங் கணக்கின்றிவந்தழியும். அம்மனமாகிய சூக்குமசரீரம் நீங்காவளவும் தூலசரீரங் கணக்கின்றி வந்தழியும். காரணசரீரநசிப்பே சூக்குமசரீரநாசம், சூக்குமசரீரநசிப்பே தூலசரீரநாசம். இங்ஙனமாதலி விளக்க விக்கவியிற் கூறியமுறையென்க. (க0ரு)

க0சு - கவி - அ - கை.

[காரணசரீரநாசவாசனுவிழப்பே விதேகமுத்தியாதலா லிந்த விதேகமுத்தி நிலையைச் சீவன்முத்தர்க ளடைடவொன் பதை யிக்கவியிற் கூறுகின்றூர்.]

கடமெனு முபாதி போனற் ககனமொன் றுனற் போல
வுடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன் முத்த
ராடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்.

(இ-ள்.) கடமெனுமுபாதிபோனற் ககனமொன் றுனற்போல, எ-து. குடமெனுமுபாதி யழிந்துபோனல் நான்காகாயமு மேகமாவதெங்ஙனமோ வதுபோல:—உடலெனுமுபாதி போனவுத்தரஞ் சீவன்முத்தர், எ-து. காரணசரீரத்தோடேனையவிரண்டுசரீரமு மொக்க நசிக்கும், நசித்தவக்கணமே சீவன்முத்தர்கள்:—அடிமுடிநடுவுமின்றி யகம்புறமின்றி, எ-து. ஆதிமத்தியாந்தமென்பதின்றியும் அகம்புறமென்பதின்றியும்:—நின்றபடி திகழ்விதேகமுத்திப் பதமடைந் திருப்பரென்றும், எ-து. இருந்தவண்ணமிருந்தென்றுமொருதன்மைத்தாக விளங்குகின்ற விதேகமுத்தி நிலையை யென்றுமொருபடித்தா யுண்டிருப்பர், எ-று.

கடமெனுமுபாதிபோனற் ககனமொன்றுனற்போல என்றதனால், மே கமென்னுமுபாதிபோனற் ககனமொன்றுனற்போல வென்பதைவருவிக்க வேண்டும், வருவித்தால் மாத்திரம் நான்காகாயமுமேகமாகலாம். அங்ஙன மன்றேல் கடாகாயமும் கடசலப்பிரதிபிம்பாகாயமு மொன்றுனற்போல வெனப்பொருள்படும். படவே, சீவனுஞ் சீவசாட்சியுமேகமாம்; ஏகமாயின், ஈசனும்ஈஸ்வரசாட்சியுமேகமாவதென்றோ, இன்றுயின், மாயாகாசமின்றும்; இன்றுயின் மீண்டுமெவித்தைதோன்றும்; தோன்றவே, முன்போலவிபரீதம யமாம். ஒன்றைச்சொல்லும்போ ததனினத்தையுங்கூட்டி முடிக்கவேண் டும். என்னை, ''ஒன்றினமுடித்தறன்னினமுடித்தல்'' என்பதோருத்தி, என் றுர்ப்வணைந்தி. உடலெனுமுபாதியோன வுத்தரமென்பதற்குப்பொருள், மாயை, அவித்தையென்னுங்காரணசரீரத்தைக்கொள்ளாவிடில், சூக்கும, தூல தனுநாசத்தான் முத்தியெய்தற்பாலதோ, அடைந்தாருளரோ, அங்ஙனங்கூறுஞ் சுருதியாதானுமுளதோ, உளதெனிலஃதற்பசுருதி, இஃதுநம்பிக் கைநூல்போலன்று, எதார்த்தம். எங்ஙனமெனின், உணர்தற்பாலதுடல லன்று, உயிராதலின், உணர்வையுயிரெனப்பெற்றும், இங்ஙனமாயதைவிளக் கவிதேகமுத்திப் பதமடைந்திருப்பவென்றுர்.

(க-து.) சீவன்முத்திமேலீடே விதேகமுத்தியென்பது. (கoசு)

கoஎ● கவி. அ - கை.

[இவ்வனுபவம்பண்டையதேயென வுதாரண
முகத்தாலிக்கவியிற்கூறுகின்றுர்.]

சொல்லிய மகனே யெங்குஞ் சூழ்வெளி யிருக்க மண்ணைக்
கெல்லிய பின்னர்த் தோன்றுங் கிணற்றிரு காயம் போல
வொல்லையாம் பிரம நூலா லுற்றது போலே தோன்று
மெல்லையி னுமெப் போது மேகமென் றிருந்தி டாயே.

(இ-ள்.) சொல்லியமகனேயெங்குஞ் சூழ்வெளியிருக்க, எ-து. எனதி ட்டப்படி நிட்டைகூடிச் சொல்லியஞானபுத்திரா ! பூமியைச்சூழ்ந்த வெளி யான துள்ளும்புறம்புமெங்கணும்பூரணமாயிருக்க வதனைவிட்டு:—மண்ணைக் கெல்லியபின்னர் தோன்றுங் கிணற்றிருகாயம்போல, எ-து. மண்ணைக் கிண்டி யாழமாகத்தோண்டியபின்னர் புதிதாகத்தோன்றுங் கிணற்றிலுள்ள வாகாயத்தைப்போல:—ஒல்லையாம் பிரமநூலாலுற்றதுபோலேதோன்றும், எ-து. பழமைக்கெல்லாம் பழமையாகியபிரமசொரூபமானது, ஞானசாஸ் திரத்தா லிப்போது நூதனமாக வுதித்ததுபோல விளங்கும். (அங்ஙன மன்று.):—எல்லையி னுமெப்போது மேகமென்றிருந்திடாயே, எ-து. காலா தீதமானநா மெப்போதுமேகமாக விளங்கும் பிரமசொரூபமென்றகலாதிருந் திடுக, எ-று.

கிணற்றுகாயம் புதிதாகத்தோன்றுமாறுபோன்று, ஞானசாஸ்திரவிசா ரமுகத்தாற் பிரமம் நூதனமாகவுதித்ததுபோற்றுன்றினும் அங்ஙனமென்

ணற்க. காமே பிரமசொரூபமா யிருக்க முன்னர் விளங்காததென்னை? இப் போது விசாரித்ததுபோல அப்போதும் விசாரிக்கினிதேபிரகாரமாக விள ங்குதும், ஆதலினப்போதொருபடித்துமிப்போதொருபடித்துமன்றுகாமெம ன்பார், எல்லையிலுமெப்போதுமேகமென்றிருந்திடாயே யென்றார்.

(க-து.) என்று மொருபடித்தா விளங்குவமாதலின் விடாதுபற்றுகவெ ன்பது. இன்னநிலையினம்யாமென் றளவைநூலாலெல்லைகணித்தற் கரிய மெனப்பொருள் கொள்ளினும், எல்லையிலுமென்பது பொருந்தும். (கo எ)

கo அ - கவி. அ - கை.

[இதனினு முறுதிமொழி வேறின்றென விக்கவியிற்கூறுகின்றார்.]-

கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்க ணுவூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
பீனமாந் தறிபு மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானமெய்ம் மகனே யுன்னை நம்மாணை மறந்திடாதே.

(இ-ள்.) கானனீர்கிளிஞ்சில்வெள்ளி கந்தர்ப்பநகர் சனுவூர் வானமை கயிற்றிற்பாம்பு மலடிசேய் முயலின்கோடு பீனமாந் தறிபுமர்னிற் பிரபஞ்ச மெல்லாம்பொய்யே, எ-து. கானலின்கண்ணீர்போலவும், கிளிஞ்சலில் வெள்ளிபோலவும், கந்தர்வநகரம்போலவும், சொப்பனப் பிரபஞ்சம்போல வும் ஆகாயத்திற் கருமைபோலவும், பழுதையிற் பாம்புபோலவும், மலடி புத்திரன்போலவும், முயல்கொம்புபோலவும், பருத்தகட்டையிற் கள்ளன் போலவும், சமஸ்த பிரபஞ்சமும் பொய்யே:—ஞானமெய்ம்மகனே யுன்னை நம்மாணை மறந்திடாதே, எ-து. பரஞானமொன்றுமே மெய், சற்புத்திரா நீஞானமாதலினுன்னையென்மேலாணைப்படி மறவாம லதுவாக விளங்குதி, எ - று.

சமஸ்தமு மித்தையென்பதற்குத் திஷ்டாந்த மொன்பதுவகையுள், மல டிசேயென்பதொன்றுஞ் சொன்மாத்திரம். ஏனையவெட்டும், சொன்மாத்திர மும் தோற்றன்மாத்திரமுமாம். ஒவ்வொருபூதமுந் தத்தங் காரியவகையால் மகத்தாகும், காரணவகையா லணுவுமாதல்போல, அண்டபிண்டமுதலிய பௌ திகமும். இதனை வஸ்துபரிசோதனையாற்காணலாம். இஃதன்றியும், ஆகா யத்தையன்றி நான்குபூதமும், நான்குபூதத்தையன்றி யண்டபிண்ட சராசர வடிவங்களுமில்லையே; ஆகாயம், சமஸ்தத்திற்கு மாதாரமு மகம்புறமு மாயிற்பதுபோலத் தனக்கெங்கே? இன்றெனின், யாதுபொருள்? இருக்தா லன்றே கணிக்கலாமெனின், எவற்றிற்கு மாதாரமாவானேன்? அங்ஙனந் தோற்றன்மாத்திரமன்றி வேறன்றென்னின், சூனியமென்னலாமே; இதனை மறுப்பது வழு. சூனியமெனல் பொய்யன்றேவெனின், தனக்கெனச்சுயம் பொன்றின்மையின் பொய்யே. ஆகாயம் பொய்யாயின், அதன்காரியமனைத் தும் பொய்யாகவேண்டுமே யெனின், சூனியமா முடியாது சோதனையிற் காட்டவேண்டுமே, கூடாதெனின், மறுப்பதென்னை? ஆதலின் சமஸ்தமும்

பொய்யெனவும், பொய்யென்றேறற்றற்றினையந்தவென்பதுவகை திருஷ்டா
ந்தமினைய வெனவுங்கூறினர். கூறியதாற்குற்றமென்னை, உண்டெனின்,
சோதனையாதியா லுணர்த்தவேண்டும். கூடாதேல் பேசாமைநன்கு. கான
லாதியே நீராதியாக மாறுத்தோற்றுமாறுபோன்று, ஞெப்தியே சகமாதி
யாகமாறுத்தோற்றலினிவ் வுவமைபொருந்தும். நீராதியாரோபம், கான
லாதியதிட்டானம். அதுபோலச் சகமாதியாரோபம், ஞெப்தி, அதிஷ்டா
னம். சமஸ்தமும்ஞெப்தியன்றேல், சோதனையில் சமஸ்தமும் ஞெப்தியாக
முடிவதென்னை. ஆதலின், பொருந்தும். இதன்றியும், ஆராய்வதன்முன்ன
ருலகம் நாமரூபமாகவும், பின்னான்ருகவுங் காண்டலியாது. நாமரூபம்பா
ழிலும், பாழ்நாமரூபத்திலுங் காணுததென்னை. ஒன்றிலொன் றின்ருதலி
னிஃதன்னியோன்னியாபாவமாயிற்று. இங்ஙனமாகநிற்பதும், நின்றுணர்
வது மறிவாதலா லிதுபாவம். பாவம், மெய். அபாவம், பொய். எனவே,
அறிவையன்றியாதுமின்றெனப்பெற்ரும். பெறவே, அனைத்துந்நிசியம்,
தானறிவு. என்ருயிற்று. ஆகவே, தன்னையன்றி யனைத்துமின்றெனக் கண்
டாம். காணவே, மறக்கவேண்டியதனைத்தையும், மறவாமலிருப்பது தன்னை
யுமெனப் பொருட்டாகின்றது. தருதலின், ஞானமெய்மகனேயுன்னை மறந்தி
டாதேயெனவும், இதுபோற்சத்தியம் வேறென்றின்மையின்நம்மானையென
வுங்கூறினர். மதத்தரிதனைமறுக்கவலியுளரேல் தமது ஞெப்தியைத்தள்ளி
யுலகிருக்கத்தெரிவிக்கட்டும். பூரணபண்டிதருமோ ; யாதானுமோர்பெயர்ச்
சொல்லையேனும், வினைச்சொல்லையேனும்,வஸ்துசோதனையில், அல்லவல்ல,
இல்லையில்லையென்றகலா திருக்கவு முபாதான வுபாதேயவகையால் விகார
மின்றியோர்முதலிருக்கவுந் தெரிவிக்கட்டும். கூடாதெனின், மறுத்தலும்
வலியுளர்போற் கூறலும், தம்போற்பேதையர் வியக்கவன்ரே. இதுநிற்க.
அனைத்துமித்தை, அறிவேசத்தியமென்று வேதமுடிவும் கீதைகளும், உபநி
டதங்களுங் கூறுவது, மூடத்தாலோ, விவேகத்தாலோ? மூடத்தாலெனின்,
அறிவையன்றித் தினைபாலிடமிருக்கத் தெரிவிக்கலாமே. கூடாதெனின்,
விவேகத்தாற்கூறியதென்பம். கூடாதெனின், சொல்வாதமாமுடியும்,முடி
யவே, பயனின்றியசொல்லாற் பகைதேரிட்டழிதும்." இக்கவி தத்துவவிளக்
கப்பட்டலமுடிவாதலா லிங்ஙனங்கூறினரெனவறிக. நான்குகால்த்திணு மித்
தையெனற்குத்தக்கவுதாரணங்கூறியது; என்றுமுள்ளுண்மையெனக்கொள்
ளாதிருத்தற்கும், இப்போதுமித்தையல்லவெனவும், ஓரவஸ்தையில்மற்ரே
ரவஸ்தையில்லாததால்மித்தையெனவும், வேதம் பொய்சொல்லுமாவென
வும், இதெல்லாம்பக்குவமுமனுபவமும் வந்தால்தெரியுமெனவும், இங்ஙன
மெல்லாம்விளவாது சொல்வதைக்கேட்ப தெமதுமரபெனவுங்கூறி யுணர்
வைவளர்க்கத்தெரியாதுணர்வுவளர்ப்பார்போற்காட்டி யுடலிலவளர்க்குங்க
ள்ளஞானியரிவரெனக்காட்டற்குமென்க. இப்போதுமித்தையல்லவெனின்,
அந்நியோன்னியாபாவம்யாதுக்கு, ஆதலின்வழு. ஓரவஸ்தையில்மற்ரோரவ

ஸ்தையில்லாததா லப்போது மித்தையெனின், அவஸ்தையொன்றிலொன்றில்லாதேனுமுலகமின்றே?உண்டெனின்,உலகமித்தையென்னலாமோ? இவனுக்கில்லையெனின், இவனுலகம். அன்றெனின், வேறுயிருக்க, இல்லையென்னலாமா? அதுவழு. வேதம்பொய்சொல்லுமாவெனின், உயிர்கள்செனிக்காததற்கிவ்வுலக காலவரையறையாதோ, இலதெனின், வாயின்றியவுலகைக் வேதமித்தையென்னலாமோ? இதனைச்சான்றோர்களேற்பதென்னகொலோ? அபிமானத்தாலன்றே அன்றெனின்; எப்போதின்றேவுலகம். எப்போதுமிருக்கின்றதெனின், வேதமுஞ்சான்றேருமுலகை மித்தையெனக்கூறுவதுவழு. இதெல்லாம்பக்குவமுமனுபவமும்வந்தால்தெரியுமெனின், இவ்விரண்டுநிலையும்வந்தநீர்மித்தையென்றுலகைக்கூறலாகாதோ? கூறுவதையுணர்தற்குவலியின்றேறலென்செய்வேனெனின், சுருதி, யுக்தி, அனுபவமென்னுமூன்றனுள், அனுபவம்பின்னராகட்டும்,இப்போது முரணின்றிச் சுருதி யுலகைமித்தையெனற்குனைகூறலாகாதோ? வாசித்தால்தெரியுமெனின், வாசிக்கத்தெரிந்துமெவருமுனைகேட்பானேன். இன்னுருபோதாகட்டுமெனின், எங்கேனுங்கேட்டுவந்து சொல்லுதற்கோ ? அன்றெனின், இப்போதுசொல்லலாமே. யோசிக்கவேண்டுமெனின், யோசியாமற்றெளிந்ததெங்ஙனம். இதெல்லாமுழுப்புறட்டு, ஆதலின் வழு. இங்ஙனமெல்லாம்விளுவாது சொல்வதைக்கேட்பதெமதுமாபெனின், அஞ்ஞானஞ் சந்தேகம், விபரீதந் தெளிவதெங்ஙனே? கேட்டுக்கொண்டுவரில்தானே தெளியுமெனின், அங்ஙனந்தெளிந்தநீர்சொல்லலாமே. சொன்னுல் கேட்கவலியுண்டோவெனின், உண்டோவில்லையோ? அதைக்குறித்து முன்னமேபேசியாயிற்று. முன்போல்வளர்த்துச்சொல்லல் விவர்த்தமாம். ஆதலினிதுவும் வழு. முறையேயிவையெல்லாந்தெரியாதார், உலகுபொய், ஞானமெய்யென்பதைவாசித்துமென்பயன். கேட்டுத்தெளிந்தாலன்றிப்பயன்படா. கேட்டுத்தெளிந்தவனீயாதலின், ஞானமாகியவுன்னை மறந்திடாதேயெனவாணையிட்டுக்கூறினர். சத்தியஞ் சத்தியம். (கoஅ)

தத்துவவிளக்கப்படலம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சந்தேகந்தெளிதல்படலம்.

)(*)(

சந்தேகந்தெளிதலாவது; சந்தேகத்தினின்றுதெளிதல். முன்னர் தத்துவவிளக்கப்படலத்தில் ஞாயிறவான்மாலைவிளக்க, விளங்கிறற்போல, சகமாதிநிர்த்தார்த்தங் காரணமாகவெழுமையத்தைத் தெளிவிக்கத்தெளி

தல். இஃதைந்தாம்வேற்றுமைத்தொகை நீங்கற்பொருள். ஆதலின் தத்துவ விளக்கப்படலத்தின்பின் வைக்கப்பட்டது.

க - கவ். அ - கை.

[முன்னர்சொலுபசமாதிக்கண் தானே தாகைத்தனித்தசித்த விருத்தியானதுமீண்டுந்திரும்பாதங்ஙனந் திரப்படவேண்டியதற்கு மாறுவதிக்குமையந்திரிபுகளையகற்றித் தெளிவுபெறுதெறியை யிக் கவியிற்கூறுகின்றார்.]

நார்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்ப
மூர்முறக் குத்திக் குத்தி யுரப்பிக்கு முபாயம் போலப்
பாமமாஞ் சொலுபந் தன்னிற் பற்றிய மனவி ருத்தி
நிரநிலை பெறச்சந் தேகந் தெளிதலை மொழிகின் றேனே.

(இ-ள்.) நார்குழிபறித்துமெள்ள நாட்டியநெடியகம்பம், எ-து. மனி தர்களாழமாகக்குழிதோண்டி மெதுவாகநாட்டின பெரியகம்பமானது: — உரமுறக்குத்திக்குத்தி யுரப்பிக்குமுபாயம்போல, எ-து. இனியாதினுனு மையாதுறுதிபடவேண்டிக் கல்முதவியவைகளைப்பெய் தக்குழியைக்குத்தி க்குத்திப் பலப்படுத்துமாறெங்ஙனமோவதுபோல: — பரமமாஞ்சொலுபந் தன்னிற்பற்றியமனவிருத்தி, எ-து. பிரமசொலுபத்திலழுந்திய மனவிருத் தியானது: — நிரநிலைபெறச்சந்தேகந் தெளிதலைமொழிகின்றேனே, எ-து. அங்ஙனமேயுறுதிபெறும்வண்ணஞ் சந்தேகந்தோன்றுமாயி னதனைக்களைந் துதெளிவுபெறுமாறெங்ஙனமோ வங்ஙனமாயதெறியைத் தெரிவிக்கின்றே ன், எ-று.

"சித்தின்முயல்வாற்சித்தாகுஞ் செடத்தின்முயல்வாற்செடமாகும்" என்று மனவிருத்தியிருப்பதனால், மீண்டுஞ்சடமாகாவண்ணங்காக்கவே ண்டும், காத்தற்கிடையூறென்னை? சகசசமாதியின்றுதலின் உலகந்தோன் றும். தன்னெறிக்கண்ணிற்கினஃ திருக்கினுந்தோன்றுது. அயர்ந்தால்தோ ன்றும், ஆதலினுலகைச் சின்மாத்திரமாகக்கனாக்கில் தோன்றினுந்தோன் றுவிடினுமிடையூறின்று. அங்ஙனங்கனாப்புழித்தடைகள்வரும். அத்தடை களாவன; மலவிசர்ச்சனம், சலவிசர்ச்சனம், இவைபற்றியேனும், உணவுப ற்றியேனுஞ் சொலுபசமாதிவிட்டகலவேண்டும், அகல்வுழித்தேகந்தோன் றும், தோன்றவே சராசரந்தோன்றும், தோன்றவே, தேசம் - காலம் - வீடு- பட்டணமுதலியவைதோன்றும், தோன்றவே திரிபுடிதோன்றும், தோன்ற வே இச்சாஞானக்கிரியையுண்டாம், உண்டாகவே, விர்த்திகள்மேலிட்டழி வதுபோல்வன. ஆதலின் நிட்டைகலையும்போதே சங்கற்பந்தோன்றும், அங் ஙனந்தோனறுவதுதெளுப்தியாதலா லதனையங்ஙனே சிற்ப்ரகாசமாகவிளக் கி லனைத்துமங்ஙனமாம். திரிபுடியுஞ்சிற்ப்ரகாசமா யேகமாகவிளங்கும். இங்ஙனம்பழகல்சகசசமாதி. இதற்குத்தடைசந்தேகம். இதனைக்கெடுத்தல்

தெளிதல்; ஆதலின்நிராநிலைபெறச்' சந்தேகந்தெளிதலைமொழிகின்றேனே யென்றார். நிராநிலை, நிரஞ்ஞானமெனினுமமையும்.

(க-து) பரஞ்ஞானமாகவிளங்கியுமனம், நிரஞ்ஞானமாதற்குத் தடைகளைக்களைதலென்பது. (க)

உ - கவி - அ - கை.

[தத்துவவிசாரமுதல்விதேகமுத்திபரியந்தம் ஆசிரியனைப்பிரியாதிருந்தனனென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

நற்கருத் துடையோ னகி ஞானவா னகி நின்றோன்
மர்க்கட நியாயம் போல மகாபூத விகாரந் தொட்டு
நிர்க்குண விதேக முத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன
சற்குரு வினைவி டாமற் சந்தத மனுச ரித்தான்.

(இ - ள்.) நற்கருத்துடையோனகி ஞானவானகிநின்றோன், எ - து. சிற்சோதிநாட்டமகலாக்கருத்துடையோனகியும், அயல்வடிவந்தானகாது ஞானவடிவமேதானகியும் விளங்கிநின்றமானுக்கன்:— மர்க்கடஞாயம்போல மகாபூதவிகாரந்தொட்டு நிர்க்குணவிதேகமுத்திநிலைபரியந்தம், எ - து. மர்க்கடஞாயமெங்ஙனமோ வதைப்போலத் தூலபஞ்சமகாபூதவிகாரமாகியதூலதேகமுதல் குணரகிதமாவிளங்கும்விதேகமுத்திநிலை பரியந்தமுள்ளவனுபவரசங்களை: — சொன்னசற்குருவினைவிடாமல் சந்ததமனுசரித்தான், எ-து. விடாமற்சொன்னசற்குருவைவிட்டுநீங்காமல் சதாகாலமுந்தொடர்ந்திருந்தனன், எ-று.

மர்க்கடஞாயம், குரங்குபோற்பற்றுஞாயம். அதாவது, கோப்புரமேறிக்கீழ்க்குதிக்கினுங் தனதுதாயைவிடாதுபற்றுமுறைமை. மர்க்கடம் - நிர்க்குணமாரியமொழியாதலின் ரகரமாயிற்று. என்னை, "றனழஎஒவ்வுழுயிர்மெய்யுமுயிரள பல்லாச்சார்புந்தமிழ்பிறபொதுவே" என்றுர்ப்பவணந்தி. மர்க்கடஞாயம்போலச் சற்குருவினைவிடாமல் சந்ததமனுசரித்தானெனமுடித்துப்பொருள்கொள்க. (உ)

ங - கவி. அ - கை.

[மாணுக்கனைச்சோதிப்பான்வேண்டி மூன்றுகேள்விகேட்டலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

சந்ததம் புருடன் றன்னைச் சாயைபோல் விடாத வன்பா
மைந்தனை நோக்கிச் சாட்சி மாத்திர மாகின் றுயோ
சிந்தையி லைய மெல்லாந் தீர்ந்தவோ தெளிவி னுள்ளே
யந்தரங் கலந்த துண்டோ வனுபவ முரைசெய் வாயே.

(இ-ள்.) சந்ததம்புருடன்றன்னைச் சாயைபோல்விடாதவன்பாமைந்தனைநோக்கி, எ-து. ஓர்புருடனது தேகசாயையானது எப்போதுமவனைவிட்

நீங்காவா றெங்ஙனமோ அதுபோல ஆசிரியனைவிட்டு நீங்காத வன்பேவடி வாயமைந்த சற்புத்திரனேநோக்கி:—சாட்சிமாத்திரமா நின்றீரோ, எ-து. கூடஸ்தபிரமமாக விளங்குகின்றனையோ:—சிஷ்டதயிலேய மெல்லாந்தீர்ந்த வோ, எ-து. உன்மனதிற்கிடந்த சந்தேகங்களனைத்து நீக்கினவோ:—தெளிவினுள்ளே யந்தரங்கலந்துண்டோ வனுபவமுனைசெய்வாயே, எ-து. பேதரகிதமான சுவானுபவத்தெளிவின்கண் யாதானும்பேதம்வந்து கலந்ததோ? இஃதெனக்குத்தெரியும்படியாக வுனதனுபவத்தைச்சொல்லுதி, எ-று.

விடாமலெனின், வினைகொண்டுமுடியவேண்டும். அங்ஙனமின்றே, மைந்தனென்னும் பெயர்கொண்டுமுடிவதால் விடாதவெனப்பெயரொச்சமாக்கினும். வலிந்துமாற்றிப்பொருள்கொள்வதினு மிதுநேரானதாலென்க. சாட்சிமாத்திரமா நின்றீரோவென்னுங்கால், சீவேசராகிய கற்பிதத்தை விட்டென்றற்றொடக்கத் தொழிந்தசொற்களைத் தருதலிழுழியிசை. சகசமாதியாலன்றி யகலாச்சந்தேகங்களின்னின்னவாதலி னதனையுணர்த்தச் சிந்தையிலேயமெல்லாந் தீர்ந்தவோவெனவும், பேதரகிதமேதெளிவாதலின் தெளிவினுள்ளேயெனவும், விகற்பபுத்திசற்றேலருதலியல்பாதலின், அந்தரங்கலந்ததுண்டோவெனவும், நினதனுபவமுனைத்தாலன்றியிவற்றைத் தெரிந்தகற்றற்கொண்ணுமையின், அனுபவமுனைசெய்வாயே யெனவுங்கூறினர்.

(க-து.) களங்கமற்ற வனுபூதியாகிறகண்ணுடியி லழுக்குப்படிதலியல்பாதலெனத் தெரிந்தவராதலினிங்ஙனம்வினவினரென்பது. இதுசோதனை.

சு - கவி. அ - கை.

[தனதனுபவவிளைதவுல்லாசத்தைத் தானே தனக்குள்கண்டு வியப்புற்றுசிரியனைப்புகழ்ந்து துதிக்கின்றனென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

எனவுனைத் தருளு மாசா னிருபதம் வணங்கி யெந்தாய்
சனனவன் காட்டின் மோகத் தமத்தெழு பேதப் பேய்க
ளுனதரு ளுதய வெற்பி லுபதேச வருக்கன் றோன்றி
மனவிழி தெரிய ஞான வான்கதிர் பரந்தா லுண்டோ.

(இ-ள்.) எனவுனைத்தருளுமாசா னிருபதம்வணங்கி, எ-து. என்றுவினவியருளுசிரியரதுபயபாதங்களையும்வணங்கி:—எந்தாய் சனனவன்காட்டின்மோகத்தமத்தெழுபேதப்பேய்கள், எ - து. எமதுகர்த்தனே பிறவியாகிய கொடியவனத்தின்கண் மூடியமோகமென்னுமிருளிலெழுதற்குரிய பேதமாகிறபேய்க்களனங்கள்:— உனதருள்தயவெற்பி லுபதேசவருக்கன்றோன்றி எ-து. உனதருளாகிறவுதயகிரியில் ஞாலுபதேசமென்னுஞ்சூரியனுதமாய்: மனவிழிதெரியஞான் வான்கதிர்பரந்தாலுண்டோ, எ-து. மனமாகிறகண்ணுக்குத்தெரியும்படியாக மேலானஞானகிரணங்க ளெங்கணும்வியாபித்துக் கொண்டோற் கணமேனுந்தங்குமா, எ-று.

சஞ்சிதங்கள் காடுபோலடர்ந்திருத்தலின், சனனவன்காடெனவும், காடென்ஞதுவன்னென்றது, எவருந்திகைத்து மீளாத்தகையதெனற்கு ; இதனைத்தத்துவஞானவிகளறிவரன்றி யேனையோர் சற்றுமறியார், இதுநிற்க. மோகம், மயக்கம். அதாவது ; தேகமுதலிய பிரபஞ்சங்களே மெய்யெனக்காண்டல். அடர்ந்த காட்டுக்கிருளகலாமீபோன்று, அடர்ந்தசெனனங்கட்கு மோக்மகலாமையின், மோகத்தமமென்னவும, உடலுமுயிரும்பேதம் போற்றோற்றினுஞ் சடமுஞ்சித்துமாதலி னெங்ஙனமேகமாம், இங்ஙனமாயபேதமயமேயன்றி யனைத்துமெங்ஙனமேகமாகலாம், இப்பேதபுத்தியகன்றசமயவான்க ளெங்ஙனுமில்லவேயில்லை. பேதபுத்தியைப்பேதமென்றது, குணவாகுபெயர். பேதபுத்திதனியேநிற்பதுகூடாமையி னிங்கேயுதனையுடையோனையென்க. அதனையுடையோரத்துவிதி நீங்கலாகச் சமஸ்தமதஸ்தரும் அபேதவாதத்திற்கத்துவிதியொருவனேயுத்தரவாதி. அவ்விருளே யகலாதுவாழ்தல் பேய்களாமாறுபோன்று, அம்மோகஞ்சற்றுமகலாதுவாழ்தல் பேதவாதமாதலின் பேதப்பேய்களெனவும், எழுவென்றது வினைத்தொகை. பேய்களெழுந்து சஞ்சரித்தற்குரிய நிசாக்காலம், அதுபோலப் பேதவாதிகளெழுந்து வாதித்துத் திரிதற்குரியது மோககாலம், ஆதலினெழுவெனவுங் கூறினர். இதுபந்தத்துக் கியைவதுபற்றியென்க. அருளின்றியக்கண் ணுபதேசமெழாது, உதயகிரியின்றியக்கண் சூரியோதயமெங்ஙனமாம், ஆதலின் உனதருளுதயவெற்பெனவும், பூதசூரியனுதித்தழியன்றி யூனக்கண்காணவறியாது, அதுபோல ஞானசூரியனுதித்தழியன்றி யக்கண் காணவறியாது ஆதலி னுபதேசவருக்கன் றேன்றியெனவும், கண்ணில்லாவிடத்துப் பூதசூரியோதயத்தாலென்னபயன், அதுபோலப் பரிபாகமனமில்லாவிடத்துஞானசூரியோதயத்தாலென்னபயன், ஆதலின் மனவிழிதெரியவெனவும், இவ்விருசூரியனொழினுஞ் சோரர்முதலிய சத்துருக்கள் பதுங்கற்கிடஞ் சற்றுண்டாயினுமுண்டாகலாம், தமது கிரணங்க ளெங்கனும்பரவி னப்போதிடமெங்கே, இடமின்றுகவே, யவர்களுளரோவென்பார், கதிர்பரந்தாலுண்டோ வெனவுங்கூறினர். இது விடதிக்கியைவதுபற்றியென்க. உண்டோவென்பதெதிர்மறை, உண்டோவென்னுங்குறிப்பு வினைமுற்றுக்கெழுவாய், பேதப்பேய்கள். சனனவன்காடு, மோகத்தமம், பேதப்பேய்கள், இவைமூன்றும், இவற்றிற்கெதிர்மறையாய, அருளுதயவெற்பு, உபதேசவருக்கன், மனவிழி, ஞானவான்கதிர், இவைநான்கு முருவகம். இக்கவியிற்கூறியது நிச்சயஞானமன்று பிரத்தியட்சஞானத்தை. எவ்வுயிருமறிவையன்றியில்லை, அறிவன்றே வுடலேறுநானென்பது, அந்தவறிவுதானே, தேகோகமுதல் சிவோகமிறுதியாகநின்றது. வேறெனின் காட்டவேண்டும், கூடாதெனினெதுத்துக்கொள்ளவேண்டும். இன்றெனி னறியாதிருக்கவேண்டும். ஆதலின், தேகமுதல் சிவம்வனையு மிவற்றையகமெனிலிவையத்துமாகுமா, இவையயலன்றே, இது ஞானமாகுமா, அறிவு தன்னையேதானெனச் சுருதியுத்தி

யாலோர்தல், நிச்சயஞானம். அது சுசரிதமுதலிய கற்பனையற்றதெனத் தேர்தல், அபரஞானம். அதனையுள்ளவாறுகாண்டல், பரஞானம். நிரிபுடியனைத்துஞ் சின்மாத்திரமாவிளங்கல், நிரஞானம். இங்ஙனமிருத்தலினித னமறுப்பார், அறிஞரொனப்படினு மேற்பதெங்ஙனம். (சு).

ரு - கவி. அ - கை.

[இங்ஙனந் துதித்தமாணக்க ஞசிரியனைநோக்கி யின்னுமடியே னத் திருத்தவேண்டியதுளதே லதனைத்தெரித்தருளவேண்டுமென் றிரந்துகேட்டனை யிக்கவியிற்கூறுகின்றார்.]

மந்திர மூர்த்தி தன்னுன் மாற்றிய பேய்போ னலு
மெந்திர வெழுதிக் கட்டி யினிவரா வகைசெய் வார்போன்
முந்தியுன் னுபதே சத்தான் மோகம்போ னலு மையா
புந்திநின் றுறைக்க வின்னம் புகலும்விண் ணப்பமுண்டே.

(இ-ள்.) மந்திரமூர்த்தி தன்னல் மாற்றியபேய்போனலும், எ-து. மந்திரக்காரனலே புத்தியைவிகாரப்படுத்திய பேய்நீங்கினும்:—எந்திரமெழுதிக்கட்டி யினிவராவகைசெய்வார்போல், எ-து. எந்திரஸ்தாபிதஞ்செய்து அந்தப்பேய் மீண்டுமெனுகாவண்ணந் தக்கதந்திரஞ்செய்பவர்களைப்போல:—முந்தி யுன்னுபதேசத்தால் மோகம்போனலும், எ-து. முன்னோதேவரீருபதேசித்ததாலுதித்த ஞானசூனியமல் மோகவிருணீங்கினும்:—ஐயா புந்திநின்றுறைக்கவின்னும் புகலும்விண்ணப்பமுண்டே, எ-து. ஐயனே யெனதுபுத்தியான தப்பிரமத்திலுறைந்திருக்கவேண்டியடியேன்கேட்டுக்கொள்ளவேண்டிய விண்ணப்பஞ்சிலவுள, எ-று.

சிற்சிலதடுமாற்றந் தனக்குவேதான்றலைப்பற்றிப் புந்திநின்றுறைக்கவின்னும் புகலும்விண்ணப்பமுண்டேயென்றார். (ரு)

சு - கவி. அ - கை.

[துரியாதீதமாகக் குருவைக்காண்டலி னிவனைச் சிவமெனக் கருதித் தேவரீர்யாதுபற்றிப் பிரமம் மலைவாக்குக்கெட்டு மெட்டாதென வேதத்திற்கூறினீ ரதனைத் தெரிவிக்கவேண்டுமென்று மாணாக்கன்விணவியதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

ஆகமப் பிரமா ணத்தா லறியென்றும் வாக்குக் கெட்டா
தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணர்வா யென்றுஞ்
சோகமா மனதிற் கெட்டாச் சுயஞ்சோதி யென்றுஞ் சொன்னீர்
மோகமா மிரண்டு சங்கை முனைத்தன பறித்தி டீரோ.

(இ-ள்.) ஆகமப்பிரமாணத்தா லறியென்றும் வாக்குக்கெட்டா தேகமாம்பிரமமென்றும், எ-து. அஷ்டவிதப்பிரமாணத்து ளொன்றுமிய சுத்தப்பிரமாணத்தா லறிவாயென்றும், மீண்டுமெந்தச் சுத்தப்பிரமாணத்தா லந்த ஏ

மாகிய பிரமமுனக்கெட்டாதென்றீம்:—இதயத்தாலுணர்வாயென்றுஞ் சோகமாமனதிற்கெட்டாச் சுயஞ்சோதி யென்றுஞ்சொன்னீர், எ-து. மனத்தாலறிவாயென்றும், மீண்டுமந்தச்சோகமாகிய மனத்தினு லந்தச்சுயஞ்சோதியாகிய பிரமமுனக்கெட்டப்படாதென்றும் பூர்வத்திலீசனுகநின்று வேதத்தைச்சொன்னீர்:—மோகமாமிரண்டுசங்கை முன்னத்தனபறித்திடுமோ, எ-து. இப்போதடியேனுக் கந்தமயக்கமான விரண்டுசங்கைகளெனதகத்திலுதித்தனவவற்றை மெல்லத் தேவரீர் கனிந்தருளவேண்டும், எ-று.

பிரமசொரூபம்; வாக்குக்கெட்டு மெட்டாதென்றும், மனதுக்கெட்டு மெட்டாதென்றுமாதியி லசரீரியாகநின்று வேதங்கூறினது நீரன்றே?—அன்றெனில், இப்போதடியேனுக் கவ்வேதத்தி னரியாகசியங்களையெல்லாம்வெளியாகவிளக்கிவித்தது நீரன்றே? ஆதலின், நீரேயென்பதைத்தான்றே வெழுவாயாக்கிஞும். சொன்னீரென்பதற்கு வேறுவினைமுதலின்றுதல்பற்றியென்க. அன்றுசொன்னவர் நீராதலினின்றுவிளக்கற்கு நீரானீர், ஆதலின்பரமசிவமே குருமுகுர்த்தமென்பதற் கையமின்று. இந்நூலில்தானே மாணிக்கன்சொன்னது; ஈசனுமாயருவாயுருவாகி யெழுந்தருளுங்குருவேயென்றன். என்னை, "மறைமுடியதனில் விளங்கிடுமொளியே மனிதனைப்போல்வந்ததெனுமென் சிறைதவிர்த்தாண்ட சிவப்பிரகாசதேசிகன்." என்றுர் சாந்தலிங்கசுவாமிகள். இன்னும் பலருஞ்சொல்லினர். இங்ஙனமிருப்பதுபற்றி வேதத்திற்கூறியதன்றி யில்லாததைச்சொல்வதன்று. விபரமாகப்பின்னர்கூறுதும். (சு)

ஏ — கவி. அ — கை.

[முன்னர்ப் பிரமம் வாக்குக்கெட்டாதென்பதையிக்கவியிற் கூறுகின்றுர்.

மற்றைமுப் பிரமா ணத்தால் வஸ்துநிர் ணயங்கூ டாதே
யுற்றதோர் விடயம் பூத முபயமன் றுத லாலே
குற்றமாங் குணஷி சேடங் கூடாம லிருக்கை யாலே
யிற்றது வாக்குக் கெட்டா தென்பது மறிவாய் நீயே.

(இ-ள்.) மற்றைமுப்பிரமாணத்தால் வஸ்துநிர்ணயங்கூடாதே, எ-து. சத்தப்பிரமாணத்தா லன்றியும், ஏனைய பிரத்தியட்சம். அனுமானம், உபமானமென்னு மூன்றுனும் பிரமவஸ்து இன்னநிலையதென யாவராலு நிச்சயிக்கவொண்ணுது:—(எனெனில்,) உற்றதோர்விடயம்பூத முபயமன்றுதலாலே குற்றமாம், எ-து. எதிரிற்காணவுற்றது பிரத்யக்ஷமாகத்தகுவதெனின், அஃதோர்விடயமாம். அனுமானிக்கத்தகுவதெனின், தனதுகாரியத்திற்குத்தானேர்காரணமாம். உபமானிக்கத் தகுவதெனின், தனக்கோருபமானம்வேண்டலி னிரண்டாம். இங்ஙனமெல்லாந் தானன்றுய்விளங்கவின், இவற்றை யதன்மேலேற்றிக்கூறுவது குற்றமன்றே ஐயமின்றிக்குற்றமே

யாம்:—குணவிசேடங் கூடாமலிருக்கையாலே யிற்றதுவாக்குக்கெட்டாதென்பதுமறிவாய்நீயே, எ-து. இங்ஙனமாயவப்பரவஸ்து, தன்பாற் பிரத்தியட்சமுதலிய குணவிசேடங்களைப் பிறரோற்றிக்கூறினுந் தானவற்றிற் குடன்படாதிருத்தலின் வேதமாகிய சத்தப்பிரமாணத்துக் கெட்டப்படாதென்று கூறுவதையுநீயறிதி, எ-று.

மற்றமுப்பிரமாணத்தா லென்றதனால், சத்தப்பிரமாணத்தா லன்றியு மெனக்கொண்டாம். மற்றையுவென்பது கடைக்குறை. ஈதாதீதமாதலிற் சத்தத்தாலும், நிரிபுடிரகிதமாதலின் பிரத்தியட்சத்தாலும், காரணகாரிய ரகிதமாதலின் அனுமானத்தாலும், சுசாதி, விசாதி, சுகதபேதமிறந்ததாத லின் உபமானத்தாலும் எங்ஙனமெட்டப்படும். படுமெனிற்குற்றமாம், ஆத லிற் குற்றமாமெனவும், பிரத்தியக்ஷம், அனுமானம், உபமானம், சத்தம், என் னுமிந்நான்கையும் பிறர் தன்மேலேற்றிக்கூறினுந் தானன்றுதலின் உற்ற தோர்விடயம்பூத முபயமன்றுதலாலேயெனவும், இம்மூன்றும் வேதத்தை யன்றியில்லாததால், வாக்குக்கெட்டாதெனவுங்கூறினர். குணவிசேடமென் பது மீமிசைப்பதம். குணவிசேடமென்ப திந்நான்கையுமெனக்கொள்க.

(உ-ம்.) புனிற்றிளங்கன்று, மீமிசைஞாயிறு, நாகிளங்கமுகு, உயர்ந் தோங்குபெருவனை, என்பன, மீமிசை.

வினா:—ஏனைய அருத்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவமென்னு மிந் நான்காறு மெட்டாதெட்டலா மென்றதென்னை ?

விடை:—அருத்தாபத்தி; குறியாலுணர்தல், குறிகடந்ததாதலின்கூடா து. அபாவம் ; பொய். நான்குகாலத்துஞ் சதோதயமாகவிளங்கலின் கூடா து. ஐதிகம்; தொன்றுதொட்டுவழங்கல். சகசிவபரம்போலத் தொன்றுதொ ட்டுவழங்கலன்று. தொன்று, நூதனம். என்னுங்காலங்கட் கதீதமாதலின் கூடாது. சம்பவம் ; ஒன்றன்கூட்டம், பலவினீட்டம், நிரிபிரக்கமெனப் படல். அதுபிண்டப்பொருளுமன்று பிண்டித்தபொருளுமன்று, ஆதலிற் கூடாது, இதுபற்றியென்க. இங்கேபிரத்தியட்சமெனல், ஞானகதப்பிரத் தியட்சத்தை. பிரத்தியட்சம்-தரிசனம். அனுமித்தல்-அனுமானம். அரு த்தத்துக்காபத்துவரல்-அருத்தாபத்தி. என்றுமுண்டெனல்-சம்பவம். இன் றெனல்-அபாவம். இகம்-இயதி, ஐதீகம்.

(க-து.) இன்னின்னவேதுக்களால் வாக்குக்கெட்டாதென்பது. இத னைமறுத்தற்கேதென்னை. வலியுளர்போற்காட்டுவார், அர்த்தவாதியரல்லர். உற்றதோர்விடயம்பூத முபயம் வஸ்துவன்றுதலாலே மற்றை முப்பிரமாண த்தால் வஸ்துநிர்ணயங் கூடாதேயெனவும், கூடாவிடத் தினைவகுற்றமாம், இந்தக்குற்றமாங் குணவிசேடங்களைக் கூட்டினுங் கூடாமலிருக்கையாலே யெனவும், ஆதலி னிற்றதுவாக்குக்கெட்டாதெனவுங் கூட்டிமுடிக்க. இவ ற்றுள் நாம்வஸ்துநிர்ணயம் பண்ணவுங்கூடாது, பண்ணினுமெட்டாது, என்

பது முக்கியத்துணிவு. என்னை, "வேதமுதல்கலைகாட்சி முதலளவைவிரிஞ் சன்முதல் விண்ணோர்செய்யுஞ், சோதனையுளகப்படாச் சோதியுனைச்சோதிக்கத் துணிந்தேனந்தோ" என்றார் பரஞ்சோதிமுனிவர். ஈன்மாடக்கூடலானபடலத்தில். (எ)

அ - கவி. அ - கை.

[எட்டாதெனக்கூறியவேத மெட்டுமெனமீண்டுங்கூறும், ஆயினு
மிவ்விரண்டுவிதமு மின்னின்னவேதுவிஞற்கூடுமென
விக்கவியிற் கூறுகின்றார்.]

வாக்கியந் தனக்கெட் டாத வஸ்துவென் றுணைத்த வேதம்
வாக்கிய விருத்தி யாலவ் வஸ்துவைக் காட்டிற் றன்றே
வாக்கியங் களிலே மான மாவதே தென்ற யாகில்
வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள்பொய் யாநீ கேளாய்.

(இ-ள்.) வாக்கியந்தனக்கெட்டாத வஸ்துவென்றுணைத்தவேதம், எ-து. வாக்குக்கெட்டாதது பரவஸ்துவெனக்கூறியவந்தவேதமே:—வாக்கியவிருத்தியாலவ் வஸ்துவைக்காட்டிற்றன்றே, எ-து. ஒருவன் கேட்டவாறுநில்லாதவ்வாக்கியத்தைச் சிரவணமனனாதிகளாலயந்திரிபறவிசாரித்திசெய்வதிலனம் தவ்வஸ்துவைக்காட்டினதல்லவா:—வாக்கியங்களிலே மானமாவதேதென்றாயாகில், எ-து. இங்ஙனமிருவகையாகக்கூறிய வாக்கியங்களில் யாதுசிறந்ததெனக் கேட்குதியேல்:—வாக்கியமிரண்டுமெய்யே மறைகள்பொய்யாநீ கேளாய், எ-து. இவ்விரண்டுவாக்கியமுமுண்மையே வேதங்கள்பொய்சொல்லுமா, சொல்லாவே, யிதனையாங்கூறநீகேளுதி, எ-று.

வாக்கியவிருத்தி, வாக்கியார்த்தம் விளங்கமுயறல். அதாவது ; சொல்லெலாம் பொருளாம்வண்ணஞ் சிரவணமனனாதிகளாலயந்திரிபறமுயறல். இங்ஙனம்விடாது முயன்றாலவ்வஸ்துவைக் காட்டுமோ, காட்டாதோ ? காட்டாதெனின், தீவரதரமெற்றிற்கு. காட்டுவது திண்ணமாதலால், காட்டிற்றன்றேயெனவிறந்தகாலத்தாற்கூறினர். எறும்புமுட்டைகொண்டுதிட்டையேறின் என்றாற்போலும். என்னை, "சொற்றிரியினும்பொரு டிரியாவினைக்குறை" என்றார்பவணந்தி. வாக்கியவிருத்திசெய்தறிவல் மகான் கனுக்குவஸ்துவைக் காட்டிற்றெனப்பொருள்கொள்ளின், அப்போதுகாலவழுவமைதியன்று. வாக்கியவிருத்திசெய்யினும் வஸ்துவைக்காட்டாதது அபக்குவங்காரணமாதல்பற்றி. ஆயினும், எங்ஙனமேனுங்காட்டிவிடும். இத்திண்ணநோக்கித், "தெய்வத்தாலாகாதெனினுமுயற்சி தன்மெய்வருந்தக்கூலிதரும்" எனவும், இன்னும், "ஊழையு முப்பக்கங் காண்ப ருலவின்றித்தாழாதுளற்றுபவர்" எனவுங்கூறினர் திருவள்ளுவர்.காட்டும் காட்டாதென்றது அவரவர்முயற்சியளவும் பக்குவவளவும்பற்றி. ஆதலினிரண்டுமெய்யே மறைகள்பொய்யாவென்றார். வேறுகூப்பாடமோதவினையியனேற்க ? உபாதேய

ங்காண்டலா லுபாதானந்தக்கமுயல்வாற் காணுததற்கேதென்னை. உபாதேயம், விடயம். உபாதானம், ஞானம். இவ்விரண்டுமபேதம். (அ)

கூ - கவி. அ, கை.

[சுருதிகாட்டாமல்காட்டுமென்பனை விக்கலிலிக் கூறுகின்றார்.]

தனைபதி யல்லாப் பேர்க டமையல்ல னல்ல மெனனறு
ளன்பனைக் கேட்ட நேர மவள்வெட்கி மௌன மாறு
ளென்பது போல நீக்கி யிதன்றிதன் றெனச்சே டித்த
பின்பரப் பிரமந் தன்னைப் பேசாமற் பேசும் வேதம்.

(இ-ள்.) தன்பதியல்லாப்பேர்க டமையல்லனல்லனென்றுள், எ-து. தனதுநாயகனல்லாதபேர்களை யிவளுவிவளுநினதுநாயகனெனப் பிறர்வினவுந்தோறுமிவனல்லனிவனல்லனென்று சொல்லிக்கொண்டுவந்தாள்:—அன்பனைக்கேட்டநேர மவள்வெட்கி மௌனமாறு ளென்பதுபோல, எ-து. முடிவினையகனைக்கேட்டவக்கணத்தே யவள்நாணமுற்றுப்பேசாதிருந்தனளென் றுலகத்தார்கூறுவதுபோல:—நீக்கியிதன்றி தன்றெனச்சேடித்த பின் பரப்பிரமந்தன்னைப் பேசாமற்பேசும்வேதம், எ-து. ஒவ்வொருதத்துவத்தையுந் தனித்தனி விசாரியாநிற்புழி வேதமானதிதல்லவிதல்லவென்றுசென்று முடிவிலினிக்கூறவிடமின்றி மிஞ்சிநின்ற பரப்பிரமவஸ்துவை யுணர்த்தாமலுணர்த்தும், எ-று.

மணம்புரிந்தானை மருவிடவேண்டித் தன்மனைக்கண் மாமனைழப்பித் தழி யவன்தோழரோடுங்கூடியிருக்க, அக்கலியாணப்பெண்ணை யவள்தோழிகளிவளுவிவளு நின்னதுநாயகனென்னுந்தோறு மல்லவல்லவெனக் கூறி முடிவிலிவளுவெனக்கேட்க விடையின்றிமௌனமாளுள். இஃதைதிகம். இதனைத்திருட்டாந்தமாக்கினர், வஸ்து இதுபோன்றிருத்தலின். என்னை, "ஆணல்லன்பெண்ணல்ல னல்லாவலியுமல்லன், காணலுமாகாவுளனல்லனில்லனல்லன்" என்றுர்சடகோபர். இன்னும், "உருவன்றருவன் றுளதன்றிலதன், றிருளன்றொளியன் றெனநின்றதுவே" என்றுரருணகிரிநாதர். "அல்லையல்லையீ தெனவருமறைதளு மன்மைச்சொல்லிறற் றுதித்தினைக்கு மிச்சுந்தராநாடற்கு எல்லையாகுமோவென்மொழி" என்றுர்பரஞ்சோதி முனிவர். தானறிவு அவனின்பமாதலின், அவள்வெட்கிமௌனமாறு ளெங்ஙனமோ; அங்ஙனந் தத்துவக்குழாங்களை நியதிகளைந்துசென்றதறிவு, பிரமமானந்தமாதலிற் பேசாம்ற்பேசும் வேதமென்றுர். சிற்றறிவும் சிற்றின்பமு மௌனமாக்குழிப், பேரறிவும் பேரின்பமு மௌனமாக்கற் கிடையுறென்னை, கேட்பானேன். எனவே, அறிவேசுகமெனக்காட்டநின்றது. ஆதலினறிவானந்தமென்றுர்கண்டோர். அறிவுதன்னையயலாகக்காணுங்காறு மானந்தந்தனக்கயலாகக்காணும். அறிவைக்கண்டார்க்கானந்தமயல

ன்று தானேயானந்தம். எங்கெங்கின்பஞ் செனிக்கின்றதோ, அங்கங்கறி வைக்காணின் மோனமாம், ஆதலின்மோனமென்பது ஞானவரம்பென்றுள வ்வையார். அங்கங்குபாதிலையக்காணின் மாளாமோகமாம். மௌனமாவெ ன்பார் பேசாமற்பேசும்வேதமென்றார். மௌனமாவது ; அல்லவல்லமெ னற்கெல்லை. இன்னும், பேசிக்கொண்டேவந்துபேசாமனிற்றல் காட்டிக் கொண்டேவந்து காட்டாமனிற்றலெனினுமமையும். இதனைக்குருசிடவனு பவவகையுட்காண்க.

(க-து.) சுருதிகாட்டாமல்காட்டல், அல்லவல்லவெனக்கூறிக்கொண் டேவந்தயர்ந்து விற்றலென்பது. அவ்வனவிற்றலனுபூதிமுடிபு. இதனையறி யார் பலபிதற்றியுமென்னை. (கூ)

கo - கவி. அ - கை.

[இதுகாறு முதற்சங்கைக்குத்தரங்கூறி, இனியிரண்டாஞ்சங்கைக்குத் தரங்கூறுவான்வேண்டி மனமினையதெனத் தெரிவிக்க வத னுற்பத்தியையிக்கவியிற் கூறுகின்றார்-]

மூந்திய சங்கைதீர மொழிந்ததை யறிந்து கொள்வாய்
பிந்திய சங்கை தீரப் பேசுமுத் தரமீ கேளா
யிந்தியங் களுக்கி ராச னிதயமா மதினெண் ணங்கள்
புந்தியு மனமு மென்றே புறத்தகத் துலாவி யாடும்.

(இ-ள்.) மூந்தியசங்கைதீர மொழிந்ததையறிந்துகொள்வாய், எ-து. முதற்சங்கைக்கையந்தீரவிடைதந்ததையறிந்துகொள்ளுதி:—பிந்தியசங்கை தீரப்பேசுமுத்தரமீகேளாய், எ-து.பின்சங்கைக்கையந்தீரக் கூறுமுத்தரத்தை ஈகேளுதி:—இந்தியங்களுக்கிராசனிதயமாம், எ-து. மனமுதலியவிந்திரிய ங்களுக்குத் தலைவனையிருப்பது ஞானமாம்:—அதினெண்ணங்கள்புந்தியுமன முமென்றே புறத்தகத்துலாவியாடும், எ-து. அதினதுசங்கற்பங்கள் புத்தி யெனவும் மனமெனவுங் கூறப்பட்டுப் புறம்பிலுமகத்திலு முலாவிநட மாடும், எ-று.

இந்தியங்களுக்கிராசன்மனமெனின், புந்தியுமனமுமெனச் சொல்லாதி ருக்கவேண்டும். சத்தப்பிரகாணமுதலிய கட்டளைகளில் ஞானம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், எனக்கூறியிருக்கின்றது. ஆகாயத்திலாகாயம், க்ஞானம். ஆகாயத்தில்வாய்வு, மனம். ஆகாயத்தி லக்கினி, புத்தி. ஆகாயத் தி லப்பு, சித்தம். ஆகாயத்திற்பிரிதிவு, அகங்காரம். அங்ஙனங்கூறியதுமின் னகாரணம்பற்றியென்க. எனவே, மனமுதலியநான்குமறிவின்ஸ்புரிப்பென் றுயிற்று. அன்றேல், அறிதல்தர்மமில்லாதிருக்கவேண்டும். இருப்பதால்மறு க்கற்பாற்றன்று. ஞானமின்றியாதுநிகழும். யாதுண்டு. இன்றுதலினேற்ற ற்பாலதே. ஆதலினிதயத்தைஞானமென்றும். அதினெண்ணங்கள் புந்தியும னமுமெனவே, அதனது புடைபெயர்ச்சியினவசரநிலைகளேயன்றி மனமும் புத்தியுமோர்முதலன் றெனக்குறிக்கக் கூறியதாகக்கண்டாம். எவ்வுயிருந்

தேகோகமாநிற்றலின் தேகத்துக்குப்புறம்பகமெனவும், அகத்தில்மனமிச்சா ஞானமாக நின்றுழறலும், புறத்தில்புத்திபலகிரியைகளாகநின்று நடித்தியற் றலும்பற்றி யுலாவியாடுமெனவுங்கூறினர். உலகத்தாரவனவன் புரிதொழி லைக்கண்டு வியப்பதும் இகழ்வதும் புத்தியையன்றிமனதையன்று. விதேத வேலையைக்கண்டு இவனதி புத்தியென்ன சிறந்ததெனவும், இழிதொழிலைக் கண்டு இவனது புத்தியென்னமடமையெனவுந் தொன்றுதொட்டுவழங்கலி னிதுவேசான்று. புத்தியுமனமுமெனக்கூறி யவற்றின்புடைபெயர்ச்சிகளா கிய வுலாவியாடுமென்பனவைகளை முன்பின்னாகக்கூறினும், புறத்தகத்தென் றதனால் மாற்றிப்பொருள்கொள்ளின் வழுவன்று. மனமாவது ; சமிசயநிச் சய சாங்கல்ப அபிமானங்களில், சமிசயமாதலினானும், அறிவின்புடை பெயர்ச்சியாதலானும் மிஃதோர்முதலன்று. அன்றேனும், முதலாகநடித்தலி னிதனைவினைமுதலாக்கி யெட்டுமெட்டாதெனற்குக்கூறவந்ததா லிதனது நிலையினையதெனக்காண்க.

(க-து.) மனமெனலினையதெனவறிவித்ததென்பது. புத்தியைப் புந்தி யெனல்மெலித்தல்விகாரம். உளையிற்கோடலென்னுமுத்தியால், புறத்தகத் தென்பதைப் பகிர்முகமந்தர்முகமென்றுக்கிப் புத்தியுமனமு மிவ்விருமுகத் தில் யாதானுமொன்றிலேனு முலாவியாடுவதியல்பாதலெனக்கொண் டிங்ங னங்கூறினு மொனினுமமையும். பகிர்முகம்; பொன்னைப்பணியெனவும், பழு தையைப்பாம்பெனவுங்கோடல். அந்தர்முகம் ; பொன்னைப்பொன்னென வும், பழுதையைப்பழுதையெனவுங்கோடல். கொள்ளவே, சுத்தபுத்தி சுத் தமனம், எ-ம். அசுத்தபுத்தி அசுத்தமனம், எ-ம். பாகுபடுதற்கிடம்பெறலா யிற்று. இதனைப் பின்வருவதாற்காண்க. (கo)

கக - கவி. அ - கை.

[முன்னரிதயமென்றதனாலம்;விருத்தியெனவும் சிதாபாசனெனவு மிருபாலதாயமுறையையிக்கவியிற்கூறுகின்றார்.]

உன்முகம் போற்கண் ணுடிக் குள்ளொரு முகங்கண் டாற்போற்
சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்
நின்மல விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவுந்
தன்மகன் மகனே யித்தைத் தானன்றே ஞான மென்பார்.

(இ-ள்.) தன்மகன்மகனே உன்முகம்போற்கண்ணுடிக் குள்ளொரு முகங்கண்டாற்போல், எ-து. அறம்வழுவின்றியசற்புத்திரா உனதுமுகம் போலொருமுகங்கண்ணுடியிற்காணப்படுமாறுபோன்று:— சின்மயவடிவின் சாயை சித்துப்போற்புத்திதோன்றும், எ-து. சின்மாத்திரமாக விளங்குஞ் சைதன்யமானது புத்தியிற்றானேகாணப்படுமாறுபோன்று சாயாரூபமாகப் பிரதிபலித்துக்காணப்படும்:— நின்மலவிருத்தியந்த நிழல்வழியா யுலாவும், எ-து. மேற்கூறியசைதன்யமென்னு நின்மலவிருத்தியானது, அந்தச்சாயா

ரூபவழித்தாகவேயுலாவிக்கொண்டிருக்கும்:—இத்தைதத்தானன்றே ஞான மென்பார், எ-து. இதையல்லவாசத்துக்கள்ஞானமெனக்கூறுமிற்பர், எ-று.

இங்கேசாயையென்றது, சிதாபாசனை. ஆடியால் முகம்; பிம்பம் பிரதி பிம்பமெனப்பட்டாற்போலப், புத்தியால் சைதன்னியம் ; விருத்தி சிதாபாசனெனப்பட்டது. ஆடியாலன்றி முகத்திற்குமாறுப் பிரதிபிம்பமுகமென வருமா, அதுபோலப் புத்தியாலன்றிச் சைதன்யத்திற்குமாறுச் சிதாபாசனெனவருமா? வந்ததால், சைதன்யம்விருத்தியெனப்பெயர்பெற்றது. இங்கேபுத்தியென்றது பகிர்முகநோக்கத்ததை. அதில், தோற்றியசித்தைச் சாயையென்பதிலையழுளதேற் சோதனையிற்காணலாம். எங்கெங்கேகானனலுண்டோ வவையெல்லாஞ்சிதாபாசனன்றே ? சிதாபாசனெனினுஞ் சீவனெனினுமொக்கும். அறிவு நானலதைதாவென்றதனலிக்கற்பிதப்பெயர்கள்தனக்குவந்தன. இந்தவறிவு சுயஞ்சைதன்யத்தின் பிரதிபலனமாகச் சோதனையில் முடிவதா லிதனைச்சாயையெனவும், இஃதநிஷ்டானமாகக் காண்டலி னிதனைச்சித்துப்போலெனவும், சாத்தனென்னுஞ்சொல் தன்பால் புடைபெயர்ச்சியின்றியக்கண்பெயரொனவும், ஆகியக்கண்ணெழுவாயெனவுமெங்ஙனமாயிற்றே வதுபோலச், சிதாகாயமானது ; புத்தியில்சித்துபோற்சாயையாகப் பிரதிபலித்தலாகிய புடைபெயர்ச்சியைத் தன்பாலில்லாவிடத்துச் சின்மயவடிவெனவும், உடையவிடத்து நின்மலவிருத்தியெனவும், அல்லதுவிருத்தியெனவும்பெயர்பெறும். இங்ஙனமாதல்பற்றி யிப்பெயர்தந்தனரொனவும், நீலாவிட்டகலாதகான லெங்ஙனமோ அங்ஙனம் அக்கற்பிதவறிவினின்று நின்மலவிருத்தியகலாதுலாவலின், நின்மலவிருத்தியந்தநிழல்வழியாயுலாவுமெனவும், இங்கேநிழலென்பது சிதாபாசனை. இச்சிதாபாசன் கற்பிதவறிவன்றியும், இக்கற்பிதவறிவு நின்மலவிருத்தியன்றியும், இந்தநின்மலவிருத்தி சின்மயவடிவன்றியு மின்றெனச்சான்றோர்கண்டுளாப்பதால் இத்தைதத்தானன்றே ஞானமென்பாரெனவுங்கூறினர்.கூறவே, சித்துசம்பந்தஞானமாதலி னிதனைவிருத்தியெனப்பெயரிடக்கண்டாம்.

(க-து.) இனிவிருத்தியெனவும், பலமெனவு மெடுத்தாளவேண்டுதல் பற்றி யிக்கவியில் விருத்தியினையதெனக்கூறியதென்பது. (கக)

கஉ - கவி.உ அ - கை.

[சிதாபாசனையேபலமெனக்கூறி விருத்தியைக்கண்ணுகவும், பலத்தைதவினக்காகவு மிக்கவியிற்கூறுகின்றார்.]

உருக்கிய தரானீர் நாநா வுருவங்க ளானற் போல
விருத்தியே கடப டாதி விடயமாப் பரிண மிக்கு.
மருப்பல விடய மெல்லா மாபாசன் றேற்று விக்கு
மிருட்டினில் விளக்குங் கண்ணு மில்லாமற் பொருள்கா ணுதே. (ரு)

(இ-ள்.) உருக்கியதராதீர்காறு வுருவங்களாறற்போல, எ-து. குகையிலிட்டுருக்கியதராதீரானது ; கட்டியவச்சின்விகாரவண்ண மெங்ஙனகாறு வடிவங்களாகுமோ அங்ஙனம்:—விருத்தியேகடபடாதிவிடயமாப்பரிணமிக்கும், எ-து. சித்துசம்பந்தஞானமே சடசம்பந்தமாநின்று கடபடமுதலிய விடயங்களாகவிகாரப்படுமி:—அருப்பலவிடயமெல்லா மாபாசன்றோற்றுவிக்கும், எ-து. அருமையானபலரூபமாகநின் றவ்விடயங்களனைத்தையுஞ்சிதாபாசஞ்சிறசீவன்தெரிவிப்பன்:—இருட்டினில்விளக்குங்கண்ணு மில்லாமற் பொருள்காணுதே, எ-து. இருட்டிலுள்ளபொருள்கள் விளக்குங்கண்ணு மின்றியவிடத் தெங்ஙனங்காணப்படுங் காணப்படாவே, எ-று.

பொருள்காணுதேயென்பது தொகையொருமை.முன்கவியிலொருமையாகக்கூறியவிருத்தியென்பது விளைவி லிக்கவியிற்பன்மையாதற்கே தென்னைகொலோ வின்றுதலி லெருமையாக்கிறும். பரிணமித்த லதையன்றியில்லையெனத் திண்ணமாக்கற்குத் தேற்றேகாரங் கொடுத்தாமெனலறிக. என்னை, "சிற்சொருபந்தானே செகசொருபமென்றார்" சொரூபானந்ததேசிகர். ஏற்றற்பாலதன்றெனின், பொருளிடங்காலமயமன்றிச் செகத்துக்குத் தனியேசொரூபமென்னை? இன்றெனின்,தெரிவையன்றியிம்மூன்றையுங்காட்டவேண்டுமெ. கூடாதெனின், தெரிவேயாதாரமாகவேண்டும். ஆதாரமாயினும், முதற்காரணமென்னலாமாவெனின், தெரிவாக முடியாதவற்றைச் சோதனையில் சுயம்பாகமுடித்துக்காட்டலாமே ? காட்டப்படாது சூனியமாகமுடிகின்றதெனின், அன்னியோன்னியாபாவத்தா லொன்றிலொன்றின்றுயழியும், அழியினும், அதிதலழியாமையாதலால், அந்தவறிவேயிங்ஙனந்தோற்றுமென்றார். மறுப்பதென்னை. அறிவுக்குச்சகத்து சத்தாகக்காண்டலோ, அசத்தாகக்காண்டலோ ? சத்தாகவெனின், அறிவினதுசத்தைத்தவிரச் சகத்துவேறுசத்தாகக்காணலாமே ? கூடாதெனின், மறுக்கற்க. எல்லாவிடயங்களையுஞ் சிதாபாசன்பலரூபமாகநின்று தெரிவித்தலினும், அனுபவித்தலினும் சிதாபாசனைப் பலமெனல்கூடும். கூடவே, விருத்திகண்ணும். பலம், விளக்குமென்றுயிற்று. ஆகவே, இவ்விரண்டி லொன்றில்லாவிடத் தோர்பொருளுங்காணுதாதலா லிரண்டும்வேண்டுமெனப் பெற்றும். இதுபகலிலன்றுதலினிருட்டினிலென்றார். அறிவுவிகாரியாதுநின்றறியின் திரிபுடிகாணுமா ? காணுமாயின், தனதுவிகாரம். பிம்பமெங்ஙனமோ அங்ஙனம்பிரதிபிம்பமாதலின் மயக்கமென்னை. இன்னும், கட்டியவச்சுகளவ்வெவ்விகாரமோ அவ்வவ்விகாரமாந் தராதீரென வுவமைகூறியதும் பொருந்தும். இவையெல்லாந்தன்னைத்தான்விடாதுசோதிப்பார்க்கேயன்றியேனையோர்க் கெங்ஙனமுண்மையாம். உருக்கியதராதீர் கற்பிதவழிச்செல்லாதுழித் திரியுமா அதுபோல, அறிவுதனதுகற்பிதவழிச்செல்லாதுழித் திரியுமா? என்பதற்கேயிவ்வுபமானமெனவறிக. பரிணமித்தல், பால்தயிராதல் போலும். இதனை நான்குதிருஷ்டாந்தத்தினுள் பரிணமதிருஷ்டாந்தமென்பர். இதுச்சத்தியம். சோதனையிற்காணலாம்.'

(க-து.) விருத்தி பலனெனவுருவகப்பதித்தக் கண்விளக்கென்றுரொன் பது. இதுமுன்மொழிந்துகோடலென்னுமுத்தி. (கஉ)

கங - கண். அ - கை.

[கண்ணும்விளக்குமாகியவிவ்விரண்டும்வேண்டுமவசரமினையதெ னவும், இவற்றுளொன்று வேண்டுமவசரமினையதெனவு முபமேயத்தோடிக்கவியிற் கூறுகின்றார்.]

எரிகின்ற விளக்காற் கண்ணு விருட்பொருள் காணல் வேண்டுந்
தெரிகின்ற பரிதிகாணச் சென்றிடிற் கண்ணே போதும்
விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும்
புரிகின்றவிருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்காண் போர்க்கே.

(இ-ள்.) எரிகின்றவிளக்காற்கண்ணு விருட்பொருள்காணல்வேண்டும், எ-து. எரிகின்றவிளக்கிணலும் கண்களாலு மிருட்டிலுள்ளபொருளைக் காண வேண்டும்:—தெரிகின்றபரிதிகாணச்சென்றிடிற்கண்ணேபோதும், எ-து.பிர த்தியட்சமாகக்காணப்படுகின்ற சூரியனைப்பார்க்கச்செல்லவேண்டில், கண் ணொன்றேபோதும்:—விரிகின்றசகத்தைக்காண விருத்தியும்பலமும்வேண் டும், எ-து. எங்குமாவிரிந்திருக்கின்றசகத்தைக் காணவேண்டில், விருத்தி யும்பலமுமாகிய விவ்விரண்டும்வேண்டும்:—புரிகின்றவிருத்தியொன்றேபோ தமெய்ப்பொருள்காண்போர்க்கே, எ-து. அகமாகப்புரிகின்ற விருத்தியொ ன்றுமே மெய்ப்பொருளைக்காண்போருக்குப்போதும், எ-று.

எனவே, கற்பிதரகிதவறிவைவிருத்தியெனவும், கற்பிதசகிதவறிவைப் பலமெனவுங் கூறியதாகப்பெற்றும். பெறவே, ஒரறிவே யிலலதையுள்ள தாகநோக்கலிற்கற்பிதமெனவும், உள்ளதையுள்ளதாநோக்கலின், எதார்த்த மெனவும்படுதலாலும், ஒரறிவேயிரறிவாக்காணப்படுதலாலும், சகத்தைக் காணவேண்டிலிரறிவும்வேண்டும். தன்னைத்தான்காணவேண்டி லெதார்த்த வறிவொன்றுமேபோதும். யாதினுலெனில், செகத்துகற்பிதவஸ்து அத னையறிவது கற்பிதவறிவாகவேண்டும். அவ்வறிவு எதார்த்தவறிவையன் றிவேறன்றுதலினிரண்டும்வேண்டும். தான் கற்பிதரகிதவஸ்து, தன்னைத்தா ன்காணவேண்டில் எதார்த்தவறிவாலன்றிக்கூடாது. தான்கற்பிதரகிதமாகும் போது அறிவுங்கற்பிதரகிதமாகவேண்டும். தன்னைத்தன்னு லறிவதன்றி வேறொன்றுலன்றுதலின், புரிகின்றவிருத்தியொன்றே போதுமெய்ப்பொ ருள்காண்போர்க்கேயென்றார். விளக்குங்கண்ணும்போலப் பலமும்விருத் தியுமெனக்கொள்க.

(க-து.) விளக்குங்கண்ணுமின்றியக்கண் விருட்பொருள்விளங்காமை போலம், பலமும்விருத்தியுமின்றியக்கண் செகத்துவிளங்காது. சூரியனைக் காண்டற்குவினக்குவேண்டாவாறுபோன்று, தன்னைக்காண்டற்குப் பலம்

வேண்டுவதின்றென்பது. மெய்ப்பொருளைக்காணும்விருத்தியாவது; ஐயந்திரிபகலத்தெளிந்தஞானம். இதனையறியாரபாஞானமென்பர். (கசு)

கச - கவி. அ, - கை.

மனமாவதித்தகையதெனத்தெரிவித்து, அதுவஸ்துவையெட்டு மெட்டாதென்பதையிக்கவியிற்கூறுகின்றார்.]

விருத்தியும் பலமுங் கூடும் விகாரமே மனமென் பார்கள்
கருத்தெழும் விருத்தி வேண்டுங் கணக்கினன் மனதிற் கெட்டும்
வருத்திய பலமா மிந்த மனதிற்கெட் டாது கண்டா
யருத்தமிப் படியென் றைய மகன்றுநீ தெளிந்தி டாயே.

(இ-ள்.) விருத்தியும்பலமுங்கூடும் விகாரமேமனமென்பார்கள், எ-து, சித்துசம்பந்தமானவிருத்தியும், சடசம்பந்தமானபலமு மிசிரிம்பித்தவிகாரரூபமே ம்னமெனச் சத்துக்கள்சொல்லுவார்கள்:—கருத்தெழும்விருத்திவேண்டுங் கணக்கினன்மனதிற்கெட்டும், எ-து, அகமுகாட்டக்கருத்திலெழும் விசாரஞானத்தெளிவுகாரணத்தா லந்தமனதிற்கப்பரவஸ்துவான தெட்டுமெனவும்:—வருத்திய பலமாமிந்த மனதிற்கெட் டாதுகண்டாய், எ-து.யாவையும்வருத்துகின்ற பலமேவடிவாநின்றுள்ள விந்தமனதிற்கெட்டாதெனவுங்காணுதி:—அருத்தமிப்படியென்றைய மகன்றுநீதெளிந்திடாயே, எ-து, மனதிற்கெட்டுமெட்டாதெனற்கருத்த மிங்ஙனமாமென்று சிந்தித்தையந்தவிர்த்துநீதெளிந்திடுக, எ-று.

சிற்சடவடிவமனமெனற்கு, விருத்தியும்பலமுங்கூடும்விகாரமேமனமென்பார்களெனவும், கருத்தாகவெழும் விருத்தியெனப்பதம்பிரித்து, இனிப்பகிர்முகமாகாதிருக்குதுமென்றக்கனையோடெழும் விருத்தியெனப்பொருள்கொள்க. இஃதுனையிற்கோட்டலென்னுமுத்தி. இங்கேகணக்கென்றது விபரம் அல்லது காரணம். விருத்திரூபமாயது சுத்தமனமெனவும், பலரூபமாயது அசுத்தமனமெனவும் பொருள்கொண்டெட்டுமெனவும், எட்டாதெனவுங், திண்ணம்பற்றிக்காணுதியென்பதைக் கண்டாயெனவுங்கூறினர். இங்கேயருத்தமென்பது சாம்பரதாயப்பொருள். சிந்தியாதுழியையமகறலுந்தெளிதலுங்கூடாமையால் சிந்தித்தெனவருவித்தாம்., எங்களும்பரிபூரணமாநிறைந்துள்ளதுசைதன்யமாதலின் "உள்ளத்திருந்துமொளித்தான்பரனெனவும்," "பொன்னுலகத்தினிற் புவியிலந்தரத், தென்னுடையுட்புறத் திலங்குகின்றது, மன்னுசிற்சோதியே வடிவம்யாவுமாய்த், துன்னுவதெனவும்," "உலகெதுயாமாவொன்ன வுற்றுநின்றுணருமிட்டுங் கலகமார்பிறவிமோகங் கங்குல் போல்மூடிநிற்கும் அலகிலாவுலகும்யாமு மழிவில்சிற்சோதியன்றே" வெனவுங்கூறினர் சான்றோர்பலரும். கழுத்தளவாநின்றுள்ளோ னிதுபாற்கடலென்றெண்ணுதுமறந்துழித் தண்ணீரெங்கேயெங்கேயெனத் தாகமேலிட்டலை வான்போன்றுசித்தாயிருந்தும் மனந்தவித்தலினெட்டாதெனவும், அங்ஙனம்

பல்லூழிகாலமலைவான் தெய்வகதியாகக் கழுத்தளவாநின்றதைக்கண் டெளி திற்பருகித்தணிப்பான்போன்று, இங்ஙனம்பல்லூழிகால்ம் பற்பலகோடிசெ ன்மமெடுத்தும் பற்பலவரியதவஞ்செய்து மெட்டவறியாதுதவித்து நின்ற மனம்தெய்வகதியால்தனக்குள் பூரணமாநிறைந்துள்ள சிதாகாயத்தைக்கண் டெளிதிலுபசாந்தமெய்தலி னெட்டுமெனவுங்கூறுவது, கூடுமோகூடாதோ? கூடாதெனின், இப்போதெவர்மனமு மல்லலகலாததாலெப்போதகலும். சுபாவமெனின், தினசுழுத்தியிற்சுபாவமெங்கே. ஆதலினனவிற்சுழுத்தியென் றொன்றுளது, அதுவாய்க்கி னல்லலென்றுமகலும். கூடாதெனமறுத்தல் விசாரத்தவறு.

(க-து.) மனதுக்கெட்டுமெட்டாதென லிங்ஙனமாயநிலையாலென்பது. சோதனைஞாயந்தெரியாதா ரிதனைமறுத்தல், தன்போல்வார்களிப்புக் கங்கா ந்துநிரிதற்கென்க. அசுத்தம் பகிர்முகம். சுத்தம் அந்தர்முகம். என்றுனை கொள்க.

(கச)

கரு - கவி. அ - கை.

[இதுகாறு மேலைவாக்குக்குப் பிரமமெட்டுமெட்டாதென்பதைப் பற்றிவிளங்கக்கூறினீர், இனிமனம்நிவாததீபம்போ லென்று மிருத்தற்குபாயங் கூறவேண்டுமென்று மாலுக்கன்வினவ வதற்குத்தாமிக்கவியிற் கூறுகின்றார். வேறு.]

வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன வழிகளறிந்தேனினி யோர்வசனங்கேளீர், சஞ்சலமற் றகண்டபூ ரணமாய்ச் சித்தந் ததா காரமாவதன்றே சமாதி யோக, முஞ்சலிலையொத் தலைவதுதன் சுபாவ மாகி யொருகணத்திற் பலவுலகா வுதிக்குமிந்த, நெஞ்சகம்வஸ் துவிலசையா நிவாத தீப நிலையடைவ தெப்படியோ நீர்சொல் விரோ.

(இ - ள்.) வஞ்சகமில்பரமார்த்தகுருவேசொன்ன வழிகளறிந்தேனினி யோர்வசனங்கேளீர், எ-து. களங்கரகிதமான பரமார்த்தகுருவே தேவரீரு க்கிரகித்தமார்க்கங்களெல்லாந் தெரிந்துகொண்டேன், இனியடியேனிரந் துகேட்டுக்கொள்ளும் விண்ணப்பமொன்றுளது அதனைக்கேட்டருளும்:— சஞ்சலமற்றகண்டபூரணமாய்ச்சித்தந் ததாகாரமாவதன்றே சமாதியோகம், எ-து. மனமானது யாதோர்சலனமுமின்றி யகண்டபரிபூரணமாகவுந் தன் மயமாகவும் விளங்கலன்றே சமாதியோக மெனப்படுவது. (அங்ஙனமின்றி): —உஞ்சலிலையொத்தலைவது தன்சுபாவமாகி யொருகணத்திற் பலவுலகாவுதிக் கும், எ-து. உஞ்சலிப்போலலைவது தனதுசுபாவமாகி யொருகணத்திற்பலவு லகமாகப்பரிணமிக்கும்:— இந்தநெஞ்சகம்வஸ்துவிலசையாநிவாததீப நிலை யடைவதெப்படியோநீர்சொல்வீரோ, எ-து. இங்ஙனமாய்மனமந்தப்பரவஸ்து விலசையாமல் நிவாததீபம்போன்றநிலையினை யடைவதெங்ஙனமோ வதனை யடியேனுக்குத்தெரித்தருளும், எ-று.

காவாமல்விளக்கியதால் வஞ்சகமிலெனவும், அநாசிரியரன்றெனற்குப் பரமார்த்தகுருவேயெனவுங்கூறினர். அசையாவென்பது, அடைவதென்னும்வினைகொண்டுமுடிவதுசிறப்பு. அசையாதவெனக்கடைக்குறையாக்கிப் பெயரொச்சமாக்கினுமமையும்.

(க-து.) மனஞ் சற்றுஞ்சலியாதிலையை யடையவேண்டினனென்பது. இவ்வேண்டுகோள் சகசநிட்டையில், இன்னுமிவன்பயிலாததாலென்க. உஞ் சலெயொத்தலைவது மனதின்சுபாவமாகில் மாற்றினுந்தன்னியல்பாமேயெனின், பற்றுக்களையெல்லாஞ் சின்மாத்திரமாக்குமளவுமியல்பென்பம், அப்பாலெங்ஙனமாம். சிற்சடபேதந்தவிரின் மனமெனலேது. சிற்சடபேதங்கற்பிதமன்றிச்சைதன்யத்திலெங்கே. அறிவு வுள்ளும்புறம்புமொருதகைத்தாவிளங்காவனையு மிப்பேதமகலாது. இதனை யிருவகைச்சமாதியுழப்பாலன்றியுணரவொண்ணாது. (கரு)

கசா - கவி. அ - னை.

[அவ்வினைவுக்குவிடைகூறுவான்வேண்டி மனநிற்குரியமுக்குணத்தினிலையினையும், அவற்றுலாயப்பயனையு மிக்கவியிற் கூறுகின்றார்.]

கருதுமனை குணமூன்று மூன்றி லொன்று கதித்தெழுந்தான் மற்றிரண்டுங் கரந்து நிற்கும், தருமமிகு சத்துவமே லானபோது சன்மார்க்க மானதெய்வ சமபத் துண்டாம், மருவுமிரா சதமாகி லுலக தேக வாதனையாஞ் சாத்திரவா தனையு மாகு, மருமகனே தாமதமே லான போதி லசுரசம்பத் துண்டாகு மறிந்து கொள்ளே.

(இ-ள்.) கருதுமனைகுணமுன்றுமூன்றிலொன்று கதித்தெழுந்தால்மற்றிரண்டுங்கரந்துநிற்கும், எ-து. நினைத்தலையே யியல்பாகவுடையமனமானதுமூன்றுகுணமாயிருக்கும், அம்முன்றில் யாதானுமோர்குணமேலிட்டெழுந்தால்மற்றிரண்டுகுணமுமறைந்திருக்கும்:— தருமமிகுசத்துவமேலானபோது சன்மார்க்கமான தெய்வசம்பத்துண்டாம், எ-து. சற்கருமத்தால் மிகுந்தசாத்துவிதக்குணமேலிட்டவவசரத்தில் சன்மார்க்கமேவழிவாயுள்ள தேவசம்பத்துகிடைக்கும்:—மருவுமிராசதமாகிலுலகதேகவாதனையாஞ்சாத்திரவாதனையுமாகும், எ-து. அடுத்தராசதகுணமேலிட்டவவசரத்திலுலகவாசனையுந்தேகவாசனையுஞ் சாஸ்திரவாசனையுமுண்டாம்:—அருமகனேதாமதமேலானபோதிலசுரசம்பத்துண்டாகுமறிந்துகொள்ளே, எ-து. எனதருமையானஞானபுத்திரா தாமதகுணமேலிட்டவவசரத்திலசுரசம்பத்துகிடைக்குமிதனையறிந்துகொள்ளுதி, எ-று.

அந்தந்தகுணமேலிடலுக்கிலையந்தபயனினையதெனவே, மனமுமங்ஙனமாமென்பதுபெற்றும். குணமிலையந்தவாறுமனமுநிற்பதால், மூன்றுகுண

மெனப்பட்டது. ஒன்றுமேலுறிலிரண்டுகரந்துநிற்றலியல்பு. அதுபோலப் பலனுமவ்வாறியையதலியல்பு. எங்ஙனமெனில், ஐம்பூதங்கட்குந்தனித்தனி சுபாவம்வெவ்வேறு, ஒன்றோடொன்றுமிசிரிம்பித்தவிடத்திலுண்டாஞ் சுபாவம்வேறு, அவ்வவற்றிற்குரிய காரணங்களினயுண்ணும்போது சுபாவமென்பது மாறும், இவையெல்லாம்வஸ்துசோதனையாற்காணலாம். (கசு)

கஎ - கவி. அ - கை.

[மனதுசத்துவாம்சமாதலா லந்நிலையில்மாறுதுநிற்கினிர்வி
கற்பசமாதியெளிதிலெய்துமென்பதை யிக்கவி
யிற் கூறுகின்றார்.]

மனதுசத் துவசொரூப மற்றி ரண்டும் வந்துகலக் தனவவற்றை மாற்றி ணற்போந், தனதுசன் மார்க்கம்விடா திருந்தபோது தாமதமு மிராசதமுஞ் சமிக்கும் பின்னைக், கனபரிணு மஞ்சலனம் போம்போ னக்காற் களங்கமற்று நின்றவா காயம் போலு, நினதுளமப் படியா மப் பிரமத் தொன்றுய் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே.

(இ-ள்.)மனதுசத்துவசொரூபமற்றிரண்டும்வந்துகலந்தன வவற்றைமா ற்றிணற்போம், எ-து. மனமென்பது சத்துவாம்சவடிவமாம், ஏனையராசத தாமதகுணமோ விடையில்வந்து கலந்தன, அவற்றையொழிக்கிலொழிந்து போம். (எங்ஙனமெனில், :—தனதுசன்மார்க்கம்விடாதிருந்தபோது தாமத மும்மிராசதமுஞ்சமிக்கும், எ-து. சைதன்யத்தையகலாநாட்டமுறலாகியதன துசன்மார்க்கந்தடையவிடாதிருந்தபோது தாமதமும்மிராசதமுந்தானேநசிக் கும்:—பின்னைக்கனபரிணுமஞ்சலனம்போம்போனக்கால்களங்கமற்றுநின்ற வாகாயம்போல நினதுளமப்படியாம், எ-து. நசித்தபின்னர் கனமாகப்பரிண மித்துக்காணப்படுந்திரிசியமும் போக்குவரத்துமுதலிய சகலவிதகிர்த்தியங் களு மக்கணமேநீங்கும் நீங்கினவக்கணமே களங்கரகிதமானவாகாயமெங் ஙனமோ அதுபோல வுனதுமனமுமங்ஙனமாம்:—அப்பிரமத்தொன்றுய்நிரு விகற்பசமாதியிலேநிற்குந்தானே, எ-து. ஆதலா லந்தப்பிரமத்தினிடத்தி னிர்விகற்பசமாதியி னினதுழுன மசைவின்றி நிற்கும், எ-று.

சிற்பிரகாசப்பிரதிபலனமே சாத்துவிதமாதலாலும், அந்தச்சாத்துவி தமே மனமாதலாலும், மனதுசத்துவசொரூபமெனவும், அக்குணமெறித்தா ன்றி ஏனையகுணமிரண்டையுந் தவிர்க்கத்தவிர்ந்துவிடும், அங்ஙனந்தவிர்ந் தநினில்லாது விடாதொளிருந் தனதுசத்துவகுணத்தை யகலாதுநிற்கில் முன்னர்தவிர்ந்தகுணமிரண்டுந் தாமேநாசமாமென்பதைதவிளக்க, மற்றிரண் டும்வந்துகலந்தன வவற்றைமாற்றிணற்போம் தனதுசன்மார்க்கம் விடா திருந்தபோது தாமதமுமிராசதமுஞ் சமிக்குமெனவும், ஏனையவிரண்டு குணமுந்தனதுசுயவடிவன்றெனக்காட்ட வந்துகலந்தனவெனவும், பரி

ணமம், பரிணமித்தல். அது பால்தயிராதல்போலும். இது திரிசியத்தைக் காட்டகின்றது. இந்தத்திரிசியம், மகத்துக்குமகத்தாகக்காண்டலிற் கன மெனவும், இக்குணத்தையகலாத குணி திரிசியமாதலால், பரிணமமென வும், பரிணமித்தல் பரிணமமாதலின், தொழிலாகுபெயர். சகந்தோற்றுந் தோறுஞ் சகலவிவகாரங்கிட்குமிடமாதலின், சலனமெனவும், சகஞ்சின் மாத்திரமாக்கனாதுழிச் சலனத்துக்கிடமின்மையின், பரிணமஞ்சலனம் போமெனவும், வேறுநிகழாமையின் போனக்காலெனவும், மழைகாலந் தவிர்ந்ததெனக்காட்டக் களங்கமற்றுநின்ற வாகாயம்போல வெனவும், மனஞ் சிதாகாயமாத்திரமாவிளங்கலின், நினதுளமப்படியாமெனவும், அச் சிதாகாயத்துக்கு வேறுபடாமையின், அப்பிரமத்தொன்றுயெனவும், இங் ஙனநிற்குநிலைக்குப்பெயராதலின், நிருவிகற்பசமாதியெனவும், நித்தியதிருத் திக் ஙிதைவிடாநிலைவேறின்றுதலின், நிற்குமெனவுங்கூறினர்.

(க - து.) மலைவணமதிக்கு, நிர்விகற்பசமாதியெனக்காட்ட வதினிலை யினையதெனக்கூறியதென்பது. உபநிடதநெறித்தாச்சென்றோர்க்கன்றி யிந் நிலைசற்றுமியையாது, இயைந்ததுபோற்காணினு மிடையினழுவும். இதனை யுய்த்துணர்ந்துகொள்க. இஃதுபநிடதநெறித்ததாதலின் விடாதுமுயலுக. முயலாவிடில், உபநிடதமேற்பழி யுண்ணல்வரும், இதுசத்தியம். (கவ)

கஅ - கவி. அ - கை.

[பிரமம்போ னினதுள்ளமுங் களங்கரகிதமாகாவிடத்துப் பய னின்றென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர் களங்கமற்ற கண்ணா டி காட்டும் போது, விளங்கியதன் மயமாகி யபேத மாகி விகற்பமின் றி நிருவிகற்ப மாறுற் போல, வளந்தறியப் படாவிபுவாய்ச் சத்தா ய்ச் சித்தா யானந்த மாம்பிரமத் தயிக்கியமான, வுளந்தெளிந்த படி யிருந்தா லுலக மெங்கே யுலைவெங்கே யென்றுசங்கை யொழிந்தி டாயே.

(இ - ள்.) களங்கமற்றகண்ணாடி தன்முன்வேறோர் களங்கமற்றகண்ணா டி காட்டும்போது, எ-து. களங்கரகிதமான் கண்ணாடி.யானது தனக்குமுன் வேறோர்களங்கரகிதமான கண்ணாடியைக்காட்டியவிடத்து:—விளங்கியதன் மயமாகி யபேதமாகி விகற்பமின்றி நிருவிகற்பமாறுற்போல, எ - து. களி ம்பின்றிவிளங்கிய தானெங்ஙனமோ வங்ஙனமாகி யாதோர்விகற்பமுமின் றிப் பேதப்படாது நிர்விகற்பமாகிநின்றாற்போல :—அளந்தறியப்படாவிபு வாய்ச் சத்தாய்ச்சித்தா யானந்தமாம்பிரமத் தைதக்கியமான, எ-து. இவ்வள வளவினதென் றளவைகளாலளந்தறியப்படாததாயும், விபுவாயும், சத்தாயும், சித்தாயும், ஆனந்தமாயும்விளங்கும் பிரமத்தினிடத்தி லுலக்கியமான :—

உளந்தெளிந்த படியிருந்தா லுலகமெங்கே யுலவெங்கேயென்று சங்கை யொழித்திடாயே, எ-து. மனந்தெளிந்ததெங்ஙனமோ வங்ஙனமிருந்தால் உலகமென்பதெங்கே, அதுபற்றியுண்டாஞ் சகலபிரவிர்த்தி நிவிர்த்திகளு மெங்கே, யில்லையே யாதலா லுலகையுமுலவையு மொழித்தலெங்ஙனமெ னக் கேட்குஞ்சங்கைகள் யாதுக் கதனையொழுத்திடுதி, எ - று.

மனதைக் களங்கமற்றகண்ணுடியாக்கியது, ஐயந்திரிபகலவேண்டுவதை ப்பற்றி. இன்றேல், ஐக்கியம்போல்வதன்றி யைக்கியமன்று. பிரமங்களங்க மற்றகண்ணுடிபோல்வதால் மனமு மங்ஙனமிருக்கவேண்டுமென்பது பற்றி யிவ்வுவமைகூறியதென்க. மனந்தெளியின் தானப்போதளந்தறியப்படாவி புவாய்ச் சத்தாய்ச்சித்தா யானந்தமாநிற்குமெனக் குறிக்கவிவற்றைப் பிர மவிலக்கணமாகக்கூறியது. இஃதெடுத்துக்காட்டுவமை. மனஞ்சித்தின்மு யல்வால்சித்தாகுஞ் சடத்தின்முயல்வால் சடமாகு மென்பதொக்கும். ஆதலிற் சிற்சடமெனப்பட்டது. எங்கேயென்பது, உளதாவெனப்பொரு டாநின்றது. இல்லையேயாதலா லுலகையுமுலவையுமொழித்த லெங்ஙன மெனவருவித்தது,இசையெச்சம். அதாவது;நால்வகைச்சொற்களுள்வெண் டுவனவெல்லாந் தந்தகலங்கூறவேண்டுநிற்பது.உதாரணம். ''இணைவிரிதோ ய்வன்ன விண்ணுசெயினும் புணரின்வெகுளாமைநன்று.'' என்றார் திருவள் ளுவர். கேட்குமென்பது, ஒழியிசை.

(க-து.) உள்ளந்தெளிந்தவண்ணநிற்கில் எல்லாச்சங்கையுந் தாமேயகலு மென்பது, விளுவவிலக்கணம். (கஅ)

கக - கவி. அ - கை.

[மனமிறக்கி லின்றியமையாச்செயல்க ளெங்ஙனமாமென்
மாணாக்கன் வினவலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

ஏகமாய் மனமிறந்தாற சீவன் முத்த ரிருக்குமட்டும் பிராரத்வ மெதினு லுண்பார், போகமா னதுபுசித்துத் தொலைப்ப தன்றே டு சித்தாலு மனந்தானும் போன தன்றே, சோகமா மனமிறந்தாற் போக மில்லை தோன்றுமெனின் முத்தொன்று சொலக்கூடாதே, மோகமா மிதுதெளியக் குருவே கன்றாய் மொழிந்தருள வேண்டுமெ ன்றான் முழுது மானேன்.

(இ - ள்.) ஏகமாய்மனமிறந்தாற் சீவன்முத்த ரிருக்குமட்டும் பிராரத் வமெதினுலுண்பார், எ-து. பிரமத்தோடொன்றுக மனலயமாயின் சீவன் முத்தர்கள் தாமுயிர்த்திருக்குமட்டுந் தமதுபிராரத்வத்தை யெங்ஙனம் யாதி லுலனுபவிப்பர்:—போகமானதுபுசித்துத் தொலைப்பதன்றே, எ - து. பிரா ரத்வபோகத்தை யனுபவித்துத்தொலைத்தாலன்றிப் போகுமோபோகாது:— புசித்தாலு மனந்தானும்போனதன்றே, எ - து. புசித்துத் தான்தொலைக்க வேண்டும்,அங்ஙனம்புசித்தாலு மனமுமிறந்தோ விறக்கவில்லையே:—சோக

மாமனமிறந்தாற் போகமெங்கே, எ - து. போகத்தையே சோகமாகவுடைய மனமிற்க்குமாயின், எங்ஙனம் போகநுகர்தல்:—தோன்றுமெனின் மூத்தனெச்சொலக்கூடாதே, எ - து. போகநுகரவேண்டி மனமெழுமாயின், அவனைச் சீவன்முத்தனெச் சொல்வதெங்ஙனம்:—மோகமாமிதுதெளியக் குருவேனன்றுய் மொழிந்தருளவேண்டுமென்றான் முழுதுமாஞானே, எ - து குருநாதனே மயக்கமாயுள்ள விச்சர்தகசுதெளிவுபெறச் செவ்விதாத்தெரிதருள வேண்டுமென்றிரந்துகேட்டனன் சமஸ்தமுந் தானுவிளங்கியமாணக்கன், எ - று.

(க - து.) இவ்வைவந்துவிதமாகத் தோற்றுமையர் தொலைப்பதெங்ஙனமெனக் குருவைமாணாக்கன் விஞவினனென்பது. (கக)

உ0 - கவி. அ - கை.

[இவற்றிற் குத்தரங்கூறுவான்வேண்டி மனோநாசமிருவகையாமென விக்கவியிற்கூறுகின்றார்.]

மனநாசஞ் சொரூப மென்று மரூபமென்றும் வகுத்துரைப்பா ரிருவகையா வருமிவற்றில், வினவாத சீவன்முத்த ரிடத்திலொன்றும் விதேகமுத்த ரிடத்திலொன்று மேவு மைந்தா, தனதான சத்து வமாய் மனஞ்சேடிக்கத் தாமதம்ரா சதநசித்தல் சொரூப நாச, மன நாசத் துவந்தானு மிலிங்க தேக மடங்கும்போ தடங்குவதே யரூப நாசம்.

(இ-ள்.) மனநாசஞ் சொரூபமென்று மரூபமென்றும் வகுத்துரைப்பா ரிருவகையா வருமிவற்றில், எ-து. மனோநாசத்தைச் சொரூபநாசமெனவும், அரூபநாசமெனவு மிருவகையாக வகுத்துச்சொல்லுவர்பெரியர், இங்ஙன மிருவகையாக வழங்கிவருமிவற்றினுள்:— வினவாத சீவன்முத்தரிடத்திலொன்றும் விதேகமுத்தரிடத்திலொன்று மேவுமைந்தா, எ - து. ஞானபுத்திரா வினவுதல்வேண்டாத சீவன்முத்தரிடத்திலொன்றும், விதேகமுத்தரிடத்திலொன்றுமிருக்கும்:—தனதானசத்துவமாய் மனஞ்சேடிக்கத் தாமதம்ராச தநசித்தல் சொரூபநாசம், எ - து. தனதுசுயரூபமான சாத்துவிதகுணமாக மனமேலிடில் தாமதகுணமும் ராசதகுணமுந் தாமோநாசமாம், அங்ஙனநாச மாதலே சொரூபநாசமும்:—அனகா சத்துவந்தானு மிலிங்கதேக மடங்கும் போதடங்குவதேயரூபநாசம், எ - து. மலரகிதமானவனே யந்தச்சாத்துவித குணமோ வதுவுஞ் சூக்குமசரீரநசிக்கும்போ தொக்கநசிக்கும், அங்ஙனமொக்க நசித்தலே யரூபநாசமுமாம், எ - று.

சங்கைதவிர்ந்தவராதலின், வினவாதசீவன்முத்தனெனவும், சேடித்தெனப்பாடமோதில் காலவழு.- என்னை, "முதலினன்குமென்னுஞ்" சூத்திரவிதியாலென்றார் பவணந்தி. சொப்பிரகாசமேலீட்டில் சமஸ்தவிகாரகுண

ங்களுநில்லாவாதலின், தனதானசதீத்துவமாய் மனஞ்சேடிக்கத் தாமதம்ராசத நசித்தலெனவும், சூக்குமதேகநாசத்தைப்பற்றிச் சொப்பிராகாசமேலிடாத லா லதனேடொக்க நசித்தல்கூடுமென்பார், சத்துவந்தானு மிலிங்கதேகமட ங்கும்போ தடங்குமெனவுங்கூறினர். இதனால், மனமெனல்; ரூபாரூபமெ னப்பெற்றும்.. ரூபமெனல், சகசீவபரம்; அரூபீமெனல், அதன்வாசனே. ம னேநாசம்வேண்டின், ரூபாரூபநாசம்வேண்டும். இன்றேல், ஆகா. (சின் மாத்திரமாக்கலாத்தல்) ரூபநாசம். அதுவுமெல்லமெல்லவூர்த்தமுகமாக நஷ் வல், அருபநாசம். எனவே சைதன்யத்தின்ஸ்புரிப்பே மனமெனப்பெற்ரு ம். பெறவே சித்துசடமும், ரூபாரூபமும், ஸ்புரிப்பையன்றியின்ரு தலின், மனேநிலையெனக்கண்டாம். காணவே, அரூபத்தைப்பாழெனல், குற்றம். அன்றேல், அந்தப்பாழையறியுந் தானெனலின்றே? உளதெனில், அது, பா மூமன்று, நாமரூபமுமன்று, ஞானமுமன்று அஞ்ஞானமுமன்றென்பதாயிற் று. இதனை யிவ்வாறென்றறியாதார் கண்டபடியுளையிடரு மோ? ஆமெனின், யுத்திக்குமூரணும், மூரணின், அனுபவமுமூரணும், மூரணின். முன்போற் பெத்தநிலையாம். இப்பேதமைக்கு ஞானநூல் முற்றுமுணர்ந்து மோதியும் பயனென், என்னை, "புராணமிதிகாசமெவையுங்கலையனைத்தும் பிரா ணனறியாதுள விடத்திவை பிதற்றேயென்ரூர்" தத்துவராயர். மேல்காரண தேகநாசங்கூறுது சூக்குமதேகநாசங்கூறியது, ஐயந்திரிபுக்குவினைமுதன சிக் கில்தானேயவித்தையழியுமெனக் கூறவேண்டுமோ, என்பதுபற்றியென்க. இதனை லட்சியார்த்தத்தாலன்றி வாச்சியார்த்தத்தா லெங்ஙனங்கணிப்பது. கூடாதிருக்கப் பதவுரையாற் கணிக்கப்புகுவார் மிக்கவிவேகியர் போலும், அவர்சாம்பரதாயமுமங்ஙனம்போலும், தற்கண்டார்க்கென்ரு முடியும். ஆத லின், புகழுக்கும், அபினி, கஞ்சா, முதலியபோதைக்கும், கள்ளமங்கையர் போகத்துக்கும் விழைந்தலைகின்றனர். கள்ளங்கடந்தஞானிய னெங்ஙனுமரி யர், இதறிக. இங்ஙனமாய விவ்விரண்டுமுத்திமேற் பழுதுரைப்பாருள ரேல், அவர் எத்தேகமாயினும், எப்போகமாயினும், ஆன்மாவெனவும், முத் தியெனவுங்கொள்வரார்போலும். தேகமும்போகமுந்தனக் கன்னியமெனத் தெளிந்தனரோ, தெளியாதாரோ? தெளிந்தனரெனின், லட்சியார்த்தமுகர் ந்தனரன்றே. இவர்கட்சியை யெங்ஙனுங் கடைப்பிடியற்க.

(க-து.) மனேநாசம்வேண்டின் ரூபா ரூபநாசம்வேண்டுமென்பது. ()

உக - கவி. அ - கை.

[சிவன்முத்தருருவநாசமனதினராதலினாலும், அதனாலவற்றை யும்பற்றின்றி யனுபவிக்கக்கூடுமாதலானு மிங்ஙனகூடு மென்பதை யிக்கவியிற் கூறுகின்ரூர்.]

சுத்தமாஞ் சத்துவமே யுண்மை யாகுந் தீகளிருள்போ னன் மனமென்ன் சொல்லும் போம்போம், வர்த்தமா னத்தில்வந்த வுண வெவு யுண்டீர் வருவதும்போ வதுதினைந்து மகிழார் வாடார், கர்த்

தாவா மகங்தையைவிட் டகர்த்த ராகிக் காரணவிருத் திகளவத்தை காண்பா ராகி, முத்தரா யிருக்கலுமாம் புசிப்புங் கூடி முட்டிலையென் றறிந்துசங்கை மோசிப் பாயே.

(இ-ள்) சுத்தமாஞ்சத்துவமேயுண்மையாகுந் திகளிருள்போலுல் மண மென்சொல்லும்போம்போம், எ-து. சுத்தமாயுள்ளசாத்துவிதகுணமே மெய்யுணர்வாம், இம்மெய்யுணர்வே பழுதின்றி யெங்கணு மொருதகைத்தாவி னங்குஞ் சொப்பிரகாசமாம், இச்சொப்பிரகாசமேலீட்டில், ராசத, தாமத மென்னுங் குணங்களிருளாம், இவ்விருளெங்ஙனமகலாதுநிற்கும், அகலுமா யின், மனமென்பதும் எங்ஙனநிற்கும், நில்லாதாயின், மனமென்னுஞ் சொல்லு மெங்ஙனமகலாதுநிற்கும், அகன்றேவிடும் : — (ஆதலின்) வர்த்த மானத்தில் வந்த வுணவையுண்பார் வருவதும்போவதுநினைந்து மகிழார் வாடார், எ-து. நிகழ்காலமாகியவிப்போது கிடைத்தவுணவுயாதோ அதனை யுண்பார்கள், இனிவருவதைப்பற்றியும் வந்துபோவதைப்பற்றியும் நினைக் கமாட்டார்கள் நினைத்துச்சுகத்தால்சந்தோஷித்தலும் இடுக்கத்தால் துக்கித் தலுங்கொள்ளார்கள்: — கர்த்தாவாமகங்தையை விட்டகர்த்தராகிக் காரண விருத்திகளவத்தை காண்பாராகி, எ - து. கர்த்தத்துவமாகின்றுள்ளயா னெனதென்னுமகம்பாவத்தை யொருங்கேவிட்டு அவ்வகங்தைசிறிதுமில ராகியும் அகக்காரணபுறக்காரணவிருத்திகளையும் மூன்றவஸ்தாச்சுழலினையுங் காண்பவராகியும்: — முத்தராயிருக்கலுமாம்புசிப்புங்கூடி முட்டிலையென்ற றிந்துசங்கைமோசிப்பாயே, எ-து. சீவன்முத்தராகியுமிருக்கவுங்கூடும் சகல போகமுறுகாவுங்கூடும் இவற்றிற்கெல்லாம் யாதோர்தடையுமின்றென்று ணர்ந்து இதுபற்றியினிவிளவப்புகுதலையொழிதி, எ-று.

சாத்துவிதத்தைச் சுத்தமெனவு முண்மையெனவுங்கூறியதா லேனைய குணமிரண்டையு மசுத்தமெனவும் மித்தையெனவுங் கொண்டாம். இருள் போல்பனைவகளையிருளென்றது உவமையாகுபெயர். இவ்விரண்டையுமிரு ளென்றதனுல் ஏனையொன்றும்பிரகாசமெனப்பெற்றும். கர்த்தராமகங்தை யெனின் நிணைவழுவாதலின் கர்த்தாவாமகங்தையென்றும். எதுகைபற்றி யெனின் முதலடியிரண்டாமடிக்கென்செய்தும். அகர்த்தராகியென்றதனுல் சைதன்யத்தையாளெனவும், பொதுப்படக்காரணமென்றதனுல் அகக்கர ணம்புறக்காரணமெனவும், அவத்தையென்றதனுல் மூன்றவத்தையெனவுங் கொண்டாம். ரகரவொற்றெதுகையாசெதுகை.

(க-து.) மனது விஸ்மரணையாநின்று சகலவிவகாரங்களையும் வழுவா துநடத்தும்போது தஸ்மரணையாநின்று நடத்துவதற்குத்தடையென்னை. மூடஞானக்கிரியையினும் கல்விஞானக்கிரியை சிறந்தது, அதனினுங்தத்து வஞானக்கிரியைசிறந்ததன்றே? ஆதலால் மனத்தாலனுபவித்தல்கூடுமென் பது. எனவே, எல்லாமாயல்லவுமாயிருப்பதுதனது நிலையாயினும் நெஞ்சி யாற்றவற்றையுமனமியற்றுமென்க: இதனினுமிக்கதெளிவோர்நின்றிய

ற்றல் யாதுமின்றெனவுணர்க. பிரவிர்த்திநிவிர்த்திகளை விருத்தியென்று ளொனக்கொண்டு காண்பாளொன்றுணாக்கினுமனமையும். அனுபவிமுன்னிலையி லிதுதெரியும். (உக)

உஉ - கவி. அ - கை.

[விவகாரங்கள்மனவலிவுக்கிடமாதலின் கூடாதென்ற
மாணாக்கற்குத்திருஷ்டாந்தபூர்வமாக ஆசிரிய
ரிக்கவியில் விடைகூறுகின்றார்.]

விவகார வேளையெல்லாஞ் சமாதி யென்றல் விகற்பமன்றே மனமலைந்து விடாதோ விட்டா, லவதான நழுவுமன்றே வென்றுயாகி லதற்கொருதிட் டாந்தங்கே ளாசை கொண்டு, நவ்மாகப் பரபுருடன் றன்னைக் கூடி நயந்துசுக மனுபவித்த நாரி நெஞ்சந், தவமான மனைத்தொழில்கள் செய்யும் போதுந் தழுவியனு பவித்தசுகந் தனைவி டாதே.

(இ-ள்-) விவகாரவேளையெல்லாஞ்சமாதியென்றல், விகற்பமன்றேம னமலைந்துவிடாதோவிட்டா, லவதானநழுவுமன்றேவென்றுயாகில் எ-து, விவகரிக்குங்காலமெல்லாஞ் சமாதிசெய்தலெனத்தேவரீர்கூறின் பலவாக ச்சிதையுமல்லவோ பலவாகச்சிதையின் மனமலைந்துவிடாதோ அங்ஙனமலை ந்துவிடுமாயின் உண்மைஞ்ஞானநழுவுமல்லவா இதனுக்கென்செய்தலெனச் சங்கிப்பையாயின்: — அதற்கொருதிட்டாந்தங்கேளாசைகொண்டு நவமாக ப்பரபுருடன்றன்னைக்கூடி, எ - து. நீவிரூவியதற்காக வோர்திருட்டாந்த மூளததனையான்கூறக்கேளுதி மிக்கவாசைகொண்டு புதிதாகவோர்சோரநா யகனைக்கூடி:—நயந்துசுகமனுபவித்தநாரிநெஞ்சம், எ-து. மிகவும்விருப்ப மூற்றுச்சுகத்தையனுபவித்த வோர்ஸ்திரீயின்மனமான து-—தவமானமனைத் தொழில்கள் செய்யும்போதுந் தழுவியனுபவித்தசுகந் தனைவிடாதே, எ-து. நோன்புவழுவாதியற்றற்குரிய வில்லறமார்க்கத்தொழில்களைச் செய்கிறபோ தும் கள்ளநாயகனைத்தழுவியனுபவித்த மிக்கசுகப்பெருக்கைவிடுமா விடா தே. அதுபோன்றிருக்கும், எ - று.

விகற்பம் - விடயம்பலவாகச்சிதைதல். அவதானம் - பேரின்பமெனி னுமமையும். பரபுருடனென்றதனாற் சோரஸ்திரீயென்பதுதானேயமைத லின், நாரியென்பதற்குவிசேடமெற்றிற்கு. விதிவழுவாதியற்றுமனைத்தொ ழிலெனினுமமையும். எனவே, அவள் பலதொழில்புரியினு மப்போதெல்லா ஞ்சோரவின்பநழுவாததுபோலப் பேரின்பநழுவாதென்க. இவளெய்தியப யன்சுகமாதல்போல மிட்டையாலெய்தியபயனுஞ்சுகமாம். இவள்பலதொ ழிலாற்பிரியினுமிவனைச்சுகம்விடாததுபோலச் சான்றோர்பலதொழிலாற்பிரி யினு மவனைச்சுகம்விடாததுபற்றி யிவ்வுவமைகூறினார். இதுகூடாதெனி ன், அதுவுங்கூடாதென்பம். சோரவின்பமிவனைவிடாததுபிரத்தியட்சமெனி ன்; அங்ஙனமுதவிடாததும்பிரத்தியட்சமென்பதே. பருவமில்லாதழலுமங்

கைக்கதுதெரியாததுபோல, பரிபாகமில்லாதுழலுவோர்க்குந்தெங்ஙணந்தெரியும், தெரியாததாலதுபொய்யோ; அன்றேல், இதுவும்பொய்யன்று. விவகாரத்தாலிவளுக்குமனம்பேதிக்கினுஞ் சுகம்பேதித்ததோ? இன்றெனின், அவருக்குமங்ஙனமாமெனவுறிக. இந்தச்சுக மிவள்போன்றவளுக்குத்தெரியுமாறுபோன்று, அந்தச்சுகமு மவர்போன்றவர்க்குத்தெரியும். என்னை, "பெற்றவட்கேதெரியுமந்தவருத்தம்பிள்ளைப் பெறுப்பேதையறிவாளோபேரானந்த, மூற்றவர்க்கேதெரியும்" என்றூர் தாயுமானூர். இதனைமறுப்பார் போலிஞானியரு மடாஞானியருமெனவுறிக. இது குறிஞானமன்று, எதார்த்தஞானம். எதார்த்தஞானம், குறியாலன்றிச்சுயமாவிளங்கல்.

(க - து.) பலவிவகாரத்தினுஞ்சுகபோதமுவாதென்பது. ஆதலின்விவகாரவேளையெல்லாஞ்சமாதியென்பதுபொருந்தும். (௨௨)

உங - கவி. அ - கை.

[சிவன்முத்தர்களகர்த்தாவெனின், போகநகர்த்தலெங்ஙனமென்றசங்கைக் குத்தரங்கூறுவான்வேண்டிச் சத்துக்கள்மூன்றுவிதமாவதையும், அவர்நிலைமகிமையையு மிக்கவியிற்கூறுகின்றூர்.]

தேகத்தனலுறுகியகர்த்தருகிச் சிவனன்றிப் பிரமமாய்த்தெளிந்த முத்தன், போகத்தை யுண்பனென்றுற் கர்த்தாவாமேபூரணமாமகர்த்தனுக்குப் போக முண்டோ, சோகத்தை யறுத்தருளுங்குருவேயிந்தத் துகளறுக்க வேண்டுமெனச் சொல்லையாயின், மாகர்த்தன் மாபோகி மாதியாகி வகைமூன்று யவரிருக்கு மகிமை கேளாய்.*

(இ - ள்.) தேகத்தனலுறுகியகர்த்தருகிச் சிவனன்றிப்பிரமமாய்த்தெளிந்தமுத்தன், எ-து. பிரக்ஞானமன்றித்தேகந்தானல்லாதவருகியும், மறந்துந்தேகந்தானெனக்கோடலின்மையினகர்த்தருகியும், சிவத்துவமன்றிப்பிரமமேதானுகியும் தெளிந்தசிவன்முத்தனென்போன்: — போகத்தையுண்பனென்றுற்கர்த்தாவாமே பூரணமாமகர்த்தனுக்குப்போகமுண்டோ, எ-து, விடயபோகமனுபவிப்பனெனில், தேகந்தானென்கிறகர்த்தத்துவம்வாய்ப்பதாமே. பூரணனெனில், பூரணமாயகர்த்தனுக்கனுபவித்தலில்லாவிடத்துப்போகமெங்ஙனமுண்டு. இல்லையே:—சோகத்தையறுத்தருளுங்குருவேயிந்தத் துகளறுக்கவேண்டுமெனச்சொல்லையாயின், எ-து. அடியேன்துயரமனத்துந்தொலைத்தருளியகுருநாதனே, இங்ஙனமாகவெழுந்த விந்தச்சந்தேகமாகிறகளங்கத்தை நீக்கியருளவேண்டுமெனக்கேட்பையாயின்: — மாகர்த்தன்மாபோகிமாதியாகி வகைமூன்றுயவரிருக்குமகிமைகேளாய், எ - து. மாகர்த்தனெனவும், மாபோகியெனவும், மாதியாகியெனவு மூன்றுவகையாயவரிருக்குமகிமையைக்கூறுதும்நீகேளுதி, எ-று.

தேகமிருந்துமிதுபூதவிகாரந் தானல்லவெனத்தெளிதலின், தேகத்தனலுஞகியெனவும், இவ்வுடலிருப்பும், அபிமானித்தலும் காத்தலும், உபசரித்தலும், இதுநானெனைக்கோடலும், இதனதபூரிப்புவாடலுக் கின்பதுன்பமெய்தலும், இன்னுமிவைபோன்றபிறவுமாதலும், அறிவாதலா லறிவேதானெனைக்கண்டா ரிவ்வுடல்தானென்பரோ என்றார். ஆதலின் அகர்த்தனுகியெனவும், அறிவுதானென்றுயபோது கூடஸ்தனென்பதாயிற்று; ஆகவே சிவனுயிருந்துஞ்சிவனல்லன், உடலாகாரந்தவிர்ந்துவருதலின், சிவனன்றியெனவும், உடலுமுயிருமின்னும்வேறுபடுதலின்மையின், சிவனின்றியெனப்பாடமோதியுனாகோடல்கூடாது. கூடுமெனின், மகானெனப்படாது, படுதலின், அதுவழு. சிவத்துவாருழுவியக்கண் ணீசத்துவமெங்கே. ஒருவனுக்கின்றியக்கண் பலருக்குமின்றே, பலருக்குமிவ்வனுபவமொருங்குவாய்க்கின் பலருக்குமெங்கே? ஆயின் சிவத்துவங்காரணமாக வீசத்துவமென்றருத்தாபத்தியாற்கோடலாகின்றதே யீதென்னைகொலோ விபரீதமென்னற்க. எங்கெங்கேசிவத்துவபாவமுண்டோ, அங்கங்கேயீசத்துவபாவமுண்டு. இன்றேலதுவுமின்றும். இதிலென்னவையமுள. இன்றுதலாலதுபொருந்தும். சிவத்துவாருழுவியக்கண் கூடஸ்தனுமெனல்வழுவன்றே. வழுவெனில் கூறியதுகூறலென்னுங்குற்றமாம். வழுவன்றெனின், ஈசத்துவாருழுவியக்கண் பிரமஸ்வரூபமாவனென்பதெங்ஙனமறுக்கப்படும். படாதாதலின், பிரமமாயெனவும், சுருதியுத்தியனுபவத்தாலன்றியையயந்திரிபறுது. அறுமெனின் வறியசொல். மூன்றுமொக்கத்தேர்ந்தவிடத்தேவிபரீதமறும், அறுதலேதெளிவாம். அன்றேல், மருளாம். சிவன்முத்தனெனற்பாலதுதெளிவாதலால், தெளிந்தமுத்தனெனவுங்கூறினர்.

(க - து.) சிவன்முத்தர்போகமனுபவிக்கக்கூடுமெனற்கு விடைகூறுவான்வேண்டி விரதத்திரயந்தொகுத்துக்கூறினனென்பது. இது தொகுத்துச் சுட்டலென்னுமுத்தி. இனிவகுத்துக்காட்டலென்பதனு லவற்றைத்தனித்தனிக்கூறுதும். மாகர்த்தன்முதலிய மூன்றுமாரியமாதலின் மிகாவாம். (உசு)

உசு - கவி. அ - கை.

[முன்னர்கூறியமுறையே, மாகர்த்தனிலக்கணமினையதென விக்கவியிற்கூறுகின்றுர்.]

செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தச் சிலைமலைமுன்னிரும்புகள்சேட் டிக்கு மாபோற், செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்கு மென்முன் செடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யு, மெய்கலந்த விந்திரிய விகார ரூப விவகார விருத்திக்கும் விருத்தி தானு, மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சி டோதான் வெயில்போலென்றுறைத்தவனே விபுமா கர்த்தன்

(இ-ள்.) செய்கையுஞ்செய்விக்கையுமற்றிருக்குங்காந்தச் சிலைமலைமூன்னிரும்புகள்சேட்டிக்குமாபோல், எ-து. தன்வினையாகிய செய்கையும், பிறவினையாகிய செய்விக்கையுமின்றிச் சும்மாவிருக்குங்காந்தக்கற்களாலமைந்தபர்வதத்துக்கெதிரில், இரும்புகளெங்ஙனமசையுமோவதுபோல:—செய்கையுஞ் செய்விக்கையுமற்றிருக்குமென்மூன் செடமானவுலகமெலாஞ் சேட்டைசெய்யும், எ-து செய்கையுஞ்செய்விக்கையுமின்றிச் சும்மாவிருக்கின்றவெனக்கெதிரில் சடரூபமாயுள்ளசெகங்களனைத்தும் பற்பலகிர்த்தியங்களைச்செய்யாநிற்கும்:— மெய்கலந்தவிந்திரிய விகாரரூபவிவகாரவிருத்திக்கும் விருத்திதாரு மெய்கலந்தசமாதிக்கும், எ-து. தேகசம்பந்தமானஞானேந்திரியகன்மேந்திரிய காரணமாகநிகழும் பற்பலவிகற்பரூபமாயுள்ள விவகாரச்சேட்டைகட்கும், சகலவிருத்திகளுந்தாரவிளங்கிய வாத்மசம்பந்தமாகநிகழுஞ் சொரூபசமாதிக்கும்:—சாட்சியே நான்வெயில்போலென்றுணரத்தவனே விபுமாகர்த்தன், எ-து தன்முன்சகலவுயிர்களும் பற்பலகிரியைகளியற்றற்குச் சாட்சியாநின்றுள்ளசூரியனைப்போல நானேசாட்சியெனத்திரமாகக்கலங்காது நின்றுனெவனே வவனேவிபுவனைத்திற்கும் விபுவாயுள்ளமாகர்த்தனெனப்படுவோன், எ-று.

செய்கையுஞ்செய்விக்கையுமாவது ; அசைத்தலையு மசைப்பித்தலையுமெனக்கொள்க. காந்தமலையானது அசைக்கவுமில்லை யசைப்பிக்கவுமில்லை யிங்ஙனமிருக்க, இதினெதிரிலிரும்புகளசையுமாறுபோல; உபாதிரகிதமாகவினங்கு ஞானசைக்கவுமில்லை யசைப்பிக்கவுமில்லை யிங்ஙனமிருக்க, எனக்கெதிரில் சமஸ்தவுலகமுமசையுமாதலால், என்முன்னுலகமெலாஞ்சேட்டைசெய்யுமெனவும், சகலவுயிர்களுந் தத்தங்கிரியைகளியற்றற்குச் சாட்சியாநின்றுளோன் சூரியனுதல்போல, அநாத்மவிவகாரம் ஆத்மவிவகாரமெனவிரண்டாம். அநாத்மவிவகாரம்; தேகாகாரமாகவகக்கரணபுறக்கரணங்களோடுகூடி யியற்றுங்கிரியை. ஆத்மவிவகாரம்; மெய்யுணர்வுசம்பந்தமாக விவேகாகாரமாகக் கரணசம்பந்தமின்றிநின்றியற்றுங்கிரியை. அந்தக்கிரியை மூடமெனவும், இந்தக்கிரியைசமாதியெனவுமாம். இவ்விருவகைகக் கிரியையுமென்னுலியற்றப்படினுநானன்று. அஞ்ஞானமாநின்றக்கிரியையபுரிந்ததும்நானே. ஞானமாநின்றிக்கிரியையபுரிந்ததும்நானே. ஆயினும், இவ்விரண்டுகாலத்தும்நானெனவிருத்தலானும், இவ்விரண்டுமொன்றிலொன்றில்லாததானும் நானெனலேயுண்மை, நானேசாட்சி, என்பதுபற்றி மெய்கலந்தவிருத்திக்கும், மெய்கலந்தசமாதிக்குஞ் சாட்சியேநானெனவுங் கூறினர். நானென்பதேசந்நிதியாகவும், சாட்சியாகவுநின்றமைகாண்க. விருத்திதாரமென்றதனால், அறிவையன்றிச்சகலவிருத்திகளுமின்றெனப்பெற்றாம்.

(க - து.) சகலமுமெனக்குமுன்னிகழுமெனவும், சகலகிரியைகட்குஞ் சாட்சியானெனவுந் திடமாகத்தெளிவுற்று நின்றுனேமாகர்த்தனென்பது.

இதுதுணிபு. (உச)

உரு - கவி. அகை.

[நிறுத்தமுறையானே யேனையமாபோகி மாதியாகிகளினிலக்
கணங்களினியிக்கவியிற்கூறுகின்றார்.]

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ் சுத்த மபத்தியப்பத் தியமெனவு ணைய்ந்தி டாமற், பொறுமையுடன் கிட்டினதைக் காட்டித் தீப்போற் போகங்கள் புசிப்பவன்மா போகி யாகுஞ், சிறிது வலி துகடனதன் னியங்க ணன்மை தீமைகள்சே ரினும்படிகச் செயல்போற் சித்தம், வெறிதிருக்கு மவனேமா தியாகி யாவன் விரதமிம்மூன் றுள்ளவரோ வீடுள் ளோரே.

(இ - ன்.) அறுசுவையின்குணங்குற்றமசுத்தஞ்சுத்த மபத்தியம்பத்திய மெனவுணைய்ந்திடாமல், எ-து. அறுவகைருசியினிதனவும் அன்றெனவும் அசுத்தமெனவும் சுத்தமெனவும் அபத்தியமெனவும் பத்தியமெனவும் தானுண்ணுமுணவுகாரணமாக வதனைப்பகுத்துணராது:—பொறுமையுடன் கிட்டினதைக்காட்டுத்தீப்போற் போகங்கள்புசிப்பவன்மா போகியாகும், எ - து. பொறுமையோடெதுகிடைத்ததோ வதனைப்பகுப்பின்றிப்பற்றியெரியுங் காட்டுத்தீயைப்போலப் பிராரத்தமாகிற வின்பதுன்பபோகங்களெனப் பகுப்பின்றியனுபவிப்பவனெவனே வவன்மாபோகியெனப்படுவன்:— சிறிதுவலி துகடனதன் னியங்கணன்மைதீமைகள் சேரினும்படிகச் செயல்போற்சித்தம், எ - து. பிராரத்துவபோகமற்பமகத்தாகவேனும் தனதாகவேனு மன்னியமாகவேனும் நன்மையாகவேனுந் தீமையாகவேனுசேரிடினுமதன்பால், தனதிடத்திலியல்பாகத்தோற்றும் பிரதிபிம்பந்தானுகாதுநிற்கும் படிகக்கண்ணுடியின்செயலைப்போலத் தனதுசித்தம்:—வெறிதிருக்குமவனேமாதியாகியாவன் விரதமிம்மூன்றுள்ளவரோவீடுள்ளோரோ, எ - து. பற்றின்றிநிற்பவனெவனே வவனேமாதியாகியெனப்படுவோன். ஆதலினிவ்விரதமூன்றுமுள்ளவர்களே யைக்கியமுத்தியுடையவர்களாம், எ - று.

அறுசுவையாகின்றபதார்த்தங்களே யறுசுவையென்றது, குணவாகுபெயர். உண்ணற்பாலதியாதோ வதனையுணென்றது, தொழிலாகுபெயர். ஆய்ந்திடாமல்புசிப்பவனெனவும், சேரினுமெறிதிருக்குமவனெனவுங்கூட்டிமுடித்திடுக. அதன்பாலென்பதைவருவித்தாம். இங்ஙனம்போகநுகர்தலும் சித்தம்வறிதிருத்தலும் சன்னி பித்தம் முதலியவியாதிமேலிட்டோர்பாலுமுளவே. யிவர்களும் மாகர்த்தன் மாபோகியெனப்படுவார்களேபேதமென்னை, இவர்கள் மூடத்தாலும் வியாதிமேலீட்டாலும், ஆபத்துமேலீட்டாலும் கவலைமேலீட்டாலும், அவர்கள் ஐயந்திரிபகன்ற தெளிவுமேலீட்டாலும் மரணமறவாமைமேலீட்டாலும் சுகமுஞ்சுகியுமெங்கேயென்னு மாராய்ச்சிமேலீட்டாலும் இவைபோன்றபிறவற்றாலுமாதலின் பேதமேயெனவுணர்க. இதனைச்சொல்லாலுணர்வார், மறுப்பர்.

(க - து.) இவ்விரண்டுகவியாலும்விரதத்திரயங்கூறியதென்பது. (உரு)

உசு - கவி. அ - கை.

[விதிவிலக்குவழுவின்றியசெயல்களகலாதிருக்க, விவஹனக்கிரு
கிர்த்தியனென்பதுதங்ஙனங்கூடுமென வினுதலை
யிக்கவியிற் கூறுகின்றார்.]

வேறு.

மெய்யுங் கொண்டு பிராரத் வந்தரு விதிவழி நின்றிடவு
முய்யுங் கன்மிக ளுக்கனு குணமா வுறுதொழில் செய்திட வுஞ்
செய்யுஞ் செய்கை முடிந்தவ னென்றுரை செப்புவ தெப்புடியோ
னீயுந் துன்ப மகற்றிய குருவே நலமா வருள்வீ ரே.

(இ-ள்.) மெய்யுங்கொண்டுபிராரத்வந்தரு விதிவழிநின்றிடவும், உய்யுங்கன்மிகளுக்கனுகுணமா வுறுதொழில்செய்திடவும், எ-து. அகக்காரணபுறக்காரணங்களேயன்றியுந் தேகத்தையுந்துணைக்கருவியாகக்கொண்டு, பிராரத்வந்தருகின்ற நெறிவழித்தாய் வழுவின்றிநின் றறியதொழிலியற்றுநிற்கவும், திரிசியமேபொருளெனநம்பி யுய்யுங்கன்மகாண்டிகளுக் கனுகூலமாகவதற் கியைந்த விதிமார்க்கக்கிரியைகளேச் செய்துகொண்டிருக்கவும்: — செய்யுஞ் செய்கைமுடிந்தவனென்றுனை செப்புவதெப்படியோ, எ-து. இங்ஙனமிருக்கச்செய்யவேண்டியசெய்கையெல்லாஞ் செய்துமுடிந்தவனென்று சொல்மாத்திரமா வெவருங்கூறுவதென்னைகொலோ: — நையுந்துன்பமகற்றியகுருவேநலமாவருள்வீரோ, எ - து. வருத்தத்தையேசெய்யுந்துன்பமாவுள்ளவினேதையுந் நீக்கியருளியவெனதுகுருநாதனே யிதனுக்குவிடைசெவ்விதாவுனைத் தருளுவீராக வென்றிரந்துகேட்டனன், எ-று.

மெய்யுமென்னுமும்மை; இறந்ததுதழீஇயவெச்சவும்மை. உய்யுங்கன்மிகளென்றது; கன்மமேபயனுகவுய்தலே. கன்மிகளுக்கனுகுணமாவுறுதொழில்செய்திடல்; சரியைகிரியைகளேவிதிவழித்தாச்செய்துகாட்டலே. செய்யுஞ்செய்கைமுடிந்தவனெனறதனுல், கிருதகிருத்தியனென்றுயிற்று. துன்பஞ்செய்பனவகளேத்துன்பமென்றது, குணவாகுபெயர்.

(க-து.) விதிவிலக்குவழுவாச்செயல்முயலாநிற்க இவனேக்கிருதகிருத்தியனென லெங்ஙனங்கூடுமென்பது. (உசு)

உஎ - கவி. அ - கை.

[பலவியாப்தி விர்த்திவியாப்தி யென்பவற்றுள், இவன்விர்த்திவியாப்தியற்றதலி னிவன்செய்துஞ்செய்திலனென்பதை
யிக்கவியிற்கூறுகின்றார்.]

ஆடவர் செய்தொழின் மூவகை யாகு மவித்தை வசத்துறுநா
ளீடணை மமதை யிகந்தை யுளார்க்கே யிகபர விவகாரம்
வீடணு குவமெனு மிச்சை யுளார்க்கே வித்தை படிப்ப வெலாம்
பாடன் மிகுந்தொழி லாற்பல னுண்டோ பரிபூ ரணமா னவர்.

(இ-ள்.) ஆடவர்செய்தொழில்மூவகையாகும், எ-து. புருடர்செய்யுந் தொழில்கள் மூன்றுவிதமாயிருக்கும்: — அவித்தைதவசத்துறுகாளிடணைமம தையகன்தையுனார்க்கேயிகபரவிவகாரம், எ-து. அவித்தாமயமாய காலத்தில் ஈடணைத்திரியமும், அகமமனதையுடையார்யாரோ வவர்களுக்கே யுரியது, இகலோகசுகத்தையும், பரலோகசுகத்தையும்பற்றி முயலுமிவிவகாரம்: — வீடணுகுவமெணுமிச்சையுளார்க்கே வித்தைபடிப்பவெலாம், எ-து. முத்தி யடைகுதமென்றவாசையுடையோர்யாரோ வவர்களுக்கே யறிவைப்படிக்கு முயற்சியனைத்தும்: — பாடன்மிகுந்தொழிலாற்பயனுண்டோ பரிபூரணமா னால், எ-து. அறிவேவடிவாகப்பரிபூரணமாயிடினவர்கட்குஞான நூல்போத லியலைவகளிலுள்ளபாடல்களினை மிகவுமப்பியாசிக்குமுயற்சியால் யாதானுங் கிஞ்சித்பயனுளதோ இல்லையே, எ-று.

வித்தைபடித்தல்; கல்வியடித்தலெனின், அஃதஞ்ஞானதிசை, எல்லாக் கல்வியையும்பழுதறக்கற்ற வறிவைக்கற்றல். அன்றெனின், வீடணுகுவமெ ணுமிச்சையுளார்க்கேயென்பானேன்? புகழணுகுதமெணுமிச்சையுளார்க்கே யெனப்பாடமிருக்கின், கல்விபடித்தலெனக்கூறலாம். ஆதலின், அதுவழு. இகபரவிவகாரம், அஞ்ஞானதிசை. வித்தைபடிப்பது, ஞானதிசை. பரி பூரணமாதல், இவ்விரண்டுநிலையுமகன்றதிசை. வித்தைபடித்தலாவது; பொன்னையன்றிப் பணிபேதங்களில்லாவாறுபோன்று, அறிவையன்றிச்சக லவபரபேதங்கள் சற்றுமின்றெனவாச்சியார்த்தத்தால்தீரவுணர்ந்து, அத னைச்சற்குருவினருளா லிலக்கியார்த்தத்தால் தெளிவுபெறவிளக்கிக்கொண் டதனைக்கண்டுகண்டிதநானிதநானெனப் பலகாலமும்விடாதுபயிறல். இத னையப்பியாசமெனினுமமையும். அமையவே, பரிபூரணமாதல், ஆரூடமெ ன்றுயிற்று. இதனைப்புறக்கணிப்போரகங்காரிகள். சுயமாகப்பாட மிக்கவலி யுளதாதலின்பயனெனினுமமையும். பரிபூரணமாதல், தானேயனைத்துமா வினங்கல். இத்திசையில் செய்துஞ் செய்திலனென்றுயிற்று.

(க-து.) பரிபூரணஞதலால் பாசமுயற்சியெய்தாதென்பது. (உஎ)

உஅ - கவி. அ - கை.

[தேவரீர்கூறியதொக்கும், இனியோர்சங்கை. அதாவது; ஞானமேதா னெனப்பழகுவோர்க்குச் சிரவணாதிகள்வேண்டுவதின்றெனவே விளுவல். அதனை யிக்கவியிற் கூறுகின்றார்.]

குரவர் சிகாமணி யேகீர் கேளீர் கூறிய வழியொக் கும், பர முட னிகழு மிகந்தவ ரன்றே பழகுவர் மெய்ஞ்ஞானம், விரவு முயற்சியின் மீண்டவ ரதையினி வேண்டுவ ரோவேண்டார், சிர வண மனன நிதிள்வேண் டாவோ சித்த முறைத்திடவே.

(இ - ள்.) குரவர்சிகாமணியேகீர்கேளீர் கூறியவழியொக்கும், எ-து. எல்லாவுசிறந்தக்குஞ் சிகாமணிபோன்றுவிளங்குபவரே, அடியேனிரந்து

கேட்கும்விண்ணப்பமொன்றுள தகனீர்கேட்டருளும். அதாவது; தேவரீ ரிதுகாறுங்கூறிவந்த மார்க்கமனைத்துமங்ஙிகாரமே: — பரமுடனிகழுமிகந்த வரன்மே பழகுவர்மெய்ஞ்ஞானம், எ-து., பரலோகவிச்சையும், இகலோக விச்சையுங் கடந்தவரன்மே மெய்யுணர்வேயாமெனப்பழகாநிற்பர்:—விரவு முயற்சியின்மீண்டவரதையினி வேண்டுவதோவேண்டார், எ ∴ து. இச்சை யில்மேல்கீழெணமிசிரிம்பித்துநின்றுள்ள முயற்சியினின்றுவெறுத்துத்திரும் பினவர்க ளினியதைதமறந்தும்விரும்பியுழல்வதோவுழலார்:'— சிரவணமன ணதிகள்வேண்டாவோ சித்தமுறைதத்திடவே, எ-து. இங்ஙனமாயினுமிவர் கட்குங்சித்தங் கலங்கா துறுதிபெறநிற்றற்குக் கேட்டல், சிந்தித்தல், தெளி தல்வேண்டுவனவின்மே, எ-று.

பரமுடனெனவுடன் கொடுத்துப்பிரித்தது ; சொற்கம், சத்தியமா தியெனமதத்தர்கூறு மேலிட்டபதவிகளோநோக்கியென்க. ஒன்றினுங்கிலையுறுத முயற்சியாதலின் விரவுமுயற்சியெனவும், ஓர்கால்சித்தங்கலக்கமுறற்பால தின் சித்தமுறைதத்திடவெனவுங்கூறினர். முடிந்தவனுக்குச்சிரவணாதிகள் மீண்டும்வேண்டுவது, மாயாமயமாதலைப்பற்றியென்க. களங்கமற்றகண் ணுடிபலவாடைகளால்மூடப்பட்டிருக்கினும் தூசடையுமாறுபோன்று, தெ ளிவுற்றதேனும் அறிவாகிறகண்ணுடிக் கையற்றிரி பெங்ஙனமேனுஞ் சற்ற டையும்.

(க-து.) மகான்கள்கிருதகிர்த்தியரன்றெனக்குறிப்பிக்கச் சிரவணாதிகள் வேண்டாவோவென்பது. இச்சை - தொக்கது. (உஅ)

உக - கவி. அ - கை.

[அதற்குவிடைகூறுவான்வேண்டிக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல்செய்வா ரின்னின்னதகையினராவதொன விக்கவியிற் கூறுகின்றார்.]

கிள்ர்மக னேகேள் தத்துவ மறியார் கேட்டல் செயக்கடனே
தளர்வறு சிந்தித் தலின்முயல் வார்சிலர் சந்தே கங்களரு ளார்
தெளிந்தலி னிற்பார் விபரீ தப்பேய் தீரா வாதனை யோர்
வெளியுரு வாயறி வாய்நிறை வாயினர் வேண்டுவ தொன்றுண்டோ.

(இ - ள்.) கிளர்மகனேகேள்தத்துவமறியார் கேட்டல்செயக்கடனே, எ - து. சின்மாத்திரமாவிளங்குஞானபுத்திரா யான்கூறுவதைக்கேளுந், மெய்யுணர்வினையதெனக்கேட்டுமறியாதார் சிரவணம்பண்ணிக்கொண்டிரு ப்பர்:—தளர்வறுசிந்தித்தலின்முயல்வார் சிலர்சந்தேகங்களுளர், எ - து. சந்தேகங்களைகலாதசிலர் ஓயாதமனனைவயத்தராய்முயலாநிற்பர்: — தெளி தலினிற்பார்விபரீதப்பேய்தீராவாதனையோர். எ - து, விபரீதமென்னும்பே யினால் தீராதவாதனையுடையோர்கள் சித்தந்தெளிவுபெறு முயற்சியில்லிடா தநிற்பர்: — வெளியுருவாயறிவாய் நிறைவாயினர் வேண்டுவதொன்றுண்

டோ, எ - து. சுத்தமானவெளிமயமாகியும், ஞானப்பிரகாசமாகியும், அகண்டபரிபூரணமாகியும்விளங்கினர்; யாதானுமிம்மூன்றனுள் வேண்டுவதொன்றானதோ இல்லையே, எ-று.

தத்துவம், அறிவு. அது ; கற்பிதம், எதார்த்தமெனவிருபாற்று. கற்பிதம், அனர்த்தம். எதார்த்தம், அர்த்தம். கற்பிதமெனினும், விபரீதமெனினுமொக்கும். விபரீதவுணர்வு, பண்டிதர்பாமரரிடத்தும், எதார்த்தவுணர்வு, தத்தெரிசனமுடையோரிடத்துமெனவுணர்க. உத்தமம், மத்திமம், அதமமெனமூன்றும். தெளிதலினிற்றல், உத்தமம். சிந்தித்தலினிற்றல், மத்திமம். கேட்டலினிற்றல், அதமம். இம்முத்திசையுங்கடந்தவொன்பது தோன்ற, வெளியுருவாயறிவாய்நிறைவாயினொன்றூர்.

(க - து.) இருதகிர்த்தியனெக்குறிப்பிக்க விம்முத்திசையுங்கடந்தவொன்றுஎன்பது. செயக்கடனென்பதைமுதனிலைத்தீபமாக்கி, எனையிரண்டிடத்துமொட்டுக. விபரீதப்பேயெனல், உருவகம். ஒன்றையொன்றுக்கோடல்சர்வமதத்தராதலினிதனையே பேயெனலறிக. அறியார், உளார், வாதனையோர், எழுவாய். வினையாலணையும்பெயராதலினென்க. (உக)

கூ0 - கஅ. அ - னை.

[அஞ்ஞானியர்போலப் பலவேறு விகற்பக்கிர்த்தியம்புரிதருமே, இருதகிர்த்தியநிலைக்கடையாளம். இதனைத்தெரித்தருளுமெனவிறுவியதை யிக்கவியிற்கூறுகின்றூர்.]

ஐயா கேளீர் தத்துவ ஞானியு மஞ்ஞா னிகள்போ லச்
செய்யா னின்றேன் கண்டே னுண்டேன் சென்றே னெனலா மோ
பொய்யாம் விபரீ தங்க ளவர்க்குப் போயின வென்றீ ரோ
மெய்யாம் பிரம விசாரமி தன்றே வெளியா யுனாயீ ரோ.

(இ - ள்.) ஐயாகேளீர்தத்துவஞானியு மஞ்ஞானியர்போலச் செய்யானின்றேன்கண்டேனுண்டேன் சென்றேனெனலாமோ, எ-து. ஐயனேயின்னுமடியேன்கேட்கும்விண்ணப்ப மொன்றுளததனைக்கேட்டருளும். உண்மைஞானியருமஞ்ஞானிகள்போலச் செய்யாநின்றேன், கண்டேன், உண்டேன், சென்றேனெனைச்சொல்லத்தகுமா: — பொய்யாம்விபரீதங்களவர்க்குப்போயினவென்றீரோ, எ - து. பொய்மயமாகியவிபரீதங்களவர்க்குநீங்கிப்போயினவென்றுகூறினீரோ: — மெய்யாம்பிரமவிசாரமிதன்றேவெளியாயுனாயீரோ, எ-து. மெய்ம்மையாகியபிரமவிசாரணையிதல்லவே யிதனைவினாவிதத்தெளிவாயுணர்த்தருளும், எ-று.

செய்யாநின்றேன், உண்டேன், சென்றேனென்பனவை, மித்தையாத்தியாசம். கண்டேனென்பது, இதராத்தியாசம். இங்ஙனமிருக்க, இவைபோயினவெனக்கூறவதெங்ஙனமிணையும். இதுமெய்ம்மையானபிரமவிசா

ரமல்லவே, யிதனைத்தெரித்தருளுமென்பார், மெய்யாம்பிரமவிசாரமிதன் றே வெளியாயுள்ளாயீரோயென்றார்.

(க-து.) கிருதகிர்த்தியனொன்பதற்கிதிதக்கவுத்தரமன்றெனக் குறிப்பித் ததென்பது. (கூ0)

நேக - கவா. அ - லோக.

[இவ்விவகாரம்விதேகமுத்திபரியந்தந் தொடர்ந்தேநிற்கும்.

ணுந்தெளிவினிற்றலி னேனையர்போலன்

ஓய்ந்த கனவிற் கண்ட பழங்கதை யோதுவன் வாதனை யா
லாய்ந்தறி வுற்றவ னப்படி செப்புவ னுபா சனுமா கான்
மாய்ந்த னுடல்வே மளவும் விண்ணவன் மனித னெனப்படு வான்
வீய்ந்தசி தாபா சன்போ மளவும் விவகா ரந்தொட ரும்

(இ - ள்.) ஓய்ந்தகனவிற்கண்டபழங்கதை யோதுவன்வாதனையால், எ-து. கனாக்கண்டவன் ஒய்ந்துபோன தனதுகனவிற்கண்டபழங்கதையினை மறவாதுவாதனையாற்சொல்லுவன்: — ஆய்ந்தறிவுற்றவனப்படி.செப்புவ னு பாசனுமாகான், எ-து. தானினையனெனச்சுருதி, யுத்தி,அனுபவத்தாலெயந்தி பிபறவாராய்ந்து தெளிவுற்றவறிவுடையோனு மவன்கூறுமாறுபோன்று கூறுவன். கூறினும், இவனவன்போலதனைமெய்யெனநம்பிக்கூறுவனல்லன். அதனால், இவனவன்போலாபாசனுமல்லன். ஆவனெனில், தெளிந்தசிந் தையனுதலி னங்ஙனமொருக்காலுமாகான்: — மாய்ந்தனுடல்வேமளவும் விண்ணவன்மனிதனெனப்படுவான், எ-து. முன்னோ பிரக்ஞோதயத்தால் மரித்தனதுகாரணசரீரம் ஞானுக்கினிமேலீட்டால் நீறுமளவும், மனித னுயினும், தேவனே. இவனுக்கிவன்தேவனுயினும், பார்ப்பவர்க்குமனிதனு க்காணப்படலின் பிறரால்மனிதனெனவழங்கப்படுவன்: — வீய்ந்தசிதாபா சன்போமளவும் விவகாரந்தொடரும், எ-து. ஆதலின், அறிவேதானெனக் கண்டவ்வக்கணமே மரித்தசிதாபாசத்துவ மவித்தைபோற்போமளவு மிவ் னுக்குலகவிவகாரந்தொடர்ந்தேநிற்கும். எறு.

அவனுலகைமறந்தது ந்த்திலாவந்துழி.இவன்மறந்தது விசாரத்தெளிவு வந்துழி கனாக்காட்சியவனுக்குச் சொற்பனம், கனாக்காட்சி யிவனுக்குச்சொ ற்பனம். அதுகணசொற்பனம். இதுதீர்க்கசொற்பனம். அவன்விழிப்பு, அஞ் ஞானம். இவன்விழிப்பு, ஞானம். அஃதவன்மறந்துழிநடந்தது. இஃதிவன் மறவாது மறந்துழிநடந்தது. அதனையவனுலகாக விழித்துழிச்சொல்லுமா றுபோன்று, இதனையிவனறிவாக விழித்துழிச்சொல்லுவன், அதனையவன் மூடவிசேடமாகச்சொல்லுமாறுபோன்று, இதனையிவன் ஞானவிசேடமா கச்சொல்லுவன். பண்டிதனதனையாதோவென. வுண்மையாகக்கொள்ளா

வாறுபோன்று, ஞானி யிதனைத் தற்பிரதிபலனமென வுண்மையாகக்கொள் ளான். அவனுக்கது சொல்லுநயமுமாத்திரமாயதுபோல இவனுக்கிது, சொல்லுந்தோற்றமுமாத்திரமாயது. ஆதலினிவ்வுவமை பொருந்தும், பொருந்தாதென்பாரை யவாந்தரவாதிகளெனவுறிக. அவாந்தரவாதம் ; கோழிகோழி; என்னவிலையென்னவிலையென்றுற்போல்வது. ஆய்ந்தறிவுற் றவனுமென்றவும்மைதொக்கது. ஆபாசனுமென்றவும்மையிழிவுசிறப்பு. மா ய்ந்தனவினையெச்சமாக்கினு மொருசாரையினுமையும். இருமுகனோ க்கு முணர்ந்தவனுதலி னாபாசனுமாகானெனக்கொள்க. உலகிருப்புந் தன் னிருப்புமுணராவிடத்ததவன்விவகாரம். உணர்ந்தவிடத்ததிவன்விவகாரம். இங்கேயுடலென்பது, தூலமெனின், அதுமாய்ந்தவிடத்து மதுவெய்தவிடத் துந் தேவனுதலெவருந் தூலதேகத்தராதலின் பொருந்தாதே. இவனுக்கு மாத்திரமெனின், அப்போது தூலதேகமன்று. சூக்குமவுடலெனின், சொப் பனஞ்சுழுத்தியிலும் சர்வசங்காரகாலத்திலு மெவரும்விண்ணவராகவேண் டும். இன்றே. இங்கேவிண்ணவன், ஐக்கியமுத்திக்குரியோன். அன்றெனின், "ஐயத்தினீங்கித்தெளிந்தார்க்கு வையத்தின்வானாணியதுடைத்து." என்னு ங்கவியில் வானம் பதவிமுத்தியோ; பதவிமுத்தியெனின், ஐயந்திரிபறத்தேர் தலும் யாகாதிகிருத்தியமியற்றலுமொன்றே ? ஒன்றெனின், தன்னைத்தா னெய்தில், அயலெனலில்லை. இல்லைபாகவே, சுகமுமயலெனலின்றித்தானே சுகவடிவாகத் தன்னைத்தானனுபவித்தல் கன்மகாண்டத்திலுண்டோ. இத னைப் பாடுதுறையில், ககக - அதிகாரத்திற்காணலாம். இன்றெனின், ஒன் றெனல்கூடாது. இதுகூடாதாகவே, அதுவுங்கூடாதெனமுடியும். ஆதலின், காரணவுடலாகியயவித்தையை யுடலென்றார். வீய்ந்தசிதாபாசன்போமள வும் விவகாரந்தொடருமென்றது;மாய்ந்ததன்னுடல்வேமனவும் விண்ணவன் மனிதனெனப்படுவானென்பதுபற்றி, மாயினுங் காரணவுடனீருமளவு மனி தனெனப்படுவான்போன்று, வீயினுஞ்சிதாபாசன்போமளவும் விவகாரந் தொடரும். உடனீருயின், சிதாபாசன் மாப்பிள்ளைத்தேழன்போற் சொல் லாதலழுவுவன். அது நீருமளவு மனிதனெனலுண்டு. இவன்போமளவும் விவகாரமுண்டு, மனிதனெனப்படினுந்தனக்கில்லை. அதுபோல, விவகாரந் தன்பானிகழினுந் தனக்கில்லை., சிற்பிரகாசநாட்டத்தில் தானெவ்வகைத் தோற்றத்தானு மல்லனுதல்போலத், தற்பிரியமகலாநாட்டத்திற் கிரியை செய்தலுஞ்செய்திலனென்றுரையிற்று. இங்ஙனநின்றூர்க்கே யிதுதெரியுமன்றிச் சொல்லாலும், நினைவாலுமென்னைபயனுளன. இவற்றாலிதனைமறுக்கிற் பய னின்மையின்றள்ளுதலும்.

(க - து.) தகாதகாரத்தில் செய்தலுஞ்செய்திலனென்பது, இச்சை, அநி ச்சை, பூரவிச்சையுளென்றுகாரணமாக வினைநிகழினும், தன்னையகண்ட மாகக்கண்டதின், கிருதகிர்த்தியனெனக்குறிப்பித்தது. இதனைத்தற்சோ தனையிற்காண்க.

கூஉ - கவி. அ - கை.

[நிட்டையகலாவெனினு மதுவுஞ்செயலன்றே ; கிருதகிர்த்தியனென லெங்ஙணங்கூடுமென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

ஆணை யிலயா குருவே காண்ப தசத்தியு மன்றே
காணு விவகா ரந்துய ரலவோ ஞானசு கந்தரு மோ
போணு லன்றே நன்று நிட்டை புரிந்திடல் வேண்டா வோ
தாணு நிட்டை புரிந்தாற் செய்கை தவிர்ந்தவ னெப்படி யோ.

(இ - ன்.) ஆணையிலயாகுருவேகாண்ப தசத்தியமென்றலும் காணுவிவ காரந்துயரலவோ ஞானசுகந்தருமோ, எ-து. ஐயனே, குருநாதனே, மகா னென்போன்கிருதகிர்த்தியனுணல்காணப்படுவனவனைத்துந்திரிசியமன்றே; அதுதிரிசியமாயினுமநித்தமன்றே ; அநித்தமெனினும், அதனைமெய்யெனக் கொள்வதென்னையோ, கொண்டுகாணுவிவகாரம்புரிதலென்னையோ, புரிந்து மதனலெய்தும்பயன்சுகமாயினும், அதுமெய்ப்பொருள்காரணமாக வந்ததன் றுமையின் துயராகமுடியுமன்றே ; அதனலதுதுயரல்லவோ ; அதுமேலிடு மன்றே ; மேலிடுந்தோறும் தனித்துநிற்கைவாய்க்குமோ ; வாய்க்காவிடத்து அது சிதானந்தவாழ்வைத்தருமோ:—போணலன்றேநன்று நிட்டைபுரிந்தி டல்வேண்டாவோ, எ - து. இவ்விவகாரமொருங்கேநீங்கினலன்றே. தனித் திருக்கைக்குநன்கு. இந்நன்குநிலைத்தல் நிட்டைபுரியாதுழிவாய்க்குமோ ; வாய்க்காவிடத்து நிட்டைபுரிந்திடல்வேண்டாவோ:—தாணுநிட்டைபுரிந்தாற் செய்கை தவிர்ந்தவனெப்படியோ, எ - து. வேண்டுமெனின், தானேதாணு தற்கியைந்த விந்த நிட்டைபுரிதலுஞ் செய்கையன்றே, எந்தச்செய்கையுமக ன்றவனுயினும், இந்தச்செய்கையகலாததலின், கிருதகிர்த்தியனென்பதிவ னுக் கெங்ஙனமியையுமோ வறிகிலன், எ - று.

(க - து.) கிருதகிர்த்தியனெனல் சொல்லாலன்றி யர்த்தங்கண்டலனெ ன்பது. இதனுன்கோகாரமுமெதிர்மறைப்பொருள். வீடாவழக்கென விங் ஙனமாயதெனவுணர்க. அசத்துகாரணமாகவரும் விவகாரமாதலின், துயர லவோவெனப்பட்டது. அறிகிலனிதையெச்சம். (கூஉ)

கூங - கவி. அ - கை.

[இக்கிரியையுகளகத்திலன்றிப் புறத்தினிகழின், கிருதகிர்த்திய னெனக் கோடற்கவென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

தொரிதரு மகனே யாரம் பத்தொடு தீரும் விவகார
மூரிய சமாதியும் விவகா ரங்களு முள்ளத் தொழிலன் றே
தூரிய பரம்பொரு ளானவர் வேறொரு தொழில்செய் வதுமுண்டோ
வரிய சமாதிகள் பழகுவ னேலவ ளரு டனுமுன்றே.

(இ - ள்.) தெரிதருமகனேயாரம்பத்தொடுதிரும்விவகாரம், எ-து. சகலவர்த்தங்களையு மெளிதில்தெரிந்துகொள்ளத்தக்க ஞானபுத்திரா ; ஆரம்பத்தில்சிரவணமன்னனதிகள் செய்யும்போதே சகலவிவகாரங்களும்:—உரியசமாதியும்விவகாரங்களு மூள்ளத்தொழிலன்றே, வ-து. தன்னைவிளக்கற்குரியநிட்டையும், சகட்டவாறுநிந்தித்துத் தெளிதலாகியசகலவிவகாரங்களு மூள்ளத்தின்கணிகழுந்தொழில்களன்றே:—துரியபரம்பொருளானவர் வேறொரு தொழில்செய்வதுமுண்டோ, எ - து. துரியமாகவினங்கும் பிரமசொரூபமானவர்கள் பிறிதோர்தொழில்செய்வதுமுளதோ :—அரியசமாதிகள் பழகுவனேலவ ளூருடனுமன்றே, எ-து. செய்தற்காரியசமாதிகள் கைகூடும்பழ்பழகுவனுயி னவளூருடனுமல்லனே. எ - று.

சகலவிவகாரங்களோடு சிரவணாதிகள் செய்யின்பயன்படா. படுமெனின், பெருமைபற்றியெனவேண்டும். அதுபற்றியெனின். துக்கநிவர்த்திக்கென்செய்தும். இன்றுதலின், சிரவணாதிகள்செய்யுமாரம்பத்தில்தானே சகலவிவகாரங்களுநீங்கியேயவிடும். (எங்ஙனமெனின்,) சிரவணமாறுவகைப்படும். அவை; உபக்கிரமோபசங்காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், உற்பத்தி, அர்த்தவாதமென்பன. உபக்கிரமமாமது ; சிருட்டிக்குமுன் சகத்துசத்தெனல், உபசங்காரம் ; அந்தச்சத்து, சுசாதிக விசாதிக சுகதபேதமிறந்ததெனல். இதனை யொன்றுக்கி உபக்கிரமோபசங்காரமென்பர். இந்தவொன்றைவிசாரித்துத்தெளிதற்கே விவகாரசிந்தைசற்றுமிலதாகவேண்டும். ஆதலின், ஆரம்பத்தொடுதிரும்விவகாரமெனவும், சவ்விகற்பசமாதி, நிர்விகற்பசமாதியைச்சமாதியெனவும், இவற்றிற்குரியவறியவுழைப்புகள்பலவாதலின் விவகாரங்களெனவும், இவையனைத்துமகத்திலாதலின், உள்ளத்தொழிலெனவும், துரியமேபரமாதலின், துரியபரம்பொருளெனவுங்கூறினர். ஆருடனுயின்சமாதிபழகுவனு ; பழகுவனேலாருடனுமன்றென்பதிலும்மை இழிவுசிறப்பு. ஆருடனுமன்றெனவே, அப்பியாசியென்றுயிற்று.

(க - து.) சமாதிகூடப்பழகின், சிருதகிர்த்தியனன்றென்பது. ஏழாம் வேற்றுமை மூன்றும்வேற்றுமையாயதிருபுமயக்கம். (கக)

நடை - கவி, அ - கை.

[ஆருடர்களிற்சிலர் .தியானதிகள்செய்வதற்கிற்கென விளுவிய தற்குவிடையிக்கவியிற்கூறுகின்றார்.]

உத்தம குருவே யாரு டருமா யோருதொழி லற்றவ ருள்
சித்த மடங்கு தியான திகள்சிலர் செய்குவ தென்னென் ரு
லித்தல மருவும் பிராரத் வப்பிறி வெப்படி யப்படி யே
மூத்தரும் வெகுவித மாகுவ ரென்பது முன்னே சொன்னே னே.

(இ-ள்.) உத்தமகுருவேயாருடருமா யொருதொழிலற்றவருள் சித்தமடங்குதியானதிகள்சிலர் செய்குவதென்னென்றால், எ-து. உத்தமமானகுருவா

தனே, விவகாரங்களுளோர்தொழிலுமின்றி யெத்தொழிலுமிறந்து நிர்பவர் களுக்குன் சிலராளுடராயிருந்துஞ்சித்தமொருப்படற்கியைந்ததியாளுதிகளைச் செய்வதியாதிற்கெனக்கேட்டையாயின்:—இத்தலமருவும் பிராரத்வப்பிறிவெப்படியப்படியே, எ-து. பிறவிகாரணமாகவிப்பூமியினேரிடும்பிராரத்வபேதங் களெங்ஙனமெங்ஙனமோ வங்ஙனமங்ஙனமே:—முத்தரும் வெகுவிதமாகுவ தென்பது முன்னேசொன்னேனே, எ-து. சீவன்முத்தரு மனேகவிதமாவா தென்பதைப்பற்றி முன்னமேசொல்லியிருக்கின்றேனே யடிக்கடிகேட்பதெ ன்னை, எ - று.

(க - து.) ஆளுடராயிருந்துஞ் சிலர்கிருதகிர்த்தியராகில்லாது தியாளு திகள்செய்வதென்னையென்ற வினவிற்குத்தரம் பிராரத்வகன்மபேதத்தாலெ னவறிகவென்பது. ஆளுடருமாயென்பதிலுமம்மை, இழிவுசிறப்பு. பிராரத் வகன்மபேதச்சேட்டைகளை யவர்மேலேற்றிக்காணி னைப்பியாசியனெவும், அவரதுதீர்ந்தநிலையினை யவர்மேலேற்றிக்காணி ளுளுடனெவுந்தோன்றுவர். (பிழை) காண்பார்மிசைத்தாதலி னவராளுடரேயெனவறிகவென்பார், பிரா ரத்வப்பிறிவெப்படியப்படியே முத்தரும்வெகுவிதமாகுவதென்பது முன்னே சொன்னேனேயென்றூர். சித்தமடங்குதியாளுதிகள்செய்தல், அப்பியாசம். இத்தலமருவும்பிராரத்வப்பிறிவு, அவரவர்வினைக்களவாக விம்மையிலவரவர் பாலெய்தும் பிராரத்வபேதங்கள். இது பசுக்குழாத்துளதனதன்கன்று தே டித்தாயைமருவுமாறுபோல்வது. என்னை, "தாந்தாமுன்செய்தவினைதாமேய ளுபவிப்பர்" என்றுளெளவையார். திரிசியாகட்டத்தில் வினைய்யுண்டெனவும், திருக்குராட்டத்தில் வினையின்றெனவுங்காளும். அதோமுகமாதலி ளுன் மாபலவாகவும், ஊர்த்தமுகமாதலிளுன்மாவொன்றுகவுங்காண்டலினதுபொ ருந்தும். இருவகைமுகமும், இருவகைகாட்டமுமின்றேல், ஆன்மாபலவெ னலும், ஒன்றெனலும், வினையுண்டெனலும், இன்றெனலுமெங்கே? இவ் வுளவறியாதா ரொத்தனேபல்லூழிகாலம் வாதிக்கினுமென்பயன்? உடலுஞ்சே ட்டையுங்காரணமாக மாணுக்கன்கேட்டலின் விடையுந்தக்கது. (கூசு)

நற்று - கவி. அ - கை-

[ஞானிகள்விவகார மூலகோபகூரமாதவன்றித் தமக்கன்றென வுபமானபூர்வமாகவிக்கவியிற்கூறுகின்றூர்.]

நல்லவ னேகே ளுலகுப காரஞானிகள் விவகார
மல்லது வேறொரு பெறுபே.றும்மிலை யதனுற் பிணியுமிலை
வல்ல சிருட்டி முதற்பல தொழிலால் வருபுண் ணியபா வ
மெல்லவ ருக்கு மனுக்கிர கஞ்செயு மீசனடைந்தில னே.

(இ-ள்.) நல்லவனே கேளுலகுபகார ஞானிகள்விவகாரம் அல்லாதுவே றொருபெறுபேறும்மிலை யதனுற்பிணியுமிலை, எ-து. சற்புத்திராதீக்ஷாசங்கி

யாது யான்கூறுவலதக்கேளுநி. ஞானிகள்செய்யுவிவகாரங்களனைத்து முல கோபகாரமாகவன்றித்தமக்கன்று. அதனல்தாமடையும்வெகுர்சுகப்பேறு மசுகப்பேறுமுளவோ யாங்கண்டிலம். இதுயாதுபோல்வதெனின்:—வல்ல சிருட்டிமுதற் பலதொழிலால்வரு புண்ணியபாவும், எ-து. செய்தற்கு வலி யுள்ள சிருட்டியாதி பலதொழிலியற்றுவதால் வரக்கிடந்த புண்ணியபாவங்க ளை:—எல்லவருக்குமனுக்கிரகஞ்செயு மீசனடைந்திலனே, எ-து. ஏற்றற்பால வெவரோவவரவர்களுக்கெல்லாந் தரமறிந்துகொடுத்தருளுவனன்றி யீசன்தா னடைந்தனனே, இலனே, இதுபோல்வதென்றறிதி, எ - று.

அவரவர்சன்மார்க்கத்தாலுய்யுபொருட் டவரவர்கருத்தின்வண்ணஞ் சிரு ட்டியாதியீசன்செய்வனன்றிக்கெடுக்கற்கன்று. அதுபோல, ஞானவான்களு முயிர்களுய்யும்பொருட் டவரவர்க்கியையவதும் கடிவதுமன்றித் தம்பயனுக் காகவன்று. இவர்சிவகாருண்ணியரன்றே லிவையெற்றிற்கு. ஈசன்முத்தியிலு யிர்களைக்கூட்டுவான்வேண்டித் தனுகரணாதிகளைக்கொடுப்பித்துப் புசிப்பித்து த்தொலைப்பிப்பானென்பது பொய்யோ, மெய்யோ? பொய்யெனின், புடை பெயர்ச்சியில்லாதிருக்கவேண்டும். இருத்தலின், காணப்படானெனும் வினை முதலிருக்கவேண்டும். இல்லாதுயாதும்நிகழாது. ஆதலின், அவனன்றியோ ரணுவு மசையாதென்றனர்சான்றோர்பலரும், இதனை மறுப்பார் தாம்யா தால்மூன்றவத்தையினுமாறுதலைசக்கப்படுவதுமெனக்கிஞ்சித்துமறியாதார், பி றர்கூறினுங்காதுகொடார். இவனாவிவேகியென்பாரிவர்போல்பவர். இத்தத் தனுகரணபுவனபோகம்வாய்த்தது, அவரவர்வினையாலன்றியவனலன்று. அவ னலெனின், விதிவிலக்கெறற்கு. எதுகாறுமெனின், அயலத்தானென தென்னுதனவும். அப்பாலோவெனின், தானே தானுகில் விதிமதியெழற்கிட மின்றே; இன்றுகவே, அனைத்துஞ் சின்மாத்திரமாவிளங்கும். விளங்கவே, மேல்கீழொப்பின்றியும் சுசாதியாதிமூன்றுமின்றியும் தான்மாத்திரமாகமிஞ் சிநிற்குதும். அப்பாலோர்செயலுமில்லை. இதுதனதுசுயகவ்டத்தாலுணர்வ தன்றிப் பேச்சாற்பயனின்றியமையும்.

(க-து.) ஈசனைப்போல ஞானிகள்விவகாரமும், அதன்பயனுமுலகோ பகாரமாகமுடிவதன்றித் தமக்கன்றென்பது. இதனலிவர்கிருதகிர்த்தியொன் றுயிற்று. (கூடு)

நூசு - கவி. அ - கை.

[அனந்தவேதுக்களிலெந்தவேதுவிலுல் ஞானியீசனுக்கொப்பாவ னேவென்ற விலுவிற்குத்தாமிக்கவியிற்கூறுகின்றார்.]

ஈசனு மாயரு வாயுரு வாகி யெழுந்தரு ளுங்குரு வே
யீசனு ஞானியு மொப்பென் றீரே யெப்படி யொப்பென் று
ஈசனு ஞானியு மமதை யகந்தை யிகந்தன னுலொப் பா
ரீசன்று மம்பல சிவரு டாமுல் கெல்லா மிவனு மே.

(இ - ள்.) ஈசனுமாயருவாயுருவாகி யெழுந்தருளுங்குருவே, எ - து. ஈசனெனியும், அருவமாகியும், உருவமாகியு மெனிதிலெம்பா லெழுந்தருளுங் குருமூர்த்தமே:— ஈசனுஞானியுமொப்பென்றீரோ யெப்படியொப்பென் றால், எ-து. ஈசனும்ஞானியுஞ்சமானமாவதொன்று முண்ணர்கூறினீரோ யெங் ஙனமொப்பாவதொனக்கேட்டையாயின்:— ஈசனுஞானியுமமதையகன்றையிற் தந்திலெனலொப்பார், எ-து. ஈசனும்ஞானியு மகமமதையற்றிருப்பதாலொப்பா வர். (இஃதன்றியும்):—ஈசனுமாம்பலசீவருமாமுலகெல்லாமிவனுமே, எ-து. இத்தஞானி ஈசனெனியும், சமஸ்தசீவர்களாகியும், சகலலோகங்களாகியுமிருப் பின், எ-று.

சலட்சணவிலட்சணமாயும், நிட்களமாயும், சகளமாயுங் குருவிருத்த வின், ஈசனுமாயருவாயுருவாகி யெழுந்தருளுங்குருவே. எ - ம், தன்னையு ன்றிச்சகசீவபரமின்றுதலின் ஈசனுமாம்பலசீவருமா முலகெல்லாமிவனு மேயெனவுங்கூறினர். சீவன்முத்தர்பிரக்ஞாசொரூபமாகவினங்கலி னிலையு யெல்லாம்பொருந்தும். எங்ஙனமெனில், பிரக்ஞைஞ்ஞையன்றியிவைமூன்று முளவோ, இலவோ? உளவெனில், சோதனை ஞாயங்களாற்காட்டலாம். கூடாதெனில், இலையென்பமே. தோற்றுமாவெனின், ஓரணுவேனுஞ்சுயம் பாச்சோதனையிற்காட்டலாமே.கூடாதெனின்,இல்லையென்றுத்துக்கொள் ளலாமே, இதன்றியும், அறிவுதன்னையறிந்திச்சாஞானக்கிரியைபுரியுமாவெ னின், புரியும். எங்ஙனம். பொருளல்லவற்றைப்பொருளென்றுணர்தல், மருளோ, தெருளோ? தெருளெனின், அறிவுசலனமுறுமா? சுபாவமெ னின், சுபாவத்துக்குவிதிவிலக்கெற்றிற்கு. மருளெனின், பொருளல்லவற் றைப்பொருளென்றுணர்வதிலையென்றே அறிவுமருளென்றுயிற்று.ஆகலாமா, ஆகக்கூடாதே அதனையுன்னுதலென்னை. தோற்றத்தைதமெய்யென்பதூஉம், அறியாமையையறிவென்பதூஉம் நமதுபிழை. அதனைமறக்குதும். தோற்ற மாயின்றதும் மருளாயின்றதும் ஒருப்படியே வேறன்றெனவுணர்க. மருளில் பலவிவகாரமியையும்போது தெருளிலியையாதோ? கூறவேண்டுமோ.

(க - து.) இவன்ஒருப்திமாத்திரமாவிளங்கலி னிவனுக்கீசனையுவமித் தனி லென்னிழிவெனக்குறிப்பித்தாரென்பது. தன்னை மறந்தியற்றுவதிலு மறவாதியற்றல், மிகச்சிரேட்டமாதலி னீசனுக்குவமிக்கப்பட்டதென்க. ()

கூள - கவி. அ - கை.

[எல்லாச்சீவருமிவனுமெனவே, யதுகாரணமா விறுதலி யிக்கவியிற் கூறுகின்றார்.]

எல்லாச் சீவரு மிவனு மென்றீ ரிவன்றான் முத்திய டைந்
தெல்லாச் சீவரு முத்தி பெறுமெ விருப்பா னேனை யா
வெல்லாச் சீவரும் வெவ்வே றனு வினனெல் லாமல னே
யெல்லாப் பொருளு மூனைத்தருள் குருவே யிதைதீர் மொழியீரோ.

(இ - ள்) எல்லாச்சீவருமிவணமென்றீ ரிவன்முன்முத்தியடைந்தெல் லாச்சீவருமுத்திபெறுமவிருப்பானேனையா, எ-து. ஐயனே சமஸ்தசீவர்க ளுமிவனேயென்றுணாத்தீர், இவன்முத்தியடைந்ததுபோலெல்லாச்சீவரு முத்தியடையவேண்டுமே, அடையாததற்கேதென்னைகொலோ:—எல்லாச்சீவ ரும்வெவ்வேறுணர்வினல்லாமலனே, எ-து. முத்தியடையாததால் எல் லாச்சீவரும்வெவ்வேறுமன்றே. வெவ்வேறுகுமாலெல், இவனெல்லாச்சீவ ருமல்லனுமே:—எல்லாப்பொருளு முணர்த்தருள்குருவே யிதைதீர்மொழியீ ரோ, எ-து. அரியபொருளனைத்தையுமுணர்த்தருளியகுருநாதனே யிதையும் நீர்விளக்கியருளும், எ—று.

இவனேயெல்லாச்சீவருமெனின், இவன்போலனவை முத்தியடையாத தென்னை. அடையாததா லுயிர்வெவ்வேறுகவேண்டும். வெவ்வேறுகுமெ னின், இவனெல்லாச்சீவருமெனல்பொருந்தாதென்க. முத்தியடையவெ னற்பாலது, முத்தியடைந்தென்றுயது ; "சொற்றிரியினும்பொருடிரியாவி னைக்குறை" யென்பதனுற்காண்க. எல்லாச்சீவருமுத்திபெறுமவிருப்பானே னென்றவிடத்து ஞானிமுத்திபெற்றவனெனைக் குறிப்பாற்கொள்ளவொட் டாது இவன்முன்முத்தியடைந்தென வெள்ளிடையாகக்கூறினர். இனிமுத் தியடைவானையடைந்தவனென்றதுதுணிவுபற்றி. இமையளவிற்பூர்வவாச னையாலெனு மாடியிற் பிரதிபிம்பம்போல வறிவிற்சடதியிலெழுந்தடங்குந் தேகாதிபிரபஞ்சப்பாவனைகளளவின்றே யெங்ஙனந்துணிவுபெறலாம். "கள ங்கமற்றகண்ணுடி தன்முன் வேரூர்களங்கமற்றகண்ணுடி காட்டும்போ தென்ற" கவியிற்கூறியவாறிருப்பராதலி னங்ஙனங்கூறவேண்டுவதாயிற்று. ஆதலிற்பழுதின்றெனின், அங்ஙனமிருப்பினுமிப்போதே முத்தியென்னலா மா, இனியெய்தற்பாலதாகியநிரதிசயானந்தவாழ் விங்ஙனேயெய்தியதாலே ய்மென்னையெனின், இங்ஙனமேற்கோளுளவோ ? "எட்டிலறிவின்றியிறை தன்னிலறிவின்றியிவ்வுடம்பினுடனே வீட்டிலுலறவானையினிவீடுபெறுமெ ன்பதுவிளம்புகிலமே" என்றூர்த்தத்துவராயர். "ஐயத்தினீங்கித்தெளிந்தார் க்கு வையத்தின்வானாணியதுடைத்து" என்றூர்திருவள்ளுவர். இதுநிற்க.

(க - து.) இவன்போலெவ்வுயிரு முத்தியடையாததற்கேதென்னை யென்பது. (கூஎ)

கூ அ - கவி. அ - கை.

[பொதுப்படச்சீவனெனினு மதுமலரகிதத்தாலான்மாவெனவும், சகிதத்தாற்சீவனெனவுங்கொளக்கிடத்தலின், ஆன்மா, ஏக மெனவும், சீவன்பலவெனவுமிக்கவியிற் கூறுகின்றூர்.]

அகமெனு மான்மா பூரண மேக மநேக விதஞ்சீ வு
ணகமெனு மந்தக் காண வுபாதிக ளளவிலி யாதலினுற்
சகமுழுதுங்குனிர் சந்திர னேகஞ் சலசந் திரார்பல வாஞ்
சகமதி லீனி குளஞ்சிறு குழிசால் சட்டி குடம்பல வால்.

(இ - ள்.) அகமெனுமான்மாபூரணமேகம், எ-து. நானென்னுமான்மாவானது பரிபூரணமாகவிளங்கலின், ஏகமெனவும்:—அனேகவிதஞ்சீவன்அகமெனுமந்தக்கரணவுபாதிக ளளவிலியாதலினால், எ-து. நானென்னுமந்தக்கரணவுபாதிக ளளவின்முதலின் சீவன்பலவித மெனவுமாம்:—சகமுழுதுங் குளிர்சந்திரனேகஞ் சலசந்திரர்பலவாம், எ-து. உலகமுழுதுங் குளிர்ச்சி செய்கின்ற வானசந்திரனேகமும், சலப்பிரதிபிம்பசந்திரர்கள் பலவுமாம்:—சகமிதிலேரிகுளஞ்சிறுகுழிசால்சட்டிகுடம்பலவால், எ-து. இவ்வுலகத்தின்கண் ஏரியும், குளமும், சிறுகுழிகளும், சாலும், சட்டியும், குடமும், இவைமுல்வனபிறவும் பலவாயிருத்தலால், எ-று.

அகமென்பது, நான். தேகோகமுதல்சிவோகமீறுவுள்ள வகமென்னும் பேதங்களளவிற்புகாதன. இதிலந்தக்கரணவுபாதிகளுமடங்கின. அந்தக்கரணபிரதிபலனன் சிதாபாசனென்றிருத்தலானும், இவ்வந்தக்கரணமேவுபாதியாநிற்றலானும், இவ்வுபாதிபேதங்க ளளவைகடந்தனவாதலானும், இங்ஙன மளவுகடந்ததுபற்றி யனேகவிதஞ்சீவனெனப்பட்டது. அறிவு, உபாதியென விரண்டாம். மெய்யறிவுநானுகவிளங்கல், ஆன்மா. யாதானுமோருபாதியை யானெனவழங்கல், சீவன். இதுவுமறிவேனுங் கற்பிதத்தையானெனலால், அறியாமையே. ஆதலினிதனைச்சிதாபாசனென்பர். அகமெனுமான்மாவென்றுற்போல, அகமெனுமுபாதியெனக் கூட்டிப்பொருள் கொள்க.அகமெனுமான்மாவென்றுற்போல, அகமெனுஞ்சீவனென்றுனையாதது, ஆன்மாபொருண்மாத்திரமாயும்; சீவன் சொன்மாத்திரமாயுமிருத்தல் பற்றியென்க. என்னை, "சீவனென்கின்றசொல்லும் பொருளுமாச்சென்றிந்தவான்மா." என்றுர்வசிட்டபகவான். அறிவையன்றி யானெனற்குப் பொருளின்மையின், ஆன்மாவெனப்பட்டது. மூன்றவஸ்தாவயமாகாதவற்றைச் சாட்சியாநின்றுணர்வதெவ்வறிவோ, அஃதான்மாவெனவும், அவஸ்தைதோறு மவ்வவ்வுபாதிவயத்தாநின்றுணர்வதெவ்வறிவோ, அதுசீவனெனவுங்கொள்க. தன்னைச்சொப்பிரகாசமாக்காண்டல், ஆன்மா. தன்னையுபாதியாக்காண்டல், சீவன். எனவே, சொன்மாத்திரமாயும பொருண்மாத்திரமாய்மெனக் கூறியதிலையமென்னை. வானசந்திரன்போல்வதான்மா. சலசந்திரன்போல்வதுசீவன். வானசந்திரன்; எதார்த்தமாயும், ஏகமாயும், பிம்பமாயும்நிற்கும். சலசந்திரன்; கற்பிதமாயும், பலவாயும், பிரதிபிம்பமாயும்நிற்கும். அதுபோல, ஆன்மா; எதார்த்தமாயும், ஏகமாயும், பிம்பமாயும்நிற்கும். சீவன்; கற்பிதமாகவும், பலவாகவும், பிரதிபிம்பமாகவுநிற்கும். ஆதலினுவமைபொருந்தும். எழுவகைத்தோற்றமாகின் றுயிரொனப்பெயர்கொண்டு சுகத்தைதநுகர்வதுடலோ, உணர்வோ? உடலெனின், தன்னைத்தானுணரவேண்டும். உணராதெனின், உடலன்று. உணர்வுனின், கன்மேந்திரியம், ஞானேந்திரியம், மனாதியந்தக்கரணங்கள், உயிர் இவை தன்னைத்தானறியாததா லிவையனைத்துமுணர்வன்று. தன்னைத்தானுணர்ற்

பாலதத்துவோ வதுமெய்யுணர்வென்னப்படும். இத்தமெய்யுணர்வையான் மாவெனவும், அவையினைத்துங்கற்பித வுணர்வாதலின், சிவனெனவுங்கொ ள்க. தாஞ்சிறவுணர்வையெட்டதுறியார் கற்பிதவுணர்வைச்சிவனெனவும், ஆன்மாவெனவும் பாகுபாடு சற்றுமுணராது மிகிழ்பித்துக்கூறுவர். இவர் மொழி வாய்மையன்று. எத்தவுயிரைச் சோதிக்கினும், அறிவாகவேமுடியு மாதலாலது தினைபாலிடங்கழன்றது, அதனை யான்மாவென்பதற்கையு மெய்தினை. அவ்வறிவையுபாதியுளொன்றுமுடிக்கி னதனைச்சிவனென்பதற் கையமென்னை. அறிவொன்றேபல்லுயிராக்காண்டலி னிவ்வுவமைதவ்வன்ற பாற்றன்று. இதனைமறுப்பார், தன்னைவிட்டுச்சோதிப்போர்.

(க - து.) இவன்போலவெவருமுத்தியெய்தாதென்னையென்ற விரு விற்குத்தாங்கூறுவான்வேண்டி யிக்கவியிலுவமைகாரணமாக வுயிரொன் றெனற்கும் பலவெனற்குமிலக்கணங்கூறியதென்பது. (கஎ)

கூகூ - கவி. அ - கை.

[ஞானியேபலசீவனொனற்கும் இவன்போலவர்கள்முத்தி
யடையாததற்குமுதாரணமுகத்தாலிக்கவியி
லுத்தரங்கூறுகின்றார்.]

சடடி குடங்களி னென்று நசித்திட வதனுட் சலசந் த்ர
னெட்டு முதற்சந் திரனெடு கூடு மொழிந்தவை கூடா வே
கட்டு முபாதி நசித்திடு சீவன் காரண வான்மா விற்
கிட்டு மயிக்கிய முபாதி கெடாதவர் கேவல மாகா தே.

(இ-ள்.) சட்டிகுடங்களி லொன்றுநசித்திட வதனுட்சலசந்தீரன்ஒட்டு முதற்சந்திரனெடுகூடு மொழிந்தவைகூடாவே, எ - து. முன்னர்சட்டிகுட முதலாகக்கூறிய வுபாதிகளுளோருபாதிநசிக்க வக்கணமே யதனுட்காணப் பட்டின்றசலசந்திரன் தனக்குமுதலாகவானத்தினின்றுள்ள பிம்பசந்திர னெடொட்டியேகமாகும். வேறையபிரதிபிம்பசந்திரர்க ளங்ஙனமேகமாகக் கூடுமாகூடாவே. (அதுபோல): — கட்டுமுபாதிநசித்திடுசீவன் காரணவா ன்மாவிற்கிட்டுமயிக்கியம், எ-து. பந்தித்திருக்குங்காரணோபாதியை நசிக்கச் செய்தசீவன் எல்லாவுயிர்க்குமுதற்காரணமாகின்றுள்ள வதிஷ்டானவான் மாவிற்கலக்தேதகமாவன்:—உபாதிகெடாதவர்கேவலமாகாரோ, எ-து. கார ணோபாதியைநசிக்கச்செய்யாத வேனையசீவன்களயிக்கியமாகார், எ-று.

உபாதிநசித்திடுசீவன், உபாதிகெடாதவொன்றுமிடத்து நிவ்விருவுபாதிக ளுந் தூலதேகமென்றருத்தங்கோடற்கன்றே; சட்டிகுடங்களி லொன்று நசித்திடவென்றுவமானித்தார். இங்ஙனமிருக்க. அவித்தையாதியகாரண வுபாதியென்றருத்தங்கொண்டதெற்றிற்கோ, சட்டிகுடசந்திரனென்றது சலசந்திரனென்றமையாலும், சலாதாரத்துக்காகவன்றிச் சட்டிகுடங்களா திகடற்கவரிமின்றுதலாலும், பிரதிபிம்பித்தற்காய தர்மஞ் சலத்திலிருப்ப தாலும், அந்தத்தர்மஞ்சலமுமன்று சலத்தையன்றிவேறுமன்று: சலமெனி

ன், சலம்பிரதிபிம்பமாகுமா; வேறெனின், சலத்தையன்றிவேறாகுமா; இங்ஙன மூரணுமாதலானும், அத்தத்தர்மம்பேதாபேதமாகிற்குமாறுபோன்று, தூலான்மாவென்ன தந்தக்கரணபிரதிபலன வான்மாவென்றமையானும், கரணதாரத்துக்கன்றி யெவ்வகைதூலமுங்கூறற்கவசரமின்றுதலானும், பிரதிபிம்பத்திற்காயதர்மங்கரணத்திருப்பதானும், அந்தத்தர்மங்கரணமெனின், கரணம்பிரதிபிம்பமாகுமா? கரணத்தையன்றிவேறாகுமா ; இங்ஙனமூரணுமாதலானும், அத்தத்தர்மம்பேதாபேதமாகிற்குமாதலானும், இதனையேயவித்தையெனக்கொண்டுவமானித்ததென்க. மகாளிடத்துமேனையோரிடத்தும் கரணமிருந்தமையன்றிபுறத்தற்கும் அகறற்குமிடமின்மையின் நசித்திடவென்றதவித்தாவுபாதிக்கே தகுமெனவறிக, இதுநிற்க. தூலநாசம்மூத்தியெனின், பிரளயமூத்தியாகக்கண்டிலமே. சூக்குமநாசம்மூத்தியெனின், சர்வசங்காரம்மூத்தியாகக்கண்டிலமே. ஆதலினுபாதியைக் காரணவுடலென்றனமெனதாசிரியர். காரணவுடல், அறியாமை. அதுவுமது; சகசீவபரஞ்சுயம்பன்றியிருக்க விவற்றைச்சுயம்பென்றும், அநாதிநித்தியத்துவமென்றுமுணர்தல். எனவே, அறியாமையெனலெங்கெங்குளதோ, அங்கங்குளதுசீவன். இலதேலிலதென்றுயிற்று. ஆகவே, சீவன், அறியாமைவடிவனெனப்பெற்றும். பாலையன்றித்தயிரோர்முதலன்றுமைபோல, அறிவையன்றி யறியாமையோர்முதலன்று. அறியாமைநசித்தவிடத்தஃதெங்ஙனமாம், தனதுமுதலாம். நசியாவறியாமை தனதுமுதலாகாது. ஓர்சந்திரனேபலசந்திரனுகக்காண்டல்போல, ஓரறிவேபலவறிவாகக்காண்கின்றது. அவைபலவுஞ்சந்திரர்களாயின், இவைபலவுமறிவுகளாகலாம். ஆகாவேலாகாவென்க. அவற்றுளோர்சந்திரனசிக்கில் முதல்சந்திரனேடொட்டும். அதுபோல, அவற்றுளோரறியாமைநசிக்கின் முதலறிவேடொட்டும். ஏனையவையங்கேயொட்டாவாறுபோன்று, இங்குமொட்டாவாம், ஆதலினிவ்வுவமைபொருந்தும்.

(க-து.) சிவன்முத்தனேபலசீவனெனலும், பலசீவருமுத்தியெய்தாவெனலு மேற்கவணமைந்ததென்பது. (கூக)

சை - கவி. அ - கை.

[முன்னர் ஞானியீசனுமாமென்றதற் கொருவாற்றலுத்தரங்கூறினீ,
ரதனைப்பூரணமாகவேற்றற்குத்தடைகளுள, அவற்றிற்குவிடை
தரவேண்டுமெனல யிக்கவியிற்கூறுகின்றார்.]

இவனயன் மால்சிவ னுகிய வீசரோ டெப்படி யொப்பா வன்
சிவன்முதன் மூவரு மகில சிருட்டித் திதிரா சங்கள்செய் வா
ரவர்பிறர் மதிகளு மூக்கா லங்களு மறிவார் விபுவா வார்
தவமிகு குருவே யிவனுக் கனைபோற் சற்றுங் காணே னே.

(இ-ள்,) இவனயன்மால்சிவனுகிய வீசரோடெப்படியொப்பன்,
எ-து, இந்தனானவான், பிரமா, விட்டுணு, ருத்திரன், என்றீஸ்வரத்து

வம் வாய்த்தவரோ டெப்படியொப்பாவன்:(—எனெனில்) சிவன்முதன்மூ வருமகிலசிருட்டி திதிசாசங்கள்செய்வார், எ-து. உருத்திரன்முதலியமூவரு ஞ் சமஸ்தத்தையுஞ் சிருட்டி, திதி, சங்காரங்கள்செய்யாநிற்பர்:—அவர்பிறர் மதிகளு முக்காலங்களுமறிவார்விபுவாவார், எ-து. இன்னுமவர்கள் பிறர் நினைப்பனைகளையுந்திரிகாலங்களையுமறிவார்கள், அறிவதுமன்றி,விபுவுக்கெல் லாம்விபுவாவார்கள்: — தவமிகுகுருவேயிவனுக் கமைவபோற்சற்றுங்காணே னே, எ-து. தவத்தில்மிகுந்தகுருநாதனே இந்தஞானவானுக்கந்தச் சாமர் த்தியங்களிலொன்று மிருக்கக்கண்டிலனே யிதென்னசிறுமை, எ-று,

மூவருக்குமீசத்துவஞ் சிருட்டியாதிதொழில்களால்வாய்த்தலி னீச்சொ னவும், குரு எல்லாத்தவங்களிலுமிக்கவராதலின் தவமிகுகுருவேயெனவுங் கூறினர்.

(க-து,) மும்மூர்த்திகோலமீசனுதலி னிவனுக்குஞானியொப்பாவனெ னில், 'சிருட்டியாதிதொழில்களும், சர்வஜ்ஞத்துவமும், திரிகாலஞான மும், விபுத்துவமுமெங்கே, இல்லையேயென்பது. ஞானமானுலிங்கான்கு மிருக்கவேண்டும். இன்றேல், ஞானமல்லவென்பார்பலரும்; இவ்வேதுகொ ண்டுகேட்டனனென்க. இந்நான்கும், ஞானத்தினதுசேட்டைகள் இது, புரி வானதுசேட்டைகளைப் புரிவானென்பதுபோலும். ஆகுமா? ஆகுமெனின். விசேஷமுதலேவிசேஷியென்னல்வேண்டும், அங்ஙனமெப்பாடையிலக்கணமும் இ ன்றே, இதுநூதனவிலக்கணமாகவேண்டும், இங்ஙனமெங்குமின்றே, ஆதலி ற்பொருந்தாது. பொருந்துமெனில், குதர்க்கம். குதர்க்கம், முறைவழுஞான மெனல், எல்லாச்சேட்டைகளுமற்றுத் தான்மாத்திரமாவினங்களுன் போர் நுண்ணுணர்வோர். இவரோஞானியனொன்போர். இப்பேதந்தெரிவரிது, (சு0)

சக - கவி. அ - கை.

[ஞானியுமீசனுமாயையாற்பேதமாவுரன்றி, யறிவாற்பேதமாகா
மென்பதை யிக்கவியிற்கூறுகின்றுர்.]

கடத்து நீர்நிலாத் திரியெரி யுபயமுந் தழுவுமூர் தனைக்காக் குங், குடத்து நீர்விளக் கினிலொளி யிரண்டுமோர் குடும்பமாத்திரங் காக்கு, மடுத்த மைந்தனே ஞானியு மீசனு மறிவினற் பிறிவில்லை கெடுத்த மாயையின் குணங்களான் மேலென்றுங் கீழென்றும் பிறி வா மால்.

(இ-ன்.) கடத்துநீர்நிலாத்திரியெரியுபயமுந் தழுவுமூர்தனைக்காக்கும், எ-து. தடாகசலமும், மத்தாப்புமாகியவிவ்விரண்டும், எகமாகின்றுள்ள வோரூரைக்காக்கும்: — குடத்துநீர்வினக்கினிலொளி யிரண்டுமோர்குடும்ப மாத்திரங்காக்கும், எ-து. கடசலமும் தீபவொளியுமாகியவிவ்விரண்டும்; ஓர்குடும்பமாத்திரங்காக்கும்:—அடுத்தமைந்தனேஞானியுமீசனு மறிவினற்

பிறிவில்லை, எ-து. என்னைவிடாதடுத்தஞானபுத்திரா ஞானியும் சனுமா கியவிவ்விருவருரும், ஞானத்திறைற்சற்றும்பேதமிலராவர்;—கெடுத்தமாயை யின்குணங்களால் மேலென்றுங்கீழென்றும்பிறிவாமால், எ-து. ஒன்றுபடா மற்கெடுத்தமாயையின் குணபேதத்தால் மேலென்றுங் கீழென்றும்வேறு பாட்டையடையும், என்று,

தழுவுழுவொன்றது; வெவ்வேறுகாதேகமாகநின்றவூர். குடும்பத்தைக் காப்பது, ஊனைக்காக்காது. ஊனைக்காப்பது, குடும்பத்தையுங்காக்குமெ னப்பொருன்படவின், ஞானிகாத்தல், தன்மட்டும். ஈசன்காத்தல், ஞானி யுட்னனைத்தையுமெனக்கொள்க. இங்கேகாத்தல், தனுகரண புவனபோக ங்களை. இதுமாயாசம்பந்தமாதலின், கெடுத்தமாயையின்குணங்களால் மே லென்றுங்கீழென்றும்பிறிவாமால், எ-ம், சமஷ்டிவியஷ்டியென்னும்பேத ங்களை யிருவருஞ்சின்மாத்திரமாக்கனைத்தலின், ஞானியுமீசனுமறிவிறற் பிறி வில்லையெனவுங்கூறினர். அறிவிறற்பிறிவில்லையென்பதைப் பிரமன் கூறியபிரமகீதையினும், கிஷ்ணபகவான்கூறியபகவத்கீதையினும், சிவன் கூறியசிவஞானபோதத்திலுங்காணலாம். இம்மூவருமஞானத்தையேபிர திவாதித்தனர். ஆதலினிவர்மூவருமஞானியரே. இவர் உபாதி குணந்தொ ழிலாற்பேதித்தாற்போல, ஞானியும்பேதித்தலின், இதுமாயாசம்பந்தமெ ன்றுயிற்று, தனுகரணபுவனபோகங்களைத் தனித்தனிசிவர்காக்கினும், பிரி த்தலுங்கூட்டலுமீசனுதலா லிவ்விரண்டுகாத்தலுமிவனுக்கே பொருந்தும்.

(க-து.) ஞானியுமீசனுமாயையாற்பேதமுறுவரன்றி யறிவாற்பேதமு றுரென்பதி. மாயையென்பதறியாமை. அதுசெகசிவபரங்களைமெய்யென் றுணருமறிவு. இம்மூன்றுமறிவுக்கனர்த்தம், அறியாமைக்கருத்தம். இது மூடர்பாலது, அதுவிவேகியர்பாலது; அறிவுவொத்தலின் ஞானியையீச னென்பதேற்கும். (சக)

சஉ - கவி. அ - கை.

[மானிடரிற்சிறந்தோர்சித்துப்புருடர், பிறவியிற்சிறந்தோர்தேவர்.
அதுபோலப் பிரமபாவனையிற்சிறந்தோரொவர். என்ப
தையிக்கவியிற்கூறுகின்றூர்.]

ரரான மன்னனைச் சித்தனைப் போல்வே காரணன் முதலான
சுரர்கண் மாயையவல் லவரணி மாதிக டொக்கமா தவமிக் கோர்
தரணி மானிடர்க் கலைவகளில் லாமையாற்றுழ்வுள ராஞ லும்
பிரம பாவனை யாலிவ ரவரொனும் பேதமொன்றிலபா ராய்.

(இ-ள்.) *ரரின்மன்னனைச்சித்தரைப்போலவே, எ-து. மானிடர் களில் அரசனும், அரசனில் சித்துப்புருடனு மெங்ஙனமதிகாரத்தாலும், மகிமையாலுமேலிட்டாரனோ அவர்போலப் பிறவியில்;—காரணன்முத லானசுரர்கள் மாயையவல்லவரணிமாதிக டொக்கமாதவமிக்கோர் எ-து.

விட்டுணுமுதலியதேவர்கள் மாயாவல்லபமுடையோர், அணிமாதிசித்திகளை றைந்துள்ளமகத்தானதவத்தில்சிறப்புற்றோர்:— தரணிமானிடர்க்கலைவகளில்லாணமையால்தாழ்வுளராஞலும், எ-து. பூமியில்மனிதர்களுக்கல்வல்லபங்களில்வாணமையாலங்கிலேக்குத்தாழ்ந்தநிலைபினராயினும்:—பிரமபாவனையாலிவரவனொன்றும்பேதமொன்றிலேபாராய், எ-து. பிரமமேதானெனச்செய்யும்பாவனையினல் மானிட ரிவனென்றும், தேவர்களவர்களென்றுங் கொள்ளும்பேதம் யாதானுமொன்றுளதோ? இல்லையே நீயேயிதனைச்சோதித்துக்காணுதி, எ-று.

பிரமபாவனைசெய்வோர் மானிடர்மாத்திரமன்று தேவருமாதலி னிவ்விருபேதமுமதிலுண்டோ? உண்டெனில், அதுபிரமபாவமன்று. நரரிலென்பதுபோலத் தேவரிலெனக்கூறலாமெனின் நாரணன்முதலானசுரர்களென்றிருக்கின்றதே, ஆதலிற்பிறவியிலெனவருவித்தாம். பிறவியிற்சிறந்தனவொன்றுணர்த்த எழுவகைத்தோற்றத்தில் தேவனாமுதலில்வைத்துவழங்குகின்றதன்றே? இதனையுமுணர்க. மனிதரில் மன்னனும், சித்துப்புருடனு மென்சிறப்புறினும், மனிதனே. அதுபோலப் பிறவியிற்சிறந்ததேவரில், இந்திரனும், பிரமனும், ருத்திரனும், நாரணனும், அணியணியாகவென்சிறப்புறினுந்தேவனே. இவர் பிரமபாவனையிலெவர் பேதமின்றுதலால், ஞானி தேவனுமல்லன், மானிடனுமல்லனென்றுயிற்று. சித்திபெற்றதாலுயர்வும், பெறுதாவிழிவும், பிரமபாவனையிலெங்கே, யின்றுதலால், பிரமபாவனையாலிவரவனும் பேதமொன்றிலேபாராயென்றார்.

(க-து.) பிரமபாவனையில்பேதமின்மையின் ஈசனுஞானியுமொப்பவென்ற னையமின்றியேற்கப்படுமென்பது. இதனைச்சோதனையாற்காண்க.(சூஉ)

சஙூ - கவ். அ - கை.

[அஷ்டமாசித்திகளு மிவ்வுலகில்முனிவர்பாலதாங்கிழ யாங்கண்டிருக்க, இவையீசனதுசுதந்தரமென்ற தென்னையென்றவிளவிற்கு, இவர்கள்தத்தந்தவமுயற்சியாற் சிற்சிலவடைந்தனரன்றிச் சுதந்தரால்லவென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

முத்தி நல்கிய சற்குரு வேபல முனிகளுக் கணிமாதி, சித்தி பூமியிற் கண்டிருக் கவுமந்தச் செல்வமீ சனதென் றீர், புத்தி யொத்திட வுனைத்தரு ளென்றிடிற் புகழுமீ சனேவண்டிப், பத்தி செய்திடுந் தவத்தினல் யோகத்தாற் பலித்ததென் றறிவா யே.

(இ-ள்.) முத்திநல்கியசற்குருவேபல முனிகளுக்கணிமாதி சித்திபூமியிற்கண்டிருக்கவும், எ-து. முத்திசாம்பராச்சியத்தை யடியேனுக்களுக்கிராகித்தசற்குருநாதனே, பலமுனிகளுக்கணிமாமுதலிய சித்திகளுளவாகப் பூமியில்கண்டிருக்கின்றனமே யங்ஙனங்கண்டிருக்கவும்:—அந்தச்செல்வமீசனதென்றீரே புத்தியொத்திடவுனைத்தருளென்றிடில், எ-து. அந்தமகா

செல்வமான நிஸ்வரசுதந்தரமாமென்றுணர்த்தருளினீர்; அஃதெங்ஙனம் அடியேன்புத்திக்கொத்திருக்கும்வண்ணந் தெரிவிக்கவேண்டுமெனக் கேட்பையாயின்:—புகழுமீசனேவேண்டிப் பத்திசெய்திடுந்தவத்தினுல் யோகத்தாற்பலித்ததென்றறிவாயு, எ - து. யாவராணும்புகழ்ந்தருச்சிக்கத்தக்க பரமசிவத்தைதவேண்டி மிகுந்தபத்தியோடுசெய்யுந்தவத்தினுனும்; கிரியா யோகத்தினுனும் வாய்த்ததென்றறிந்துகொள்ளுதி, எ-று.

மூன்கவியில் நாரணன்முதலியதேவர்கள்; அணிமாதிகடொக்கமாதவமிற்கோனெனவும், இக்கவியில் பலமுனிகளுக் கணிமாதிசித்திகள் தவத்தினுல் யோகத்தாற்பலித்ததெனவுங் கூறினதால் இருவருக்குந்தவங்காரணமாக அணிமாதிகள்வாய்த்தவென்றுயிற்று. இவர்களுக்குவாய்த்ததீசனுல், அவர்களுக்குவாய்த்ததாராலெனின், அவ்வீசனுலெனவறிக. ஈசனெனல் மாயாரகிதனே. ஏனையோர்மாயையவல்லவொன்றதனுல் மாயாசகிதனெனத் தானேயமைகின்றது. அவர்கள்மிக்கதவத்தா லணிமாதிகள் முழுதும்பெற்றனர், இவர்கள்தவத்தளவாகச்சிற்சிலபெற்றனர். அணிமாதிகளவர்கட்கேயுரிமை. இவர்கட்கிரவல். எனவே, ஈசனதமிசந்திரிமூர்த்திகளென்றுயிற்று. ஆயினீசனல்லர். இவர்களீசனுடையகோலமன்றே, கோலமாவீசன்? அல்லவே, இதுநிற்க.

(க-து.) ஞானிகள் சித்திகளுத்தவத்தினு லடைந்தனரென்பது. சுதந்தரரன்று. (சுங)

தசு - கவி. அ - கை.

[இப்போதுஞானிகளுக் கவர்கள்போற்சித்திவாய்க்காததற்
கேதென்னெனவென்றுவிஞவலியக்கவியிற்கூறுகின்றார்.]

சிவசொ ரூபமாந் தேசிக மூர்த்தியே சித்திமுத் திகளிரண்டுந்
தவமு ளோரடைகுவரொனி லவர்கள்போற் சகலரு மடையாரோ
வவர்கள் பூருவஞ் சித்தியு ஞானமு மடைந்ததுங் கண்டோ மே
யிவர்க்ண் ஞானிகளென்றிடிற் சித்திக ளிவர்க்கிலா வகையே தோ.

(இ - ள்.) சிவசொரூபமாந்தேசிகமூர்த்தியே சித்திமுத்திகளிரண்டுந் தவமுளோரடைகுவரொனிலவர்கள்போற் சகலருமடையாரோ, எ - து. சிவசொரூபமேகுருமூர்த்தமாக வெழுந்தருளியகர்த்தனே சித்திமுத்திகளென்னுமிரண்டினையுந் தவமுடையவர்களடைவார்களென்றுரைத்தால்அவர்களைப்போலச் சகலருமுனிவருமதனையடையாததற்கேதென்னெகொலோ:— அவர்கள்பூருவஞ்சித்தியுஞானமு மடைந்ததுங்கண்டோமே. எ - து. அந்த ஞானிகள் பூர்வத்திற்சித்தியையும், ஞானத்தையுமடைந்தவதையுஞ் சுருதியாற்கண்டிருக்கின்றனமே:—இவர்கள்ஞானிகளென்றிடிற் சித்திகளிவர்க்கிலாவகையேதோ, எ - து. இப்போதிருக்கிறவர்களையும் ஞானிகளென்று

சொன்னூலிவர்களுக்கச்சித்திகளில்லாததற் கேதென்னைகொலோ, அறிகிலம், எ-று.

அவர்கள்போற் சகலருமடையாரோ, அடைவார்களெனின், இவர்க்கிலாவகையேதோ என்றுவிளவேண்டியது. இதைவிட்டு அடைவாரோவெனப்பாடமோதி அடைவார்களேவென்றுரைகூறின், அடையமாட்டார்களென்றுகின்றதே, இதுவிளவா? அல்லவே. அடையாரோ இவர்க்கிலாவகையேதோ என்பதிரண்டுஞ்சேடன்விளை. அடைவாரோவென்றதுவிடை. இவ்விடைகுருவினதாகவேண்டும். இக்கவியில்விளைவையன்றி விடையொன்றுமின்றே யிதுதோன்றுமை. வழுவன்று. பின்கவி ஆசான்விடை. இக்கவிமாணாக்கன்விளை. இதையறிந்துரைகூறவேண்டும். இதுநிற்க.

(க-து.) பூர்வஞானிகள்சித்தியெய்தினரொனில், இப்போதுள்ளஞானியரடையாரோ, அடையாதரென்னையென்பது. இவை விளை. (சு)

சரு - கவி. அ - கை.

[முன்னர்த்தவமென்றார், அஃதிருவகையெனவும், அவற்றுளெய்தும் பயனினையவெனவு மிக்கவியிற்கூறுகின்றார்.]

காமி யத்தவங் காமிய மொன்றையுங் கருதிடாத் தவமென் றும்
பூமி யிற்றவ மிருவகை சித்தியும் போதமுந் தருமைந் தா
வாமி வற்றிலொன் றியற்றிரு லொன்றையே யடைகுவ ரிதுதீர் வை
யாமு னைத்தவவ் விரண்டையு மியற்றிரு ரன்றுள பெரியோரே.

(இ-ள்.) காமியத்தவங்காமியமொன்றையுங் கருதிடாத்தவமென்றும் பூமியிற்றவமிருவகைசித்தியும் போதமுந்தருமைந்தா, எ-து. காமியத்தவமெனவும், நிட்காமியத்தவமெனவும் பூமியிலிருவகைத்தவமுண்டு. ஞானபுத்தாரா! இவைசித்தியையேனும் முத்தியையேனுந்தவறுதருதந்துவிடும்:—ஆமிற்றிலொன்றியற்றிரு லொன்றையேயடைகுவரிதுதீர்வை, எ-து. இங்ஙனமாகநின்றுள்ள விரண்டினுள் தவமொன்றையேபுரிந்தோரதற்குரியபலனென்றையே யடைவார்களிதுதீர்ப்பாம்:—யாமுனைத்தவவ்விரண்டையு மியற்றிரரன்றுளபெரியோரோ, எ-து. யாமுன்னர்கூறியவவ்விருதவங்களினையுஞ், செய்தவராகும் பூர்வத்திலுள்ளஞானிகள், எ-று.

ஒன்றிலிச்சைகருதிச்செய்யுந்தவம், காமியத்தவம். கருதாதுசெய்யுந்தவம், நிட்காமியத்தவம். காமியத்தவம் சித்தியையுமு, நிட்காமியத்தவம் முத்தியையுந்தருமெனக்கொள்க.ஒன்றியற்றில் மற்றோர்பயனுறுதென்பார், ஆமிவற்றிலொன்றியற்றிரு லொன்றையேயடைகுவரொனவும், முன்னர்சித்திமுத்தியுடைந்தோ ரிருதவமுமுயன்றவராகுமென்பார், யாமுனைத்தவவ்விரண்டையுமியற்றிரு ரன்றுளபெரியோரேயெனவுங்கூறினர்.

(க-து.) இருவகைத்தவமுயற்சியாலன்றி யிவ்விருபயனுஞ்சிறிதுமெய்தாதென்பது. இவ்விருபயனுங்கடவுளிட்டத்தாலெனின், யாவரிடத்துமோர்படித்தாங்கழவேண்டும். இன்றேல் பாரபட்சமுடையராம். இது கூடாது. சுபாவமெனின், முயற்சியுழ் விதிவிலக்குவழுவாதியற்றவேண்டுமென்பதுமெற்றிற்கு. கண்டபடிநடக்கலாமெனின், மிருகங்களினுமென்சிறப்பு. மனுநீதிக்கொத்துநடக்குதுமெனின், மறுமைக்கெதற் கொத்துநடக்கவேண்டும். வேண்டுவதின்றேல், இதுவும்வேண்டுவதின்று. அரசனுக்கினேரிடுமேயெனின், அதுவுமீசுராக்கினையா லிடுக்கணேரிடுமன்றே, அதுபிரத்தியட்சமன்றேயெனின், இந்தப்பிரத்தியட்சத்தாற் கணிக்கவேண்டுமன்றே ? அன்றேல், மானிடத்தன்மைக்கென்சிறப்பு. ஆதலினவரவர்வினைகாரணமாகவேயவரவரின்பதுன்பநுகர்வர். ஒருவரின்பதுன்பம் பிறருக்கினையாததென்னை ? இதுபற்றிக் கன்மகாண்டத்தில் விபரமாகக்காணலாம. இதுஞானகாண்டமாதலின் வினைவழியேயவந் தனைவசீவனாயென்றுர்சான்றோர். அவரினுந்தெளிந்ததென்னை, இதனையுமறுப்பார், மக்கட்பதர். (சுரு)

சகு - கவி. அ - கை.

[அந்தச்சித்திமுத்தியாற்பயனெய்தினே ரினையொன்
விக்கவியிற்கூறுகின்றுர்.]

அனக மைந்தனை முத்திஞா னத்தையே யடைந்தன ரல்லாமல்
சனகன் மூபலி பகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரா
வினிய சித்தியை விரும்பினர் சிலர்சில ரிரண்டையு முயன்றார்கள்
முனிவர் சித்திகள் விநோதமாத் திரந்தரு முத்தியைத் தாரா வே.

(இ-ள்.) அனகமைந்தனை முத்திஞானத்தையே யடைந்தனரல்லாமல் சனகன்மாபலிபகீரதன் முதலினோர்சித்திகள்படித்தாரா, எ - து. அகமமதையிறந்தஞானபுத்திரா ? சனகமகாராசனும், மகாபலிச்சக்கிரவர்த்தியும், பகீரதராசனும் முதலியசான்றோர் முத்திவேண்டி ஞானத்தையேசாதனமாகவடைந்தனரன்றிச் சித்திகள்வேண்டிமுயன்றனரா இலரோ:—இனியசித்தியைவிரும்பினர்சிலர் சிலரிரண்டையுமுயன்றார்கள், எ-து. கண்டுமகிழ்த்தற்கினியதாயுள்ள வணிமாதிசித்திகளைமாத்திரஞ் சிலர்விரும்பிமுயன்றார்கள். சிலர்சித்திமுத்திகளிரண்டையும் வேண்டிமுயன்றார்கள்:—முனிவர்சித்திகள்வினைதமாத்திரந்தரு முத்தியைத்தாராவே, எ-து. இவ்விருதிறத்தினருமுனிவரோயன்றிவேறல்லர், அஷ்டமாசித்திகளும்வாய்க்கில் வினைதமாக வினையாடல்புரிதல்மாத்திரந்தருமன்றி யைக்கியமுத்தியைச் சிறிதுந்தாரா, எ-து.

எனவே, சித்தி அநிசயானந்தத்தையும், முத்தி நிரதிசயானந்தத்தையுந்தருமென்பதாயிற்று. சித்தி, காலம்போக்கல், முத்தி, காலாதீதமாதல்.

(க-து.) சிலர்மூத்திக்கும், சிலர்சித்திக்கும், சிலரிருமைக்குமுயன்றன் றென்பது. இங்ஙனமனுபவமிருத்தல்பற்றிக்கூறியதென்க. (சசு)

சஎ - கவி. அ - கை.

[ஞானிகளிற்சிலர்பயனின்றெனத்தெரிந்துஞ் சித்திபற்றி
வருந்திமுயன்றதெற்றிற்கென்றவினவிற்குத்தர
மிக்கவியிற் கூறுகின்றார்.]

யோக ஞானமே முத்தியைத் தருமெனி லெழிந்தசித் திகள்வேண்டி
மோக மாயுடல் வருந்தினர் சிலசில முத்தர்க ளேனென்றுற்
போக மாய்வரும் பிராரத்வ கன்மங்கள் புசித்தன்றே நசித்தேகு
மாகை யாலந்தச் சித்திகள் பிராரத்வ மாகுமென் றறிவா யே.

(இ-ன்.) யோகஞானமேமுத்தியைத்தருமெனி லெழிந்தசித்திகள்வே ண்டி மோகமாயுடல்வருந்தினர்சிலசில முத்தர்களேனென்றால், எ-து. ஞா ணயோகமேமுத்தியைத்தருமாயி னதுநீங்கலாஞசித்திக ளடையவேண்டிச் சிலசிவன்முத்தர்கள்மிகவுமதில்மோகமுற் றுடலம்வருந்தினர்களே யஃதி யாதுக்கெனின்:— போகமாய்வரும்பிராரத்வகன்மங்கள் புசித்தன்றே நசி த்தேகும், எ - து. போகநிமித்தமாகிடும்பிராரத்வகன்மங்களை யனுபவித்தா லன்றே வவையொழிந்துபோகும்:—ஆகையாலந்தச்சித்திகள் பிராரத்வமா குமென்றறிவாயே, எ-து. ஆதலினந்தச்சித்திகள் பிராரத்வ கன்மபலனென் றுணர்தி, எ-று.

கிரியாயோகம் ஞானயோகமென்றிருத்தலின் யோகஞானந்தை ஞா னயோகமென்றும். மோகமாயுடல்வருந்தல்; அதிகமோகங்கொண்டு கன லிடையிலும் ஒற்றைக்காலாற்கழுத்தளவுநீரிலும் ஊசிமுனையிலும் காற்று ப்பட்சணையிலும், இன்னுமிவைபோன்ற வரியவிடுக்கண்களிலும் புற்றுப்க ல்லாய்மரமாய்ப் பன்னெடுங்காலந்தறியகடந்தவமுயறலே. சித்திகள்வேண்டியுட ல்வருந்தல் இச்சைபற்றியாதலின், இச்சாபிராரத்துவமென்க. பிராரத்வகன் மங்கள்புசித்தல் தனுகரணபுவனபோகங்களிலொன்றுதலின், போகமென் றார். யாவருமனுபவித்துத்தொலைப்பதெல்லாம் பிராரத்துவமென்றுணர்த்தப் பிராரத்வகன்மங்கள்புசித்தன்றே நசித்தேகுமெனப்பட்டது.

(க-து.) ஞானிகள்மிகமுயன்றெய்தியசித்திக ளிச்சாபிராரத்துவமெ ன்பது. இது; இச்சை அனிச்சைபரவிச்சையென்னும் பிராரத்துவத்துளொ ன்று. (சஎ)

சஅ - கவி. அ - கை.

[இங்ஙனமுணர்த்தருளிய வாசிரியனைப்புகழ்ந்து துதித்தலை
யிக்கவியிற்கூறுகின்றார்.]

இலக்கி மாயிரஞ் சுருதியா னாகத்தா லென்மன மசையா மல்,
பிலக்க வேண்டுமென் றநுனன்குரு வேயகப் பிராந்திபோய்த் தெளிவா

னேன், துலக்க மானகண் ணுடியை யடிக்கடி துலக்கினற் பழுத
ன் றே, யலக்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யழுதங்க. டெ
விட்டா வே.

(இ-ள்.) இலக்கமாயிரஞ்சுருதியாலுகத்தா லென்மனமதைசயாமல் பில
க்கவேண்டுமெள்றருள்குருவேயகப் பிராந்திபோய்த்தெளிவானேன், எ-து.
ரண்ணிறந்தசுருதிகளாலும், யுத்திகளினுலும், என்மனமானது கலங்காது
றுதிபெறவேண்டி யனுக்கிரகஞ்செய்தருளியகுருநாதனே! எனதுமனமைய
க்கூடீங்கித்தெளிவுற்றனன்:—துலக்கமானகண்ணுடியை யடிக்கடி துலக்கி
னுற்பழுதன்மீறை, எ-து. களங்கரகிதமானகண்ணுடியை யடிக்கடி துலக்கிக்
கொண்டுவந்தாற் குற்றமுண்டோ? இல்லையே:—அலக்கண்மாற்றியதேவரீ
ரெனக்குரையமிர்தங்கடெவிட்டாவே, எ-து. துயரங்களனைத்தையு மொரு
ங்கேயொழித்தருளியதேவரீ ரடியேனுக்குச்சொல்லிக்கொண்டுவரு மமிர்
தானுபவங்கள் தெவிட்டவில்லையே, எ-று.

அகிலாண்டகோடியெல்லாமென்கிறவிடத்தில், அகிலாண்டகோடியெ
ன்பது; கணக்கின்மையெனப்பொருள்படுதல்போல, இலக்கமாயிரஞ்சுரு
தியென்பது; கணக்கிறந்தசுருதியெனப்பட்டது. பலக்கவென்பது, பிலக்க
வெனமரீஇயது. அகப்பிராந்தி, சித்தப்பிராந்தியை. தெளிவாதல், சங்கற்ப
த்தைதத்தவிரச் சகமின்றெனத்தெளிதலை. அமிர்தங்கள், சுருதியாதிமூன்றை
யுமெனப்பன்மைகொடுத்தார். இது, உவமையாகுபெயர். அறிவேயானந்த
மாகமுடிதலின், தெவிட்டாவேயென்றார்.

(க-து.) தேவரீரருளியசுகப்பேறுகள், தெவிட்டாவமிர்தம்போல்பவெ
ன்பது. இதனுல், மூன்றுமொத்துத்தெளிந்தனனெனக் குறிப்பிக்கப்பெற்
றும். (சஅ)

சகூ - கவி. அ - கை.

[அவரவருந் தத்தம்வினைகளை யனுபவித்தே தீரவேண்டுமென்
.றும், அவைநுணுக்கினியாணீரு மென்றும் வேதங்கூறில், யா
ன்துணிவதெங்ஙனமென மாணாக்கன்வினவலி யிக்கவியிற்
கூறுகின்றார்.]

கைத வங்களைச் சாத்திரஞ் சொல்லுமோ கருணையா லெனை
ய்யா ளரு, மையு னேகுரு வேயெவ ராகிலு மனுபவித் தாலன் றிச்
செய்த கன்மங்கள் விடாதென்ற வசனமுஞ் சென்மசஞ் சிதம்
வே வத், துய்ய ஞானத்தீச் சுடுமென்ற வசனமுந் துணிவதெப்
படிதா னே.

(இ-ள்.) கைதவங்களைச்சாத்திரஞ்சொல்லுமோ கருணையாளனையா
ளுனையயனேகுருவே, எ து. சிருடையோடென்னையாள வெழுந்தவையனே

குருநாதனே! பிறழ்ந்துகூறுமொழிகளேவேதஞ்சொல்லுமா? அஃதியாதெனில்:—எவராகிலு மனுபவித்தாலன்றிச் செய்தகன்மங்கள்விடாதென்றவசனமும், எ-து. யாவராயினுந்தான்தான்முன்செய்தவினைகளைத், தாமேயனுபவிக்கவேண்டும், அனுபவித்தாலன்றிவிடாதென்றவசனமும்:—சென்மசஞ்சிதம்வேவத் துய்யஞானத்தீச்சுடுமென்றவசனமுந் தணிவதெப்படிநானே, எ-து. பிறவிக்குகாரணமாகின்றுள்ள சஞ்சிதவினைவேகும்படியதனைப்பரிசுத்தஞானாக்கினி நீறுக்குமென்றவசனமுமாம். இவ்விருவசனங்களிலுந்தணிவதெங்ஙனம் அதனைத் தெரித்தியருளும், எ-று.

கைதவம்; உறுதியின்றியமொழியெனினுமமையும். எவராகிலுமென்றது, எவ்வளவுயர்ந்தநிலையினராயினுமென்பதை. இவர்திரிமூர்த்திகளெனினுமமையும், நாரணன்முதலானசுரர்க ளணிமாதிகடொக்கமாதவமிக்கோரென்பதனுலென்க. நாரணன்முதலினரும் செய்தமாதவமிருதியாலன்றே, தொக்கவணிமாதிகளென்றார். அணிமாதிசித்திமுழுது மிவர்களுக்குவாய்த்தல், பிராரத்துவம். யாதுமுயற்சியால், தத்தந்தவமிருதியாலென்றுரையிற்று. ஆகவே, இவர்களும்வினையனுபவித்துத் தீரவேண்டுமென்பதுபெற்றும்.

(க-து.) எவரேனும்வினையனுபவித்துத் தீரவேண்டுமென்றும், அவ்வினை ஞானக்கினியானீறுமென்றும், வேதங்கூறுவதில்யாதுண்மையென்பது. செய்யுங்கன்மமென்றது செய்தகன்மமென விறந்தகாலத்தாற்கூறியதால் சஞ்சிதவினையென்றேகொள்ளவேண்டும். (சுசு)

நிற - கவி. அ - கை-

[அவ்வினைவிற்குவிடைகூறுவான்வேண்டி வேதங்கள்கூறும் பூர்வ
பட்சம் சித்தாந்தம் இவையவென விக்கவியிற்
கூறுகின்றார்.]

சீவ பேதங்க ளளவிலை மைந்தனே செய்கையு மளவில் லை
யாவ வாமவ ரவரதி காரங்க ளறிந்துபக் குவமோக் கிப்
பூவ லர்ந்துபின் பல்லங்கள்காட் டுவனபோற் பூருவஞ் சித்தாந் தங்
காவல்வேதங்களிரண்டையும்வசனிக்குங்காண்டமூவகையாலே.

(இ-ள்.) சீவபேதங்களள்விலைமைந்தனே செய்கையுமளவில்லை, எ-து. ஞானயுத்திரா! சீவபேதங்களளவுபடாததா லவர்கள்முயற்சிபேதங்களுமளவுபடாவாம்:—ஆவவாமவரவரதிகாரங்க ளறிந்துபக்குவநோக்கி, எ-து. அவசியமாகவேண்டுவனவாகிய வவ்வரவரதிகாரதாரதம்மியங்களையுற்றுணர்ந்து தக்கபக்குவங்களையுநோக்கி:—பூவுலர்ந்துபின்பலங்கள்காட்டுவனபோல், எ-து. விருட்சங்கள்முன்னர்புஷ்பித்துபின்னர்பலன்தருமாறுபோன்று:—பூருவஞ்சித்தாந்தங் காவல்வேதங்களிரண்டையும் வசனிக்குங்காண்டமூவகையாலே, எ-து. நமக்குவிதிவிலக்காற்காவலாகின்றுள்ள வேதங்கள்; பூர்வபட்சம், சித்தாந்தமென்னுமிரண்டியமங்களையும், கன்மம்பத்தி ஞானமென்னுமூன்றுகாண்டங்கள் காரணமாகத்தெரிவிக்கும், எ-று.

சைதன்யம்; உபாதிசகிதத்தாற்சீவனெனவும், உபாதிகளெண்ணிறந்த னவாதலின் சீவனுமெண்ணிறந்தனவாயிற்று. இங்ஙனமாதல்பற்றிச் சீவ பேதங்களளவிலையெனவும், அச்சீவர்கள் சுகம்வேண்டிப் பற்பலகிருத்தியங் களியற்றுகின்றலின், செய்தகயுமளவில்லையெனவும், அதிகாரம், ஆளுகை. அறிந்து, நிறமறிந்து. ஈனவே, அவனவனாளுகைத்நிறமறிந்து பூர்வபட்சத் தைச்சித்தாந்தமாகவும், சித்தாந்தத்தைதப்பூர்வபட்சமாகவும், மூன்றுகாண் டங்களாலே வேதங்கள்பிரதிவாதிக்குமென்பார், ஆவவாமவரவதிகாரங்க ளறிந்து பூருவஞ்சித்தாந்தங் காவல்வேதங்களிரண்டையும் வசனிக்குங்காண் டமூவகையாலேயெனவுங்கூறினர். பலங்கள்காட்டுவனவிருட்சங்களாதலி னிவ்விருட்சங்களைத்தோன்றுவெழுவாயாக்கிவருவித்தாம். அறிந்துவசனிக்கு மெனவும், நோக்கி அலர்ந்து காட்டுமெனவுமுடிக்க. மூன்றுகாண்டங்களை யு மாங்காங்குமுத்தியெனவேதங்கூறலினிதுபற்றிப் பூர்வபட்சஞ்சித்தாந்த மென்றேற்கலாபிற்று. பட்டிமாடுபோற்றிரிவானைக் கன்மகாண்டவிதிவிலக் கு வயப்படுத்தவேண்டி யிதுமுத்தியெனல், சித்தாந்தம். முன்பட்டிமாடு போற்றிரிந்தது பூர்வட்சம், சமஸ்தத்தையுமீஸ்வராற்பணம்பண்ணுதுதே கமேயான்மா போகமேமுத்தியென்றிருத்தலி னிதன்மேற்பழுதுரைத்தல், பூர்வபட்சம். அதனைச்சுத்தமாக்கல், சித்தாந்தம். அங்ஙனமீஸ்வராற்பணம் பண்ணினுந் திரிபுடியறுதற்பாலதன்றுமையி னதனைச்சோரவிடல், பூர்வப ட்சம். அறுத்தற்பாலதுண்ணமஞானமாதலி னதனைவிடாதுபற்றல், சித்தா ந்தம் இதுபற்றியிவ்விரண்டும். வேண்டுவதாயிற்று.

(க-து.) முன்கவியிற்கூறியவிரண்டுவசனம்பற்றித் துணிவுகூறுவான் வேண்டி யிக்கவியில்பூர்வபட்சசித்தாந்தங்களைக் கூறியதென்பது. பூர்வபட் சம், அன்றெனல். சித்தாந்தம், ஆமெனல். (கo)

நிக - கவி. அ - கை.

[அவசரம்பற்றியவ்விரண்டுவசனமு மேற்றற்பாலதென இக்கவியிற்கூறுகின்றார்.]

ஆன பாவிக ளடைடவன கரகங்க ளவசிய மாளு லுந்
தான மந்திர விரதவோ மங்களாற் றவிருமென் பதுபொய் யோ
வீன மாம்பல சன்மசஞ் சிதவினை யெத்தனை யாளு லு
ஞான மாங்கனல் சுடுமென்ற மறைமொழி நம்பிளுல் வீடுண் டே.

(இ - ள்.) ஆனபாவிகளடைடவனரகங்க ளவசியமாளுலும், எ - து. கொடியபாதகங்களைடியேவிரதமாகச் செய்தற்குரியபாவிக ளவசியமடைடய வேண்டியதுரகங்களையே, அங்ஙனமாயினும், (அவைகள்,) :—தானமந்திர விரதவோமங்களாற் றவிருமென்பதுபொய்யோ, எ-து. தீர்த்தங்களினியமி மூழ்கும்ஸ்தானங்களினுலும், மந்திரங்களினுலும், விரதங்களினுலும், யாக ங்களினுலும் நீங்கிவிடுமென்றுவேதங்கூறுவதுபொய்யாகுமோ;—எனமாம்

பலசென்மசஞ்சிதவினையெத்தனையாளுலும், எ - து. இழிவுக்கிடமாவுள்ளபலசென்மசஞ்சிதவினைக ளெத்தனைபற்பலவிகற்பமாயினும்:—ஞானமாங்கனல்சுடுமென்றமறைமொழிகம்பிளல்வீடுண்டே, எ - து. அவற்றைஞானமாகிறவக்கினிநீறுக்கிவிடுமென்றுகூறும்வேதவசனத்தைத்திரிகரணமொத்துநம்பி யனுட்டிக்கின்முத்தியுண்டாகுமே, எ - று.

நரகங்கள்; மந்திரமுதலியவற்றுற்றவிருமென்பதும், சஞ்சிதவினைகள்; ஞானுக்கினியானீறுமென்பதும் வேதமாதலாவிதனைநம்பிப்புரியாவிடத்துப்பொய்யாம். நம்பிப்புரிந்தவிடத்துப்பொய்யாமா வீடாமேயென்பார், மறைமொழிநம்பிளல்வீடுண்டேயென்றார். இரண்டுவீடெனினும், அதுபதவிமுத்தியும், இஃதயிக்கமுத்தியுமாம். ஞானமாங்கனலென்பது, வீர்த்திஞானத்தை. அதனல்நரகங்கள்தவிரும், இதனலினிப்பிறப்பதுதவிரும். இதனையனுபவத்தாற்காண்பதன்றி வறுமொழியாலன்று. ஞானமாங்கனலுருவகம்.

(க - து.) அவ்விரண்டுவசனமுமவசரம்பற்றி மெய்யென்றேற்கப்படுமென்பது. தானம், *கையெனினுமமையும். (நுக)

நுஉ - கவி. அ - கை.

[சென்மசஞ்சிதத்தை நீறுக்குவது ஞானமாயிருக்கக் கன்மத்தை
விரும்பிமுயல்வ தெற்றிற்கெனவிளுவலை
யிக்கவியிற்கூறுகின்றார்.]

என்மனந்திருக் கோயிலாத் தினங்குடி யிருந்தருள் குருமூர்த்தி
சென்ம சஞ்சித வினையைவே ரறுத்திடுந் தேவரீர் மெய்ஞ்ஞானக்
தன்ம யந்தரு மகிமையை விபுதரர் சகத்துளோ ரறியா மல்
கன்ம மாங்குழி யினில்விழுந் தழிகின்ற காரண முளையீ ரே.

(இ - ள்.) என்மனந்திருக்கோயிலாத்தினங்குடி யிருந்தருள்குருமூர்த்தி, எ து. என்மனதையேசிறந்தவாலயமாகத் தினமுங்குடிகொண்டெழுந்தருளியகுருமூர்த்தியே:—சென்மசஞ்சிதவினையைவேரறுத்திடுந் தேவரீர்மெய்ஞ்ஞானம், எ-து. தேவரீருளியமெய்ஞ்ஞானமானதுசென்மசஞ்சிதவினையை வேரோடுகல்லிவிடும்:—தன்மயந்தருமகிமையை விபுதரர்சகத்துளோரறியாமல், எ-து. சமஸ்தமுந்தன்மயமாகும்படியாகவுஞ்செய்யும், இங்ஙனமாயநிலையைத்தரத்தக்கமகிமையைத் தேவருஞ்சகத்திலுள்ளமானிடருமறியாமல்:—கன்மமாங்குழியினில்விழுந்தழிகின்றகாரணமுளையீரோ, எ-து. கிரியாமார்க்கமென்னும்படுகுழியில் வீழ்ந்தழிகின்றகாரணம்யாதுக்கோ, அதனைத்தெரித்தருளும். எ - று.

கிரியாதீதநிலையேயிச்சையனுதலின் என்மனந்திருக்கோயிலாத்தினங்குடி யிருந்தருள்குருமூர்த்தியெனவும், சங்கற்பமெழுந்தோறு மதனைச்சின்மாத்திரமாக்குமகிமையதாதலின் மெய்ஞ்ஞானந்தன்மயந் தருமகிமையென

வும், சமஷ்டிவியஷ்டிகளை யாண்டானழ்மையெனக்கொண்டு பூசிக்கின் உபாதியன்றே சிவனீசனுமா ஆகாதே ஆகாதளவும் பூசிப்பதிலென்பயன், பாக்கிலழிவரன்றே? அழிவதுபற்றிக்கன்மமாங்குழியினில் விழுந்தென்வுங் கூறினர். இதுபடுகுழியென்றறியா ததனைச்சிறப்பென்றுன்னுவோர் தேவருமனிதருமாதலின், இவர்களிவிபுதரர் சகத்துளோரெனப்பட்டது. இங்கே கன்மமென்றது, சரியைகிரியைகளை. இவற்றுற்பயன், சித்தசுத்தியன்றிநிரதிசயானந்தமன்று. இவற்றையே மேலனத்திடமுற்றே ரெங்ஙனஞானமொன்றுளதாகக் கருதியனுட்டித்துத்தெளிவர். இன்றுதலினழிவரெனப்பட்டது. சரியைகிரியைகளைப்புரிவது தோடமன்று, சித்தசுத்திக்கிடம். இடமாயினும், அவ்வளவோடுநில்லாது, மேற்கிரியாயோகத்துக் கிடம்பெறவேண்டும். இடம்பெறின்; ஞானயோகத்துக்கிடம்பெறும். இடம்பெறின்தானேதாஞ்தற்கியையும். இம்முறையறியார், யோகத்தையும், ஞானத்தையும் பழுதுகூறுகிற்பர். இதுற்க.

(க - து.) ஞானனுட்டானஞ்செய்வது சித்தாந்தமாயிருக்கக் கன்மானுட்டானம் புரிவதெற்றிற்கென வினவியதென்பது. கன்மமேபுரிவார்பலருமாதலின் இவ்வையந் தவிர்தற் காசிரியனாவினனென்க, கன்மத்தைக் குழியென்றது, மலைவலைவுக்கொழிவின்மைபற்றி. (ருஉ)

ருக - கவி. அ - கை.

[அதற்குவிடை கூறுவான்வெண்டி யந்தர்முகம்பகிர்முகமெனப் பிரித்துஅவற்றின்பய னிஃனயவெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

அழிவி லாததற் பதந்தனை மைந்தனே யகமுகத் தவர்சேர் வார்
வழிந டப்பவர் பராமுக மாகிணல் மலர்ந்தகண் ணிருந்தா லுங்
குழியில் வீழ்வர்கா ணப்பரி வெளிமுகங்கொண்டுகா மிகளாஞர்
பழிந ரும்பிற விக்கட லுழலுவார் பரகதி யடையா ரே.

(இ - ள்.) அழிவிலாததற்பதந்தனைமைந்தனே யகமுகத்தவர்சேர்வார், எ-து. ஞானபுத்திரா அழிவின்றிச்சதோதயமாகவிளங்குந் தாணுகியபதத்தை யந்தர்முகமாகநின்றவரெவரோ அவரேயடைவார்:—வழிநடப்பவர் பராமுகமாகிணல் மலர்ந்தகண்ணிருந்தாலுங் குழியில்வீழ்வர் காண், எ - து. வழிநடப்பவர்கள் பராமுகமாகச்செல்லி லவர்கள் கண்கள்மூடாது திறந்திருக்கினுந் தப்பாதெதிரினின்றபள்ளத்திலவசியம் விழுவார்கள், அதுபொய்யோவீயேகாணுதி:—அப்படிவெளிமுகங்கொண்டுகாமிகளாஞர், எ - து. அவ்வாறுபகிர்முகமே தமக்குப்பயணுகக்கொண்டு விடயவிச்சைமேலிட்டுழலுங்காமிகள்:—பழிதரும்பிறவிக்கடல்சூழ்குவர் பரகதியடையாரே, எ-து. பழியையேதரற்பாலதாகிய பிறவிசாகரத்தில்சூழ்குவரன்றிப் பரகதியாகிய முத்தியையடையவேமாட்டார்கள், எ-று.

அழிவிலாதபதந்தனையென்றது தற்பதமென்றதனால், தாணுகியபுதமென்றும். தொம்பதந்தற்பதமென்பவற்றுள் ; தற்பதம், பிரமமெனினு

மமையும். ஆயினும், தத்துவக்குழாமனைத்தும் தானல்லதானல்லவெனவிலக நியதிகளையமிழ்ந்திருன்றது தானே, அயலோ ? அயலெனின், உடலாதிதத்துவக்குழாங்களை யயலெனக்களைவதற்றிற்கு. பிரம மயலோ ? தாணுயின், சிவேஸ்வரராகியவராரோபங்கட்குக் கூடஸ்தபிரமமதிஷ்டானமெனக் கூறவரலாமா ? கூறவந்தது தானெனும்பதமதிட்டானமெனற்கு. எங்ஙனம், தானதிட்டானம், தனக்குக்கூடஸ்தபிரமமாரோபம். இவற்றிற்குச் சிவேஸ்வரர் ஆரோபம். எனவே, கூடஸ்தபிரமம் சிவேஸ்வரர்களுக் கதிட்டானமெனவும், தானெனுங்கூலக்காரோபமெனவும் பெற்றும். சிவேஸ்வரராகுன்றதுங் கூடஸ்தபிரமமாகுன்றதுந் தானே. தானென்பதைத்தள்ளி யிற்ஙான் குசைதன்யமுமெங்கே. தானின்ஞன்குமன்று. தன்னைத்தவிரவுமில்லை. ஆதலின்தானயலன்று. இதுபற்றித்தாணுகிய பதமெனவுரைகொண்டாம். அறிவேதானெனக் காண்பாரகமுகத்தவர். அயலேதானெனக்காண்பார் வெளிமுகத்தவர். அதற்குப்பயன் சிதாகாசமாதல். இதற்குப்பயன் பிறவியாதல். இதுபற்றி யவர் தற்பதந்தனைச்சேர்வரெனவும், இவர பிரவிக்கடலுழல்வரெனவுங்கூறினர். உயர்வுபற்றியழிவிலாததற்பதமெனவும், இழிவுபற்றிப் பழிதரும் பிறவியெனவு மடைகொடுத்ததென்க. வெளிமுகமாதலுக்குவமை பராமுகம். அகமுகமாதலுக்குவமை யெங்கே. இன்றேனுமிசையெச்சத்தாற் பராமுகமாகாமையெனக்கொள்க. என்னை, "பிறவிப்பெருங்கடனீந்துவர்நீந்தா நிறைவனடிசேராதார்." என்னுங்கவியில், நீந்துவவொன்னும் வினைமுற்றிற் கெழுவாயின்றேனு மிசையெச்சத்தாற் சேர்ந்தாரெனவருவித்தாற் போலும்.

(க-து.) அகமுகத்தவர் தாணுவர், பகிர்முகத்தவரயலாவரென்பது. இவ்விருமுகமுஞ் சொலலாலறிவார்க் கென்பயன். (ருக)

ருசு - கவி. அ - கை.

[தற்பதமடைவதும் பிறவியடைவது மீசச்செயலாலன்றிச் சிவச்செயலாலன்றேயென்பானேநோக்கி யிதுமூடர்வசனமாகுமென் றிக்கவியிற்கூறுகின்றார்.]

சிறந்த நன்மையுந் தீமையு மீசனர் செய்விக்குஞ் செயலன் றே, பிறந்த சீவர்க ளென்செய்வா ரவர்கள்மேற் பிழைசொலும் வகையே தோ, துறந்த தேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதிநூற் பொருண் மார்க் கம், மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்தனே யதுகேளாய்.

(இ - ள்.) சிறந்தநன்மையுந்தீமையுமீசனர் செய்விக்குஞ்செயலன்றே எ-து. சீவர்கள் சிறந்த சற்கிருத்தியஞ்செய்வது மிழிந்தகுற்கிருத்தியஞ் செய்வதும் ஈசுவரன்செய்விக்குஞ் செயலினலல்லவா:—பிறந்தசீவர்களென் செய்வார ரவர்கண்மேற்பிழைசொலும் வகையேதோ, எ-து. அவன்பிறப்

பிக்க வதனுற்பிறந்த சீவர்கள் சுதந்தாவீனராயிற்றே யவர்களென்னசெய் வார்கள் அவர்கள் மேற்பிழைசொல்லும்வகையாதோ:—துறந்ததேசிக மூர் த்தியேயென்றிடில், எ - து. சகலபற்றினின்றுநீங்கிய வாசிரியமூர்த்தமே யெனக் கேட்பையாயின்:—சுருதிநூற்பொருண்மார்க்கமறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்தனேயதுகேளாய், எ - து. வேதசாஸ்திரங் களிற்கூறிய வர்த்தமார்க்கங்களைமறந்த மூடர்களெவர்களோ வவர்கள் பித ற்றுமபக்கவசனமேயன்றி யறிஞர்கூறும்வசனமன்று ஞானபுத்திரா ! இதனை ப்பற்றி யாக்தெளிவாகக் கூறுது மதனைக்கேளுநி, எ - று. காண், அஞ்சநிலை.

பிராந்தி, ஒன்றையொன்றுகக்கொண்டு பிதற்றும்வசனம். ஆட்டுவிப் பானையன்றி யாடுவார்க்கென்னசுதந்தரமுண்டென்பார்போலச் சீவர்களை ன்செய்வாரவர்கள்மேற் பிழைசொலும்வகையேதோவெனவும், உயிருமுட லுங்கூட்டலும்பிரித்தலுஞ் சிவத்தொழிலன்றே இரண்டுங்கூட்டியவிடத்தி யங்குமியக்கமுஞ் சிவத்தொழிலாமா ஆகாதேயெனமறுத்தென்னில், ஒரு வன் தன்மண்பெண்பொன்னைப் பிறனபகரிக்கி லிவன்சம்மதியான் பிறர் பொருளையிவன்கவர்தற்குச் சம்மதிப்பதென்னை இதுஞாயமாவெனவிவனைக் கேட்கில் நானென்செய்வன் சிவனிப்படிக்குப்புத்திகொடுத்தானென்பன் அவனுமங்ஙனஞ்சொல்வானன்றே? அதற்குமறுமொழியென்னையுள, ஆதலி னிவையெல்லாஞ்சிவன்செயலேயன்று சீவன்செயலேயென்பதை மறந்தவர் பேசுமொழியென்பார், சுருதிநூற்பொருண்மார்க்க மறந்தமூடர்கள்வசனி க்கும் பிராந்திகாணெனவுங்கூறினர்.

(க - து.) அனைத்துஞ்சிவன்செயலன்றென்பது. (நிச)

நிநி - கவி. அ - கை.

[முன்கவியிலனைத்துமீசச்செயலன்றெனவே சிவச்செயலென்ப தாயிற்று அப்பேதங்களையிக்கவியிற்கூறுகின்றார்.]

திகழ்ந்த வீசனர் சிருட்டியுஞ் சீவனர் சிருட்டியும் வெவ்வே றே சகந்த னிற்பொது வீசனர் சிருட்டிகள் சராசரப் பொருளெல் லா மகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளாசைக ளினைவையெல் லா நிகழ்ந்த சீவனர் சிருட்டிக ளாகுங்கா ணிமலர்னர்செயலன் றே.

(இ - ள்.) திகழ்ந்தவீசனர்சிருஷ்டியுஞ் சீவனர்சிருஷ்டியும்வெவ்வே றே, எ-து. எங்குந்தாணுவிளங்குமீசசிருட்டியும் சீவசிருட்டியுமனுபவமாயிரு க்க வீசனதென்பதுகூடாது, வெவ்வேறும்:—சகந்தனிற்பொதுவீசனர்சிரு ட்டிகள் சராசரப்பொருளெல்லாம், எ-து.(எங்ஙனமெனில்) உலகத்திற்பொ துவாகிற்பன ஸ்ஸ்வரசிருஷ்டிகள். அனைசராசரமாகின்றுள்ளபொருள்க ளனைத்தும். இது சீவச்செயலன்று:—அகந்தையாமபிமானங்களீகோபங்க

ளாசைகளினைவையெல்லா நிகழ்த்தசீவனுர்சிருட்டிகளாகுங்கா ணிமலனுர்செ யலன்றே, *எ-து. உலகத்தில் மிகவுக் தம்மைமறந்து தமதிட்டப்படிநிகழ் வன, சீவசிருஷ்டிகள். அவை; அகந்தையாகிய வபிமானங்களும் கோப ங்களும் ஆசைகளும் இவைபோல்வனபிறவுமாம். இஃதுநின்மலமான வீச ச்செயலன்று. ஆதலின் சிருஷ்டி யிருவகையாகும், எ - று.

சகத்தையிருவழியுமொட்டுக. பொதுவென்றதனுற்சிறப்பெனவும், நிம லனுர்செயலன்றே யென்பதனுல், சீவர்னுர்செயலன்றேயெனவும் வருவித் தாம். சீவனுரீசனுரினவை மருஉமொழி. பொது; தனுகரணபுவனங்கள். சிற ப்பு, போகம். போகமென்பது, இன்பதுன்பங்களை. போகநுகர்தலுக்குத் தனுகரணபுவனமின்றேற்கூடாது. ஆதலினிம்மூன்றையும்பொதுவெனவும், தத்தமுயல்வாலன்றிப்போகமெய்தாது, ஆதலிற்போகமொன்றையுஞ்சிறப் பெனவுங்கண்டாம். சராசரமென்பன, இங்கேயுடல்களை. சீவனெனின், சிருஷ்டிபேதம்பிரிப்பானேன்? சராசரந்தனுவாகுழி, பொருளெல்லாமென லேனைய கரணபுவனமென்றுரையிற்று. புவனமென்றது, பூமிமாத்திரமன்று. சகலவண்டாண்டகோடிகளையும், கயிலாயமுதலியபதவிகளையு மெனக்கொ ள்க. இதுபற்றிச் சராசரமும் ஏனையபொருளிடங்காலமுமென வும்மைத் தொகையாக்காது, சராசரமாகியபொருளெல்லாமெனப் பண்புத்தொகை யாக்கின் முரணும்.

(க - து.) செய்கைபேதத்தாற் சிருஷ்பேதந்தெரிவித்தனனென்பது. அச்செயலாலாயவை, சராசரப்பொருளெல்லாம். இச்செயலாலாயவை, அகந்தையபிமானமுதலியன. (நஎ)

நுசூ - கவி. அ - கை.

[சராசரமுதலியனமுத்திசாதனமெனவும், அபிமானமுதலியன பந்தசாதனமெனவும், சராசரமாதிரசிக்கிற பிறவிரசியாவெ னவும், அபிமானமாதிரசிக்கிற் பிறவிரசிக்குமெனவு மிக்கவி யிற் கூறுகின்றுர்.]

மூவ ராம்பரன் சிருட்டிக ளுயிர்க்கெலா முத்திசா தனமாகுஞ் சீவனுரது சிருட்டிக டங்களைச் செனிப்பிக்கும் பிணியாகுந் தாவ ராதிக ணைசித்திடு லொருவர்க்குஞ் சாருங்கணசியாவர்ங் கோப மாதிக ணைசித்திடிற் பந்தமாங் கொடும்பிற விகள்போ மே.

(இ - ள்.) மூவராம்பரன்சிருட்டிக ளுயிர்க்கெலாமுத்திசாதனமாகும், எ - து. மும்மூர்த்திகோலமாநின்றுள்ள வீஸ்வரசிருஷ்டியாலாயவை யெல் லாவுயிர்களுக்கு முத்திசாதனமாயிருக்கும்:—சீவனுரது சிருட்டிகடங்க ளைச்செனிப்பிக்கும்பிணியாகும், எ-து. சீவசிருஷ்டியாலாயவை தங்களைச் செனிப்பிக்கத்தக்க வியாதியாநிற்றலி னிவைபந்தசாதனமாயிருக்கும்:—

தாவராதிகணசித்திடி லொருவர்க்குஞ்சன்னங்கணசியாவாம், எ-து. விருட்சமுதலியசராசரப்பொருள்கணசித்திடில் யாதோருயிர்க்குஞ்சென்னங்கணசிக்கமாட்டாவாம்:—கோபமாதிகணசித்திடிற் பந்தமாங்கொடும்பிறவிகள்போமே, எ - து. கோபமுதலியவை நாசமாகுமாயின் பந்தமாகின்றுள்ள கொடியபிறவிகணாசமாம், எ - று.

சிருட்டியாலாயவைகளைச் சிருட்டிகளென்றது, தொழிலாகுபெயர். ஈசகாரியம், தாவராதிகள். சீவகாரியம், கோபமாதிகள். முத்திசாதனம், இருக்கினுமழியினும், கோபமாதிகணசியாவிடத்தென்பயன். எனவே, ஈசன்மேற்பழியின்றென்பதாயிற்று. தாவராதிகள்பெரும்பாலும் பந்தசாதனமாயிருக்க, முத்திசாதனமென்றது; தவம்புரிவோர்க்குணவுக்கிலகாய்கனிகிழங்குகளும் தங்கற்குவனம் குகையாதி யியைந்தவிடமும் தாகந்தணிதற்குச்சுனையாதிநீருமாயிருத்தல்பற்றி. கோபம் கௌதமரிடத்தும், காமம் கிஷ்ட்ணபகவானிடத்தும், இருந்தும் கொடும்பிறவிபோய தென்றதென்னை? துஷ்டநிக்கிரகத்திற்கும் முன்னர்கூறிவந்த வேற்பாட்டிற்கும் எழுந்தசேயன்றித் தம்பொருட்டாகவன்று. குணமென்னுங்குன்றேறிநின்றூர் வெகுளிகணமேயுங்காத்தலரிதெனவும், நித்தியபிரமசாரியெனவும் வழங்குவதற்றிற்கு.

(க - து.) பிறவிக்கிடம், பந்தம். பந்தத்திற்கிடம், காமவெகுளிமயக்கம். இவற்றிற்கிடம் சீவச்செயலென்பது. இவ்வடக்குநூலின், பிறவிநசிக்கும். காமாதிமூன்றுமீசச்செயலாயின், தாவராதிகள்சீவச்செலென்பம். அன்றேல், சொன்னவாறுகேளுதி. (நசு)

நிள - கவி. அ - கை.

[காமாதிகள்சீவச்செயலன்றி யீஸ்வரச்செயலன்றென விக்கவியிற்கூறுகின்றூர்.]

ஈசர் காரியம் பிரளயத் தொழியவு மெவர்பவ மொழிந்தார் க
டேச காலதே காதிக ளிருக்கவுஞ் சீவகா ரியமோக
காச மாகியவ் விவேகத்தி னுயிரொடு ஞானமுத் தர்களா னூர்
பாச மோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செயலன் றே.

(இ - ள்.) ஈசகாரியம்பிரளயத்தொழியவு மெவர்பவமொழிந்தார்கள், எ - து. ஈஸ்வரசிருஷ்டியாலாய பூதபௌதிகாரியங்கள் பிரளயகாலத் தொழிந்தும் பவமொழிந்தவரெவர் .கண்டிலமே:—தேசகாலதேகாதிகளிருக்கவுஞ் சீவகாரியமோகாகர்சமாகி யவ்விவேகத்தினுயிரொடு ஞானமுத்தர்களானூர், எ - து. தேசமும் காலமும் தேகாதிவஸ்துக்களும் சிறிதுமழியாமலிருக்கவும் சீவசிருஷ்டியாலாய மோகாதிகாரியங்கள் மயமாகாதுவிவேகத்தாஞசமூற்றுயிரிருக்கவும் அவ்விவேகங்காரணமாக வைக்கியமுக்கியடைந்தனர்:—பாசமோகங்கள்பசுக்களின்செயலன்றிப் பசுபதிசெயல

னறே, எ - து. பாசத்துக்கிணையத்தமோகாதிகாரியங்கள் சிவசிருஷ்டியாலா யதன்றி யீஸ்வரசிருஷ்டியாலாயதன்று, எ - று.

சிவன்காரியம் சிவகாரியமென்றூற்போல. ஈசன்காரியம் ஈசகாரிய மென்பதில்வழுவென்னை. ஈசகாரியமிருக்கவு மெவர்பவமொழிந்தார்களெ னப் பொருட்டா ஒழியவுமென்றூர். ஒழியவுமென்பதிலுள்ளவும்மை, இறந் ததுதழீஇயது. இதுசாத்தனும்வந்தானென்பதுபோலும். இருக்கவுஞான மூத்தர்களாலுமொன்பதனால் இருக்கவுமென்ப திருமுகத்ததாகும். ஆதலின் இஃதரிமாநோக்கெனப்படும். இதுபற்றியிம்மொழியையிரட்டித்துக்கூ-றூ தொழிந்தனர். பாசமோகங்கள் இரண்டாம்வேற்றுமையுருபும்புயலுந் தொ க்கதெனினுமமையும். பாசத்துக்கிடமாதலின் பாசமோகங்களெனவும், பசு வுக்குப்பதியாதலின், பசுபதியெலாவுங்கூறினர். பசு உயிர். ஞானமுதிர்ச்சி க்கு, ஞானமுத்தனெனினுமமையும்.

(க - து.) காமாதிகள்வினை வீசச்செயலாலன் றென்பது. பந்தமுமுத்தி யும்; காமாதிகள்வினைவிளையும், ஒழிவிளையுமெய்துமென்றுயிற்று. இவ்விரு முயற்சியு மீசனதன்றென்க. காமாதிகள்வினையே, பந்தம். பந்தவினையே, பிறவி. காமாதிகளொழிவே, பந்தநாசம். பந்தநாசமே, பிறவிநாசம். இஃ தெவர்முயற்சி. (நிஎ)

நிஅ - கவி. அ - கை.

[சிவேசநிலைமையித்தகையதென்றுணர்த்த உவமைபாலிக் கவியிற்கூறுகின்றூர்.]

அச்சு வத்தமென் றெருமர மதிலிரண் டருமபற வைகள்வா ழு நச்சு மங்கொரு பறவையம் மரக்கனி நன்றுநன் றெனத்தின் னு மெச்சு மங்கொரு பறவதின் னுதென வியங்கியப் பொருளா க வைச்சு மாமறை சிவனை யீசனை வகுத்தவா றறிவா யே.

(இ - ள்.) அச்சுவத்தமென்றெரு மரமதிலிரண் டரும்பறவைகள்வா ழும், எ-து, அரசெனப்பெயருள்ளவிருட்சமொன்றுள தது, அவ்விருட்சத்தில், அரியபட்சிகளிரண்டுவாழாநிற்கும்:—நச்சுமங்கொரு பறவையம்மரக்கனி நன்றுநன்றெனத்தின்னும், எ-து. யாவராலும்விரும்பத்தக்க வங்குள்ளபற வைகளிலொன்று, அம்மரக்கனிகளைக்கண்டுகொத்திக்கொத்தி நன்றுயிருக் கின்றதுநன்றுயிருக்கின்ற தெனத்தின்றுநிற்கும்:—மெச்சுமங்கொருபறவை தின்னுதென வியங்கியப்பொருளாகவைச்சு, எ - து. யாவராலுந்துதிக்கப் பெற்றவங்குள்ளமற்றேர்பட்சி யதனினைத்தின்னுதென்றுபெருமைதந்து அந்தப்பட்சிகளைக்குறிப்பொருளாகவைத்து:—மாமறைசிவனையீசனைவகுத்த வாறறிவாயே, எ - து. மகத்தானவேதங்கள் சிவனையுமீசனையும்வகுத்துக் கூ றியமுறைமையையறிந்துகொள்ளுதி, எ - று.

அச்சுவத்தம், தலைகீழதாவுள்ளமாயாவிருட்சம். எனவே, எமதறியாமை யென்றுயிற்று. ஆகவே, சிவேஸ்வரர்கள் கற்பிதமெனக்கொண்டாம். கொள்ளவே, கனிகள்விடயமெனவு மவற்றைநுகர்வதுசிவனெனவும், தின்னுத தீசனெனவும்பெற்றும். இங்ஙனம்வருத்ததுயாமன்றென்பார், மாமறைவருத்தவாறறிவாயே யென்றார். இங்கே யறியாமையி லறிவறியாமை. இவ்விருவருந் தன்னைத்தானறியாராதலினிவரறிவு, அறியாமை யென்னப்படும். ஆதலினிதனை மாயாவிருட்சமெனவும், தன்னைத்தானறியாத கடுந்துறவி போறலி னீசனையறிவெனவும், கடுந்துறவியல்லார்போறலிற் சிவனையறியா னிம்மையெனவும், இவ்வேதுபற்றி யம்மரக்கனியைத் தின்னுமெனவுந் தின்னுதெனவும், இவ்வறிவறியாமை மூடத்திலாதலி னிம்மூடஞ் சத்தன்முமையாம், இவ்வசத்தில் பரஞானமபரஞானமாகவும், அபரஞானம்பரஞானமாகம்,மாறிக்காண்டலானும், அச்சுவத்தமென்றது; தலைகீழதானவிருட்சமெனவும், இதுமாயையெனவுங் கூறியவாறுகாண்க. அனிர்தசடதுக்கத்தைச் சச்சிதானந்தமெனக்காண்டல் மாறுயவுணர்வாதலினிதனைத் தலைகீழதெனவும், சுயம்பல்லாததைச் சுயம்பெனக்கோடல் தேகாதிகளையாதலி னிதுவுந்தலைகீழதெனவும், நிரவயவமானதன்னைச் சாவயவமாகக்காண்டலும், அவஸ்தாரகிதமானதன்னை யவஸ்தாமயமாகக்காண்டலும், காரணகாரியரகிதமானதன்னைக் காரணகாரியமாகக்காண்டலும், தந்தையாதியகற்பனையிறந்ததன்னைத் தந்தையாதியாகக்காண்டலுமாகிய விவையனைத்துந் தலைகீழதெனவும், பிறப்பிறப்பற்றதன்னைப் பிறப்பிறப்புடையதாகக்கோடல் தலைகீழதெனவுங் கொள்ளினுமமையும். இன்னுமிவைபோல்வன பிறவுங்கொள்க. இன்னுழீனாக்கிற்பெருகும். என்னை, "சொற்றவற்றியலான்மற்றையபிறவுந், தெற்றெனவுணர்தல் தெள்ளியோர்கடனே" யென்றார் சான்றோர். ஆதலின் தலைகீழதான மாயாவிருட்சமென்பது தடையின்றியமையும்.

(க-து.) சமஸ்தமுமித்தையெனக்காட்டியதில் சிவேஸ்வர தாரதம்மியமினையவெனவுணர்த்தியதென்பது. அறிவையன்றிச் சிவேசரின்மையாலும், அவ்வறிவுபொருளாளவற்றைப் பொருளாயறிவதாலும், இவ்வறிவைவிதான மெனல்கூடாமையாலும் தலைகீழதான மரமாகவுவமித்ததிலென்பிழை. மறுப்பார்த்தன்னறிவைச்சத்றுஞ் சோதித்தறியார்போலும். தத்தெரிசனத்தாலன்றிக் கல்விஞானம் திரிகாலஞானமுதலியவற்றுளிமிராஞானமாதலி னிதனை யச்சுவத்தமென்றதை மூடத்தால் மறுக்கிலென்பயன். (நிஅ)

நிகூ - கவி. அ - கை.

[காமாதிசேட்டைகள் தம்மால்வினைந்ததெனக்கண்டார், அவற்றையங்ஙனேகளைய்த்துணிவர். சகலல்வினைந்ததெனக் கொண்டார், கலாதற்குச்சற்றுமெண்ணமுறு மென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

இந்தச் சிவனுல் வருமறு பகையெலா மிவன்செய லல்லா ம
லந்தத் தேவனுல் வருமென்ற மூடர்க ளதோகதி யடைவார் க

ளிந்தச் சீவனுல் வருமறு பகையெலா மிவன்செய லல்லா ம லந்தத் தேவனு லன்றெனும் விவேகியே யமலவீ டடைவாரோ.

(இ - ள்.) இந்தச்சீவனுல் வருமறுபகையெலா மிவன்செயலல்லாமல், எ-து. இந்தச்சீவனுல்விளையுங் காமக்குரோதாதிபகையனைத்து மிவன்செயலா லுண்டாயினவென் றுணரவேண்டுவதன்றி:—அந்தத்தேவ னுல்வருமென்ற மூடர்களதோகதியடைவார்கள், எ - து. அந்தத்தேவனுல் விளையுமென்ற மூடர்கள் நரகமேயடைவார்கள்:—இந்தச்சீவனுல் வருமறு பகையெலா மிவன்செயலல்லாமல், எ - து. இந்தச்சீவனுல்விளையுங்காமக் குரோதாதிபகைகளனைத்து மிவன்செயலா லுண்டாயினவென் றுணரவே ண்டுவதன்றி:—அந்தத்தேவனுலன்றெனும்விவேகியே யமலவீடடைவாரோ, எ-து. அந்தத்தேவனுல்விளைந்ததன்றென வுணர்த்தும்விவேகியொவரோ வவரோனின்மலமுத்தியையடைவார், எ-று.

அணிமைபற்றி யிந்தச்சீவனுலெனவும், சேய்மைபற்றி யந்தத்தேவனு லெனவுங்கூறியதென்க. அணிமைசேய்மை; காமாதிகள் தனதுவிகற்பபுத்தி யேயெனக் களைதல்காறு நீங்காமையல். அறுபகை; காமக், குரோத, லோப, மோக, மத, மாச்சரியமென்பன. இவற்றைப்பகையென்றதுவமையாகு பெயர். அதோகதி; எவற்றினுங்கீழாயகதி. அதாவது; தேவகதி, மனுடகதி, விலங்கின்கதி, நரககதியென்பவற்றுள் நரககதி. விவேகியேயென்பதிலேகா ரம் பிரிநிலை. ''திரிவிதவுலகத்தரிதொருஞானி'' யென்றலினருமைபற்றி விவேகியேயென் றொருருமையாக்கியதென்க. அறுபகையுந்தமதுவிளைவென் பார், அவற்றைநசிக்கத்துணிவர். அவன்விளைவென்பார், அவற்றவிடுதை மாகக்கொள்வர். இவனைமூடனென்பதும், அவனைவிவேகியென்பதும் குற் றமோ? குற்றமெனின், அவர்கட்குமதுசலனமும் இவர்கட்கின்மையும்வ ரற்கிடமென்னை, ஆதலிற்பொருந்தாது.

(க-து.) காமக்குரோதாதிவிளைவு தமதுசெயலாலெனக்கண்டார் விடு வனென்பது. இவன்செயலென்றுமலெனப்பாடமுமிருக்கின்றது. இவன் செயலாலாயதென்றுமலெனப்பொருள்படும், இதுவுங்கூடும். காமக்குரோ தாதிவினையையும், அவற்றுலாயவின்பதுன்பத்தாக்கையு மீசச்செயலென்று தாசொங்கணுமரியர். இதுபற்றிவனையறுத்ததென்க. இம்மூடபாத்திரர் மதத் தர். அல்லாதாரத்துவிதிகள். அவர்களயலாரானென்போர். இவர்களறிவை நானென்போர். ஆதலினவனைமூடனெனவும், இவனைவிவேகியெனவுங் கூறப்பட்டது. அயற்கோடற்பாலதன்றுமையின், நானெனலறிவென்றும். அல்லவென்பார் மூடனெனற்குரியர். இவர்வாதமே மாயாவாதமெனப்படு வது. இதுதன்பாலதெனச்சற்றுந் தெரியாதயலார்மேலேற்றினரோ. இவ னாமிருகமென்றது பிறப்பால் மனிதனென்பதிலெனச்சிறப்பு. மூன்கவியிற் சீவனென்போரிவனெனத் தெரிவித்தற்கிக்கவயிலிங்ஙனங்கூறியதென்க. இவ ர்களே நாஸ்திகாஸ்திகரென்பவரும், யுத்திக்கொவ்வாதுகூறும் வேதாந்தி யருமென்பதிற் சிறிதுமையுங்கோடற்க. (நகூ)

சுo - கவி. அ - கை.

[ஈஸ்வரசிருஷ்டிபொதுவெனல் முரணுவதென்னெனயென்றதற்கு விடையிக்கவியிற்கூறுகின்றார்.]

கலமெய் யையனே யெல்லவர்க் குந்தெய்வ காயகன் பொதுவா னற், சிலனை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதே னென் றியேற், குலவு மைந்தனைத் தந்தைபோற் சிட்டனைக் குளிர்ந்து துட் டனைக்காய் வன், கலைக ணல்வழி வரச்செய்யுந் தண்டமுங் கருணையென் றறிவா யே.

(இ-ள்.) கலமெய்யையனே யெல்லவர்க்குந் தெய்வநாயகன்பொதுவானல், எ-து. நன்மையேமெய்வழிவாயமைந்தகர்த்தனே! யாவருக்குமீஸ்வரன்பொதுவாயிருப்பனெயின்:—சிலனைவாழ்வித்தல் சிலரொடுகோபித்தல் செய்வதேனென்றியேல், எ - து. சிலனைவாழ்வித்தலும் சிலனைக்கோபித்தலுஞ் செய்வதற்றிற்கெனக்கேட்பையாயின் :—குலவுமைந்தனைத்தந்தை போற் சிட்டனைக்குளிர்ந்து துட்டனைக்காய்வன், எ - து. குலவிக்கொண்டிருக்கும் புத்திரனைத் தகப்பனெப்படிநேசிப்பதுங் கோபிப்பதுமோ அதுபோலச் சிவன் சிட்டபரிபாலனமுந் துட்டநிக்கிரகமுஞ்செய்வன்:—கலைகணல்வழிவரச்செய்யுந் தண்டமுங்கருணையென்றறிவாயே, எ - து. தண்பமுறத்தண்டித்தலும்; வேதாகமசன்மார்க்கநெறியில் வரும்படிசெய்யுங்கிருபையென்றறிதி, எ-று.

சிட்டனைக்குளிர்ந்துதுட்டனைக்காய்வனென்பது; சிட்டனைநேசித்துத் துட்டனைவெறுப்பனென வுனைகொளற்கியையும். தண்டித்தலுங்கருணையென்றதனால் பகையாகவன்றென்பதாயிற்று.

(க-து.) ஈசன், எவர்பாலுமிரக்கமுடையனென்பது. இதனால்பட்சபாதனல்லனெனப்பெற்றும். நீதிவான்தண்டித்தல் ஒழுக்கநெறிசேறற்கு. இதுபோலுமெனின், யாதோர்காரணமாகவேனு நடுநிலைமைச்சற்றுமழுவினுமழுவுமெனத் தந்தையையுபமானித்தார். (சுo)

சுக - கவி. அ - கை.

[இன்னுமவர்பட்சபாதரல்லரெனலை வற்புறுத்தவிக்கவியிலு முபமானபூர்வமாகக்கூறுகின்றார்.]

மனைவி லங்கறு மைந்தனே கற்பக மரங்கனல் புனன்மூன் றுந், தனைய டைந்தவர் வறுமையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த்தாரு, மனைய வீசனு மடைந்தவர்க் கருள்செய்வா னகன்றவர்க் கருள் செய் யாரு, னினைய குற்றங்க ளெவற்குற்ற மாகுமென் றெண்ணினீ யறிவா யே.

(இ - ள்.) மனவிலங்கறுமைந்தனே கற்பகமரங்கனல்புனல்மூன்றும், எ-து. குடும்பவிலங்கைத் தறித்தெறிந்தஞானபுத்திரா ! கற்பகவிருட்சமும் அக்கினியும் சலமுமாகியவிவைமூன்றும்:—தனையடைந்தவர்வறுமையுஞ்சீதமும் தாகமுந்தவிர்த்தாலும், எ-து. தன்னையடைந்தவொவோரவரது, தாரித்திரியத்தையும் குளிரையும் தாகத்தையுங்கிரீயிரட்சிக்கும்:அனையவீசனும்டைந்தவர்க்கருள்செய்வா னகன்றவர்க்கருள்செய்யான், எ - து. அத்தகையதாகவீசனுந் தன்னையடைந்தவர்களுக்கனுக்கிரகிப்பன் அடையாதவர்களுக்கனுக்கிரகிக்கான்:—இனையகுற்றங்க ளெவர்குற்றமாகுமென்றெண்ணினீயறிவாயே, எ - து. இப்படிப்பட்டகுற்றங்க ளெவர்குற்றங்களாகுமென்று நீ சிந்தித்துத்தெரிந்துகொள்ளுதி, எ-று.

கற்பகமாதிமூன்றும் வறுமையாதிமூன்றும் நேர்நிரணிறை. இவ்வுவமையேற்பதற் கையஞ்சிறிதுமின்றெனக்கொள்க. மூன்றுமென்பது; தொகையொருமையாதலின் தனையடைந்தவொன்றேருமையிற்கூறினர். பாரபட்சனல்லனெனக்குறிக்க அனையவீசனென்றார். இவ்வளவுதெரியாதாரவரிஷ்டமென்பர். இவர்கள்குருத்தன மையமகலாமைக்கிடமாம். எங்ஙனமெனில், சீவர்களென்செய்வ ரவர்கள்மேற்பிழையேதோவென்பதையும், ஈசன்பாரபட்சமுடையனென்பதையும், அல்லனென மூரணின்றிக்கூறவகையின்மையையும், அவனைவெறுத்துக்கொள்ளுதற்கிடமாமென்பதையும் வற்புறுத்துகின்றது. இனியங்ஙனமாகாமல் விதிவிலக்கியற்றினரெனில், இப்போதவரிஷ்டமெனவந்ததற் கேதென்னையோ இனியுமவரிஷ்டப்படி நடத்துவனெனத் தானேபொருள்படுகின்றதே, ஆதலின்விதிவிலக்காலென்பயன். இனி விதிவிலக்காற்பயனுளதெனின், அப்போதெந்தசென்மத்திற்செய்த விதிவிலக்காற்சிலரின்பமும் சிலர்துன்பமு மனுபவித்துக்கொண்டிருக்கின்றனர், இதுவகையறுதலோ தஃதெங்ஙனம்வகையறும். இவையெல்லாஞ் சந்தேகவிபரீதமறுதலேற்பாடாம், இதுநிற்க.

(க-து.) சற்கருமங்காரணமாகவின்பத்தையும் துற்கருமங்காரணமாகத் துன்பத்தையுந்தருபவனீசனென்பது. இஃதறிதொட்டெனவறிக. அறிதியிற்சீவர்கள் கன்மம்புரிவானேனெனின், இப்போதுபுரிவானேன். இனிவரும்பயனுக்கெனின், இப்போதுவந்தபயனுக்கெப்போதுசெய்தது. அவரிஷ்டமெனின், கூறியதுகூறலாற் கூடாது. முன்பின்முரணுறுதுகூறவகையறியாதாரத்துவிதிமுன் னென்செய்வர், இவணாகண்ணற்க. (கூக)

கூஉ - கவி, அ - கை.

[ஐயனே விடாதுயிர்களியற்றுமிருவினைக்கீடாக வின்பதுன்பங்
கனியீசன்தருவனெனி னிதற்குமுடிவுதானின்றேலெனின்,
உண்டெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

ஒன்று கெண்மக னேடுமான் முயற்சியா லுனைத்துமா னிடர்க்கீச, னன்று செய்யவே காட்டிய நூல்வழி நடந்துநல் லவர்பின்னே,

சென்று துட்டவா தனைவிட்டு விவேகராய்ச் சென்றமாயையைத் தள்ளி, நின்று ஞானத்தை யடைந்தவர் பவங்கள்போ நிச்சய மிது தானே.

(இ-ள்.) ஒன்றுகேண்மகனேபுமான்முயற்சியா லுனைத்துமானிடர்க்கீ சன், எ - து. அங்ஙனமாயின் ஞானபுத்திரா ! யான்கூறவேண்டுவதுறுதி மொழியொன்றுள ததனைக்கேளுநி. அதாவது ; புருடப்பிரயத்தனத்தினுல ன்றி வேறொன்றுலாகாதெனமுன்னர்கூறிப் பின்னரீசன்மனிதர்களுக்கு:— நன்றுசெய்யவேகாட்டியநூல்வழி நடந்துநல்லவர்பின்னேசென்று, எ - து. மிக்கவுபகாரஞ்செய்யு நிமித்தமாகவே யேற்படுத்திக்காட்டியவேதாகமநூல் கள்கூறும் விதிவழியேதவறுதுநடந்து சற்சனரைவிடாதவர்பின்சென்று:— துட்டவாதனைவிட்டுவிவேகராய்ச் சென்றமாயையைத்தள்ளிநின்று,எ-து. துட்டசேட்டைகளையும் அதுகாரணமாகப்பற்றுந் துட்டவாதனைகளையு மொ ருங்கேயொழித்துவிட்டு விவேகபாத்திரராய் முன்னர்புத்திவிகற்பத்தாற் றமதிடத்திற்சென்ற பிராந்திரூபமானமாயையென்பதைத் தள்ளவேண்டி யவாறுதள்ளி யனஞ்செல்லுழிச்செல்லாதுநின்று:—ஞானத்தை யடைந்த வர்பவங்கள்போ நிச்சயமிதுதானே, எ-து.ஞானமினையதென வுணரவேண் டியவாறுணர்ந் ததனைத்தானுகவனுட்டித்தடைந்தவர்களெவர்களோ வவர் கள்பவத்துக்கேதுவானசஞ்சிதவினைகளனைத்து மொருங்கேயொழிந்துபோம் இதிலையமென்னை இன்றுதலானி துவேநிச்சயமாம், எ-று.

விவேகியாயெனினுமமையும், ஆயினிதுபலர்பாலெத்தராமைபற்றி விவே காயென்றும். நடக்குதலும் செல்லுதலும் விடுதலும் விவேகராதலும் தள் ளுதலும் அடைதலும் புருடப்பிரயத்தனமன்றிக் கூடாமையின், புமான்முய ற்சியாலெனவும், வினையவுயிர்கட்கன்றென்பார் மானிடர்க்கெனவும், வினைய வுயிரையொழித்தது; பெரும்பாலுந் தேவர்புண்ணியகன்மத்தராதலின் சுக த்துக்கீடாயபோகத்துக்கேயுரியர். மிருகாதியைவகைத்தோற்றவுயிர் பாபக ன்மத்தராதலின் துக்கத்துக்கீடாயபோகத்துக்கேயுரியரா தலினென்க. மனி தர் மிசிரகன்மத்தராதலினிவ்விரண்டிற்கீடாய போகத்துக்கேயுரியராதலைப் பற்றியும், சுகதுக்கநிலையைக்கலந்தனுபவித்தலி னிவர்களந்நிலையைக்கணித் தொழிப்பதென்பதுபற்றியும், இவரொழித்தற்கியைந்தவராதலின் ஞானமெ ய்துவதென்பதுபற்றியுந் தெரிந்தவனீசனுதலி னீசனுனைத்தெனவுங்கூறினர். முத்தியெய்தற்பாலரிவராதலி னிவர்கட்கே நன்றுசெய்யவேகாட்டியநூலெ னத்தகும். பொதுப்படமானிடரென்னிலும், சாத்துவிதகுணமிக்கானையென க்கொள்க. ஏனையகுணமானிடரை மத்திமவதமத்திற்கூட்டுக. நூல்வழிநடப் பதினல் விதிவிலக்குக்குக்கட்டுபடுதலும், நல்லவர்பின்னேசெல்லுதலா லவ ரதுநல்லொழுக்கம்படிதலும், ஞானத்தையடைதலால் தானன்னியமாகாது ஞானமாய்விளங்கலுமாம். இது கிருதகிருத்தியமாதலா லெனிப்புண்ணியபாவ வினைக் கிடமின்றெனவுணர்க.

(க-து.) ஞானகாரமேசங்கற்பநாசமெனவும், சங்கற்பநாசமேயிருவினை நாசமெனவும, இருவினைநாசமேபுண்ணியபாவநாசமெனவும், புண்ணியபாவ நாசமே சுகதுக்கநாசமெனவுங் குறிபபிற் றெளிவித்தாரென்பது. இதுசீவன் வினைபுரிதற்கும், ஈசனிதற்கியைந்தபலன்தருதற்கும், ஞானகாரமுடிவாதலா லிதுமுடிவிடங்கூறலென்னுமுத்தி. பொதுவாகஞானத்தை யிங்கேசொல்லி யினியிதனையேசொல்லப்புகுதலால் இதலிப்புகுதலென்னுமுத்தி. பவமகற் றத்தக்கதஞானமெனவே, பொருளைப்பொருளாகக்கொள்ளுமெய்யுணர்வெ ன்பதாயிற்று. இதுபரிச்சின்னதோடமற்றது. (சூஉ)

சூசு - கவி. அ - கை.

[இத்தஞானமுதிக்குமாறெங்ஙனமென்றவினாவிற்கு விடை விசாரத்தாலெனவிக்கவியிற்கூறுகின்றார.]

இந்த ஞானந்தான் வருவதெப் படியெனி னிடைவிடா விசாரத் தால் வந்த டைந்திடும் விசாரந்தா னேதெனின் மனதிபாஞ் சரீரத்தி லிந்த நானெனவன் சித்தெது சடமெது விரண்டுமொன்றுக்கூ டும் பந்த மேதுவீ டேதென வுசாவுதல் பகர்விசா ரமதா மே.

(இ - ள்.) இத்தஞானந்தான்வருவதெப்படியெனி லிடைவிடாவிசாரத் தால்வந்தடைந்திடும், எ-து. இத்தஞானமுதிக்குமாறுதா னெங்ஙனமெனவி னாவில், கணநேரமுமிடைவிடாது விசாரிக்கும்விசாரத்தினல்வந்தடைக் கும்:—விசாரந்தானேதெனின் மனதியாஞ்சரீரத்தில், எ - து. ஆயின்விசார மென்பதுதான்யாதோவெனின், மனமுதலாக நின்றுள்ளதேகங்களிலிருக் கின்ற:—இந்தநானெனவன்சித்தெதுசடமெதுவிரண்டுமொன்றுக்கூடும் பந்த மேதுவீடேதெனவுசாவுதல்பகர்விசாரமதாகும், எ - து. இந்தநானென்பவ னெவன் சித்தெனலுள்சடமெனலும்யாது இவ்விரண்டுமொன்றுகச்சம்பந் தித்த சம்பந்தம்யாது இனிச்சம்பந்தமுறுதற்குவிடுதியாது என்றேயாது விசாரணபண்ணிக்கொண்டிருத்தலே முன்னர்கூறியவிசாரமாவதென்றறி ந்துகொள்ளுதி, எ-று.

மனதியாஞ்சரீரமென்றது; சூட்சுமதூலகாரணமென்றுயிற்று. உசாவு தல்; சான்றோரிடத்திவற்றைவினவிவிசாரித்தலே.

(க - து.) ஞானம்; விசாரத்தாலன்றியெய்தாதென்பது. இங்ஙனமாய விசாரமின்றியெய்த லஃதபரஞானம். இங்ஙனம்விசாரித்தல் விதிவிசாரம். வேனையவிசாரம் பந்தவிசாரம். விசாரமென்றறிவாயேயென்றது பகர்விசார மதாமேயெனப் பாடமோதியதற்றிற்கெனின், மோனைபகரம்போலலிலைய டிபகரம்வரலாகுமியாலென்க. என்னை, "எழுவாயெழுத்தொன்றின்மோனை யிற்றிலை" யென்பதனுற்றாண்க். விசாரமின்னையதெனவுணர்த்தியது. விசார

மதாகுமென்னுது பகொன்றமிகையால், ஐயந்திரிபகற்றத் தக்கோனிடத் தென்றுரையிற்று. (சுங)

சுசு - கவி. அ, - ஈக.

[ஞானத்தைப்புண்ணியபரிபாகந்தராதாவென்ற வினாவிற்கு விடை யிக்கவியிறகூறுகின்றார்.]

போன சன்மங்க டமிலனுட் டித்தாற் புணணிய டரிபா க
ஞான மாக்குமே விசாரமே னென்றிடி னுமுனைத் திடக்கே ளா
யான புண்ணிய மீசுரார்ப பணஞ்செயி னசுசிபோஞ் சுசியா கு
மான தம்பினை விசாரித்து ஞானதனை மருவுமென றறிவா யே.

(இ - ன்.) போனசென்மங்கடமிலனுட்டித்தாற் புணணியபரிபாகம், எ-து. முன்னேனேகசென்மங்களில் யாமனுட்டித்தாலல்லபுணணியபரிபர்கமா னது:—ஞானமாக்குமேவிசாரமேனென்றிடினுமுனைத்திடக்கேளாய், எ-து. ஞானத்தையும்வினவிக்குமேஇங்ஙனமிருக்க,விசாரணைபண்ணுவதெற்றிற்கு விவர்த்தந்தானேயெனக்கேட்பையாயின, மெய்யே யதுபற்றியாமுனைக்க வேண்டுவதான்றுள தெனைக்கேளுதி —ஆனபுண்ணியமீசுரார்ப்பணஞ்செ யினசுசிபோஞ்சுசியாகும், எ-து. அங்ஙனமாயபுண்ணியங்களை யீஸ்வரப்பிரீ தியெய்தா லசுத்தநீங்கும் அசுத்தநீங்கவே சித்தசுத்தியுண்டாகும்:—மான தம்பினைவிசாரித்து ஞானத்தைமருவுமெனறறிவாயே, எ - து. சித்தசுத்தியு ண்டாயபின்ன ரங்ஙனமாயமனமானது தன்னையுள்ளவாறுவிசாரணைசெய் துண்மைஞானத்தைத்தாகவடையுமெனறுணர்தி, எ - று.

இச்சனனமுளதாதலின் போனசென்மங்களுமுண்டு. இச்சனனத்தி லனுட்டிக்கும் புண்ணியர்க ளாங்காங்குள ரதனைக்காண்கின்றோம். இதுபோ ல, முன்னருமுனைகொன்பதற்கையமென்னை. புண்ணியபரிபாகம்; புண்ணிய மேலீட்டாலாயபக்குவத்தை. புண்ணியபரிபாகம்; மேலாயபோகபாக்கியத் தைத்தருவதன்றியு ஞானமுமாக்குமே எனக்கொள்ளவேண்டுவதாதலாவிதி லும்மைதொக்கது. விசாரத்தால்ஞானம்வருமென முன்கவியிற்கூறி யிக்கவி யில்புண்ணியபரிபாக ஞானமாக்குமேயெனக்கூறில், அதுகருவிப்பொருளு மிதுகர்த்தாவுமாகின்றதேயெனில், மெய்யே ஒருபிறிதிஞானமாக்குமேயெ னவும் மற்றோர்பிறிதிஞானமாகுமேயெனவு மிருப்பதற்கென்செய்தும். பு ண்ணியபரிபாகஞானமாகுமேயெனப்பாடமோதி புண்ணியபரிபாகத்தால் ஞானமெய்தலாகுமேயென வெமதாசிரியருரையிட்டன ரதுவேபொருத்து மெனினுமங்ஙனமாக்குக. புண்ணியமீஸ்வரார்ப்பணஞ்செயினெனவே பாவ மன்றென்பதாயிற்று: பாவத்தையெனின், அசுசிபோய்ச்சுசியாகாது. ஆயின் பாவமன்னிப்பென்றதெற்றிற்கு? இடைவிடாதுபாவஞ்செய்தற்கு. அன்றெ ன்மன்னிப்பெற்றிற்கு. தானேவிட்டுவிடலாமே, தன்னாற்றனிதனெனப்பி றர்செய்தற்கோ, பயனென்னை.

(க-து.) புண்ணியபரிபாகத்தால்மனஞ்சுத்தமாம், அந்தச்சுத்தத்தால் விசாரணைக்கிடமாம், அந்தவிசாரணையால்ஞானம்வரும், அந்தஞானத்தால் முத்திகைகூடும், இங்ஙனமிருக்கப் புண்ணியபரிபாகம்ஞானமாகுமேயெனக் கூறலாமா? இதுமுறையன்றென்பது. புண்ணியம்-சற்கருமம். அது, நிகரணமொத்துப்புரிதல். இங்ஙனம்புரிதலிலவிட்டுச்செய்தல, புண்ணியப்போலி. இதனையாவர்மாட்டுங்காணலாம். (சுசு)

சுரு - கவி. அ - கை.

[கருமம் விசாரம் என்பவற்றுள், விசாரம் கருமத்தைப்போல வெல்லாந்தரவலியதா அல்லவே கருமம் ஞானத்தையுந் தராதாவென்றவிணவை யிக்கவியிற்கூறுகின்றார.]

பத்தி யும்வயி ராக்கிய மும்பர லோகமு மணிமா தி
சித்தி யுந்தவ நிட்டையும் யோகமுந் தியானமுஞ் சாரூ ப
முத்தி யுந்தரும விசித்திர கருமங்கண் மோகமாத் திரைதள் ளும்
புத்தி யுந்தர லருமையோ விசாரமேன் புண்ணிய குருமூர்த் தி.

(இ-ள்.) பத்தியும்வயிராக்கியமும்பரலோகமுமணிமாதி சித்தியுந்தவ நிட்டையும், எ - து. சுரபத்தியையும் நிராசையையும் சுவர்க்காதிலோகங்களையும் அணிமாமுதலியவஷ்டமாசித்திகளையும் காமியத்தவத்தையும் நிட்காமியத்தவமாகியநிட்டையினையும்:—யோகமுந்தியானமுஞ் சாரூபமுத்தியுந்தரும்விசித்திரகருமங்கள், எ-து. இருவகையோகங்களையும் மூர்த்தியாதியதியானங்களையும் சாரூபபதமுதலியையும் தரததகுந்தவிணைதகருமங்கள்·—மோகமாத்திரந்தள்ளும் புத்தியுந்தாலருமையோ விசாரமேன்புணணியகுருமூர்த்தி, எ-து. தருமசொரூபியாகிய குருமூர்த்தியே! அஞ்ஞானத்தைமாத்திரத்தள்ளத்தகுந்த ஞானத்தையுந்தருதலவற்றிற்கருமையா? அல்லவே, விசாரமெற்றிற்கு. இதென்னவியப்பு, எ-று.

(க-து.) பத்தியாதிமுத்தியிறுவாக்கிடந்த வொன்பதுபேற்றையுந் தரவலியுள்ளகருமத்துக்கா ஞானத்தைத்தருதற்கு வலிமையில்லை, யிதென்னவியப்பென்பது. விசித்திரகருமங்களெனப்பன்மையாக்கியது ; விணைதவித்தைகளனவின்மையினதுபற்றியென்க. மோகந்தள்ளுமபுத்தியென்றது மாத்திரமென்மிகைபடக்கூறியது, வலியற்றதெனக்காட்டற்கு. இவ்வொன்பதையுந்தரவலியுள்ளகருமம் புத்தியுந்தருமேயெனப்பொருள்படலின், புத்தியுமென்பதிலும்மை யிழிவுசிறப்பாயிற்று. ஏனையவொன்பதுவகையும்மை யெண்ணும்மை. விசாரமினையதெனத்தெரிவித்துங் கண்மவழுத்தம்விடலில்லையே ஏனையொன்பணம்விலேர். சென்மம்பலவேண்டும். விசாரமில்லாவிடத்து முற்றத்துறந்த மெண்பயனென்பதை யிவணறியான்போலும். அறியினுமாசான்மொழியான்றிதலென விணைவியதாக்கலாம். ஆதலினிஃதறிவினை. இதபாரிட்சிப்பதன்றெனினின், தெரியினு மின்னும்விடாதளதோவென்னு

மையத்தாற்கேட்டதாகக் கொள்ளலாகாதோ? ஆதலின் பரிட்சிப்பதற்கன்றென்க. இங்ஙனமாகவரும்விஞவனைத்தும் அறிந்தமறியாவிஞ. (சுருதி)

சுசு - கவி. அ - கை.

[இதுவிசாரத்தாலன்றிக் கருமத்தாலாகுமாவென யுத்தியா லுபமானபூர்வமாக விக்கவியிற்கூறுகின்றூர்.]

வேட மாறிய பேர்களை யறியவே வேண்டினன் மகனே கேள்
கூட மாமவர் சுபாவங்கள் சிலங்கள் குறிகளாய்ந் தறியா ம
லோடி யுங்குதித் துந்தலை கீழ்நின்று முயர்ந்தகம் பத்தே றி
யீடி யும்பல கன்மங்கள் செய்யினு மவருண்மை தெரியா தே.

(இ-ள்.)வேடமாறியபேர்களையறியவேவேண்டினல்மகனேகேள், எ-து. சற்றுமொழிவின்றி வேடத்தால்மாறியபேர்களை யினையரென்றறியவேண்டுதற்கே யெண்ணங்கொண்டு கண்டுபிடிக்கவிருப்பங்கொள்ளில் யாமோர்தந்திரங்கூறுதும்ஞானபுத்திரா ! அதனைக்கேளுதி:— கூடமாமவர்சுபாவங்கள் சிலங்கள் குறிகளாய்ந்தறியாமல், எ - து. இரகசியமாயுள்ளவவர்கள் சுபாவங்களையும் ஒழுக்கங்களையும் குறிகளையும் ஆராய்ந்துணர்வதைவிட்டு:— ஓடியுங் குதித்தும், எ-து. நாளொன்றுக்கேழுரோடியும் மருள்கொண்டார் போலாவேசம்வந்துகுதித்தும்:—தலைகீழ்நின்று முயர்ந்தகம்பத்தேறி யாடியும் பலகன்மங்கள்செய்யினு மவருண்மைதெரியாதே, எ - து. தலைகீழதாகநின்றுதவஞ்செய்தும் மிகவுமுயர்ந்தகம்பத்தின்மேலேறிக்கூத்தாடியும் இன்னுமினைவபோன்றபலவிதோதகன்மங்கள்செய்தாலும் அவ்வேடதாரிகளினைதார்த்தவடிவ மெங்ஙனந்தெரியும் தெரியமாட்டாதே, எ - று.

கூடம் மறைவு. தேசவுளவுகாண வரசனுலேவப்பட்டோனதுமாறுவேடந்தள்ளியவனையினையனெனக்காணப்புகுந்தமற்றொருவனவனேடுகூடியுறவாடிநின்றுபழகி லவனுண்மை வடிவங்கண்டுபிடிக்கலாம். இங்ஙனஞ்செய்தலைவிட்டு, அவனுண்மைவடிவங் காணவேண்டிப் பலவிடத்தோடுதலும் குதித்தலும் தலைகீழதாநிற்றலுமாகிய விவைபோன்ற பலகோரணைகடிப்புகள்செய்யினுங்காணுமா காணுதேயிதுபோலக் கைலாயமுதலியதேசவுளவுகாண வஞ்சனென்னுமரசனுலேவப்பட்டோன்அவனெழுவகைத்தோற்றவேடத்தால் மூடப்பட்டொரேமுங்கரந்துள்ளான், அவனதுமாறுவேடந்தள்ளி யவனையினையனெனக்காணப்புகுந்த விவேகப்போலியென்போனெருவன் பகிர்முகமாகாதாங்காங்குநிந்தைமறந்து சிதறுதேங்காயெடுத்தவனேடு பலகாளிர்விகற்பத்தாற்பழகி லவனுண்மைவடிவங்கண்டுபிடிக்கலாம். இங்ஙனமாயவதிருக்குமவராய்தலைவிட்டு இவனுண்மைவடிவங்காணவேண்டிச் சந்நியாசம்பூண்டுமீண்டுஞ்செல்லாத காளொன்றுக்கேழுர் சுற்றவிளைதவாகவோடியும் பாவசமாகிக்குதித்தும் தலைகீழதாநின்றுரியதவம்புரிந்தும் வடிவேலனேபோன்ற உயர்ந்தகம்பத்தேறியாடியும், இன்னுமினைவபோன்ற அரியபற்பல சற்கருமஞ்செய்தும்பயனென்னை, இன்றுதலாலாராய்தலைதருதி.

ஆராய்தலானேவெளிப்படுத்தும், சீற்கருமங்கள் மனதைப் புனிதமாக்கும். இஃதணைதச்செய்யாது, அஃதிதைதச்செய்யாது. கருமம்புரிவோர்க்காராய்தல் தோடம். ஆராய்தல்செய்வோர்க்குக்கருமந்தோடம். இதுமுறையாதலால் வழுவன்று. ஆராய்தல்செய்வோர்பிறர்க்குபகாரமாகக் கன்மம்புரியினும் புரிவர். கன்மம்புரிவோர்புகழ்வேண்டி யாராய்தல்செய்யினுஞ்செய்வர். உபகாரமும் புகழும் தன்னைவினைக்கற்கன்று. ஓடியும் குதித்தும் தலைகீழ்நின்றும் கம்பத்தேறியும் ஆடியும் பலகருமங்கள்செய்து மவருண்மைதெரியாதெனமுடிக்க. செய்தலென்றதைசசெய்யினுமென்றது காலமயக்கம். ஐந்து வினையுமிறந்தகாலமாயிருக்க வொருவினையெதிர்காலமாதலைப்பற்றியென்க.

(க - து.) ஞானேதையத்துக்குவிசாரமேதக்கதென்பது. இதனினுந்தந்திரம் வேறில்லையென்பதருத்தாபத்தி. (சுசு)

சூள - கவி. அ - கை.

[விசாரமின்றியக்கண்ஞானமெய்தலுந் தன்னைத்தானறிதலுங்கூடாதென்பதையிக்கவியிற்கூறுகின்றார்.]

இன்னவாறந்தப்பிரமத்தை யறிவிக்குமிலக்கணத்தால்வேதஞ்சொன்ன ஞானமும்விசாரத்தால்வருமன்றிச் சுருதிநூல்படித்தாலு, மன்னதானங்கடவங்கண்மந் திரங்களாசாரங்கள் யாகங்க, ளென்ன செய்யினுந் தன்னைத்தானறிகின்ற நிலைகளாலல் வாராதே.

(இ - ள்.) இன்னவாறந்தப்பிரமத்தை யறிவிக்குமிலக்கணத்தால்வேதஞ்சொன்னஞானமும்விசாரத்தால்வருமன்றி, எ-து. இவ்வண்ணமேமயந்தப்பிரமசொரூபத்தை யறிவிக்கத்தக்கவிலக்கணத்தினால் வேதஞ்சொல்லிய ஞானமும் விசாரத்தால்வந்தெய்துவதன்றி:—சுருதிநூல்படித்தாலும் அன்னதானங்கடவங்கள் மந்திரங்களாசாரங்கள் யாகங்களென்னசெய்யினும், எ-து. அன்னதானங்களையும் தவங்களையும் மந்திரங்களையும் ஆசாரங்களையும் யாகங்களையும் இங்ஙனமாகவென்னகிரியைகள் செய்யினும்:— தன்னைத்தானறிகின்றநிலைகளால்வாராதே, எ - து. இக்கிரியைகளால் தன்னைத்தானறியலருமையாகாதே, எ-று.

விசாரத்தினாலன்றிக் கருமத்தினால் ஞானத்தையடையக்கூடாது. கருமத்தினால்ஞானமெய்தலாமெனினிங்ஙனமெய்தினாலொருங்குணங்கண்டலீமை, அடையுமுண்டானாலேற்கப்படும்.

(க - து.) கருமம்சித்தசுத்திமாத்திரத்தாலலியுன்னது, ஞானத்தையுந் தரவல்லதாயின் சுகவாஞ்சிகனென்றிற்கொள்ளது. இதனாலொன்றுமற்றொன்றுசாயப்பயனைத்தாமென்பதுபெறாம். பெற்றே விசாரமேஞானத்துக்கேதுவென்பதாயிற்று. ஆகவே முயற்சிதாரதம்மியமினையுமெனக்கண்

(சுஎ)

சுஅ - கவி. அ - கை.

[கருமமேதக்கதெனவதற்கியைந்த வுபமானபூர்வமாக வுபமேயம் மாணைக்கன்கூறுவதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

துளங்கு தர்ப்பண மழுக்கறக் கைக்கொண்டு துலக்கிறற் போ மன் றி, விளங்கு புத்தியா லுலகிலார் துலக்கினர் விமலதே சிகமூர் த்தி, களங்க மாகுமஞ் ஞானமு மப்படி கருமத்தாற் கழுவாம, லுள ங்கு றித்தஞா னத்தினு லெப்படி யொழியுமீ தருள்வீ ரே.

(இ-ள்.) துளங்குதர்ப்பணமழுக்கறக் கைக்கொண்டு துலக்கிறற்போ மன்றி, எ - து. பிரகாசிக்கின்றசெப்புக்கண்ணழியைக் களிம்பறக்கையினல் துலக்கினற் போகுமேயல்லாமல்:—விளங்குபுத்தியாலுலகிலார் துலக்கினர் விமலதேசிகமூர்த்தி, எ - து. நின்மலமானகுருமூர்த்தியே! துலக்கமாயுள்ள புத்தியினல் துலக்கினவர்களெவர்கள், (அதுபோல):—களங்கமாகுமஞ்ஞா னமு மப்படிகருமத்தாற்கழுவாமல், எ - து. அசுத்தமாயுள்ளவஞ்ஞானத் தையு மவ்வண்ணம் புண்ணியகருமத்தினற்சுத்தஞ்செய்யாமல்:—உளங்குறி த்தஞானத்தினு லெப்படி யொழியுமீதருள்வீரே, எ-து. உள்ளத்தின்கண்ணி னையதெனக்குறித்துக்கொண்ட ஞானத்தினுலெங்ஙனமொழியு மீதென்னை கொலோ விதனையறிந்தில னிதுவிளங்கத்தெரித்தருளும். எ-று.

கையால்துலக்கினலன்றிக் களிம்புநீங்கிச்செம்புக்கண்ணழிவிளக்கமா காது, (அதுபோல). நிரிகரணமுமொத்தச்செய்யும் புண்ணியகருமமேலீட் டாலன்றி யஞ்ஞானநீங்கிஞானம்விளங்காது. இங்ஙனமிருக்க, மனதினிச் சயித்துக்கொண்ட நிச்சியஞானத்தினு லஞ்ஞானமெங்ஙனநீங்கும். ஞான மெங்ஙனங்கைகூடுமென்றுனென்க.

(க்-து.) அஞ்ஞானவொழிவுக்குப் புண்ணியகருமமேதக்கதாகத் தோ ன்றுகின்றதேயென்றுனென்பது. செம்புக்கண்ணழி, பளிங்குக்கண்ணழி யென்றிருபாலது. முன்னர்பெரும்பாலும் பளிங்குக்கண்ணழிவழங்குதலினை மையு மிப்போது செம்புக்கண்ணழிவழங்குதல்சிறிதுமின்மையுமாம். ஆயி னுமிந்நூலாசிரியர்காலத் திவ்விருவகையாடியும், வழங்கியதாகக்காண்கின் றது. இவன்செம்புக்கண்ணழிபூர்வமாகச் சித்தாந்தப்படுத்தலும், அவர் பளிங்குக்கண்ணழி பூர்வமாகச் சித்தாந்தப்படுத்தலுமாயிருத்தலினென்க. ஆயினுமிவன்கருமமேமுக்கியமென்பன், அவர்விசாரமே முக்கியமென்பர். இதுபற்றியினிவருங்கவிகளாற்காணலாம். (கூ)

சுசு - க்வி. அ - கை.

விசாரமேதக்கினிதனக்குறிப்பிக்க வதற்கியைந்தவுபமானபூர்வமாக வாசிரியரதன்மறுப்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

தர்ப்ப ணைத்தினிற் களிம்புவாஸ் தவுமலஞ் சகசமா தலின்ன மைந தா, கற்ப ளிங்கினிற் கருநிறஞ் சகசமாக் கறுத்ததன் ரூ ரோ பந், தர்ப்ப ணத்தினி லழுக்கற வேண்டிறற் சாதனத் தொ ழில்வேண் டுங், கற்ப ளிங்கிலா ரோபமே கறுப்பெனக் கண்டிட மனம்போ தும்.

(இ-ள்.) தர்ப்பணத்தினிற் களிம்புவாஸ்தவமலஞ் சகசமாதலின்மைந் தா, எ - து. ஞானபுத்திரா ! செம்புக்கண்ணழியிலுள்ளகளிம்பான தற்குரி யவுண்மையழுக்காம், அன்றியுஞ்சுபாவமாம், ஆதலால்:— (இதுபோல) கற்பளிங்கினிற்கருநிறஞ்சகசமாக் கறுத்ததன்ரூரோபம், எ - து. படிகக்கல் லிற்றோற்ற நின்றகருநிறமானது சுபாவமாக்கறுத்ததுமன்று, உண்மையும மன்று தோற்றன்மாத்திரப்பொருளாம்:— தர்ப்பணத்தினிலழுக்கறவேண்டி றற் சாதனத்தொழில்வேண்டும், எ - து. செம்புக்கண்ணழியிலுள்ளகளிம்ப கலவேண்டில் க்ரமுதலியகருவிகளாற்றுடைக்குஞ் சாதனத்தொழிலவசிய ம்வேண்டும்:—கற்பளிங்கிலாரோபமேகறுப்பெனக் கண்டிடமனம்போதும், எ-து. படிகக்கல்லிற்றோற்றுநின்றகருநிறமானது தோற்றன்மாத்திரப்பொரு ளெனவறிதற்குச்சாதனத்தொழில்வேண்டுவதின்று மனமேபோதும், எ-து.

செம்புக்கண்ணழியழுக்கு வாஸ்தவம் சுபாவம். படிகக்கல்கருநிறவழு க்ருண்மையுமன்று சுபாவமுமன்று. அதனைப்போக்கச்சாதனத்தொழில் வேண்டும், இதனைப்போக்கவறிதலேபோதும். அசுத்தமுமஞ்ஞானமுமொ ன்றென்னை யவன்கொள்கை. வேறென்னையிவர்கொள்கை. அவனிவ்விர ண்டுசித்தற்குக் கருமமேபோதுமென்னை. இவரசுத்தசித்தற்குக் கரும மும், அஞ்ஞானசித்தற்கு விசாரமும்போதுமென்னை. புண்ணியகன்மங் களிலும் பாவகன்மங்களிலுமெய்ப்பெழலசுத்தநீக்கம். பொருளல்லவற்றை ப் பொருளெனக்கோடலிலெய்ப்பெழ லஞ்ஞானநீக்கம். களிம்பைப்போக் கப்போக்க, மீண்டுமீண்டெடுத்தல் செம்புக்கண்ணழிக்கியல்பு. நீலநிறத்தை யிதுதோற்றன் மாத்திரமெனக் காணக்காண் விடாதுமெய்போலத்தோற்று தல் படிகக்கல்லுக்கியல்பு. அதனைப்போக்கற்குக்கருமம்பலதாரும், இத னைப்போக்கற்குவிசாரமொரேதாரும் வேண்டுமென்க. இதுபோலுமனதைச் சுத்தமாக்கச்சுத்தமாக்க மீண்டுமீண்டுசுத்தமாதல்மனதுக்கியல்பு. அநிலை வினக்கியநிற்சகிவபாதத்தை யினுதோற்றன்மாத்திரமெனக் காணக்காண விடாதுமெய்போலத்தோற்றுதலறிவுக்கியல்பு. அசுத்தம்போக்கற்குப் புண் ணியகருமம்பலகாலமும், பிராந்திபோக்கற்குத்தீர்ந்தவிசார மொரேநிமி டமும்வேண்டுமென்க. அனுபவத்தாலன்றியிலைவலினக்காலாம். (சுஉ)

எ0 - கவி. அ - ஈக.

[உபமேயபூர்வமாகவதனை யிக்கவியிலாசிரியர்கூறுகின்றார்.]

இங்கு மப்படி சச்சிதா னந்தத்தி லிடர்சடம் பொய்மூன் றுந், தங்கு மாயையின் கற்பித மன்றியே சகசவாஸ் தவமன் றே, பங்க மாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா தறவாக் குந் துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப் பா மே.

(இ-ள்.) இங்குமப்படி சச்சிதானந்தத்தி லிடர்சடம்பொய்மூன்றும், எ-து.உபமேயத்திலு முபமானத்திற்சொலியபடி சத்து, சித்து, ஆனந்த மென்னுமூன்றிலுள்ள பொய்யாகியவசத்தும், சடமாகியமூடமும், இன்பம் போற்காணுந் துன்பமுமாகியவிம்மூன்றும்:— தங்குமாயையின்கற்பிதமன் றியே சகசவாஸ்தவமன்றே, எ-து. காற்றிற்சலனம்போற் பிரமத்திற்றங்கிய மாயையினலாய கற்பனைவடிவமேயல்லாமல் சுபாவமுமன்று, எதார்த்தமு மன்று:— பங்கமாகுமஞ்ஞானத்தைக் கருமங்கள்பகைசெயாதறவாக்கும், எ-து. அசுத்தமாகின்றுள்ளவஞ்ஞானத்தைப் புண்ணியகருமங்கள்கெடுக்கா மலதனைவிர்த்தியாக்கும்:—துங்கஞானமேகருமவஞ்ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே, எ-து. எல்லாநிலையினுமேலாயபரஞானமே, கருமமேதனக்கு வடிவாகின்றுள்ள வறியாமையைத்தகிக்கத்தக்கவக்கினியாம், எ - று.

சச்சிதானந்தத்தி லநுர்தசடதுக்கமெனவே, சத்தேயசத்தும், சித்தே சடமும், ஆனந்தமேதுக்கமுமென்றுரையிற்று. சச்சிதாநந்தம் பிரமத்தின்சுயம் பெனவும், சகசமெனவும், வாஸ்தவமெனவுந்தோன்ற, இடர்சடம்பொய் மூன்றுந் தங்குமாயையின்கற்பிதமன்றியே சகசவாஸ்தவமன்றென்றார். சச் சிதானந்தத்திலிடர் சடம்பொய்யெனல், எதிர்நிரனிறைப்பொருள் கோள். உதாரணம்; களிறுங்கந்தும்போல; களிகடற்கூம்புங்கலனுந்தோன்றும், தோன்றன் மறந்தோர்துறைகெழுநாட்டே. இதுபெயர்ச்சொற்கனும் பெயர் ப்பயனிலைகளுமாகின்றவெதிர்நிரனிறை. அறிவு மூதற்காரணங்கருதாதசத் தெனவறியச் சகஞ் சத்தாக்காணும். சுயம்புயாதெனவ்றியப்புகச் சகமசத் தாக்காணும். காரணங்கருதாமைமூடம், கருதுதல்தெளிவு. இம்மூடத்தா லன்றே சகஞ்சுகமெனக்காண்டல். • மூடங்காரணமாகவெழுல்சுகமாகுமா, ஆகாதே, துக்கமே சுகமாகக்காண்டலெனவுணர்க, சுகமெனின், மூடமன் றிக்காட்டவேண்டும். இன்றேல், துக்கமாம். சகத்தைச்சத்தாவறிதலுஞ் சுகமாச்சுவித்தலு மறிவையன்றியின்மையாலும் ; பிராதிபாலிகசத்தைய ன்றிச்சகத்தும், அறிவையன்றிப்பிராதிபாலிகசத்தும், இன்றுதலாலறிவேச த்து, சகமசத்து. மூடமன்றிச் சகத்துண்மையும், அறிவையன்றிமூடமு மின்றுதலால், அறிவேசித்து, சகம்மூடம். சகந்தனதுபிரதிபலனமெனக் காணுமையா லெழுஞ்சுகமாதலி னிச்சுகமறியாமையின்மூலது. அறிவேய

றியாமையாதலின், அறிவே சுகம், செகம் துக்கம். எனப்படுவதிலுணும் அறியாமையன்றிச், சகமாதிமூன்றுமின்மையாணும்; இம்மூன்றுமாயாகாரியமெனப்படலா லறியாமையே மாயையெனப்படுமாதலிலுணும்; அறிவே பிரமமெனவும், அறியாமையேமாயையெனவும், அறிவுக்குச்சச்சிதானந்தமெனவும், அறியாமைக்கதுர்த்தசடதுக்கமெனவும், அறிவையன்றி யறியாமையின்மையின் சச்சிதானந்தமே யதுர்த்தசடதுக்கமெனவுங்கொள்ளக்கிடந்ததெனவறிக. அறிவானே யறியாதது புண்ணியகன்மம், ஆதலின் பங்கமாகுமஞ்ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா தறவாக்குமெனவும், சச்சிதானந்தவிலக்கணமினையவெனக்கண் டொருமையாக்கியதெளிவே தெளியாமையுயுகெடுக்குமாதலின், துங்கஞானமேகருமவஞ்ஞானத்தைச் சுடுகின்றதொருப்பாமேயெனவுங் கூறியதை மறுப்பதற் கெக்காலத்துமென்னவலியுளது. இன்ருதலா லிவ்வுவமேயம்பொருந்துமெனவறிக. விசாரஞானத்தாலெய்துவதுவிருத்திஞானமாதலி னிதனைதொருப்பென்றதெனக்கொள்க.

(க-து.) ஞானத்துக்கஞ்ஞானமபேதமாதலின் விசாரஞானத்தாலன்றிக் கருமத்தாலஞ்ஞானநியாதென்பது. இதுபெறுமெனமாட்டலால் மாட்டெறிந்தொழுகலென்னுமுத்தி. அஞ்ஞானத்தைக்கெடுத்தற்பாலது கருமமன்றுவிசாரஞானமென்றவின், இன்னதல்லதிதுவென மொழிதலென்னுமுத்தி. சச்சிதானந்தமறியார், சகசிவபரமனுதிந்தியமென்பர். அறிந்தார்க்கயலேது. ஒன்றுமற்றொன்றுத்தோன்றலேயெழாம்வேற்றுமையாக்கல், வேற்றுமைமயக்கம். இங்ஙனமருவிவழங்கலால் மரூஉ. (எ0)

எக - கவி. அ - கை.

[அறிவறியாமை நினைப்புமறப்பெனக்காட்டத் தன்மறதியைக்
கெடுப்பதுதன்னினைவிலைலன்றி யயலாலன்றென
விக்கவியிற்கூறுகின்றுர்.]

மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்தவன் வருடமு றழுதா லுநினைத்து ணர்ந்தபின் கிட்டுமப் படியிக்க திருமல வான்மா வுமறந்த மானதன் மறதியைக் கெடுக்குந்தன் னறிவிறற் காணு மற்கனத்த கன்மங்க ணுறுகஞ் செய்யிணுங் காணுமோ காணு தே.

(இ - ள்.) மனைக்குள்வைத்தபண்டங்களை மறந்தவன்வருடமுறழுதாலுநினைத்துணர்ந்தபின்கிட்டும், எ-து. ஒருவனேர்வீட்டினுள்வைத்த பொருள்களைமறந்துவிட்டான்; அங்ஙனமறந்தவன் காணுமையென்று வருடமுறழுதாலுங்காணுமா, இவனுக்கேநினைப்புவந் தின்னவிடத்திலில்லையத்தோமல்லவாவென்றுணர்ந்தபின்னரன்றேவலைவகிட்டும், அல்லாமற்கிட்டுமா கிட்டாவே :—அப்படி யிக்க திருமலவான்மாவு மறந்தமானதன்மறதியைக்கொடுக்குந்தன்னறிவிறற்காணுமல், எ-து. அங்ஙனமிக்தனின்மலரூபமானவான்மபுருட

னும் அகர்த்தரூபமான தன்மறதினையக்கேடுப்பது தன்னினைவேயாதலால், அதனையுமறியாதி அதனுல்தன்னையுங்காணுமல் :—கனத்தகண்மங்களுறுகஞ் செய்யினுங்காணுமோகாணுதே, எ-து. மேலானயாகாதிகிருத்தியங்களீராறு கஞ்செய்தாலுந் தன்னுண்ணமவடிவம்விளங்குமா விளங்காதே, எ-று.

செகதிலபாஞ்சுயம்பெரினல், விகாரத்தை, அல்லவெனில், சாதனையி லொவ்வொன்றும் விகாரமெனமுடியாது காரணகாரியரகிதமாக் காட்ட லாம். கூடாதெனின், இவை மூன்றுமர்த்தரூபமென்னலாமா, அநர்த்தரூபமென்னலாமா? அர்த்தரூபமெனின், ஒவ்வொன்றிற்குஞ் சுயம்பிஃதெனக்காட்ட வேண்டும். கூடாதேதல், அநர்த்தரூபமென்பதற்குச் சற்றுமையமின்று. ஆதலின், சகமாதிமூன்று மநர்த்தரூபமெனத்தகும். இவை தன்னைமறந்தவிடத்தில் தோற்றுபவாதலினுனும், மறதிநீக்கத்தின்றுதலினுனும், மறதியேயிவை மூன்றுமென்றுல் வழுவென்னை, இன்றுதலா லநர்த்தமானமறதியெனவும், நினைப்புமறப்புரகிதமானவான்மா தன்னைமறந்ததுபோலவுந் தன்னைநினைத்துக்கொண்டதுபோலவுந்தோற்றலின், தன்மறதியெனவும், தன்னறிவெனவும், அவஸ்தாவயப்படாம லவற்றைச் சாட்சியாநின்றுணர்த்தல், ஆன்மா. அவஸ்தைகளீடாறு மந்தந்தவுபாதிவயப்பட் டின்பதுன்பநுகர்தலாகக்காண்டல், சீவன். ஆதலினின்மலவான்மாவெனவும், தன்னைத்தானெட்டுங்காலத்துத்தான்சேய்மைத்தாயினு மயலையுணர்த்தத் தானணித்தாநிற்றலினகத்துச்சுட்டாலிந்தவான்மாவெனவும், தன்னைமறந்தது தன்னுலன்றியயலாலன்று, இங்ஙனமிருக்கத் தன்னையறிவதுந் தன்னுலன்றியயலாலாகுமா ? ஆகுமெனின், தன்னைமறந்ததுமயலாலென்பம். திரோபவசத்தியால்மறப்பும், அனுக்கிரகசத்தியால்விடுதியுமெனின், இவ்விருவகைசத்தியுமார்பாலது ? மகேஸ்வரன், சதாசிவன்பாலதெனின், ஆன்மாவுக்கென்னசுதந்தரம். ஈனெனினின், இங்ஙனமாட்டுவிப்பானேன்? வினைக்கீடாயெனின், திரிபதார்த்தமுமதியாயிருக்க வுயிர்க்குவினைவருவானேன்? சுபாவமெனின், இடையிலிவர்கள்முயற்சியானீங்குமா, கூடுமா? இதுவுஞ்சுபாவமெனின், நாஸ்திகனிலுமிஃதென்சிறப்பு, இன்றுதலாலிது மறுக்கற்பாற்று. தன்னைத்தான் விசாரித்தறியன்றித் தன்னைத்தான்காணக்கூடாதென்பார், ஆன்மாவுந் தன்மறதினையக்கெடுத்துத் தன்னறிவுறற்காணுமல் கனத்தகன்மங்களுறுகஞ்செய்யினுங் காணுமோ காணுதேயெனவுங்கூறினர். ஆன்மாகன்மம்புரிதற்பாலது பலனும்புரிதற்பாலதோவெனின், இம்மையிலொருவன்தீங்கேபுரியில் தண்பத்தையும், அவனேயதைவிடிலின்பத்தையு மனுபவிப்பதுபிரத்தியட்சமன்றே, இவ்வினைகட்குப்பயன்றர மற்றொருவன்வேண்டுமோ, அவ்வவ்வினையே யவ்வவற்றின் பலனுகின்றதியல்பாயிருக்க, இங்ஙனங்கேட்பது விணவன்று, விணவழு. இம்மையிலேனுமறுமையிலேனு மவனவன்வினையேயதற்குரியபயனைத்தருமென்றே. இதுபற்றித் "தான்றுமுன்செய்தவினைதானேயனுபவிப்பனென்றுர்சான்றேர்" தீவினைவிடிலதன்பயனும், நல்வினை

விடலதன்பயனும், இவ்விரண்டுமொருங்கேவிடு லதன்பயனுந்தானேயகலும், இதற்கொருவனேற்றிற்று. இங்கேயொருவன்வேண்டியதாகக்கூறியது, அவனேவேண்டப் பூசித்தற்கென்க. எனெனில், பயபத்திவரவேண்டுவதுபற்றியாதலினும், இன்பமுந்துன்பமுமவன்தருவதாக ஐதிகமிருத்தலினும், அவனன்றியோரணுவுமசையாதெனும்பழைய வாப்தமொழியிருப்பதினும், அவன்தானிலாத்தடுப்பவனொன்றிருத்தலின்றுமென்க. அங்ஙனமெவர் வேண்டினு மவரவர்வினைக்களவாகவன்றித் தன்னிட்டப்படிதான், தரின், பாரபட்சன். இதநிற்க. தன்னைத்தவிரவெங்கேயன்னிய மின்றே வதுபரஞானம். ஈசனேனுமுனதேலம்தபரஞானம். பரஞானத்திலேற்போனிடவோ வெனங்கே. தன்னைமறந்ததுந்தன்னுளே, தன்னையறிவதுந்தன்னுளே, யாதலின் தன்மறதிலையத்தவிாகவென்பதாயிற்று.

(க - து.) ப்ரக்ஞைலக்கயலாகத்தோற்றுஞ் சகமாதிமூன்றுமனர்த்தரூபமாகலா லவைதன்மறதியெனத்துணிகவென்பது. தன்மறதியேதனக்கயலென்றிண்ணம். தனக்கயல்தோன்றுமளவுந்தான்விளங்காது; தன்னையுன்னிடில் தான்விளங்குமென்க. (எக)

எஉ - கவி. அ - கை.

[சுகந்தருவதுஞானமெனவும், கன்மமெனவும் வேதங்கூறுகின்றதே யிதில்யாதுதுணிவு, கூறுவதெற்றிற்கென மாணாக்கன்விஞ்ஞலியிக்கவியிற்கூறுகின்றார்.]

கன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞானமே யென்னும்வேதந்
தன்ம பாவமிச் சிரங்களாற் றேவர்க டருவிலங் குகண்மாந்தர்
சென்ம மாகுவ சாதியா சாரமே செய்தவஞ் சுகமென்று
கன்ம காண்டத்தில் விதிப்பதென் விதித்துள காரண முளையீரோ.

(இ - ள்.) கன்மையாங்குருவே சுகந்தருவது ஞானமேயெனும்வேதம், எ-து. கன்மையேவடிவாயுள்ளசற்குருவே! ஞானகாண்டத்தில், சுகத்தைத் தருவதுஞானமேயென்று விதித்தவேதமானது:—தன்மபாவமிச்சிரங்களாற் றேவர்கடருவிலங்குகண் மாந்தர்சென்மமாகுவ, எ - து. புண்ணியகன்மம், பாவகன்மம், மிசிரகன்மமெனமூன்றும். இம்மூன்றுகன்மங்களில்; புண்ணியகன்மத்தால்மேலாயதேவசென்மமும், பாவகன்மத்தால் கீழாயவிருட்சம் விலங்குபறவைமுதலியசென்மமும், மிசிரகன்மத்தால்நடுவாயமனிதசென்மமுமாம்:— (இவற்றிற்கேதுவாய) சாதியாசாரமேசெய்தவஞ்சுகமென்று கன்மகாண்டத்தில்விதிப்பதென் விதித்தனகாரணமுளையீரோ, எ - து. வருணாசிரமத்துக்குரிய விதிவிலக்கில்லாதொழுகுமொழுக்கமே செய்கின்றதவமாம். இங்ஙனமாயதவமே சுகத்தைத்தருமென்று கன்மகாண்டத்தில் விதித்ததெற்றிற்கு, அங்ஙனம்விதித்ததற்குக் காரணம்யாது தெரிகின்றிலனிதனைத்தேவரீர்தெரித்தருளவேண்டும், எ - து,

(ச-ரை.) வேதமானது ஞானகாண்டத்தில் ஞானமேசுகந்தரற்பாலதெனக்கூறிக், கன்மகாண்டத்தில் வருணாசிரமவொழுக்கமேசுகந்தருமெனக்கூறுவானேனென மாணாக்கன்வினவினனென்பது. ஞானமேயென்றதனுல் செய்தவமேயென்றும். ஆசாரத்தையன்றித் தவம்வேறன்றெனற்கு, ஆசாரமேசெய்தவமென்றார். சாதிகூறியதுபற்றி யாசிரமம்வருவித்தாம். புண்ணியகன்மமுதலியமூன்றினுலாய பிறவிபேதங்களைப்பற்றி விரிவாகமுன்னரே கூறியிருக்கின்றன மதனுற்காண்லாம். (எஉ)

எசு - கவி. அ - கை.

[கருமஞ்சுகந்தருமென்றதோரவசரம்பற்றியன்றி ஞானம்
போல்வதன்றெனக்குறிப்பிக்க விக்கவியி
லறம்புரியுமாறுகூறுகின்றது.]

தினமு மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீப்பண்ட மெதிர் காட்.டிக், கனம ருந்துக ளொளித்துவைக் தழைக்கின்ற கருணையாந் தாய்போ ல, மனைய றங்கள்செய் மகங்கள்செய் நன்றென்று மலர்ந்த வா சகஞ்சொல் லு, தினைவு வேறுகாண் சுவர்க்கசா மிகளந்த நிர்ணையங் தெரியா தே.

(இ - ள்.) தினமுமண்ணுகர்பிள்ளைநோய்க்கிரங்கியே தீம்பண்டமெதிர் காட்டி, எ - து. தினந்தோறுமண்ணைக்கரந்துண்கின்ற குழந்தைக்குநோய் மிக வதனைக்கண்டிரக்கமுற்று மதுரமானவஸ்துவையோர்கரத்தேந்தி யந் தக்குழந்தைக்கெதிரேகாட்டி :— கனமருந்துகளொளித்துவைத்தழைக்கின்ற கருணையாந்தாய்போல, எ-து. மேலானவவிஷதங்களை மற்றோர்கரத்தேந்தித் தன்பிள்ளையொளித்துவைத்துக்கொண் டக்குழந்தையையழைக்கின்ற விரக்கமுள்ளதாயைப்போல:— மனையறங்கள்செய்மகங்கள்செய் நன்றென்று மலர்ந்தவாசகஞ்சொல்லும், எ - து. இல்லறங்களைச்செய், யாகாதிகிருத் தியங்களைச்செய், ஏனெனில், இனியடையும்பிறவிக்கிதுநன்றென்று வேத மானதினியமொழிகளாற்றெரிவிக்கும்:— நினைவுவேறுகாண் சுவர்க்கசாமிக ளந்தநிர்ணையந்தெரியாரே, எ-து. தெரிவிக்கினும், கருத்திற்தன்றுவேறுதான், அக்கருத்தைச் சுவர்க்காதிபோகத்துக்கே யங்காந்துதிரியுங்காமிகள் சற்று முணர்ார், எ-று.

மண்தின்னுதல்குழந்தைப்பருவம், எனையபருவமன்று, விடயநுகர்தலஞ்ஞானப்பருவம், எனையபருவமன்று, மண்தின்னலாலாயநோய் காமாலை முதலியன, விடயநுகர்தலாலாயநோய் பிறவிமுதலியன. தீம்பண்டமெதிர்காட்டல்போல் பதவிப்பேறுகளையெதிர்காட்டல். காமாலைதிர்க்கத்தருமருந்துபோல்வது பிறவிதிர்க்கத்தருமருந்து. தாயானவள்தீம்பண்டங்காட்டல் சொல் மருந்தொளித்துவைத்தல், கருத்து. அதுபோல. வேதமாதாவும், சுவர்க்காதிபயன்காட்டல் சொல், அனைத்தையுமொருங்தேவிடவேண்டுமெனல்கருத்து.

(க - து.) எல்லாவெண்ணெய்யு மொருங்கேமறந்துவிடலே, பிறவி நோய்க்குத்தக்கமருந்து. அவளொளித்துவைத்ததந்தமருந்து, இவளொளித்துவைத்தநிந்தமருந்து, அந்தமருந்தைக்காட்டிலுல்குழந்தைவராது, இந்தமருந்தைக்காட்டிலுல் மக்களுயிர்வராது.

ஆதலாலொளித்துவைத்தெனவும், இவளஞ்ஞத்தல்போல் வேதமாதாவழைத்தலே யினிவருங்கவிகளாலுங்காணலாம். அவளுக்குக்கருணைதன்குழந்தைமேல், இவளுக்குக்கருணைமக்களுயிர்மேல். குழந்தைக்குத்தாயவள். மக்களுயிர்க்குத்தாயிவள். அவள்சொல்லையுங்கருத்தையுங் குழந்தையறியாவாறுபோல, இவள்சொல்லையுங் கருத்தையு மக்களுயிரறியாது. ஆதலால், நீஉறவு வேறுகாண்சுவர்க்ககாமிக ளந்தநிர்ணயந்தெரியாரோயெனவுங்கூறினர்.

(க - து.) வேதம்; கருமமேசுகந்தருவதெனக் கூறினதாகக்கொள்ளின், சொல்லுங்கருத்துமொத்தன்றே கூறவேண்டும், அங்ஙனங்காணுமேயென்பது. இதுபூர்வபட்சமாகத்தகுவதாதலின் சித்தாந்தமன்று. அந்தநிர்ணயந்தெரியாரோயென்பதினுல், கருமமேசுகமெனப்புரிவொன்பதாயிற்று. தேகபோகத்துக்கினையந்தகருமமேமுக்கியமன்றி விசாரஞானமங்ஙனமன்றென மறுத்தல்தானேகெடவுபமானங்கூறியதென்க. (எஉ)

எச - கவி. அ - கை.

[போகநுகர்தற்கன்றே மனையறங்கள்செய் மகங்கள்செய்
யென்றது, இஃதுயிர்கட்கியல்பாயிற்றே யிதனைவிதிப்பானேனென்ற சங்கைக்குத்தரமிக்கவியில் வேதம் மூடமன்றெனக்கூறுகின்றுர்.]

போக மாருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது மியல்பேகா
ணுக மங்களுஞ் சுபாவத்தை விதிக்குமோ வத்தனை தெரியாதோ
காக மேகறுத் திடுநெருப் பேசுடு கசந்திடு வேம்பேநீ
வேக வாயுவே யனைசுயென வொருவரும் விதித்திடல் வேண்டாவே.

(இ - ள்.) போகமாருயிர்கண்டதையுண்பதும் புணர்வதுமியல்பேகாண் ஆகமங்களுஞ்சுபாவத்தைவிதிக்குமோ, எ - து. உயிர்கள்தமக்குப்போகமாகக் கண்டதையெல்லாமுண்பதும், போகிப்பதுமியல்பாயிருக்க, இந்தச்சுபாவத்தை வேதாகமங்களும்விலக்கா திதனைவிதிக்குமா, இஃதென்னைகொலோவெனின்:—அத்தனைதெரியாதோ காகமேகறுத்திடுநெருப்பேசுடுகசந்திடு வேம்பேநீவேகவாயுவேயனைசுயென வொருவரும்விதித்திடல்வேண்டாவே, எ - து. வேதாகமங்களுக் கல்வளவுயூகித்துணர்த்தல்தெரியாதா, அத்தனைமூடமா, காகமேகறுத்திடுகவெனவும், நெருப்பே நீ சுடுகவெனவும், வேம்பேநீகசந்திடுகவெனவும், வேகமாயுள்ளகாற்றேநீயனைசுகவெனவுமொருவர்கட்டளையிடல்வேண்டுமோவொருவரும்வேண்டுவதின்றே யதுசுபாவமாயிற்றே, எ - று.

உயிர்களிட்டத்தின்படி கண்டுசெல்லுந்தோறு மப்போதப்போதவ்வவ ற்றுனேரிடு மிடுக்கண்களைக்காட்டல்வேண்டும், அங்ஙனங்காட்டாவிடில் தோ டந்தோன்றுது, தோன்றுவிடில், இடுக்கணியல்பென வப்போகங்களிலேயே யுழன்றழியும். அங்ஙனமுழன்றழியக்காணல்நன்று, ஆதலின் பையவவ்வுயிரி னிட்டப்படிசென்று, ஆங்காங்குள்ளகுற்றங்களைக்காட்டி டக்வேண்டும். இங்ஙனமாயதந்திரத்தைதவிட்டு, நீதிரும்பென்றுல்திரும்புமா, அதுபலவத்கா ரமன்றே, அதுமுற்றுநிற்குமா, நில்லாதே, இதுவிவேகமா, அல்லவே. இது பற்றியன்றேவேதமும், மனையறங்கள்செய்மகங்கள்செய்நன்றென்று மல ர்ந்தவாசகஞ்சொல்லும். இதனையறியாதிங்ஙனம்விரைவல்முறையன்று. மு ன்றைவழுவென்பார், அத்தனைதெரியாதோவென்றூர். காகமாதிகள்சுபாவத் தை யொருவரும்விதித்திடல்வேண்டாவேயென்றது; சுபாவத்தைவேதம்வி திக்குமாவெனக்காட்ட. அத்தனைதெரியாதோவென்றது, இதனைமறுக்க. விதித்தது; உயிர்கள்வழிச்சென்றலைவகளைத் தம்வழிமீட்க. இவ்வுளவறியா தார் விடயமோகிகள். இவர்கள்தான்வேதத்தின்கருத்தறியாது வேதத்தின் சொல்வழிச்சென்றறம்புரிவோர். வேதமானது சுபாவத்தைவிலக்குவான் வேண்டியே விதித்ததென்க.

(க - து.) வேதத்தின்கருத்தறியாதுமறுத்தல் பிழையென்பது. (எச)

எடு - கவி. அ - கை.

[பட்டிமாடுபோற்கட்டுக்கடங்காரைக் கட்டுக்கடங்கக் கன்மம்
புரியவிதித்ததேயன்றி வேறுக்கன்றெனவிக்
கவியிற்கூறுகின்றூர்.]

கள்ளு மூனுநீ விரும்பிலுன் மகங்கள்செய் காமத்தின் மன தானுற், கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன்குறை யெலாந் தொடானென் றே, தள்ளும் வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தா கும், விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ நியமமாம் விதியன் றே.

(இ - ன்.) கள்ளுமூனு நீவிரும்பிலுல்மகங்கள்செய் காமத்தின்மனதா னுற்கொள்ளும்பெண்டொடுகலவிசெய்யெனில், எ-து. கள்ளருந்தவும், மா மிசந்தின்னவும் நீயாசைகொள்ளில், யாகாதிகிருத்தியங்களைச்செய்திடுக, புணர்ந்தனுபவித்தலாகியகாமத்தில் மனதெழுமாலுல் நீமணம்புரிந்துகொ ண்டமனைவியோடுகூடிப்புணர்ந்திடுகவென்றுசொன்னுல்:—இவன்குறையெ லாந்தொடானென்றே தள்ளும்வேதத்தின்சம்மதஞ் சகலமுந்தவிர்வதேகரு த்தாகும், எ-து. இவன்மற்றனைவகளையெல்லாந்தொடவேமாட்டானென் றெ ண்ணங்கொண்டதன்றே, இதுபற்றித்தொடானென்றேயவற்றைத்தள்ளிவி டும். ஆயினிதுதானேவேதத்தின்சம்மதமெனில், உயிர்கள்சமஸ்தபற்றுக்க ளையு மொருங்குவிட்டுவிடற்கேதனைதென்னைமாம்:—விள்ளுமிவ்விதியென்

னெனில் பூருவவியமமாம்விதியன்சேற, எ-து. இவ்வனஞ்செய்யெனக்கூறிய விவ்விதியாதுக்கெனக்கேட்டையாயின், பூர்வபட்சமாகத்தகுந்ததேயன்றி நிச்சயமானவிதியன்று, எ - று.

நிச்சயமானவிதி, சித்தாந்தம். எனவே, பூர்வபட்சம், சித்தாந்தபட்ச மெனவிரண்டாம். பூர்வபட்சம், கனாதற்பாலது. சித்தாந்தபட்சம், நினைத் தற்பாலது. இவ்விதிநினைத்தற்பாலதன்றென்பார், பூருவமென்றார். விரும்பிஞ ல்மகங்கள்செய், காமத்தின்மனதானல்கலவிசெய்யெனவே. விரும்பாமற் போனல்செய்யவேண்டாம், மனதில்லாமற்போனல்செய்யவேண்டாமென் றுயிற்று. ஆகவே, இதுகன்மிகளுக்குவிதித்தென்பதுபெற்றும். பெறவே, பூர்வபட்சமெனக்கண்டாம்.

(க - து.) விதிக்கடங்காதார்க்கு விதித்ததந்திரமிஃதென்பது. இவ்வன மாயதந்திரங்களைக் கன்மகாண்டத்திலறிக. குறையெலாந்தொடுதலாவது; கடைகடோறுஞ்சென்று போதைமிகுதியாலவமானப்படலும், நல்லோரா லிகழப்படலும், பிறர்மனைநயத்தலும், அவமானமெய்தலும், நடுக்கமகலா மையுமாம். சகலமுந்தவிர்வதேகருத்தாவதெற்றிற்கு, ஆன்மாக்களைப்பற் றுமகன்றிருக்கிற் பிறவியகன்றிருக்குமென்பதுபற்றியென்க. ஆன்மாவறி வாதலிலறிவாமாத்திரநிற்க ஞானகாண்டத்திற்பிரதிவாதிக்கின்றதே. இத னுற், கன்மகாண்டத்தில் பற்றுக்களகறற்குத்தந்திரமும், ஞானகாண்டத்தி லறிவாவிளங்கற்குத் தந்திரமுங்கூறுமெனக்கண்டாம். இதுகாருணியத்தை விளக்குகின்றது. (எடு)

எசு - கவி. அ - கை.

[மெல்லமெல்லப்பற்றுக்களகறற்குத் தந்திரங்களேவுதங்
கூறுதலையறிந்து கருமம்புரிதலையொழிந்திடுக
வென விக்கவியிற்கூறுகின்றார்.]

மதுவி றைச்சிக ளுண்ணென்ற சுருதிபின மணைத்துபா ரெ னல்பா ராய், மிதுன விச்சையும் புத்திரோற் பத்தியால் விரும் பென்ற விதிபா ரா, யிதையும் விட்டொழி யதிகயிட் டிகவன்னி க் கிகழ்ச்சியற் றதும்பா ரா, யதைய றிந்துகன் மங்களா சைக ளொழிந் தானந்த மடைவா யே.

(இ - ள்.) மதுவிறைச்சிகளுண்ணென்றசுருதிபின் மணைத்துபாரெனல் பாராய், எ-து. மதுமாமிசங்களைப்புசியென்றவேதமானது பின்னர்மோந்து பார்புசியாதேயென்பதைப்பார் :—மிதுனவிச்சையும் புத்திரோற்பத்தியால் விரும்பென்றவிதிபாராய், எ - து, புணர்ச்சியாசையும் புத்திரோற்பத்திவே ண்டுமாதலா லதுபற்றிவிருப்பங்கொள்ளென்று கூறும்விதியினைப்பாராய்:— இதையும்விட்டொழியதிகயிட்டிகவன்னிக் கிகழ்ச்சியற்றதும்பாராய், எ - து,

மதுவிறைச்சியோடு புணர்ச்சியையும் • ஒருங்கேவிட்டொழிந்தசங்கியாசிக்கும், கயிஷ்டிகபிரமசாரிக்கும் யாதோர்பழிப்புமற்றென்பதும்பாராய் :— அதையறிந்துகண்மங்களாசைக ளொழிந்தானந்தமடைவாயே, எ - து. இங்ஙனங்கூறுமவ்வேதத்தின் கருத்தையறிந்து புண்ணியகண்மங்களில்வைத்த, வாசைகளினின்றுநீங்கிப் பிரமானந்தத்தைஞானத்தினலடைதி, எ-று.

முதலி லுண்க புணர்க வென்றவேதம் கடையில் முகர்க, புத்திரோற்பத்தியால் விரும்புகவென்றது; பற்றறுத்தற்கென்க. முதலில்கூறியதுயிர்வயப்படற்கும்,கடையில்கூறிய துயிர்கேவலமாதற்கு மெனவறிக. புத்திரோற்பத்தியால்மிதுனவிச்சையும் விரும்புகவென்றது; புத்திரன்குடும்பங்காக்கும்யோக்கியம்வரில் புணர்ச்சிவிருப்பம்விட்டுத் தவத்துக்குவனத்துக் கேக வேண்டுமென்றபொருள்படநின்றது. இகழ்ச்சியற்றதென்பதுபெண்ணை இகழ்ச்சியற்றதுமெனக்கூறலின், என்பதெனல்சொல்லெச்சம். கன்மங்களாசைக ளொழிந் தானந்தமடைவாயேயென்பதிணல், கன்மஞ்சுகந்தருமெனல் பூர்வபட்சமெனவும், ஞானஞ் சுகந்தருமெனல் சித்தாந்தமெனவுங்கொள்க.

(க-து.) இவ்விரண்டில் ஞானமேசுகமெனத்துணிந்தாமென்பது. இதுவொருதலைதுணிதலென்னுமதம். இதுகாறுங்கருமமேசுகமெனக்கொண்டிங்கேமறுத்தலி னிதுபிறர்தம்மதமேற்கொண்டு கனீதலென்னுமதம். கருமமேசுகமென்பாரிக்கருத்தறியாதார். அறியி னக்கணமேவிடுவர். (எசு)

எ எ - கவி. அ - கை.

[சுக மிருவகையுள் கருமசுக மோரவசரம்ப ற்றிக் கூறியதாக வேற்றனன், இதுநீற்க. முன்னர், எ0. கவியில்பங்கமாகுமஞ்ஞானத்தைப்பகைசெயா தறவாக்குமென்பதைப்பற்றி யையஞ்சிறிதுள தகனையகற்றல்வேண்டுமெனவிளுவலி யிக்கவியிற்கூறுகின்றார்.]

உலக மானவஞ் ஞானமுங் கருமமு முறவென்ற வழிசூடும்
பலவு மானவஞ் ஞானமு ஞானமும் பகையென்ப துளதா னை
னிலவி லேமறுப் போலவஞ் ஞானமு நிமலஞா னத்தோ டே
குலவி நின்றிந்தச் சிருட்டிகள் செய்யவுங் கூடுமோ குருமூர்த்தி.

(இ - ள்.) உலகமானவஞ்ஞானமுங் கருமமுமுறவென்றவழி கூடும், எ-து. சகத்துருவமா நின்றுள்ள வறியாமையும், யாகாதிகிருத்தியமு முறவாகுமென்று தேவரீர்கூறியவழியேற்றற்பாலதே:—பலவுமானவஞ்ஞானமு ஞானமும் பகையென்பதுளதாலல், எ-து. சகத்துருவமாகவன்றியு மின்னும்பற்பல விதேதருபமாகவுமிருந்துள்ள வறியாமையும், அறிவும் பகையென்பதுண்மையாலல்:—நிலவிலேமறுப்போல வஞ்ஞானமு நிமலஞானத்தோடேகுலவிநின்றிந்தச் சிருட்டிகள்செய்யவுங் கூடுமோகுருமூர்த்தி,

எ-து. குருமூர்த்தியே! நிலவிற்களங்கமுறவாயிருப்பதுபோல, அறியாமையும் நின்மலமானவறிவோடுகூடியுறவாகின்று, இத்தச்சிருஷ்டியாதிகளைச் செய்யத்தான்கூடுமோ கூடாதே; எ-று.

உலகமானவஞ்ஞானம் பலவுமானவஞ்ஞானமென்பன; அஞ்ஞானத்தைமுதற்காரணமாக வுலகமுமின்னும்பிறவும்பெருமிற்றலின் காரியத்தைக் காரணமாக வுபசரிக்கப்பெறுகின்றன. நிற்கவே, அபேதகாரணகாரியமெனப்பெற்றும். பெறவே, அறியாமையே சகமாதிமூன்றுமென்றாயிற்று. இத்துணிபுபற்றியே காரியத்தைமுன்னருங் காரணத்தைப்பின்னருங்கூறிய தென்க. அறியாமையேசகமாதிமூன்றெனலே ஞாயமாதியாலுணர்த்துதும். இங்ஙனமுணர்த்தவலியில்லார், யாதுகூறினுந்துவிதமாகமுடியும். முடியின், பிறவிநாசமின்றும். பயனென்னை, இதுநிற்க. களங்கத்துக்கு நிலவிடமாதல்போல, அறியாமைக்கறிவிடமாயிற்று. ஆகவே, அறிவு பூரணமும், அறியாமையேகதேசமுமெனக்குறிக்கின்றது. நிமலமின்றுதவினஞ் ஞானமென்றார். நிமலஞானமென்றது; பொருளோப்பொருளாகவுணருமவுசரத்தை. சக்கரவர்த்திக்குறவாகின் றவனிலத்தையாளக்கூடும், பகையாகின்றாளக்கூடுமோ? அதுபோல, ஞானத்துக்குறவாகின் றநின்கண்ணஞ்ஞானஞ் சிருட்டியாதிகள்செய்யக்கூடும், பகையாகின்றுசெய்யக்கூடுமாவென்பான், அஞ்ஞானமுஞானமும்பகையென்பதுனதானுல்நிலவிலேமறுப்போல வஞ்ஞானமு நிமலஞானத்தோடேகுலவிநின் றிந்தச்சிருஷ்டிகள்செய்யவுங் கூடுமோவென்றான்.

(க-து.) ஞானத்துக்குப்பகையாக வதினின்றஞ்ஞானஞ்சிருஷ்டியாதிகள் செய்வதெங்ஙனமென்பது. பலவுமென்றதனுல், சகமோடேனைய விரண்டும்வருவித்தாம். உள்ளதென்பது உளதெனவிடைக்குறை. செய்யவுமென்பதிலும்மை யிழிவுசிறப்பு. கூடுமோவென்பதிலோகாரம், எதிர்மறை. பலவெனல், உயிரையும்பரத்தையும். என்னை, "ஒன்றல்லனபல தமிழ்நடைவடநூலிரண்டல்லனபலவென்றிசிலோரே" என்பதிறைற்காண்க. பலவுமென்ப திறந்தது தழீஇய வெச்சவும்மை. (எ)

எ அ - கவி. அ - கை.

[பொதுப்பட ஞானமென்றுரோனு மதுசொரூபஞானம் விருத்தி ஞானமெனவிரண்டாம். அஞ்ஞானத்துக்குச் சொரூபஞானமும் விருத்திஞானம்பகையுமென் விக்கவியிற்கூறுகின்றார்.]

சொரூப ஞானமும் விருத்திஞா னமுமென்று சோதிஞானமதிரண்டாஞ், சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாத் தோன்றும்வே றிலைமைந்தா, சொரூப ஞானமஞ் ஞானசத் துருவன்று சுழுத்தியிற் கண்டா யே, சொரூப ஞான்த்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும்விருத் தியின்ஞா னம்.

(இ-ன்.) சொரூபஞானமும் விருத்திஞானமுமென்று சோதிஞானமதிரண்டாம், எ-து. சோதிஞானமானது, சொரூபஞானமெனவும் விருத்திஞா

னமெனவுமிரண்டாகிற்கும்: — சொரூபஞானமே விருத்தியின்ஞானமாத் தோன்றும்வேறிலேமைந்தா, எ-து. ஞானபுத்தா ! சொரூபஞானமேவிருத்தினஞானமாத் தோன்றுவதேயன்றி யஃதோர்பொருளாகத் தனித்தெங்குமில்லை :— சொரூபஞானமஞ்ஞானசத்துருவன்று சூழ்த்தியிற் கண்டாயே, எ-து. சொரூபஞானமாஞைகஞ்ஞானசத்துருவேயன்று, இதனைத்தினசூழ்த்தியிற்காண்கின்றனையே:—சொரூபஞானத்தின்மருவுமஞ்ஞானத்தைச் சுடும் விருத்தியின்ஞானம், எ-து. சொரூபஞானத்திலுறவாமருவினின்றுள்ள வஞ்ஞானத்தை விருத்திஞானமான்றெரித்துவிடும், எ-று.

.·. என்றனலையீரிடத்துமொட்டுக. சூழ்த்தியிற்செகந்தோற்றவில்லையென் றங்கேயுறிய விடாதெவ்வுயிர் கேவலத்தின்கண்ணு மறிவிருத்தலி னது சொரூபஞானமெனவும், தனித்துந் தன்னைத்தான்காணவொட்டாத தறியாமையாதலி னதனையஞ்ஞானமெனவும், அறிவுமறியாமையுமபேதமாயாங்குறவாநிற்றலின் சொரூபஞானமஞ்ஞானசத்துருவன்று சூழ்த்தியிற்கண்டாயேயெனவும், சமாதியிலுதிக்குஞானம் விருத்திஞானமெனவும், ஞானவான்கள் சிந்தையாவிளங்குவது சோதிஞானமெனவும் கொள்க. சொரூபஞானமஞ்ஞானசத்துருவென்றனப்பாடமோதில் மறுபடியும், மறுபாட்டுமூரணுதலுக்கென்செய்தும். வலிந்துரைகோடலிற் பிறர்பழிப்புக்கிடமாம், இதனைவிடுதனன்றே. சூழ்த்தியில் மூடவயமாகாது தானறிவாகவிருந் தம் மூடத்தை யெதிரிட்டறிதலைப்பற்றிச் சத்துருவென்றதெனின், சூழ்த்தியிலஞ்ஞானக்கே டெய்தியதுண்டா? முத்திபெற்றருண்டா, விசாரமெற்றிற் கெனவரும் இங்ஙனமாய வினவுக்கெல்லாமென்செய்தும். உனாக்குப்பாட்டன்று, பாட்டுக்குனையாதலிற் பாட்டுசெல்வுழிச்செல்லல்வேண்டும்.

(க-து.) விருத்திஞானமும், அஞ்ஞானமுமுறவன்றென்பது. எனவே, சொரூபஞானமுமஞ்ஞானமுஞ் சத்துருவன்றென்பதாயிற்று. விருத்திஞானத்தோடன்றிச் சொரூபஞானத்தோறவாமளவுஞ் சிருட்டியாதி கடக்குமெனக்குறிப்பித்ததாம். சோதிஞானத்தையன்றிச்சொரூபஞானமும் சொரூபஞானத்தையன்றிவிருத்திஞானமு மின்றெனக்கூறவந்தது, அஞ்ஞானஞ் சிருட்டியாதிகள்செய்தற் குத்தரங்கூறவேண்டியென்க. விருத்திஞானமெழி லஞ்ஞானமிருந்தாலன்றே சேட்டையுண்டாம், இன்றுதலா வித்துவேயஞ்ஞானாசத்துக் கெல்லையென்க. அவனேயிவனென்றுற்போலச் சொரூபஞானமே விருத்தியின்ஞானமென்றிருத்தலின், எகாரந்தேற்றம். (எஅ)

எகூ - கவி, அ - கை.

[அஞ்ஞானஞ்சொரூபஞானத்தாலெரிபடாது விருத்திஞானத்தாலெரிபடுவதை யுபமானபூர்வமாக விக்கவியிற் கூறுகின்றார்.]

தருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாதது சொரூபஞானந்தானே
விருத்தி ஞானமாச் சுட்டதெப் படியெனில் வெய்யிலா லுலகெங்கும்
பரித்த சூரியன் சூரிய காந்தத்திற் பற்றியக்கினியாகி
யெரித்த வாறுபோற் சமாதியில் விருத்தியா லெரிக்குமென்றறிவாயே.

(இ-ள்.) தருத்திமாயையைச்சுழுத்தியிற்சுடாதது சொரூபஞானந்தானே விருத்திஞானமாச் சுட்டதெப்படியெனில், எ-து. தருத்திபோல்வதாவுள்ளமாயையாகிய வஞ்ஞானத்தைச் சுழுத்தியவஸ்தையி லெரிக்காதது சொரூபஞானந்தானே, அதுவிருத்திஞானமாகின் றெரித்ததெங்ஙனமோவதனைத்தெரிவிக்கவேண்டுமெனில்:— வெய்யிலாலுலகெங்கும்பரித்த சூரியன் சூரியகாந்தத்திற்பற்றி யக்கினியாகியெரித்தவாறுபோல், எ-து. லவஷ்ட்ணஜாணத்திரு லுலகமுழுவதுஞ்சுமந்தசூரியனைவன் சூரியகாந்தக்கல் விற்பற்றி யக்கினிவடிவமாகின் றஜானத்தையுமெரித்துவிட்ட தன்மையைப் போல,—சமாதியில்விருத்தியா லெரிக்குமென்றறிவாயே, எ-து, நிட்டையின்கண் விருத்திஞானக்கினியாயெழுந் ததனலஞ்ஞானத்தையெரித்துவிடுமென்றறிதி, எ-று.

தருத்திபோல்வது, உசுவாசநிசுவாசம். அதனையுடையதுடல், அவ்வுடலுனெனலறியாமை, அவ்வறியாமையேமாயை, இத்தமாயையேயஞ்ஞானம், ஆதலின் தருத்திமாயையென்றார். தருத்தியென்பதுதந்தருத்தி. இது போன்றதுமாயையெனப்பொருள்படும், படுதலாலுவமைத்தொகை, பண்புத்தொகையன்று. இது; காறுத்தானென்றாற்போலும். தனதக்கினையி லுலகைச்சுமக்கின்றவ னரசனென்றாற்போல, வெய்யிலாலுலகெங்கும் பரித்தசூரியனென்றிருத்தல்முறை. வெய்யிலாலென்பது பரித்தலென்னும் வினைகொண்டுமுடிய, எரித்தலென்னும்வினைகொண்டு முடித்தற்பிடமின்று. எரித்தலுக்காக்கின், பரித்தலுக்கேதுவெங்கே, இதுநிற்க. சூரியன் தானே பஞ்சையெரிக்காமல் சூரியகாந்தத்திற்பட்டெழுந்த தனதம்சாக்கினியாலெரிப்பன். அதுபோல, சொரூபஞானமானது தானேயஞ்ஞானத்தையெரிக்காமல் சமாதியில்தனிப்பட்டவிடத்துநித்த தனதம்ச விருத்திஞானத்தாலெரிக்குமெனமுடிக்க: இதனலஞ்ஞானத்திற்குறவுசொரூபஞானமும், பகைவிருத்திஞானமுமேயென வற்புறுத்தியதாகப்பெற்றும்.

(க-து.) விருத்திஞான்மே யஞ்ஞானாசமென்பது. சொரூபஞானம் சூரியன். பரிபாகவறிவு, சூரியகாந்தம். விருத்திஞானம், அக்கினி. மாயாகாரியத்தைதமாயையென்றது, காரணவாகுபெயர். வெய்யிலாலுலகெங்கும் பரித்தசூரியனென் றடைகொடுத்தது, வெய்யிலா லெரிக்காமலென்னுமெய்ந்தோன்றற்கென்க.

அ0 - கவி. அ - கை.

[விருத்திஞானமு மனத்தொழிலாலாயது, இதுவுங் கருமமன் ரே, இஃதஞ்ஞானத்தைக்கெடுக்குமன்ரே? இங்ஙனமிருக்க, கரு மம், அஞ்ஞானத்தைக்கெடுக்காதென்ற தென்னையெனவிளவுலை யிக்கவியிற்கூறுகின்ரூர்.]

அருளு மையனே திரிவித கரணத்தா லாகிய தொழிலெல்லாங் கரும மல்லவோ விருத்திஞா னமுமந்தக் கரணகா ரியமன்ரே வுரிய கன்மமஞ் ஞானத்தைக் கெடுக்குமென் ரேதிரு லாகா தோ பெரிய ஞானமென் றதற்கொரு பெயரிட்ட பெருமைய யுரையீரோ.

(இ-ள்.) அருளுமையனேதிரிவிதகரணத்தா லாகியதொழிலெல்லாங் கருமமல்லவோ, எ-து. சகலார்த்தத்தையு முணர்த்தியருளியகர்த்தனே! மனோவாக்குக்காயத்தாலாகிய திரியையனைத்துங்கருமமல்லவா: — விருத்தி ஞானமுமந்தக்கரணகாரியமன்ரே வுரியகன்மமஞ்ஞானத்தைக் கெடுக்கு மென்ரேதிலைலாகாதோ, எ-து. விருத்திஞானமென்பதும் மனதின்காரியம ல்லவா, இங்ஙனங்காரியமாக்கற்குரிய விருத்திஞானமென்னுங்கன்ம மஞ்ஞா னத்தைக்கெடுத்துவிடுமென்று சொன்னலாகாதோ:— பெரியஞானமென்ற தற்கொருபெயரிட்ட பெருமையையுரையீரோ, எ-து. மேலானஞானமென்ற தற்கொருபெரிய பெயரிட்டமகிமையைத் தேவரீர் தெரிவித்தருள வேண் டும், எ-று.

சமாதியாயினுந் திரிவிதகரணமொத்துச்செய்தலன்ரே, செய்தல்தொழி லன்ரே, இந்தத்தொழிலாலாயது விருத்திஞானமன்ரே, இந்தவிருத்தி ஞானமும், அந்தக்கரணத்தாலாகியபயனன்ரே, இந்தப்பயன், அந்தக்கரண காரியமன்ரே, இதனல் விருத்திஞானம் கருமமாயிற்று. இதைக்கருமமாக் கி, இந்தக்கருமத்தாற்கெடு மஞ்ஞானமென்ரூலென்னவழு, இங்ஙனமிருக்க, இதற்குப்பெரியஞானமெனப் பெயரிடுவதென்னை.

(க - து) விருத்திஞானமாகியகன்ம மஞ்ஞானத்தைக்கெடுக்குமென் பது. இன்னுங்கன்மமே முக்கியமென்ருனென்க. (அ0)

அக - கவி. அ - னை.

[விருத்திஞானமுங் கன்மமு மந்தக்கரணகாரியமெனல்மெய்யே
இதுவேசித்தாந்தமாயி னிருவகைதந்திரமெற்றிற்கென
விடைதரலை யிக்கவியிற்கூறுகின்ரூர்.]

விருத்தி ஞானமந் தக்கர ணத்தொடு விருத்தியா கிலுமைந் தா
வொருத்திமக்களே தங்களிற்பகைக்கின்ற துலகெங்குங் கண்டோமே
கருத்த னுகிய புருடதந் திரங்களாங் கருமங்க ளைவைபோ ல
வருத்த ஞானமோ புருடதந் திரமன்று வதுதந் திரமோ மே.

(இ - ள்.) விருத்திஞானமந்தீக்காரணத்தொடு விருத்தியா கிலுமைமந்தா, எ-து. ஞானபுத்திரா! விருத்திஞானமான தந்தக்காரணத்தோடுகூடிச் சம்பந்தித்த புடைபெயர்ச்சியாயினும்: — ஒருத்திமக்களேதங்களிற்பகைக்கின்றதலகெங்குங்கண்டோமே, எ-து.' ஒருஸ்திரியின்பிள்ளைகளே தங்களுக்குள்ளேயொருவரோடொருவர் பகைத்தடித்துக்கொண்டிறப்பதையுலகமுழுதுங்கண்டிருக்கிறோமே,—கருத்தனுகியபுருடதந்திரங்களாய் கருமங்களைவபோல, எ-து. கருமங்கள், அகம்பாவமுடையோனுகியபுருடனதுதந்திரங்களெனப்படும். அவைபோல:—வருத்தஞானமோபுருடதந்திரமன்று வஸ்துதந்திரமாமே, எ-து. அகமுகநாட்டத்தநிகவருத்தத்தாலெய்திய விருத்திஞானமோவெனில், புருடதந்திரமன்றுவஸ்துதந்திரமெனப்படும்.எ-று.

ஒருத்தி, காரணம். அவள்பிள்ளைகள், காரியம். அவர்களொருவரோடொருவ ரடித்துக்கொள்ளுதல், புடைபெயர்ச்சி. இறத்தல், அப்புடைபெயர்ச்சியின்பயன். இதுபோல, அந்தக்காரணம், காரணம். விருத்திஞானமும், கருமமும், காரியம். இவ்விரண்டுமொன்றோடொன்றுமாறுபடல், புடைபெயர்ச்சி. மாளல், இப்புடைபெயர்ச்சியாலாயபயன். விருத்தியாகிலுமென்பதிலும்மை, இழிவுசிறப்பு. புருடனுலாயதந்திரம், புருடதந்திரம். வஸ்துவாலாயதந்திரம், வஸ்துதந்திரம். கர்த்தனும்புருடதந்திரமெனவே, அகர்த்தாவாம்வஸ்துதந்திரமென்றுயிற்று. உபாதியானெனல், கர்த்தத்துவம், அறிவுயானெனல், அகர்த்தத்துவம். மனமுபாதிவழிவா நின்றியற்றல், கருமம். அறிவேவழிவாநின்றியற்றல், ஞானம். இவ்விரண்டும்மனத்தின்காரியமாயினும், அஞ்ஞானத்தைதீறுபடுத்தும்வலி யேற்றற்பாலதியாது. இதனைக்கணிப்பார் தத்துவஞானியரேயன்றி யேனையரல்லர். ஏனையருமெனின், சொல்லாலன்றியர்த்தத்தாலல்லர். ஒருத்திமக்களென்பதனுல், தானேதாயென்றமையும். தாயென்றுளாகூறவேண்டுமோ, கூறல், மிகைபடக்கூறலென்னுங்குற்றமாயமையும், ஆதலின்வேண்டுவதின்று. புருடனதுதந்திரமென்றுவதால், வேற்றுமைத்தொகை. புருடன்தந்திரம், புருடதந்திரமென்றுயது, சிலவிகாரமாமுயர்திணையென்பதினுலென்க. புருடனென்னல்போதும், கருத்தனுகியபுருடனென்றது; ஞாயிறு, திங்களென்னல்போதும்.செஞ்ஞாயிறு, வெண்டிங்களென்றுற்போலும். அடைவேண்டாதவற்றிற்கடைகொடுத்தல் மிகையாயினுஞ், சான்றோர்ற்றலின்வழுவமைதியென்க.

(க-து.) தந்திரமிரண்டாக்கியதா லஞ்ஞானத்துக்குச்சத்துரு விருத்திஞானமெனத் தானேயன்மையுமென்பது. தமதுபுண்ணியகன்மங்களேயெல்லாமீஸ்வராற்பணஞ்செயல், புருடதந்திரமெனல்மெய்யே. இதுபோல வஸ்துதந்திரங்கூலியெங்ஙனமாயதோவெனில், அல்லவில்லையாமுண்டெனற்கியையாது, நின்றுள்ளதுயாதோவதுவஸ்து. சித்தமுமந்தான்கின்வயமாகாதவ்வஸ்துவினேதுநிற்றலைச் சமாதியென்பர். பலகாலமுநேரேநிற்கநிற்க எவ்குமாநினைத்துள்ளசித்சோதியாதது, அன்னமலையாதுநின்றுள்ள சித்தத்

தின்கண் ணிருளில்மின்மினிபோலவும், சுடர்போலவும், வளர்பிறைவரிசை போலவும், சூரியோதயம்போலவும், பகலொளிபோலவும், கணக்கின்றிய சூரியர்போலவும், உபாதிரகிதப்பிரகாசம்போலவும், தனதமிசம்பிரதிப்லித் தல்தந்திரமெனவறிக. இம்முறையறியார்பால் கேட்டென்பயன் (அக)

அஉ - கவி. அ - கை.

[கருமத்தைத்தியானயோகமெனவும், ஞானத்தைஞானயோக மெனவுமிரண்டாக்கி யிக்கவியில்விடைகூறுகின்றார்.]

வகுத்த கன்மங்கள் செய்யவுந் தவிரவு மற்றுன்றுக் கவுங்கூடு மிகுத்த ஞானமப் படியன்று தியானமும் விவேகஞா னமும்வேறே சகத்தி லொன்றையொன் றுவிவன் பாவிக்குந் தியானங்கற் பித முகஸ்த மாக்கண்ட ஞானமே வாஸ்தவ மோகமா மயங்காதே.[யோக

(இ-ள்.) வகுத்தகன்மங்கள்செய்யவுந் தவிரவுமற்றுன்றுக்கவுங்கூடும், எ - து. சாண்றோரால்வகுக்கப்பட்டுள்ள கருமங்களாணவ, செய்யவுங் கூடும், விட்டுவிடவுங்கூடும், வேறுன்றுக்கவுங்கூடும்:—மிகுத்தஞானமப்படி யன்று தியானமும் விவேகஞானமும்வேறே, எ-து, மிகச்சிறப்பித்துள்ளஞா னமானது, அவைபோலப் புருடரால்வகுக்கப்பட்டதன்று (எங்ஙனமெனில்) தியானமென்பதூஉம், விவேகஞானமென்பதூஉம், வெவ்வேறுவகுக்கப்பட் டுள்ளனவாம்:—சகத்திலொன்றையொன்றுவிவன் பாவிக்குந்தியானங்கற் பிதயோகம், எ - து. உலகத்திலிவனென்றைமற்றுன்றுகப் பாவிக்குந்தியா னமே கற்பிதயோகமெனவும்:—முகஸ்தமாக்கண்டஞானமேவாஸ்தவமோக மாமயங்காதே, எ - து, பிரத்தியட்சமாகக்கண்டஞானமேயுண்மையான ஞா னயோகமெனவும்பெயராம். இத்துபோலத்தெளிவின்மையாலொன்றுமற் றுன்றுகக்கலங்காதே, எ-று.

இரண்டுமொன்றெனவிபரீதபுத்தியா னீமயங்காதேயெனினுமமையும். வகுத்தகன்மங்கள், மிகுத்தஞானமென்றிருத்தலின், ' புருடதந்திரத்தால் வகுக்கப்பட்டுள்ள கன்மங்களெனவும், வஸ்துதந்திரத்தால் சிறப்புமிக்குற்ற ஞானமெனவும்பொருள்கொள்ளினுமமையும். வகுத்த, மிகுத்தவென்றதிரு ஷ்பிறவினையாக்கினும். கன்மானுஷ்டான மிட்டங்காரணமாகவாதலின்வருத் தம்பற்றிச் செய்யவுந்தவிரவும்மற்றுன்றுக்கவுங்கூடுமெனவும், ஞானானுஷ் டானஞ் சுகப்பெருக்கேமேலிடச்செய்தலின், இட்டம்வைப்பெற்றிற்கு. வருத் தந்தட்டலெங்ஙனமென்பதுகொண் டப்படியன்றெனவும், சகளம்வேடமெ னக்கொள்ளாது வேடதாரியாகக்கோடலின், சகத்திலொன்றையொன்று விவன் பாவிக்குந்தியானமெனவும், வாஸ்தவஞானமெனினும்விவேகஞான மெனினுமொக்கும். தேவதத்தனே யவன்வேடங்காரணமாகக் குயிற்பியென் றும், சந்நியாசியென்றுங்காணு துள்ளவாறுவன்சுயவடிவைக்காண்டலேமகஸ்

தமாக்கண்டஞானமே வாஸ்தவமெனவுங்கூறினர். தியானமும், விவேக ஞானமும்வேறேயெனப்பகுத்துத் தியானங்கற்பிதயோகமெனவே, விவேக ஞான மெதார்த்தயோகமெனப்பெற்றும். கன்மம் ; தியானமெனவும், கற் பிதயோகமெனவும் பெயர்பெற்றுற்போல, ஞானமும்; விவேகஞானமெனவும், எதார்த்தயோகமெனவும் பெயர்பெற்றுநின்றது.

(க - து.) இங்ஙனமாயவேதுக்களாற் கன்மமும், ஞானமும், வேறே யென்பது. இன்பதுன்பங்களிடைவிடாதொழிவின்றி வினைவசத்தாலெய்தி னும், உள்ளக்களிப்பனுவேனுந் தாழா துயரா தொருபடித்தாநிற்கும். இங் ஙனநிற்றல் விழிப்பினுமுறக்கத்தினுமாயின் தள்ளுவதெங்ஙனம்? கொள்ளுவ தெங்ஙனம்? இதுயாதுகாரணமாக வெய்தியது ? ஞானங்காரணமாக. அந்தஞானம்; வாஸ்தவமாகவும், முகஸ்துதமாகவுமிருக்கு மபரோட்சஞான மன்றிப் பரோட்சஞானமன்று. இஃதென்னவலியது, மேல்கீழொப்பின் றெனச்செய்யும்வலியது. யாதாகச்செய்யும்வலியது ? சமஸ்தமுஞ்சின்மாத் திரமாகச்செய்யும்வலியது. இதுகாரணமாவெய்தியசுக மெங்ஙனமாயதோ? விதனையுடையாரோயறியவேண்டும். அயலாயினுமெங்ஙனமறிவர். முகஸ்த மாக்காணுஞான மத்துவிதியிடத்தும், கற்பிதயோக மேனையோரிடத்துமெ னக்கொள்க. அஃததிஷ்டானம், இஃதாரோபம். அது மாறுதது, இது மாறுவது. (அஉ)

அசு - கவி. அ - கை.

[மேற்கூறியவிருவகையோகத்தினிலக்கணங்களை யிக்கவியில் விளக்கி யஞ்ஞானநாசத்தையுங் கூறுகின்றார்.]

கண்ட றிந்தது ஞானங்கேட் டதுதனைக் கருதுபா வனையோகங்
கண்ட போர்சொலக் கேட்டது மறந்துபோங் கண்டது மறவாதே
கண்ட வஸ்துமெய் தியானவஸ் துக்கள்பொய் கறுவியஞ் ஞானத்
கண்ட வக்கணங் கொல்வது ஞானமே கருமமன் றறிவாயே. [தைக்

(இ-ள்.) கண்டறிந்ததுஞானங் கேட்டதுதனைக்கருதுபாவனையோகம், எ-து. பிரத்தியட்சமாகக்கண்டறிந்தது ஞானயோகமெனவும், ஒருவர்சொன் னவண்ணங்கேட்டதனைப் பாவிப்பதுபாவயோகமெனவும்பெயராம்:—கண் டபோர்சொலக்கேட்டது மறந்துபோங்கண்டதுமறவாதே, எ-து. கண்டவர் கள்சொல்லக்கேட்பதுமறந்துபோகும், அங்ஙனமாகாதுதான்கண்டது மறந்து போகுமா, மறந்துபோகாதே:—கண்டவஸ்துமெய் தியானவஸ்துக்கள்பொய், எ - து. நேரேகண்டவஸ்துயாதோவது மெய், பாவிக்கப்பட்டனவெனவை களேயவ்வைவகள்பொய்:—கறுவி யஞ்ஞானத்தைக்கண்டவக்கணங்கொல்வது ஞானமேகருமன்றறிவாயே, எ-து. அஞ்ஞானத்தைக்கண்டவக்கணமேயத னைச்சிதிக்கோறற்பாலது மெய்ஞ்ஞானமேயன்றிக் கருமமன்றெனவறிந. எ - று.

வஸ்து மனோவாக்குக்கெட்டுமெட்டாதென்பதைப்பற்றி முன்னரேகூறியிருப்பதால், இங்கேகூறவருவது முறையன்று. ஆயினும், இங்கேசற்று விசாரிக்குதும். காலதேசவஸ்துவையன்றிச் செகமெனல் தோற்றன்மாத்திரமுஞ் சொன்மாத்திரமுமாமுடிகின்றதே த, இப்போதுலகமெனற்குப்பொருளெங்கே? இதோதோற்றுகின்றதேதையெனில், அம்மூன்றிற்படாதுகாட்டலாமே? பொருளிடங்காலமென்னுங்காரணங் கருதாவிடத்துத்தோற்றலும், கருதியவிடத்துத்தோற்றுமையுமானால், அப்போதுலகிருப்புக்குமின்மைக்குங்காரணங் கருதாமையுங்கருதலுமாகின்றதே த, இவ்விருபுடைபெயர்தலுக்கும் வினைமுதல்மனமாகின்றது. இந்தமனதையன்றிப்புடைபெயர்ச்சியும், இந்தப்புடைபெயர்ச்சியையன்றிச் செகத்துண்மையுமின்மையுமெங்கே? ஆதலின், மனோகற்பிதமேயுலகமென்றுயிற்று. இதற்குதாரணம். வாசிட்டம், விரதசூயைகதையில், கூ-கவியிற்காணலாம். மனமானதுதானேசகத்தாகப் பரிணமித்துத் தானேதன்னைப்பார்க்கின்றதென்றல், தன்னைவிகற்பித்துத் தன்னைத்தான்காண்கின்றவிது; தன்னைத்தான்விகற்பிக்காமல் சுயம்பாகக் காண்கின்றதரிதோ? அங்ஙனந்திரும்பாதகுறையேயன்றிவேறன்று. இதற்குதாரணம்; வாசிட்டத்தில். "ஆன்றவம்மனம்பூர்ணத்தையடைந்து பூரணவெண்டிங்கள்போன்றுறவிளங்கு" மென்னுங்கவியாற்காணலாம்.

(க-து.) இவ்விருவகையோகவிலக்கணங்களைவிளக்கியதா லஞ்ஞானத்துக்குஞானமே சத்துருவெனத்துணிந்தாமென்பது. உலகத்தில், பெரும்பாலுமனேகர்வேதாந்திகளென மடாதிபதிகளாயிருந்து கண்டறிந்ததுஞானமென்பதற்குனை; வேதாந்தநூல்களாலறிவே யுண்மையெனக்கூறியிருப்பதை மனதில்திடபாவமாயுறுதிகொள்வதெனவும், மனனம், நிதித்தியாசனம், இதுவேயெனவும், இதற்குப்பய னீசனைவந்தித்தலேயெனவும், இதல்லவெனப்பரமஞானிகள்சொல்லினுங் கேளாதுதங்கள்மரபின்வழித்தா நடக்குதுமெனவுங்கூறுவர். இதென்னபுதுமை. கேட்டதுதனைக் கருதுபாவனையோகமெனற்கென்செய்வர். கண்டவஸ்துமெய் தியானவஸ்துக்கள்பொய்யென்பானேன். நிச்சயஞானம்பரோட்சமாயிற்றே, இந்தபரோட்சஞானமாகுமா? ஆகுமெனில், ரவியாதியின்றியிருள்நாசமாகுமா, யுத்தியாவது, அனுபவமாவதுண்டா? இதோகூரியனெனநினைத்தாலும், சொன்னாலுமிருள்போகுமா? போகுமானால், கருமமும், விருத்திஞானமுமென விரண்டாகக்கூறுவானேன். அறிவேயுண்மையெனநினைவால் திடபாவங்கொள்ளில், அறிவு, திரிசியங்களிலொன்றுய்முடியும்; அல்லது பாழாகவேனும், நினைவாகவேனுமுடியும். பாழெனில், மாயை. திரிசியமெனிலுலகம். நினைவெனில் தனதுருக்குமதேதகும். அறிவிங்ஙனமாயதன்றே? என்னை, "அறியாப்பொருள்காரணமாயைகுறித் தறியும்பொருள்காரியமாமுலகிற், றெறியாற்றிகழ் நான்மறையந்தமெலா நீயன்றெனவோதுநிரந்தரமே." எ - ம்.. "அறியும் பொருளன்றறியாப்பொருளன் றறிவாகியநீயெனுமப்பொருடான்; பொறி

யின்வழிநின்றறியும்பொருளோ போதக்கண்விழித்தறியும்பொருளே" என-ம். கூறியவற்றுற்காண்க. தேகாதிதத்துவக்குழாங்கள், அறிவாலுல்சிவமறிவாகலாம். சிவதரிசனத்தில்தத்துவங்களும், தத்துவதரிசனத்திற் சிவமும பாவமாயிற்றே, இரண்டையுமததுவாயிருந் தறிந்ததறிவாயிற்றே, அஃதிருந்தபடியிருக்கின்றதே, அது சிவமாகுமா, தத்துவங்களாகுமா, ஆகாதே; இவவிரண்டவசரநிலையாயும், அன்றுயுமிருக்கின்றதே. இவவறிவே, சகலநாணுயிருந்து மாங்காங்கெட்டப்புகில் தூரதூரமாகவகன்றேகின்றதே, இதனைத்தரிசிப்பதற்கன்றே, சிரவணமனனதிகள்செய்வது. இவவறிவைத்தவிரமேலாயதென்னையுளது. இருக்கின்றதெனின், அதுதானு யிருந்தறிவதுமிவவறிவுதானே. அன்றெனின், கருமானுஷ்டானமும், ஞானுஷ்டானமும்புரியுமறிவுபயன்வேண்டியன்றே? அப்பயனறிவுக்கன்றே, இம்மைப்பயனுமறிவுக்கன்றே, அப்பயனிப்போதும், இப்பயனப்போதுமுண்டா? பயனென்றிலொன்றில்லாதாயினு மதனையனுபவிக்குமறிவெப்போதின்று. எப்போதுமிருக்கின்றதெனின், இதனை இலட்சியார்த்தத்தாற்காணுது பராக்கிற்செல்வதென்னை. இவவறிவையன்றி நானெனற்குப்பொருள்கணடிலமே. உபாதிகாணுகுமா? ஆகாதவுபாதியைநானெனப்பார்ப்பதுபோல, நானெனலெவிசாரித் துண்மையாகப்பார்க்கவேண்டுமன்றே? எங்கேபார்க்கின்றனம், தன்னைவிட்டுத்தனக்கயலைநாடப்புறப்பட்டனமே, இதுதானுவேதாந்தியென்பதற் குபநிடதசம்மதம். நன்றுநன்று, இப்போதேயிப்பெயரையொழிக்காவிடில், நம்பியபடிப்பார்கெடுவர். இதுதிண்ணம். இதுநிற்க. இவரிப்போதேயுலகமித்தையாக்கற்கறியா ரெங்ஙனம்பிரமமாக்குவர். மித்தையாக்குவரெனின், இவவுலகஞ் சூழுத்தியிலில்லையெனக் கூறுவதாமித்தையாக்கல், நன்குநன்கு. இப்போதுமில்லாதகானனீரை யுவமைகூறவந்த துலகமிப்போதுமில்லையெனற்கன்றே. இக்காலத்தில்கேட்கி லக்காலத்தில்கூறவருவது; கல்வித்தேர்ச்சியையுமனுபவத்தெளிவையுங்காட்டுகின்றதே, இதுநல்லவேதாந்தம். இங்ஙனங் கூறியுடலெவளர்த்தலேயன்றி யுணர்வைவளர்த்தலாகுமா? இனியாவதிம்மடமைமரபைவிட்டுத் தன்னையுள்ளங்கைநெல்லிக்கனிபோற் காட்டவல்லாரைத் தேடியடுக்கிற் பிழைக்குதும், அன்றேற்கெடுதும். இஃதகங்காரத்தாற்கூறியதன்று. துக்கநிவிர்த்திக்கென்க. நாமேகமெனலெச் சொல்லாற்காணுது, கண்ணுற்காணத்துணியினதுபயன்படும்." கண்டவஸ்துமெய் தியானவஸ்துக்கள்பொய் யென்பதிலையமென்னை? தன்னைத்தான்காணுதளவும், செகசீவபரஞ்சத்தியம். காணின்மித்தை. எனவே, காணுமையேசத்தியமெனவும், காட்சியேமித்தையெனவுமாயிற்று. ஆகவே, காணுமையுங்காட்சியுந்தனதுபுடைபெயர்ச்சி. அப்புடைபெயர்ச்சிக்குவினைமுதல்தான். இங்ஙனந்தன்னையன்றிவினைநிகழ்தலும், நிகழ்தலையன்றிச்சத்தியமுமித்தையுமில்லையெனக் கண்டாம். இதனினுமிக்கவித்தையெங்குயில்லை. இதுபிறவிதவிர்க்கும். ஈஸ்வராரர்ப்பணஞ்செய்தலாகிய புண்ணியமோ, அதன்பலனையனுபவிக்கப்பிறவிதரும். ஆதலின் "பிறப்பென்னுஞ்சேற்றைத்தை" யென்றார். கேட்டவண்ணம்பா

வித்தல்யோகம். பாவித்தவண்ணங்காண்டல்ஞானம். இங்ஙனங்காண்டலைத் தான்ஞானகதப்பிரத்தியட்சமென்பர். பாவனையையன்று. (அசு)

அசை - கவி. அடி - னை.

[தியானமசத்தியமென்ற லதுகாரணமாவெழுமுத்தியு மசத்தியமன்றேறுவென்றவிஞவிற்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்.]

சருவ முத்தியைத் தருகின்ற தியானமுஞ் சத்திய மன்றென்றல், சருவ முத்தியுஞ் சத்திய மன்றென்று சங்கியா தேகீகே, (மன்றே, ஞருவங் கேட்டவன் றியானிக்கும் பொழுதிலவ் வுருவம்வாஸ் தவ யுருவ மாகுமப் பொழுதுகண் ணுற்கண்ட வுருவம் வாஸ் தவமாமே.

(இ-ள்.) சருவமுத்தியைத்தருகின்ற தியானமுஞ் சத்தியமன்றென்றல், எ - து. சர்வமுந்தானுகவிளங்குமுத்தியை நேரேதருகின்றதியானயோகமுமித்தையாமெனத்தேவரீர்கூறினால் :—சருவமுத்தியுஞசத்தியமன்றென்றுசங்கியாதேகீகேள், எ - து. சர்வமுந்தானுவிளங்குமுத்தியுந் தியானங்காரணமாகவந்தபடியாலதுவுமித்தையாகின்றதேயெனச் சங்கியாமலேயான்சொல்வதைகீகேளுதி:— உருவங்கேட்டவன்தியானிக்கும்பொழுதி லவ்வுருவம்வாஸ்தவமன்றே, எ - து. பிரமஸ்வரூபமிங்ஙனமிருக்கின்றதெனக் கேள்வியுற்றவனதனைச்சிந்திக்கும்பொழுதி லதுவிளங்காமையா லப்போதத்தப்பிரமஸ்வரூபமவனுக்கு வாஸ்தவமல்லவே, ஆயின்:—உருவமாகுமப்பொழுதுகண்ணுற்கண்ட வுருவம்வாஸ்தவமாமே, எ - து. தானேயந்தப்பிரமஸ்வரூபமாகும் பொழுது பிரத்தியட்சமாக ஞானக்கண்ணுற்கண்ட அவவடிவமப்போதுண்மையாகாதா, உண்மையாகுமே, எ - று.

அதற்கு உத்தரமிருப்பதாற்சங்கியாதேகீகேளெனவும், கேள்விப்பட்டுத்தியானிக்கில், அதுசாதனமன்றே, சாத்தியப்பட்டவிடத்தன்றே வதுதானுகவிளங்கும். அப்போதுவிளங்காததுற்பொய்யானதும், விளங்கினதால் மெய்யானதுமவனுக்கன்றி வஸ்துவுக்கன்றே. ஆதலின், தியானிக்கும்பொழிதி லவ்வுருவம்வாஸ்தவமன்றேயெனவும், கண்ணுற்கண்டவுருவம் வாஸ்தவமாமேயெனவுங்கூறினர். காரணம், தியானம். காரியம், முத்தி. காரணம் பொய்யாகும்போது காரியமெய்யாகுமாவென்பதுசங்கை. இதனைத் தானேயாசங்கித்தார். தியானமேமுத்தியென்பதை மறுத்தற்குத் தியானமித்தையென்றதென்க. தியானமேமுத்தியாயின் மேலேஞானமெற்றிற்கு? தியானத்தாற்பரோட்சமும், ஞானத்தாலபரோட்சமுமெனப்பிறரும். பெறவே, தான்சுயம்பிரகாசமாகவிளங்கல் வாஸ்தவம், அன்றுகவிளங்கல் வாஸ்தவமன்மை யெனலெக்கண்டாம்.

(க - து.) பிரத்தியட்சஞானமேயஞ்ஞானாசமாமென்பது. பிரத்தியட்சஞானமாயின்திரிபுடியாமேயெனின், சமஸ்தமுஞ்சொப்பிரகாசமாகவிளங்கிலயலெனலேது? இல்லையே. ஆதலின். திரிபுடிநாசமெனக்கொள்க. எங்ஙனமெனின், ஞாதுரு, ஞானம் ஞேயமென்பவற்றுள், இடையிலுள்ளஞானத்தைதவிளக்காவிடில், திரிபுடியுண்டு. விளக்கில், எங்கே? ஆதலின், அஞ்ஞானவிமோசனத்துக்குக் கண்ணுற்கண்டவுருவம் வாஸ்தவமெனப்பட்டது. விரிக்கிற் பெருகும். (அசு)

அரு - கவி. அ - கை.

[தியானிப்பானுக்குத்தியானமித்தையாயினும் அவன் தியானித்த வண்ணம் பெத்தமேனுமுத்தியேனுமெய்துமெனலே யிக்கவியிற்கூறுகின்றார்]

சடமதாகிய தியானமெய் யாகிய சர்வமுத் தியைநல் குந்,
திடமதானதெப் படியெனி லவரவர் தியானமே பிறப்பா கு, (தா,
முடலமாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடல்களா குவர் மைந்
தொடர்ப வங்கெடச் சொரூபமே தியானிக்கிற் சொரூபமா குவர் மெய் யே.

(இ - ள்.) சடமதாகியதியானமெய்யாகிய சர்வமுத்தியைநல்குந்திடம தானதெப்படியெனில், எ - து. சடமாகின்றுள்ளதியானமானது, சர்வமுந்தானுகவிளங்குமெய்யாகிய முத்தியைத்தருமென்றதிடத்தை யுறுதியாகக் கொள்வதெங்ஙனமெனக்கேட்பையாயின்:—அவரவர்தியானமேபிறப்பாகுமுடலமாசையாற்றியானிக்கிற்றியானித்தவுடல்களாகுவர்மைந்தா, எ - து. ஞானபுத்திரா! எவரெவரெங்ஙனமெங்ஙனந்தியானிக்கிறார்களோ அவரவர் தியானத்தின்வண்ண மங்ஙனமங்ஙனமாயபிறப்பெய்தும். எங்ஙனமெனில், தேகவாசைகொண்டுசிந்திக்கில் சிந்தித்தவண்ண மதற்குரியவுடல்களெடுப்பார்கள்:— தொடர்பவங்கெடச்சொரூபமேதியானிக்கிற் சொரூபமாகுவர் மெய்யே, எ - து. வீடாதுதொடர்ந்துவருகின்ற பிறவிகெடவேண்டிப் பிரமசொரூபத்தைத்தியானஞ்செய்யிற் பிரமசொரூபமாகவிளங்குவ ரிதுகத்தியமே யிதனைச்சிந்தித்தறிதி, எ - று.

சடமதாகியதியானமென்றது; தியானந் தன்னையு மற்றுள்ளனவையுமறியாதெனவும், மெய்யாகியசர்வமுத்தியென்றது; தானன்னியமாகாது தானேதானுகவிளங்குமெனவும், பொருள்படுமாறுகாண்க. உயிரொனல், உணர்வு. என்னை, "உணர்வியலாமுயிரொன்றுமொழித்த, வுடன்முதலனைத்து முயிரல்பொருளே" என்றுர்பவணந்தி. இதில், உணர்வியலாமுயிரென்பது அறிவுமயமாகியவுயிரெனக்கொள்க. இதுபற்றி யோரறிவுயிர், "புன்மரமுதலவுற்றறிதியுமோரறிவுயிரெனவும்", ஈரறிவுயிர், "முரணந்தாதிநாவறிவொடுரறிவுயிரெனவும்", மூவறிவுயிர், "சிதலெறும்பாதிமூக்கறிவின்மூவறிவுயி

னெனவும்", நாலறிவுயிர், "தும்பிவண்டாதிகண்ணறிவிலுலறிவுயினெனவும்,', ஐயறிவுயிர், " வானவர்மக்கணரகர்விலங்குபுள், ளாதிசெவியறிவோடையறி வுயிரே", எனவுங் கூறியவாறுகாண்க. இங்ஙனமாயது; "மெய்நாலூக்குநாட் டஞ்செவிகளி, ரெண்றுமுதலாக்கீழ்க் கொண்டுமேலுணர்தலின், ஓரறிவாதி யாவுயினொந்தாகு" மென்பதனுலென்க. சத்தபரிசாதிகளையுணர்தலைப்பற்றி யுயினைவகையெனவும், தோற்றபேதத்தாலுயிரைவகையெனவும், உபாதி பேதத்தாலும், குணபேதத்தாலும், சத்தபேதத்தாலும், உணர்வுபேதத்தாலு மொவ்வொருதோற்றவுயிர் பற்பல பேதமெனவுங் கொண்டதேயன்றி, வேறுகாரணம் பற்றியன்றே. எந்தவுயிருக்கெந்தபிறவிசுதந்தரம்? இன்றே. உபாதிதோற்றத்தானும். வினைக்கீடாகப்பிறவிமாறுவதானும். மேல் கீழதாக வும், கீழ் மேலதாகவும், உயிராகின்றனவன்றே? உயிரிங்ஙனமாதற்குக்கார ணம்; கடவுளிஷ்டமெனில், பாரபட்சதோடமெய்தும். சுபாவமெனின், அந் தந்தவுயிரந்தந்தத்தோற்றமாகவே மாறுதொருபடித்தாயிருக்கவேண்டும், அங் ஙனமின்றுதலால்தோடமெய்தும். நிலையாதுமாறுதலே சுபாவமெனின் முடி வின்றும். முடிவின்றுகவே, ஒவ்வோருயிரும்பிறவியால் மாறிமாறிநிலையாத லையுமன்றே? ஏற்றனம். ஓவவோருயிர்க்கும்பிறவியளவின்றென நின்மொழி கட்டுகின்றனவன்றே? மாறிமாறிப்பிறவியெய்தற்குயிரெப்போதுமிருக்கவே ண்டுமன்றே? இங்ஙனமிருக்க, உயிர்முன்பின்னில்லாததெனக்கூறலாமா, கூறுகின்றனரே, இதுபோலவே யவரதுவாதமுமிருக்குமெனவறிக. மீண்டுஞ் சுபாவமெனில், முற்று நிலையாவாததோடமெய்தும். வினையெனின், எதுகா றும்.விருப்புவெறுப்புள்ளளவும்.இதுவெதுகாறும்,பொருளல்லவற்றைப்பொரு ளாகக் கருதுமறியாமையுள்ளளவும், இதுவெதுகாறும், தானேதானுகவிளங்கு மளவும். அப்பாலென்செய்தும். வினுவொழிக. மீறிவினுவலெல்லாஞ்சொல் வாதமாயமையும். உயிர்க ளிந்நிலைகள்பேதமறியாததால், இவற்றுளொன் றையவாவி வினைபுரியுமன்றே? வினைபுரிதல், சங்கற்பித்தல. அதாவது; சிந்தித்தல். சங்கற்பம், சிந்தித்தல், தியானம், இவையனைத்துமொருபொ ருட்கிளவி. வினைபுரிந்தாலன்றே வதன்பயன் தமக்கெய்தும். எய்தினு லன்றே, அனுபவித்துத்தீர்த்தல். அனுபவித்தற்குத்துணைக்கருவிபிறவியன்றே ண்டுமன்றே. இதுதியானங்காரணமாகவெய்தற்பாலதாதலின், பந்தத்துக்கே னுமுத்திக்கேனு மவரவர்தியானமேபிறப்பாகுமென்றூர். தானேசமஸ்தபோக மூமாகப்பரிணமித்திருத்தலைத் தானென்றறியாது. தனக்கயலெனக்கருதலள வு மதனைச்சுகிக்க வுயிர்கள்தாவுமன்றே? அங்ஙனந்தாவுதலேதியானம். அந் த்தியானபேதமளவின்னம்யின், உடலமாசையால்தியானிக்கில் தியானித்த வுடல்களாகுவரென்பதூஉம், சமஸ்தபோகமுந் தனதுபரிணமிப்பேயெனத் தெளிந்தார் மீண்டுமையலெனாடுவரோ. தன்னைத்தானடையத்தியானிப்ப ரன்றே, ஆதலின், தொடர்பவங்கெடச்சொரூபமேதியானிக்கிற் சொரூப மாகுவரென்பதூஉம்பொருந்தும்.

(க - து.) இருவகையுளைதைத் தக்கவாறுதியாணிக்கின்றனரோ, வதுவந் தேதிருமென்பது. இதனைமறுக்காததற்கேதுகூறியதைக்காண்க. "பொரு ளைப்பொருளாகக்காணுவளவும், அவ்வாகாசத்துக் கிடமின்று. இடமின்றுவ ளவும் போகதாகாசியாது. காசியாவளவும், அதனையநுபவிக்க யாதாலும் வினைபுரியவரும். வருமளவும்பிறவியகலாது. அகலாதுபற்றி யிங்ஙனங்கூறி னரென்க. இப்போதேபற்பலபிறவிபேதமும் தேகபேதமும் கோறிக்கை பேதமும், அடங்காவவாபேதமும், சங்கற்பபேதமும், முயறசிபேதமுமாயு யிர்களிருக்க, இன்னும்பிரத்தியட்சம் யாதுக்கு. (அடு)

அசு - கவி. அ - கை.

[தான்பிரமமாதற்குத்தியானமேபோதுமெனின் விசாரமும்
ஞானமுமெற்றிற்கென்ற வினவுக்குவிடை
யிக்கவியிற்கூறுகின்றார்.]

பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரமமா குவரென்று
னரசு ரீரமாங் குரவனே விசாரமேன் ஞானமே னென்னுதே
பரம பாவனை பரோக்ஷமாம் பின்பந்தப் பரோக்ஷமே யபரோட்சந்
திரவியு சாரமா ஞானமே முத்தியாந் தீர்வையீ தறிவா யே.

(இ-ள்.) பிரமரூபத்தைத்தியானித்தபேர்களும் பிரமமாகுவரென்றல் நரசரீரமாங்குரவனே விசாரமேன்ஞானமேனென்னுதே, எ-து. மானிடவடி வாயெழுந்தருளிய குருநாதனே ! பிரமஸ்வரூபத்தைத்தியானித்தவர்களும் பிரமமாகவேவிளங்குவரெனத் தேவரீர்கூறினால், மேலேவிசாரமும், ஞான முமெற்றிற்கோவெனச் சங்கியாதுநிற்றி, யான்கூறுவனதனைக்கேளுதி:—பர மபாவனைபரோட்சமாம்பின்பந்தப்பரோட்சமேயபரோட்சம், எ-து. பிரமத்தி யானமேபரோட்சஞானமாம், பின்னரந்தப் பரோட்சஞானமேயபரோட்சஞா னமாம்:—திரவிசாரஞானமே முத்தியாந் தீர்வையீதறிவாயே, எ - து. திட மாக விசாரிக்கும்விசாரத்தாலான வந்தவபரோட்சஞானமே நிரதிசயானந்த மாம், இதுவேதீர்ப்பென வறிதி, எ-று.

அறிவினதுபிரதிபலனைமாதலை னைவேதத்துயலைமையறிவாம். நூதனருதியுத தியனுபவத்துணிபாதலானும், சோதனைஞாயம் பொருத்தமுகத்தாலாய்ந்த தெளிவாதலானும், அறிவேபிரமமெனப்பெற்றும். பெறவே, தினைபுாலிட மாயுமன்றுயுமிருத்தலி னெல்லாமாய்ல்லவுமாயிருந்த இஃதெனச்சுட்டாது கூறினர்சான்றோர். ஆயினும், அஃதறிவேயெனக்கண்டாம். கண்டதாலிது மறுத்தற்பாலதன்று, மறுப்பார், தெவேர். என்னை, "பூதாதியைந்து பொ றிபுலன்களெல்லாஞ்சித் தேதா தியந்தமினையெல்லாஞ்சித் தோதரிய கற் பனையுஞ்சித்தனைத்துங் காண்பானுங்காட்சியுஞ்சித் தற்பமும்வேறில்லா மையால்", என்றார்சொரூபானந்தர். "ஞானமேபிரமமென்ற முதன்மொழி

யின்பயன்கேள்,'' இதனைமகாவாக்கியத்திலும், அறிவேபரமென்பதைப்பற்றி முக்கியமாய், வாசிட்டத்தில், தேவபூசைகதையிலுங் காணலாம். சகல மதத்தரு மெதனைத் தெய்வமெனினுஞ் சொல்லாலன்றிப்பொருளால்ன்று, சொல்லாலெனின், அறிபடுபொருளும் நினைவும் பாழுமாம். பொருளாவது, மெய்யுணர்வு. அதாவது; படிப்பானைப்படிப்பதெந்தவுணர்வோ வந்தவுணர்வு. இங்ஙனமாயவுணர்வேதெய்வமன்றி வேறென்பவெல்லாஞ் சோதனையினிலையுறுதுதத்தளித்தழியும். ஆதலினறிவேதெய்வமென்றும். எல்லாவுயிருமறிவாதலின், ஒவ்வோருயிரும், தன்னைத்தானொனச்சிந்தித்தல், தியானம். அஃதறிவெனவிசாரத்தாற்றேர்ந்தும் விளங்காமை, பரோட்சம். அதனைத்தக்கவாசாலுல்விளக்கிக்கொள்ளுதல், அபரோட்சம். அதோடுநில்லாது நானெனலாதியாக வனைத்தையுமேல்கீழொப்பின்றி யவ்விளக்கமாகப்பன்னுளதிகவருத்தங்கொண் டகழுகமாகப்பழகியாக்கல், ஸ்திரவிசாரமானானம். அப்போதன்னியஞ்சிறிதுபின்றித் தானுய்த்தானன்றுய்விளங்கலின், அதுவேதுக்கநிவிர்த்தியுந் தடையற்றவானந்தமுமாம், இங்ஙனமாயவானந்தமேதானுதல். இங்ஙனந்தானுதலேமுத்தி. இதறியாது பலருஞ்சொல்லப்பட்டமுத்திகளிங்நிலைக்குமாறுயவாதலானும், இதுபோற்பழமையன்றுமையானும், அந்நியமாதலானும், அஃதாகாவென்க. இதுதீர்வையென்பார், பரமபாவனை பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமேயபரோட்சந் திரவிசாரமானானமே முத்தியாந்தீர்வையென்றூர். இந்நூலாசிரியர்; பரோட்சமேயபரோட்சமெனத் தேற்றேகாரங்கொடுத்தமையின், பரமபாவனையேபரோட்சம், பரோட்சமேயபரோட்சம், அபரோட்சமேதிரவிசாரமானானம், திரவிசாரஞானமேமுத்தியெனத் தேற்றேகாரங்கொடுத்தனம். இங்ஙனங்கொடுத்த தொன்றுக்கொன்றுதொடர்பாதல்பற்றியென்க. இத்தொடர்புசெல்லுமவழிச் செல்லவறியாதார், ஆங்காங்குபயனிதுவேயெனநிற்பர். நிற்பதால், அவ்வவவவசரத்தைமுத்தியென்பர். இவைமுத்தியாகுமா? ஆகாமை பற்றி யிவற்றைப்பதவிமுத்தியென்றனாறிஞர். இவவுளவறிந்தவராதலினிவற்றைத்தீர்வையென்றுதொழிந்தனர்.

(க - து.) பிரமஸ்வரூபத்தைத்தியானிக்குந்தியான முள்ளவாறெய்தினதோடுநில்லாததன்வழித்தாச்செல்லினிவ்வவசரநிலைகளை முறையேதந்துவிடுமென்பது. இன்னுந்தொடர்பிருக்கப் பிரமத்தியானம்பிரமமாக்குமெனல், துணிவுபற்றி. (அசு)

அள - கஷி. அ - கை.

[அஞ்ஞானத்தைக்கெடுத்தபின்னர்விருத்திஞானமிருக்க எங்ஙன மனுபவங்கைகூடுமென்ற வினாவிற்குத்தர மிக்கவியில் கூறுகின்றூர்.]

வீட தாம்பரி பூரண சொரூபத்தில் விருத்திஞா னமுங்கூடிச்,.
சேட மாகினு லகண்டமா மனுபவ சித்தியெப் படியென் றூற்

சாடி நீர்மண்ணைப் பிறித்தகேதற் றும்பொடி தாணுமண் ணெடுமா யு மூடி ஞானமு மறிவிலா மையைக்கெடுத் தொக்கவே கெடுந்தா னே.

(இ - ள்.) வீடதாம்பரிபூரணசொரூபத்தில்விருத்திஞானமுங்கூடிச்சேட மாகிலுலகண்டமாமனுபவ சித்தியெப்படியென்றால், எ - து. முத்திக்கு முதற்காரணமாகிய பரிபூரணசொரூபத்தி லுற்ஞானத்தைக்கெடுத்துத் தான் மாத்திரமிருந்தின்றுள்ளவிருத்திஞானமானது, தாணுமப்பிரமத்தோடுகூடி விசேடமாயிருக்குமாலால் துவிதமாகின்றதே, துவிதமாலால், எங்ஙனமகண் டாகாரவனுபவசித்திவாய்க்கும். வாய்க்காதே, இதற்கென்செய்துமெனக் கேட்பையாயின்:—சாடிநீர்மண்ணைப்பிறித்தகேதற்றும்பொடி தாணுமண்ணெ டுமாயும், எ-து. சாடியிலுள்ளகலங்கனீரை, நீர்வேறழுக்குவேறுகப்பிரித்த கேதற்றுங்கொட்டைப்பொடியானது அவ்வழுக்கோடுதாணுமொக்கமடியும்:— ஊடிஞானமுமறிவிலாமையைக்கெடுத் தொக்கவேகெடுந்தானே, எ-து. (அது போல)விருத்திஞானமு மஞ்ஞானத்தோடெதிர்த் ததனைநாசஞ்செய்து, அத னைடுதாணுமொக்கவேமடியும், எ - று.

பரிபூரணசொரூபமாதலேமுத்தியாதலால் இதனைமுன்பின்னுக்கிய து, காரியத்தைக்காரணமாகவுபசரித்தற்கென்க. வீடு, முத்தி. பரிபூரணசொ ரூபம், பிரமம். முத்திக்குப்பிரமம்பேதமெனக்கொண்டு நிமித்தகாரணகா ரியமென்ப ரந்நிலையறியார்போலும். எந்தவறிவினுல்தத்துவங்களெல் லாம் விசாரித்துத்தானல்லதானல்லவெனச்செல்லுகின்றதோ, அந்தவறிவை விடநியதிகளையப்பெற்ற தத்துவக்குழாங்கள்வேறுகுமாலால் பிரமமும் வேறு யிருக்கலாம். அங்ஙனமின்றே யிங்ஙனமிருக்க. சுசாதிகவிசாதிகசுகதபேத மயமாதல் தத்துவக்குழாங்கள். அன்றுதல், பிரமம். அந்தமயமாகின்றதும் இந்தமயமாகின்றதும், அறிவாதலால், அறிவேபிரமமுதலியவனைத்துமென வும், ஒன்றிலொன்றில்லாமையறிவிலாதலால், அறிவேயுண்மையெனவுங் கண்டாம். இங்ஙனமாயங்கிலையிவனின்னுமாகாமையா லிங்ஙனம்விளுவின னெனப்பெற்றும். பொருளல்லவற்றைப்பொருளென்றுணர்ந்ததும், பொரு ளைப்பொருளென்றுணர்ந்ததுந்தாணுதலா லறிவேயஞ்ஞானமும் ஞானமு மென்றுயிற்று. ஆகவே, தன்னுல்வினைந்தவஞ்ஞானந் தன்னுல்வினைந்தஞா னத்தாலழியும்போது, தன்னைவிட ஞானம்வேறன்றுதலா லஞ்ஞானத்தை யழித்துத் தாணுமதமேலுடொக்கமாயுமென வுபமானபூர்வமாக விடைதந்த தெனத்தெரிந்தாம்.

(க-து.) ஞானமுஞ்சேடமாகாதழியுமென்பது. சேடம், மிச்சம். இந்த மிச்சம், பரிபூரணமெனற்குத்தண்டம். (அ)

அஅ - கவி. 'அ - கை.

[இங்ஙனமிருக்கச் சீவன்முத்தரனுபவமெங்ஙனமோவென
விஞவலுக்குவிடையிக்கவியிற்கூறுகின்றார்.]

இந்த நிச்சய முத்தரு ளனுபவ மிருப்பதெப் படியென்றற்
சிந்தை யற்றபூ மண்டல விராசனுஞ் சிசுவும்போற் சுகமாவர்
பந்த முத்திகண் மறந்துபோ முண்டென்று பலர்சொனி னகையா வ
ரந்த ரத்தையுண் டுமிழ்ந்ததோர் கொதுகெனு மவர்களை நகையா ரோ.

(இ-ள்.) இந்தநிச்சயமுத்தருளனுபவமிருப்பதெப்படியென்றால், எ-து. இங்ஙனமாயதீர்ந்தநிலை சீவன்முத்தருக்குளனுபவமாக விருப்பதெங்ஙனமோ வெனக்கேட்பையாயின்: — சிந்தையற்றபூமண்டலவிராசனுஞ் சிசுவும்போற்சுகமாவர், எ-து. பயசிந்தையற்ற திரிலோகமண்டலாதிபதியாகிய சக்ரவர்த்தியும், இதுநன்குதீதென்றறியாத சிசுவும்போலச்சுகரூபமாவர்:—பந்தமுத்திகள்மறந்துபோமுண்டென்று பலர்சொலினகையாவர், எ-து. பந்தமுமுத்தியுமறந்துபோகும், பலருமுண்டென்றுசொல்லுவராயின்சிரிப்பர்:— அந்தரத்தையுண்டுமிழ்ந்ததோர்கொதுகெனு மவர்களைநகையாரோ, எ-து. ஒருகொசுகானதாகாயத்தை யெடுத்துவாயில்போட்டுத் துப்பிவிட்டதென்று சொன்னலவர்களைப்பார்த்தார்தான்சிரிக்கபாட்டார்கள், எ-று.

சிந்தையற்றபூமண்டலவிராசனுஞ் சிசுவும்போலெனவுவமைகூறியது; அரசனுக்கெதிரின்மைமேபால் மகான்களுக்குச்சுசாதிவிசாதிசுகதபேதங்களின்மையினனும், சிசுவுக்குப்பகுப்பின்மைமேபால் மகான்களுக்குத்தம்மைத்தவிரச்சிற்றறிவுபேரறிவென்பதூஉம், சிற்றின்பம் பேரின்பமென்பதூஉம், ஆகியபகுப்புச்சிறிதுமின்மையினனும், பந்தமுத்திகள்மறந்துபோமென்றது; அஞ்ஞானத்தாற்பந்தமும், ஞானத்தால்முத்தியுமெய்தல்மரபு. இங்ஙனமிருக்க, இவர்களுக்குஞானபேதமேது, தம்மைத்தவிரவிவவிரண்டுபேதமுமின்மைபற்றி மறதிக்கேவருதலானும், உண்டென்றுபலர்சொலினகையாவரென்றது; சொல்லுவார்மடமைபற்றியாதலானுமென்க. இங்கே அந்தரமென்பது, ஞாலகாயத்தை. கொசுகென்றது, தானலதைத்தானென்போனை. ஆகாயமாகியவிபுத்துவத்தில் கொசுகெனலோர்பரமாணுவினும் பரமாணுவெனத்தகுமா? இஃதாகாயத்தைவிழுங்கியுமிழ்ந்ததென்றலென்னவியப்போ, அதுபோல, சொல்லாலன்றிப்பொருளாற் டார்த்தாயினுங்கேட்டாயினுமறியார், இவர்களந்தப்பரமாகாயத்தையன்றி யிவர்களுளரோ, இலரே. இவர்களைதவிழுங்கியுமிழ்ந்தாலெனல் வியப்பன்றே, என்றுரைக்க. ஞாலகாயத்தையெடுத்துவிழுங்கல், முத்தி. உமிழ்தல் பந்தம். இதனை யார்தானறிவர், மாமரமேலானெலைக்குறிக்கின்றது. இவர்களவமதிப்புக்கிடம்பெறுரோ பெறுவார்க

ளென்னுமெதிர்மறைபொருடர நின்றதோகாரமெனக் கொள்க. நகையா
ரேயெனப்பாடமோதின், ஏகாரம், எதிர்மறை.

(க - து.) மகான்கள்பந்தமுத்திமறந்தனனென்பது. சிதாகாயத்தையன்
றித் திணைபாலிடமில்லாமையி னேற்றற்பாலதேயென்றறிக. இருந்தாலன்
றேமறவாதிருத்தற்கு. இதுதன்னைத்தான்சோதித்துழித்தெரியும். (அஅ)

அகு - கவி. அ - கை.

[செகம்பொய்யெனற்குப் பொய்க்கதையொன்றை
யிக்கவியிற்கூறுகின்றார்.]

மலடி மைந்தனுந் தாணுவிற் புருடனும் வான்மலர் முடிசூ டி-
யிலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரசிதத்தை விலேபே சிக்
கலக மாயினு ரிடையினிற் கயிற்றராக் கடித்திரு வருமான் டா
ரக யாயினு ரெனும்விவ காரத்தை யறிந்தவன் மயங்கா னே.

(இ - ள்.) மலடிமைந்தனுந்தாணுவிற்புருடனும் வான்மலர்முடிசூடி, எ-து. மலடிபுத்திரனும், தறிபுமானும், இருவருங்கூடிக்ககரைவித்தத்தைக் குடமியிற்சூடிக்கொண்டு :—இலகுகந்தர்ப்பநகரிலேசுத்திகையிரசிதத்தைவிலே பேசிக்கலகமாகியே, எ-து. விளங்காநின்றகந்தர்வமென்னுநகரின்கண் கிளி ஞ்சல்வெள்ளியை விலைபேசித்து, இவற்றைச்சுதந்தரமாக்கிக்கொள்ளுங் கார ணத்திலனதனதென்று வழக்கிட்டுத்தமக்குள்ளே கலகமாய்:—இடை யினிற்கயிற்றராக்கடித் திருவருமாண்டார், எ-து. இங்ஙனங்கலகமிட்டுக் கொண்டிருக்கையில், பழுதைபாம்புகடிக்க, அதனைவிருவருமிறந்தார்கள்:— அலகையாயினுரொனும்விவகாரத்தை யறிந்தவன்மயங்கானே, எ-து. அவவா றிறந்தவர்கள்பேய்களானார்கள், என்னுங்கதையினுழுங்கை யறிந்தவனை வனே அவனிவ்வுலகாதியைமெய்யெனமயங்குவனு மயங்கானே, எ-று.

மலடியும், தாணுவுமெய். மைந்தனும், புருடனும்பொய். இதுபோல, பிரக்ஞருமெய். ஏனையவைபொய். சூடி, பேசி, கலகமாகி, மாண்டு, அல கையாயினுரென்பனவெல்லாஞ் சேட்டைகள். 'இதுபோல; வந்தான், போயி னான். பார்த்தான், கேட்டான். நினைத்தான், மறந்தான். அறிந்தான், அறி யான். என்பனவுஞ்சேட்டைகள். அந்தவினைமுதல்மெய்யாயி னந்தச்சேட் டைகள்மெய்யாகலாம். இந்தவினைமுதல்மெய்யாயி னிந்தச்சேட்டைகள் மெய்யாகலாம். ஒருபோதுமாகாவாறுபற்றி இங்ஙனமாயவுவமையால் மித் தையெனத்தெரிவித்தனர். உபமேயத்தைதமித்தையெனக்காட்ட முழுதுமித் தையானகதையை யிக்கவியுபமானித்ததால், பிறிதுமொழிதலணி. உதா ரணம். "நெடும்புனலுள்வெல்லுமுதலை யடும்புனலி னீங்கினதனைப்பிற" என்பதனுணும்; "கொக்கொக்ககூம்பும்பருவத்து மற்றதன் குத்தொக்கசீர்த்த விடத்து" என்பதனுணுங்காண்க. முன்பின்பற்றி யிங்கேயுவமேயமுலகா தியென்றும். ஏனையவையென்பது, தேகமுதலிய தத்துவக்கூட்டமாக்கை.

இவைபிரக்ஞையினதுசாயையெனவறிக. உபாதானவுபாதேயமயமாகாதத
த்துவக்குழாங்களெங்கணுமில்லை, இங்ஙனமாயசாதனையகலாதாரிக்கதை
யைமறவார். அகன்மூர்மறப்பர். அசைசூறைதலைப்பற்றி யிரசித்தை
யென்றும். சிலபிரதி, கலகமாய்முயற்கோம்பிறற்குத்தியே களைத்திருவரு
மாண்டானென்றிருக்கின்றது, இதனையேற்கினுமேற்கலாம்.

(க - து.) சித்தப்பிராந்தி, செகத்பிராந்திதெளிந்தவன்மயங்கானென்
பது. கடிக்கவெனற்பாலது கடித்தென்றுயது காலவழுவமைதி. காலதேச
வஸ்துபரிச்சேதபுடைபெயர்ச்சி சற்றுமின்றிஞெப்திமாத்திரமாக வொருத
ன்மைத்தாவிளங்குந்தன்பா லவாந்தரமாகத் தினைத்துணைபுடைபெயர்ச்சி
போற்றோன்றிய ஞெப்திஸ்புரிப்பே, மலடிமைந்தன். பரிபூரணநாட்டவி
ழப்பே, தாணுவிற்புருடன். இழப்பென்றறியாமையே, வான்மலர். அது
தினைபாவிடமாமீக்குறலே, முடிசூடல். இதிலெய்ப்புற்றவிடத்தனைத்துமித்
தையாகக்காண்டலே, கந்தர்ப்பநகர். தன்னைத்தா ஞரெனவிசாரித்தலே,
சுத்திகாசிதத்தைதவிலேபேசல். உபாதிசம்பந்தபாவநாசமெய்தலே, கலக
மாதல். ஆங்கெழுந்தவிர்த்திஞானமே, கயிற்றரா. அஃதெரித்தலே, கடித்
தல். ஸ்புரிப்பும், நாட்டவிழப்பும் நசித்தலே, இருவருமாளல். பந்தமுத்தி
கற்பிதமாகமுடிதலே, அலகையாதலெனக்கொள்க. பந்தமுத்திபகுட்பின்
மையைக்காட்ட, அலகையென்றார். (அகூ)

கூ0 - கவி. அ - கை.

[பொய்யேகதையானவாறுபோலப் பொய்யேசகமெனக்கு
றிப்பித்தமையின், இந்தப்பொய்யெனலேயே மாயையென்றனரறி
ஞர், இந்தப்பொய்யேசகமாதியாக விகாரித்துத்தோற்றவி ன
னைத்துமாயாகாரியமெனப்படும், இதனிற்சித்தம்வையாதுதூரண
டானசத்தாநிற்றியென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

மாயையென்பது பொய்யெனி லதுபெற்றவகையெலாம் பொய்யாமே,
தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண் டோ,
சேய சொர்க்கமு நற்கமு ன்மையும் தீமையும் பாரா மற்,
றாய சத்துசித் தானந்த பூரண சொரூபமா யிருப்பா யே.

(இ - ள்.) மாயையென்பதுபொய்யெனி லதுபெற்றவகையெலாம்பொ
ய்யாமே, எ - து. மாயையெனப்படுவதுபொய்யாஞல், அதுகாரணமாக
வந்தவனைத்தும் பொய்யாகவேண்டுமே, எங்ஙனமெனில்:—தாயையன்றி
மக்களுக்கொரு பிறவியுஞ்சாதியும்வேறுண்டோ, எ - து. மாதாவினதுபிறவி
யையுஞ்சாதியையுமன்றி யவள்பிள்ளைகளுக்கு வேறுபிறவியும்வேறுசாதி
யுமுளவோ:— சேயசொர்க்கமுநரகமுந்ன்மையுந்தீமையும்பாராமல், எ - து.
நெடுந்தூரத்தனவாகிய சொர்க்காதிபதவிகளும், ரவரவாதிநரகங்களும்,

கன்கெனப்பட்டவையும், தீங்கென்ப்பட்டவையு மிலையெனப்பகுத்துணர்த்தல் செய்யாது:—தூயசத்துசித்தானந்தபூரண சொருபமாயிருப்பாயே, எ - து. பரிசுத்தமாநின்றுள்ள சத்து சித்து ஆனந்த நித்திய பரிபூரணவிலக்கணமுடையதெதுவோ, அந்தச்சீரூபமே நீயாதற்குமுயலுதி, எ - று.

யாமாசாமாயா, என்னுஞ்சுலோகப்பொருளை யுணர்த்தநிற்றலின், மாயையென்பதுபொய்யெனிலெனவும், சகலீவபரஞ்சத்தியம்போற்றோற்றுவ வேனுந் தமக்கெனச்சுயம்பொன்றின்றிச் சோதனையில்யாவுமறிவாமுடிவ தென்னை? முடிதலினனைத்துமறிவின் கற்பிதமெனற்கையமென்னை? கற்பித மாதலின் மாயாகாரியமெனப்படும். இத்திண்ணநோக்கி, அதுபெற்றவக்கையெலாம் பொய்யாமேயெனவும், அனேத்துமாயாகாரியமெலாற்குதாரணமாகத், தாயையன்றிமக்களுக்கொருபிறவியுஞ் சாதியும்வேறுண்டோவெனவும், அறிவைத்தவிரவயலொன்றுளதாகச் சோதனையிற்காணுமையின், சேயசொர்க்கமுநரகமு நன்மையுந்தீமையும்பாராமலெனவும், அநாதசடதுக்கவனித்தியகண்டவிலக்கணங்கட் கறிவெதிர்மறையாதலின், தூயசத்துசித்தானந்தபூரண சொருபமெனவும், நாமெதுவாதலோவென்னு மையந்தவிர்தியென்பார், சொருபமாயிருப்பாயேயெனவுங்கூறினர். அது பெற்றவகையெலாமென்பது ; அம்மாயை காரணமாகவுதிக்கப்பெற்ற சகமாதி மூன்றுவகையாயுள்ளனவனேத்துமெனப் பொருள்கொள்ளினுமேற்கப்பெறும். தாயையன்றிமக்களுக்கொருபிறவியுஞ் சாதியும்வேறுண்டோவென்றவுதாரணம்; மாயையும், மாயாகாரியமுமபேதமெனற்கன்றே, இங்கேகூறக்கிடந்தது. திரிபதார்த்தமுமறிவுக்கயலென்னுமளவும், மாயாகாரியமெனப்படும். அறிவாயின், மாயையெனலெங்கே, அதன்காரியமெனலெங்கே, இன்றுதலின், மறுக்கற்பாற்றே.

(க - து.) யாவும்பொய்யாகமுடிதல்பற்றி யனேத்துமாயாகாரியமென்பது. இவற்றைமெய்யெனின் அஃதாறோற்பர். (கூ0)

கூக - கவி. அ - ஞக.

[அனேத்துமாயாகாரியமாவதால் மித்தையாமேயெனின்,
எவறோற்பர், இதுகுற்றமாகமுடியாதா, என்ற
வினவை யிக்கவியிற்கூறுகின்றார்.]

பங்க யாசனன் முதற்பல தேவரும் பாருள பெரியோ ருங்
கங்கை யாதியாந் தீர்த்தமும் தேசமுங் காலமு மறைநா லு
மங்க மாறுமந் திரங்களுந் தவங்களு மசத்திய.மெனச்சொன் னு
லெங்க ணுயக னேயத னுற்குற்ற மில்லையோ மொழியீ ரே.

(இ-ள்.) பங்கையாசனன்முதற்பலதேவரும் பாருளபெரியோரும், எ - து. தாமரைமலையாயிடமாகவுடைய பிரமன்முதலியபற்பலதேவரும் பூமியிலுள்ளசான்றோர்களும்: —கங்கையாதியாந்தீர்த்தமுந்தேசமுங் கால

முயற்றாலும், எ - து. கங்கைமுதலியபுண்ணியதீர்த்தங்களும் காஞ்சி முதலிய புண்ணியஸ்தலங்களும், சிவராத்திரி, ஏகாதசி, நவராத்திரி, சோன்பு, கார்த்திகை, முதலியபுண்ணியகாலங்களும், நான்குவேதங்களும்:— அங்கமாறுமந்திரங்களுந்தவங்களு மசத்தியமெனச்சொன்னல், எ - து. சந்தசு, கற்ப, வியாகரண, முதலியவாறங்கங்களும், ஏழுகோடியாகவிரிந்துள்ள மூலமந்திரங்களும், காமியம், நிட்காமியமென்னுந் தவங்களி லொவ்வொன்றமேக பேதங்களா நிற்றலிற் றவங்களும், ஆகியவிவையனைத்தும் பொய்யென்றுசொன்னல்:—எங்கணையகனேயதனுற் குற்றங்க ளில்லையோ மொழியீரே, எ - து. எமக்குக்குருவாகவெழுந்தருளியநாயகனே! பொய் யென்றுசொல்வதனுற்குற்றங்கள் சம்பவித்தற்கிடமில்லையோ ? இதனைவிள ங்கத்தெரிவித்தருளும், எ - று.

பங்கயாசனன்முதலென்றதனுற் பிரமாவிஷ்ணுமுதலிய பஞ்சகர்த் தாக்களுமெனப்பெற்றும். இக்கவியில் வந்திக்கத்தக்கவைகளையே மித்தை யாகுமென்றெடுத்துக்காட்டலின், எடுத்துக்காட்டணி. பங்கயாசனன்மு தற் பலதேவருமெனவும், குற்றமில்லையோவெனவும்பாடமுமுண்டு. ஏனைய காலங்களையும், தேசங்களையுமருத்தங்கூறின், வழுத்தற்குரியதன்றும், வழு த்தற்குரியதாக்கின், இந்த அருத்தங்களெல்லாந்தாமேயமையும். ஏனையவு மிங்ஙனமே.

(க - து.) அனைத்துஞ்சத்தியமென்பவர் பலர். மித்தையென்பவரரியர். இதுயாவருக்குங் குற்றமாமுடியுமே யிதற்கென்செய்து மெனவிணவினனென ன்பது. அனைத்துமித்தையெனல் தனக்குடன்பாடன்றெனக்காட்டினனென ன்க. (கக)

கூ2 - கவி. அ - கை.

[அனைத்தும்பொய்யெனல் குற்றமன்றென
விக்கவியிற்கூறுகின்றூர்.]

சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழையா னு, லற்ப மானையயிற் றோன்றிய சகங்களை யசத்தெனல் பிழையா மே, சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்லலா மெனின்மைம் தா, வற்ப மானையயிற் றோன்றிய சக மெலா மசத்திய மெனலா மே.

(இ - ள்.) சொற்பனந்தனிற்கண்டதைப் பொய்யென்றுசொல்வதுபிழை யாலுல், எ - து. ஒருவன் தன்கனவிற்கண்டதைப்பிறனுக்குச்சொல்ல அவ னதுபொய்யெனச்சொல்ல, கனவுகண்டவனதற்குடன்படாமல், நீ சொன் னது தப்பெனச்சொல்லலாகுமெனின்: — அற்பமாயையிற்றோன்றியசகங்க ளை யசத்தெனல்பிழையாமே, எ - து. இயல்பாகவேயிணைவாயுள்ளமாயை காரணமாகவுதித்த வுலகங்களை வேதங்களும் மகான்களும் பொய்யெனக்

கூறுவதுதப்பாகலாமே: — சொற்பனந்தனிற்கண்டதைப் பொய்யென்று சொல்லலாமென்ன, எ - து. தப்பென்றுசொல்வதுதகாது, கனவிற்கண்டதைப்பொய்யென்றே சொல்லலாமென்பையாயின்: — மைந்தாவற்பமாயையிற்றோன்றிய சகமெலாமசத்தியமெனலாமே, எ - து. ஞானபுத்திரா! இன்னதெனக்கணித்தற்கற்பமாயுள்ள மாயைகாரணம்மாகவுதித்த வெல்லாவுலகங்களையு மையமின்றிப்பொய்யெனக்கூறலாமே, எ - று.

நிலையன்றி யப்போதப்போது வெவ்வேறுருகத்தோற்றுஞ் சொற்பனக்காட்சிபோல்வதா, என்றுமொருபடித்தாநிலையாயுள்ளவுலகம்? எனச்சங்கைவரின், மெய்யே, அந்தக்காட்சிக்கு மிந்தக்காட்சிக்குஞ்சுயம்புயாது? அதுவுமிதுவுமேகற்பிதமன்றிவேறுயாது. கனவினனவும், நனவிற்கனவுமெங்கே? காட்சியுமிங்ஙனமன்றே. இவ்வுலகம், சாக்கிராவஸ்தையுள்ளளவும். அவ்வுலகம், சொற்பனுவஸ்தையுள்ளளவும். இவ்விரண்டவஸ்தையுமறிவானேயன்றியில்லை. இவவிருவிதவுலகமும், இவ்விரண்டவஸ்தையன்றியில்லை. இவவிருவகையவஸ்தையும், இவ்விருவகையுலகமுஞ்சுழுத்தியிற்கண்டிலம். இம்மூன்றவஸ்தையுமறிவானேயன்றி யொன்றிலொன்றின்றிச் சகடக்கால்போல்மாறுவதைத் தினந்தோறுங்காண்கின்றனம். இங்ஙனமாயநிலைகளையுன்னவுந்தெரியாது, பிறர்சொல்லினுஞ்செவிசாய்க்கவுந்தெரியாது, இவ்வளவுதிறமையற்றவர்கள் கேட்குஞ்சங்கைக்குத்தரம்பஞ்சமோ, கூறுதும். "எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருள்மெய்ப்பொருள் காண்பதறிவு" இந்நெறிச்செல்பவரோ? எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருளப்படிகாண்பதறிவு. இந்நெறிச்செல்பவரோ, சங்கைசெயப்புகுந்தார். அந்நெறிச்செல்பவராயினிங்ஙனங்கேளார். இந்நெறிச்செல்பவராயின்கேட்பர். எங்ஙனமெனில், அவர்கள்பொருளாப்பொருளாகவறிபவர்கள். இவர்கள்பொருளல்லவற்றைப்பொருளாகவறிபவர்கள். இவர்களுக்குவிடையென்சொல்லினு மவிசாரிக்குப்புத்திசொல்வதுபோலும். பேதவாதம், அபேதவாதமித்தகையதெனவறியார். கண்டதேகாட்சிகொண்டதேகோலமென்போர். புறமுகநாட்டமன்றி யகமுகநாட்டங்கேட்டுமறியாஞானிகள். இவரிடஞ்சங்கை யிவர்போல்பவர்மதிப்பதன்றி யறிஞரொங்ஙனமதிப்பர். இதுநிற்க.

(க - து.) உலகம்; சொப்பனம்போறலிற்குற்றமன்றென்பது. இவ்வுவமைதக்கதென்க. சொப்பனத்திற்சுகித்தாற்போலு மிவ்வுலகிற்சுகித்தல், துக்கமெனக்காணளவும். (கஉ)

கூஉ - கழி. அ - கை:

[இன்னுமதனையேவைப்புறுத்தப் பொய்யிஃதெனவும் மெய்யிஃதெனவு மிக்கவியிற்கூறுகின்றார்.]

பொய்யை ₍ மெய்யென்ற மூடர்புண் ணியனொன்று புராணங்கூட் பிடுமா ஞன், மெய்யை ₍ மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள்

விதித்தசாத்திரமுண்டோ, பொய்ய தேதெனி னுமரூ பங்களாம் பூதமா கியமா யை, மெய்யதேதெனிற் சச்சிதா னந்தமா வியாபிக்கு மான்மா வே.

(இ-ள்.) பொய்யைமெய்யென்றமூடர் புண்ணியரென்றுபுராணங்கூப் பிடுமாறுல், எ-து. செகசீவபரமென்னும்பொய்யைப் பொய்யென்றறியா துமெய்யென்றறிந்தார் மூடரன்றே, இவர்கள்செய்த அன்னதானமுதலிய மூப்பத்திரண்டறங்களாலும், சிவகயிங்கரியமுதலியதவசிரேஷ்டத்தாலும், பதினெண்புராணங்களு மிவர்களைப்புண்ணியவான்களென்று விடாதுகோ வஷ்க்குமாறுல்: —மெய்யைமெய்யென்றஞானிக்குக்குற்றங்கள் விதித்தசா த்திரமுண்டோ, எ - து. காரணகாரியரகிதமாயதியாதோ, அஃதன்றே மெய்யெனத்தகுவது, அதனைச்சொல்லாலேலாது விசாரத்தெளிவாலேற்ப தன்றேஞானம், அங்ஙனமாயஞானத்தையுடையாரன்றே ஞானிகளெனப் படுவோர், இவர்களன்றேமெய்யைமெய்யென்றஞானிகள், இவர்கள்மெய் யைமெய்யென்றதனாலிவர்கள்மேற் குற்றம்விதித்தற்கிடமுண்டோ, இவர்க ள்மேற்குற்றங்கள் விதித்தசாஸ்திரமேனுமுண்டோ, இல்லையே. இதுநிற்க. பொய்யாவதினையதெனவும், மெய்யாவதினையதெனவும், இனிக்கூறுதும் அதனைக்கேளுந:—பொய்யதேதெனி னுமரூபங்களாம் பூதமாகியமாயை, எ-து. பொய்யெனப்படுவதியாதெனில், நாமரூபங்களாகவெங்கணும்விரிந் துள்ள பஞ்சபூதமெனப்படுவதாகியமாயையாம்:—மெய்யதேதெனிற்சச்சிதா னந்தமா வியாபிக்குமான்மாவே, எ-து. மெய்யெனப்படுவதியாதெனில்சத்து, சித்து, ஆனந்தமென்னுமிலக்கணமே வடிவாயெங்கணுநிறைந்துள்ள வான் மாவாம், எ-று. ஏ - ற்றசை.

பிரத்தியட்சமாயுள்ளசகங்காரணமாகவன்றே, அப்பிரத்தியட்சமான சிவேசராளுண்டெனக்கோடல். விகாரத்தைச் சுயம்பெனக்காட்டாதுலகை க்காட்டில், ஏனையவிரண்டையுங்காட்டலாம். அங்ஙனமொருவருமின்றே. சொல்மாத்திரத்தாலுந், தோற்றன்மாத்திரத்தாலும், இம்மூன்றுஞ்சத்தென் றேற்பதைவிட மித்தையென்றேற்பது மனமலையாமைக்கும், சஞ்சலமணுகா மைக்கும், உள்ளக்களிப்பகலாமைக்கும், தானே தானுதற்கும், இடம்பெறு மன்றே? இங்ஙனமாயபலனுக்கன்றே, சற்குருத்தியமாதிதொழில்புரிவது. இவற்றைப் புரிவதைவிட வுலகைமித்தையென்று மறப்பதுமாத்திரஞ்செய்யி னிப்பயனனைத்தையு மிம்மையிற்றானேயனுபவிக்குதுமே, இதுவுள்ளங்கை நெல்லிக்கனிபோலாமே, இந்நன்னையறிவாமைபற்றிப் பொய்யைமெய்யென் றமூடரெனவும், சகமாகத்தோற்றுவதும், அன்றாகத்தோற்றுவதும், அறிவ ன்றே, இதுவன்றேமெய், இதனையன்றேமெய்யெனக்கோடல், கொண்ட படிகண்டவரன்றேமெய்ஞ்ஞானிகள், காணுதாரன்றேபோலிஞானியர். இவரைப்போலிஞானியனைக்குறிக்கவன்றே முன்னர்கண்டறிந்ததுஞான மென்றது. இவற்றையெல்லாங்கருதி மெய்யை மெய்யென்றஞானியென

வும், இவர்களோமூடர்களெனற்கென்னேயேதுளது. இன்றுதலின், ஞானிக்குக் குற்றங்கள்விதித்த சாஸ்திரமுண்டோவெனவுங் கூறினர். பொய்யாகியசகசீவபரங்களோப்பொய்யென்றது, குணவாகுபெயர். மெய்யாகிய ஞானத்தை மெய்யென்றதுஉமிங்ஙனமேம. ஞானமன்றியில்லையாதலின், மெய்யதான்மாவென்றுரெனக்கொள்க. சச்சிதானந்தமான்மாவெனவே, அதுர்தசடதுக்கம் பிறவெனக்கண்டாம். சச்சிதானந்தமேயதுர்தசட துக்கமாகத்தோற்றலன்றி யயலன்றெனச்சோதனையாற்காணுதி. எங்ஙனமெனில்; ஒன்றுசொல்லுதும். ஓர்பாறையாகியகருங்கல்; உளதோ, இலதோ? உளதெனில், சுயம்பாகவேண்டும். சுயம்பெனில், உளிமுதலியகருவிகளாற்சேதிப்பதற் கின்யையாதிருக்கவேண்டும். இயையுமெனில், சுயம்பென்னுதிருக்கவேண்டும். இயைந்தபோதன்றோதூளாகக்காணும். இப்போதுசுயம்பென்னலாகாதாவெனின், அந்தத்தூள்களின்சையோகமே பாறையாகத்தோற்றலன்றி யிப்போதும்வேறுகக்கூறற்கிடமுளதோ, இன்றே, தூளையன்றிப்பாறையெங்கே, நமதுகாட்டங் தூளாகியக்கண், பாறையின்மையும், ஆகாவிடத்துண்மையுமாகக் காண்பதென்னே? நாம்சத்தாகக்காணில் சத்தாகவும், அசத்தாகக் காணில சத்தர்கவுந்தோற்றலின், நமதுசத்தைக்கொடுத்துப்பார்ப்பதனுற் சத்தாகத் தோற்றுவதேயன்றி வேறென்னேயுள. இதுவேதீர்பெனற்கு மெய்யதேதெனில் சச்சிதானந்தமாவியாபிக்கு மான்மாவேயென்றார்.

(க-து) பொய்மெய்யிலக்கண மித்தகையதென வுணர்த்தியதென்பது. பொய்யைமெய்யெனுமளவுஞ் சென்மமேம. அதாவது; உருவமாகவேனுமருவமாகவேனும் பாவித்தல். வஸ்து, இங்ஙனமன்றுதலானும், தன்னேயகலாததைவிட்டுத் தனக்கயலாகக்கருதியெட்டத்தவம்புரியினும், அணித்தாதற் கியைவதன்றுமையானும், தன்னைத்தான் தேடிக்காணுதளவும், தான்தனக்கயலாகமுடியும், பரமுமயலாகமுடியுமெனக் கூறவேண்டுமோ? இதனுலன்றே, அருள், பரை, ஆனந்தம், ஆனந்தாதீதம், இவைதனதனுபூதிவிலாசமெனக்காணுது, சிவானுபூதிவிலாசமெனப்பராக்காயினர். அங்குந்தானின்றே? இன்றெனில், அங்ஙனமனுபவித்தல்தானன்றே. அங்குந்தன்னேயாயாமல்விட்டுவிட்டார்களே, இவர்களுக்கெங்கேதான்முடிவுண்டு, இவ்வேயே. பந்தத்திலயல்நாட்டம்போல முத்தியிலுமயலுட்டமென்னினிதுஞானமாகுமா? தன்னைவிட்டுவிட்டார்களே, மானிடசென்மத்தில்தானேகண்டுபிடிக்கவேண்டுமே. "இப்பிறவிதப்பினுலெப்பிறவியாய்க்குமோ," இதற்கென் செய்தும் யாமறிவிலம். ஆன்மாவேயுண்மையென்றனரே யிந்நூலாசிரியர், இதையாவதுவிசாரித்ததெனியாதது; செல்வக்கல்விமதர்ப்பு. பொய்யென்பதுமாயை. இதனைச்சத்தியென்னுறவகையாக்கி மெய்யென்றனர் மூடரெனிற்றுமையும். (ஈக)

ஙுச - கவி. அ - கை.

[அனைத்துமாயாகாரியமெனக்கூறி மித்தையென்றீர, அமமாயா
விலக்கணத்தையும், அதனதுதேபாதாபேதங்களையுந்
தெரிவிக்கவேண்டுமென, அறுவகையாக
விறுவலே யிக்கவியிற்கூறுகின்றார்.]

மாயை யென்பதே துடையரா ரெப்படி வந்தது வருவானேன், மாயை யென்பது பிரமத்தின் வேறெனின் வஸ்துவு மிரண்டாமே, மா்யை யென்பதும் பிரமமு மொன்றெனின் வஸ்துவும் பொய்யா மே, மாயை யென்றமே கங்களுக் கொருசண்ட மாருத குருமூர்த் தி.

(இ-ள்.) மாயையென்பதேதுடையரா ரெப்படிவந்தது வருவானேன், எ-து. மாயையென்பதியாது, அதனைச்சுதந்தரமாகவுடையார்ப்பாவர், அது வந்தவகையெங்ஙனம், வருதற்கேதென்னை:—மாயையென்பது பிரமத்தின் வேறெனின் வஸ்துவுமிரண்டாமே, எ-து. மாயையென்பது பிரமவஸ்துவி னின்றும்வேறுயதெனின், அப்போதுவஸ்து, இரண்டெனக்கொள்ளப்படுவ தாமே:—மாயையென்பதும் பிரமமுமொன்றெனின் வஸ்துவும்பொய்யா மே, எ - து. ஆயின்மாயையென்பதும், பிரமவஸ்துவுமொன்றெனக் கூற லாமேயெனின், மாயையைப்போலப்பிரமவஸ்துவும் பொய்யெனக்கொள் ளப்படுவதாமே:—மாயையென்றமேகங்களுக் கொருசண்டமாருதகுருமூர் த்தி, எ - து. மாயையென்றமேகங்களுக்கெல்லா மோர்பிரசண்டமாருதம் போன்று விளங்குபவராகியகுருமூர்த்தியே, எ-று.

(க-து.) இங்ஙனமாயையைப்பற்றி யறுவகையாகவிளுவினனென்பது. அறிவேபிரமம், அறியாமையேமாயை. அறிவையன்றியறியாமைவேறுயின், பிரமத்தையன்றிமாயைவேறுகலாம். யாதுகாரணகாரியங்கட்கு முடன்ப டாமை யினையதென்றுணர்தல், அறிவு. உணராமை, அறியாமை. யாதுண் மையையுணர்ந்தன்றோ, அதுவேயுணராததால், அறிவேயறியாமையாயிற் று. அறிவையன்றித்தெளிவும், மூடமும்வேறின்மையின், இவ்விருவினைக்கும் வினைமுதல், அறிவாயிற்று. அறிவாகவே இரண்டெனப்படாது. ஒன்றெ னின், அறிவையன்றியறியாமையிருக்கவேண்டும். இன்றுதலின் பிரமத்துக் கென்றது, பிரமத்தினென்றார். மாயையென்பதும் பிரமமுமொன்றெனில் வஸ்துவும்பொய்யாமேயென்றது; இன்மைப்பொருளுக்கேயியைதற்பால தும் மாயையாதலி னதனேடுபிரமத்தையுஞ்சேர்த்தேதகமெனின், அதற்குரியவி ன்மைத்தன்மை யிதற்குமெய்துமெனற்கென்க. சண்டமாருதம், பெருங் காற்று. மாயையென்றமேகங்களென்பது, உருவகம். சண்டமாருதகுருமூர் த்தியென்பது, உவமைத்தொகை.

(க - து.) மாயையைப்பற்றி யறுவகையாகவிளுவினனென்பது. இது

(

கரு - கவி. அ - கை.

[மேலறுவகைகவினுவினுள், இக்கவியினுன்குவகைகவினுவுக் குத்தரங்கூறுகின்றூர்.]

அதனை யின்னதென் றுரைத்திடப் பட்டாமையா லவாச்சியவடி வா கு, மிதுத னக்குள தடனியா னுலகுமெய் யெனுமவ ருடை யோர் கள், கதையி லாதபொய் வந்ததிப் படியென்று கண்டபே ரிலை மைந் தா, விதன மாயையேன் வந்தென் ரூற்புத்தி விசாரமற் றத னு லே.

(இ-ள்.) அதனையின்னதென் றுரைத்திடப்படாமையா லவாச்சியவடி வாகும், எ - து. அம்மாயையித்தகையதென் றியாவரானு மளவைகளாலெ ட்டிச் சொல்லப்படாததனு லம்தவாச்சியவடிவமெனப்படுவதாம்:—இது தனக்குளதுடலியானுலகுமெய் யெனுமவருடையோர்கள், எ - து. இதுதன க்குச்சொந்தம், இவ்வுடலேயான், இவ்வுலகஞ்சத்தியம், என்னுந்திடக்ஞா னமுடையாரெவரோ, அவர்களேயம்மாயையுண்டையோர்கள் :— கதையிலாத பொய்வந்ததிப்படியென்று கண்டபேரிலைமைந்தா, எ - து. ஞானபுத்திரா! கதைகட்டிச்சொல்வதற்கு வழியொன்றுமில்லாத பொய்யாகியமாயை யின் னவிதமாக வந்ததென்று கண்டவர்களொருவருமில்லையே:—விதனமாயை யேன்வந்ததென்றூற் புத்திவிசாரமற்றதனுலே, எ - து. விதனத்துக்கேயிட மாயுள்ள மாயையானது, ஏன்வந்ததென்றூல், ஞானவிசாரணைசெய்யும் விடா முயற்சி சிறிதுமில்லாததினுல், எ-று.

அவாச்சியவடிவம், தனக்கெனச்சொரூபமொன் றில்லாமை. இதுதன க்குளது, மமகாரம். உடலியான், அகங்காரம். பொய்யை மாயையென் றது, காரணவாகுபெயர். தாய்தந்தைவந்தவரிசைவகை யாதிதொடங்கிச் சொல்லுதற்கெட்டாமையால், கதையிலாதபொய்யெனவும், உலகைமெய்யெ னநம்பிலே ருயிர்விடுங்கால், உலகைவிடுதற்கிட்டஞ்சற்றுமின் றிவதைதவராத லால், விதனமாயையெனவுங்கூறினூர். புத்திவிசாரமறுதல், தன்னேத்தானு ள்ளவாறூராய்தலின்மை. மாயைக்கதைகட்டிச்சொல்பவரும், அதனைமெய் யெனக்கேட்பவரும், அவிவேகிகளாதலானுமெனில், தன்னேத்தானுள்ளவா றெட்டவைக்கியாராதலினென்க.

(க-து.) நால்வகைகவினுவுக்கும் நால்வகைகவிடைநேரேகூறினுரென்பது. இதுதனக்குள்வுட்லின் துல்குமெய்யெனப்பாடமுமுண்டு. அறுவகைகவினு லிருக்க, ஐவகைகவினுவென்னும், அறுவகைகவிடையிருக்க, ஐவகைகவிடையெ னவுங்கொண் டிரைகூறுவதென்சிறப்போயாமறிகிலம். இதுநிற்க. இவ்வி னுவிடைகள், நீரனிறைப்பொருள்கோள். ஏது, ஆர், எப்படிவந்தது, வரு வாயினன், இரண்டாமே, பொய்யாமே? இவைவினுவோ, அன்றே? வினு வெனின், ஆருதற்குத்தடையின்மை. அவாச்சியவடிவாகும், உடையோர்

களை, கண்டபேரிலை, புத்திவிசாரமற்றதனல் வந்தது. இவை விடையோ, வினவோ? விடையெனின், நான்காதற்குத்தடையென்னை. வினவிடையெனலறியார்போலும். (கூடு)

ஈகூசு - கவி. அ - கை.

[வஸ்துவுமிரண்டாமேயென்னு மைந்தாம்வினவிற்குவிடையிரண்டெவியினுங்கூறப்புகுந்தார், இக்கவியில், பிரமத்திற்கும், திரிசியங்கட்கும், இடையிலோர்சத்தியுண்டெனக்கூறுகின்றார்.]

அருவ மாகுமா யாவிவித் தைகள்வினை யாடுமுன் றெரியா வே
யுருவ மாம்பல கந்தர்ப்ப சேனையா யுதித்தபின் வெளியா குஞ்
பிரம சத்திக ளனந்தமா மதைக்கண்டு பிடித்திடல் கூடா தே
பரவு பூதங்கள் கண்டனு மானத்தாற் பலருக்கும் வெளியா மே.

(இ - ள்.) அருவமாகுமாயாவி வித்தைகள் வினையாடுமுன் றெரியாவே, எ - து. இந்திரசாலஞ்செய்வோன், தனதுவிநோதங்காட்ட வினையாடுதற்கு முன்னரே, ஒருவர்கண்ணுக்கும்புலப்படா தருவமாநின்றுள்ள தனதுவித்தைகள், எங்ஙனங்காணப்படும், காணப்படாவே:—உருவமாம்பலகந்தர்ப்பசேனையா யுதித்தபின்வெளியாகும், எ-து. அவை பிரத்தியட்சத்திற் குருவமாக்காண்டற்குரிய பற்பலவிசித்திரகந்தர்ப்ப சேனைகளாய்த்தோன்றியபின் யாவருக்குங்காணப்படும் (அதுபோல):—பிரமசத்திகளனந்தமாமதைக்கண்டுபிடித்திடல்கூடாதே, எ-து. பிரமத்திற்குரியசத்திபேதங்களனந்தவிதமாம், அதனைக்கண்டுபிடித்தல் யாவராலுங்கூடாது. (மற்றெங்ஙனமெனின்);—பரவுபூதங்கள்கண்டனுமானத்தாற் பலருக்கும்வெளியாமே, எ-து. எங்குமாவியாபித்துள்ளபஞ்சபூதங்களைக்கண்டு, அதுகாரணமாகவனுமானிக்கு மனுமானத்தினல்சகலருக்கு மிருப்பதாகவிளங்கும், எ-று.

கண்டனுமிதித்தலாலெனப்பாடமுமுண்டு. அருவமாகும்வித்தைகளென முடிக்க. மாயாவி, பிரமம். வித்தைகள், சத்திகள். கந்தர்ப்பசேனை, பூதங்கள். இவ்வுபமான வுபமேயங்கள். அனுமானம், பலருக்குமென்னு மிவ்விரு மொழிகளையு மீரிடத்துமொட்டுக. மாயாவிவித்தைகள் கந்தர்ப்பசேனைகளா லனுமானித்தல்போன்று, பிரமசத்திகள் பரவுபூதங்களா லனுமானிக்கப்படுமெனவுணர்க. பிரமசத்திகளனந்தமென்றது; இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, ஆதிசத்தி, பராசத்தியெனவைந்தாம். இவற்றுளொவ்வொன்று மெண்ணிறந்தபேதங்களாதல்பற்றியென்க. இவ்வேசோதனையாற்றெரியலாம். அநந்தமென்பது தொகையொருமைபற்றி, அதையென்றார்.

(க-து.) இவ்வுபமானவுபமேயத்தால் சத்திகளிருப்பை யவற்றின்காரியங்களாலறிய லாமென்பது. அதிரூக்குமமான வித்தைகளெல்லாரும், அறிவு

நட்பமேவிடமேவிடக் கண்டுகொண்டேவருவதை யிப்போதுபிரத்தியட்சத் திற்காணலாம். (கசு)

கள - கவி. அ - கை.

[வித்தைகள்போலச் சத்திகள்காரியகாரணமாயிருந்தும், ஆதார வாதேயங்காணப்படுமாறுபோலத் தாங்காணப்படாவென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

காரி யங்களுஞ் சத்தியா தாரமுங் காணுமற் றதுமா யம்
பாரி னின்றமா யாவியுஞ் சேனையும் பார்ப்பவர் கண்கா ணும்
வீரி யந்திகழ் வித்தையா யினசத்தி வெளிப்படா ததுபோ லப்
பேரி யற்பிர மத்துக்கு மூலகுக்கும் பிறிதுசத் திகளுண் டே.

(இ-ள்.) காரியங்களுஞ்சத்தியாதாரமுங் காணுமற்றதுமாயம், எ-து. சத்திக்குக்காரியங்களும், காரணமும், எவர்க்குங்காணப்படும். ஏனையசத்தியோ, சற்றுங்காணப்படாது:—(எங்ஙனமெனில்,) பாரினின்றமாயாவியுஞ்சேனையும் பார்ப்பவர்கண்காணும், எ-து. பூமியிலிவ்வித்தைகளை வினையாடிக்கொண்டிருந்த, இந்திரசாலஞ்செய்வோனும், அவ்வினையாட்டாற் காணப்படுஞ்சேனைகளும் வேடிக்கைப்பார்க்கப்புறப்பட்டவர்க்கு நேரேகாணப்படும்:—வீரியந்திகழ்வித்தையாயினசத்தி வெளிப்படாததுபோல, எ-து. இனையாதவீரத்துவத்தால் விளங்குகின்றவித்தையாகிய சத்தியானது காணப்படாது, எங்ஙனமோவதுபோல:—பேரியற்பிரமத்துக்குமூலகுக்கும்பிறிதுசத்திகளுண்டே, எ-து. மிக்கவிலக்கணங்களையே யியல்பாகவுடைய பிரமத்துக்கும், உலகத்துக்குமிடையே சிலசத்திகள்பிறிதாகவிருக்கின்றனவே, அவைகாணப்படுமோ, காணப்படாவே, எ-று.

சத்திக்காதாரம், பிரமம், ஆதேயம், உலகம். மாயாசத்தியைத்தவிர வுலகிருக்குமாயின், பிரமத்தைத்தவிர மாயாசத்தியிருக்கலாம். எங்ஙனம்; அறியாண்மையன்றியுலகிருக்குமாயின், அறிவையன்றி யறியாமையிருக்கலாம். இல்லையெனின், வஸ்துவுமிரண்டாமேயென்றல்கூடாது. மாயாவியும், சாலக்காட்சியும் பிரத்தியட்சம். வித்தை யப்பிரத்தியட்சம். அதுபோல, பிரமமும், உலகமும்பிரத்தியட்சம். மாயாசத்தியப்பிரத்தியட்சம். சத்தியாசாரமுமென்பதாடமுமுண்டே. இங்கேயாசாரமுமென்பதுபோருந்தாது.

(க-து.) மாயாசத்தி பிரமத்தைத்தவிர வேறின்மையாவிரண்டுவஸ்துவாகாவென்பது. பிரமப்பிரதிபலனமே சத்தியெனவறிக. (கள)

கஅ - கவி. அ - கை.

[ஆறாம்விருத்தியிற்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்.]

சத்தி சத்தனைத் தவிரவே றன்றுகாண் சத்தனு மாயா வி
வித்தை காட்டிய விந்திர சாலம்போய் வித்துவா னும்போ லப்
புத்தி°மைக்தனே சத்திமா னிய பூர ணான்மா வாம்
வத்து நிர்ணயந் சொன்னதிட் டாந்தத்தின் வமிகண்டு தெளிவாயே.

(இ-ள்.) சத்திசத்தனைத்தவிரவேறன்றுகாண், எ-து. சத்தியானது சத்தனைத்தவிர வேறோர்முதலன்றெனக்காணுதி:—சத்தனுமாயாவிவித்தைதகாட்டிய விந்திரசாலம்போய்வித்துவானும்போல, எ-து. சத்தனுகிய மாயாவித்தை செய்வோன் தனதுவித்தையுணல்காட்டியஇந்திரசாலவினேதைக் காட்சிகண்ணியவிடத்தும் நீங்காதுநின்றோன் வித்துவான்மாத்திரமாகுமாறுபோல:—புத்திமந்தனே சத்திமானுகிய பூரணவான்மாவாம் வத்துநிர்ணயஞ்சொன்னதிட்டாந்தத்தின்வழிகண்டுதெளிவாயே, எ-து. அறிவுள்ளபுத்திரா ! சத்திமானெனப்படும் பரிபூரணமாநிறைந்துள்ள ஆத்மவஸ்துநிச்சயத்தை மூன்சொன்னதிஷ்டாந்தமுறையைக்கண்டு தெளிந்துகொள்ளுதி, எ-று.

இந்திரசாலம்; வித்தையைத்தவிர வில்லாவாறுபோல, வித்தையும்;வித்துவானைத்தவிரவேறின்றும், எங்ஙனமோவதுபோல, உலகமும்; மாயாசத்தியைத்தவிரவில்லாவாறுபோல,மாயாசத்தியும்; சத்தனுகியவான்மாவைத்தவிர வேறின்றும். வேறின்றுகவே, இருப்பது, ஆன்மாமாத்திரமென்றுயிற்று. ஆகவே,வித்தையிருந்தபோதுமில்லாதபோதும் வித்துவானிருக்குமாறுபோன்று, மாயாசத்தியிருந்தபோதுமில்லாதபோது மாத்மாவிருக்குமெனப் பெற்றும். பெறவே, வித்தை; யாபாசதர்மம்பெற்றுற்போல, வித்துவானுபாசதர்மம்பெற்றனல்லன். அதுபோல, மாயாசத்தி யாபாசதர்மம்பெற்றுற்போலச், சத்தனுகியவான்மா; வாபாசதர்மம் பெற்றுவாறுகண்டாம். காணவே, மாயையைப்போல, ஆன்மாபொய்யன்றெனத்தெளிந்தாம்.

(க-து.) வஸ்து; மாயையைப்போலப்பொய்யன்றென்பது. போகவென்றது, போயென்றுயது காலமயக்கம். ஆன்மாவின் வஸ்துவெனின், நிழமைப்பொருளாதற்கிடமின்று. ஆதலின், ஆன்மாவாம்வஸ்துவென்றும். சிலபிறநூல்கள், இந்திரசாலம்பொய்வித்துவான்மெய்போல, என்றிருக்கின்றன, அங்ஙனம்பொருள்கொள்ளினுமமையும். (க௮)

கூக - கவி. அ - கை.

[முன்னர்மாயையென்பது பொய்யெனக்கூறிப் பின்னர்பிறிது சத்திகளுண்டேயெனக் கூறுவதென்னைகொலோவென்றவினவிற்குத்தர மிரண்டுகவியாலுங்கூறப்புகுந்தாரிக்கவியிலுண்டென் றேற்காவிடில் சராசரங்கட்குச்சுபாவங்கள் வேறுமேயெனக் கூறுகின்றார்.]

இல்லி யாகிய சத்தினை யுண்டென்ப தெப்படி யெனக்கேட் கிற்
புல்லி யாதியா மசேதனப் பொருளெலாம் பூத்துக்காய்ப் பனபா ராய்
வல்லி யாமக னேயதிற் சிற்சத்தி கடந்திடா திருந்தக் கால்
தொல்லி யாய்வருஞ் சராசர வுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறு மே.

(இ-ள்.) இல்லையாகியசத்தியையுண்டென்ப தெப்படியெனக்கேட்கில், எ-து. மித்தையாகியமாயாசத்தியை மீண்டுமுண்டென்ப தெங்ஙனங்கூடுமெனக் கேட்பையாயின்:—புல்லியாதியாமசேதனப்பொருளெலாம் பூத்துக்காய்ப்பனபாராய், எ-து. புல்லியாதியாகவுடைய சடப்பொருள்களனைத்தும் புட்பித்துக்காய்க்கின்றவைகளைக்காணுதி:—நல்லையாமகனேயதிற் சிற்சத்தி நடந்திடாதிருந்தக்கால், எ-து. சற்புத்திரா! ஓவவொன்றினுஞ் சிற்சத்தியானது வியாபியாதிருக்குமாயின்:—தொல்லையாய்வருஞ் சராசரவுயிர்க்கெலாஞ்சுபாவங்கள்வேறுமே, எ-து. தொன்றுதொட்டுவிடாதுவருகின்ற சராசரமாகின்றுள்ளவுயிர்களுக்கெல்லாஞ் சுபாவங்கள் வெவ்வேறுமுடியுமே, எ-று.

சேதனம், அறிவு. அசேதனம், அறியாமை. இங்கேநடக்குதல், வியாபித்தல். சரம், அசைவு. அசரம், அசையாமை. சராசரவுயிர்களி லெதெதற்கேதெதியல்போ, அங்ஙனமங்ஙனமாவதுசிற்சத்தியின்தன்மையெனக்காண்க. சீர்மிகுமாதலினதிலதிலெனவடுக்காதுநின்றனர்.

(க-து.) சமஸ்தமுஞ் சிற்சத்தியை யாதாரமாகக்கோடலின்தத்தஞ்சுபாவத்தினின்று மாறுதென்பது. அனைத்துஞ்சிற்சத்திவிலாசமாதலின் சிற்சத்தியுண்டெனப்பெற்றும். சத்தியுண்டெனல் பகிர்முகத்தாலென்க. (கூகு)

க00 • கவி. அ - கை.

[அனைத்துஞ்சிற்சத்திநியமத்தினுல் தத்தமியல்பைவிட்டு
மாறுதலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

கருபலை மூட்டையுட் பறவைகள் பலநிறங் கலந்தசித் திரம்பா ரா
யருப்ப மாஞ்சத்தி நியமமில் லாவிடி லரசிலா நகர்போலாம்
நெருப்பு நீர்களாங் கசப்புமே மதுரமா நீசனு மறையோதும்
பொருப்பு மேகமாங் கடலெலா மண்களாம் புவனமிப் படிபோ மே.

(இ-ள்.) கருப்பைமூட்டையுட்பறவைகள் பலநிறங்கலந்தசித்திரம்பாராய், எ-து. கருப்பையிலிருக்குமூட்டைக்குள் பட்சிகள்பலநிறங்கலந்திருக்கின்ற விசித்திரங்களாயிருப்பதைக்காணுதி:—அருப்பமாஞ்சத்தியமமில்லாவிடி லரசிலாநகர்போலாம், எ-து. உணர்தற்கரிதாகியசிற்சத்தியினியமமில்லாவிட்டால்; அரசனில்லாதபட்டணம்போல வொழுங்கற்றநிலையினதாகுமடியும்:—நெருப்புநீர்களாங்கசப்புமேமதுரமா நீசனுமறையோதும், எ - து. (எங்ஙனமெனில்), நெருப்புசலமாகவும், கசப்புத்திதிப்பாகவும், சண்டாளன் வேதாத்தியயனஞ் செய்வதாகவுமுடியும்:—பொருப்புமேகமாங்கடலெலாமண்களாம் புவனமிப்படிபோமே, எ - து. மலைகள் மேகங்களாகவும், சமுத்திரமுழுதும்மண்களாகவும், இதுபோலப் பூமிமுழுவதுமிங்ஙனமாகவுமுடியுமே, எ : று.

அருப்பம், துக்கமெனினுமமையும். நியமம், ஒழுங்கு. பறனைவக்கிடம, மூட்டை. மூட்டைக்கிடம், கருப்பை. எனவே, கருப்பையிலிருந்துமூட்டையும், மூட்டையிலிருந்துபறனையுமுண்டாதலால், கருப்பைமூட்டையுட்பறனைகளென்றார்.

(க-து.) அனேத்துமரசிலாகுகர்போலநிலைமாறுமென்பது. சத்தி; அகமுகத்திற்சித்சத்தியாகவும், புறமுகதத்தில்மாயாசத்தியாகவுமிருக்கும். (கoo)

கoக - கவி. அ - கை.

[எல்லாவிபரீதங்கட்குமாதாரமாதலி னிந்தசசத்தியைநீக்குமாறெங்ஙண்ம். சத்தனுக்கபேதமெனின், ஏகமாகக்காண்பதெங்ஙனம். அரிதெனின், நிரதிசயானந்தமாவதெங்ஙனம். என மூன்றுவினாவையு மிக்கவியிற்கூறுகின்றார்.]

ஆர்க்குங் காணவு மறியவும் படாதென்று மவாச்சிய வடிவென் றுஞ், சேர்க்கு நாமரூ பப்பயிர் வித்தென்றுஞ் செப்பிய சிற்சத்தி, போர்க்கு மாறெங்ஙன் பிறித்திடப் படாதெனிற் பிரமபா வனையொன் றுப், பார்க்கு மாறெங்ஙன் முத்தியா குவதெங்ஙன் பரமசற் குரு மூர்த்தி.

(இ-ள்) ஆர்க்குங்காணவுமறியவும்படாதென்று மவாச்சியவடிவென்றும், எ-து. அரியராதிகட்குமேனையோரெவர்க்குங் கண்ணுற்காணவும், மனகாலறியவும்படாததென்றும், நிர்வசனரூபமென்றும்:—சேர்க்குநாமரூபப்பயிர்வித்தென்றுஞ் செப்பியசிற்சத்தி, எ-து. விபரீதத்துக்காளாகச்சேர்க்கின்ற நாமரூபமென்னும்பயிர்களுக்குவிதையென்றுஞ் சொன்னசிற்சத்தியை:—போர்க்குமாறெங்ஙன் பிறித்திடப்படாதெனிற் பிரமபாவனையொன்றுப்பார்க்குமாறெங்ஙன், எ - து. நீக்குமாறெங்ஙனம், வேறுபடுத்தக்கூடாதாயின், பிரமபாவனையேகமாகப் பார்க்குமாறெங்ஙனம்:—முத்தியாகுவதெங்ஙன் பரமசற்குருமூர்த்தி, எ-து. முத்தியடைவதெங்ஙனம், மேலான சற்குருமூர்த்தியே, எ-று.

அறிவையன்றியறியாமையோர்முதலன்று. அறியாமையே சிற்சத்தியென்னுமிடத்து, காணவும்படாதென்றும், அறியவும்படாதென்றும், அவாச்சியவடிவென்றும், நாமரூபப்பயிர்வித்தென்றும், கூறச் சிற்சத்தியேற்கலாமே, தடையென்னையுள, இதுபற்றியிங்ஙனங்கூறினர்.

(க-து.) மாணுக்கனுக்குசித்தலிங் வினையவென்பது. சித்தில்லாவிடிற் சித்தினதுகந்தித்தமெங்ஙே. உண்டெனில், தெரிவிக்கலாம். கல், மரம், முதலியவைகளென்னில், சத்தினதுபிராதிபாலிகமன்றி வேறுகக்கண்டலமே. எங்ஙனமெனின், சோதனையினியதிகளையப்பட்டவையனைத்து மன்னியமாகாதலினாகமுடிவதென்னை? முடிவதறுதத்தாகுமாவெனின், சத்தியன்றியதத்தெனவெங்ஙே. இன்றாகலாலனைத்தும், சிற்சத்தியமேயென்றறியா

ஞதலின் விஞவினனென்க. அறிவிஞ, அறியாவிஞ, என்பவற்றுளிஃதறி யாவிஞ. (கoக)

கo2 - கவி. அ - கை.

[முதலிவிரண்டுவிஞவுக்கு மிக்கவியிலுத்தரங்கூறுகின்ரூர்.]

வாயுஸ் தம்பனஞ் சலஸ் தம்பன் மணிமந்திர மருந்தா லே
தேயுஸ் தம்பனஞ் செய்திடி லதிலதிற் சிறந்தசத் திகளெங் கே
நீயச் சச்சிதா னந்தமாய் வேறொன்று நினைந்திடா திருப்பா யேல்
மாயைச் சத்திபோ மீதன்றி மந்திர மறைகளிற்காணே மே.

(இ-ள்.) வாயுஸ்தம்பனஞ்சலஸ்தம்பன மணிமந்திரமருந்தாலே தேயுஸ் தம்பனஞ்செய்திடி லதிலதிற்சிறந்தசத்திகளெங்கே, எ-து. மணி, மந்திரம், மருந்து, என்னுமிம்மூன்ரூனும்; வாயுஸ்தம்பனம், சலஸ்தம்பனம், தேயுஸ் தம்பனஞ்செய்வமாயின், அவவவற்றிற்குரியமுக்கியமாயுள்ள, சலனம், நெகிழ்ச்சி, உட்டணமென்னுமிப்மூன்றுசத்திகளும், எங்ஙனே, இப்போதுகண் டிலமே. (அதுபோல) :—நீயச்சச்சிதானந்தமாய்வேறொன்று நினைந்திடா திருப்பாயேல், எ - து. நீயந்தச்சச்சிதானந்தசொரூபமாகி யிவற்றிற்குமா ரூக வேறொன்றும் நினையாதிருப்பையாயின்:—மாயைச்சத்திபோமீதன்றி மந்திரமறைகளிற்காணேமே, எ - து. மாயாசத்தியான தன்னையன்றியில் லாமற்போம், இல்லாமற்போவதற்குபாய மிங்ஙனம்புரிவதன்றி வேறேமந் திரமுளதாக வேதங்களிற்கண்டிலமே, எ-று.

ஸ்தம்பனம், ஸ்தம்பித்தல். அதாவது; சற்றடங்கிநிற்றல். சிறந்தசத் திகளென்றதினுல், சலனம், நெகிழ்ச்சி, உட்டணமெனக்கொண்டோம். எங் கேயென்பதனுல், இப்போதெனவருவித்தாம். ஙங்கேயென்பது, எவ்விடம், இல்லையென்னும்பொருள்தரற்பாலதாதலின், பலபொருளொருசொல். இங் கேயில்லையென்னும்பொருடாரநின்றது. நீயிரு மாயைச்சத்திபோம், என விரண்டெழுவா யிரண்டுபயனிலைகளாதலால், இரண்டுவிடையெனக்கொ ள்க. மாயச்சத்திபோமென்பாருமுளர். நீயச்சச்சிதானந்தமாயிருத்தலே, பிரமபாவனையொன்ரூப் பார்த்தலுக்கு விடையும்; வேறொன்றும் நினைந் திடாதிருத்தலே, சிற்சத்திபோர்த்தலுக்கு விடையுமெனக்கொள்க. சத்து, சித்து, ஆனந்தம். இவற்றுள்; சத்து, நான். சித்து, சுயஞ்சோதி. தானே சுயஞ்சோதியாகவிளங்கல், சத்தேசித்தாகும். சுயஞ்சோதியேதானேகவிள ங்கல், சித்தேசத்தாகும். இங்ஙனமாயவொருமையே துக்கநிவர்த்தியாத லால், ஆனந்தமாகும். இதுதான்சச்சிதானந்தமாயிருத்தல். இங்ஙனமிடை விடாதுநிற்கில், அநுபூத்த, சட, துக்கந், தானேயகலும். இங்ஙனமகலல், வே றொன்றும்நினைந்திடாதிருத்தலின்பயன். அவ்விரண்டுவிஞக்களுக்கும், இவ் விரண்டும்விடை.

(கூ-து) மேற்கூறியவிஞக்களிரண்டிற்கும் விடையிரண்டுந்தந்தனரென் பது. அனுபவமில்லா ரிவ்விடைகாண்டலரிது. (கoஉ)

கஅங - கவி. அ - கை.

[மூன்றும்வினவுக்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்.]

மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்தமாம் விவகரித் திடவே
ண்டி, நாவினுண்மண்ணீக் கடமென்ப ரக்கட நசிப்பதும் நாவா லே,
பாவு நாமரூ பங்களீ மறந்துமண் பார்ப்பதே பரமார்த்தஞ், சிவ பே
தகற் பிதங்களீ மறந்துநீ சின்மய மாவாயே.

(இ - ள்.) மேவுமண்ணிலவ்வியத்தமே வியத்தமாம்விவகரித்திடவே
ண்டி நாவினுண்மண்ணைக்கடமென்பர், எ-து. கடசத்திதங்கியமண்ணினிட
த்தில் அக்கடத்தோற்றமெழுதற்குரிய வினைநிகழ்தற்குமுன்ன ரத்தோற்ற
மெழாதுமறைபட்டுநிற்கும், அவ்வினைமறைபட்டுநிற்றலே வினைநிகழாநிற்
புழி வெளிப்பட்டுக்காணும், அங்ஙனம்வெளிப்பட்டுக்காண்டலேயே யன்ன
பாலதிபாகவிவகாரநிமித்தம், சொல்லாலேமண்மயவடிவைக் கடமெனவு
லகர்வழங்காநிற்பர்:—அக்கடநசிப்பதும்நாவாலே பாவுநாமரூபங்களீமறந்து
மண்பார்ப்பதேபரமார்த்தம், எ - து. அந்தக்கடமுடைந்ததென்பதுஞ்சொ
ல்லாலேயே, முன்னுமண்ணைபின்னுமண்ணை, இப்போதும்பானைசட்டிகு
டவைசால் முதலியவாயெங்கணும் வழங்கப்பட்டுள்ள நாமரூபங்களீச் சற்று
நினையாதுமறந்து மண்ணைகப்பார்ப்பதேபரமார்த்தமாம், (அதுபோல):—சிவ
பேதகற்பிதங்களீமறந்து நீசின்மயமாவாயே, எ-து. சிவபேதமாநின்றுள்ள
கற்பிதவடிவங்களனைத்தையு மறந்து, நீசின்மயமாக விளங்குதி, எ-று.

அவ்வியத்தம், வெளிப்படாமை. வியத்தம், வெளிப்படல். பித்தனீ
முதலியவற்றுலாய பாண்டங்களீக்கூறுதது; செல்வம்வந்துழியன்றி நிரந்
தரமன்றுமையினென்க. விவகரிப்பான்வேண்டிக் கடமெனல், விவகாரிக
சத்து. நான்குகாலத்தும் மண்ணையன்றிக் கடமெனற்குப் பொருள் தோற்
றன்மாத்திரமாதலால், அதனை மண்ணைகக்காண்டல், பாரமார்த்திகசத்து.
மண்ணையன்றிக்கடமென லோர்முதலன்றென வுணராமல் சுயம்பெனக்கரு
திக்கடமெனக்கூறல், மூடம். கடமெனக்காணது மண்ணைனக்காண்கை,
விவேகம். சொல்லாலென்னது நாவினலென்றது; நாவினலாயதுசொல்
லாதலா லிதுதுணைக்கருவியெனப்படுற்றும், ஆதலின்கருவியாகுபெயர். இவ்
வுவமைபோல; அறிவைச், சிவனீசன்செகத்தெனக் கற்பணையாகக்கொள்
ளும் விபரீதங்களீ மெய்யெனக்கோடல், விவகாரிகசத்து. இப்பேதங்களீ
யெல்லாம்விசாரத்தால்மறந்து, அறிவாகக் காண்டல், பாரமார்த்திகசத்
து. சிவபேதமென்பது; சிவனுதியாகப்பேதிக்கும்பேதம். அதாவது; சிவ
ஸ்வரசகம். இம்மூன்றுமறிவின்கற்பிதமன்றிச் சுயம்பல்லாமையின், சிவ
பேதகற்பிதங்க ளென்றூர். தெளிந்தவிடத்தனைத்து மறிவாக முடிதலின்,
நீசின்மயமாவாயேயெனப்பட்டதென்க. கடமெனினுங் குடமெனினுமொக்
கும். பரமார்த்தம், உண்மை. எனவே, விவகாரிகம், கற்பிதம். என்றூ

யிற்று. அவயவத்தம், வியத்தம், ஏனக்கூறவந்தது; மண்ணையன்றிக்கு மின்றெனற்கு. அதுபோல, அனேத்து மறிவையன்றி யின்றெனற்கென்க. கடாதிகளைமண்ணைப்பார்ப்பதுபோல, சகமாதிநிரிபதார்த்தங்களையுஞ் சின் மாத்திரமாப்பார்க்கி லன்னியமின்றித் தானெய்வினங்கும், இங்ஙனம்விளங் குதலேழுத்தியாதலால், இதுமூன்றும்விஞைவிற்கு விடையெனக்கொள்க.

(க-து.) அன்னியமயமாகாமற் சின்மயமாகுதியென்பது. கடமாதற் குரியதேதமண், ஏனையவைமண்ணன்றெனற்கு, மேவுமண்ணைனவைடகொ டுத்தனென்க. இதுமுடிவிடங்கூறலென்னுமுத்தி. (கo௯)

கo௯ - கவி. அ - கை.

[திரிசியமெனக்கில்லையாயினுந்தோற்றுவானேன், என்றவிஞ விற்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்.]

பூரிக் குங்கன சச்சிதா னந்தத்திற் பொய்சடந் துயர்மூன்றுந், தாரத் தாயினுந் தோன்றுபாழ் விபரீதந் துடைப்பதெப்படியென்ரு, னீரிற் ரோன்றுந்தன் னிழறலே கீழதாய் நின்றலையினுமே ராப், பாரிற் ரோன்றிய தன்னைநோக் கிடிலந்தப் பாழ்நிழல் பொய்யா மே.

(இ - ள்.) பூரிக்குங்கனசச்சிதானந்தத்திற் பொய்சடந்துயர்மூன்றுந் தாரத்தாயினுந்தோன்றுபாழ்விபரீதந் துடைப்பதெப்படியென்ரூல், எ - து. பரிபூரணமாநிறைந்துள்ள மேலாய சச்சிதானந்தசொருபத்தில் அதுர்த சுடதுக்கமென்னுமூன்று மெனதுதிருஷ்டிக்கதிதூரத்ததாயினும், மெய்போ லத்தோன்றுகின்றபாழும், காமரூபவிபரீதங்களுமாகியவழுக்கைத் துடை க்குமாதெங்ஙனமோவங்ஙனமாயதெறி யினைபதெனத்தெரிந்தருளவேண்டு மெனக்கேட்டையாயின்:—நீரிற்ரோன்றுந் தன்னிழறலேகீழதாநின்றலையினு ம், எ-து. நீரிற்காணப்படுந்தன்னிழல் தலைகீழதாகநின்றலைந்தாலும்:— நே ராப்போரிற்ரோன்றியதன்னைநோக்கிடி லந்தப்பாழ்நிழல்பொய்யாமே, எ - து. தலைகீழதாகவின்றி நேராகத்தரையில்தோற்றியதன்னைக்காண அந்தப்பா ழானசாயையான துண்மையன்ரூய்முடியும், எ-று.

தாரத்ததாயினுமென்றதிடைக்குறை. சத்தையன்றியசத்தும், சித்தை யன்றிச்சடமும், ஆனந்தத்தையன்றித்துக்கமும், இல்லையெனத்திடவிசார த்தாற்றெளிதலின், தாரத்தாயினுமெனவும், தெளியினும்பாழானசெகசீவ பரந் தோன்றுகின்றனவேயிதற்கென்செய்தும், இந்தத்தோற்றத்தையுமக ற்றுமா தெங்ஙனமெனவினவினென்பார், தோன்றுபாழ்விபரீதந் துடை ப்பதெப்படியென்ரூலெனவும், கிணறு, தடாகம், மூதலியவற்றின்கரையி னின்ரூருவன், எட்டிப்பார்க்குமிடத்துத் தன்னிழல்தலைகீழதாகத்தோ ன்றுமன்ரோ? அதனைக்கண்டெடுத்துத் தன்னைக்கரையிற்காண வம்மயக் கமகன்னைமேற்ரும். அதுபோல, வியட்டியாகவேனுஞ் சமட்டியாகவேனு

ங்னமுமிலாருவன, தன்னையங்ஙனமாகக்கருதினின் றண்டபிண்டங்களையெய்
டிப்பார்க்குமிடத்துத், தான்சோபாதிகமாகவுந் தலைகீழதாகவு மிடைவிடா
தலைவதாகதோற்றக்காண்பனன்றே? பரிபாககாலம்வந்துழி, அதனைக்கண்
டருவருப்புற்றுத் தன்னைநிருபாதிகமாகச்சிதாகாயத்திற்காண வம்மயக்க
மக்கணமேதெளிவையுமென்பார், கீரிற்றேரன்றுந்தன்னிழறலை கீழதாகின்றலை
யினுகோராப் பாரிற்றேரன்றியதன்னைநோக்கிடி லந்தப்பாழ்நிழல்பொய்யாமே
யெனவுங்கூறினர். உபமானத்தா லுபமேயம் வருவித்தாம். நீர், அவித்தை.
நிழல், தத்துவக்குழாம். தலைகீழதாகின்றலைதல்; எழுவகைத்தோற்றத் தெதி
லுந்நிலையுறுது புண்ணியகன்மத்தால்மேலும் பாபகன்மத்தாற்கீழுமுபாதியள
வாகநின்றலைதலை. பார், சிதாகாயம். தோன்றுதல், நிருபாதிகமாகவிளங்கல்.
தன்னைநோக்கிடல், தான்சொப்பிரகாசமாகவிளங்கக்காண்டல். அந்தப்பாழ்
நிழல், அந்தவிவர்த்ததத்துவக்குழாமாகியதன துசாயை. பொய், தோன்றியுந்
தனக்கின்மை. எனத் திஷ்டாந்தாஷ்டாந்தங்களைக்காண்க. கீரிற்றேரன்றுந்
தன்னிழ றலைகீழதாகின்றலையினுமென்பது, பகிர்முகம். கோராப்பாரிற்றே
ன்றியதன்னைநோக்கிடி லந்தப்பாழ்நிழல்பொய்யாமேயென்பது, அந்தர்மு
கம். இவ்விருமுகமும் ஞானஞ்ஞானங்களிலெனவறிக.

தனதெதார்த்தவடிவைநோராக்காணத் தனதுகற்பிதவடிவந்தனக்கின்று
மென்பது. பொய்சடந்துயர்மூன்று மறிவாகியகண்ணுடிக் கழுக்கெனக்கருதி
த்தொடைத்தலை வினையாக்கினர். 'தனது ஸ்மரணையிற்வகைப்படும். அதா
வது; விஸ்மரணை,தஸ்மரணையென.விஸ்மரணை,அநுர்தசுடதுக்கம்.தஸ்மரணை,
சச்சிதானந்தம்.தனதுவிஸ்மரணையைத்,தனதுதஸ்மரணையாற்றொடைக்கவே
ண்டுமெனப்பெற்றும் பெறவே, தன்னைவிடவிவவிரண்டுஸ்மரணையு மின்றெ
னக்கண்டாம். காணவே, இருப்பதுதானேயெனத்தெளிந்தாம். சச்சிதானந்த
சிவத்தைச் சச்சிதானந்த மென்றதூஉம், அநுர்தசடதுக்கமாயையை யநுர்த
சடதுக்கமென்றதூஉம், குணவாகுபெயர். இரிசியந்தனக்குக்காணுவகைக்குத்
தானுரைத்தது. (கஅசு)

கஅரு - கவி. அ - கை.

[அறிவையன்றிக்காரணகாரியமின்றென வுக்கவியிற்
கூறுகின்றார்.]

ஞானங் காரண மறிவுகாண் காரிய காமரூ பப்போர் க
ளான தெப்படி யழிந்ததெப் படியென வாய்ந்தல் பலனன் றே
மான மைந்தனே தீர்க்கசொற் பனசகிம் வந்தனும் பாரா மற்
பொன தங்கினை யாமலுன் போதமாய்ப் பூர்ணமா யிருப்பா யே.

(இ-ள்.) ஞானங்காரணமறிவுகாண்காரிய காமரூபப்போர்கள், எ-து.
அறிவேகாரணமாகவும், அவ்வறிவேகாரியமாகவுமிருக்கின்றது. அங்ஙனக்காரி
யமோ காமரூபப்போர்களாயுள்ளனவைகளாம்— ஆனதெப்படியழிந்ததெப்ப

டியென வாய்குதல்பலனன்மே றை-து. இந்தவறிவுகாரியமானதெப்படி, யா காதழிந்தவாறெப்படியென் றாராய்ந்துதெளிந்தவாறுநில்லாது மீண்டுமீண்டு மிதுவேதொழிலாக வாராய்தல்புரியாநிற்றல், ஆத்மலாபமன்றே, ஆயின்யா துசெய்வதென்னின்:— மானமைந்தனேதீர்க்கசொற்பனசகம் வந்ததும்பாரா மல்போனதுந்நினையாமலுன்போதமாய்ப் பூர்ணமாயிருப்பாயே, எ-து. தனக் கிழிவுவராதுகாக்கு மானமுள்ளஞானபுத்திரா ! என்றும்விடாது தோற்றுந் தீர்க்கசொற்பனசகம் போல்வதாகிய விச்சகமானது மூடத்தாலுதித்ததைப் பாராமலும், தெளிவாலழிந்ததைநினையாமலு முனதுஞானப்பிரகாசநின்றவா றெங்ஙனமோ வங்ஙனமாகவேநிற்றி, எ-று.

அறிவேகாரணகாரியமென்கை; அறிவையன்றிக்கடபடமென்னுங்காரி யமும், மண்நூலென்னுங்காரணமுமின்றும். இவ்விரண்டுமறிபடுபொருளன் றேவெனின், காரணநாட்டத்திற்காரியமும், காரியநாட்டத்திற்காரணமுங் காணுதன்னியோன்னியாபாவ மெய்துவதென்னை. இவ்விரண்டவசரத்து மததுவாத்தோற்றலறிவன்றே, ஆனதுகொண்டென்க. இவ்வபிப்பிராயத்தை க்கண்டுபிடித்தல் மிகவுமரிது. எங்ஙனமெனில், அறிபடுபொருளென்னுமயக்க மகலாமைபற்றி யென்க. காரணத்தைத்தவிரக் காரியமோர்முதலெனவுஞ் சு யம்பெனவுமுணர்த லறிவேனுமறியாமையெனப்படும். கடபடத்தைக்காரிய மெனக்கோடல்பற்றியன்றே? மண்ணூலையன்றிக்காரியமுளதாயின் மண் ணூல்காரணமாகலாம். மண்ணூல்காரியமல்லாதபோதுகாரணமுமல்ல. மண் ணூலுக்குக்காரணகாரியமெனவந்தது; கற்பிதமென்றுணர்கைநிசமாதலா லறி வெனப்படும். அறிவறியாமையென்னுநாம மிவ்விரண்டவசரம்பற்றிவந்ததன் றி யெதார்த்தமாத்தனக்கின்மையின், அய்குதலீபலனன்றே யுன்போதமாய்ப் பூர்ணமாய்யிருப்பாயேயென்றார். அறிவேயறியாமையாதலா லறிவுகாண்கா ரியமெனப்பட்டது. தொன்றுதொட்டுப்பிறவிதோறும் விடாதுவழங்கிவருத லினாலும், சுயம்பெனற்குப் பொருளின்றிச் சொப்பனக்காட்சிபோல்வதினா லும், சொப்பனம்விழித்துழியில்லாவாறுபோல, இச்சகமுந்தன்னைத்தான்கா ணவிழித்துழி யில்லாமற்போதலானும், சொப்பனபோகத்தினித்தியநிருத்தி யில்லாவாறுபோல, இவ்வுலகபோகத்திலுநித்தியநிருத்திசற்று மில்லாமையா னுந் தீர்க்கசொற்பனசகமெனப்பட்டதென்க. வந்ததும் பாராமல்போனது நினையாமலென்றது; இவ்வுலகம்பயனற்றதெனக்குறிக்க. அறிதல்காண்காரிய மெனப் பாடமுமுண்டு. அறியாமையையறிவென்றது, காரணவாகுபெயர். அறியாமையன்றிநாமரூபப்பெயர்களுண்டாயின் காரியமுமுளதாம். இன்றே லிலதாம். அறியாமையாமுடிவதென்னை யாராய்தலின்கண் நாமரூபமாயுள்ள வனைத்தும். இஃதறியார்மறுத்தலாற்பயனென்னை? பிறர்மதிக்கற்கென்க.

(க-து.) இருப்பதறிவொன்றுமேயன்றிவேறின்றென்பது. இதுபற்றியுன் போதமாயிருப்பாயென்றதென்க. ஞானம், அறிவு, ஒருபொருட்கிளவி. ()

கoசு - கவி. அ - கை.

[பகிர்முகத்திலெவவளவுகாலம்பழகியதோ, அவவளவுகால
மந்தர்முகத்திலும்பழகவேண்டுமென விக்கவியிற்
கூறுகின்றார்.]

**அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பாராமுக மாகிலு யம்மட் டு
நிசத்தி லுள்விழிப் பார்வையா யிப்படி நிரந்தரப் பழக்கத் தால்
வசத்தி லுன்மன நின்றுசின் மாத்திர வடிவமா கிடின்மைந் தா
கச்த்த தேகத்தி லிருக்கினு மானந்தக் கடல்வடி வாவா யே.**

(இ-ள்.) அசத்திலெம்மட்டுண்டம்மட்டும்பராமுகமாகினுய், எ-து. மெய் போலத்தோற்றுஞ் சகசீவபரமென்னும்பொய்யி லெவவளவுகாலஞ் சம்மந் தமுண்டாயிருந்ததோவவவளவுகாலமளவும்பராக்காகியபகிர்முகப்பட்டனை:- அம்மட்டுநிசத்திலுள்விழிப்பார்வையாயிப்படி நிரந்தரப்பழக்கத்தால், எ-து. பகிர்முகமானவவவளவுகாலவளவுமறிவென்னு முண்மையிலந்தர் முகநாட்ட மாநின் றிங்ஙனமிடைவிடாதுபழகுவையாயி னந்தப்பழக்கத்தால்:—வசத்தி லுன்மனநின்றுசின்மாத்திர வடிவமாகிடின்மைந்தா, எ-து. மனதின்வசத்திற் செல்லா துன்வசத்திலுன்மனநின்று சைதன்யவடிவமாத்திரமாக விளங்குமா யின் ஞானபுத்திரா:—கசத்ததேதகத்திலிருக்கினு மானந்தக்கடல்வடிவாவா யே, எ-து. மலமூத்திரபாண்டமாதலினருவருக்கத்தக்கதேதகத்தினீயிருக்கி னும் பிரமானந்தசமுத்திரஸ்வரூபமானவ, எ-று.

சத்தினற்குப்பொருளறிவையன்றிச் சகசீவபரமின்மையி னிவற்றை யசத்தெனவும், பராமுகம், பகிர்முகம். நிசம், சைதன்யம். உள்விழிப்பார்வை, தனதெதார்த்தவடிவைவிடாதுகாண்டல். சின்மாத்திரவடிவமாதல், மனஞ் சொப்பிரகாசமாகவிளங்கல். மட்டு, அளவு. தஸ்மரணை, விஸ்மரணையென ஸ்மரணையிருவகைப்படும். தஸ்மரணை, தன்னைத்தானுள்ளவாறுகாண்டல். விஸ்மரணை, தன்னைத்தானயலாகக்காண்டல். பொருளல்லவற்றைப் பொரு ளாகக்கொண்ட தெவவளவுகாலமோ, அவவளவுகாலமும் பொருளைப்பொரு ளாகப்பழகவேண்டும். அன்றேல், பழகியகாலவளவுபயன்றரும். சைதன்யத் தையன்றியாதுமில்லை, ஆயின் யாதுமல்ல. எங்ஙனமெனில், மண்ணாலையன் றிக் கபபடமில்லை, ஆயின்மண்ணால்கடபடமல்ல; என்றாற்போலும். இங்ங் னமாயவிசாரமுகத்தாற்பழகல், நிசத்திற்பழகல், இங்ஙனமாய விசாரமின்றிப் பழகல், அசத்திற்பழகல், என்பதுபண்டிதசம்மதவசனம். கசத்ததேதகம், உரிச் சொல்லடியாகப்பிறந்த பெயரொச்சத்தொடர். கசத்தல், தேகத்தியல்பு. உணர் ந்தார்க்குமாத்திரமெனக்கோடல் வழு. ஏனையோர்க்குப்பிரியவடிவாயினும், மலமூத்திரபாண்டமன்றுயிற்றே? ஆதலினேற்போர்பிழை. அறிவு, சத்து. அறியாமை, அசத்து. அறியாமையன்றிச் சகமாதிதிரிபதார்த்தமுமின்றுத லா லிவற்றையோர்முதலாகவுஞ் சுயம்பாகவுங்கொண்டு சத்தாகவேனும் அச

த்தாகவேனும் பிரதிவ திப்பமல்லம். தன்னைச்சொப்பிரகாசமாகக்காண்டல், அறிவு. அன்றுகக்காண்டலறியாமை.

(க-து.) அசத்திற்பழகியதுபோல், சத்திலும்பழகவேண்டுமென்பது. நிசத்திலுள்விழிப்பார்வையா மிப்படியெனப்பாடருமுண்டு. அவவளவுகாலம் பழகாவிடின் ததாகாரமாவதின்றி விவர்த்தமாகமுன்போலழிதும். (கoசு)

கoஎ - கவி. அ - கை.

[ஆன்மாசச்சிதானந்தமென்றீர், சத்து, சித்தைபோல, ஆனந்தஸ் வரூபமாயின், அயலேயவாவுவதென்னை? என்றவினவை யிக்கவியிற்கூறுகின்றார்.]

தானன்றி வேறொன்று மில்லாது பூரணச் சச்சிதா னந்த குண மா, யூனின்ற வுயிர்தோறு மொன்றுறு மென்மூல தொக்கின்ற படிக ண்டிலே, ஞனென்ற சீவன்கள் சத்தான வகையொக்கு ஞானங்கள் வெளிகண்ட தா, லானந்த மிலைபோல வெளியாக வுதியாத வடை வேது குருகாத னே.

(இ-ன்.) தானன்றிவேறொன்றுயில்லாது பூரணச்சச்சிதானந்தகுணமாய், எ-து. ஆன்மா, தான்மாத்திரமிருப்பதன்றித் தன்னைத்தவிரவயலாக வேறெ யாதொன்றுமிருக்க விடந்தருதலின்றி யங்கிங்கெனுதெங்கும்பரிபூரணமாயும், சத்து, சித்து, ஆனந்தகுணமாயும்:—ஊனின்றவுயிர்தோறுமொன்றுறுமென்று லதொக்கின்றபடிகண்டிலேன், எ-து.மாமிசவடிவாயமைந்ததேகங்களிலுள்ள வுயிர்களிலெல்லாம், அக்குணம் வெவவேறுகாமிலேகமாநிற்கவினங்குமாயின் அக்குணம் தமக்குள் பேதியாதேகமாநிற்கும்வண்ண மடியேன் சற்றுமையமி ன்றிக் கண்டிலனே:—நானென்றசீவன்கள் சத்தானவகையொக்கு ஞானங் கள்வெளிகண்டதால், எ-து. நானெனக்கூறுநிற்குஞ்சீவர்க ளறிவதுபற்றிக் கரணேந்திரியமென்னு ஞானங்களுளவாகநோகாணப்படுவதால் சத்தாகவ ன்றிச்சித்தாராது, சித்தாயிருப்பதுபற்றி யுயிர்கள்சத்தாயிருக்கிறவிதம் யுத்திக் கொத்திருக்கின்றது:— ஆன்தமிவைபோலவெளியாக வுதியாதவடைவேது குருகாதனே, எ-து. சத்துஞ்சித்துமொத்துத்தோன்றுமாறுபோல, ஆனந்தமு மொத்திருக்கநோகாணப்படாதவகையாதுகொலோ யானறிகிலன்குருமூர்த் தியே! யிவ்வையந்தவிர்த்தருள வேண்டுமென்றிரந்தனன், எ-று.

தானைனப்பொதுப்படக் கூறியதால், ஆன்மா வருவித்தாம். என்னை, "முதற்பெயர்நான்குஞ்சினைப்பெயர்நான்கும், சினைமுதற்பெயரொருநான்கு முறையிரண்டுங், தன்மைநான்குமுன்னிலையைந்தும், எல்லாந்தாந்தானின் னனைபொதுப்பெயர்", என்றுர்பவணந்தி. தானன்றிவேறொன்றுமில்லாததா ன்மாவாதலின், இல்லாதனவினையெச்சமாக்கினும். பெயரெச்சமாக்கின்,

குணத்துக் தாகின்றது. அங்ஙனமாக்கின், தானன்றியென்றுதிருக்கவேண்டும், ஆதலிற் பொருந்தாது. பூரணச்சச்சிதானந்த குணமாயென்றதனால், ஆன்மாவெனப்பெற்றும். ஆன்மாதானுதலின் தானன்றியென்னவும், ஆன்மா தன்னைத்தான் விசாரியாதுழி யயலுளனாம். விசாரித்துழிச்சற்றுமின்றும். ஆதலின்வேறொன்றுமில்லாதெனவும், சொல்லால்வேறுயினுமர்த்தத்தாலொன்றுதலின், பூரணச்சச்சிதானந்தகுணமாயெனவும், தேகத்தை யூனென்றது, காரணவாகுபெயர். ஆன்மா சச்சிதானந்தமாயின் சத்துசித்தைப்போல ஆனந்தமாயிருக்கவேண்டும். இருக்கின்றதெனில், அயலேயவாவியலேவதென்னே? ஆதலிற் பொருந்தாதென்பார், ஆனந்தமிவைபோலவெளியாகவுதியாத வடைவேதெனவுங்கூறினர். உபாதிபற்றிப்பலவாகக்காண்டலின், சீவன்களெனப்பட்டது. நானென்ற சீவனென்றது; நானென்னுத சீவனைக்காட்டல். அந்தச்சீவன், மகான். ஆனந்தமாயிருத்தல்பற்றியென்க.

(கருத்து:) ஆன்மாசச்சிதானந்தமாயின், ஆனந்தமெங்கேயென்பது. உடன்படாமைக்கேதுஃதெனவுணர்க. சீவன்கள் சத்தானவகையொக்குமென்பதற்கேதுகாட்ட, ஞானங்கள்வெளிகண்டதாலெனப்பாடங்கொண்டாம். வெளிகண்டதாமெனப் பாடங்கொள்ளின், சத்தானவகையொக்குமெனற்குப் பொருத்தமின்றிவேறும். இவ்வியைபுணராவிடத்துளாயென்பயனுறும். அஃதொக்கின்றபடியெனினுமமையும். (கoஎ)

கoஅ - கவி. அ - கை.

[அதற்குவிடைகூறப்புகுந்தாரிக்கவியிலுபமானபூர்வமாக
விருத்திபேதத்தினற்குணங்கள்பேதித்ததாகக்
காண்பதைக்கூறுகின்றார்.]

உருவங்களிரதங்கள் பரிசங்களொருபூவி லொன்றுகு மென்று மே, காரணங்களொரொன்றி னேரொன்று தெரியுங் கணக்கன்றி வாராது கா, ணருமந்த சச்சிதா னந்தச் சுபாவங்க ளான்மாவின் வடிவாயி னும், பிரபஞ்ச மயமாம் விருத்திபே தத்தினற் பேதங்க ளாமைக்த னே.

(இ-ள்.) உருவங்களிரதங்கள்பரிசங்களொருபூவி லொன்றுகுமென்றுமே, எ-து. உருவங்களும், சுவைகளும், பரிசங்களும், ஓர்மலரின்கண்பேதமாகாதபேதமாயேகமாயிருக்கின்றனவெனினும்: — காரணங்களொரொன்றினேரொன்றுதெரியுங் கணக்கன்றிவாராதுகாண், எ-து. புறக்காரணமாகியபஞ்சேந்திரியங்களி லொவ்வொருபொறிகளால், அதற்குரியவொவ்வொருவிடயமுணரப்படும், இங்ஙனமுணரப்படும்வகையாலன்றி வேறொன்றுணரப்படுமென்பதெங்ஙனம்வரும், வராதே :— அருமந்தசச்சிதானந்தச்சுபாவங்க ளான்மாவின் வடிவாயினும், எ-து. அடைகாக்குமிகவும்மிதாயுள்ளசச்சிதானந்தமாயினங்குஞ்சுபாவங்கள், ஆன்மாவின்சுயவடிவாம், சுயவடி

வாயினும்: — பிரபஞ்சமயமாய்விருத்திபேதத்தினும் பேதங்களாணமைந்தனை, எ-து. சத்தபரிசரூபிடையமயமாகின்றுள்ள சாத்துவிதமாகிய மூக்குணத்தால் வரும்விருத்திபேதத்தினுல்பேதங்களெய்தற்குரித்தாம், ஞானபுத்திரா, எ-று.

உருவங்கள், அழகுகள். இதுகண்ணுலுணர்படைவகள். இரதம், இனிமை. நாவினுக்கன்றிமூக்கினுக்கெனினுமமையும், அமைதலால்சுகத்தமெனப்படும். பரிசங்கள், தொக்காலுணர்பவைகள். என்பனவைதிகம். கண், நா, தொக்கு. இவற்றிற்குவிடையம், உருவம், இரதம், பரிசம், எனவிக்கவியிற்கூறுமுறைமை. உருவமுதலிய மூன்றும் மலரிலபேதமாயினு மவற்றைத் தனித்தனியுணரும் பொறிகளாற் பேதமுறுமாறுபோன்று, சத்துமுதலியமூன்றும் ஆன்மாவிலபேதமாயினு மவற்றைத் தனித்தனியுணருஞ் சாத்துவிதமுதலியவற்றுல் வரும் விருத்திபேதத்தினுற் பேதமுறுமெனவுணர்க. அகக்கரணம், மனம். புறக்கரணம், பொறிகள். இவ்விரண்டுங்கரணமெனினு மிங்கேபொறிகளெனக்கொள்க. கணக்கு, விதம். அருமருந்தன்னசச்சிதானந்தமெனற்பாலது, அருமந்தசச்சிதானந்தமென்றுயது, மரூஉ. ஆன்மாவுக்குச்சச்சிதானந்தங்கள் சுபாவமெனவும், வடிவமெனவுங்கூறியதால், மூன்றுமொன்றுக்கொன்றபேதமெனவும், இங்ஙனமிருத்தல்சுபாவமெனவும்பெற்றும், விருத்திபேதத்தினுலென்றது பிரபஞ்சமயமாவெனவடைகொடுத்தது, விடயாகாரமன்றிவேறுகாரஞ் சற்றுமாகாமையினென்க.

(க-து.) சச்சிதானந்தங்கள்; தத்தமிலக்கணங்களைத்தனித்தனியறிவதாற் பேதமுறுவதுபோற்காண்டலன்றித் தமக்கின்மையினபேதமேயென்பது. விருத்திபேதம் மறுபாட்டிலிருப்பதாலாங்கே விளக்குதும். உருவமுதலியமூன்றும் மலருக்குவேறுயின், சத்துமுதலியமூன்று மான்மாவுக்குவேறுகலாம். உருவமுதலியமூன்றுமறிவதாலன்றித் தனித்தனிவெவ்வேறுயின், சத்துமுதலியமூன்றுந் தத்தமிலக்கணங்களையுணர்வதாலன்றித் தனித்தனிவெவ்வேறுகலாம். ஆகாதெனின், ஆன்மாவானந்தவடிவமெனலைத் தடையின்றி யேற்கவேண்டுமென்றுயிற்று. காண், அகைநிலை. (கo-ஆ)

கடுகு - கவி. அ - கை.

[விருத்திபேதமினையவென்னும், அவைவீந்தவகையும்
இக்கவியிற்கூறுகின்றார்.]

தாமதமி ராசதஞ் சாத்துவித மூக்குணத் தால்வரும் விருத்தி மூன்று, மாமலைகண் மூடமூங் கோரமுஞ் சாந்தமு மபிதான மாகு மகனே, யேமுற விருக்கின்ற சச்சிதா னந்தங்க ளென்றென்று மொன்றி னு, நாமுனாக்கும்விருத் திப்பிரிவி னற்சொருப நானுதி பிரிவாகு மே.

(இ-ள்.) தாமதமிராசதஞ்சாத்துவிதீ முக்குணத்தால்வரும்விருத்திமூன் றும், எ-து. தாமதம், இராசதம், சாத்துவிதமெனக்குணமூன்றும், இம்மூன் றுமம்வரும்விருத்திபேதமூன்றும்:—ஆமவைகள்மூடமுங் கோரமுஞ்சாந்த மு மபிதானமாகுமகனே, எ-து. ஞானபுத்திரா ! அங்ஙனமூன்றுனவைகள் மூடமுங்கோரமுஞ்சாந்தமுமெனப் பெயர்பெறுவனவாம்: — ஏமுறவிருக்கி ன்றசச்சிதானந்தங்க ளென்றறுமொன்றுகிலும், எ-து. கெம்பீரமாயிருக் கின்ற சத்து, சித்து ஆனந்தமென்பன, என்றென்றைக்குமொருபடித்தாயே கமாயிருப்பனவாயினும்: — நாமுனைக்கும்விருத்திப்பிரிவுறற் சொரூபஞானு திபிரிவாகுமே, எ-து. யாமுற்கூறிய விருத்திபேதத்தினு லான்மசொரூபமா கிய சித்துமுதலியமூன்றும்பேதிக்கும், எ-று.

தாமதம், மூடம். இராசதம், கோரம். சாத்துவிதம், சாந்தம். என்ப னநோர்நிரனிறை. தாமதமுதலியமூன்றுகுணத்தின்தர்மம், மூடமுதலியமூ ன்றும். சத்தாதியென்னுதுஞானுதியென்றது, அடியினைபுத்தொடைபற்றி யென்க. ஒவ்வோருயிர்க்கண்ணுமேனும், மக்களிடத்துமொவவொருவர்பா லுமேனும், மூன்றுகுணமிருக்கின்றன, இருக்கினுமூன்றுளோர்குணமேலிட் டுநிற்கும், நிற்பதாலததற்கினையந்தவிருத்தியொன்றுமேலிட்டேநிற்கும். விரு த்தியுளொன்றுசாந்தம். இந்தச்சாந்தமிருவகைப்படும். அவை, காருணியசாந் தம், உபசாந்தமென்பன. உயிர்க்கிடுக்கண்ணுறுதுபொறுத்தல், காருணியசாந் தம். அன்னியமின்றிச்சமஸ்தமுஞ் சின்மாத்திரமாவிளங்குஞ்சாந்தம், உப சாந்தம். இக்கவியில்சாந்தமென்றது, உபசாந்தத்தை. இந்நெறித்தாயவுப சாந்தமெங்கே யுண்டோ, அங்கேவிடயானந்தமின்றி யாத்மானந்தம் விளங் கும். விளங்குதலனுபவமாயென்றுநிகழ்தலா லின்றெனமறுத்தல், தாஞுகாப் பிழை, எனக்குறிப்பித்தற்கிக்கவிகூறியதென்க.

(க-து.) ஆத்மா வானந்தவடிவமன்றெனல்; விருத்திபேதமறியாக்குறை யென்பது. தாமிகுந்தமசிரசுசத்வமெனு முக்குணத்தால்வரும் விருத்திமூ ன்றுமெனப்பாடமுமுண்டு. "இஃதெஞ்சியசொல்லினெய்தக்கூறலென்னு முத்தி" "பிறிதொடுபடாஅன்றன்மதங்கொளலென்னுமதம்". ஆன்மாவைக் காணுதா ரானந்தம்வேறெனுஞானியர். (கoக)

ககo - கஷி. அ - கை.

[மூடத்திற்சத்தும், கோரத்திற்சத்துஞ்சித்தும் சாந்தத்திற்சத்து சித்துஆனந்தமுமிருக்கக் காணலாமெனவிக்கவியிற் கூறுகின்றார்.]

சடமான மூடத் தருக்கல்லு மண்களிற் சத்தொன்று மேதோ ன்று மால், விடமான காமாதி கோரத்தி லானந்தம் வினையூது மற்ற வைக ளாந், திடமான வொழிவாதி சாந்தத்தி லேசச்சி தானந்த

மூன்றும்வெளி யா, மடமான மூடங்கள் கோரங்கள் விடசாந்த மன மாகி லானந்த மே.

(இ-ள்.) சடமானமூடத்தருக்கல்லுமண்களிற் சத்தொன்றுமேதான்று மால், எ-து. மரம், கல், மண், இவைபோல்பலவுசடமாகின்றுள்ள மூடவிரு த்திகளாம். இம்மூடவிருத்திகளில் சத்தொன்றுமாத்திரமிருக்கக்காணும்:— விடமானகாமாதிகோரத்தி லானந்தம்வினையாதுமற்றனவுகளாம், எ - து. விஷம்போல்வனவாகியகாமம், குரோதம், லோபம், இவைபோல்வனகோர விருத்திகளாம், இந்தக்கோரவிருத்திகளி லானந்தமாத்திரமிருக்கக்காணாது, ஏனையசத்துஞ் சித்துமிருக்கக்காணும்: — திடமானவொழிவாதிசாந்தத்திலே சச்சி தானந்தமூன்றும்வெளியாம், எ - து. மூத்தியெனற்குத்திடமாகின்று ள்ள, ஒழிவு, சுத்தம், சூனியமுதலாயுள்ளவைசாந்தவிருத்திகளாம், இந்தச் சாந்தவிருத்திகளில், சத்து, சித்து, ஆனந்தமென்னுமூன்றும் யாவருங்காண வினங்கும்: — மடமானமூடங்கள்கோரங்கள் விடசாந்தமனமாகிலானந்தமே, எ-து. மடமையேவடிவாயுள்ளமூடவிருத்திகளும், கோரவிருத்திகளுமல்லா தகன்ற சாந்தவிருத்திமயமாகமண்மாயிடி னப்போதான்மாவியல்பாகவே யானந்தவடிவமெனக்காணும், எறு.

சச்சிதானந்தமல்லாத சகசிவுபரமில்லை. இல்லையாயினும், உணர்தலா லிப்பேதங்காணும். எங்ஙனமெனின், உணர்தல்; தாமதமுதலியகுணத்திரிய த்தி லொன்றின்வயப்பட்டுநிற்கும். இக்குணத்திரியத்திலொன்று தத்தமக் கியைந்த விருத்திபேதமூன்றனுள் தன்சுயதர்ம்மவிருத்தியதாகு மிதனுலெ னவுணர்க. மூடவிருத்தியிற்சத்தும், கோரவிருத்தியிற்சத்துஞ்சித்தும், சாந் தவிருத்தியிற்சத்துஞ்சித்துமானந்தமு மிருப்பதெங்ஙனமெனின், மூடவிருத் தியாகிய மரம், கல், மண்முதலியவைக ளணுக்கள்சையோகமேறு மவ்வணு க்கள்பரமாணுவையன்றியில்லை, அந்தப்பரமாணுதன்மாத்திரையைத்தவிரவி ல்லை, தன்மாத்திரை யகங்காரத்தைத்தவிரவில்லை, அகங்காரம் மகதத்துவத் தைத்தவிரவில்லை, மகதத்துவம் மூலப்பிரகிருதியைத்தவிரவில்லை, மூலப்பிர கிருதி யான்மாவாகிய தன்னைத்தவிரவில்லை, தானுதிறசத்தேயிங்ஙனம்பிரதி பலித்தலாற் சத்தொன்றுமேதான்றுமெனவும், கோர்விருத்தியாகியக்காமக் குரோதாதிகள் தனதுவிஸ்மரணை காரணமாகவெழு மனர்த்தரூபமாதலா லவைகளை மெய்யெனக்கோடலால் யாவினைதனவகமமைதோன்றும். தோன்றவே, யுத்தாயுத்தந்தெரியாது மனஞ்சென்றவழியே பிறர்மனைநயத் தல், பிறர்பொருளைவஞ்சித்தலாதி தீவினைகள்புரியவேண்டிவரும். வரவே, யப்போதுசுகம்போலக்காணினுந் துன்பமாகமுடியும், மூடதலால்கோரத்தி லானந்தம்வினையாது மற்றனவுகளாமெனவும், சாந்தவிருத்தியாகியவொழிவு சுத்தஞ் சூனியஞ்சுபாவ மதிதமாதிகள் தனதுதன்மரணைகாரணமாகவெ ழு மர்த்தரூபமாதலால், அவற்றைத்தன்னுருசாரூபமாகவிடாதனுசந்தா னஞ்செய்யவேண்டும். செய்யவே, யாவினைதன்னுமகமமைதாமேகழி

னும், கழலவே, யுத்தாயுத்தமென்பதிறந்து மனஞ்சின்மாத்திரமாகவினங்கும் வினங்கவே, யன்னியமின்றித்தான்மாத்திரமாகநிற்கும். நிற்கவே, சத்தேசித்தாகவும், சித்தேசத்தாகவுலகுக்கியமெய்தும். எய்தவே, யானந்தானுக்கமுடியும். முடியவே, சச்சிதானந்தவொருமையத்தாம், ஆதல்பற்றியொழிவாதிசாந்தத்திலே சச்சிதானந்தமூன்றும்வெளியாமெனவுங்கூறினர்.

(க-து.) விருத்திநிரியமினையவெனவும், அவற்றுற்சச்சிதானந்தபேதமினையவெனவும்,ஒருமையினையவெனவும்விளக்கியதென்பது. மூடங்கள் கோரஞ்சுள்விசொன்ன மணமாகிலானந்தமேயென்றது; மனதுமூடவிருத்தியாகில் சத்தும், கோரவிருத்தியாகில்சத்துஞ்சித்தும், சாந்தவிருத்தியாகில்சத்துஞ்சித்துமானந்தமுமெனப்பொருடரற்கென்க. எனவே, மனங்காரணமாகவிப்பேதாபேதந்தோன்றிற்றேயன்றி யான்மாவுக்கின்றெனப்பெற்றும். பெறவே, யான்மா சச்சிதானந்தமென்றுணிற்று. யிஃதறியார் சச்சிதானந்தசொரூபந்தன்னைவிடவேறென்பர். இவர் தன்னிலக்கணங்கல்லா தன்னியவிலக்கணங்கற்றூர்போலும். ஆல், அசைநிலை. தருக்கல்மண்ணென்றது கல்லுவெனவுகரச்சாரியையுபெற்றது; "ருணாமலவளனவொற்றிறுதொழிற்பெயரோவல்வினாநனியவ்வண்மெய்வரி னுவவுறுமேவ லுருசிலசில்வழி" யென்னும் விதியாலென்க. ஆன்மா சச்சிதானந்தவிலக்கண மகன்றதுங்கூடியதும்போல்வதன்றி வேறன்றென்க. (ககஎ)

ககக - கவி. அ - கை.

[சச்சிதானந்தவிலக்கணமினையதெனத்தெரியாது எங்ஙனமான்
மாவுக்கென் றேற்பனென்றவினவுக்கு விடை யிக்
கவியிற்கூறுகின்றூர்.]

இகமான குருநாத னேசச்சி தானந்த மெனுமிலக் கணமறிகி லே
னகலாத சத்தாவ தேதுசித் தாவதே தானந்த மேதென்றி டின்
மிகுகால மூன்றுங் கெடாதிருப் பதுசத்து வேறுபா டறிதல் சித்தா
மகிழ்காம நுகர்போது சுகமாகு மனுபூதி வாழ்வென்ப தானந்த மே:

(இ-ள்.) இகமானகுருநாதனேசச்சிதானந்தமெனு மிலக்கணமறிகிலேன், எ-து. இம்மையிலடியேனுக்கினையவதானகுருசாமியே! சத்து, சித்து, ஆனந்தமென்னுமிலக்கண மினையவெனக்கேட்டறிகிலேன். ஆயினும்:—அகலாதசத்தாவதேது சித்தாவதேதானந்தமேதென்றிடின், எ-து. விடாதுநின்றுள்ள சத்தென்பதியாது, சித்தென்பதியாது, ஆனந்தமென்பதியாதெனக் கேட்பையாயின்:— மிகுகாலமூன்றுங்கெடாதிருப்பது சத்து வேறுபாடறிதல்சித்தாம், எ-து. அளவுக்கட்டங்காதுமிகுன்ற இறப்பெதிர்நிகழ்வெனக்கூறுங்காலமூன்றினு மிடையினீங்காதிருப்பதுயாதோவதுசத்தெனவும், இங்ஙனமாதினின்றநங்களிங்கவேறுபாடுகலவவற்றைவிசாரித்தறிதல்யாதோ வதுசித்தெனவும்வழு

ங்கப்படுவதாம்:—மனிழ்காமதுகர்போதுசுகமாருமனுபூதி வாழ்வென்பதானந்த மே, எ-து. எவருமனிழத்தக்க காமவின்பத்தை யனுபவிக்கும்போதெங்ஙனஞ் சுகவெழுமோ வங்ஙனம்போல்வதாகியசுவானுபூதி சுகவாழ்வெனப்படுவதியா தோ வஃதானந்தமெனப்படுவதாம், எ-று.

சச்சிதானந்தவிலக்கணம்பிரமத்துக்கல்லது வேறொன்றுக்கல்லாமையின் பிரமமிலக்கியமெனப்பெற்றும். இலக்கியத்தினமைதி யில்க்கணமாதலானும், இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பலினென்றிருப்பதானும், மாணைக்கனில க்கியமாகியபிரமத்தையுணர்ந்ததுபற்றி யதினிலக்கணத்தையுணரவேண்டி வி ளுவினனென்க. மிகுவென்னுமிகையா லிங்ஙனங் காலந்திரிவிதமாதல் கண க்கின்மையெனக்குறிக்கக்கண்டாம். மிகுகாலமூன்றுங்கெடாதிருப்பதுசத்தெ ன்றதனால்,காலாதீதமெனவும்; வேறுபாடறிதல்சித்தாமென்றதனால்,அங்ஙன ங்காலாதீதமாகின் றறிவறியாமைபாகுபாட்டைவேகமாக் கற்குவிசாரியாநிற்ற லெனவும்; மனிழ்காமதுகர்போதுசுகமாருமனுபூதி வாழ்வென்பதானந்தமேயெ ன்றதனால், ஆலிங்கனகாலத்திருவருமனமொத்துப் புணருங்கா விருவர்மன தையுமடக்கி மேலெழுஞ்சுக மெங்ஙனமோவதுபோல, அறிவு மானந்தமுந் த மக்குள் பேதமின்றி விசாரித்துத் தெளியுங்காலத் தறிவேயானந்தமாகவும், ஆனந்தமே யறிவாகவுமாகும். ஆகுங்கால் மனமென்பதிறந்து சின்மாத்திரமாக விளங்கும். விளங்கவே, சங்கற்பமிறக்கும். இறக்கவே, துக்கநிவர்த்தியாம். ஆகவே, தடையற்றவானந்தமாத்திரமேலிட்டுநிற்கும். நிற்கவே, சமஸ்தமுமா னந்தமயமாகவே நிகழுமெனவுமருத்தந்தரக்கண்டாம்.

(க-து.) இங்ஙனமாயநிலையேசச்சிதானந்த விலக்கணமென்பது. இந்நிலை வழுவுவார்க்குப்பயனென். (ககக)

ககஉ - கவி அ - னை.

[ஆன்மா தான்சச்சிதானந்தமேயென விசாரித்துத்தெளிந்த
விடத்து நிகழுமனுபவம்யாதெனவிளுவலி
யிக்கவியிற்கூறுகின்றார்.]

ஈசச் சரீரத் திருக்குஞ் சரீரிதனைநால்வேத மாவாக்கி ய
நீசச்சி தானந்த மென்றிடினு மாசிரியர் நீபிரம மாகுமெனி னு
மாசற்ற சச்சிதா னந்தமா னென்னைவிவன் மன்னுமனு பவமெங்ஙனே
கோசப் புரங்களை யிடித்தத் தகர்த்தமத குஞ்சரக் குருநாத னே.

(இ-ள்.) ஈசச்சரீரத்திருக்குஞ்சரீரிதனை நால்வேதமாவாக்கியம், எ-து. ஈசருறுதலையேயிடமுள்ளாகவுடைய சரீரத்திலிருக்குஞ்சரீரியாகியுவான்மாவை நோக்கி நான்குவேதங்கட்கும் முடிவாயுள்ளமகாவாக்கியங்கள்:—நீசச்சிதானந்தமென்றிடினு மாசிரியர்நீபிரமமாகுமெனினும், எ-து. நீசச்சிதானந்தமொரு

பமே லிவறன்றெனச்சொல்லினும், அல்லதுசற்குருநாதனெழுந்தருளிவந்து நீபிரமசொரூபமேலிவறன்றென வுறுதியாகச்சொல்லினும்:— மாசற்றசச்சிதா னந்தநாவென்னைவிவன்மண்ணுமனுபவமெங்ஙனே, எ-து. இயல்பாகவேமலர தமாயுள்ள சச்சிதானந்தசொரூபமேதனதுசுயவடிவமெனவொருவன் விசாரி த்துத்தெளிந்துழியதனுலிவனடைந்த சுவானுபவமெங்ஙனமாயதோ:—கோ சப்புரங்களையிடித்துத்தகர்த்தமத குஞ்சரக்குருநாதனே, எ-து. தடையாயுள் ளவன்னமயமுதலியபஞ்சகோசமென்னும்பட்டணங்களையிடித்துத்தூளாக்கிய மதயானைபோன்ற குருசாமியே, எ-று.

நீசச்சிதானந்தமென்றதும், நீபிரமமென்றதுமுபதேசமொழி. அங்ஙனமனுஷ்டித்துத்தெளிந்தவனெய்தியபலனை விசாரித்தது, தாளுதற்கென்க. அவனனுபவமெங்ஙனமாயதோ வதனையானறிய வுணர்த்தியருளுமெனப் பொருடருதலால், ஓகாரமொழியிசை. நானேசச்சிதானந்தசொரூபமென வொருவன் விசாரித்துத்தெளிந்து சொல்லாநிற்கவெனப் பொருள்கொண்டு சச்சிதானந்த நானென்னவென்பதைச் செயவென்னும்வாய்பாட்டு வினையெச்சமாக்குக.எங் ஙனேயெனப்பாடமுமுண்டு. கோசப்புரங்கள், உருவகம். புரங்களையிடித்தலுந் தகர்த்தலும் மதங்கொண்டபோது யானைக்கியல்பாமாறுபோன்று, கோசங்க ளையுருவழித்தலும், அவையிருந்தவிடமுந்தெரியாதழித்தலும் ஞானச்செருக்குமேலிட்டபோது ஞானவானுக்கியல்பாதல்பற்றி யிங்ஙனங் கூறியதென்க. சச்சிதானந்தமாயவிடத் தெய்துமனுபூதியாதென வினவினனென்பது. ஆன்மாவேசச்சிதானந்தமாயவிடத்துப் பிரமமாதற்கையமென்னை ? இவவிர ண்டுமேபதேசமுமொன்றே. (ககஉ)

ககங - கவி. அ - கை-

[ஆன்மாசத்தெனவிக்கவியிற்கூறுகின்றுர்.]

சென்மாந் தரஞ்செய்த வினைகளுட றருமெனிற் செல்கால மிவ ணுண்ட லோ, கன்மானு பவரக சொர்க்கமெனில் வருகின்ற காலத் து மிவணுண்டலோ, வுன்மாத யாதனை வுடல்கடவு ளுடன்மணுட வு டன்மாறி மாறியழி யுந், தன்மாயவுடல்கெடினு மிவனிருப் பதுதெ ண்டு சத்தென்ப தொக்குமக னே.

(இ-ள்.) சென்மாந்தரஞ்செய்தவினைகளுடறருமெனிற் செல்காலமிவணு ண்டலோ, எ-து. ஆன்மாத்தான்பூர்வசென்மங்களிற்செய்துவந்த கல்வினைதீவி னைகள்தேகத்தைத்தருமெனச் சாத்திரப்பிரமாணமிருக்குமெனில், ஆன்மாவாகி யவிவன் முன்சென்றகாலங்களிலெல்லா மிருந்திருப்பானல்லவா:—கன்மானு பவரகசொர்க்கமெனில்வருகின்றகாலத்து மிவணுண்டலோ, எ-து. இப்போ தேசெய்துவருநற்கன்மந் துர்க்கன்மத்துக்கீடாக வினிவருமனுபவமாயது; நரக

மாவதுசொர்க்கமாவதெனக்கூறின், இனிவருங்காலத்துயான்மாவிருக்கவேண் டுமெல்லவா:—உன்மாதயாதனுவுடல்கடன்ருடன் மனுடவுடன்மாறிமாறியழி யும், ச-து. உன்மத்தமாகியயாதனுசரீரமும், தேவசரீரமும், மனிததேகமும் நிலையாதுமாறிமாறியழிந்துபோகும்:—தன்மாயவுடல்கெடினு மிவனிருப்பது கொண்டு சத்தென்பதொக்குமகனே, எ-து. தன்னதுபிராக்திகாரணமாகவந்த தேகமழியினும் தானல்லாததா லான்மாவிருக்கின்றனன்றே, இவனிருப்பது பற்றிச் சத்தென்பதிவனுக்குப்பொருந்தும்சம்புத்திரா, எ-று,

சென்மங்காரணமாகவான்மாவுண்டென லெவர்க்குமரபாதலினாலும், அந் தெறியேயேனு மான்மாமுக்காலத்துமுண்டெனலை நிலையுறுத்தப்புகுந்தாரிக் நூலாசிரியராதலினாலும், இதனைமறுக்கற்பாற்றன்று. மறுப்பாரான் மாகார ணமாகப்புகவேண்டும், புகினும், ஆன்மாதிரிகரணங்கட்குமெட்டுவதன்று, ஆத வினாலுமானத்தாலுண்டெனலேபொருந்துமென்க. அனுமானம், புகைகாரண மா நெருப்புண்டெனல். இங்ஙனமாகவேனு மான்மாசத்தெனற்குத்தடையெ ன்னையுள. கன்மத்துக்கீடாகத்தேகங்கள்வந்தகல்வனவெனவே, ஆன்மாவிருந் தன்றே கன்மம்புரியவேண்டுமென்பதனைநித்தியமாயிற்று. தேகங்க ளான் மாவாயினவைபோலவான்மாவும் வந்துவந்தகலலாம். போகமான்மாவுக்கோ, தேகத்துக்கோ? தேகஞ் சடம், அகர்த்தா, விகாரவடிவம், துணைக்கருவியா தலின் தேகத்துக்கன்று, ஆன்மாவுக்கெனப்படும். ஆன்மாவிருந்துதானேதே கபோகங்களையனுபவிக்கவேண்டும், இன்றேல்யாதுக்கனுபவம், ஆதலிறுன் மாவே சத்தெனப்படும். ஆதியந்தமேற்றவின் தேகந்தேகியன்று. ஆராவியற் கையவாக்கோட்டும், அகற்றலும், பத்தமுத்தியாதலினிதனையுடையதுதே கமன்று தேகியெனற்கையமென்னை? இதனாலுமான்மாசத்தெனப்படும். ஆன் மா தானெத்தேகமுமன்று, தன்னைத்தவிரவுமில்லை.எனவே, யெல்லாமாயு மல்லவுமாயுமிருப்ப தான்மாவெனப்பெற்றும். பெறவே,பிராதிபாலிகசத்து, விவகாரிகசத்து, பாரமார்த்திகசத்தென்னும்போவிசத்தன்று, எதார்த்தசத் தான்மாவென்றுரையிற்று. ஆகவே, யிதனையகற்றற்கிடமின்றெனக்கண்டாம். இஃதெமதுதுணிபு.

(க-து.) ஆன்மாவே சத்தெனப்படுவதன்றி வேறின்றெனவுணர்கவென் பது. தெளிந்தார்க்கிஃதுடன்பாடு, ஏனையோர்க்கன்று வேறென்பர். வேறென் னல் சொல்வாதம், அர்த்தவாதமன்று. அல்லவோவெனற்பாலது, அலோ வென்றுயதிலடக்குறை. (கசை)

கசை - கலி. அ - ஸை.

[ஆன்மாவேசத்தென்றுற்போலச்சித்தெனலில்லையானந்தமெனலிலையு மேற்குமென்றிக்கவிபிற்கூறினார்.]

இருளாகமூடுஞ் சடமுக்கியி ராக்கிரியி ரவிகூட நற்ற பொழு தும், மருளாமை யின்றியையும் பொருளினையுங் தெரிகின்ற ஸ

கைகொண்டு சித்தாகு மே, பெருவாழ்வு மிக்கதா னேதன் னிடத்தி னிற் போராத பிரியமத னு, லருகாத பிரியஞ் சுகத்தில்வருமாதலா லானந்த மாமைமந்த னே.

(இ-ள்.) இருளாகமூடுஞ்சுழத்தியிலீராத்திரியி லிரவிசுடரற்றபொழு தும், எ - து. இருள்மயமாக வெங்கணு மூடிக்கொள்ளத்தக்கசுழுத்தியவத் தையிலும், கருக்கலிரவிலும், சூரியனும்விளக்குமில்லாதபொழுதும்:—மரு ளாமலிருளையும்பொருளையுந்தெரிகின்ற வகைகொண்டுசித்தாகுமே, எ - து. ஐயத்தால்மயங்காம லங்ஙனமூடியவிருளையும் வைத்தபொருள்களையுந் தெரி ந்துகொள்ளும்விதத்தினு லான்மாசித்தெனப்படுவதாம்:— பெருவாழ்வுமிக் கதானேதன்னிடத்தினிற் போராத பிரியமதனுல், எ - து. தடையற்றவானந் தந்தானுதலால் பெரிதானவாழ்வில்மிகுந்ததுதானே; யிங்ஙனமாய தானே தன்னிடத்தினீக்கமற்ற பிரியவடிவாயிருப்பதினுல்:—அருகாதபிரியஞ்சுகத் தில்வருமாதலா லானந்தமாமைமந்தனே, எ-து. என்றுஞ்சுருங்காததற்பிரிய மானது தானுனந்தவடிவமாதலால் தனதானந்தத்திலெழுகின்றது. இதுபற் றி யான்மாவானந்தசொரூபியெனப்படுவதாம். ஞானபுத்திரா, எ-று.

இரவிசுடரென்றதனுல், இரவிமுதல்சுடரிறுவாயுள்ள வொளிபேதமேற் கினுமனமையும். எனையபொருளுணர்தற்பாலதன்முமையாலும், மருளாமலென் றமையாலும் வைத்தபொருளென்றும். எங்ஙனமாயவாழ்வு மான்மாவுக்க யலாதல்பற்றிப் பெருவாழ்வுமிக்கதானேயெனவும், தன்னிடத்தில்தானே பேராதபிரியவடிவாயிருப்ப தான்மாயையன்றி யின்முதலின், தானேதன்னி டத்தினிற்பேராதபிரியமெனவும், அருகாதபிரியம், நித்தியதிருத்தி. இதுதன் னிடத்தன்றிப் பிறிதிடத்தெங்கணுமின்மையின், அருகாதபிரியஞ்சுகத்தில்வ ருமெனவும், தானின்பவடிவமாதலா லான்மாவானந்தமாமெனவுங்கூறினர். இங்ஙனமாஞர்க்கிதுதெரியுமன்றி யயலாரைவெறுப்பதென்னை? யாவரும்நன் குறங்குந்தினசுழுத்தியி லானந்தம் வருவானேன், சாக்கிரசொப்பனவல்ல லைச் சாந்தப்படுத்துவ தியாது, தானின்றுதா னன்கயர்ந்துறங்கினேனென்ன றெவருஞ்சொல்வதற்குநயமென்னை, சுகவடிவமான்மாவன்றேல், அங்கேயா தோர்விகற்பமுமின்றித் தனித்துநின்றதுயாமன்றே, அங்கேதன்தேகமுதலி யசகமனைத்துங் கண்டிலமென்றுணர்ந்து விழித்துக்கூறவந்ததும்யாமன்றே, யாமெனற்கான்மாவையன்றிப்பொருளுண்டோ? இன்றே, இங்ஙனமிருக்க, ஆன்மாவை யானந்தவடிவமெனற் கையுறுவதென்னை. சகலத்திலான்மாவி ருந்து மங்ஙனங்காணப்படாதது நமதுகுற்றம், அதன்குற்றமன்று. எங்ஙன மெனில், தேகமாதிநாதமிறுவாக்கிடந்த, தத்துவக்குழாமயமாகக்காண்கின்ற து, அங்ஙனமாகக்காண்கின்றேம். விசாரணையி லல்லவல்லவெனப்போவா னேன், போவதா லான்மா தத்துவக்குழாத்துளொன்றுமன்றே, அப்போ தான்மாமாத்திரந் தனித்துவிளங்குவதென்னை, விளங்குவதாலுலகமெங்கே, யுலகெங்கேகாணுதிருப்பதென்னை, காணுததாற்றுக்கநிவிர்த்தியுந் தடையற்

றவானந்தமுமெய்துவதென்னை, எய்துவதாலதன்குற்றமன்று, விசாரித்துத் தெளியாதநமதுகுற்றமே. நமதுகுற்றத்தால்நில்லாது, கேவலத்திலானந்தவடிவாகக்காண்கின்ற ததன்சுயவடிவாதல்பற்றியென்க. ஆன்மாவின்சுயவடிவமானந்தமெனற்கிழுக்கென்னை? தினசுழுத்தியிலியல்பாகவே யான்மா தனிக்குமாறுபோன்று சகலத்திலுமியல்பாகவே தனித்திருத்தலே யாங்கண்டிலம், இதுதத்துவக்குழாத்தைதவிசாரத்தா லகத்திற்காணும். உதாரணம். "என்று மிருந்தபடியிருப்பதியல்பேயென்னுமொருவேத"மென்பதனுற்காண்க. என்றுந்தனித்திருத்தலான்மாவாதலா லானந்தமென்றூர். தடுப்பா ரயலேச்சுகிப்போர்.

(க-து.) ஆன்மாதன்னைத்தானுணரற்பாலதாதலின் தாம்னையானதவடிவாமெனற் கையமின்றென்பது. (ககச)

ககரு - கவி. அ - கை.

[ஆன்மாசுகசாதனம்போல்வதன்றென விக்கவியிற் கூறுகின்றூர்.]

அன்னபா ணுதிசுக சாதனம தாகையா லார்க்கும்வெகு பிரியமாகு, மின்னவா ருன்மாவு மானந்த சாதன மெனக்கருதல் பொருளல்லவே, சொன்னவான் மாவையொரு சுகசா தனங்களொடு சொல்லுவா யாகின்மக னே, யுன்னதா னந்தம்வே றேவனுப விப்பதா முபயவான் மாவுமுள தோ.

(இ-ள்.) அன்னபாணுதிசுகசாதனமதாகையா லார்க்கும்வெகுபிரியமாகும், எ - து. அன்னமாகியவுணவும், பானமாகியநீரு மிவைபோல்வனபிறவும், சுகத்துக்குச்சாதனக்கருவியாயிருப்பதா லெவர்க்கும் வெகுபிரியவடிவாயிருக்கும்:— இன்னவாருன்மாவுமானந்தசாதன மெனக்கருதல்பொருளல்லவே, எ - து. இதேபிரகாரமாக வான்மசொரூபமுஞ் சுகத்துக்குச்சாதனக்கருவியென நினைத்தல்பொருளாகுமா? ஆகாதே:—சொன்னவான்மாவையொரு சுகசாதனத்தினெடு சொல்லுவாயாகின்மகனே, எ - து. ஞானபுத்திரா! மேற்கூறிய வாத்மசொரூபத்தைச் சுகசாதனங்களி லொன்றே டுவமையாகக்கூறுவையாயின்:—உன்னதானந்தம்வேறேவனுபவிப்பதா முபயவான்மாவுமுளதோ, எ - து. உன்னைவிடவுனதானந்தமென்பதுவேறுதானே, வேறுயினதனையனுபவிப்பதற் கிரண்டாவதாகநின்றுள்ள வான்மாவென்பதுமுண்டோ, எ-று.

பசிதணித்தற்குரியவைகளையன்னமெனவும், தாகந்தணித்தற்குரியவைகளைப்பானமெனவுங் கூறுவதுபொது. ஆதியென்றமையாற் சத்தபரிசாதிவிடயமெனப்பெற்றும். அன்னபாணுதிகளைச் சுகமென்றது சுகசாதனமென்றது; பசியுந்தாகமுந்தணிந்தவுடன், எதிரிவிவையிருந்தும் வெறுப்பாகக்காண்டலினென்க. ஒப்பின்மையின் வெகுபிரியமாகுமெனவும், பொருளல்ல

வற்றைப்பொருளெனக்கோடலால் சுகமில்லவற்றைச் சுகமெனக்கோடல்வ
ரும், இங்ஙனமாகாரரியர். ஆவாரெவரும். இதுபற்றியார்க்குமெனவும், நிர
திசயானந்தமொன்று, அதையனுபவிக்குமான்மாவொன்று, ஆகவிரண்டா
கவேண்டும். இரண்டாயின், விடையானந்தம்போல்வதாகும். அன்றேல்,
ஆன்மானந்தமெனச்சிறப்பெய்தற்கடையாளமென்னை? விடயானந்தம்போ
லான்மானந்தமுஞ் சுகசாதனமெனின், விடயானந்தத்தைவேறுநின்றனுப
விப்ப தான்மாவைப்போ லாத்மானந்தத்தை வேறுநின்றனுபவிப்பதாத்மா
வாகவேண்டும். அங்ஙனங் கொள்ளில், இரண்டான்மா விருக்கவேண்டும்.
ஜீதலினுபயவான்மாவு முளதோ வெனவுங்கூறினர். உபயவான்மாவு மெ
ன்பதிலும்மை, எதிர்மறை. உளதோவென்பதி லோகாரம், விஞ. விடயா
னந்தத்தையனுபவிப்பதாத்மா, ஆத்மாநந்தத்தையனுபவிப்ப தாத்மாவென்
புழி, அஃதயலை, இஃதுதன்னைத்தானேயெனத்துணிபுதரலால், இன்னவா
றன்மாவுமானந்தசாதன மெனக்கருதல்பொருளல்லவே யெனத்துணிந்து
கூறினரொன்க. இத்துணிபறியா ரான்மாவை யான்மாவனுபவிக்குமாவென்
றிகழ்ந்துகூறுவ தென்னவிவேகமோ யாமறிகிலம்.

(க-து.) விடயத்தைப்போலவான்மாவையுஞ் சுகசாதனமெனல்கூடா
தென்பது. ஆக்கும், முற்றும்மை. ஆன்மாவுமென்பதி லும்மை, உயர்வு
சிறப்பு. நீயாகிறசுகத்தையனுபவிப்பதற்குநீயெனல்வேறுளதோவென்பார்,
உன்னதானந்தமெனத்தற்கிழமையாக்கினர். (ககஞ)

ககசு - கவி. அ - கை.

[ஆன்மானந்தத்தையான்மாவே யனுபவிக்குமென்ற துறுதிபெறு
மாறு நால்வகையேதுக்களை யிக்கவியிற்கூறுகின்றார்.]

விடயசுக மதில்வருதல் பிரியமாத் திரமாகும் வெகுபிரியமான்
மாவி லாம், விடயசுகம் வருபிரிய மாறிவரு மான்மாவில் வெகு பிரி
ய மாறுது காண், விடயசுகம் விடலுமாங் கொளலுமா மான்மாவை
விடுவதெவர் கொள்வதெவர் பார், விடயசுக போகங்கள் விடுமவனை
யவனுல் விடப்படா தொருநாளு மே.

(இ-ள்.) விடயசுகமதில்வருதல் பிரியமாத்திரமாகும் வெகுபிரியமான்
மாவிலாம், எ - து. விடயத்தைச்சுகமெனக்கருதி யனுபவிக்குங்காலச்சுகத்
தில்வரும்பயனுகியபிரியம், அப்போதுபிரியம்போற்காணுமளவினதாம், ஆ
ன்மாவைச்சுகமெனக்கருதிச் சுருதியுத்தியனுபவங்காரணமாக வனுபவிக்
குங்கால், அவ்வான்மாவிலப்போதெழும்பிரியங் கணப்போதளவினதன்று,
என்றும்விடாதிருத்தலின் வெகுபிரியமாயிருக்கும்:— விடயசுகம்வருபிரிய
மாறிவருமான்மாவில் வெகுபிரியமாறுதுகாண், எ - து. விடயசுகங்காரண
மாக மேலிட்டுவரும் பிரியமானது நிலையாது மாறிமாறி வரும், ஆன்மசு
ட்டத்தைவிடாதிருக்குங்கா லப்போதவ்வான்மாவில் மேலிட்டெழும்பிரிய

மான தின்னவளவினதென வுவமைகொண்டு கணித்தற்கரியதாகும். அன்றியு மென்று மாறுதொருதகையதாகவுநிற்கு நிலையினதாம்:—விடயசுகம்வி டலுமாங் கொளலுமாமான்மாவை விடுவதெவர்கொள்வதெவர்பார், எ - து. விடயசுகமானது வெறுத்துவிடுதற்கும் விரும்பியேற்றுக்கொள்ளுதற்குந் தகு தியதாம். இதுபோல, வான்மாவைவெறுத்து விடுவோர்யாவர், வெறுத்துவிடா துவிரும்பியேற்பவர்யாவ ரிதனைநீயேயாராய்ந்துகாணுதி:—விடயசுகபோகங் கள்விடுமவனை யவனுல்விடப்படாதொருகாலுமே, எ-து. இஃதன்றியும், விட யசுகமயமாயுள்ளபோகங்களையொருவன்வெறுத்துவிடக் கூடும், அங்ஙனம தைவெறுத்துவிட்டவன் தன்னுல்தன்னைவெறுத்துத் தன்னைத்தான் புறம் பிலகற்றக்கூடுமோ? ஒருநாளுங்கூடாதே, எ-று.

விடயசுகமென்னுதுபிரியமென மிகைபடக்கூறியது, விடயஞ்சுகமாயி ருப்பதியல்பேனும் பிரியமியல்பாயிருப்பதுமுறையோ? நம்மிடத்தினின்று ம் பிரியத்தைவிடவுங் கொளவுங்கூடும், சுகத்தைவிடயத்தினின்றும் பிரிக் கவுங் கூட்டவுங்கூடுமோ? சுகம், விடயத்துக்கியற்கைபோல்வது. பிரியம், நமக்குச் செயற்கைபோல்வதுபற்றியென்க. விடயசுகமென்றுற்போ லான் மசுகமென்ன வேண்டும். ஆதலினிங்கே சுகமெஞ்சினின்றது. விடயசுகப்பிரி யமென்னுது விடயசுகமதில்வருதல்பிரியமென்றமையின், சுகம்வேறு பிரி யம்வேறெனப்பெற்றும். ஆன்மாவில்வெகுபிரியமென்றதனுல், விடயப்பிரி யமற்படமெனத் தோன்ற, விடயசுகமதில்வருதல் பிரியமாத்திர மாகுமென வும், மாத்திரம், அளவு. இங்கேயற்பத்தைக்குறிக்கின்றது. விடயமான் மாவுக்கன்னியமாகும்போது, அதன்சுகமும், அதுபற்றிவரும்பிரியமும், அ ன்னியமாகவேண்டுமென்றே? அப்போது பிரியமற்பத்தன்மையையும், மாறு ம்புடைபெயர்ச்சியையு மேற்பதற் கிடையூறென்னையுள. அதுபோல, ஆன் மாவுக்கான்மாவன்னியமாகும்போது, அதன்சுகமும், அதுபற்றிவரும்பிரிய மு மன்னியமன்றுகவேண்டும். அப்போது பிரியம் அதிகத்தன்மையையும், மாறுப்புடைபெயர்ச்சியையுமேற்பதற் கிடையூறென்னையுளவென்பார், இங் ஙணங்கூறினரென்க. "இஃதெஞ்சியசொல்லினெய்தக்கூறலென்னுமுத்தி".

(க-து.) விடயப்பிரியஞ்சிறுபான்மை, ஆத்மப்பிரியம்பெரும்பான்மை. விடயப்பிரியம் மாறிவரும், ஆத்மப்பிரியம்மாறுதுநிற்கும். விடயப்பிரியம் விடவுங்கொளவுமியையும், ஆத்மப்பிரியம்விடவுங்கொளவுமியையாது. விட யப்பிரியத்தைநீக்கினவன் தன்னைத்தானீக்கிவிடக்கூடுமோ கூடாது. இங்ஙன மாயவேதுக்களா லான்மாவுஞ்சுகசாதனமெனலை மறுத்தாரென்பது. எப் போதுமென்றுணர்த்த, ஒருநாளென்னுதொருகாலு மெனப்பட்டதென்க, இஃதாத்மாநுபவிக்குடன்பாடன்றி விடயாநுபவிக்கெங்ஙனமுடன்பாடா ம். உடன்படாமை விசாரியாக்குற்றமன்றி யான்மருற்றமன்று. தன்னைத் தான்விசாரித்துத் தெளியாதார், ஆன்மா சச்சிதானந்தமெனலெலாது வே றென்பார். இதனிற்க. இதுகண்மம்பத்திபோன்மிக்கையன்று, பிரத்திய

ட்சமாதலின்பாலொன்றூர். நிரதிசயானந்த மான்மப்பிரியம், ஏனையவிடயானந்தம் பிரமானந்த மன்னியோன்னியபாவமெய்தலால், அதிசயானந்தமெனப்பெற் றயல்பிரியமென்றுரையிற்று. (ககசு)

ககள - கவி. அ - கை.

[ஆன்மாவிடயம்போல விருப்புவெறுப்புருவன்றெனின் சிலர் தன்னைத்தான்வெறுத்துக் கொலைசெய்துகொள் வானேனென்றவிஞவிற்கு விடையிக்கவி யிற் கூறுகின்றூர்.]

வேகின்ற கோபங்க ளாலென்னை நான்கொன்று விடுகிறே னென் றுசில பேர், சாகின்ற படியினுற் றன்னையே தான்கொன்று சாவனெ னல் சங்கை யலவே, தேகந் தனைக்கொல்லு மவனுல் விடப்பட்டதே கமவ னல்லன்மக னே, யாகந் தனிற்கோப மலதுதனை யொருநாளு மான்மா வெறுப்பதிலை யே.

(இ-ள்.) வேகின்றகோபங்களாலென்னை நான்கொன்றுவிடுகிறேனென் றுசிலபேர், எ - து. சிலபேர்யாதேனுமோர்காரணம்பற்றி மிக்கோபங்கொ ண்டென்னைநான் கொலைசெய்துகொள்ளுகிறேனென்று:—சாகின்றபடியினுற் றன்னையேதான்கொன்று சாவனெனல்சங்கையலவே, எ-து. அதற்கியைந்த முயற்சிசெய்து சாகின்றபடியினு லிதற்கென்செய்துமெனக்கேட்பையாயின், மெய்யே, இங்ஙனந்தன்னையேதான்கொலைபுரிந்துகொண்டொருவன்சாகின்ற னனே யிஃதென்னைகொலோவெனச்சங்கித்தல் சரியானசங்கையல்லவே:— (எங்ஙனமெனின்.) தேகந்தனைக்கொல்லுமவனுல்விடப்பட்ட தேகமவனல்ல ன்மகனே, எ-து. ஞானபுத்திரா! தன்தேகத்தைத்தானேகொலைசெய்துகொ ள்பவனெவனே வவனுல்விடப்பட்ட அவன்தேகமவனுகுமா, அவன்தேகமல் லனே ஆயின்சம்மதிவசனம்யாதெனின்:—ஆகந்தனிற்கோபமலதுதனையொ ருநாளு மான்மாவெறுப்பதிலையே, எ-து. அவனுக்கெழுந்தகோப மவன்தேக த்தின்மேலன்றி யவனுகியவான்மாவின்மேலன்றே, ஆன்மாதன்னைத்தான் வெறுத்துக்கொள்வதுமுண்டோ, ஒருநாளுமில்லையே,இதனையோசியாதுகூறு வதென்னைகொலோ்யாமறிகிலம், எ-று.

வேகின்றகோபமென்றமையின் மிக்கோபமென்றும். பலருக்குமுண்டா ங்கோபமனைத்து மொருங்குதிரண்டுருக்கொண்டாற்போல்வதின், கோபங்க ளெனப்பன்மையிற் கூறியதென்க. அவன்சங்கித்ததாக விவராசிங்கித்துக் கொண்டது, விடயம்போலான்மாவும் விருப்புவெறுப்புருவாமெனலைக் குறிப் பித்தற்கு. தேகஞ் சடமகர்த்தாவாதலின் தன்னைத்தான்கொலைசெய்து கொள்ளுமோ கொள்ளாதே, ஆதலின், தேகியாகியவான்மா தன்னைத் தான் காணவகையறியர்தே தன்னைத்தானெங்ஙனங் கொலைசெய்துகொள் ளும், அங்ஙனமன்று. ஆன்மாதன்னைத்தேகமெனக்கருதிய பாவத்தினீட்டா

லதனைத்தானெனைத் தொன்றுதொடீடு வழங்காநிற்றலின், அதுபற்றிமீக்கொ ண்டகோபத்தா லென்னைநான்கொலைசெய்து கொள்ளுகிறேனென்றுசொல் லித் தன்னைத்தான்கொன்று செத்தானென லுலகவழக்க மதனைச்சங்கையெ னக்கொள்வதுதவிர்கவென்பார், தன்னையேதான்கொன்றுசாவனெனல் சங் கையலவேயெனவும், ஆன்மா தேகமாறல் தேகநீதைமாய்த்துக் கொள்வது கூடும், அங்ஙனமன்றே. இதுபற்றித் தேகமவனல்லனெனவும், மூடத்தனத் தாற் றன்கோபத்தைதத் தன்தேகத்தின்மேற் காட்டினதன்றித் தன்மே லன்றென்பார், ஆகந்தனிற்கோப மலதுதனையொருநாளுமான்மாவெறுப்பதி லையேயெனவுங்கூறினர். விடயமல்லாதது பிரமம், அதற்குரியவானந்தவிலக் கணத்தை யான்மாவுக்குமுரியதெனமாட்டிநடத்தலின், இதுமாட்டெறிந்தொ ழுகலென்னுமுத்தி.

(க-து,) ஒன்றையொன்றுகக்கொண்டு சங்கிப்பதுதவிர்கவென்பது. சங் கையென்றுலென்றேர்ப்பிறிதியிருக்கின்றது. தன்னையே தான்கொன்று சாவ னெனல் மயக்கவணி. (ககன)

ககஅ - கவி. அ - கை.

[ஆன்மாவேபிரியவடிவமெனக்காட்டப் பிரியமேதங்களை
யிக்கவியிற்கூறுகின்றுர்.]

காகப் படும்பொருளி லும்மகன் பிரியமாந் தனயனிலு முடல்பி ரிய மா, மாகத்தி லும்பிரிய மிந்திரிய மாங்கரண மதனிலும் பிரிய முயி ரா, மேகப் பிராணனிலும் வெகுபிரிய மான்மாவி லிந்தவான் மா முக்கி ய, மூகத்தி னற்கௌண மித்தைகர்த்தாமூன்று மொன்றினென் றதிகமக னே.

(இ-ள்.) காகப்படும்பொருளிலும்மகன்பிரியமாந் தனயனிலுமுடல்பிரிய மாம், எ-து. எவரும்பிரியப்படற்கியைந்தது தனம், அந்தத்தனத்திலுமிக்கது சுயபுத்திரப்பிரியம், அந்தச்சுயபுத்திரப்பிரியத்திலுமிக்கது தன்தேகப்பிரியம்:- ஆகத்திலும் பிரிய மிந்திரியமாங்கரண மதனிலும் பிரியமுயிராம், எ-து. அந்த த்தேகப்பிரியத்திலுமிக்கது பஞ்சேந்திரியப்பிரியம் அந்தப்பஞ்சேந்திரியப் பிரி யத்திலும் கரணமாகியமனம்பிரியமாகக்காண்கை, அந்தமனம்பிரியமாகக் கா ண்பதிலுமிக்கது, உயிர்பிரியமாகக்காண்கை:—ஏகப்பிராணனிலும் வெகுபிரிய மான்மாவி லிந்த வான்மாமுக்கியம், எ-து. அந்தத் தனதொன்றுனவுயிர்பிரிய மாகக் காண்கையிலுந் தனதான்மப்பிரியம் மிகப்பெருக்காக்காண்கை, ஆதலி னிந்தவான்மாவேயெவற்றிலுமுக்கியமாகும் :—ஆகத்தினுற்கௌணமித்தை கர்த்தாமூன்று மொன்றினென்றதிகமகனே, எ-து. ஞானபுத்திரா! இவற்றை யெல்லாமனத்தினுலுணர்க்குங்கால், கௌணம், மித்தை, கர்த்தா, எனவாத்மா

மூன்றுவகையினதாகப்பெயர்பெறக்காணும், இம்மூன்றுவகையு மொன்றுக் கொன் றதிகமாகக்காணும், எ-று.

தனம், மகன், உடல், புறக்கரணம், அகக்கரணம், உயிர், ஆன்மா, எனப் படுவனவாகியவிவ்வேழும், பிரியத்திலொன்றுக்கொன்றதிகமேனும், ஆன்மா மகாமுக்கியமென்றதனை லேனையவாறும், அமுக்கியமெனப்பெற்றும். இனிஇவ ற்றையெல்லாஞ்சுருக்கி நான்காத்மாவாக்கப்புகுந்தா ரிக்கவியில் தொகையாக மூன்றைக்கூறி யொன்றுக்கொன்றதிகமென்றுரைத்தன்க. ஒருவன் தன்வீடுபெற்றி வேவதையசதியிற்காணமுன்னர் தன்பணப்பெட்டியை யெடுக்கத்துணிவன். கூடாவிடத்தில், தொட்டிலிலுறங்குந்தன்மகனையெடுக்கத்துணிவன். கூடா விடத்தில், தன்னுடலைப்பாதுகாக்கத்துணிவன். கூடாவிடத்தில், கண்முதலிய தன்பொறிகட்கிடையூறுவராதுகாக்கத்துணிவன். கூடாவிடத்தில், மனமுதலி யவகக்கரணங்கட் கிடையூறுவராதுகாக்கத்துணிவன். கூடாவிடத்தில், தன்னு யிரையேனுங்காக்கத்துணிவன். கூடாவிடத்தில், முடிவில்தாஞ்சியவான்மா வி டையூறெய்தாதுகாக்கத்துணியாநிற்பன். ஆதலி னிம்முறைவந்தவாறிவ்வே தப் பற்றியென்க.

(க-து.) உயிர்க்கியற்கையெனப் பிரியபேதங்களை நினையெடுத்துக்கா ட்டினனொன்பது, இங்ஙனங்காட்டியது; தனமாதிபிரியங்களி லொவ்வொன்றிற் குறட்டமெய்தத் தனக்குவந்ததாக மரணமெய்தலுளவென்றுணர்த்தற்கெ ன்க. இங்ஙனமாயபிரியபேதமனைத்து மாத்மப்பிரியலேசமாதலின், தற்பிரிய த்துக்கிடையூறின்றென்க. தனமாதிகளி லுள்ளவும்மைகளிழிவுசிறப்பு. கரணத்தி லுமென்பதும், இவற்றிலென்பதிற்பெயருஞ்சாரியையுந்தொக்கின. ஆக்கவினை க்குறிப்புமுற்று மூன்றுவினியும்மூன்று தொகையுமாயிருத்தலினனைத்தையுந் தொகையாக்கி முடிவில்முற்றுருக்கியுரையிட்டாம். இதுசிறப்புப்பற்றியென்க.

ககசூ - கவி. அ - கை.

[நான்காத்மாவெனற்கும், ஒன்றுக்கொன்றுமுக்கியமெனற் கும், அவசரமிக்கவியிற்கூறுகின்றுர்.]

. கெடலான பொழுதிவன் காணிக்கு மகனை கௌணவான்மா முக்கி யம், விடலாத வுடலம் பரிக்குநா ளுடலான மித்தையான் மா முக்கி யம், திடமான நன்மைகதி வேண்டினற் கர்த்தனுஞ் சீவவான் மாமுக்கி யஞ், சடமாயு முத்தியினில் ஞானவான் மாவான தானே மகாமுக்கி யம்.

(இ-ள்.) கெடலான்பொழுதிவன்காணிக்குமகனை கௌணவான்மாமு க்கியம், எ-து. தன்னுயிர்க்குக்கெடுதிவந்தபோது தனதாஸ்திக்குரியோன் மக னுதலா லவன்கௌணவான்மாவெனப்படுவன், அந்தவவசரத்திற்கௌணவா ன்மாவே முக்கியமாகும்:—விடலாதவுடலம்பரிக்குநாளுடலானமித்தையான்

மாமுக்கியம், எ-து. தன்னைவிட்டுநீங்காததனதுடலைத்தானெனச்சுமக்கும்போ
து தானெனற்குரியதிவனுக்குடலாதலா லவ்வுடல்மித்தையான்மாவெனப்ப
டும், அந்தவவசரத்தில் மித்தையான்மாவேமகாமுக்கியமாகும்:—நிடமானதன்
மைகதிவேண்டினுற் கர்த்தனுஞ்சீவவான்மாமுக்கியம், எ-து. இடையிலழி
யாதுறுதியாயுள்ள கற்கதியடையவிரும்பினுல், அீப்போதுதானெருமுதலாகி
ன்றதற்குரிய வரியமுயற்சிசெய் தப்பலனை யனுபவித்தற்குக் கர்த்தத்துவமா
யிருப்பவன்சீவனுதலால், அந்தவவசரத்திலச்சீவன் சீவவான்மாவெனப்படு
வன், அதனுலந்தசீவவான்மாவே மகாமுக்கியமாகும்:—சடமாயுமுத்தியினில்
ஞானவான்மாவானதானேமகாமுக்கியம், எ-து. சடத்துவமாயுள்ளவனைத்து
மொருங்கேநசித்தற்கிடமாயதுமுத்தியாதலா லந்தமுத்தியில்ஞானுகாரமாயிரு
ந்ததன்னை யதுவாயனுபவிப்பவன் ஞானத்மாவாதலால், அந்தவவசரத்தில்
ஞானன்மாவெனப்படுவன், அதனுலந்த ஞானன்மாவானதானே மகாமுக்கிய
மாகும், எ-று.

காணி, உரிமை. உரிமையாவது, ஆஸ்தி. இதுபற்றியாஸ்திபென்றும்.தன
துரிமைக்குமகன்பாத்தியனுதல், தனதந்தத்திலாதலால்,கெடலானபொழுதெ
ன்பதற்கு, தன்னுயிர்க்குக்கெடுதிவந்தபொழுதென்றுனைகொண்டாம். விடல
ல்லாதவென்றது, விடலாதவென்றுயதிடைக்குறை. மகன்முக்கியமாயவிடத்
துக் கௌணவான்மாவெனவும், உடலமுக்கியமாயவிடத்து மித்தையான்மா
வெனவும், சீவான்மாமுக்கியமாயவிடத்துக் கர்த்தான்மாவெனவும்,ஐக்கியமுத்
திக்கான்மா முக்கியமாயவிடத்து ஞானன்மாவெனவும்பெயர்வந்ததென்க. இந்
தவவசரமெல்லாமான்மாவாயிருத்தலி னிந்நான்கையுமான்மாவென்றதென்க.
சடமாயுமுத்தியினிலென்றதனுல் நிரிபுடியற்றதென்றுயிற்று, இங்ஙனமாயது
பற்றியயிக்கியமுத்தியென்றும். அம்மூன்றையுமான்மாவென்ற தவசரம்பற்றி
யும், தானுகியவான்மாவைஞானவான்மாவென்ற தெதார்த்தம்பற்றியுமென்க.
ஆதலினம்மூன்றும், பூர்வபட்சம். இது சித்தாந்தம்.

(க-து.) ஞானவான்மாவேமுக்கியமாமெனற் கிங்ஙனங்கூறினுரென்பது.
பிரியமேதங்காட்ட நின்கான்மாவென்றது; ஞானவான்மாவைக்காட்டிலும்
பிரியவடிவம்வேறின்றெனநாட்டியதை வைப்புறுத்தற்கென்க. ஐக்கியமுத்தி
யென்றது; நிரதிசயானந்தத்தை. வேறெனல் பிதற்றல்.இதில்முக்கியநான்கில்,
ஆக்கவினையெஞ்சிநின்றன. (ககக)

கஉ0 - கவி..அ - கை.

[விருப்புமுதலியமூன்றுமயமாகாதவானந்தமே ஆன்ம
சொரூபமென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

புனியுமனு ஆலமெனி லிட்டமாம் பகைசெயிற் புதல்வனெ
னி லும்வெறுப் பா, மூலகிலிரு வகையுமல் லாதபுல் லாதியி லு

தாசின மாமாத லான், மலினமறு சின்மயன் பல்வகையு மிடபடி மகிழ்ச்சியில் விருப்பமிக ழா, னலகிலா னந்தவடி வாகுமுன் சொரூபத்தை யாராய்ந்து பார்மைந்த னே.

(இ-ள்.) புலியுமனு கூலமெனி லிட்டமாம் பகைசெயிற் புதல்வனெனி னும்வெறுப்பாம், எ-து. புலியேனுமக்கு நயமுண்டாதற் கனுகூலமாயிருக் குமாயின் விருப்புருவாகும், தந்தைக்குவிரோதமாநடக்கில் புத்திரனேனும் வெறுப்புருவாகும்:—உலகிலிருவகையுமல்லாத புல்லாதியி னுதாசீனமாமா தலால், எ-து. உலகின்கண்ணிவவிரண்டு வகையுமல்லாத புல்முதலியவைகளி லிருப்பது தாசீனமாகும், ஆதலின்:—மலினமறுசின்மயன்பல்வகையுமிப்படி மகிழ்ச்சியில்விருப்பமிகழான், எ-து. களங்கரகிதமானஞானமே வடிவாவி ளங்குமான்மாவென்போன், இங்ஙனமவைபோலப் பலவிதத்தானு மானந்த மென்பது சற்றுமில்லாத விருப்பமுதலியமூன்றுனுமவமதிப்பெய்தான் :— அலகிலானந்தவடி வாகுமுன் சொரூபத்தை யாராய்ந்து பார்மைந்தனே, எ-து. அந்தவான்மா நீயாதலா னீயேதடையற்ற வானந்தவடிவமென்பதா கும், ஞானபுத்திரா ! இதிலேயமுளதே னுனதெதார்த்த வடிவத்தைச் சுருதி யுத்தி யனுபவங்காரணமாக நீயேயாராய்ந்துதெளிந்துகாணுதி, எ-று.

அனுகூலத்தாற்புலியும்விருப்புருவாகவும், பகைத்தலாற்புத்திரனும் வெறுப்புருவாகவும், புல்முதலியவை யிவ்விருவகையுமல்லாததா னுதாசீனவடி வாகவுங் காணும். உதாசீனம்; விருப்பு வெறுப்பாயிருக்கை. புலியுமென்பதி னும்மை, இழிவுசிறப்பு. புதல்வனெனினு மென்பதிலும்மை, உயர்வுசிறப்பு. ஆன்மா தன்னுணருந் திரிசியத்தில் விருப்பாதி மூன்றுமன்றித் தன்னிடத் தின்று. எனவே, தானிம்மூவருருவாகக்காணப்படாதென்பதாயிற்று. தற்றிரி சனத்திலிவைமூன்றுந் தன்பாலின்மையின் மலினமறு சின்மயன்பல்வகையு மிப்படி மகிழ்ச்சியில் விருப்பமிகழானெனவும், இம்மூன்றுருவுமாகத்தானி னையதற்பாலதன்முமையி னன்மாவலகிலானந்தவடிவாகுமெனவும், நீயுமா ன்மாவாதலா லலகிலா னந்தவடிவநீயே யிதனைக்கண்டு தெளிதியென்பார், உன்சொரூபத்தை யாராய்ந்துபாரெனவுங்கூறினர். இது கன்மகாண்டம்பத் திகாண்டம் போல்வதன்று, ஞானகாண்டமாதலி னிப்போதேயுள்ளங்கை நெல்லிக்கனிபோல விவ்வருத்தங்களை யனுட்டித்துக் காணலாம். தானுகிய வான்மா சத்துஞ்சித்துமன்றி யானந்தம்வேறென்பார், தன்னைத்தான்காணு தார். இவர் தன்னிழப்பு, அருட்டெரிசனம், பனைதெரிசனம், ஆனந்தோத யம், ஆனந்தாதீதமெனத் தனக்கயலாகக்கண்டு வாளாபோயினர். இவர்களெ ல்லாங் கிரியாயோகக்குறியினரன்றிஞானியரன்று. இதுநிற்க.

(க-து.) ஆன்மா, விருப்பு, வெறுப்பு, உதாசீனத்துளொன்றன்முதலி னானந்தவடிவமேயென்பது. இனிக்கூறப்புகுமவ்டவிதானந்தத்து ளிந்தா மானந்தமாதலி னாதற்கிதுவே விதியெனக்கொள்ள வேறுகூறுதொழிந்தனர். இந்துணைத்தா மென்றலென்னுமுத்தி. தன்னிலக்கணமினையதெனவிதனை இ

ணர்க. தன்னேத்தரிசியா வளவுந் தற்பிரிய மிம்மூவகையாகக் காணுமென்பத ருத்தாபத்தி. அனேத்து மாத்மப்பிரதிபலனமாதவி னெல்லாச்சுகமு மான்மா வேயெனப் பொருள்கொள்ளினு மமையும். (கஉ0)

கஉக - கவி. அ - கை.

[தனவானந்தமுதலியவானந்தபேதங்கள்பலவென்றீரத்தொகை யின்விபரத்தைதத் தெரிவிக்கவேண்டுமெனவினவ அதற்கு விடையிக்கவியிற் கூறுகின்றூர்.]

மானஞ் சிறந்தகுரு நாதனே யானந்த வகைகளைத் தனையென் னிலோ, ஞானந் திகழ்ந்தபிர மானந்தம் வாசனு னந்தம்விட யான் ந்தமென், ரூனந்த மூன்றுவித மெட்டுவகை யென்பர்சில ரவ்வைந்து மிதிலடக் கம், யானந்தவகைசொலக் கேண்மைந்தனே யெட்டு மஃ தின்ன தின்னதென வே.

(இ-ள்.) மானஞ்சிறந்தகுரு நாதனேயானந்த வகைகளைத்தனையென் னிலோ, எ-து. பெருமையிற்சிறந்த சற்குருநாதனே, ஆனந்த வகைகள்பல வெனக்கூறினீரே யவையாவையெனில்:—ஞானந்திகழ்ந்த பிரமானந்தம் வா சனுனந்தம் விடயானந்தமென்ரூனந்தமூன்றுவிதம், எ-து. ஞானமேவழிவா வினங்குகின்ற பிரமானந்தம், வாசனுனந்தம், விடயானந்தம், எனவானந்த மூன்றுவகையாம் :—எட்டுவகையென்பர்சிலரவ்வைந்துமிதிலடக்கம், எ-து. சிலரெட்டுவகையென்று சொல்லுவர், அந்தவைந்து வகையு மிம்மூன்றிலடக் கமாம் :— ஆனந்தவகைசொலக்கேள் மைந்தனேயெட்டு மஃதின்ன தின்ன தெனவே, எ-து. ஞானபுத்திரா ! அந்தவெட்டு விதானந்தங்களுந் மின்ன தின்னதென்று தனித்தனியே சொல்லப்புகுது மூதனைக்கேளுதி, எ-று.

சமஷ்டி யுபாதி குணந் தொழில்காரணமாகப் பகவத்நிலைகூறுநிற்பர், மதத்தர். மகாவாக்கியமும், சத்துக்களும், இந்நூலாசிரியரும், ஞானமே பிரமமெனக் கூறுநிற்பர். அஞ்ஞானமேவஸ்துவெனிலெவர்க்கு முடன்பாட டன்று, ஞானமேவஸ்துவெனலே மறுப்பதென்னை. இதுநிற்க. அவ்வைந்துமெ ன்றது ; ஆத்மானந்தம், முக்கியானந்தம், நிசானந்தம், அத்துவிதானந்தம், ஞானுனந்தமென்பவற்றை. இதிலடக்கமென்றது, பிரமானந்தத்திலாதலா லொருமையிற் கூறலாயினர். ஏனையனைந்துமெனற்குப்பதிலாக அவ்வைந்து மென்றூர். இதிலெனப் பொதுப்படக்கூறியிருக்கப் பிரமானந்தத்தி லெனக் கொண்டது; ஏனைய விரண்டினம் சங்கானன்றுதல்பற்றியென்க. எட்டுமிக் கவியிற்கூறுது மறுகவியிற் கூறப்புகுவதால், அஃதெனப்புறச்சுட்டாக்கினும். எட்டுமென்பது தொகையொருமைபற்றி யஃதென் வொருமையிற்கூறினர். எட்டுவகையென்பர்சிலரென்றதனுல், மூன்றுவிதமென்றது பலரெனப்பெற் றும். எட்டுமென்பதினுமம்மை, முற்றும்மை. இனி வருத்துக்காட்டப்புகுத லாலிதிதொகுத்துச் சுட்டலென்னுமுத்தி.

(க-து.) ஆனந்தபோதங்களையெல்லாஞ் சுருக்கித்தொகையாகவெட்டென்பது. (கஉக)

கஉஉ - கவி. அ - கை.

[மேல்ட்டவிதானந்தமென்றூ, ரதன்வகையை யிக்கவியிற் கூறுகின்றூர்.

போகத்தில் வருசுகம் விடயசுக நித்திரைப் போதுள துபிரமசுக மா, மோகத் தனந்தலிற் சுகம்வா சனைச்சுக முழுப்பிரிய மான்மசுக மாம், யோகத்தி லுளதுமுக் கியசுகமு தாசின முற்றசுக நிசசுகம 'தா, மேகத்தை நோக்கலத் துவிதசுகம் வாக்கிய மெழுந்தசுக ஞான சுக மே.

(இ-ள்.) போகத்தில்வருசுகம் விடய சுகநித்திரைப் போதுளதுபிரமசுகமாம், எ - து. போகங்காரணமாவெய்துஞ்சுகம் விடயசுகமெனவும், நித்திரையெனற்குரியதியாதோ வதனிலெழுஞ்சுகம் பிரமசுகமெனவும் :— மோகத்தனந்தலிற்சுகம்வாசனைச்சுக முழுப்பிரியமான்மசுகமாம், எ - து. மயக்கமாயுள்ள வுறக்கத்தெழுஞ்சுகம் வாசனைசுகமெனவும், எங்குந்தனதுபிரியவடிவாகக்காணுஞ்சுக மான்மசுகமெனவும்:—யோகத்திலுளது முக்கியசுக முதாசினமுற்றசுகநிசசுகமதாம், எ - து. சமாதிகாரணமா வெழுஞ்சுகமுக்கியசுகமெனவும், உதாசினங்காரணமாவெழுஞ்சுகம்நிசசுகமெனவும் :— ஏகத்தை நோக்கலத்துவிதசுகம் வாக்கியமெழுந்த சுகஞானசுகமே, எ - து. தான்மாத்திரமாமிஞ்சிநிற்றலை நோக்குவதாலெழுஞ்சுகமத்துவிதசுகமெனவும், மகாவாக்கியங்காரணமாக வெழுந்தசுகம்ஞானசுகமெனவும் பெயர்பெறும், எ-று.

இனிஇவற்றைத் தனித்தனிகூறப் புகுதலா லொவ்வொன்றினிலக்கணங்களையாங்காங்கு கூறுதும்; போகம், இரண்டொன்றூக விணைதல், அவ்வவற்றையுமவவவ் விலக்கணங்களாற் காணலாம். (கஉஉ)

கஉங - கவி. அ - கை.

[அவ்விதானந்தங்களையுந் தனித்தனிசொல்லப்புகுவார், இக்கவியில்விட்யானந்தவிலக்கண மினைய தெனக் கூறுகின்றூர்.]

வேறு.

இவ்வா றுனைசெய்த சுகபே தங்களி னியல்பா மவைசொல மக னே கே, லொவ்வா ருனவினி லுழல்வா னிடர்கெட வுறங்குஞ் சயந த்தி லுறுமே ரஞ், செவ்வா மனமக முகமா மதிலொளிர் சித்தின் சுக நிழல் சேருங் கா. ணவ்வா றிவனுள மகிழ்வா மனுபவ மதுதான் விட யசு காநந் தம்.

(இ - ள்.) இவ்வாறுனைசெய்த சுகபேதங்களி னியல்பாமவைசொலமக னேகேள், எ-து. இங்ஙனந்தொகைவகையாகக் கூறிய வானந்தபேதங்களை

கியப்பாயுள்ள விலக்கணங்களைத் தனித்தனியே விரிவாகயாங்கூற ஞானபுத் திராநீகேளுந்தி :—ஓவ்வாநனவினி லுழல்வா னிடர்கெட வுறங்குஞ் சயனத்தி லுறுநேரம், எ-து. இயைதற்கொண் ணுதபந்தசாக்கிரத்தில் விவகாரநிமித்த முழல்வோன் தனதல்லல்கெடவுறங்குற்கமைத்த பஞ்சவணமெத்தையில்விழி துயிலுங்கால் :— செவ்வாமனமகமுகமாமதிலொளிர் சித்தின்சுகநிழல்சே ருங்காண், எ-து. தடையின்றி மனமானது சகாகாரமாதலிவிட் டகமுகமா கநழுவும், அப்போதம்மனதி லறிவானந்தத்தின்சாயைபடும் :— அவ்வாறவ னுளமகிழ்வா மனுபவ மதுதான் விடய சுகானந்தம், எ-து. அங்ஙனம்படுநெ றியா லவனுள்ளமானது சுகாகாரமாகக்காணும், அங்ஙனங்காண்பதே தினு னுபவமாம், அந்நெறித்தாயசுகமே விடயானந்தமெனப்படும், எ-று.

சுகமெனக் கருதற்கொவ்வாததுபற்றி யொவவாநனவென்றார். இந்நன வல்லலைத் தரற்குரித்தாதலிற் பந்தசாக்கிரமென்றும். உறங்குஞ் சயனமது றுநேரமெனப்பாடமுமுண்டு. உறக்கம்வரும்போது மனமானதியல்பாகவே தினந்தோறுஞ் சகாகாரத்தினின்று நழுவலும், சுகாகாரமாதலு மெவ்வு யிர்க்குமனுபவமாயிருக்க, இதனைவேறுவழியில் வருத்தியுணைகோடல்பொரு ந்தாது. பொருந்துமெனின், விடயானந்தமெனவும், உறங்குஞ்சயனத்தினு றுநேரமெனவுங் கூறுவதெற்றிற்கு, ஆதலிற்கூடாதென்க. முன்கவியில்போ கத்தில் வருசுகமென்றார். போகமாவது, இணைதல். இங்கேமனமுஞ் சிதா னந்தசாயையுமிணைதலை. விசாரத்தெளிவால் மனஞ்சகாகாரத்தினின்று நழு விச்சுகாகாரமாதலொன்று, மூடத்தாலாதலொன்று, இங்கே விசாரத்தா லெனின், ஓவ்வாநனவினி லுழல்வானிடர்கெட விசாரத்தாலுறங்குறுநேர மென்றிருக்கவேண்டும். தொக்கியிருக்கின்றதெனின், உறங்குஞ்சயனத்தினு றுநேரமென்பானேன். இங்கேசயனமென்றதாசனங்கட்டலையெனின், அப் போதடையோக மென்னல்வேண்டும். அதுதானினில், உளையிற்கோடலென் னுமுத்தியா லங்ஙனங்கொள்ளினு மொறுவாறு பொருந்தும். பொருந்துமே னும், இதுவிடயங் காரணமாகவந்த சுகமன்றே. குண்டலிசத்தியில் மனம்ல யித்தலா லிந்தக்குண்டலிசத்தியுமோர்விடயமன்றே ? மனலயமாதற்கிடமா மேயெனின், தினசுழுத்திபோல்வதாமதனல்விடயசுகமென்றார். மனந்தா காரமாக வதனலெய்துஞ்சுகமெனக்கூறுமையின் விடயசுகமே யென்க.

(க-து.) விடயான்தவிலக்கண மினையதெனக்கூறினரென்பது.

கஉச - கவி. அ - கை.

[பிரமானந்தவிலக்கணமினையதெனவிக்கவியிற் கூறுகின்றார்.]

ஈனந் திருசுக விடயந் திரிபுடி யிடரா மெனமன மசையாமற்
சேனந் தனது குலாயந் தனில்விழு செயல்போ னித்தினை செறிசீவன்
றூனந் தமில்பர ஞடனென் றுவலெரு தனையல் லதுபிற நினையா ம
லானந் தம்மய மாவன் சுகமிரு மதுதா னுயர்பிர மானந் தம்.

(இ - ள்.) ஈனந்தருசுகவிடயந்திரிபுடி யிடராமெனமன மசையாமல், எ-து. பிறப்புவீடென்னுமிரண்டினு ளிழிவாயுள்ளபிறவியையேதரற்பாலதா கியசுகமயம்போற்றோற்றும்விடயந் திரிபுடியாயிருப்பதாலவைதுன்பமேயென விசாரத்தாற்றுணிந்து மனஞ்சற்றுசலியாதுநிற்க:—சேனந்தனது குலாயந்த னில்விழு செயல்போ னித்திரை செறிசீவன், எ-து. ஆகாயத்திற் பறக்கும் பருந்து தனதுகூட்டிலுறுத்துவிழுஞ்செயல்போல வுறக்கத்தபேதமாக வமை ந்தசீவனென்போன்:—தானந்தமில்பரனுடனென்றுவதெருதனை யல்லது பிறநினையாமல், எ-து. தானிங்ஙனமாயநிலையதென வளவைகளாற் கணித் தற்கரிய பிரமத்தோடிரண்டறக்கலக்காநிற்பன், தெளிந்தவிடத்துத் தனித்து நின்றது தான்மாத்திரமாதலா லங்ஙனந்தனித்துநின்றதன்னைமாத்திரமன்றி யயலென்பதுளதாகவதனை யோர்பொருளெனக்கருதாது:—ஆனந்தம்மயமா வன்சுகமிகுமதுதானுயர்பிரமானந்தம், எ - து. ஆனந்தமயமாகவிளங்குவன். அங்ஙனமாகமீக்குள்ளவவ்வானந்தமே மேலாயபிரமானந்தமெனப் படுவதாம், எ-று.

ஈனம், குணவாகுபெயர். விடயந் திரிபுடியிட்டாமெனமன மசையாம னித்திரைசெறிசீவனென்பதிலுல், இங்கே நித்திரையென்பது நனவிற்சுழு த்தி. சுத்தகேவல நிலையென்பாருமுளர். தனக்கயலென்ப தொன்றுமின்றி யனைத்துஞ் சின்மாத்திரமாவிளங்கப்புரிந்த தன்றெறித்தாச் சலியாதுநிற்க வேண்டிவரும். யாதினுலெனில், விடயந்திரிபுடி யிடராமெனக் கண்டதுப ற்றி. அங்ஙனஞ்சலியாதுநிற்றலே சுத்தசகலம். இன்றெறித்தாயசுத்தசகலமய மாகவே, மனமெனலேது, அதுசலித்தலெனலேது? இன்றுமையின், மன மசையாதசுத்தசகலமயமாநிற்புழி யுறக்கம்வருமன்றே, அவ்வுறக்கந்தான்சுத் தகேவலமெனப்படுவது. இன்றெறித்தாயவன்சீவனுதலால், நித்திரைசெறிசீவ னெனவும், அந்நித்திரை, சுகமேலீடு. அச்சுகமேலீடு, மலரகிதமாதலாற்பரனெ னவும், அப்போது சீவனந்தச்சுகாகாரமாய்விடுவனுதலால், பரனுடனென்று வனெனவும், அங்ஙனஞ்சுகாகாரமாநின்றவன்சீவனுதலானும், தன்னையன்றி வேறுகண்டிலனுதலானும், ஒருதனையல்லது பிறநினையாமலெனவும், ஆனந் தமயமன்றித் தான்வேறுகாரமாதற் கிடமின்மையின், ஆனந்தமயமாவனென வும், இந்நிலைத்தாய அவசரத்தையே ஞானநூலனைத்தும் பிரமானந்தமென லானும், இப்பெயரையேற்றற்பாலதாதலானும், சுகமிகுமதுதானுயர்பிரமா னந்தமெனவுங்கூறினர்.

(க-து.) பிரமானந்தவிலக்கண மினையதெனக்கூறியதென்பது. ஆனந் தமயனுமாவனெனைப் பாட்டுமுண்டு. திரிபுடி; ஞாதுரு, ஞானம், ஞேயமென் பன, ஒருதனையென்றதனுல், தான்மாத்திரமெனப் பொருள்கொண்டாம். திரிபுடியிடராமென்றதனுல், உபமானத்தி லலுத்துவிழு செயல்போலென் றும். அளவைகள், அவ்டவிதப்பிரமானங்கள். முன்கவியில், ஆலிங்கணசுகத்

தை விடயானந்த மென்னுதது, நினைசுழுத்தி சுகம்போ லாறுதல் செய்யாமை பற்றி யென்க. இக்கவியிலும்; கித்தினையெனல், நனவிற்சுழுத்தியை. (கஉசு)

கஉடு - கவி. அ - கை.

[ஐயமுறுதற்கின்னும்பிரமானந்த மினையதென
விக்கவியிற்கூறுகின்றார்.]

தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப் பொருள்விழி துயில்வோர் க, டாங்கும் மலரணை கன்று கச்சிலர் சம்பா திப்பது தானசு கந், தீங்குந் தன்மையு மாண்பெண் முறைமையுந் தெரியா தமளிசெய் பொழுதே போ, லாங்குள் வெளிகளு மறியாவனுபவ மதனு லதுபிர மானந் தம்.

(இ - ள்.) தூங்குஞ்சுகமதுபிரமச்சுகமெனல் சுருதிப்பொருள்விழிதுயில் வோர்கள்:—நனவிற்சுழுத்திசுகத்தைப்பிரமானந்தமென்பது மகாவாக்கியார் த்தமேயன்றி வேறன்றுமெனக்கொள்வோர் தூங்காமல்தூங்குபவர்:—தாங் கும்மலரணைகன்றுகச்சிலர் சம்பாதிப்பதுதானசுகம், தீங்குந்தன்மையுமாண் பெண்முறைமையுந் தெரியாதமளிசெய்பொழுதேபோல், எ-து. சிங்கம்போ ன்றமைத்தகருவிகளாற்றுங்கப்பெற்ற புஷ்பசயனத்தைச் சிலர்தன்றுகச்சம் பாதிப்பதுஸ்தானசுகம்வேண்டியாதலால், அம்மலரணையி லிதுதீமையென வும், தன்மையெனவும், ஆண்பெண்முறைமையெனவு முணரும்பாகுபாடுசெற் றுந்தெரியாதுறங்குமாறுபோல:—ஆங்குள்வெளிகளு மறியாவனுபவ மதனு லதுபிரமானந்தம், எ-து. அந்தானவிற்சுழுத்தியின்கண் ணகம்புறமினையவெ ன்பதுந் தெரியாதுறங்குமனுபவமாம், அவ்வனுபவத்தாற்கணிக்குஞ்சுகமெது வோ, அதுவேபிரமானந்தமெனப்படுவதாம், எ-று.

விழிதுயில்வோர்கள்தூங்குஞ்சுகமது பிரமச்சுகமெனல்சுருதிப்பொருள், எனக்கொண்டுகூட்டிதத் தூங்காமற்றூங்குவோர் தாமங்ஙனந்தூங்குங் காலெ ழுஞ்சுகம் பிரமசுகமாமெனக்கூறுவது சுருதிப்பொருளாம், வேறன்றெனப் பொருள்கொள்ளினுமமையும். எனவே, வேதார்த்தமும், மகான்கள்பிரமமெ னலு மொக்குமென்பதாயிற்று. பிரமச்சுகமெனல், எழுவாய். சுருதிப்பொருள் பயனிலை. இதுகாறு மிவ்வெல்லைகடவாமைக் கெழுவாய்பயனிலை கூறிய தென்க." தாங்குமென்னும் வினைக்கெழுவாய் தொக்கியிருப்பதால் சிங்கம் போன்றமைத்த கருவியென்றும். தாங்குமலரணைகன்றுகச்சிலர் சம்பாதிப் பது தானசுகம்பற்றியாதலால், அதிலுறங்கில், தன்மைதீமையாண்பெண்மு றைமையாதிகளெங்ஙனந்தெரியும், தெரியாதாதல்பற்றி யிவ்வுவமைவேண்டிக் கூறினர். மலரணை மிகத்துயில்வினைத்தற்குத்தானமாதலி னச்சுகம்வேண்டி தன்றுகச்சம்பாதிப்பதென்றுரைக்க. பலவொன்றது சிலவொன்றது, நிரந்தர மிங்ஙனஞ்செய்வோர் மிக்கசெல்வத்தார் சிலராதல் பற்றியென்க. தானசுக

மென்றது; இவ்விடத்திற்கியைந்த காரணப்பெயராம். யூகசுகமெனின், யூக மெனற்குப்பொருள்கள், ஓர்புல், கருங்குரங்கு, காந்தி, தருக்கம், படை, படைவகுப்பு, பெண்குரங்கு, முசு, என்பன. இதுபலபொருளொருசொல். இவற்றுள் யாதிங்கே பொருந்தும். பொருந்தாமையின், ஐயிருகுற்றத்துள் மாறுகொளக்கூறலெனலே யேற்கும். இதற்கென்செய்தும். சான்றோ ராட்சி யெனின், பொருத்தமின்றி யிராது. சம்பாதிப்பதுதா னூகமெனப் பாடங்க ளிருக்கின்றன வெனிலோ; ஊகமென்பது, உத்தி, குரங்கு, நினைவு, புலியென் பன. இதுபலபொருளொருசொல். இவற்றுளெவ்வருத்தம்பற்றியம்மொழிவந் தது. யுத்திபற்றியெனின், உபமானவுபமேயசாதாரணதர்ம மினையதென்றறி யார்போலும். உபமானத்தையுபமேயமாக்கலாமா? அதைச் சுருதியுத்தியனு பவத்துள், யுத்தியனுபவமாக்கலாமா? தாங்கும்மலரினைநன்றுகச்சிலர்சம்பா திப்பதுதானூகம், தீங்குந்நன்மையுமாண்பெண்முறைமையுந் தெரியாதமளி செய்பொழுதே போலெனல் காறுமுவமையன்றே? இதற்குவமேயம், ஆங் குள்வெளிகளுமென்பது முதலறியாவனுபவமென்பதுகாறும். தானசுகமெ னப்பிறிதிகளிருப்பதென்னை? அங்ஙனமாக்வு மிங்ஙனமாகவும் பிறிதிகளிரு க்கி னெருதலையாகத் துணிதலே நோக்குதும். தானசுகமெனினும், தானூக மெனினு முபமேயத்தொடர்பன்று, உபமானத்தொடர்பு. இவ்வரம்புகடந் தனைகூறுவது, கல்விவரம் பறியார்போலுமே யிதற்கென்செய்தும். கவிக்கு ற்ற மன்று, கவியிலக்கணங்கல்லாதனைகூறு நமதுகுற்றம். ஆதலின் தானசுக மெனலேயையமின்றிப் பொருந்தும். இலக்கணமில்லாக்கல்வி யுப்பில்லா வுணவுபோலும். அதையாதரவாகக்கொண் டனைகூறலென்னுனை. பசையற்ற தாம். வெறுவாய்மெல்வதுபோலும். சுருதியுத்தியனுபவங்காண்ட லுபமேய த்திலன்றி யுபமானத்திலன்று. உபமேயம்விளங்கக்கூறுவ துபமானமாதலின் கூடாதென்க. தூங்குஞ்சுகமதுபிரமச்சுகமெனல் சுருதிப்பொருள்விழி துயில் வோர்களென்பது சுருதிப்பிரமாணமாம். தாங்கும்மலரினை நன்றுகச்சிலர் சம் பாதிப்பது தானூகமெனக்கூறி யிதுயுத்திப்பிராமாணமென்பதுபொருந்தாது. ஆங்குள்வெளிகளுமறியாவனுபவமென்ற தனுபவப்பிரமாணமாம். கல்வித்திற மின்மையா லிக்கவியிலில்லாத யுத்திப்பிரமாணத்தை யுண்டெனி லெங்ஙன மேற்கப்படும். அவர்போல்வாரேற்பர்.

(க-து.) பிரமானந்தமென்பது சுருதிக்குமனுபவத்துக்குமியைந்திருக்கக் காட்டினுனென்பது. உனையை யாவர்கூறினு மிலக்கணவழுவின்றிக் கூறவே ண்டும். கவிக்கிலக்கணமுரண வுனைகூறின், எவ்வாசிரியராயினு மெந்தசாம்ப ரதாயமாயினு மென்சிறப்பு. கவிக்குனையன்று, உனைக்குக்கவிபோலும், இத னையெவரேற்பர். இந்நூலாசிரிய னெண்விதானந்தமென்றூர், இவற்றுள் தா னூகமெனல்லிடையாது.இத்திறத்தார்,பிறருனைமேற்குற்றங்காட்டலி லென் சிறப்பு. தன்கோணலைத் தானிமிர்த்தவறியார்போலும், தெரியாதவரினை

பொழுதேபோலெனச் சிலபிறிதினிருக்கின்றன. பொருந்துமாறுணையிடுக. போலிவேதாந்திமயமுலகமாதலின். தாங்கும்மலரணை தீங்குந்நன்மையும், விரித்தல்விகாரம். (கஉரு)

கஉசு - சுவி. அ - கை-

[பிரமானந்தவிலக்கண மினையதென நன்குறத்தெளிந்தேன், இப்
போதோரனுபவமென்னுள்ளுதிக்கக்கண்டேனதனைக்கேட்
டருளுமென மாணைக்கன்வியந்துகூறுவதை யிக்
கவியிற்கூறுகின்ருர்.]

உதவும் புவியினி லொருவன் ணனுபவ மொருவன் மனதினி லுதியா தே, மதியுங் கெடுகிற துயில்கொண் டானந்த மயனன் ரோசுக முறுகின் ரு, னிதுவிஞ் ஞான மயனுஞ் சிந்தையி னினைவாய் வந்திடு மெனல்கண் டேன், சுதைதவின் ணேர்புகழ் குருவே நீரிது சொல்லீர் சகலமும் வல்லீ தோ.

(இ-ள்.) உதவும்புவியினிலொருவன்னனுபவ மொருவன்மனதினி லுதியாதே, எ-து. வேண்டுவதைதத்தடையின்றி யுதவத்தக்கஞானபூமியேழனுள், ஒருவன்கண்டசுவானுபவ மற்ரொருவன்மனதிற்காணுமா, காணுதே, இதென்னவியப்பு, அதனைச்சொல்லுகிறேன், அதாவது:—மதியுங்கெடுகிறதுயில் கொண்டானந்த மயனன்ரோசுகமுறுகின்ரான், எ - து. மனதும்நிச்சுத்தக் கயோகநித்திரை காரணமாக வானந்தமயனுகிறவான்மாவன்ரோ பிரமானந்தவடிவமாகின்ரான், இங்ஙனமிருக்க:—இது விஞ்ஞானமயனுஞ்சிந்தையினினைவாய்வந்திடுமெனல்கண்டேன், எ-து. இவ்வானந்தமானது விஞ்ஞானமயனுகியமானதனிடத்தில் நினைவுவடிவாகவந்துவிடுமெனச் சத்துக்கள் கூறுவதைப்பிரத்தியட்சமாக வடியேனிடத்திற் கண்டனன்:—சுதைதவின் ணேர்புகழ்குருவேநீரிது சொல்லீர் சகலமும்வல்லீரோ, எ-து. அமிர்தத்தையுட்கொண்டதேவர்களாலுந் துதிக்கப்பெற்றகுருநாதனே! சகலார்த்தமுமையமின்றிவிளங்கப் போதிப்பதில்வல்லமையுடையவரோ! யிஃதெங்ஙன்ங்கூடுமென்தேவரீரோயிவ்வையமகலத்தெரித்தருளவேண்டும், எ-று.

உதவுமெனப்பொதுப்படக்கூறியதனல் வேண்டுவதையெனவும், புவியெனப்பொதுப்படக்கூறியதால் ஞானபூமியெனவும், துயிலெனப்பொதுப்படக்கூறியதால் யோகநித்திரையெனவும், ஆனந்தமயனெனப்பொதுப்படக்கூறியதா லாத்மாவெனவுங்கொண்டாம். இரட்டிறமொழிதலென்னுமுத்தியால், முத்திக்குச்சாதனமானதனுகரணங்களை யுதவத்தக்கவிப்பூமியிலொருவன்கண்டவனுபவ மொருவன்மனதினில், எங்ஙன்ங்காணும், காணுதேயெனவுதாரணமாக்கியதாக வுரைகொள்ளினுமமையும்.

(க-ஙு.) நினைவிறந்தவானந்தம் நினைவாயதெங்ஙனமெனவிஞவினனென்பது:- ஏனெனில், இவன்தன்சமாதியில்மனாசத்திற்கண்ட தடையற்ற

வானந்தம், சமாதிவிட்டகாலத்திலும், தன்னினைவெல்லாமிடைவிடாது துற்றுக்கொண்டிருத்தலினென்க. இடைவிடாதுதுற்றுக்கொண்டிருத்தலாவது; யாதுபுரியினும், யாது நினைக்கினும், யாது சுகிக்கினும், கலையாது நெஞ்சினிறைவாயிருத்தல். மலடியறியாள்பிள்ளைவருத்தம், அதுபோல, ஏனையரறியாரிவ்வானந்தநிலைமை. இவ்னெய்திய விவ்வனுபவமொழி சத்தியமாதல்பற்றியிங்ஙனம் விளுவினனென்க. எனலென்பது, என்றுசொல்லுதல். இதனுல் சத்துக்கனென வருவித்தாம். யாதினுலுங் கெடாததென்பதுதோன்ற மதியுக்கெடுகிற வென்றார். மதியுமென்பதிலும்மை யுயர்வுசிறப்பு. ஆனந்தநினைவ்வாய்வந்திடுமென்றதனுல், ஆனந்தமேநினைவு நினைவே யானந்தமெனப்பெற்றும்.

(க - து.) நினைவிறந்தசுகம்; நினைவாகநிற்பதற் கேதென்னையென்பது. மனமிறந்தவிடத்துதிக்கும் பிரமானந்தத்தை யான்மாவனுபவிக்க, மனதுக் கெட்டிவானேனெனல் விளு. (கஉசு)

கஉள - கவி. அ - கை.

[சுத்தமனதும், பரமாத்மாவும், ஒன்றேயெனவுபமானமுகத்தாலிக்கவியிற்கூறுகின்றார்.]

நெய்யும் வெண்ணெயு மிருபேர் களுமறி நினைவிற் பிறிவறி வினிலில் லை, செய்யுந் தனவினி லிறுகும் மனதொடு சேருஞ் சின்மய விஞ்ஞா னன், நையுந் துயர்மன நழுவும் பொழுதுணர் ஞானச் சுகமுணு மானந் தன், பெய்யுந் துளிகளு நீருங் குளமொடு பாரும் போலிவர் பிறிவன் றே.

(இ - ள்.) நெய்யும்வெண்ணெயுமிருபேர்களுமறி நினைவிற்பிறிவறிவினிலில்லை, எ-து. நெய்யென்றபெயரும், வெண்ணெயென்றபெயருமாகியவிவ்விரண்டும், பகுத்துணரத்தக்கமனத்தாலாய பேதமேயன்றியவ்விரண்டையும் ருசிக்கத்தக்காவுணர்வுக்குச்சற்றுமில்லை: — செய்யுந்தனவினிலிறுகும் மனதொடு சேருஞ்சின்மயவிஞ்ஞானன், எ-து. இச்சாஞானக்கிரியைகளைச் செய்தற் கியைந்த சாக்கிராவத்தையில் விசாரத்தாற். றனதுசெயலிற்சருங்கிய மனதோடுகூடியு சி த்திரமாயிருக்கும் விஞ்ஞானமயனென்போனும்:—நையுந்துயர்மன நழுவும்பொழுதுணர் ஞானச்சுகமுணுமானந்தன், எ-து. வஸ்தியத்தக்கதுயர்மயமானமனது மெல்லநழுவற்கியைந்தசமாதிகாலத்தில் தன்னையேயுணரத்தக்கஞானானந்தத்தை யனுபவிக்கின்றவானந்தமயனனவான்மாவும்: — பெய்யுந்துளிகளுநீருங்குளமொடு பாரும்போலிவர் பிறிவன்றே, எ-து. துளிக்குந்துளிகளுந், சலமும், குளமுங்கனையும், எங்ஙனம்பேதமின்றேறுவதுபோல விஞ்ஞானனும், ஆன்மாவுமாகியவிவ்விருவருந் தம்முள்பேதமிலராம், எ-று.

அறிநினைவெனவே, சட்சுகாரணமாக வறியுநினைவென்ன்றுயிற்று. கண்ணுக் கிரண்டாகத் தோற்றினு நாவுணர்வுக் கொன்றே. அன்றியும், நெய்

வெண்ணெயெனச்சொற்பேதமேயன்றிப் பொருட்பேதஞ் சற்றுங்கண்டிலம். அதுபோல; விஞ்ஞானமயன், ஆனந்தமயனெனச் சொற்பேதமுந் தோற்றபேதமுமேயன்றிப் பொருட்பேதமு மனுபவபேதமுஞ் சற்றுங்கண்டிலம். வெண்ணெயன்றி நெய்யெனலும், சலமன்றித் துளியெனலும், கனையன்றிக் குளமெனலும், எங்கே. அதுபோல, விஞ்ஞானமயனையன்றி யானந்தமயனென்பவ னெங்கே. எனவே, அறிவையன்றியானந்தமெனலெங்கேயென்றுயிற்று. ஆகவே, அறிவேயானந்தமெனப்பெற்றும். பெறவே, ஞப்தியேபிரியம்பிரியமே ஞப்தியெனக்கண்டாம். காணவே, அனுபவத்திற் பேதமின்றெனத்துணிந்தாம், இத்துணிபு; இதனைமறுக்கற்கவெனக்குறிப்பிக்கநின்றது.

(க - து.) விஞ்ஞானமயனெனலும், ஆனந்தமயனெனலும், ஓரவசரம் பற்றிச் சொல்லாற்பேதங்கூறவந்ததேயன்றிப் பொருளாற்சற்றுமின்றென்பது. இவ்வனுபவஞ்சகசானுபவத்திற் குருமுகத்தாற்காணப்படுவது. (கஉஎ)

கஉஅ - கவி. அ - கை.

[வாசனானந்தலிலக்கணமினையதென விக்கவியிற்கூறுகின்றார்.]

ஒன்ற கியபிர மானந் தன்சுக மொழிவா னென்வெளி வருவா னே, னென்றன் முன்செய்த கருமம் வெளியினி லிழுக்குஞ் சுழுத்திவிட் டெழுந்தோ னு, நன்ற யினசுக மகலான் வெளியிலு நடவான் மறதியும் பெறமாட் டா, னன்ற மெனவிருந் துறங்குஞ் சிலகன்ம மதுவே வாதனை யானந் தம்.

(இ-ள்.) ஒன்றுகியபிரமானந்தன்சுக மொழிவானென்வெளிவருவானே னென்றல், எ-து. ஏகமாகவிளங்கும்பிரமானந்தனென்போன் தனதுசுகானந்தத்தினின்றுநீங்குவானேன் வெளிப்படுவானேனெனக்கேட்பையாயின்:— முன்செய்தகருமம்வெளியினிலிழுக்குஞ் சுழுத்திவிட்டெழுந்தோனும், எ-து. பூர்வத்திற்செய்தகன்மமானது புறம்பில்மெல்லவிழுக்கும், அதனல்சுழுத்தியைவிட்டுநீங்கினவனும்: — நன்றுயினசுகமகலான்வெளியிலு நடவான்மறதியும்பெறமாட்டான், எ-து. வெகுபிரியமானவந்தச்சுகத்தினின்றும் நீங்கான், புறம்பிலுஞ்செல்லான், அச்சுகத்தைமறக்கவுமாட்டான்:—அன்றுமெனவிருந்துறங்குஞ்சிலகன்ம மதுவேவாதனையானந்தம், எ-து. இப்போதவசியமல்ல, இப்போதவசியமாமென நினைத்துறங்குவதான சிலபிரயத்தனமப்போதுநிகழ்வனவாம், அங்ஙனநிகழ்ததேலவாசனானந்தமெனப்படுவதாம், எ-று.

பிரமானந்தமென்னது பிரமானந்தனென்றதனல், அம்மயமானவனென்மாவாகியபுருடனெனப்பெற்றும். முன்செய்தகன்மமென்றது; தினமும்வழக்கமாகச் செய்துகொண்டுவந்த தின்வினைத்தினை. தினசுழுத்தி கலேவிலெங்ஙனமோ, அங்ஙனம் பிரமானந்தமேலிடாகிய சுழுத்திகலையுங்கானிகழுமனுபவானந்தமாதலினிதனைவாசனானந்தமென்றார். சுழுத்திகலேவில், விவகாரவிர்த்தி வெளியிலிழுக்கும்போது, அவ்வானந்தப்பிரியந் தடுக்கும். அவ

வானந்தவசத்தாகுதுமெனின், விவகாரசங்கற்பந் தடுக்கும். சுகத்தைதவிட்ட கலக்கூடாமையி னிதுதருணமல்லவெனவுப், இப்போதேசெய்யாவிடிலிவ வளவுநட்டம்வரும், ஆதலினிதுதருணமாமெனவு மங்கேயிங்ஙனநிகழ்த்தலின், அண்ருமெனவிருந்துறங்குஞ்சிலகன்மமென்னப்பட்டது. வெளிக்குவரவொட் டாமல்தடுப்ப தவ்வானந்தாம்சமாதலால் வாசனைனந்தமென்றதென்க.

(க-து.) இடுகுறிப்பெயரன்றெனக்காட்ட விவேவேதுக்களோத்தெரிவித்து வாசனைனந்த விலக்கணங் கூறியதென்பது. வெளிக்கிழுத்த லிருவகையேது .பற்றியெனினு மமையும். அதாவது; பிராரத்தகன்மம், சகசநிட்டையென் பன. வெளிக்குவருதல், விஞ்ஞானமயத்துக்கு வருதலே. இருவகை யேதுக்க ளினையவெனத் துணிவது, நயம்பற்றியென்க. அதாவது; கன்மமாயின்பிரா ரத்துவமெனவும், நிலையாயின் இந்நிட்டையெனவுமாம். சகசநிட்டைக்கிழுத் தலெனக்காண்டல் கூடாமையின் முன்செய்தகன்மம்வெளியினிலிழுக்குமெ ன்றதென்க. சுழுத்திவிட்டெழாதவனுமென்பதுதோன்றச் சுழுத்திவிட்டெ ழுந்தோனுமென்பதின்கன்னுள்ளவுய்மை, இறந்ததுதழீஇயவெச்சவும்மை.

கஉசு - கவி. அ - கை.

[நிசானந்தவிலக்கணமினையதென விக்கவியிற்கூறுகின்றார்.]

அந்தக் கணமூட லகமென் றிடர்களி லலைந்தே சுகந்தனை மறந்தே போ, முன்தைச் செயும்வினை சுகதுக் கந்தரு மோகந் தருநடு வடிவே கா, ணைந்தப் புருடனு மொருசிந் தையுமற விருந் தே னெனலனு பவமா கு, மிந்தப் படிதனு தாசி னச்சுக மிதுவே நிசமெனு மானந் தம்.

(இ - ள்.) அந்தக்கணமூடலகமென்றிடர்களி லலைந்தேசுகந்தனைமறந் தேபோம், எ - து. தேகமே நானென்றுன்ன வக்கணமே யான்மாதுன்பப் பெருக்கிலகப்பட்டின்னதிசையெனக்காணு தலைந்து தற்பிரியத்தைச் சற்று மெண்ணமின்றிமறந்தேவிடுவன்: — முன்தைச்செயும்வினைசுகதுக்கந்தருமோ னந்தருநடுவடிவேகாண், எ-து. முன்செய்த கன்மமானது சுகத்தையேனுந் துக்கத்தையேனுந்தரும். மோனநிலையோ வந்நானந்தராது, மத்தியகதநிலை யையேதரும்:—எந்தப்புருடனு மொருசிந்தையுமற விருந்தேனெனலனுபவ மாகும், எ-து. எந்தப்புருடனுயினும் யாதோர்சிந்தையுமின்றி யானிருந்தே னெனக் கூறுவது, எவர்க்கு மனுபவமாம் : — இந்தப்படிதனுதாசினச்சுக மிதுவேநிசமெனுமானந்தம், எ - து. இவ்வாறுதன்னுலனுபவிக்கப்பட்டது தாசினசுகமாதலா லிதுவேநிசானந்தமெனப்படுவதாம், எ-று.

அந்தக்கணமென்றற்கு, தனதெதார்த்தவடிவைமறந்தவந்தக்கணமென் றும், மறந்ததனுலதனதெதார்த்தசுகந்தனை மறந்தேபோமென்றுங் கூறியத னுபவமிருத்தலிற்பொருந்தும். பூர்வவினை; சுகதுக்கத்துளொன்றுதருமாயின்,

மதாமௌனம்; மத்தியகதாநிலையைத்தருமென்றூர். காண், அனைசநிலை. தன்னுதாசினைச்சுகம்; தனதுவிருப்புவெறுப்பற்றசுகம்.

(க-து.) விழிப்பி லொருஇன்தையுமற நிற்றலாலாயசுகமே, நிசானந்தமென்பது. இது யாதோர்நினைவுமற்றவிடத்துதித்த சுத்மாதலாற் காரணப்பெயராயிற்று. சுழுத்திசுக மென்னலாமேயெனின், உணர்வற்றவிடத்ததன்றூமையின் பொருந்தாது. இதனைச்சமாசசுக மெனினுமமையும். ஒருஇந்தையுமறவிருத்தல், கற்பனையறல். எனவே, நிசமென் றூயிற்று. நிசத்திலுதித்தலா னிசானந்தமெனப்படுமென்க. ஞாஞஞ்ஞானத்துக்கிடையாதல், பற்றி நடுவடிவெனப்படும். இதனை முக்கியானந்தமெனக் கூறுவார், முன்பின்னறியார்போலும். (கஉக)

கஙo - கவி. அ - கை.

[முக்கியானந்தவிலக்கணமினையதென விக்கவியிற்கூறுகின்றூர்.]

நிசமா னதுழுக் கியமோ குடத்துள நீரன் றேவெளி யீரக் தான்
வசமா மகங்கர மறைத்தா னிசமது படிந்தான் முக்கிய வகையாகும்
திசையார் திரிசய மறியா தேதுயில் செறியா தேயுட றறிபோ லே
யசையா தேமதி சமமா கியநிலை யதுதான் முக்கிய வாகுந் தம்.

(இ - ள்.) நிசமான துழுக்கியமோகுடத்துள நீரன்றேவெளியீரந்தான், எ - து. நிசானந்தமான து முக்கியானந்தமெனப்படுமோவெனின், குடத்தினுள்ளநீரினுலன்றே புறம்பிலீரமாகக்காணப்படுவது, ஆதலின் முக்கியானந்தமெனப்படாது: — ஆயினெங்ஙனமெனின், வசமாமகங்கரமறைத்தா னிசமதுபடிந்தால்முக்கியவகையாகும், எ - து. பிறவிதரற்குவசமாயுள்ளவகங்காரமானது திசைகாணுதகன்று நிசவடிவங்கைகூடுமான லட்போதுழுக்கியமென்கிறவகையையேற்பதாகும்: — திசையார்திரிசய மறியாதேதுயில்செறியாதேயுடறறிபோலேயசையாதே மதிசமமாகியநிலையதுதான் முக்கியவானந்தம், எ-து. எங்கணுங்நிறைந்துள்ளதிரிசயத்தைநாடாமலும், உறக்கத்ததன்வயப்படாமலும், மனமானதுநடுநிலையதாகி னதுவேமுக்கியானந்தமெனப்படுவதாம், எ-று.

முக்கியமோவென்பதிலோகாரம், வினு. அகழுகமாகச் சொருபசமாதியிற்கண்டசுகமன்றே புறம்பில் தானே விருப்புவெறுப்பின்றிய சுகமாகக்காண்கின்றதென்பதுகுறிப்பிற்றேன்ற வுவமையாற்கூறியதென்க. அகம் புறமொத்தலி னிசானந்தமெனவும், அகங்காரமறைதலும், உண்மைசேர்தலும், திரிசயமென்பது சற்றுங்காணவறியாமலும், முழுதுமானந்தநித்திரையில் முழுகாமலும், தேகந்தறிபோலசையாமலும், மனமானதுதொழுஞ்ஞானமெறித்தாச்செல்லாமலுநிற்ற லகத்திலாதலால், முக்கியானந்தமெனவுங்கருதிக்கூறியதாகக்காண்கின்றது. இதனையறியா தொன்றையொன்முக்கூறு

வார் செய்யுட்பிரயோக மறியார்போலும். இங்ஙனநிற்கவேண்டியது மனமாதலால், மதியையமனமென்றும். அதுதானென்பது சுட்டுப்பெயராதலின், மதிசம்மாகிய நிலையென்பதை விளையெச்ச மாக்கினும். செறிதல், நெருங்கல். ஆதவின் துயில்செறியாதேயென்பதற்கு, உறக்கத்தைவயப்படாமலென்றும்.

(க-து.) இனையவாயவேதுக்களா லிதுநிசானந்தமன்று மூக்கியானந்தமென்றுரைத்தது. இக்கவிக்குரையிற்றெறித்தாயது; கவிநோக்காலென்க. (கசுஅ)

கசுக - கவி. அ - கை.

[இவ்வெண்விதானந்தங்களுளடங்காதவானந்தபேதங்களுள, அவையும்பிரமானந்தலேசமென விக்கவியிற் கூறுகின்றார்.]

மனுடன் மனுட. கந்தரு வன்றே வகந்தரு வன்பிதிர் பிறவித்தே வன், றனுடன் கருமசுரன்சுர னிந்திர ஞசான் பிரசா பதியாஞன், கனவி ராட்ட னிரணிய கருப்பன் கருதும் மிப்பதினெரு பேரின், பினவா னந்தங்க ணுளாயாம் பிரளய வெள்ளக் கடல்பிரமானந் தம்.

(இ-ள்.) மனுடன்மனுடகந்தருவன் றேவகந்தருவன்பிதிர்பிறவித்தேவன் றனுடன், எ-து. மனுடன், மனுடகந்தர்வன், தேவகந்தர்வன், பிதிரர், பிறவித்தேவன்றனுடன் :—கருமசுரன்சுரனிந்திரனுசான் பிரசாபதியாஞன், எ-து. கருமசுரன், சுரன், இந்திரன், ஆசான், பிரசாபதியாஞன்:—கனவிராட்டனிரணியகருப்பன், கருதுமிப்பதினெருபேரின், எ-து. கனவிராட்டன், இரணியகருப்பன், எனக்கருதத்தக்க விந்தப்பதினெருபேர்களின்:—பினவானந்தங்க ணுளாயாம் பிரளய வெள்ளக்கடல் பிரமானந்தம், எ-து. ஒன்றுக்கொன்றுபேதமாயுள்ள விவ்வானந்தவகைகள், கற்பனந்தத்திற் பிரளயம்போன்றெழும் பிரமானந்தமென்னும்பிரவாகசாகரத்தி னுளாபோல்வனவாம், எ-று.

ஆனந்தபேதங்களிற் றனித்தனி சிறந்தோர், மனிதரிற்; சார்வபூமனும், மனுடகந்தர்வரில்; மனிதனுயிருந்துபுண்ணியபரிபாகத்தாற் கற்பாந்தத்திற் கந்தர்வனுமனுடகந்தர்வனும், தேவகந்தர்வரில்; பூர்வபுண்ணியகர்மத்தால் மனுடகந்தர்வபதவியினின்று தேவகந்தர்வபதவியடைந்ததேவகந்தர்வனும், பிதிரரில்; சிருஷ்டிகாலத்தேயுண்டான வக்கினிஸ்வாந்தாமுதலிய பிதிரரும், பிறவித்தேவர்களில்; கற்பத்துக்காதியில்தானே தேவப்பிறவியையுடையவரானசதேவனும், கருமசுரரில்; மனுடனுயிருந்துசெய்தவசுவமேதாயகன்மபலத்தாற் றேவனுகச்சென்னித்த கன்மதேவனும், சுரரில்; காலன்முதலியோருமாம். ஆசான், பிரகஸ்பதி, பிரசாபதியாஞன், பிரமன் என்பன. கனவிரா

ட்டு; வியாபகமான விராட்புருடன். பிரானெனற்பாலது, பின்வென்றுய திடைக்குறை. இப்பதினேரானந்தங்களுந்துணையெனவே அஷ்டவிதானந்தங் களும் அலையெனப்பெற்றும். பிரளயமென்றது, இங்கேகற்பனந்தத்தை. மண் ணதியயாவுந்தனதுருவாகக்கொள்ளுமவசரத்தை, விராட்புருடனெனவும், எங் குமாப் பிரகாசிக்கின்றவற்றையெல்லாந் தனது தரத்ததாகநிற்குமவசரத்தை, இரணியகருப்பனெனவுங்கொள்க. மண்ணதியென்றது, அஷ்டமுகுர்த்தத்தை.

(க-து.) அஷ்டவிதானந்தமாக்கிய தளவிலானந்த பேதங்களையாதலால், அவற்றுட்சிலவற்றைக்கூறினனென்பது. சிலபிறிதிகள், பிதிர்கருமத்தேவனெ னவும், தனுடன்னசுரனெனவும், இந்திரனுசானுமெனவும், கனகன்விராட்டிர ணியகருப்பனெனவும், பதினெருபேர்களெனவும், இருக்கின்றன. இதனுளி யைதற்பாலதேற்கப்படும். தைத்திரியவுபநிடதப்படி விராட்டிரணியகர்ப்ப மொன்றுக்கிப் பதினென்றுக்குக. (கஊக)

கஊஉ - கவி. அ - கை.

[இங்ஙனமாயவனுபூதியுடையோன்மகிமையை
யிக்கவியிற்கூறுகின்றார்.]

எவனை கிலுமிந்தத் தூரியா தீதத்தி லேழாம் பூமியி லிருந்தா னெ
லவனை ரதன்சுகன் சிவன்மா லயன்முத லறிவோ ரனுபவ சுகபோதம்
விவகா ரதிர்சிய மிதுவே யனுபவ மெனமுன்சொல்லிய விவகாரி
யுவமா னமுமறி மகனே யவனடி யுதிரும்பொடி.களென் முடிமேலே.

(இ-ள்.) எவனைகிலுமிந்தத்தூரியாதீதத்தி லேழாம்பூமியிலிருந்தானேல், எ-து. யாவனையினுமிந்தத்தூரியாதீதமாகிற வேழாம்பூமியிலிருப்பனையின்:— அவனைரதன்சுகன்சிவன்மாலயன்முத லறிவோரனுபவசுகபோதம், எ - து. அவன்; நாரதன், சுகன், சிவன், விஷ்ணு, பிரமன்முதலியவறிஞரதுசுகபோத வடிவமெனப்படுவன்:—விவகாரதிர்சியமிதுவேயனுபவமென முன்சொல்லிய விவகாரியுவமானமுமறிமகனே, எ - து. விவகாரிகதிரிசயவிழப்பும், இதுவே யனுபவநிலையாமென முன்னர்க்கூறியவிவகாரியுபமானமும் மினைபவெனஞான புத்திரா ! நீயறிதி: — அவனடியுதிரும்பொடிகளென்முடிமேமேல, எ - து. அந்தமகானதுதிருவடியினுதிருந்தூசுக ளெனதுசிரசின்மேல் மகுடம்போல் வனவாம், எ-று.

சண்டாளனையுங்குறிக்க எவனுகிலுமெனவும், தூரியமேதூரியாதீதமாவது பற்றித் தூரியாதீதத்திலெனவும், தூரியம் ஞானபூமியிலேழாவதாதலி னே ழாம்பூமியிலெனவும், இருப்பானேலென்பது, இருந்தானேலென்றுயது கால மயக்கம். அவன், எழுவாய். சுகபோதம், பயனிலை. விவகார, அதிர்சியம், விவகாரதிர்சியமென்றுயது; குணசந்தியினுலென்க. விவகாரியுவமான முமிம

ன்றதனால், விவகாரதிசயமுமெனவும்மைவருவித்தாம். இஃதெண்ணும்மை. எவனுகிலுமென்பதிலும்மை, ஐயம்.

(க-து.) மகானதுபெருமையைக்குறிக்கத் துரியமேதுரியாதீதமாயிரண்டொன்றுமென்பது. விவகார, நிருணியம், எனப்பிரித்து விவகாரத்திற்கிணையென்றதனால் நிருணியமென்றுணைகூறி லிங்கமேபொருந்தாது. ஆதலின்குணசந்தியாக்கினும். துரியாதீதத்தைமுன்னர்க் கூறுதிருக்க, இந்தவெனச்சுட்டியது; எப்போது துரியநிலைவாய்த்ததோ, அப்போதேயதுதுரியாதீதமாக்குமென்னுந் துணிபுபற்றியென்க. (கஙூ)

கஙூங - கவி. அ - கை.

[வித்தையானந்தநீங்கலாக ஏனையசுகவகைகளைக்கூறினும்
இதிலின்னுமையமுளதேற்கேட்குதியென மாணாக்கனைக்
கேட்டலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

வேறு.

இந்தவா றைந்துசுகஞ் சொல்லினேனும் வித்தைசுக மினிமேற் சொல்வா, முந்தைமா யையுஞ்சச்சி தானந்தப் பொருளுமே மொழியும் போதி, லந்தமா மத்துவித சுகமான்ம சுகமிரண்டு மங்கே சொன்னேனே, தொந்தமாற் றியமகனே யின்னமுனக் கையமுண்டேற் சொல்லு வாயே.

(இ-ள்.) இந்தவாறைந்துசுகஞ்சொல்லினேனும் வித்தைசுகமினிமேற்சொல்வாம், எ-து. இவ்வாறுக விடயானந்தம், பிரமானந்தம், வாசனானந்தம், நிசானந்தம், முக்கியானந்தமெனப்படு மைந்துசுகத்தையுஞ் சொல்லினேனும் வித்தையானந்தத்தை யினிமேற்கூறுதும் :—முந்தைமாயையுஞ்சச்சிதானந்தப் பொருளுமேமொழியும்போதில், எ-து. முன்னேமாயையைப்பற்றியும், சச்சிதானந்தப்பொருளைப்பற்றியுஞ், சொல்லிக்கொண்டுவரும்போது:—அந்தமாமத்துவிதசுகமான்மசுக மிரண்டுமங்கேசொன்னேனும், எ-து. வேதமுடிவிலுள்ளவத்துவிதானந்தமும், ஆத்மானந்தமுமாகிய விவ்விரண்டிலக்கணங்களையு மவ்விடத்தில்தானேசொல்லிவிட்டோம்:—தொந்தமாற்றியமகனே யின்னமுனக்கையமுண்டேற்சொல்லுவாயே, எ - து. பந்தங்களைநீக்கிக்கொண்டசற்புத்திரா! இன்னுமுனக்கையமுண்டாயிற்சொல்லுதி, எ-று.

வித்தைசுக மினிமேற் சொல்வாமென்றதை, இப்படலத்தில்தானே, கசுசு, கவிமுதல், களச, கவிவனையிலும்; அத்துவிதசுக மாத்மசுக மங்கே சொன்னேனெமென்பதில், அத்துவிதசுகத்தை, கoஉ, முதல், கoசு, கவிவனையிலும்; ஆத்மசுகத்தை, கஙஎ, முதல், கஉo, கவிவனையிலும்; ஐந்துசுகஞ்சொல்லினேனெமென்றதில், விடயசுகத்தை, கஉசு, கவியிலும்; பிரமானந்தத்தை, கஉச முதல், கஉள, கவிவனையிலும்; வாசனானந்தத்தை, கஉஅ, கவியிலும்; நிசானந்தத்தை, கஉசு, கவியிலும்; முக்கியானந்தத்தை, கசo, கவியிலுங்காணலாம்.

(கூ-து.) சத்து, சித்து, ஆனந்தங்களோத் தனித்தனியே சொல்லிவிட் டோம். இன்னுமையமுளதேற்கேளுதியென்பது. (கஙஙு)

கஙூச - கூவி. அ - கை.

[சச்சிதானந்தவிலக்கணங்களோத் தனித்தனிசொன்னவாறுபோல,
ஏகமாக்குமாறுமுணர்த்தவேண்டுமென மாணாக்கன்
கேட்டலையிக்கவியிற்கூறுகின்றூர்.]

குகன்றனையு மெனையுமுல கினையுமீன் றளித்தருளுங் குருவே கேளீர், புகன்றசச்சி தானந்தப் பதங்கடனித் தனியாயே பொருள் வே ருரை, லுகண்டமன முறைப்பதெங்ஙன் பரியாயபதங்களோப் போ லுறவுங் காணே, னகண்டமா யொருசுவையாய்த் தேனீக்கூட் டியமதுவா வறிவிப்பீ ரே.

(இ-ள்.) குகன்றனையுமெனையுமுலகினையு மீன்றளித்தருளுங்குருவேகே ளீர், எ-து. முருகக்கடவுளையு மடியேனையும் வுலகினையும் பெற்றளித்தருளிய சற்குருநாதனே! யோர்விண்ணப்பமுண்டதனைக்கேட்டருளும், அஃதியாதெ னில்:—புகன்றசச்சிதானந்தப்பதங்க டனித்தனியாயே பொருள்வேருரை, எ-து. தேவரீர்கூறியசச்சிதானந்தப்பதங்கள் தனித்தனியானவாறுபோலப் பொருளுந்தனித்தனிவெவவேருரை:—உகண்டமனமுறைப்பதெங்ஙன் பரி யாயபதங்களோப்போலுறவுங்காணேன், எ-து. அகண்டதத்துபாயத்தக்கமனமா ன தலையாதுறுதிபெறுவதெங்ஙனம், ஒன்றிற்குப் பலவாகக்கூறும் பரியாய நாமங்களோப்போலுறவுங்கண்டிலன் :—அகண்டமாயொருசுவையாய்த் தேனீ க்கூட்டியமதுவாவறிவிப்பீரோ, எ-து. ஏகமாகவும், ஓரோருசியாகவும், தேனீக் கள் பலமலரிலெடுத் தொன்றுக்கிய தேனைப்போல வடியேனுக்குணர்த்தியரு ளவேண்டும், எ-று.

வேதமுடிவையெடுத்துவிளக்கல் பரமசிவத்துக்கேயன்றி யேனையர்க்கி ன்றுமையின், பரமசிவமேகுருவெனக்கருதிக் குகன்றனையுமெனையுமுலகினை யுமீன்றளித்தருளுங் குருவேயெனக்கூறினதாகக்கொள்க. அன்றேல், மூர ணும். உகண்டமன முறைப்பதெங்ஙனென்பதற்கு, பலவாருகச் சிதைவுற்ற லகின்ற மனமொருமைப்பா டெய்துவதெங்ஙனமெனப் பொருள்கொள்ளி னுமமையும். எங்ஙனமென்பது; எங்ஙனென்றுயது, கடைக்குறை. பரியாய பதங்கள், ஒருபொருள்குறித்தபலசொல். ஓர்பொருளாகிய பரம்பொருளை விளக்குவிப்பதற்குச் சச்சிதானந்தங்கள் தக்கவாகையின் பரியாயபதங்களோப் போலுறவுங்காணேனெனவும், பலமலரிலுள்ளதேனைக் கூடாக்கியதுபோல, சச்சிதானந்தங்களை யொருமையாக்கி யருளவேண்டுமெனக் கருத்துகொண்ட தால், அகண்டமாயொருசுவையாய்த் தேனீக்கூட்டியமதுவாவறிவிப்பீரோ யெனவுங் கூறிலுமொன்க. மதுவைப்போல வென்றலை மதுவாவென்றதுவு

மைத்தாகை. தனித்தனியாகவே யெனற்பாலதை, தனித்தனியாயேயென்றது, மரூஉ. அகண்டமா யொருசுவையாந் தேனீயெனச் சிலபிரதிகளிருப்புதுபற்றிமெல்லொற்றுக்கின், அகண்டம், ஒருசுவை யென்பன மதுவுக்குவிசேடணமாகவும், அகண்டமாயொருசுவையாய்த் தேனீயெனவல்லொற்றுக்கின், அறிவிப்பீரென்னும். வினைமுற்றிற்கு வினையெச்சங்களாகவு முடியுமென்க.

(க-து.) சச்சிதானந்தங்களைத் தனித்தனியாகத் தெரிவித்தவாறுபோல, அவற்றினொருமையையுந் தெரிவிக்கவேண்டுமென்பது. இங்ஙனந் தெரிவித்த .லருமைபற்றியென்க. (கஙூச)

கஙூரு - கவி. அ - கை.

[சுருதிப்பிரமாணத்தாலவற்றினொருமையை யுபமானங்காரண மாகவிக்கவியிற்கூறுகின்றார்.]

குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினு னீர்மூன்று கூ ரு யிற் ரே, வொளிதவனஞ் செம்மையென்றபதங்களா லக்கினியு மொருமூன் ரூமோ, வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட னொனப்பிரித்து விலக்கி வேத, மெளிதறிய முரண்மொழிந்த சத்தாதி யெனும்பிரம மேகந்தானே.

(இ - ள்.) குளிரிளகல்வெண்மையென்ற பதங்களினு னீர்மூன்றுகூ ரு யிற்ரே, எ - து. குளிர்ச்சி, செஙிழ்ச்சி, வெண்மை யென்கிறபேதமொழிகளாற் சலமும் மூன்றுபிரிவாயிற்ரே:—ஒளிதவனஞ்செம்மையென்றபதங்களா லக்கினியு மொருமூன்ரூமோ, எ - து. பிரகாசம், சுடுகை, சிவப்பென்கிற பேதமொழிகளா லக்கினியு மூன்றுபிரிவாயிற்ரே:—வெளிமுதலாஞ்சகமசத்துமூடமிடனொனப்பிரித்துவிலக்கி, எ - து. ஆகாயமுதலியபஞ்சபூதவடிவாயுள்ளசகமானது, அநர்தசடதுக்கமாமென வதனை வேறுபிரித்துத்தானலவென்றதகற்றி :—வேதமெளிதறியமுரண்மொழிந்த சத்தாதியெனும்பிரமமேகந்தானே, எ-து. வேதமானதெளிதிலுணர்ந்துகொள்ளுமா றநர்தாதிக்குமாறுகக்கூறிய சச்சிதானந்தபிரமமெனத்தக்க பிரமமானது குணபேதமின்றியேகமேயாம், எ-று.

குளிர்முதலிய மூன்றும், ஒளிமுதலிய மூன்றும், சலமினையதெனவும், அக்கினியினையதெனவும் விளக்குவான்வேண்டிக் கூறவந்தசொற்பிரிவேயன்றிப் பொருட்பிரிவன்று. அதுபோல ; அசத்துமுதலியமூன்றும், சத்துமுதலியமூன்றும், சகத்தினையதெனவும், சிவமினையதென்னவும் விளக்குவான் வேண்டிக் கூறவந்தசொற்பிரிவேயன்றிப் பொருட்பிரிவன்று. உலகமானதெவர்க்குமெப்போதுஞ் சச்சிதானந்தமாகக் காண்டலின், இஃதன்று வேறு. அதாவது, பரமெனல். ஆயி னுலகமோ? அவற்றிற்கு மாறுயு வநர்தசடதுக்கமாயது, எனக்காட்டற்கு வேதமிங்ஙனங்கூறியதென்க. சோதனையிற் பஞ்சபூ

தங்களுளொவவொன்றுந் தனக்கெனச் சொரூபமொன்றின்றிக்காணுதுபோ தற்கேதென்னை. இதுகற்றோர்க்கும் மற்றோர்க்குமாதலால் சத்தெனலெங்ங னங்கூடும். கூடாததாகவே சித்தெனலும், ஆனந்தமெனலுமெங்ஙனம்பொருந் தும். பொருந்தாதாதலாற் சத்தாதியெனும்பிரமமென்றார். சத்தாதிலுன்றி னெருமையேபிரமமெனவைச் சம்மதிக்கச்செய்வான்வேண்டிப் பிரத்தியட்ச வுலகை யசத்தாதிலுன்றினெருமையெனக்காட்டவந்ததென்க.

(க - து.) அநர்தசடதுக்கவொருமையே சகமென்றாற்போல, சச்சிதா னந்தவொருமையே பிரமமெனக்கூறியதென்பது. வேதமெனிதறியவென்றத னால், அவவேதமே பலசாகைகளாலும், பலவேதுக்களாலும், பலநிஷ்டாந் ததாஷ்டாந்தங்களாலும், பலவாய வளவைகளாலும், அரிதறியவுணர்த்து மென்றுயிற்று. ஏகந்தானேயென்னும் பயனிலைக்குப் பிரமமெழுவாயாயின், சத்தாதியெனும்பிரமமென்றது; குணமேகுணியாகவேண்டும். ஆதலினேகமெ னல் பொருந்தும். சத்தாதிகுணமன்றிப்பிரமம்வேறெனல், அசத்தாதிக்குச் சகம் வேறுகாமையாற் பொருந்தாது. (கஉடு)

கஉசு - கவி. அ - கை.

[இவைபோலவின்னுமளவிறந்த பரியாயநாமகுணங்களுள,
அவற்றுட்சிலவற்றைச் சொல்லுதுமென்பதை
யிக்கவியிற்கூறுகின்றார்.

நித்தியம்பூ ரணமேகம் பரமார்த்தம் பரப்பிரம நிதானஞ் சாந் தஞ், சத்தியங்கே வலந்துரியஞ் சமஞ்திருக்குக் கூடஸ்தன் சாட்சி போதஞ், சுத்தமிலக் கியஞ்சாரா தனஞ்சீவன் றத்துவம்விண் சோதி யான்மா, முத்தம்விடு சூக்குமமென் றிவ்வண்ணம் விதிகுணங்கண் மொழியும் வேதம்.

(இ - ள்.) நித்தியம்பூரணமேகம்பரமார்த்தம் பரப்பிரமநிதானஞ்சாந் தம், எ-து. நித்தியம், பூரணம், ஏகம், பரமார்த்தம், பரப்பிரமம், நிதானம், சாந்தமெனவும்: — சத்தியங்கேவலந்துரியஞ் சமஞ்திருக்குகூடஸ்தன்சாட்சி போதம், எ - து. சத்தியம், கேவலம், துரியம், சமம், திருக்கு, கூடஸ்தன் சாட்சி, போதமெனவும்: — சுத்தமிலக்கியஞ்சாரா தனஞ்சீவன்றத்துவம்விண் சோதியான்மா, எ-து. சுத்தம், இலக்கியம், சாரதனம், சீவன், தத்துவம், விண், சோதி, ஆன்மாவெனவும்: — முத்தம்விடுசூக்குமமென்றிவ்வண்ணம் விதிகுணங்கள்மொழியும்வேதம், எ-து. முத்தம், விடு, சூக்குமமெனவு மிவ வாறேவேதமானது விதியிராகப்பரியாயநாமகுணங்களைச்சொல்லும், எ - று.

நிதானம், ஆதிகாரணம். சாதாரம், அந்தி. இவ்வண்ணம், இவைபோல்வ னவாக. இவை விதிகுணங்களாகுமெனவே, விலக்குகுணங்கள் வேறுண்டெ ன்பதுபெற்றும்.

(க-து.) பரியாயநாமகுணங்களை யிக்கவியிற்கூறினதென்பது. (கஉக)

கஙஎ = கவி. ³அ - கை.

[அதுபோலவிலக்குப்பரியாயநாமகுணங்களுள, அவற்றுட் சிலவற்றையுணர்த்துதுமென்றதையிக்கவியிற் கூறுகின்றார்.]

அசலநிரஞ் சனமமிர்த மப்பிரமே யம்விமலம் வசனு தித மசடமரா மயமசங்க மதுலநிரந் தரமகணு நிருபா கண்ட மசமனந்த மவிநாசி நிர்க்குணநிட் களநிரவ யவம நாதி யசரீர மவிகார மத்துவித மெனவிலக்கு மனேக முண்டே.

(இ-ள்.) அசலநிரஞ்சனமமிர்தமப்பிரமேயம்விமலம்வசனுதிதம், எ - து. அசலம், நிரஞ்சனம், அமிர்தம், அப்பிரமேயம், விமலம், வசனுதிதமெனவும்:- அசடமரா மயமசங்க மதுலநிரந் தரமகணுநிருபாகண்டம், எ-து. அசடம், அ நாமயம், அசங்கம், அதுலம், நிரந்தரம், அகணு, நிருபம், அகண்டமெனவும்:- அசமனந்தமவிநாசிநிர்க்குண நிட்களநிரவயவமநாதி, எ-து. அசம், அனந்தம், அவிநாசி, நிர்க்குணம், நிட்களம், நிரவயவம், அநாதியெனவும்:—அசரீரமவி காரமத்துவித மெனவிலக்குமனேகமுண்டே, எ-து. அசரீரம், அவிகாரம், அத்துவிதமெனவும்விலக்குப்பரியாயநாமகுணங்களு மின்னுமனேக முளவாம், எ - று.

அசலம், சலன்மின்மை. நிரஞ்சனம், களங்கமின்மை. அமிர்தம், அழி வின்மை. அப்பிரமேயம், அறியப்படாதது. விமலம், அழுக்கின்மை. வசனு தீதம், வாக்குக்கெட்டாமை. அசடம், மூடமின்மை. அநாமயம், நோயின்மை. அசங்கம், சங்கமின்மை. அதுலம், கனமின்மை. நிரந்தரம், இடையின்மை. அகணு, அணுவன்மை. நிருபம், ரூபமன்மை. அகண்டம், கண்டமன்மை. அச ம், பிறவிக்குடன்படாமை. அனந்தம், இறப்புக்குடன்படாமை. அவிநாசி,யாதி னுனாசியாமை. நிர்க்குணம், குணமின்மை. நிட்களம், சகளமின்மை. நிரவ யவம், அவயவமின்மை. அநாதி, ஆதியின்மை, அசரீரம், சரீரமின்மை. அவி காரம், விகாரமின்மை. அத்துவிதம், துவிதமின்மை. எனக்கொள்க.

(க-து.) விலக்குகுணப்பரியாயநாமங்களினையவென்பது. சிலபிரதிகளில், விமலமசனுதிதமெனவும், நிருமலகோசரமெனவும், நிசமனந்தமெனவும், நிரஞ் சனம்மனுதியெனவும், விதிவிலக்கமனேகமெனவுமிருக்கின்றன, அவற்றையு முய்த்துணர்க. சமஸ்தமதஸ்தரும் வஸ்துவிதிகுணத்தனென நின்றனர், அஃ தோர்பக்கத்ததாமெனக்காட்ட விலக்குகுணமும்வகுத்தனென்க. இதனையினி வருங்கவியாற்காண்க. (கஙஎ)

கஙஅ - கவி. அ - கை.

[இவ்விதிவிலக்குகுணங்க ளொருபொருட்கேயன்றி வேறுக் கன்றென விக்கவியிற்கூறுகின்றார்.].

இன்னவகை விதிவிலக்குக் குணங்கணன்றுச் சேர்த்தொருமித் தெல்லாங் கூட்டிச், சொன்னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை.யொ

ருபொருளைச் சொல்லுஞ் சொற்கள், பின்னபத மாமதனுற் சத்தாதி குணப்பொருளாம் பிரம மேக, மன்னபொரு ளொருமையறிந் தகண்டபரி பூரணமா யாவாய் நீயே.

(இ - ள்.) இன்னவகைவிதிவிலக்குக்குணங்கூணன்றுய்ச் சேர்த்தொருமித் தெல்லாங்கூட்டி, எ-து. இன்னவாறுக விதித்த விதிவிலக்குகுணங்களைச் சேர்த்தொருங்கே யனைத்தையுங்கூட்டி:—சொன்ன பொருளொன்றன்றியி ரண்டில்லை யொருபொருளைச் சொல்லுஞ்சொற்கள் பின்னபதமாம், எ - து. வேதஞ்சொல்லியிருக்கிறபொரு ளொன்றேயன்றி யிரண்டாகவில்லை, ஆதலி னொருபொருளைப்பற்றிச்சொல்லுஞ்சொற்க ளொருபொருள்குறித்தபல வே றுவகைபட்டசொல்லுகளாம்: — அதனுற்சத்தாதிகுணப்பொருளாம்பிரமமே கம், எ - து. இங்ஙனங்கூறியிருப்பதாற் சத்துமுதலாகக்கூறப்படு முக்குண ப்பொருளாவது பிரமம், அஃதேதகமாம்:—அன்னபொருளொருமையறிந் தக ண்டபரி பூரணமாயாவாய்நீயே, எ-து. அத்தகையதான பொருளினொருமை யையறிந்து, அஃதிருந்தவண்ண நீயுமகண்டபரிபூரணமா யாகுதி, வேறு சங்க ற்பிக்கற்க, எ-று.

சேர்ந்துகூடியென்றுக்கின் குணங்களெழுவாயாகவேண்டும், எழுவாயாக் கின் பயனிலையெங்கே. சொன்னவென்பதனின், குணங்கள், சொல்லுமா? கூடாதுபற்றிக் குணங்களைச்செயப்படுபொருளாக்கிச் சேர்ந்துகூடியென்னும் தன்வினைகளைப் பிறவினையாக்கிச் சொன்னவென்னும் பயனிலைக்கெழுவாய் வேண்டுமாதலால் வேதத்தைதவருவித்தாம். ஒருபொருளைச்சொல்லுஞ்சொற் கள் பின்னபதமாமென்றதனுல், ஒருபொருள்குறித்தபலசொல்லென்றும். இங் ஙனம் விதிவிலக்குகுணங்கள்கூறவந்தது, சச்சிதானந்தமேகமெனற்கன்றே? அதனுற்சத்தாதிகுணப்பொருளாம் பிரமமேகவென்றார். அறிந்தாவாய்நீயே யென்னது, அகண்டபரிபூரணமாயென்றதனுல், அஃதிருந்தவண்ணமெனவரு வித்தாம். சச்சிதானந்தமொருமையெனக்கண்டவக்கணமே யவ்வொருமையே பிரமமெனத்தானேவிளங்கும். அங்ஙனம்விளங்கல் ; நிருபாதிகமாதலின் வி யாபகவிளக்கமாம், அவ்வியாபகவிளக்கமபரிச்சின்னமாதலினேகமாம், அதுப ற்றிப் பிரமமேகமென்றதென்க. இந்நெறிசற்றுமறியார் கடவுளேகமெனலவர் போல்வரோற்பர். வஸ்துவிளங்க விதிகுணமும், அதுவுமிறக்க விலக்குகுணமும் வருத்ததென்க. எனவே, தானேதானுற்கெனப்பெற்றும். (கஙூஅ)

கஙூக - கவி, அ - னை.

[நிர்க்குணவஸ்துவிற்குக்கூறுஞ்சகுண மெங்ஙனமையுமென்ற வினவிற்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்.]

நிர்க்குணவஸ்துவின்குணங்க ளுணர்ப்பதுதாய் மலடியென னிக ழன் றுதே, சற்குணனே வஸ்துநிலை யுளாயாம லறியவல்ல சதுர

ருண்டோ, நற்குணமே தங்களிர்தச் சீவன்முத்தி பெறப்பிரம ஞானந் தோன்றச், சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களல்லபிரம மாஞ் சொரூபத்தானே.

(இ-ள்.) நிர்க்குணவஸ்துவின் குணங்களுரைப்பதுதாய் மலடியெனனி கரென்றுதே, எ-து. நிர்க்குணவஸ்துவிலுக்குக் குணங்களுரைத்தல் மலடி யைத் தாயெனற்குச் சமானமாமேயெனச் சங்கியாதுநிற்றி:— சற்குணனே வஸ்துநிலை யுரையாம லறியவல்ல சதுரருண்டோ, எ-து. சற்குணமுடை யோனே! வஸ்துநிலையினையதென வதற்குரிய குணங்களைப் பிறருணர்த்தாம ல் தாமேயுணர்ந்துகொள்ளத்தக்க வலியுள்ளமாணாக்கருமுளரோ ? இன்றே யதனால்:—நற்குணவேதங்களிர்தச் சீவன்முத்திபெறப் பிரமஞானந்தோன் றச்சொற்குணங்கள், எ-து. சச்சிதானந்தங்கள் நல்லசகுணமென வேதங் கள், இங்ஙனமாய சீவன்முத்திநிலைபெறவும், பிரமக்ஞானம் விளங்கவுஞ் சொல்லவந்தகுணங்களாம்:— பிரமத்தின்குணங்க ளல்லபிரமமாஞ்சொரூப ந்தானே, எ-து. அவை பிரமத்தினது குணங்களல்ல பிரமசொரூபமாம்,எ-று.

நிற்குணவஸ்துவின்குணங்களுரைப்பதென்பதற்கு, சகுணங்களை நிர்க் குணவஸ்துவின் குணங்களாக வுரைத்தலெனப் பொருள்கொள்ளினு மமை யும். "சுரையாழவம்மிமிதப்பவரையனைய யானைக்கு நீத்துமுயற்கு நிலையெ ன்பகானகநாடன்சுனை." என்னுங்கவியில், சுரையாழாது, அம்மிமிதவாது, யானைக்கு நீத்தாகாது, முயற்குநிலையாகாது, இவைமுறணுகையில்; சுரைமி தப்ப, அம்மியாழ, யானைக்குநிலை, முயற்குநீத்தென மொழிமாற்றிப்பொருள் கொள்ளவேண்டும். அதுபோல விங்கும், தாய்மலடியென னிகரென்றுதே யெனக்கவியிருப்பினும், குணரகிதமான வஸ்துவுக்குக் குணங்கற்பித்தல், மலடியைத் தாயென்றுற்போலும். எனப்பொருள்படுதலால், தாய்மலடி யென்பதை, மலடுதாயென மொழிமாற்றிப் பொருள்கொள்ளவேண்டும். கொள்ளாவிடில், முரணும். எங்ஙனமெனில் ; சகுணவஸ்துவினிர்க்குணங்க ளுரைப்பது தாய்மலடியெனனிகரென்றுதேயெனக் கவியிருக்கின்முரணுது, இங்ஙனங்கவியின்றேயாதலின்முரணும். சகுணமாகவஸ்துவைக்கூறுது நிர் க்குணமாகக் கூறின் வஸ்து எங்ஙனம் விளங்கும். விளங்காதுபற்றி யிங்ங னங் கூறியதென்க. சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களல்லவெனின், யாதினுலெனவருஞ் சங்கைக்குத்தரமின்றும். ஆதலினிங்ஙனமுணாகொண் டாம். சச்சிதானந்த நற்குணங்கள் வேதங்கள்சொல்லிய சகுணங்களாம். இதுவும் வஸ்துநிலைதெரிவிப்பதற்காகவென்க. இக்குணங்களே பிரமசொரூப மாதலின் பிரமத்தின் குணங்களெனின் தற்கிழமைப்பொருளதாம், பின் னுபின்னமதாம், பொருந்தாது. இக்குணங்களா லறிபடுவது வஸ்துவாயிருக் கக் குணங்களே வஸ்துவெனல் கூடாதெனின், சூரியனுக்குப் பிரகாசங்கு ணம், நமக்கக்குணமின்றிச் சூரியன்காணப்படான். எனவே, நமக்குச்சூரி யன்வேறுயினும்பிரகாசத்திற்குவேறே? அல்லவே. பிரகாசரூபமேசூரியனெ

னற்குத் தடையென்னை? அதுபோலவே யிதனையுங்கோடற்குத்தடையென் னை? இதனைவிடாத விலக்கணையாற் காணலாம்.

(க-து.) சுருதிப்பிரமாணத்தால் சச்சிதானந்த வொருமையே பிரமமெ னச் சிந்தித்துத் தெளிய வஃதே சூணநீதமாக்குமென்பது. இதனைக்கணிப் பது; அனுபவத்தாலன்றிக் கூடாது. கூடுமெனின், அவம். (கஙஙு)

கசஂ - கவி. அ - ஙை.

[சுருதிப்பிரமாணத்தா லுணர்த்தியதுபோ லிதனையுத்திப்பிர மாணத்தா லுணர்த்தவேண்டுமென விறைவலை யிக்கவியிற் கூறுகின்றார்.]

மோகவிருள் கெடக்கோடி யருணனென வருகுருவே மொ ழியக் கேளீ, ரேகபரி பூரணமா மென்சொரூப மென்னுளத்தி லிறுகும் வண்ணை, மாகமங்கள் சொன்னபடி யென்னையகண்டா ர்த்தமா வறிந்தே னையா, வுகமுமொத் திடவுரைத்தாற் பசுமரத்தி லாணிபோ லுறையு நெஞ்சே.

(இ-ள்.) மோகவிருள்கெடக்கோடியருணனென வருகுருவேமொழியக் கேளீர், எ-து. மோகாந்தகாரமொருங்கே நசிக்க வுதித்த கோடிசூரியர்களைப் போ லடியேனுக்காக வெழுந்தருளிவந்தகுருநாதனே ! இன்னுமோரையமுள தனையான்கூறக்கேட்டருளும்:— ஏகபரிபூரணமாமென் சொரூபமென்னுள த்தி லிறுகும்வண்ணம், எ-து. ஏகபரிபூரணமாகவிளங்குமெனது சொரூப மான தென்னுள்ளத்தின்கண் திரம்பெறுமாறு:—ஆகமங்கள்சொன்னபடி யெ ன்னையகண்டார்த்தமா வறிந்தேன், எ-து. சுருதிகள்கூறியமுறையே யென் னையகண்டபரிபூரண சொரூபமாகத் தரிசித்தேன் :— ஐயாவுகமுமொத்திட வுரைத்தாற் பசுமரத்திலாணிபோ லுறையுநெஞ்சே, எ-து. ஐயனே! யுத்திக்கு மொத்திருக்கும்படி தெரிவித்தாற் பசுமரத்திலறைந்த வாணியைப்போ லஃ தென்னுளத்தி லுறைந்துபோகும், எ-று.

மோகவிருள், உருவகம். மோகவிருள்கெடவருகுருவேயெனக்கொள்க. கோடியருணனென வென்பதுவமை. சிலபிரதிகளிலென்னுளத்தி லிருக்கும் வண்ணமெனவும், உறைக்குநெஞ்சேயெனவுமிருக்கின்றன. ஆகமங்கள் சொ ன்னபடி யென்னை யகண்டார்த்தமாவறிந்தேனென்பதினால், சச்சிதானந்த வொருமையைக்கண்டேனென்றாயிற்று. ஊகமுமொத்திடவுரைத்தாற் பசு மரத்தி லாணிபோ லுறைக்குநெஞ்சே யெனக்கொள்ளின், உறைக்குமென் பதுபிறவினையாதலின், அவ்வொருமையினெஞ்சமுறையும்படி செய்யுமென் றுரைகொள்ளவேண்டும். அப்போது; உவாத்தல், எழுவாய். நெஞ்சத்தை, செயப்படுபொருள். உறைக்கும், பயனிலை. தன்வினையாக்கல் அனுபூதி, எழு வாய். உறையும், பயனிலை. நெஞ்சம், ஏழாம்வேற்றுமைத்தொகை.

(க-து.) அவ்வனுபவம் யுத்திக்கெதிர்க்கத் தெரிவிக்கவேண்டுமென்பது. சுருதியுத்தியனுபவத்து ளினியுத்திவேண்டல். இங்கேயாகமங்கள், ஞானத் தைமாத்திரம் பிரதிவாதித்தலா லற்பசுருதியை யன்று பிரபலசுருதியை. அதாவது ; ஞானகாண்டமென வறிக. (கசo)

உசக - கவி. அ - கை.

[அவ்வினுவிற்கு விடைகூறுவான்வேண்டிச் சத்துஞ்சித்தும் மாறு
தினங்கிற் சச்சிதானந்தமாம், மாறப்பெறினதிர்தசட
துக்கமாம், எனவிக்கவியிற் கூறுகின்றார்.]

சத்தேசித் தாகுமய லெனிலசத்தா மசத்தாஞற் சாட்சி யெ
ங்கே, சித்தேசத் தாகுமய லெனிற்சடமாஞ் சடங்களுக்குத் திதி
யு மில்லை, யொத்தேதோன் றியசத்துஞ் சித்துநல்ல சுகமாகு மூகத்
துக்கோர், வித்தேயன் னியமாகிற் சடமசத்தாஞ் சுகானுபவம் விஞைந்
திடாதே.

(இ-ள்.) சத்தேசித்தாகுமயலெனிலசத்தா மசத்தாஞற் சாட்சியெங்
கே, எ-து. சச்சிதானந்தமென்னுமொழி; சத்து, சித்து, ஆனந்தமென
மூப்பதமாயிருக்கும். அம்மூப்பதங்களுள், சத்தேசித்தாகவேண்டும். ஆகாது
சத்துக்குச்சித்துவேறெனின், அப்போது சத்தெனலசத்தெனப்படும். அசத்
தெனப்படின், அவஸ்தாத்திரியம், காட்சித்திரியம், அபிமானத்திரியம்போல்
மாறுதுநின் றவற்றையாங்காங்கு சாட்சியாயறிவதெங்கே ? இன்றெனின்,
இதுதினவனுபவமாயிற்றே யதுகூடாது, இருந்தன்றேவறியவேண்டும், இங்
ஙனமிருந்தறிதலின், சத்தேசித்தாகுமென்பதொக்கும் :— (இதனால்) சித்
தேசத்தாகுமயலெனிற் சடமாஞ் சடங்களுக்குத் திதியுமில்லை, எ-து. சித்
தெனல்சடமெனப்படும். சடமெனப்படின், புல்லையாதியாஞ் சராசரப்பொ
ருள்களாகிய சடங்களுநித்தலுக்கும், உதித்துப்பூத்துக்காய்த்தலாகிய திதி
க்குமிடமெங்கே, இருப்பதனாலன்றே விவ்வளவு முண்டாகின்றன, இவற்
றிற்கெல்லா மாதாரஞ் சிற்சத்தியாதலின், இச்சிற்சத்தி யிருப்பதுகொண்டு,
இத்தனையு நிகழ்கின்றன. ஆதலின் சித்தேசசத்தாகும், இஃதுமுரணின்மை
யினைக்கும்:—ஒத்தே தோன்றியசத்துஞ்சித்து நல்லசுகமாகுமூகத்துக்கோர்
வித்தே, எ-து. இங்ஙனமொத்துத்தோன்றுவதாற் சத்துஞ்சித்தும் நல்லசுக
மெனப்படுவதற் கையமின்று. ஐயமின்றுமையி னிதுயுத்திக்கோர் விதை
போல்வதேயாம்:—அன்னியமாகிற் சடமசத்தாஞ் சுகானுபவம் விஞைந்திடா
தே, எ-து. நமதுமூடத்தாற் சத்துஞ்சித்து மன்னியமாகக்காணப்படுமாயின்;
சித்து, சடமாகவும்; சத்து, அசத்தாகவுமுடியும் ; முடியவே, துக்கானுபவ
மன்றிச் சுகானுபவ மெங்ஙனம் விளையும் ? விளையாது, எ-று.

இது; பாசஞ், சத்தெனவும் ; பசு, சத்துசித்தெனவும்; பதி, சத்து,
சித்து, ஆனந்தமெனவுங் கூறுமடமையை மறுத்தது. இவ்வாதம், தோற்ற

வாதமுஞ்சொல்வாதமுமேயன்றி யத்தவாதமன்று. அத்தவாதமெனின், இத்திரிபதார்த்தத்திற்கு மோர்சுயம்பேறு மோர்முதலேறு முளவாகச்சோ தனையாதிமுகத்தால் முரணின்றிக்காட்டவேண்டும்; அங்ஙனமெவர்க்கும் கூடாமையின் பொருந்தாது.

(க-து.) சச்சிதானந்தவொருமை யிங்ஙனமன்றி வேறுவகையாற்கூடா தென்பது. இதனுக்கு முறணாக வொருமைகூறுவது; அவர்போல்வாரேற்றம் கன்றி யறிஞருக்கன்று. முறணுவொருமை யருமை. தானல்லாத வுபாதிகு ணங்களைத் தொடாது தன்னைத்தான் தக்கோரா னேக்கினல்லாற் சச்சிதா னந்தவொருமை யெங்ஙனம் வாய்க்கும். வாயக்காமைக்கடையாளம், அய லைச் சச்சிதானந்த மெனல். முரணுமைக் கிடமின்று, இஃதேற்றற்பாற்ற ன்று. (கசக)

கசஉ - கவி. அ - கை.

[இன்னுமவ்வொருமையை வலியுறுத்துவான்வேண்டிச் சில
சங்கைகளைத்தானே யாசங்கித்து, அதற்குரியதக்க
விடைகளால் தானே சமாதானங்களை யிக்
கவியிற் கூறுகின்றார்.]

வியாத சத்துமுன்னம் விளங்குவது தன்னலோ வேறென்ற லோ, வாயால்வே றெனிலதுவு மசத்தோசத் தோவசத்தென் மலடி மைந்தன், பேயாகா ரியஞ்செயுமோ வசத்தெனவிப் படியதையும் பிரித்துச்சொன்னு, லோயாத வவத்தையாங் குதர்க்க விகற் பங்களை விட்டொழிந்தி டாயே.

(இ-ள்.) வியாதசத்துமுன்னம்விளங்குவது தன்னலோ வேறென்ற லோ, எ-து. என்றுமழியா தொருதகைத்தா நின்றுள்ள சத்தெனப்படுவது; பிரத்தியட்சமாகத் தான்விளங்குவது தன்னலேதானே? அல்லது, வேறெ ன்றலோ :—வாயால் வேறெனிலதுவு மசத்தோசத்தோ வசத்தேல் மலடி மைந்தன்பேயா காரியஞ்செயுமோ, எ - து. வெறுஞ்சொன் மாத்திரத்தால் வேறென்றலெனின், அந்தவேறென்றலெனப்படுவதும் அசத்தெனப்படுவ தோ சத்தெனப்படுவதோ? அசத்தெனப்படுவதெனின், மூடா! மலடிபுத் திரனேர் காரியஞ்செய்வானே? செய்வானுயினதுவும் விளக்குதும் :—அசத் தென விப்படி யதையும்பிரித்துச்சொன்னல், வியாதவவத்தையாங்குதர்க்க விகற்பங்களைவிட் டொழிந்திடாயே, எ-து. அதையுமிப்படி யசத்தெனப் பிரித்துச் சொல்லுவையாயின் மூடவுபேருதலுவன்தாதோட பலமாகமூட யுமே யிதென்னவிபரீதம், ஆதலினிங்ஙனம்ாவ குதர்க்க விகற்பங்களினின்று விலகுதி, எ-று.

ஞானமேபிரமமாதலா லிங்கேசத்தென்பது, ஞானம். ஞானமென்று மறிவென்று மொக்கும். அறிவுக்கறிவென்ப தோர்பட்சம், அறிவொன்றே

யென்பதோர்பட்சம். அறிவுக்கறிவென்பதில் ; முன்னறிவு, சிவனென வும், பின்னறிவு சிவமெனவுஞ்சொல்வர், முன்னறிவு தன்னையறிவதும், தான்விளங்குவதும், தன்னலன்று. பின்னறிவாலெனின், அந்தப்பின்ன றிவும் ; தன்னையறிவதும் தான்விளங்குவதும் வேறொன்றுலெனல்வேண் டுமே? இங்ஙனங்கூறுதல்கூடாதெனின், அங்ஙனங்கூறுதல்கூடுமோ ? முடி வுபெறுதேயெனின், அறிவுக் கறிவெனக்கூறுதொழியின் முடிவுபெறும். ஆயின், முன்னறிவு தன்னைத்தானறிவதும், தன்னல் தான்விளங்குவதுங் கூடுமோ? கூடுமெனின், நாமுமவ்வறிவாதலா லிவ்வனுபவமப்போதெங்கே? விசாரணைசெய்யிலப்போதுங்காணும். எங்ஙனமெனின்; அவஸ்தாத்திரியம் காட்சித்திரியம், அபிமானத்திரியமென்னுமிவைதிரிசியமோ, திருக்கோ ? திரிசியமெனின், எந்தத்திருக்குவுக்கு? அறிவுக்கெனின், அவ்வறிவுவொன் றே, இரண்டோ? இரண்டெனின், ஒவ்வொன்றிற்கு மெல்லவனையறையி ருக்கவேண்டுமே? இருக்கின்றதெனின், எங்கே? வியஷ்டியுபாதியளவின தொன்று, சமஷ்டியுபாதியளவினதொன்று. இதில்; சிற்றறிவு வியஷ்டியு பாதியளவினதெனின், அதுநனவிலன்றே? ஏனையவீரவத்தையிலுமெங்கே? இம்மூன்றவத்தையுந் தினமுநிலையாதுமாறும், இதையறியுமறிவுமாறுகின் றதோ? மாறுகின்றதெனின், அவவவ்வவத்தைகளையாங்காங்குநின்று சாட் சியாயறிவதெது? வேறின்றுமையி னென்றேயெனவுணர்க. நனவாகிறசாக் கிராவத்தைதோன்றும்போது, அண்டபிண்டங்கள்தோற்றும், அதுதோற் றச் சீவேசராகிற சிற்றறிவுபேரறிவுபேதந்தோற்றும், இங்ஙனந்தோற்றுவ தைத் திண்ணமெனக்கொள்ளின், இதுமாறுதேனையவவத்தைகளறிவுக்குக் காணுதிருக்கவேண்டும். அங்ஙன மனுபவ மெவர்க்குமின்றே, ஆதலினறி வொன்றேயென்க. அறிவொன்றுதலாற் சத்தொன்றேயெனவும்; அதுவே சித்தெனவும், தன்னல்தானறிவதெனவும், தன்னல்தான்விளங்குவதென வுங்கூறியதென்க.

(க-து.) சத்துக்குச்சத்துவேறின்றென்பது. உண்டெனல்மூடம். தன் னைவிட்டாய்வாருக் கயலின்பமேயன்றிச் சுயானந்தமின்றென்க. காரியஞ் செயுமோசத்தென, இங்ஙனஞ்சிலபிரதிகளிருக்கின்றன. வேறொன்றுலன் றித்தன்னல்தானிருப்பதுயாதோ? அதுசத்தெனவும், தன்னல் தன்னையுணர் வதும், தன்னல்தான்விளங்குவதுமியாதோ அதுசித்தெனவுமாம், இதனல், இருப்பதேவிளங்கலின் சத்தேசித்தெனவும், விளங்குவதேயிருத்தலின், சித்தேசத்தெனவுங்கொள்ளப்பெற்றும். பெறவே, சத்துஞ்சித்துஞ்சொற் பெதமேயன்றிச் சிறிதும்பொருட்பேதமின்றென விளங்கக்கண்டாம். கா ணவே, இவ்வொருமையே நிரதிசயானந்தமெனத்துணிதலுக்கிடமாயிற்று. ஆகவே, சுவானுபவப்பேற்றிற் கிஃதே தக்கயுத்தியென்றேற்கநின்றது. இவ் வீரண்டுவியாணும் சச்சிதானந்த வொருமைக்குத்தி கூறியவாறுகாண்க. யுத்தியெனல்; தர்க்கம், அனுமானம், யுத்தியென்னுமூன்றுமடங்கிய மனநி த்தாளொன்று. இவற்றையொக்க வாயாவிடத்து நமதுத்திக்கினியவதெங்

கூறு

ஈனம், ஐயந்திரிபின்றித்தெளிவதெங்ஙனம்? இன்றுதலாலமைதியின்றென் பதாயிற்று. ஆகவே, ஞானநூல் கற்றலெற்றிற்கு, நூலிலுள்ள யுத்திக்குச் சமாதான்ம் வேண்டுவதின்றெனின், பொய்யைமெய்யென்ற மூடனென்னுங் கவியில் ஞானமெய் யேனைய பொய்யென்னலாமரூ? மூர்த்தியாதிகளைக்கூறும் புராணமுஞ்சான்றோரும் அதையேற்போருமூடரா? இதென்னவியப்பு. பயனின்றெனக்கண்டாம். (கசஉ)

கசஈ - கவி அ - கை.

[சச்சிதானந்தவொருமையைச் சுருதியுத்தியால்விளக்கிய வாறுபோல, அனுபவத்தாலும்விளக்குதுமெனலை யிக்கவியிற்கூறுகின்றூர்.]

சுருதியுத்தி யொத்ததுபோ லனுபவமும் கேள்சுழுத்தி சுகவா னந்த மிருதிவடி வாதலினவ் வானந்த மேயறிவாம் வேறங் கில்லை கருதுபிர ளயஞ்சுழுத்தி யிரண்டிலுநீ யிருந்திருளைக் காண்கின் றுயே யிருதயத்திப் படிநோக்கி யேகபரி பூரணமா யிருந்தி டாயே.

(இ - ள்.) சுருதியுத்தியொத்ததுபோலனுபவமுங்கேள் சுழுத்திசுகவா னந்த மிருதிவடிவாதலினவ்வானந்தமே யறிவாம்வேறங்கில்லை, எ - து. முன் னர்கூறியது சுருதியுத்திக்கொத்து நின்றுற்போல, இனி யனுபவத்துக்கு மொத்துநிற்கக்கூறுதும், அதனையுங்கேளுதி. அதாவது ; சுழுத்தியிற்கா ணுஞ்சுகமானது ஸ்புரணரூபமாதலின், அவ்வானந்தமேயறிவாம், இங்ஙனமன் றியறிவாதற்கு வேறோர்நெறியங்கிருக்கையாங்கண்டிலம்:— கருதுபிரளயஞ் சுழுத்தியிரண்டிலு நீயிருந்திருளைக்காண்கின்றுயே, எ - து. எவருனினைத்தற் குரியயுகாந்தப்பிரளயம், சுழுத்தியவஸ்தையென்னுமிரண்டுகாலத்திலு நீயி ருந்துகொண்டாங்குமூடிய விவ்விருவிதவிருளையுங்காண்கின்றனையன்றே:— இருதயத்திப்படிநோக்கி யேகபரிபூரணமாயிருந்திடாயே, எ - து. இவ்வா றுனதுள்ளத்திலெக்காலத்திலும், எவ்விடத்திலுநீயிருக்கநோக்கி யேகபரிபூர ணமாகநீயிருந்திடுதி, எ-று.

தினசுழுத்தி, நனவிற்சுழுத்தியெனக்காட்டாதுபொதுப்படக்கூறியது; சுகரூபமேஸ்புரண ரூபமாகத்தடித்தலும், மீண்டுமந்தஸ்புரண ரூபமேயந்தச் சுகரூபமாகப்பெருகலு மிவ்விருசுழுத்தியிலுமாதலினென்க. ஆயிற்சுழுத்தி பேதமென்னை? ஒன்றுநனவிற்சுழுத்தி, ஒன்றுமூடசுழுத்தி. இதனுல், ஞப்தியேபிரியம், பிரியமேஞப்தியெனக்கண்டாம். இவ்வனுபவம் மூடசுழுத் தியிலெங்ஙனமெனின், நித்திரைத்தெளிவிலெழுந்தினவு சுகமாயிருத்தலினு லும், விவகாரமுடிவில்மீண்டுமுறங்குங்கால், அந்தினைவுசகத்தாகாரமுழுவித் தனிப்படும், அங்ஙனந்தனிப்படுதலேசுகப்பெருக்காம், அச்சுகப்பெருக்குக் கங்காணிநேரிடும்போது சிறியெழுதல்நினைவன்றே, அப்போதச்சுகம் கினை

வாயிருத்தலினுலுமென்க. சத்தென்பீதுவேறன்றுநீயேயெனக்காட்டப் பிர ளயஞ்சூழுத்தியிரண்டிலு நீயிருந்திருளைக்காண்கின்றுயேயெனவும், உன்னை விடப்பரிபூரணம் வேறன்றெனக்காட்ட, இருதயத்திப்படிநோக்கியேகபரி பூரணமா யிருந்திடாயேயெனவுங்கூறியவாறுகாண்க. தன்னையிங்ஙனம்விசா ரித்துத்தெளிந்தவரோ? அருள், பரிபூரணம், ஆனந்தம், ஆனந்தாதீதந்தன் னைவிடவேறென்போர். நீயேதெளிதியெனத்தன்னனுபூதிநிலையைக்குறிப்பித் தாரென்க. முந்தியனுபூதிகூறுதது; தலைதடுமாற்றமென்னுந்தந்திரயுத்தி.

(க - து.) அறிவேயானந்தம், ஆனந்தமேயறிவெனல் விசாரணைத்தெளி வில்லென்பது, ஆயின்மூடத்திலின்றுவெனின், உண்டு. விசாரியாக்குற்றமே யென்க. அறிவன்றியவானந்தமும், ஆனந்தமன்றியவறிவுமில்லை. அறிவுதா னெனலாயின், ஆனந்தய்யாது? பரமெனின், தானெனலின்றே? அதுததா காரமாயதெனின், அப்போதயலெனல் சற்றுமின்மையி னானந்தமுமயலன் றும். இதுகற்பிதபேதமன்றி யறிவானந்தபேத மென்றுமின்றும். (கசஉ)

கசச - கவி. அ - கை.

[இவனுபூதிகேட்டவக்கணமே சமாதிகூடித்தெளிந்தானெனலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமனு பவம்விடா மற், பலமலரின் மதுப்போலச் சச்சிதா னந்தமொன்றும் பரமார்த் தத்தைப், பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப் பா ர்த்த போது, பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்றுமொ ரு படமா னனே.

(இ - ள்.) பலகலையுமுணர்ந்தகுருமொழிந்தபடி யிவனுமனு பவம்விடா மல், எ - து. சகலசாஸ்திரத்தேர்ச்சியுமுள்ள சற்குருநாதன்கூறியவண்ணம் மாணாக்கனுந் தனதனுபூதி நிலையினைவிடாமல்:—பலமலரின்மதுப்போலச் சச்சிதானந்தமொன்றும்பரமார்த்ததத்தைப் பலபொழுதுங்கண்மூடிச்சமா தி யிருந்தான், எ - து. பல்மலரினின்றுசேர்க்கப்பட்டதேன்கூடுபோன்று, சச் சித்தானந்தவொருமையெனப்படுவதே பரமார்த்தமாதலால், அதனைக்காண வானக்கண்மூடிவெகு நேரஞ்சமாதியினின்றகலாதிருந்தனன்:—விழித்துப்பா ர்த்தபோது பலவடிவாஞ்சராசரசித்திரங்களெலாந் தோன்றுமொருபடமா னனே, எ - து, பின்னர்விழித்துப்பார்த்தபோது, பலவேறுவகைவடிவா யுள்ள சராசரசித்திரங்களனைத்தும் தோன்றவ்வரையப்பட்டிருக்கின்ற வொரு படத்தைப்போலத்தானுயினன், எ-று.

பரமார்த்ததத்தையென்னுஞ் செயப்படுபொருளுக்குப் பயனிலையின்றுத லால், காணவென்பதைவருவித்தாம். தனக்கன்னியமாகக்காணுது தானுகி யவியாபகவிளக்கத்திற் சராசரமாயுள்ளவனைத்தையுங்காண்டலிற் படத் தையுவமைகூறினர். படத்தைப்போ லென்னுது தானடபடமானனென்றத

ஞல், உருவகமெணினுமமையும். பரமார்த்தத்துக்குச்சச்சிதானந்தங் குண மென்பாரை மறுக்கச் சச்சிதானந்த மொன்றும்பரமார்த்தத்தையென்றூர். சமாதிவிட்டு பிரியக்கூடாமையிற் பலபொழுதுமென்பதற்குப் பலதரமு மென்பாருமுளர். சமாதியிலென்ஞறு விழித்துப்பார்த்தபோது தானெரு படமாஞனென்றதனுல், சகசசமாதியெனப்பெற்றும்.

(க - து.) தானேசமஸ்தமுமாகவினங்கினனென்பது. இங்கேயிவன்பட மாஞனென்றதனுல், விருத்திநிருட்டாந்தமெனப்பெற்றும். பெறவே, ஏனை யமூன்றுந் தானேயமையுமென லருத்தாபத்தியெனக்கண்டாம். மதுவென் பது, ஆருபெயர். பலமலரின் மதுக்கூட்டரவன்றித் தேன்கூடின்மைபோ லச் சச்சிதானந்தவொருமையன்றிப் பரமார்த்தமின்மையின், ஒருமையே வடிவாயிற்று. ஆகவே, வடிவும்பண்பாதலாற்பண்புவமை. என்னை, "பண் புந்தொழிலும்பயனுமென்றிவற்றி" னென்னும் விதியாற்காண்க. (கசஎ)

கசரு - கவி. அ - கை.

[துரியாதீதமுமேழாம்பூமியுமுக்கியமாமெனக்கூறியநிலையினையும் அதன்வகையையுந்தெரிவிக்கவேண்டுமென்று மாணுக்கன் விஞவலியக்கவியிற்கூறுகின்றூர்.]

இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே விநோதமன்றி யினிவே றுண்டோ, வதையுரைத்து மதைநினைத்து மிருப்பதன்றே ஞானிக ளுக்கான நீதி, முதலுரைத்த துரியாதீ தமுமேழாம் பூமியுமுக் கிய மா மென்ற, பதமுமதின் வகையுமெனக் கெளிதாகத் தெளியும்வண் ணம் பணித்தி டீரே.

(இ - ள்.) இதயமொத்தசற்குருவேநமக்கிதுவே விநோதமன்றியினிவே றுண்டோ, எ-து. அடியேன்மனதுக்கினையந்தெழுந்தருளியசற்குருநாதனே! நமக்குவிநோதமாயதிந்நிலையேயன்றி யிதுபோல்வதினியாவதுவேறுளதாக க்காணுமோ? இன்றுதலின்:— அதையுரைத்துமதைநினைத்துமிருப்பதன்றே ஞானிகளுக்கானநீதி, எ-து. அங்ஙனமாயவனுபூதியையுரைத்துக்கொண்டும், அதையே சிந்தித்துக்கொண்டுமிருப்பதல்லவோ ஞானிக்குக்கினையந்தவொ ழுக்கமாவது :—முதலுரைத்ததுரியாதீதமுமேழாம்பூமியு முக்கியமாமென்ற பதமுமதன்வகையு மெனக்கெளிதாகத் தெளியும்வண்ணம்பணித்திடீரே, எ-து. முன்கூறியதுரியாதீதநிலையும், ஞானபூமியிலேழாம்பூமியும், முக்கி யமாமென்றுகூறியபதமும், அதன்விபரமுமினியவென வெளிதிற்றெளிந் துகொள்ளும்வண்ண மடியேனுக்குவிளக்கியருளும், எ-று.

இதுகாறுமில்லையெனக்காட்ட, இனிவேறுண்டோவென்னும், ஏனையரு க்கன்றெனக்காட்ட, ஞானிகளுக்கான்நீதியெனவும், இந்நிலையைப்பொ துவாக, கசஉ - கவியிற்கூறியிருப்பதால், முதலுரைத்தவெனவுங்கூறினர்.

இவ்வினைக்களுக்குவிடை, கருக-முதல், கருங-கவிவனாயிற்காணலாம். முக்கியமாமென்னும்வினைக் கெழுவாய், துரியாதீதமும், ஏழாம்பூமியுமாதலாலவற்றைச்சங்கையிற்சேர்க்கப்படாது.'என்றவென்னும்வினைக்கெஞ்சியது;பதும், அதன்வகையுமாதலா லிவ்விரண்டைடப்பற்றிவிரவியதாக விக்கவிகாட்டுகின்றது. நான்கெனக்கோடற்குக் கவியினையயிற்கொள்ளலாம்.

(க - து.) மாணாக்கனிவ்விரண்டையுந் தெளிந்துகொள்ளுமாறுவினவினனென்பது. இவ்விரண்டிற்கும்விடைகூறுங்கால் தானேதுரியாதீதமும், ஏழாம்பூமியுமனமையும். உனாக்குக்கவியன்று, கவிக்குனையாதலா லிக்கவிக்கினையந்தவாறுனையெழுதினும். என்செய்தும். (கசஞ)

கசசு - கவி. அ - கை.

[இவ்வினவுக்கு விடைஞானபூமியிற்சேர்ந்ததாதலின், ஞாலஞ்ஞானபூமிகளைவிளக்காவிடில்தெரியாதெனக்கருதியிக்கவியி லஞ்ஞானபூமிகளைத்தெரிவிக்க அவற்றின்பெயர்களைக்கூறுகின்றார்.]

வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞானபூ மிகளே ழென்பா
ரினியவற்று ளஞ்ஞான பூமிகளே ழைழயுமுந்தி யியம்பக் கேளாய்
தனிவித்து சாக்கிரஞ்சாக் கிரமகா சாக்கிரஞ்சாக் கிரத்தைச் சார்ந்த
கனவுகளுக் கனவுசாக் கிரஞ்சுழுத்தி யென்றெழுபோர் கணித்தார் மேலோர்.

(இ-ள்.) வினவுமிடத்தஞ்ஞானபூமிகளேழ்ஞானபூமிகளே ழென்பாரினியவற்றுளஞ்ஞானபூமிகளேழையுமுந்தியியம்பக்கேளாய், எ-து. அதைக்குறித்துச்சொல்லுமிடத்தில், அஞ்ஞானபூமிகளேழென்றும், ஞானபூமிகளேழென்றுஞ் சத்துக்கள்சொல்லுவார்கள். இனியவ்விரண்டுபிரிவினுள்; அஞ்ஞானபூமிகளேழையு முன்னர்சொல்லுதுமதனைக்கேளுந்தி:—தனிவித்துசாக்கிரஞ்சாக்கிரமகாசாக்கிரஞ்சாக்கிரத்தைச்சார்ந்தகனவுகளு, எ-து.தனிமையாயுள்ள வித்து சாக்கிரம், சாக்கிரம், மகாசாக்கிரம், சாக்கிரசொப்பனம், சொப்பனம்:—கனவு சாக்கிரஞ்சுழுத்தி யென்றெழுபோர்கணித்தார்மேலோர், எ-து. சொப்பனசாக்கிரம், சுழுத்தியென்றிங்ஙனமேழுபோர்களையுஞ்சத்துக்கள் சொல்வினர்,எ-று. தணித்துநிற்றலின், தனியென்றார். என்பாரொன்றதனுற்சத்துக்கள் வருவித்தாம், இதுதோன்றுவெழுவாய். (கசசு)

(க-து.) வெளிப்படை.

கசள - கவி. ஆ - கை.

[அஞ்ஞானபூமியேழனுள் ஞான்குபூமிகளினியல்பையியக்கவியிற்கூறுகின்றார்.]

முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திரமதுதான் முதல்வித் தாகு
மிந்தவறி விற்பண்டில் லாவகந்தை முளைபோலா மிதுவு ளுவாம்

வந்துவந்து பிறவிதொறு மகமம்தை வளருமது மகாஈ ஞவா
ஈந்துமகங் கொடுஈனவின் மனேராச் சியஞ்செயலே ஈனைக்க லுவே.

(இ-ள்.) முந்தவகண்டத்தெழுமோரறிவுமாத்திர மதுதான்முதல்வித்தா கும், எ-து. அகண்டபரிபூரணமாகவிளங்குஞ் சுத்தசுயஞ்சைதன்னியத்தில்மு தலில் தான்மாத்திரமாக வெழுந்தஞெப்திஸ்புரிப்பெதுவோவதுவேவிந்துசாக் கிரமெனப்படும்:—இந்தவறிவிற்பண்டில்லாவகந்தை முன்னேபோலாமிதுஞவா ம், எ-து. இந்தஞெப்திஸ்புரிப்பில்முன்னென்றுமிலாத வானவமங்குரம்போ லெழும், இதுவேசாக்கிரமெனப்படும்:—வந்துவந்துபிறவிதொறு மகமமதைவ் ளருமிதுமகாஈனவாம், எ-து. அந்தவகந்தையால்யானெனதென்றுமகமமதை பிறவிதோறும் வந்துவந்து வளர்ந்துகொண்டிருக்கும், இதுவேமகாசாக்கிரமெ னப்படும்: — ஈந்துமகங்கொடுஈனவின்மனேராச்சியஞ் செயலேஈனைக்கலுவே, எ-து. அங்ஙனம் வளர்ந்துகொண்டிருக்குமகமமதைகொண்டு சாக்கிரத்தில் மனேராச்சியஞ்செய்வதே சாக்கிரசொப்பனமெனப்படும், எ-று.

மகாசமுத்திரத்திற்பரமாணுபோலெழுந்திவலேபோல்வதின், ஓரறிவென் ஞதுமிகைபடமாத்திரமெனவும், அங்ஙனம்வளர்ந்துகொண்டிருப்பதைப்பற்றி ஈந்துமகங்கொடெனவுங்கூறினர். முன்னென்றுமில்லாதறிவுஸ்புரித்தல்போ றலின், விந்துசாக்கிரமெனவும், அங்ஙனம்ஸ்புரித்தலளவாகின்றவறிவானதக ந்தையென்றங்குறம்போலாகத் தானுமதன்மயமாகக்காண்டலின், சாக்கிரமெ னவும், இவ்வகந்தைமேலீட்டாற்பிறவிதோறுமகமமதைவளரும், அவ்வகமம தைரூபமாகவளர்தல்போன்றறிவுகாண்டலின், மகாசாக்கிரமெனவும், அவ்வக மமதைமேலீட்டால் தடையின்றிமனேராச்சியஞ்புரிதல்போன்றவ்வறிவுகாண் டலின், சாக்கிரசொற்பனமெனவும்வந்ததென்க. (கசஎ)

கசஅ - கவி. அ - ஸை.

[ஏனையமூன்றுபூமினியல்பை யிக்கவியிற்கூறுகின்றார்.]

உண்டுறங்கி மனேராச்சி யஞ்செயல்சொற் பனமெனும்பே
ருடைய தாகும், பண்டுஈனைக் கண்டுமறந் தனைதமீண்டு நினைப்பது
சொற் பனஞ லுவா, மண்டுமிருண் மூடுவது சுழுத்தியா மஞ்ஞான
வகைகள் சொன்னேம், விண்டுநிறை முத்திதரு ஞானபூ மிகளே
ழும் விளம்பக் கேளாய்.

(இ - ள்.) உண்டுறங்கிமனேராச்சியஞ்செயல் சொற்பனமெனும்பேரு டையதாகும், எ - து உண்டுறங்கிமனேராச்சியஞ்செய்தலே, சொற்பனமெ ன்னும்பெயர்பெறுவ்தாம்:—பண்டுஈனைக்கண்டுமறந் தனைதமீண்டுநினைப்பது சொற்பன்ஞலுவாம், எ - து. முன்சாக்கிரத்திற்கண்டுமறந்தனை மறுப்படிய

நினைப்பதுசொற்பனசாக்கிரமாம் :—மண்மிருண் மூடுவதுசுழுத்தியாமஞ்ஞா னவகைகள்சொன்னேம்,எ-து.மிகுந்தவிருள்மூடிக்கொள்ளத்தகுவது சுழுத்தி யெனப்படுவதாம், இதுவனையிலுமஞ்ஞானபூமிபேதங்களைச் சொல்லினேம்:— விண்டுநிறைமுத்திதருஞான பூமிகளேழும்விளம்பக்கேளாய், எ-து. பரிச்சேத பேதமகன்றுபரிபூரணமாவிளங்குமுத்தியைத் தரத்தக்கஞானபூமிகளேழையு மினியாஞ்சொல்லக்கேளுதி, எ-று.

அங்ஙனமேஞராச்சியஞ்செய்தலோ டண்டுறங்குவதுபோலறிவுகாண்ட லே, சொற்பனமெனவும், முன்கண்டுமறந்ததை மீண்டுநினைப்பதுபோலறிவுகா ண்டலே, சொற்பனசாக்கிரமெனவும், நன்குறங்குங்கால் மிக்கவிருள்மூடிக்கொ ள்வதுபோலறிவுகாண்டலே, சுழுத்தியெனவுங்கூறியதென்க.

(க-து.) இத்தவஞ்ஞானபூமியேழு மத்திபாரோபமெனக்காட்டக்கூறிய தென்பது. ஆகாயமானது; காற்று, அக்கினி, நீர், மண்ணுகப்பரிணமித்தது போற்காணினும், அவற்றுல் தனக்கானிவிர்த்திநினைத்துணையுமில்லே. அது போல; சுசாதியாதிவிகற்பமின்றியவறிவானது; அஞ்ஞானபூமிகளாகிய மூல ப்பகுதிமுதல் தனுவிகுதியீருக்கிடந்த கற்பனைகளாகப் பரிணமித்ததுபோற் காணினு மவ்வவற்றி ஞனிவிர்த்தி நினைத்துணையுந்தனக்கில்லே.உள்ளதுபோ ற்காண்டலி னிங்ஙனங்கூறினனென்க. இல்லாததை யுள்ளதுபோற்கூறவந் தது; உள்ளதாகக்கருதியதைதவிலக்கற்கென்க. இல்லாததையில்லேயெனக்கூறி னெவருமேலார். அதாவது; அறிவையன்றிச்சகமென்பதில்லேயெனக்கூறுதல் போல்வது. சிருஷ்டிக்கிரமங்களாற்சகமுள்ளதாகமுடிக்கினெவர்க்குமுடன்பா டி.இங்ஙனமுடன்பாடாக யாமுங்கலந்து மெல்லமெல்லத்தளர்த்தல்வேண்டும். எங்ஙனமெனில்; உலகமும்யாமுங்கடவுள்சங்கற்பத்தாலன்றித்தோன்றச்சற் றுஞ்சுருதியுத்திகண்டிலம். ஆகவே, அந்தச்சங்கற்பம், நமக்குமூலகுக்குங்கார ணமோவன்றே? காரணமெனின், மூன்றுகாரணத்துள்யாது? துணைக்காரண மெனின், அப்போதுகடவுள்நிமித்தகாரணமாகின்றது. முதற்காரணமெங்கே? மாயையெனின், யாமாசாமாயா, என்பதற்கருத்தமென்னை? இதுமலடிமைந்த னென்றுற்போலும், எனக்காட்டி வயப்படுத்துவதெனவறிக. (கசஅ)

கசகூ - கஷி. அ - கை.

[இனிஞானபூமிகளேழையுங்கூறுவான்வேண்டி யவற்றின் நாமங்களேயிக்கவியிற்கூறுகின்றுர்.]

புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சைவிசா ரணையிரண்டாம் பூமி யாகு
நலதனுமா னசிமூன்றும் பூமிசத்து வாபத்தி நாலாம் பூமி
சொலுஞ்சமுசத் திப்பேரும் பதார்த்தாபா வனைப்பேருந் துரியப்பேரு
மனைமறு மகனேனையந் தாறேழு பூமிகளா வகுத்தார் மேலோர்.

(இ-ன்.)புலவர்புகழ்முதற்பூமிசுபேச்சைவிசாரணையிரண்டாம்பூமியாகும், எ-து.மகான்களால்மதிக்கப்பெற்றஞானபூமிகளில்,சுபேச்சைமுதற்பூமியென வும், விசாரணையிரண்டாம்பூமியெனவும்:—கலதனுமானசிலமூன்றும்பூமி சத்து வாபத்திநாலாம்பூமி, எ-து. கல்லதனுமானசிலமூன்றும்பூமியெனவும், சத்துவா பத்திநான்காம்பூமியெனவும்: — சொலுஞ்சமுசத்திப்பேரும் பதார்த்தாபாவ னைப்பேருந்துரியப்பேரும், எ-து. சொல்லாநின்ற சமுசத்தியென்னும்பெய ரும், பதார்த்தாபாவனையென்னும்பெயரும், துரியமென்னும்பெயரும்:—மலி னமறுமகனேனையைந்தாறேழு பூமிகளாவகுத்தார்மேலோர், எ-து. களங்கரகித. மானஞானபுத்திரா! ஐந்தாம்பூமியெனவும், ஆறும்பூமியெனவும், ஏழாம்பூமி யெனவும் பெரியோர்கள் வகுத்துச்சொன்னர்கள், எ-று.

சமுசத்தி, பதார்த்தாபாவனை, துரியம், இவற்றை; ஐந்தாம்பூமி, ஆறும் பூமி, ஏழாம்பூமியெனக்கூறியது, நிரணிறை. சுபேச்சை, சுபம்விரும்பல். விசா ரணை, அங்கலிங்கவிசாரணையிற்றலைப்புகல். தனுமானசி, மனஞ்சிறுகல்.சத்து வாபத்தி, உண்மையினிலையுறல். சமுசத்தி, சங்கற்பமறல். துரியம், அறிவுவி ளக்கம், என்பன. சுபம்விரும்பல், மங்களகரமாதலிலிரும்பல். அதாவது; பூர் வபட்சமாதற்கியையாதது. கல, சொலும்; இடைக்குறை.

(க-து.) ஞானபூமிகளிலுமங்கள யுணர்த்தியதென்பது. இனிவகையா தற்கிதுதாகையெனப்படும். (கசக)

கரு0 - கவி. அ • கை.

[ஞானபூமிகளினிலை யினையவெனத் தனித்தனிவிளங்க நான்கு பூமிகளோயிக்கவியிற்கூறுகின்றார்.]

நற்சங்க நிவிர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சை யாகு
நற்சங்க மொழிவினவி ஞானநூல் பழகல்விசா ரணையா கம்பி
மூற்சங்க வீடணைகள் விடறனுமா னசியிக்க மூன்றினிலுஞ்
சற்சங்க மனதிலுண்மை யறிவுதித்தல் சத்துவா புத்திதானே.

(இ-ள்.) நற்சங்கநிவர்த்திவந்து சிவஞானம்விரும்புவதுசுபேச்சையாகும், எ-து. பொருளல்லவற்றைப்பொருளாகக்கொள்ளுந் துர்ச்சங்கசார்பகன்று மேலாயஞானமாதற்குவிரும்புவதுசுபேச்சையெனப்படுவதாம்:—நற்சங்கமொ ழிவினவி ஞானநூல்பழகல்விசாரணையாம், எ - து. பொருளைப்பொருளாகக் கொள்ளுஞ் சற்சங்கத்தைத்தழுவி யவருரைக்கு மொழிகளையையமறக்கே ட்டு, இஃதொக்கஞானசாஸ்திரங்களிற் பலகாற்பழகல் விசாரணையெனப் படுவதாம்: — நம்பிமூற்சங்கவீடணைகள்விடறனுமானசி, எ - து. உண் மையெனச்சொல்லுதலா லவற்றினம்பிக்கையுற்று முன்னர் தனக்குச்சங் கமாகின்றுள்ள வீடணைத்திரியங்களை விட்டகறல் தனுமானசி யெனப்படுவ

தாம்:—இந்தமூன்றினுலுஞ் சற்சங்கமணிதிலுண்மை யறிவுதித்தல் சத்துவா பத்திதானே, எ - து. இந்தமூன்றேதுக்களாலுஞ் சற்சங்கமயமானமனதின் கீண் மெய்யுணர்வெழல் சத்துவாபத்தியெனப்படுவதாம், எ-று.

(க-து.) நான்குபூமி; சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி யென்பன. (கரு0)

கருக - கவி. அ - கை.

[ஏனையமூன்றுபூமிகளினிலே யினையவென விக்கவியிற் கூறுகின்றார்.]

தத்துவத்தின் மனமுறைந்து மித்தையெலா மறத்தல்சமுசத்தி யாகு, மத்துவிதா னந்தம்வரும் திரிபுடிபோம் பதார்த்தாபா வனையதா கும், வத்துநிலை யிருந்தபடி யிருந்தமவு னசுபா வந்துரிய மாகு, மித் துரிய பூமியைமுன் றுரியாதீ தப்பதமென் றதுவுங் கேளாய்.

(இ - ள்.) தத்துவத்தில்மனமுறைந்து மித்தையெலாமறத்தல்சமுசத்தி யாகும், எ - து. உண்மையாதோவதில்மனமானதழுந்தி மித்தையெனப்படு வனவெவையோ வவற்றையொருங்கேமறந்துவிடுதல் சமுசத்தியெனப்படு வதாம்:— அத்துவிதானந்தம்வரும்திரிபுடிபோம் பதார்த்தாபாவனையதாகு ம், எ - து. அத்துவிதானந்தோதயமா யதனல்திரிபுடிபோகத்தகுவது பதார் த்தாபாவனையெனப்படுவதாம்:— வத்துநிலையிருந்தபடியிருந்த மவுனசுபாவ ந்துரியமாகும், எ-து. பிரமவஸ்துவினிலேயெங்ஙனமிருந்ததோ வஃதிருந்தவ ண்ணந்தானுமிருக்க வதனுலெய்துமவுனசுபாவந் துரியமெனப்படுவதாம்:— இத்துரியபூமியை முன்துரியாதீதப்பதமென்றதுவுங்கேளாய், எ - து. இந் தத்துரியபூமியையே முன்னேதுரியாதீதபதமென்றுசொன்னமே யதனையு மிப்போதுயாங்கூறக்கேளுதி, எ-று.

உறைந்தென்பது, உறைத்தென்றுரியது; தன்வினைபிறவினைமயக்கம். இங்கேயுண்மையாவது; ஆன்மா. உதாரணம். "மெய்யதேதெனிற் சச்சிதா னந்தமா வியாபிக்குமான்மாவே." இன்னுமுண்மையாவது; ஞானம். சிவ மெனற்கும், ஆன்மாவெனற்கும்பொருள்; ஞானத்தையன்றிச்சோதனையில் வேறுகண்டாருளரோ? உளரெனில், உபாதிகுணந்தொழிலன்றே? இம்மூன் றையுந்தள்ளிக்காட்டவேண்டும். கூடாதெனில், ஒத்துக்கொள்வதற்குத்த டையென்னை? இதுநிற்க. சுசாதியாதிபேதமிறந்ததாதலின்ஞானத்தில்மனமு றைதற்குத்தடையென்னை? உளதேயவே, மித்தையெல்லாமறக்கவரும். மறக் கவரவே, அத்துவிதானந்தம்வரற்கும், திரிபுடியொழிவுக்கு மிடமுண்டாம். உண்டாகவே, பரமெங்ஙனமிருக்கின்றதோ வங்ஙனமிருக்கத்தானேயமை யும். அங்ஙனமாயவமைதியே, சுபாவமெனத்தக்கது. அச்சுபாவமே மக்ஷ மெள்ளனமாம்.

(க-து.) இவ்விரண்டுகவியாலு ஞானபூமியேழினிலை யினையவெனவிளக் கிறரென்பது. இங்ஙனம் விளக்கியது, இனித் துரியத்திற்கு மதீதத்திற்கு மபேதங்காட்டவேண்டியென்க. இங்ஙனம்விளக்காவிடிலெழுத்தறியார்கவி போலும். (கருக)

கருஉ - கவி. அ - கை.

[துரியமேதுரியாதீதமெனற்கு ஞானபூமியேழையுஞ் சுத்தபஞ்சா வஸ்தையாக விக்கவியிற்கூறுகின்றார்.]

மூற்புவிமூன் றினுமுலகந் தோன்றுதலாற் சாக்கிரமாம் மூன்றற் கப்பாற், சொற்பனமா மதுவுமெல்ல நழுவுமஞ்சாம் பூமியே சுழுத் தியாகு, மற்புதமாஞ் சுவானுபவ மிகுமாறும் புவிதுரிய மதற்கப் பாலோர், கற்பனையில் லாதவிட மதீதமென்று மவுனமாக் காட்டும் வேதம்.

(இ-ள்.) மூற்புவிமூன்றினுமுலகந் தோன்றுதலாற்சாக்கிரமாம், எ - து. ஞானபூமிகளில் முதலிலுள்ள சுபேச்சை, விசாரணை, தனுமானசி யென்னு மிம்மூன்றுபூமிநிலைகளைய்தினு முலகந்தோற்றிக்கொண்டிருப்பதாற் சாக் கிராவஸ்தையெனப்படும்:— மூன்றற்கப்பாற்சொற்பனமாமதுவுமெல்ல நழு வுமஞ்சாம்பூமியேசுழுத்தியாகும், எ - து. அந்தமூன்றுபூமிக்கப்பாலெய்திய நான்காம்பூமிநிலையே சொற்பனவஸ்தையெனப்படும், அந்தநான்காம்பூமி நிலையு மெல்லமெல்ல நழுவத்தக்க வவசரத்துதிக்கு மைந்தாம்பூமிநிலையே சுழுத்தியவத்தையெனப்படும்:— அற்புதமாஞ்சுவானுபவமிகு மாறும்புவி துரியம், எ - து. அவ்வைந்தாம்பூமி நிலைக்கப்பால் மிகவுமற்புதமாயுள்ள தனதுசுவானுபவநிலைதோன்றும், அந்நிலைமீக்குறலேயாறும்பூமியாகும், அவ வாறும்பூமி நிலையே துரியபதமென்னப்படும்:— அதற்கப்பாலோர்கற்பனை யில்லாதவிட மதீதமென்றுமவுனமாக்காட்டும்வேதம், எ - து. அந்தவாறும் பூமிநிலைக்கப்பா லெழுநிலையாகிய வேழாம்பூமி யாதோர்கற்பிதமு மிறந்த விடமாம், அவ்விடமேதுரியாதீதமென்று வேதமானதுசொல்லாமல்மவுனமாக க்காட்டிவிடும், எ-று.

சிவஞானம்விரும்பல், ஞான நூல்பழகல், சுடனைகள்விடல், இம்மூன்று முலகத்தைமறைக்கற்பாலதன்றுமையின், புவிமூன்றினுமுலகந்தோன்றுமெ னவும், தொக்கியிருப்பதால், நான்காம்பூமியை வருவித்தாம். ஞாலேதைய விளக்க உலகஞ்சாயாவடிவிம்போற் காணச்செய்தவின், மூன்றற்கப்பால் சொற்பனமாமெனவும், தத்துவத்திலமனமுறைந்தபோது மித்தையெனப் படுவனவற்றையெல்லாம் மறந்துபோகச் செய்தற்பாலதாதலின், அதுவு மெல்லநழுவுமைந்தாம்பூமியே சுழுத்தியாகுமெனவும், அப்போதங்கேயெ ழுமானந்தக் துவிதமிறந்ததாதலினுனும், நிரிபுடியென்பதிருத்தற் கிடமன் றுமையினுனும், அவ்வானந்தந்தெரிவுமயமாதலினுனும், அதனை, அற்புதமா

ஞ்சுவானுபவமிருமாறும்புவி துரியமெனவும், சுத்தசைதன்யமெங்ஙனமிருந்த தோவங்ஙனந்தானதலை, அதற்கப்பாலோர்கற்பனையில்லாதவிட மதீதமென் றுமவுணமாக்காட்டும் வேதமெனவுங்கூறியதென்க.

(க-து.) முன்னர்கூறிய துரியநிலையே துரிபாதீதமன்றிவேறன்றெனற் கிங்ஙனங்கூறியதென்பது. இதுவும்வேதாந்திரம். மெல்லவென்பது செய்யு ணடை, மெள்ளவென்ப துலகவழக்கம் சுகானுபவமெனினும், சுவானுபவ மெனினுமொக்கும். இது மரூஉ. பூமியுமிடமாதலா லிங்கே கற்பனையில்லாத விடமென்றதை யேழாம்பூமியாக்கினும். (கருஉ)

கருங - கவி. அ - கை.

[துரியமேதுரியாதீதமெனற்கையுரைவண்ண மின்னும் வேறுவகை யாற் சமாதானமிக்கவியிற்கூறுகின்றார்.]

துரியநிலந் தனிற்றுரியா தீதமெனின் மயக்கமென்று சுருதிமே லோ, ரரியதொரு விதேகமுத்தி யதிதமென்பா ரதுகணக்கிலாறும் பூமி, மருவுசுழுத் தியிற்காட்சி சுழுத்தியென்பா ரென்பதுநீ மனதிற் கொள்வாய், பெருமைதரு ஞானபூ மியின்விகற்ப மின்னமுண்டு பே சக் கேளாய்.

(இ - ள்.) துரியநிலந்தனிற் றுரியாதீதமெனின் மயக்கமென்று சுருதி மேலோரரியதொருவிதேகமுத்தியதிதமென்பா ரதுகணக்கிலாறும்பூமி, எ-து. வேறென்னுதுதுரியபூமியில்தானே துரியாதீதமெனக்கூறின் ஐயமெய்துறுமெ று பிரபலசுருதியில்வல்லசான்றோர், அறிதற்கரியவொப்பற்றவிதேக முத்தி யெனப்படுவது துரியாதீதமெனக்கூறுவர், அங்ஙனங்கூறப்படுவதும் ஞானபூ மியேயென்னுங் கணக்கிலாறும்பூமியெனப்படுவதாம்:—மருவுசுழுத்தியிற்கா ட்சிசுழுத்தியென்பாரென்பது நீமனதிற்கொள்வாய், எ-து. ஆயினேழாம்பூமி யோ, அங்குள்ள சுழுத்திசம்பந்த மில்லாதவறிதுயிலென்பர், என்றவர்கள் கூறுவதையு முன்மனதிற்கொள்ளுதி:— பெருமைதருஞானபூமியின்விகற்ப மின்னமுண்டுபேசக்கேளாய், எ-து. யாவற்றினுமிக்கவுயர்வுதரத்தக்க ஞான பூமிகளின் விகற்பங்களின்னுமுண்டு, அதனை யாங்கூறக்கேளுதி, எ-று.

அதுவுமென்பதிலும்மை தொக்கது. அதுகணக்கி லாறும்பூமியென்றத னால், முன்கவிப்படிதுரியமென்றுரையிற்று. ஆகவே, துரியமேதுரியாதீதமெ னக் குறிப்பித்ததாகக்கண்டாம். ஆறும்பூமி துரியாதீதமாகவே, யேழாம் பூமியோ வென்றும். அவவேழாம்பூமி துரியாதீதத்துக்கு மேலிட்டதெனத் தோன்ற, மருவுசுழுத்தியிற் காட்சிசுழுத்தியெனற்குச் சுழுத்தியாயினுமூட மல்லாததால் சுழுத்திசம்பந்தமில்லாத வறிதுயிலென வுரைகொண்டாம். இல்லென்பது வினைத்தொகையாதலி னியல்பாயிற்று. என்பதுமென்றதிலு ம்மை, இறந்ததுதழீஇயவெச்சவும்மை. அதீதமெனிற்போதுமே மேல்றிதுயி

லென்றது; மிகைபடக்கூறலென்னுங்குற்றமாமேயெனின், அறிதுயிலாவது; எல்லாமறிந்துமெல்லாமறியாதது. துரியாதீதமாவது; எல்லாமறியாதது. ஆயின் மூடசுழுத்தியினுமதீதஞ் சிறந்ததென்றதென்பற்றியெனின், தத்துவ விசாரத்தெளிவு காரணமாகவந்ததாதலினென்க. எல்லாமறிந்துமறியாததி லென்சிறப்பெனின், மூடமுமன்று, தெளிவுமன்றென்னலெப்பற்றியென்க. சத்துக்களேழாம்பூமியைக் காட்சிசுழுத்தியென்பரெனமுடிக்க. ஏழாம்பூமியி னைசயெச்சம். துரியம், சீவன்முத்தி. துரியாதீதம், விதேகமுத்தி. எனவே, துரியமேலீடேதுரியாதீதமெனற்கு, கணக்கிலாறும்பூமியென்றார். துரியமே துரியாதீதமெனின்மயக்கமுறுமேயெனின், சுருதிமேலோர்விதேகமுத்தியே துரியாதீதமெனக்கூறலாமா ? அதுவு மேற்கவியிற்கூறியகணக்கி லாறும்பூமியென்னலாமா? அங்ஙனம்பிரபலசுருதிகளிருப்பதாற் கூறலாமெனின், இதுவுங்கூறலாம். ஆதலினையமென்னை. எனவே, சுருதிசம்மதமிங்ஙனமிருப் பதுபற்றிக்கூறலாமென்க. இதுகூடாதெனின், அதுவுங்கூடாது. அதுசான் றோராட்சியாதலா லிங்ஙனங்கூறினரென்க. இன்னும், மருவுசுழுத்தியிற்கா ட்சிசுழுத்தியென்பதற்கு, பிரபலசுருதிகளில்மருவிய சீவசுழுத்தி, சிவசுழுத் தி, பரசுழுத்தியெனப்படுஞ் சுழுத்திபேதங்களி லேழாம்பூமிகாட்சிசுழுத்தி யெனப் பொருள்கூறினு மையமின்றியமையும். இங்ஙனமுரைகொள்ளினே ழாம்வேற்றுமையாதலா லகரம் றகரமாகத்திரியலாம்.

(க - து.) சுருதிசம்மதம்போல மகான்கள்சம்மதமு மிங்ஙனமிருத்த லின் துரியநிலந்தனிற்றுரியாதீதமெனல் பொருந்துமென்பது. இங்ஙனங்க விகோக்கறியா ருரைவேறென்பர். இதனுற் கவிவேறுகூறா, கவிக்கிலக்கணம் வேறுகுமா ? இதெல்லாந்தோன்றுமை. (கருசு)

கருசு - கவி. அ - ரை.

[இந்தஞானபூமிகளையடைந்தோ ரவசரகாமகங்களை
யிக்கவியிற்கூறுகின்றார்.]

முன்னிலங்க ளேறியமு வருமப்பி யாசிகளா முத்த ரல்லர், பி ன்னிலங்கள் வரன்வரியான், வரிட்டனெனுஞ் சீவன்முத்தர் பேதமா குஞ், சொன்னகடப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாந்தாய முத்த, ரின்னமுமப் பூமிகளின் பெருமைதனை நீயறிய யான்சொல் வேனே.

(இ - ள்.) முன்னிலங்களேறியமூவரு மப்பியாசிகளாமுத்தரல்லர், எ - து. முதலிலுளள சுபேச்சை, விசாரணை, தனுமானசி யென்னுமூன்றுபூமி களி லேறிவந்தமூன்றுபேரு மப்பியாசிகளன்றிச்சீவன்முத்தரல்லர்:—பின னிலங்கள்வரன்வரியான் வரிட்டனெனுஞ்சீவன்முத்தர்பேதமாகும், எ - து. கடையிலுள்ள வைந்தாநிலத்தேறியோன்வரன், ஆறுநிலத்தேறியோன்வரி யான், ஏழாநிலத்தேறியோன் வரிட்டனெனக்கூறப்படுவர். இதுதான்சீவன்

மூத்தர்பேதங்களாம்:—சொன்னதுப்பூமிவந்த ஞானியேபிரமவித்தாந்தூய முத்தன், எ-து. இப்போதுசொல்லிவந்தபூமிகளில் நடுவாயுள்ள நாலாநிலத்தே றிவந்தஞானியே, பிரமவித்தென்னும்பரிசுத்தசீவன்முத்தனெனப்படுவோரு ம்:—இன்னமுமப்பூமிகளின்பெருமைதனை நீயறியயான்சொல்வேனே, எ-து. இந்தன்றியுமின்னுமந்தஞானபூமிகளின் மகிமையைநீசெவ்விதாகவுணர்ந்து கொள்ளுமாறு யான்சொல்லுவன்கேளுதி, எ-று.

முன்னிலம், பின்னிலம், நடுப்பூமி, என்றதனால், முன்னிலம்; விசாரணை, தனுமானசியெனவும், பின்னிலம்; சமசத்தி, பதார்த்தாபாவனை, துரியமெனவும், நடுநிலம்; சத்துவாபத்தியெனவும்பெற்றும். முன்னிலங்களென்பதினு னும், மூவ்ருமென்பதினுனும், பன்மைபற்றி மூன்றுநிலமெனக்கண்டாம். மூவ ருமென்பதினும், பின்னிலங்களினுமில்லாமையால், ஒருமைபற்றி நடுப்பூமி வந்தஞானியே பிரமவித்தாந் தூயமுத்தனென்றும். வரன், வரியான், வரிட்ட னெனு மூவனைப்பற்றிச் சீவன்முத்தனெனப்பலர்பாலாக்கினரன்றி; வரர், வரி யார், வரிட்டனெனவொவ்வொன்றையும் பலர்பாலாக்கவில்லை. ஆதலின், பிரமவி த்தாஞானியே தூயமுத்தனெனவொருமையாக்கினும். முன்னிலங்களேறிய வென்றதனால், பின்னிலங்களேறிய நடுப்பூமியேறிவந்தவென்றும். மூவருமுத்த ரல்லனென்றதனால், ஏனையர்முத்தராமென்றுரையிற்று. முதல்மூன்றுபூமியு மப் பியாசமெனவே, ஏனையபூமிக ளாரூடமென்றுரையிற்று. இதனால்ஞானபூமிகள் போல் பூமியின்றெனக்கண்டாம். (கருசு)

கருரு - கவி. அ - கை.

[முதற்கண்ணுள்ளமூன்றுபூமிசெய்யுமகிமையும், முதற்பூமியி னருமையு மிக்கவியிற்கூறுகின்றார்.]

நாலாம்பூ மியின்வருமுன் மூன்றுபூ மியுமடைந்து நடந்து மாண் டோர், மேலான பதமடைந்து பிறந்துமெல்ல மெல்லவந்து வீடு சேர் வார், மாலான பவத்தில்வீழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்தமை ந்தர், காலானமுதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே.

(இ-ள்.) நாலாம்பூமியில்வருமுன்மூன்றுபூமியு மடைந்துநடந்துமாண் டோர், எ-து. நாலாவதானஞானபூமிக்குவருமுன்னரே மூன்றுபூமியுமடை ந்து, அவற்றில்வழுவின்றி நடந்துவருகையிற் பிராரத்துவநீக்கத்தாலிறந் தோர்:—மேலானபதமடைந்து பிறந்துமெல்ல மெல்லவந்து வீடுசேர்வார், எ-து. பதவிகளில்மேலாயதைப்பலருகவடைந்து, பந்தசென்மமல்லாதவிடு திசென்மமெடுத்துக் குழந்தைபோல்மெல்லமெல்ல ஓவ்வொருபூமியா கத்தவழ்ந்துகடந்துவந்து, ஐக்கியமுத்தியடைவார்கள்: — மாலானபவத்தில் வீழார் முதற்பூமிகிடைப்பதுவேவருத்தமைந்தர, எ-து. ஞானபுத்திரர்! இவர்

கள்பிராந்திரூபமானபந்தசென்மத்தி லொருக்காலுஞ்செனியார், இங்ஙனமி ருக்க, இதில்முதற்பூமிகிடைக்கிறதேதவெகுவருத்தாமகுமே: — காலானமுத ற்பூமிகைவந்தால் முத்தியுங்கைவந்ததாமே, எ - து. அஸ்திபாரம் போல்வ தாகிய முதற்பூமி யொருவேளைகைகூடுமொரு லப்போதே முத்தியுங்கைகூடி னதாம், எ-று.

நடவாநிற்கவென்பது; நடந்தென்றது, காலமயக்கம். அங்ஙனமாயஞான ஞஷ்டானஞ்செய்துகொண்டிருக்கும்போது தேகநழுவினு மின்னுமவவஞஷ் டானஞ்செய்துமுடித்தற் கியைந்ததேகம்வரும். வரவே, அதனைமுடித்து, அப் பால்செய்துமுடித்தற்குரிய ஞானஞஷ்டானஞ்செய்யவேண்டிவரும். இம்மு றையேமுடிபுவனாயினுஞ்செய்துவரும்போது, இடையிடையேதேகநழுவும், நழுவினுமஞஷ்டானம்விடாமற்செய்துமுடித்தல், மரபும், அனுபவமுமாதலி னிங்ஙனங்கூறினொன்க. இதனையிவவுலகில்தானே காணலாம். இங்ஙனமாய சிந்தையிலார்க் கெங்ஙனங்காணப்படும். அந்தந்தமுயற்சியுடையோருக்கு, அததுதெரியுமன்றி மற்றெங்ஙனந்தெரியும். நழுவியசென்மமீண்டும்வருமாவெ னின், அதுவராவேணுந்தானியற்றிவந்த கன்மபேதவவசரநிலைகள்பற்பலபே தமாதலின், அவவவற்றிற்கியைந்தபலனும், பற்பலபேதவவசரபேதங்களாயிரு க்குமன்றே? அப்பலனையனுபவித்தாலன்றித்தீருமோ, தீராதுபற்றிச்சென் மம்வரவேண்டியதன்றே? வராவிடின், உயிர்களவாவடங்கற்கேதென்னை, அ ங்ஙனமவாவி விநிவிலக்குகட்ககலாது கன்மம்புரிவதற்கேதென்னை? வேண்டு வதின்றேல், உயிர்களொரோபிரகாரமாகவல்லாது பற்பலபேதவவசரபோகங் களை யவவவற்றிற்குரிய தனுகரணபுவனங்களைச் சாதனக்கருவியாக்கொண் டெதிரிலனுபவித்தற்கேதென்னை? அனுபவிப்பதால், மறுத்தற்கேதென்னை? அவாவற்ற வுயிர்களில்லை. அந்தவவா; பந்தம், விதியென்பவற்றுளொன்றன் பாலதாயிருக்கும். பந்தவவாகாமியத்தவத்தாலும், விதியவா; நிட்காமியதவ த்தாலுங்காணப்படும். பந்தவவா; தனக்கயலைச்சுகித்தற்பாலது. விதியவா ; தன்னைத்தான் சுகித்தற்பாலது. இவவிருவகையுமுலகிற்காண்கின்றேம். யாது தடுக்கினும், அனுபவத்தைதத்தடுக்கலாமா? உயிர்கட்கனுபவமொருதகையதாவி ன்றே, இன்றுதலாலொத்துக்கொள்ளவேண்டும். இதனையுமறுக்கில், குதர்க்க த்திற்சேர்க்கப்படும். மனதின்றேல், விளுவுதற்கிடமின்றிவிடைதரவேண்டும். கூடாதேல், வாய்பொத்திக்கிடக்கைகண்குமதிப்பு.இதனைச்சுருக்கியுரைத்தாம். விரிக்கிற்பெருகும். இதுநிற்க.

(க-து.) ஞானபூமிகளின்பெருவமையுமருமையுங்கூறியதென்பது. முதற் பூமிகைவந்தால் முத்தியுங்கைவந்ததாமேயென்றது, காலமயக்கம். இது;உரை யளவையாலும், காட்சியளவையாலு மிவற்றிற்கிலைகாரணமாகத்தெளிந்த மையின் தெளிவாயிற்று. மலானபலம், பந்தகன்மத்துக்கியைந்தசென்மம். பிற க்தென்றது; இங்கேவிதிகன்மத்துக்கியைந்தது. (கருரு)

கருசு - கவி. அ - கை.

[இத்தஞானபூமிகளிலொன்றையேனு மிரண்டையேனுமெய்தி
னேன் மிக்கவிழிஞனேனும், சீவன்முத்தனே
யென்பதையிக்கவியிற் கூறுகின்றார்.]

இப்புவியி லிஞ்ஞான பூமியொன்றி லிரண்டிலடைந் திருந்தா ராஞ
லப்புருடர் மிலேச்சரா கிலுமுத்தர் குருபாதத் தாணை மெய்யே
தப்புனையென் றவர்கெடுவார் நடுவான மறைகளினீ சங்கியாதே
செப்புமொழி வழிதிடமா யகம்பிரம மென்றிருந்து தெளிந்தி டாயே.

(இ-ள்.) இப்புவியிலிஞ்ஞானபூமியொன்றி லிரண்டிலடைந்திருந்தாராஞ
ல், எ-து. இவ்வுலகின்கண் இந்த ஞானபூமிகளேழெண்களு ளொன்றிலேனு
மிரண்டிலேனுஞ்சேர்ந்திருப்பாராயின்:— அப்புருடர்மிலேச்சராகிலுமுத்தர்
குருபாதத்தாணைமெய்யே, எ-து. அந்தப்புருடர்கள்மிக்கவிழிஞராயினுஞ்சீவன்
முத்தர்களே யிதிலையஞ்சற்றுங்கொள்ளற்க; இது குருபாதத்தாணைப்படிசத்தி
யமே:—தப்புனையென்றவர்கெடுவார் நடுவானமறைகளினீசங்கியாதே, எ - து.
இவ்வளவாணையிட்டு மிதுதப்பார்த்தமென் றிதனைச்சற்றுமேலாரினியென்று
மீளாதுகெடுவர். ஞானஞ்ஞானங்களுக்கு நடுநிலையாயுள்ள வேதவாக்கியங்க
ளைப்பற்றி நீவிபரீதமாகச்சங்கைசெய்யாதே:—செப்புமொழிவழிதிடமா யகம்
பிரமமென்றிருந்துதெளிந்திடாயே, எ-து. இதுவரையுங்கூறிவந்த வுபதேச
மொழிவழியேயுறுதியாகநின் றகம்பிரமமெனச்சிந்தித்திருந்துதெளிதி, எ-று.

பெரும்பாலும்பெரும்பாலும்பெரும்பாலும்

இல்லாளுங் குடும்பம்விட்டுச் சக்கியா சம்புகுந்தே காங்கி யாளே ரல்லாமன் முத்திபெறு மென்றுசிலர் சொலுமயக்க மகற்று வீரே.

(இ-ள்.) பொல்லாதமிலேச்சருக்கும் விதேகமுத்திதருஞானபூமியென் று, நெல்லாகிமுளைக்குமெனைத் தண்டலைமாக்கியகுருவேநீர்சொன்னீரே, எ-து. நெல்போன்றுமுளைக்கின்ற வடியேனை யரிசிபோன்றுபதமாக்கியசற்குருவே! கொடியபாதகருக்கும் ஞானபூமியானது; விதேகமுத்தியைத்தருமென்று தே வரீர்சொன்னீரே யதுவேசரியென்றுகொள்ளின்: — இல்லாளுங்குடும்பம்விட் டுச் சந்நியாசம்புகுந்தேகாங்கியாளேரல்லாமல், எ-து. மனைவியோடுகூடியா ளுகின்ற குடும்பத்தைப்பற்றிவிட்டுச் சந்நியாசவாசீர்மத்திற்புக்கு, ஏகாங்கி யாளாகவோ வவரேயல்லாமல்:—முத்திபெறுமென்று சிலர் சொலுமயக்கம கற்றுவீரே, எ-து.ஏனையோரெவ்வண்ணத்தராயினுமுத்தியடையார்களென்று சிலர்சொல்லிக்கொள்ளுகின்ற பெரியமயக்கத்தைநீக்கியருளவேண்டும், எ-று.

இங்கேகொல்லென்பது, பதரோடபேதமாயவரிசியை. எனவே,முளைத்தற் கிடம்பெறுமாறுபோன்று பிறவிக்கிடம்பெறுமாறென்றுயிற்று. இல்லாளோடு கூடியாளுங்குடும்பமெனவே, தாய்தந்தைமக்கள் சகோதரர் பாட்டன்பேரன் முதலியோராப்பெற்றும். மயக்கம், தெளிவின்மை. அதாவது; எங்கே குடும்ப க்கலக்க மின்றோ, அங்கே ஞானம் பலிக்குமன்றி யேனையிடத் தெங்ஙனம் பலிக்குமென்பார்சிலர். எவவருணத்தாரொத்திறத்தாராயினும் பூர்வசமஸ்கார த்தாற் பரிபாகிகளாயில் பலிக்குமென்பார்சிலர். இவற்றுள்யாதினுந்துணிவுறு மை. மிலேச்சனென்னது பொல்லாதவென்றடைகொடுத்ததினால், ஏகாலிபா தகனென்றுயிற்று. சீவன்முத்திதருமென்னது விதேகமுத்திதருமென்றது, ஞா னபூமியின்மகிமைமேதான்றவென்க.

(க-து.) துணிபுமேதான்றவினவியதென்பது. (கருஎ)

கருஅ - கவி. அ - கை.

[அதற்குவிடைகூறுவான்வேண்டித் துறவுநூல்வகையென வவற்றிணமங்கனை யிக்கவியிற்கூறுகின்றீர்.]

சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்த சங்கைகன்று தெரியக் கேளாய்
கட்டழியுந் துறவுநால் வகையாகு மவைகளுக்கங் காகும் பேர்கள்
பட்டதுயர் கெடுங்குடீ சகம்பகூ தகம்ஹம்சம் பரமஹம்சம்
விட்டகலுந் துறவுக்கு வீராகங்கா ரணமன்றி வேடமன் றே.

(இ - ள்.) சிட்டர்புகழ்மகனேநீ சங்கித்தசங்கைகன்றுதெரியக்கேளாய், எ-து. சற்சனரால்மதிக்கப்பெற்றஞானபுத்திரா! நீகேட்டகேள்விமிகச்சிறப்பு டையது, அதுதெரியக்கூறுது மதனைக்கேளுநீ: — கட்டழியுந்துறவுநால்வ

கையாகு மனைகளுங்கங்காகும்பேர்கள், எ-து. பந்தக்கட்டழியத்தக்கசந் நியாசத்துவ ரான்குவகையாயிருக்கும், அவைகளுக்காங்காங்குவரும்பெயர் களோ: — பட்டதுயர்கெடுங்குடீசகம் பகூதகம்ஹம்சம்பரமஹம்சம், எ-து. பிறவிதோறும்பட்ட துயரநசிக்கத்தக்கீ குடீசகம், பகூதகம், ஹம்சம், பரம ஹம்சம், எனநான்குவகையாகும்:—விட்டகலுந்துறவுக்கு விராகங்காரணம ன்றிவேடமன்றே, எ - து. பந்தத்தைவிட்டுநீங்கத்தக்க சந்நியாசத்துக்குநிரா சைகாரணமேயல்லாமல் வேஷங்காரணமல்லவே, எ-று.

ஆசைநீக்கத்துக்குச் சந்நியாசவேடமடையாளம். அது நீங்காவிடத்து வேடத்தாற்பயனென்னை. பெருமைக்கும், உணவுக்குமன்றே. மிகக்கற்றுச் சந்நியாசத்தை நிலையுறுத்துவதாற்பயனென்னை. இன்றென்பதுதோன்றத் துறவுக்குவிராகங்காரணமன்றி வேடங்காரணமன்றேயென்றார்.

(க - து.) சந்நியாசநான்குவகைக்கும் பெயரினையவென்பது. இங்ஙன ங்கூறியது, விராகத்தைநோக்கற்கு. விராகமில்லார்வேடம் பசையற்றதென்க.

(கருஅ)

கருகூ - கவி. அ - கை.

[அந்தவிராகம்மூன்றுவகையாமென விக்கவியிற்கூறுகின்றார்.]

மந்தமுந்தீ விரமுந்தீ விரதரமு மெனமூன்று வகைவி ராகம் வெந்துயரம் வரும்பொழுது குடும்பத்தை வெறுத்துவரும் விராகமந்த மிந்தவுட லளவுமனை தனம்வேண்டா மெனவிடறீ விரமென் பார்க ளந்தணர்நூன் மித்தையென விடலதுதீ விரதரமா மறிந்தி டாயே.

(இ - ள்.) மந்தமுந்தீவிரமுந் தீவிரதரமுமென மூன்றுவகைவிராகப், எ-து. மந்தம், தீவிரம், தீவிரதரம், எனவிராகம்மூன்றுவகைப்படும்:—வெந் துயரம்வரும்பொழுது குடும்பத்தைவெறுத்துவரும்விராகமந்தம், எ - து. மிகக்கொடியதுயரநேரிட்டபோது குடும்பத்தைவெறுத்துவிடற்கெழும் விரா கம்மந்தமெனவும்: — இந்தவுடலளவுமனைதனம்வேண்டாமென விடறீவிர மென்பார்கள், எ - து. இத்தேகமுள்ளளவு மனைவிதனமாதிகள்வேண்டாமெ ன் றவற்றைவிட்டகலல்தீவிரமெனவும்:—அந்தணர்நூல்மித்தையென விட லதுதீவிரதரமா மறிந்திடாயே, எ-து. பிராமணர்களனுட்டிக்கத்தக்க நூலா கியகன்மகாண்டத்தை மித்தையெனக்கையறவிட்டுவிடுநிலையாதோ வது தீவிரதரமெனவுமாம், இதனைநீதெரிந்துகொள்ளுதி, எ-று.

குடும்பத்தில்தோடதிஷ்டியெழலாகியவிராகம், மந்தம். இதுகாரணமாக மனைவியாதிகளையொருங்கேவிட் டகலலாகியவிராகம், தீவிரம். ஒருங்கே விடல்காரணமாக ஞானகாண்டத்தையனுட்டிக்கவேண்டிக் கன்மகாண்டத்தி லெமந்தோடதிஷ்டியாகியவிராகம், தீவிரதரம் என்க. வெறுத்தவரும்

விராகமென்பது, வெறுத்துக்கொண்டுவரும்விராகத்தை. வெந்துயரம்வரும் பொழுதெனவே, வராதபோது விராகந்தோன்றற்கிடமின்றுயிற்று. இடமின்றுகவே, மந்தம், தீவிரம் தீவிரதரமென்றபெயர்வருதற்கிடமென்னை. இன்றுகவே, அறத்துளொன்றுகியதுறவறமென்றதேயில்லை. இல்லையாகவே, ஞானநூலென்பதெற்றிற்கெனப்பெற்றும்.

(க-து.) நிராசையேதுறவென்பது. வேடமுமம்துண்டாயிற்சிறக்கும். ()

ககூ0 - கவி. அ - கை-

[அம்மூன்றுவகையில் மந்தமுந்தீவிரமுமினையவென
விக்கவியிற்கூறுகின்றுர்.]

பாவிமந்த விராகத்திற் சங்கியா சங்களொன்றும் பலித்திடாதே
தீவிரத்திற் குடுசகமும் பகுதகமு மென்றிரண்டு திறங்க ளுண்டாங்
காவிரடந் திடத்திடமி லாதவர்க்குக் குடுசகமுஞ் சகங்க ளெங்கு [ர்.
மேவிரடந்திடத்திடமுள்ளவர்க்குபகு தகமுமென விதித்தார்மேலோ

(இ - ள்.) பாவிமந்தவிராகத்திற்சங்கியாசங்க ளொன்றும்பலித்திடா தே, எ - து. கொடியமந்தவிராகத்தைச்சார்ந்த சங்கியாசநிலைகளிலொன் றேனும்பலிக்கமாட்டாது: — தீவிரத்திற்குடுசகமும்பகுதகமு மென்றிரண்டு திறங்களுண்டாம், எ - து. தீவிரவிராகத்தில்குடுசகம், பகுதகமெனவிரண்டு பாகுபாடுகளுள: — காவிரடந்திடத்திடமிலாதவர்க்குக்குடுசகமும்; எ - து. அவற்றுள், கொஞ்சதூரந்தாவிரடக்க வலியில்லாதவர்க்குக் குடுசகமென வும்: — சகங்களெங்குமேவிரடந்திடத் திடமுள்ளவர்க்குப் பகுதகமுமென விதித்தார்மேலோர், எ-து. உலகிலெத்தேசத்தின்கண்ணுஞ்சென்று, அப்பா லப்பால்தாவிரடக்கவலியுள்ளவர்க்குப் பகுதகமெனவும்பெயர்விதித்தன ரறி விற்சிறந்தசத்துக்கள், எ-று.

மந்தம்; விராகம்போற் சொல்லாலும், அபிநயிப்பாலுங்காண்டலேயன் றிவேறின்மையி னதனைக்காண்பாரவனைமெய்யெனநம்பிவிடுவர், அதனாலவ ர்கரவிற்போகநுகர்தற்கிடமுண்டாம், இதுபற்றிப்பாவிமந்தவிராகத்திற் சங் நியாசங்களொன்றும்பலித்திடாதென்றுர். மீண்டுமவ்வூர்களிற்செல்லாவண் ணங் தினமொன்றிற்கேழூர்: சுற்றலென்னுமவிதியிருப்பதாற் சகங்களெங்கு மேவிரடந்திடத் திடமுள்ளவர்க்குப்பகுதகமெனவும், அங்ஙனரடக்கத்திட மற்றவர்க்குக் குடுசகமெனவும்பெயர்வந்தமைகாண்க. இங்ஙனஞ்சுற்றல்பற் றனுகாமைக்கு.

(க-து.) மந்தவிராகசங்கியாசங்கள் பயனின்றெனவும், தீவிரவிராகப்பா குபாடாகிய விரண்டுவிதசங்கியாசங்களினையவெனவுங்கூறியதென்பது.

ககூக - கவி. அ - கை.

[தீவிரதரவிராகப்பாகுபாடாகிய விரண்டுவிதசந்நியாசநிலைக.

இருவகைதீ விரதரத்து மம்சனென்றும் பரமாம்ச னென்றுஞ் சொல்வார், வருமம்ச னுக்குமுத்தி சத்தியலோ கத்தன்றி வாரா தென்பார், பரமாம்ச னுக்குமுத்தி யிவ்வுலகின் ஞானத்தாற் பலிக்கு மென்பார், திரமருவும் பரமாம்சன் றானுமிரு வகையாகுஞ் செப்பக் கேளாய்.

(இ - ள்.) இருவகைதீவிரதரத்துமம்சனென்றும் பரமாம்சனென்றுஞ் சொல்வார், எ - து. தீவிரதரமிருவகைப்படும். அங்ஙனமாயதீவிரதரத்துமவ விருவகையையும், அம்சனென்றும் பரமாம்சனென்றுஞ் சத்துக்கள்சொல் வார்கள்: — வருமம்சனுக்குமுத்தி சத்தியலோகத்தன்றி வாராதென்பார், எ - து. சந்நியாசவிதி வழுவாதுநடந்துவருமம்சசந்நியாசிக்கு மோட்ச மானது பிரமன்வசிக்குஞ்சத்தியலோகத்தெய்தினலன்றி யிம்மையில்வரா தென்றுசொல்வார்கள்:—பரமாம்சனுக்குமுத்தி யிவ்வுலகில்ஞானத்தாற்பலிக் குமென்பார், எ-து. பரமாம்சனுக்குமோட்சமானது, இம்மையிற்றானே ஞான த்தாற்கிடைக்குமென்றுசொல்வார்கள்: — திரமருவும்பரமாம்சன்றானு மிருவ கையாகுஞ்செப்பக்கேளாய், எ - து. நிலைபெற்ற பரமாம்சசந்நியாசனுமிரு வகைப்படுவன், அவற்றையாஞ்சொல்லக்கேளுதி, எ-று.

வருமென்பதினால், சந்நியாசநூல்களின் விதிவழுவாதுநடந்துவருமெ ன்றும்.

(க-து.) தீவிரதரத்தினிருவகை சந்நியாசநிலைகளினையவென்பது. (ககூக)

ககூஉ - கவி. அ - கை.

[பரமாம்சமிருவகையாமென்ல யிக்கவியிற்கூறுகின்றார்.]

சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர்களவ ரிற்சிஞ் ஞாசு, மெய்ஞ்ஞான பூமியின்முன் மூன்றுபூமி யுண்டாக்கும் விவேகி யா னேன், சுஞ்ஞான வானென்போன் சீவன்முத்தி யடைந்திருக்குந் தூய மேலோ, னஞ்ஞான மகலுமத்தச் சிஞ்ஞாசு மிருவகையா மதுவுங் கேளாய்.

(இ - ள்.) சிஞ்ஞாசுஞானவானென்றிரண்டுபேர்களவரில், எ-து. மேற்ப ரமாம்சசந்நியாசனிருவகையாவனென்றார் அவை, சிஞ்ஞாசனவும், சுஞ் ஞானவானனவும்பெயரன. அப்பெயரையுடைய சந்நியாசிகளிருவரில்:— சிஞ்ஞாசுமெய்ஞ்ஞானபூமியின் முன்மூன்றுபூமியுண்டாக்கும்விவேகியாஞ ன், எ-து. சிஞ்ஞாசென்போன் மெய்ஞ்ஞானபூமியேழனுள், முத்லிலுள்ள மூன்றுபூமியுண்டாக்கின்ற விவேகவழிவானவன் :— சுஞ்ஞானவானென்

போன் சீவன்முத்தியடைந்திருக்குந்தூயமேலோன், எ - து, சுஞ்ஞானவா னென்பவன் சீவன்முத்தி நிலையையடைந்த பரிசுத்த நெறியிற்சிறந்தவன் :— அஞ்ஞானமகலு மந்தச்சிஞ்ஞாசு மிருவகையா மதுவுங் கேளாய், எ - து. அஞ்ஞானநீங்கத்தக்க அந்தச்சிஞ்ஞாசென்போனு மிருவகையாவன், அதனை யும்யாங்கூறக்கேளுதி, எ-று.

சுஞ்ஞானவானென்பது, ஞானவாவென்றிருத்தல்மூதற்குறை. சிஞ்ஞா சுமென்பதிலும்மை, எதிரதுதழீஇயவெச்சவும்மை.

(க-து.) பரமாம்சனிருவகைசந்நியாசநிலை யினையவவென்பது. (கசூ௭)

கசூகூ - கவி. அ - கை.

[சிஞ்ஞாசுவினிருவகைநிலையு மினையவெனயிக்கவியிற் கூறுகின்றூர்.]

பந்தமனை துறந்துசில ரதிதிகளா யிருந்தடைவர் பரம ஞான மந்தணர்மன் னவர்வணிகர் சூத்திரரா யிருந்துசில ரடைவர் ஞான மிந்தவகை சாத்திரத்து முலகத்து நடப்பதுங் கண் டிருந்து மைந்தா சிந்தனையின்மயக்கமென்ன சுருதியுத்தியனுபவத்தாற்றெளிந்திடாயே.

(இ-ள்.) பந்தமனைதுறந்துசிலரதிதிகளா யிருந்தடைவர்பரமஞானம், எ-து. சிலர்பந்தத்துக்கிடமாயுள்ள மனைவியாதிகளைத்துறந்துவிட்டுச் சந்நி யாசிகளாயிருந்து பிரமஞானத்தையடைவார்கள்:— அந்தணர்மன்னவர்வணி கர் சூத்திரராயிருந்துசிலரடைவர்ஞானம், எ-து. சிலர் பிராமணராயும், அரச ராயும், வைசியராயும, சூத்திராயுமிருந் துன்னைமுஞானத்தையடைவார கள்: — இந்தவகைசாத்திரத்துமுலகத்து நடப்பதுங்கண் டிருந்துமைந்தா, எ-து. சற்புத்திரா ! இவ்வண்ணஞ் சாஸ்திரங்களிற் சொல்லியிருப்பதையும், உலகத்திற்சாதாரணமாநடந்துவருவதையும் பிரத்தியட்சமாகக் கண்டிருந் தும்:—சிந்தனையின்மயக்கமென்ன சுருதியுத்தியனுபவத்தாற்றெளிந்திடாயே, எ-து. மனதிலின்னுமையமென்னையுளது. உளதேல், அந்தனையுமிவ்வண்ணஞ் சுருதி, யுத்தி, அனுபவத்தால்விசாரித்துத்தெளிதி, எ-று.

சாத்திரம், சுருதிப்பிரமாணம். உலகத்துநடப்பது, பிரத்தியட்சப்பிர மாணம். சிஞ்ஞாசென்பவனிருவகைநிலையாவது; இல்லறம், துறவறமென் பன. அவை; முதலடியால்துறவறமும், இரண்டாமடியால்லறமுங்காணப் படும்.

(க-து.) சிஞ்ஞாசுவினிலையில்லறந்துறவறமாமென்பது. இதனால், இல் லறத்திலேனுந் துறவறத்திலேனும் ஞானமடையலாமென்றபிற்று. இவ்வி ரண்டறத்தும்பலனென்னதுசிலனென்றது,விராகத்தைக்காட்டற்கென்க.(கசூக)

ககூச - கவ். அ ° கை.

[முன்னர் வித்தியாணந்தத்தைப்பற்றி நூற்றறுபத்துநாலாஞ் கவிமுதல் நூற்றெழுபத்தேழாங் கவிவரையானுஞ் சொல்லுது மென்றனமே அதனையிக்கவிமுதல்பதிணுலுகவிவரையானும் விளக் குவான்வேண்டி, அகம்பிரமமென்பதில்; அகமென்பது, நான். பிரமமென்பது, சிவம். இவ்விருவகையும் ஞானத்தையன்றியின் மையின், நானேசிவமெனலியிக்கவியிற்கூறுகின்ருர்.]

பிறந்ததுண் டானு லன்றே பிறகுசா வதுதா னுண்டாம்
பிறந்தசே யில்லை யென்னும் பிரமமா வதுவு நானே
பிறந்தது நானன் ருகிற் பிரமமென் றந்த நானே
பிறந்தது மிறந்த தந்தப் பிரமமா நானே நானே.

(இ-ள்.) பிறந்ததுண்டானுலன்றே பிறகுசாவதுதானுண்டாம், எ - து. நானென்னும்பொருள் யாதேதா அதுபிறந்ததுண்டாயிருக்குமானுலல்லவாபி றகுசாவதென்பதுமுண்டாயிருக்கலாம். நானனலைப்பற்றியிதுகாறுங்கூறி வந்ததிலில்லாமையின்:—பிறந்தசேயில்லையென்னும் பிரமமாவதுவுநானே, எ - து. என்னைப்போலப்பிறந்தசேயில்லையென்னத்தக்க பிரமமென்பதும் நானேயாம்:—பிறந்ததுநானன்ருகிற் பிரமமென்றந்தநானே, எ - து. பிறந்த தென்பதுநானல்லனுயின், நானேபிறமமென்றதுமந்தநான்தான்:— பிறந்த துமிறந்ததந்தப்பிரமமாநானேநானே, எ - து. ஆயின், பிறந்ததுபோலு மிற ந்ததுபோலுங் காணப்படுவதுமந்தப்பிரமமாகிய நானே நானலதுவேறு ளதோ, இல்லையே, எ-று.

நானேயென்பதிலேகாரமிற்றசை. நானென்னும்பொருள்பிறந்தாலன் ருேசாகலாம், இல்லையே. இதுபோலப் பிரமமென்னும்பொருளும் பிறந் தாலன்றே சாகலாம், இல்லையே. பொருளொன்று சொல்லிரண்டு. அப்போ தொருபொருள்குறித்தபலசொல். ஆகவே, எவ்வாறிரண்டென்னலாம்? அந்த வொருபொருளாவது ஞானம். ஆயின், சிற்றறிவு பேரறிவென்னற்கியைவா னேன் ? உபாதிகுணங்களேயேயறிவாகக்கோடலினுலும், அவ்வுபாதிகுணங் கள் சமஷ்டிவியஷ்டியாகக்காண்டலானும், இவற்றைப்பற்றியவிசாரஞ்சற் றுமில்லாததினுலும், பிறர்சொல்வினுங் கல்விச்செருக்காலெனக்குத் தெரி யாதாவென்னு மகங்குன்ருமையானும், இ°தென்றுமாதலினுலுமென்க. சம ஷ்டிவியஷ்டியாகக் காணப்பட்டுள்ள வுபாதிகுணங்கள் ஞானத்தின்பிரதிப லனேபன்றிஞானமல்ல. ஆதலின், ஞானத்தைத்தவிரவுயிர்பரமிரண்டில்லை. இதற்குதாரணம். "விண்ணுருவமீசனென்பார் வேற்றுருவஞ்சீவனென்பார் கண்ணுமிரவியும்போற்காணென்பார், திண்ணமதாய், அத்துவிதமாகாத வையிரண்டுமாகாத, சித்துருவந்தானேசிவ" மென்பதினுற்காண்க. சித்தெ னலும், ஞானமெனலுமொருபொருட்கிளவி. நானெனக்கொள்ளாத பரமு முயிருமில்லை, அங்ஙனங்கொள்வதுபாதிகுணமன்று, இவ்விரண்டுமோர்முத

லன்று, அந்தமுதல்; அறிவையன்றியில்லை. ஆதலி, ஞானபிரமமெனப்படும். இவ்விருவகைநானெனனல்; அறிவாதலால், நானேபிரமம், பிரமமேநானெனற் கிழுக்கென்னை? இன்னும் பிறப்பிறப்பு, உபாதிகட்கன்றி யறிவுக்கெனச்சுரு தியுத்தியனுபவம் யாதானுமுளதோ? இல்லையேயிதனனுமுணர்க. "உடலு தித்தல்யோனியுயிருதித்தலெங்கே, உடலுயிர்சித்துசடமொன்றே." அன்றே யென்பதினுனுங்காண்க. இவற்றையுமுணராதுமறுத்தலென்னுணர்வு. அந்த ர்முகநோக்கிற்குடன்படாதார்க் கென்சொல்லினுமென்பயன். பிரமமாவது நானேயென்னுது, பிரமமாவதுவுமெனவும்மைகொடுத்ததினுலன்றே, நா னென்னும்பொருள் பிறந்தாலன்றே விறக்கலாம், என வுரைகொண்டாம். இங்ஙனமாதலைப்பற்றிப் பிறந்தே யில்லையென்னும் பிரமமாவதுவு நானே யெனவும், அதுபோலப் பிறந்ததும்நானென்னும்பொருளன்றுமையின் நா னேபிரமமெனக்கொண்டது மந்தநானேயென்பதுதோன்றப், பிறந்ததுநா னன்றுகிற் பிரமமென்றந்தநானேயெனவும், இறந்ததுமென்றவும்மைதொக் கது. பிறந்ததுபோலவுமிறந்ததுபோலவுங் காணப்படுதல்நானுகையால், பிறந்ததுமிறந்ததந்தப் பிரமமா நானேநானெனவுங் கூறினர். பிரமநானே நானேயென்னுது, பிரமமாநானேநானேயென்றது; நானேபிரமம், பிரமமே நானென்னு மைக்கியங்காட்டற்கென்க. அறிவேபரமுமுயிருமென்றுதார ணம். வேதாந்தசூடாமணி, "இகலிலாவறிவுமாத்திரமாகிநின்ற விலக்கிய மாம்பிரமகூடஸ்தவுயிர்கொள்ளில், புகரிலாவது விதுவேயிதுவதுவேயென் னப் பொருந்துதாதான்மியம்வந்துறுமெனவேயறிக." என்பதினுற்காண்க. உற்றுக்காணுதுழி மதி மேகங்களி னுழைந்துநுழைந்து செல்வதுபோலவும், கண்டுழி யங்ஙனஞ்செல்லாது நிலையுறுவதுபோலவுங் காணப்படுமாறுபோ ன்று, தெளியாதுழி, ஆன்மாவாகியநானென வுடல்தோறுநுழைந்துநுழைந் து பிறப்பதுபோலவும், இறப்பதுபோலவும், தெளிந்துழி யங்ஙனஞ்செல்லா து நிலையுறுவதுபோலவுங்காண்பதென்னை? ஆதலினிங்ஙனங்கூறினரென்க.

(க - து.) இதுவித்தையானந்தமாதலினுனும், இத்தவித்தையைத்தவிர வுயிர்பரமின்றுதலினுனு மேகமென்றுரென்பது. வித்தியானந்தமென்றுயது மறுஉ. அனைத்துநானுவதுமன்றி யெனப்பொருடரலின் பிரமமாவதுவுமென் றவும்மை யிறந்ததுதழீ இயவெச்சவும்மை. பிரமமாநானேயென்பதுருவகம். பிரமமாகியநானேயன்றி நானென்பதுவேறின் றெனத்தோன்ற, சுற்றில் நா னேயென்றுர். ஆதலினிதுபொருந்தும். (ககூச)

ககூடு - கவி. அ - கை.

[ஞானத்தைத்தவிரப்பிரமமில்லாவாறுபோல ஞானத்தையன்றி யான்மாவின்றென விக்கவியிற்கூறுகின்றுர்.]

நானென்ற பிரம மான நானேநா னறிமீய னென்று
னுனென்ப தேது பின்னே நம்முடை புந்தி யென்னிற்
'றுனது மயக்கந் தன்னிற் சாகுமே சாவா தாகி
னுனென் றிறைந்தி ருந்த ஞானமா நானே நானே.

(இ - ள்.) நானென்றபிரமமான நாம்னானறியேனென்றால், எ - து. நானெனத்தக்கபிரமமாகியயானே யென்னையானறிகிலனென்று வருமாயின்:—நானென்பதேதுபின்னை நம்முடைபுந்தியென்னில், எ-து. அப்போது நானென்பதியாது, அதற்குத்தரமாகப்பின்னர் நமதுபுத்தியெனக்கூறின்:—தானதுமயக்கந்தன்னிற் சாகுமேசாவாதாகில், எ - து. தானேயந்தப்பிராந்தியாதலால் தன்னிடத்திலேயேநசிக்குமே, நசியாவிடில்:—நானெனநிறைந்திருந்த ஞானமாநானேநானே, எ - து. அப்போதுநானெகவெங்கணுமொருபடித்தா வியாபித்துநின்றஞானமாகியநானெனனேலநானெகமுடியும், எ-று.

நானேயென்பதிலேகாரமீற்றசை. நானெகியபிரமம், அந்தப்பிரமமாகியநானென வபேதங்காட்டவந்தவராதலின், நானென்றபிரமமானநானேயெனவும், அங்ஙனமபேதமானநானே யென்னையானறிகிலனென்பார், நானேநானறியேனெனவும், என்னையானறிகிலனென்பதுமூடம். அதுதன்னைவிடவேறன்றுதலின் தன்னைநசிக்குமேயென்பார், மயக்கந்தன்னிற்சாகுமேயெனவும், மயக்கம்விகற்பமாதலால் தானெகாது, எங்ஙனந்தன்னில்சாகுமென்பார், சாகாதாகிலெனவும், நசியாதிருத்தற்குவேறிடமின்மையினசிக்குமென்பதுதேன்ற நானெனநிறைந்திருந்தஞானமெனவும், அந்தஞானத்தைத்தவிரநானெனவின்மையின், ஞானமாநானேநானெனவுங்கூறினர்.

(க-து.) ஞானமேபிரமமும்நானுமாதலின், ஏகமாயிற்றென்பது. அறிவையன்றிப்பிரமமெனலும், கூடஸ்தனெனலுஞ் சொன்மாத்திரமும், தோற்றன்மாத்திரமுமாதலாற் கற்பிதமெனக்குறிக்க விங்ஙனங்கூறினரென்க. அறிவையன்றியுயிர்ப்பரமென வில்லையென வெங்கேவிளங்கிற்றே, அங்கேயதுவேயானந்தமாதலன்றி வேறின்மையின் வித்தையானந்தமெனத்தானேயமையப்பெற்றும். இஃதனுபவமொழி. நம்முடையவென்பது, கடைக்குறை. நானென்றபிரமம், பிரமமானநான், என்னுமிரண்டும், இருபெயரொட்டுப்பண்புத்தொகையெனில், உருபுவிரித்திருப்பதாற்கூடாது. உருவகமெனினமையும். உபமானவுடமேயபேதஞ்சற்றுமின்மையின். என்ன, "உவமையும் பொருளும்வேற்றுமையொழிவித் தொன்றெனமாட்டினஃதுருவகமாகும்" என்பதனுற்காண்க.

(கசுஞ)

கசுசு - கவி. அ - கை.

[அறிவேயான்மாவாதலி னவ்வான்மாவேபரிபூரணமும், ஆனந்தமுமாமெனலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

நிறைந்தவா றெந்த வாறு நிலைதெரிந் திலனென் றுயே
லறிந்ததாஞ் சுழுத்தி தன்னி லாநந்த மதுவே யாகுங்
குறைந்ததுக் கானந் தந்தான் குவலயந் தன்னி லில்லை
நிறைந்தசே யிந்த வாத்மா நிதானமிவ் வறிவு தானெ.

(இ - ள்.) நிறைந்தவாறெந்தவாறு நிலைதெரிந்திலனென்றுயேல், எ-து. யான்பரிபூரணமாயவாறெவ்வாறு, அந்நிலையை யென்பாற்கண்டிலனெனக்

கூறுவையாயின்:—அறிந்ததாஞ்சுழுத்திதன்னிலானந்தமதுவேயாகும், எ-து. அறிந்துகொண்டிருப்பதாகிய நனவிற்சுழுத்தியிலிருப்ப தானந்தமாதலின், அவ்வானந்தமேபரிபூரணமாம்:—குறைந்ததுக்கானந்தந்தா குவலயந்தன்னி லில்லை, எ-து. ஆயி னேகதேசமாகிய சுகத்துக்கமோ, நீபூமியிலிருந்து மஃது னக்கில்லை:—நிறைந்ததேயிந்தவான்மா நிதானமிவ்வறிவுதானே, எ-து. ஆத லிவ்வான்மாவேபரிபூரணம், அப்பரிபூரணமே, இந்தவறிவு, எ-று.

நிதானம், சாய்வின்மை. எனவே, குறைவின்மையாயிற்று. ஆகவே, பரிபூரணமெனக்கொண்டாம். சுழுத்தியென்ற தறிந்ததாஞ்சுழுத்தியென்ற மையின், அறிந்துகொண்டிருப்பதாகியசுழுத்தியென்றுரையிற்று. ஆகவே, மூட சுழுத்தியன்றென விலக்கி நனவிற்சுழுத்தியெனப்பெற்றும். அந்நனவிற் சுழுத்தி பரிபூரணானந்தமாதலின், ஆனந்தமதுவேயாகுமெனவும், இந்நிலை யையுடையையாதலி னிவ்வுலகிலிருந்துமுனக்கின்பதுன்பமில்லை மற்றவர்க ளுக்கென்பார், குறைந்ததுக்கானந்தந்தான் குவலயந்தன்னி லில்லையென வும், விசாரித்துத்தெளியினுந்தெளியாவிடினு மான்மாவியல்பாகவே பரிபூர ணானந்தமேயென்பார், நிறைந்ததேயிந்தவான்மாவெனவும், அங்ஙனமாய வான்மாவும், குறைவின்றிநிறைந்துள்ள விந்தச் சைதன்யமேயென்பார், நிதானமிவ்வறிவுதானே யெனவுங்கூறியவாறுகாண்க. சிலபிறிதிகள், குறை ந்ததற்கானந்தந்தானென்றிருக்கின்றன.

(க-து.) ஆன்மாவித்தையானந்தமேயென்றுரென்பது. வித்தையானந் தத்தினிலைமையினையதேதையென்க. முன்கவியில்பிரமமாநானென்றது; பிரம மேகூடஸ்தனெனவும், பின்கவியில்நானென்றபிரமமென்றது; கூடஸ்தனே பிரமமெனவும் பொருள்படற்கென்க. நானெனல், அறிவு. பிரமமெனல், சுகம். எனவே, சுகமேயறிவு. அறிவேசுகம். என்றுரையிற்று. ஆகவே, சுகம் வேண்டியலைவ துயிர்களறிவாதலால், அலைவைபொழித்தற் கிங்ஙனங்கூறிய தெனப்பெற்றும். ஆதிகாரணமெனப்பொருளிருப்பினு மிங்கேநிதானமென் பது, குறைவின்மை. அறிந்ததாஞ்சுழுத்தியென்றதனால், அறியாத சுழுத்தி குறிக்கின்றது. இதிலுமுள்ளசுகப்பெருக்கு, ஆன்மாவேயெனக்காட்ட நன விற்சுழுத்திகூறினரென்க. தினசுழுத்தி யான்மாவையன்றியுளதேனவிற் சுழுத்தியு மிருக்கலாம். (கசுசு)

கசுஎ - கவி. அ - கை.

[தனியேயென்னையான்விசாரிக்குமிடத்தில் வித்தையானந்தமாகக் கண்டனனென மாணாக்கன்கூறியதாக விக்கவியிற் கூறுகின்றார்.]

மனத்தினு லெண்ணித் தானே வந்திவ் வுலக மாகு
நினைத்திடி லனேக லோக நிற்பதிவ் வறிவி லன்றே
வனைத்தையுங் கடந்தப் பாலு மந்தமற் றறிவி தாமென்
றெனைத்தனி விசாரித் திட்டா லேகமாய் நிறைந்தோ னுனே.

(இ-ள்.) மனத்திலுலெண்ணித்தானே வந்ததிவ்வுலகமாகும், எ - து. இவ்வுலகமானதுமேலுசங்கற்பத்திலுலேதானே வந்ததாகக்காண்கின்றது:— (எங்ஙனமெனில்) நினைத்திடிலனேகலோக நிற்பதிவ்வறிவிலன்றே, எ-து. எண்ணிளவைகளாலும், ஊகத்தாலும், அனுபவத்தாலு மொருங்கேநின்று சிந்திக்குமிடத்தில், இவ்வுலகமாத்திரமன்று, இன்னுமிவைபோல்வனவாகக் கூறப்படு மனேகலோகங்களும் பதவிகளுமிருப்பது நாமாகிய விவ்வறிவிலல்லவா :—அனைத்துங்கடந்தப்பாலு மந்தமற்றறிவிதாமென் றெனைத்தனி விசாரித்திட்டா லேகமாநிறைந்தோனே, எ-து. இஃதன்றியும், இவ்வறிவி லுள்ளமுன்கூறியவனைத்தையு மொவவொன்றுகநியதிகளைந் தவற்றினின்று நீங்கி யவற்றிற்கப்பாலும்யாதுளதென் றென்னைத்தனியாகவிசாரிக்குமிடத் தில், முடிவின்றி விளங்காநின்றவிவ்வறிவாகவே யெங்குங்காண்கின்றது, ஆதலின் பரிபூரணமாக வெங்கணுநிறைந்து விளங்குவோன்வேறல்லன்யா னே, எ-று.

மண்ணுதிகட்குச்சயம்புவுடவம் யாதெனத்தனித்தனிப்பேதவாதமாறு லும், அபேதவாதமைந்தாலு மையந்திரிபறச்சோதிக்குங்கால் யாது மங்ஙனங்காணுது தோற்றன்மாத்திரமாகக்காண்பதென்னை? காண்பதாலதனைச்சுயம்பாகப்பார்ப்பதென்னை? இவ்விருவகையாயநிலையும்விளைவது மனத்தாலோ, வேறுலோ? மனத்தாலெனின், அப்போது மனதையன்றி யுலகம் மெய்போலத்தோற்றுவதும், பொய்போலத்தோற்றுவதும்வேறன்றே. வேறுமெனின், யாதோவிவ்விருவகையாகக்காண்பது? உலகமெனின், விசாரணைமுடிவி லுலகமென்னுநாமரூபமெங்கே? யாதுபொய்யாகக்காணப்படுகின்றது. நினைவு தானெனில், உலகம்போல் மெய்யாகக்காணப்படுவதும், பொய்யாகக்கா ணப்படுவதும், அதனையவ்வாறுணர்வதும்வேறன்றே. நினைவாகியமனேசங் கற்பமாதலின், மனத்திலுலெண்ணித்தானே வந்ததிவ்வுலகமாகுமெனவும், அங்ஙனநியதிகளைந்தவிடத்தில்லாமற்போன விவ்வுலகமாதியனேகலோகங் களு மெங்கேயெனச் சுவானுபவத்தாலாராயும்பொது, அனைத்துஞ்சங்கற்ப வடிவமாக யாஞுகியவறிவிற்கண்டனனென்றுனென்பார், நினைத்திடி லுலக மெல்லா நிற்பதிவ்வுறிவிலன்றேவெனவும், அங்ஙனஞ் சங்கற்பவடிவமாக அவையெங்ஙனமிருக்கின்றனவெனத் தனித்தனியொவ்வொன்றுக ஆராயு மிடத்தும், அப்பாற்கடந் தாராயுமிடத்து மிவ்வறிவாகவே யனைத்துமுடி கின்றனவாதலின், அனைத்தையுங்கடந்தப்பாலு மந்தமற்றறிவிதாமெனவும், சமஸ்தமுமறிவாகமுடியும்போது யானுரெனத்தனித்துநின் றென்னை விசா ரிப்புழி யகண்டபரிபூரணமாகிய விவ்வறிவைத்தவிரவில்லையாகமுடிதலின், எனைத்தனிவிசாரித்திட்டா லேகமாய்நிறைந்தோனே யெனவுங் கூறக்கிட ந்ததென்க.

(க-து.) அறிவேயானெனத்தெரிவிக்க விங்ஙன்னங்கூறியதென்பது. இது வும்வித்தையானந்தமென்க.

ககஅ - கவி. அ - கை.

[என்னைத்தவிரக்கற்பிதங்களில்லாவிடத் தெங்ஙனம்பரிபூரண மாக விளங்குவதென்னின், மூன்றவஸ்தாவயத்தாகா தறிவாகவி ளங்கி னங்ஙனமாவையென விக்கவியிற்கூறுகின்றார்.]

அந்தவா றிருந்து கொண்டே யானந்த மனுப வக்க
வெந்தவா றிருந்து கொண்டா லெனக்கிது தெரியு மென்னி
லிந்தமூன் றவத்தை தம்மு ளெழுந்திடும் விருத்தி நீக்கி
லந்தவா றிருந்து நீயு மானந்த மடைய லாமே.

(இ-ள்.) அந்தவாறிருந்துகொண்டே யானந்தமனுபவிக்க, எ - து. என்னைத்தவிரச் சங்கற்பங்களில்லாவிடத்து, அங்ஙனஞ்சங்கற்பமயமாகின்று கொண்டு யானெங்ஙன மான்மானந்தத்தைப் பரிபூரணமாகவனுபவிப்பது, கூடாமையால்:—எந்தவாறிருந்துகொண்டா லெனக்கிதுதெரியுமென்னில், எ-து. யானெவ்வண்ணமாய நிலையினின்றுகொண்டா லெனக்கிந்தப்பரிபூரணமாயநிலை விளங்குமெனக்கேட்டையாயின்:—இந்தமூன்றவத்தை தம்முளெழுந்திடும்விருத்திநீக்கில், எ-து. இந்தமூன்றவத்தையிலுமுதிக்கு மேனைவிருத்தியைத் தனதுசொரூபமாகக்கண்டுநீக்கிலை லப்போதம்தனக்கு விளங்கும்:—(ஆதலின்.) அந்தவாறிருந்துநீயு மானந்தமடையலாமே, எ-து. நீயுமவவண்ணமாகவிருந்து, அந்தப்பரிபூரணானந்தத்தை யனுபவிக்கலாமே யிதிலையமென்னை, எ-று.

அவஸ்தாத்ரையமும், விர்த்தித்ரையமும், தனது ஞப்திஸ்புரிப்பையன்றி யில்லையெனக்காணத் தாமேதனது ஞப்தியாகக்கரையும், கரைந்தவாறிருக்கவேண்டும், இருக்கின், பரிபூரணானந்தாதயமாம். அவ்வுதயமே நீயாதலினும், உன்னையன்றியில்லாததினுனு மதுநீயாவையென்பார், இந்தமூன்றவத்தைதம்மு ளெழுந்திடும்விருத்திநீக்கி லந்தவாரிருந்துநீயு மானந்தமடையலாமே யென்றார். அவ்வாறிருந்தோரொல்லா மானந்த மடைந்தாற்போல, நீயுமானந்தமடையலாமென்றுகலின், நீயுமென்பதினுமும்மை, இறந்ததுதழீஇய வெச்சவும்மை. விருத்திநீக்கம், சிற்பிரகாசமாகக்கரைதல். எனவே, வித்தையானந்தமெனக்குறிக்கப்பெற்றும்.

(க - து.) சிற்பிரகாசமாகக்காணி லங்ஙனே விருத்தியதுவாகக்கரைய நீயுதுவாவையென்பது. வேறுபாயமெங்களுமின்றென்க விருத்திகளுன்னையன்றியில்லையாயினு முனதுசிற்பிரகாசமாகக்காணி னீயேபரிபூரணானந்தமாவையென்க. (ககஅ)

ககக - கவி. அ - கை.

[வாசனைவிருத்திகளைக் கனவதெவ்வாறென்றவினாவுக்கு விடையிக்கவியிற்கூறுகின்றார்.]

வாதனை வயத்தி னுலே வருகிற விருத்தி யெல்லா
மேதினை லடக்க லாகு மென்றுதான் விசாரஞ் செய்யின்
போதமா மிராசன் றூஞ்சுப் புந்தியைப் புலன்க ளெல்லாந்
தாதரா யிருக்கப் பெற்றுற் சகலமு மடங்குந் தானே.

(இ-ள்.) வாதனுவயத்திலுலே •வருகிறவிருத்தியெல்லா மேதினுலடக்கலாகு மென்றுதான்விசாரஞ்செய்யில், எ-து. பூர்வவாசனைகாரணமாகவருகிற மனேவிருத்தியனேத்தையும் யாதுகாரணமாக அடக்கக்கூடுமென்• றென்னேவிசாரிப்பையாயின்:—போதமாமிராசன்முனேய்ப் புந்தியைப்புலன்களெல்லாந்தாதராயிருக்கப்பெற்முற் சகலமுமடங்குந்தானே, எ-து. அறிவையரசனுக்கி யவவரசனே தானுகிப் புத்திமுதலிய வகக்கரண புறக்கரணங்களனேத்தையு மடிமைகளாக்கின், இவ்விருகரணங்களுந் தலேயெடுக்காதடங்கும், எ-று.

முன்னனுபவித்த பிரியங்காரணமாகவெழுமனேவிருத்தியை, வாதனுவயத்திலுலேவருகிற விருத்தியெனவும், தானுகிற ஞானப்பிரகாசத்தைத்தலேயாகக்கொள்ள, ஏனையவிருவகைகரணங்களுமென்செய்யும்? அடங்குமாகலின், போதமா மிராசன்முனேய்ப் புந்தியைப் புலன்களெல்லாந் தாதராயிருக்கப்பெற்முற் சகலமு மடங்குந்தானே யெனவுங் கூறியவாறுகாண்க. அரசனுக்கினேசெல்லுவதிலும், அரசனேசெல்லிற்குடிகணடங்கும், இதுபற்றியிங்ஙனங்கூறியதென்க.

(க - து.) வாசனைவிருத்திகனேயடக்கு முபாயமினேயதென்பது. போதமாமிராசனுக்கியெனப்பிறிதிகளுமுண்டி. (கசுக)

கஎ0 - கவி. அ - கை.

[விருத்திகளேயடக்க யிங்ஙனம்வலியின்றியவிடத்தில் மற்றிரண்
டொயத்தாலேனு மவற்றையடக்குதியென
விக்கவியிற்கூறுகின்முர்.]

விருத்திக ளடக்க வின்னம் விநோதமாம் யோகத் தாலே
தருக்திடோ லாது மூச்சைச் சுகமுட னடக்கி னிற்கும்
கருக்கதற் கில்லே யென்னிற் காரண சரீர மாகும்
பெருக்கதோ ரவித்தை தன்னேப் பிடுங்கிடி லடங்குந் தானே.

. (இ-ள்.) விருத்திகளடக்கவின்னம் விநோதமாம்யோகத்தாலே தருத்தி போலாதுமூச்சை சுகமுடனடக்கினிற்கும், ன - து. விருத்திகளேயடக்குவதிற் கின்னுமுபாயங்களுள. அவற்றுளொன்று, உலகத்திற்குவிநோதமாகக் காணப்பட்ட கிரியாயோகங்காரணமாக வுலகத்தின்கண் தருத்திபோலாதத்தக்க வுசுவாசநிசுவாசமென்னுமூச்சைத் தக்கமுறைப்படிபிரியங்கொண்டடக்கில் விருத்திகள்தாமேநின்றுவிடும்:—கருத்ததற்கில்லேயென்னிற் காரணசரீரமாகும் பெருத்ததோரவித்தைதன்னேப் பிடுங்கிடிலடங்குந்தானே, எ - து. அதுசெய்தற்குச்சற்றுங்கருத்தில்லேயாயின் மற்றொன்றுகேளுநி, காரணசரீரமாகிறமிகவும்பாரித்துள்ள வொப்பற்றவவித்தையேயாத்திரம் வேரறப்பிடுங்கிவிடிலந்தவிருத்திகள் தாமேயடங்கிவிடும், எ-று.